உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# திராவிட வேதத்திரட்டும் ஸ்தலமான்மியச் சுருக்கமும்.

இஃது

சைவசமய பக்தஜன சபையினர்களின்

வேண்டுகோளின்படி

பன்னிரு திருமுறைகளினின்றும்

திரட்டி

கயப்பாக்கம் - சதாசிவ செட்டியார், **B. A.**

அவர்களால்

தமது

சிவரஹஸ்ய முத்ராலயத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

நளஷு கும்பரவி.

PRICE] *All rights reserved.* [Rs. 1-8.

*First Edition 500 Copies, 1907*
*Second Edition Revised & Enlarged 500 Copies, 1917*

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

வேத சிவாகமங்கள் என்னும் இரண்டும் அநாதிமலமுத்த பரமபதியாகிய சிவபெருமானால் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு அருளிய முதனூல்களாம். அவற்றுள், வேதம் ஆரியபாஷையினையும், தருக்கம், வியாகரணம் முதலிய கருவி நூல்களையும், புராணேதிகாசங்களாகிய உபவிருங்கணங்களையும் நன்குணர்ந்தவர்களுக்கன்றி ஏனையோர்க்குப் பொருள் விளங்காததாயும், விஷயங்களைப் பொதுவகையாகவும் குறிப்பாகவும் உணர்த்துவதாயும், துவிஜர்களுக்கே பயன்படுவதாயும் உள்ளதாம். சிவாகமம் விதிப்படி சிவதீக்ஷை செய்யப்பெற்று சத்திநிபாதமுற்றவராகிய பெரியோர்களுக்குப் பயன்படுவதாகவும், பொருள்களைச் சிறப்புவகையாயும், தெளிவாயும் உணர்த்துவதாகவும் அவ்வேதத்துக்குப் பாடியம்போன்றும் உள்ளதாம். எனவே யிவ்விரண்டும் குறித்த சிலர்க்கன்றி பலர்க்கும் பயன்படுதலிலவாம்.

இஃதிங்ஙனமாகலின் அவ்விரண்டின் உண்மைப் பொருள்களையெல்லாம் பசுகரணம் நீங்கிப் பதிகரணம் பெற்ற உண்மைநாயன்மார்கள் தமிழுலக முய்யும்பொருட்டு இறைவனருளாணை வழிநின்று பசுவின்பாலிற் கடைந்தெடுத்த நெய்போலத் திரட்டிப் பன்னிரு திருமுறைகளாக வருளிச் செய்தனர்கள். அவை தேவாரமுதல் திருத்தொண்டர் புராண மீறாகவுள்ளனவாயும், எத்தகையோரது வன்னெஞ்சமாகிய கன்னெஞ்சையும் கரைக்கும் இசைமயமான சிவபெருமானுக்குரிய உத்தமோத்தமமாகிய தோத்திரங்களாயும்,

மெய்யன்போடு ஓதுபவர்க்கு இம்மை மறுமை வீடு என்னு மும்மைப்பயன்களையும் ஒருங்களிக்க வல்லனவாயும், அத்தியற்புதமாகிய வெண்ணிறந்த மகிமாதிசயங்களை யுடையனவாயும் இருப்பனவாகலின், சிவபூசை, சிவாலயசேவைகளினும், திருவிழாக்களில் சுவாமி பின்னும் பண்டைகாலந்தொட்டு ஓதப்பெறும் வழக்கமுடையனவாய்த் தமிழ் அல்லது திராவிடவேதம் என்று சொல்லப்படும்.

இவ்வுண்மை திருத்தொண்டத் தொகைக்குப் பொல்லாப்பிள்ளையார் பொருளருளிச் செய்தமையானும், சைவாகமத் திருப்பதிகங்கள் அவ்வப்போது உபமன்னிய மகா முனிவரால் அரபத்தர் முதலிய மகரிஷிகளுக்குச் சொல்லியருளப் பெற்றமையானும், திருவாசகமும், திருக்கோவையாரும் அழகிய திருச்சிற்றம்பலமுடையவராகிய ஸ்ரீமன் நடராஜப் பெருமானார் திருக்காத்தா லெழுதப்பெற்றமையானும், சிவாலய முனிவரின் பொருட்டு அகத்திய மகா முனிவரால் அகத்தியத் தேவாரத்திரட்டு திரட்டப்பட்டமையானும், நம்பியாண்டார்நம்பி, உமாபதி சிவாசாரியார் முதலிய பெரியோர்கள் சாந்தி செய்தமையானும், தில்லை மூவாயிரவர்களாலும் அநுசரிக்கப்பட்டமையானும், அநபாய சோழர் முதலிய இராஜாக்களால் போற்றப்பட்டமையானும் மற்றும் பிறவாற்றானும் விளங்கும்.

இத்தகைய பெருமைவாய்ந்த திருமுறைகளினின் றும் பல சைவத்திருக்கூட்டங்கள் தங்கள் தங்களுடைய அநுகூலத்துக்கானவாறு பலபல திரட்டுகள் திரட்டி வெளியிட்டனர். அவற்றுள் சென்னைச் சைவசமய பக்தஜனசபையினரால் வெளிப்படுத்தப்பட்ட 'திராவிடவேதத்திரட்டு'ம் ஒன்றும். ஆயினும் அவை யாவும் பன்னிரு திருமுறைகளினின்றும் திரட்டப் படாதனவாயும், திரட்டப் பெற்றனவாயினும் தேவாரம் பெற்றருளிய எல்லாத்தலங்கட்கும் பதிகம் திரட்டப்படாதனவாயும், சுருக்கமானவாயு மிருத்தலின் தலயாத்திரை

செய்வோர்கட்கும், பாடசாலைகட்கும், திருவிழாக்களில் படனஞ்செய்யும் நியமமுடையவர்க்கும் முழுவதும் பயன் பெறாதனவாயின.

ஆகலின் ஏழையேனால் நடத்தப்படுகின்ற சைவசமய பக்தஜனசபையைச்சார்ந்த தேவார பாடசாலையின் உபயோகத்தின்பொருட்டு முன்னர் அச்சிடப்பட்ட திராவிடவேதத் திரட்டின் இரண்டாவது பாகமாகவும், முன்னர்க்கூறிய குறைவறுத்தற் பொருட்டும், என்னன்பர் பலர் வேண்டுகையினிமித்தமும் இப்புத்தகம் இப்போது திரட்டி யச்சிடப்பட்டது.

இத்திரட்டில் ஒவ்வொரு பதிகங்களினும் பெரும்பாலும் முதல் இரண்டாவது இறுதித்திருப்பாட்டுகளையும் சிலவிடங்களில் தலமகிமை முதலியவற்றை விளக்கும் மற்றைய திருப்பாட்டுகளையும் சேர்த்து 274-தலங்கட்கும் மூவர் தேவாரப்பதிகங்களும்,-மற்றைய வைந்து திருமுறைகளில் பெரும்பான்மையும் கோஷ்டிகளில் வழக்கமாக ஓதப்பட்டு வருந் திருப்பாட்டுகளும் சேர்க்கப்பட்டு சுமார் 3000-திருப்பாடல்கள் அமைந்துள்ளன.

அவ்வாறு திரட்டுதற்கு மேலேகூறிய காரணங்களன்றி வேறு ஒருவிதமான அதிகாரமும் அறிவும் புழுத்தநாயினுங் கடையனாகிய இவ்வேழையேனுக்கு இல்லையெனினும் "அடியார்செய்த வநாசாரம் பொறுத்தருளி யவர்மேலென்றும் சீறுக" சிவபெருமானும், அவன் பொன்னடிக்கமலத்தடிமைபூண்ட அடியவர்களாகிய சைவத் திருவாளர்களும் இவ்வற்பனது பிழையினைப்பொறுத்தருள்வரென்று எண்ணியவர் பாதகமலங்களைச் சிரமாகவகிக்கும்,

சென்னை:
சைவசமய பக்தஜன சபை
பாராபவஹூ மார்கழிமீ.

கயப்பாக்கம்-சதாசிவன்.

உ

சிவாப்யாம நம:

# இரண்டாம் பதிப்பின் முகவுரை.

முதற்பதிப்பின் ப்ரதிகள் செலவாய் நீண்டநாளாகியும், பலரும் ப்ரதிகளுக்கு வேண்டுதல் செய்தும், திருப் பதிகங்களினின்றும் திருப்பாட்டுகளைப் பிரித்தெடுத்துப் பதிப்பித்தல் சிவாபராதமாமே யெனவெண்ணி யஞ்சி வாளாவிருந்தேன். இருக்கவும் பலவாப்தர் முழுப்பதிகங்களை ஓதுவார் மிகச்சிலர்; இப்புத்தகம் பெரிதும் பயன் றருவதாயிற்று ஆகையால் இதனை மீட்டும் பதிப்பித்தல் இன்றியமையாதது, என வற்புறுத்தினமையின் இப்பதிப்பு வெளிப்படுத்தலாயிற்று. இதில் ஒவ்வொரு தலத்துக்கும் அத்தலத்தேவாரத் திரட்டின்பின்னர்த் தலக்குறிப்பு, ஸ்வாமி தேவியார் நாமங்கள், தீர்த்த விருக்ஷங்கள் முதலியவும், ஸ்தலத்துக்குச் செல்லும் பாதையும் கூடியவரை என்னனுபவத்தில் வந்தவற்றையும் எழுதி விசாரித்துக் கிடைத்தவற்றையும் வைத்தெழுதப்பட்டன. யாத்ராவாஸிகளுக்கு மிக்க பயனுடையதாகுமென வெண்ணுகிறேன். இப்பதிப்பு ஆரம்பித்தகாலத்தில் காகிதக்குறை திருவுளச்செயலால் ஏற்பட்டு பல வகைக் காகிதங்களை உபயோகப்படுத்த நேர்ந்தது மிக்க வியசனிக்கத்தக்கதொன்றும். குறைந்தவிலைக்குக் கொடுத்தல் வேண்டுமென்னும் அவாவினால் விலையுள்ள காகிதம் உபயோகிக்க முடியவில்லை. இறைவன் திருவருளால் மூன்றும்பதிப்பு ஏற்படுமேல் நல்லதாளில் அச்சிட்டுத் தர எண்ணியுள்ளேன். கூட்டியும் குறைத்தும், திருத்தியும், விளக்கியும், புதுக்கியும் செய்யவேண்டுவனவற்றை நண்பர்கள் தெரிவித் தருள்வரேல் அடுத்த பதிப்பில் அவற்றை உபயோகித்து வெளிப்படுத்துவேன்.

சென்னை
சிவாஹ்லாய மந்திரம்,
அநல ௵ மாசி ௴.

அன்பன்,
க. சதாசிவன்.

# தலமுறை அட்டவணை.

## சோழநாட்டிலே காவேரிக்கு வடகரையில் உள்ள தலங்கள்.


| தலம். | பக்கம். |
|---|---|
| க. கோயில் என்பது சிதம்பரம் | 1 |
| உ. திருவேட்களம் | 11 |
| ங. திருநெல்வாயில் என்பது சிவபுரி | 13 |
| ச. திருக்கழிப்பாலை | 14 |
| ரு. திருநல்லூர்ப்பெருமணம் என்பது ஆச்சாபுரம் | 16 |
| சா. திருமயேந்திரப்பள்ளி | 17 |
| எ. திருமுல்லைவாயில் | 18 |
| அ. திருக்கலிக்காமூர் | 19 |
| கூ. திருச்சாய்க்காடு | 20 |
| க0. காவிரிப்பூம் பட்டினத்துப்பல்லவனீச்சரம் | 22 |
| கக. திருவெண்காடு | 23 |
| கஉ. திருக்காட்டுப்பள்ளி | 26 |
| கங. திருக்குருகாவூர் | 27 |
| கச. சீர்காழி | 29 |
| கரு. திருக்கோலக்கா | 41 |
| கசா. புள்ளிருக்குவேளூர் என்பது வைத்தீச்சுரன்கோயில் | 43 |
| கஎ திருக்கண்ணார்கோயில் | 45 |
| கஅ. திருக்கடைமுடி | 47 |
| ககூ. திருநின்றியூர் | 48 |
| உ0. திருப்புன்கூர் | 51 |
| உக. திருநீடூர் | 53 |
| உஉ. அன்னியூர் | 55 |
| உங. வேள்விக்குடி | 56 |
| உச. எதிர்கொள்பாடி | 57 |
| உரு. திருமணஞ்சேரி | 58 |
| உசா. திருக்குறுக்கை | 60 |
| உஎ கருப்பறியலூர் | 61 |
| உஅ. குரக்குக்கா | 63 |
| உகூ. வாளொளிபுற்றூர் | 64 |
| ங0 மண்ணிப்படிக்கரை | 65 |
| ஙக. ஓமாம்புலியூர் | 66 |
| ஙஉ. கானாட்டுமுள்ளூர் | 68 |
| ஙங. திருநாரையூர் | 69 |
| ஙச. கடம்பூர் | 71 |
| ஙரு. பந்தணைநல்லூர் | 72 |
| ஙசா கஞ்சனூர் | 73 |
| ஙஎ. திருக்கோடிகா | 74 |
| ஙஅ. திருமங்கலக்குடி | 76 |
| ஙகூ. திருப்பனந்தாள் | 78 |
| ச0. திருவாப்பாடி | 79 |
| சக. திருச்சேய்ஞலூர் | ,, |
| சஉ திருந்துதேவன்குடி | 80 |
| சங. திருவியலூர் | 81 |
| சச. கொட்டையூர் | 82 |
| சரு. திருவின்னம்பர் | 83 |
| சசா. திருப்புறம்பயம் | 85 |
| சஎ. திருவிசயமங்கை | 88 |
| சஅ. திருவைகாவூர் | 89 |
| சகூ. வடகுரங்காடுதுறை | 90 |
| ரு0. திருப்பழனம் | 91 |
| ருக. திருவையாறு | 93 |
| ருஉ. திருநெய்த்தானம் | 100 |
| ருங. பெரும்புலியூர் | 101 |
| ருச. திருமழபாடி | 102 |
| ருரு திருப்பழுவூர் | 104 |
| ருசா. திருக்கானூர் | 105 |
| ருஎ. அன்பிலாலந்துறை | 107 |

| தலம் | பக்கம். |
|---|---|
| ருஅ. திருமாந்துறை | 108 |
| ருகூ. திருப்பாற்றுறை | 109 |
| சா0. திருவானைக்கா | 110 |
| சாக. திருப்பைஞ்ஞீலி | 113 |
| சாஉ. திருப்பாச்சிலாச்சிராமம் | 115 |
| சாங. ஈங்கோய்மலை | 116 |


## காவேரிக்குத் தென்கரையிலுள்ள தலங்கள்.


| | |
|---|---|
| க. வாட்போக்கியென்பது இரத்தினகிரி | 118 |
| உ. கடம்பந்துறை | 119 |
| ங. திருப்பராய்த்துறை | ,, |
| ச. கற்குடி | 121 |
| ரு. மூக்கீச்சுரம் என்பது உறையூர் | 123 |
| சா. திருச்சிராப்பள்ளி | 124 |
| எ. எறும்பியூர் | 126 |
| அ. நெடுங்களம் | 127 |
| கூ. மேலைக்காட்டுப்பள்ளி | 128 |
| க0. ஆலம்பொழில் | 129 |
| கக. திருப்பூந்துருத்தி | 130 |
| கஉ. திருக்கண்டியூர் | 131 |
| கங. சோற்றுத்துறை | 132 |
| கச. திருவேதிகுடி | 135 |
| கரு. தென்குடித்திட்டை | 136 |
| கசா. திருப்புள்ளமங்கை | 137 |
| கஎ. சக்கரப்பள்ளி | 138 |
| கஅ. திருக்கருகாவூர் | 139 |
| ககூ. திருப்பாலைத்துறை | 141 |
| உ0. திருநல்லூர் | 14[illegible] |
| உக. திருவாவூர்ப்பசுபதீச்சரம் | 144 |
| உஉ. திருச்சத்திமுற்றம் | 145 |
| உங. திருப்பட்டீச்சரம் | 146 |
| உச. திருப்பழையாறை வடதளி | 147 |
| உரு. திருவலஞ்சுழி | 149 |
| உசா. குடமூக்கு என்பது கும்பகோணம் | 151 |
| உஎ. திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் | 152 |
| உஅ. திருக்குடந்தைக் காரோணம் | 153 |
| உகூ. திருநாகேச்சரம் | 154 |
| ங0 திருவிடைமருதூர் | 156 |
| ஙக. தென்குரங்காடுதுறை | 160 |
| ஙஉ. திருநீலக்குடி | 161 |
| ஙங வைகன்மாடக்கோயில் | 162 |
| ஙச திருநல்லம் | 163 |
| ஙரு. திருக்கோழம்பம் | 165 |
| ஙசா. திருவாவடுதுறை | 166 |
| ஙஎ. திருத்துருத்தியென்பது குற்றாலம் | 171 |
| ஙஅ. திருவழுந்தூர் | 173 |
| ஙகூ. திருமயிலாடுதுறை என்பது மாயூரம் | 174 |
| ச0. திருவிளநகர் | 176 |
| சக. திருப்பறியலூர் | 177 |
| சஉ. திருச்செம்பொன்பள்ளி | 178 |
| சங. திருநனிபள்ளி | 179 |
| சச. திருவலம்புரம் | 181 |
| சரு. தலைச்சங்காடு | 183 |
| சசா. திருவாக்கூர்த்தான்றோன்றிமாடம் | 184 |
| சஎ திருக்கடவூர் | 186 |
| சஅ. திருக்கடவூர்மயானம் | 189 |
| சகூ. திருவேட்டக்குடி | 191 |
| ரு0. திருத்தெளிச்சேரி | 192 |
| ருக தருமபுரம் | 193 |
| ருஉ. திருநள்ளாறு | 194 |
| ருங. கோட்டாறு | 198 |
| ருச. திருவம்பர்ப்பெருந்திருக்கோயில் | 199 |
| ருரு. திருவம்பர்மாகாளம் | 200 |
| ருசா. மீயச்சூர் | 201 |
| ருஎ. மீயச்சூரிளங்கோயில் | ,, |
| ருஅ. திலதைப்பதி | 202 |
| ருகூ. திருப்பாம்புரம் | 203 |

| | தலம். | பக்கம். |
|---|---|---|
| ௬௦. | சிறுகுடி. | 204 |
| ௬௧. | திருவீழிமிழலை | 205 |
| ௬௨. | வன்னியூர் | 210 |
| ௬௩. | கருவிலி | 211 |
| ௬௪. | பேணுபெருந்துறை | 212 |
| ௬௫. | நறையூர்ச்சித்தீச்சரம் | 213 |
| ௬௬. | அரிசிற்கரைப்புத்தூர் | 214 |
| ௬௭. | சிவபுரம் | 217 |
| ௬௮. | கலயநல்லூர் | 218 |
| ௬௯. | கருக்குடி. | 219 |
| ௭௦. | திருவாஞ்சியம் | 220 |
| ௭௧. | திருநன்னிலத்துப் பெருங்கோயில் | 222 |
| ௭௨. | திருக்கொண்டீச்சரம் | 223 |
| ௭௩. | திருப்பனையூர் | 224 |
| ௭௪. | திருவிற்குடி | 226 |
| ௭௫. | திருப்புகலூர் | 227 |
| ௭௬. | திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் | 230 |
| ௭௭. | இராமனதீச்சரம் | 231 |
| ௭௮. | திருப்பயற்றூர் | 232 |
| ௭௯. | திருச்செங்காட்டங்குடி | 233 |
| ௮௦. | திருமருகல் | 235 |
| ௮௧. | திருச்சாத்தமங்கை | 236 |
| ௮௨. | நாகைக்காரோணம் | 238 |
| ௮௩ | சிக்கல் | 240 |
| ௮௪. | கீழ்வேளூர் | 241 |
| ௮௫. | தேவூர் | 243 |
| ௮௬. | பள்ளியின்முக்கூடல் | 244 |
| ௮௭. | திருவாரூர் | 245 |
| ௮௮. | திருவாரூரரநெறி | 262 |
| ௮௯. | திருவாரூர்ப் பரவையுண் மண்டளி | 264 |
| ௯௦. | திருவிளமர். | 265 |
| ௯௧. | கரவீரம் | ,, |
| ௯௨. | பெருவேளூர் | 266 |
| ௯௩. | தலையாலங்காடு | 268 |
| ௯௪. | குடவாயில் | ,, |
| ௯௫. | திருச்சேறை | 269 |
| ௯௬. | நாலூர்மயானம் | 270 |
| ௯௭. | கடுவாய்க்கரைப்புத்தூர் | 271 |
| ௯௮. | இரும்பூளை | 272 |
| ௯௯. | அரதைப்பெரும்பாழி | 273 |
| ௧௦௦. | அவளிவணல்லூர் | 274 |
| ௧௦௧. | பரிதிநியமம் | 276 |
| ௧௦௨. | வெண்ணியூர் | 277 |
| ௧௦௩. | பூவனூர் | 278 |
| ௧௦௪ | பாதாளீச்சரம் | 279 |
| ௧௦௫, | திருக்களர் | 280 |
| ௧௦௬. | திருச்சிற்றேமம் | 281 |
| ௧௦௭. | திருவுசாத்தானம் | 282 |
| ௧௦௮. | இடும்பாவனம். | 283 |
| ௧௦௯. | கடிக்குளம் | 284 |
| ௧௧௦. | தண்டலைநீணெறி | 285 |
| ௧௧௧. | கோட்டூர். | 286 |
| ௧௧௨. | வெண்டுறை | 287 |
| ௧௧௩. | கொள்ளம்பூதூர் | 288 |
| ௧௧௪. | பேரெயில் | 289 |
| ௧௧௫. | கொள்ளிக்காடு | 290 |
| ௧௧௬. | தெங்கூர் | 291 |
| ௧௧௭. | நெல்லிக்கா | 292 |
| ௧௧௮. | நாட்டியத்தான்குடி | 293 |
| ௧௧௯. | காறாயல் | 294 |
| ௧௨௦. | கன்றாப்பூர் | 295 |
| ௧௨௧. | வலிவலம் | 296 |
| ௧௨௨ | கைச்சினம் | 298 |
| ௧௨௩. | கோளிலி | 299 |
| ௧௨௪. | திருவாய்மூர் | 302 |
| ௧௨௫. | திருமறைக்காடு என்பது வேதாரணியம் | 305 |
| ௧௨௬. | அகத்தியான்பள்ளி | 308 |
| ௧௨௭. | கோடிக்குழகர் | 309 |


ஈழநாட்டிலுள்ள தலங்கள்.


| | | |
|---|---|---|
| ௧. | திருக்கோணமலை | 310 |
| ௨. | திருக்கேதீச்சரம் | 311 |

## பாண்டிநாட்டிலுள்ள தலங்கள்.

| தலம். | பக்கம். |
|---|---|
| க. திருவாலவாய் என்பது மதுரை | 313 |
| உ. திருவாப்பனூர் | 324 |
| ங. திருப்பரங்குன்றம் | ,, |
| ச. திருவேடகம் | 326 |
| ரு. கொடுங்குன்றம் | 327 |
| சா. திருப்புத்தூர் | 328 |
| எ. திருப்புனவாயில் | 330 |
| அ. இராமேச்சரம் | 332 |
| கூ. திருவாடானை | 334 |
| க0. திருக்கானப்பேர் என்பது காளையார்கோயில். | 335 |
| கக. திருப்பூவணம் | 337 |
| கஉ. திருச்சுழியல் | 339 |
| கங. திருக்குற்றாலம் | 340 |
| கச. திருநெல்வேலி | 342 |

## மலைநாட்டிலுள்ள தலம்.

| | |
|---|---|
| க. திருவஞ்சைக்களம். | 343 |

## கொங்குநாட்டிலுள்ள தலங்கள்.

| | |
|---|---|
| க. அவிநாசி | 344 |
| உ. திருமுருகன் பூண்டி | 346 |
| ங. திருநணா என்பது பவானிகூடல் | 347 |
| ச. கொடிமாடச் செங்குன்றூர் என்பது திருச்செங்கோடு | 348 |
| ரு. வெஞ்சமாக்கூடல் | 349 |
| சா. திருப்பாண்டிக்கொடுமுடி | 350 |
| எ. கருவூரானிலை | 352 |

## நடுநாட்டிலுள்ள தலங்கள்.

| | |
|---|---|
| க. திருநெல்வாயிலரத்துறை | 353 |
| உ. திருப்பெண்ணாகடம் என்பது திருத்தூங்கானைமாடம் | 356 |
| ங. கூடலையாற்றூர் | 358 |
| ச. திருவெருக்கத்தம்புலியூர் | 359 |
| ரு. திருத்தினைநகர் | 360 |
| சா. திருச்சோபுரம் | 361 |
| எ. திருவதிகை | 362 |
| அ. திருநாவலூர் | 368 |
| கூ. திருமுதுகுன்றம் என்பது விருத்தாசலம் | 369 |
| க0. திருநெல்வெண்ணெய் | 372 |
| கக. திருக்கோவலூர் | 373 |
| கஉ. அறையணிநல்லூர். | 375 |
| கங. இடையாறு | ,, |
| கச. திருவெண்ணெய்நல்லூர் | 376 |
| கரு. துறையூர் | 377 |
| கசா. வடுகூர் | 378 |
| கஎ. திருமாணிகுழி | 379 |
| கஅ. திருப்பாதிரிப்புலியூர் | 380 |
| ககூ. முண்டீச்சரம் | 382 |
| உ0. புறவார்பனங்காட்டூர் | 383 |
| உக. ஆமாத்தூர் | 384 |
| உஉ. திருவண்ணாமலை | 386 |

## தொண்டை நாட்டிலுள்ள தலங்கள்.


க. திருக்கச்சியேகம்பம் 389
உ. திருக்கச்சிமேற்றளி 397
ந. திருவோணகாந்தன்றளி 399
ச. திருக்கச்சியநேகதங்காவதம் 400
ரு. திருக்கச்சிநெறிக்காரைக்காடு 401
சு. திருக்குரங்கணின்முட்டம் 402
எ. திருமாகறல் 403
அ திருவோத்தூர் 404
கூ. திருவன்பார்த்தான்பனங்காட்டூர் 405
க0. திருவல்லம் 406
கக. திருமாற்பேறு 407
கஉ. திருஊறல் 410
கந. திருவிலம்பையங்கோட்டூர் 411
கச. திருவிற்கோலம் 412
கரு. திருவாலங்காடு 413
கசு. திருப்பாசூர் 416
கஎ. திருவெண்பாக்கம் 418
கஅ. திருக்கள்ளில் 419
ககூ. திருக்காளத்தி 420
உ0 திருவொற்றியூர் 424
உக. திருவலிதாயம் 429
உஉ திருமுல்லைவாயில் 430
உந. திருவேற்காடு 432
உச. திருமயிலாப்பூர் 433
உரு. திருவான்மியூர் 434
உசு. திருக்கச்சூராலக்கோயில் 436
உஎ. திருவிடைச்சுரம் 438
உஅ. திருக்கழுக்குன்றம் 439
உகூ. திருஅச்சிறுபாக்கம் 441
ந0 திருவக்கரை 442
நக. திருவரசிலி 443
நஉ. திருஇரும்பைமாகாளம் 444


## துளுவநாட்டுத்தலம்.


க. திருக்கோகரணம் 445


## வடநாட்டுத்தலங்கள்.


க. திருப்பருப்பதம் 446
உ. திருவிந்திரநீலப்பருப்பதம் 448
ந. திருவனேகதங்காவதம் 449
ச. திருக்கேதாரம் 450
ரு. திருநொடித்தான்மலை 452


## பொதுப் பதிகங்கள்.


திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்
திருநீலகண்டத் திருப்பதிகம் 454
கோளறு ,, 455
பஞ்சாக்கரத் ,, 456
திருப்பாசுரம் ,, 457
திருநாவுக்கரசு நாயனார்;
திருவங்கமாலை 457
நமச்சிவாயத்திருப்பதிகம் 459
பாவநாசத் ,, 460
விடந்தீர்த்ததிருப்பதிகம் 460
தனித்திருநேரிசை 461
குறைந்த ,, 462
ஆருயிர்த்திருவிருத்தம் ,,
பசுபதித் ,, ,,
தனித் ,, 463
,, ,, 464
,, திருக்குறுந்தொகை ,,
இலிங்கபுராணம் 465
பாவநாசம் 466

| | | | |
|---|---|---|---|
| ஆதிபுராணம் | 466 | ஊர்த்தொகை | 473 |
| பலவகைத்திருத்தாண்டகம் | 467 | திருவாசகம் | 474-499 |
| நின்ற ,, | 468 | திருக்கோவையார் | 500 |
| தனித் ,, | ,, | திருவிசைப்பா | 501-510 |
| தனித் ,, | 470 | திருப்பல்லாண்டு | 511-514 |
| வினுவிடைத் ,, | 471 | திருமந்திரம் | 515-521 |
| மறுமாற்றத் ,, | 472 | 11-ந் திருமுறை | 522-538 |
| சுந்தரமூர்த்திநாயனுர். | | திருத்தொண்டர் | |
| நமக்கடிகளாகியவடிகள் | 472 | புராணம் | 538-549 |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியர்களுள்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருநாவுக்கரசு நாயனார்

சுந்தரமூர்த்தி நாயனார்

இம்மூவருந் திருவாய் மலர்ந்தருளிய

# தேவாரப்பதிகங்கள்.

ஸ்தல முறை.

---

## சோழநாடு

காவேரிக்கு வடகரை

### க. கோயில்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-குறிஞ்சி, க-ந்-திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கற்றாங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றாநின்றாரைப்பற்றாபாவமே. 1

பறப்பைப்படுத்தெங்கும்பசுவேட்டெரியோம்புஞ்
சிறப்பர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
பிறப்பில்பெருமானைப்பின்றாழ்சடையானை
மறப்பிலார்கண்டீர்மையல்தீர்வாரே. 2

செல்வநெடுமாடஞ்சென்றுசேணோங்கிச்
செல்வமதிதோயச்செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ்செல்வஞ்செல்வமே. 5

கோணாகணையானுங்குளிர்தாமரையானுங்
காணார்கழலேத்தக்கனலாயோங்கினான்
சேணார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணாநோயெல்லாம்வாளாமாயுமே. 9

ஞாலத்துயர்காழிஞானசம்பந்தன்
சீலத்தார்கொள்கைச்சிற்றம்பலமேய
சூலப்படையானைச்சொன்னதமிழ்மாலை
கோலத்தாற்பாடவல்லார்நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆடினாய்நறுநெய்யொடுபாறயிரந்தணர்பிரியாதசிற்றம்பலம்
நாடினாயிடமாநறுங்கொன்றைநயந்தவனே [வெண்டிங்கள்
பாடினாய்மறையோடுபல்கீதமும்பல்சடைப்பனிகால்கதிர்
சூடினாயருளாய்சுருங்கவெமதொல்வினையே. 1

கொட்டமேகமழுங்குழலாளொடுகூடினாயெருதேறினாய்
பட்டமேபுனைவாயிசைபாடுவபாரிடமா, [நுதற்,
நட்டமேநவில்வாய்மறையோர்தில்லைநல்லவர்பிரியாதசிற்றம்
இட்டமாவுறைவாயிவைமேவியதென்னேகொலோ. 2 [பலம்,

நீலத்தார்கரியமிடற்றார்நல்லநெற்றிமேலுற்றகண்ணினார்ப
சூலத்தார்சுடலைப்பொடிநீறணிவார்சடையார், [ற்று,
சீலத்தார்தொழுதேத்துசிற்றம்பலஞ்சேர்தலாற்கழற் சேவடி
கோலத்தாயருளாயுனகாரணங்கூறுதுமே. 3[கைதொழக்,

நாறுபூம்பொழினண்ணியகாழியுணான்மறைவல்லஞானசம்
ஊறுமின்றமிழாலுயர்ந்தாருறைதில்லைதன்னுள், [பந்தன்,
ஏறுதொல்புகழேந்துசிற்றம்பலத்தீசனையிசையாற்சொன்ன
கூறுமாறுவல்லாருயர்ந்தாரொடுங்கூடுவரே. 11 [பத்திவை,

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

செஞ்சடைக்கற்றைமுற்றத்திளநிலாவெறிக்குஞ்சென்னி
நஞ்சடைகண்டனாரைக்காணலாநறவநாறு
மஞ்சடைசோலைத்தில்லைமல்குசிற்றம்பலத்தே
துஞ்சடையிருள்கிழியத்துளங்கெரிபாடுமாறே. 1

மதியிலாவரக்கனோடிமாமலையெடுக்கநோக்கி
நெதியன்றோணெரியவூன்றிநீடிரும்பொழில்கள்சூழ்ந்த
மதியந்தோய்தில்லைதன்னுண்மல்குசிற்றம்பலத்தே
அதிசயம்போலநின்றுவனலெரியாடுமாறே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநேரிசை-பண்-கொல்லி. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகீ
யெத்தினாற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல்காண்பானடியனேன் வந்தவாறே. 1

கருத்தனாய்ப்பாடமாட்டேன்காம்பனதோளிபங்கா
ஒருத்தராலறியவொண்ணாத்திருவுருவுடையசோதீ
திருத்தமாந்தில்லைதன்னுட்டிகழ்ந்தசிற்றம்பலத்தே
நிருத்தநான்காணவேண்டிநேர்படவந்தவாறே. 2

மண்ணுண்டமாலவனுமலர்மிசைமன்னினானும்
விண்ணுண்ட திருவுருவம்விரும்பினார்காணமாட்டார்
திண்ணுண்ட திருவேமிக்க தில்லைச்சிற்றம்பலத்தே
பண்ணுண்டபாடலோடும்பரமநீயாடுமாறே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவிருத்தம்-பண்-கொல்லி. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறிவாழ்வயற்றில்லைதன்னுள்
ஆளவுடைக்கழற்சிற்றம்பலத்தரனாடல்கண்டாற்
பீளையுடைக்கண்களாற்பின்னைப்பேய்த்தொண்டர்காண்ப
தென்னே. 1

பொருவிடையொன்றுடைப்புண்ணியமூர்த்திபுலியதளன்
உருவுடையம்மலைமங்கைமணாளனுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
திருவடியைக்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்ப
தென்னே. 2

தொடுத்தமலரொடுதூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொழுதும்
அடுத்துவணங்குமயனொடுமாலுக்குங்காண்பரியான்
பொடிக்கொண்டணிந்துபொன்னாகியதில்லைச்சிற்றம்பலவன்
உடுத்ததுகில்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே

ஊனத்தைநீக்கியுலகறியவென்னையாட்கொண்டவன்
தேனொத்தெனக்கினியான்றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருப்யவன்னஞ்சையுண்டகண்டத்திலங்கு
மேனத்தொளிறுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்ப
தென்னே. 6

தருக்குமிருத்துத்தன்றோள்வலியுன்னித்தடவரையை
வரைக்கைகளாலெடுத்தார்ப்பமலைமகள்கோன்சிரித்து
அரக்கன் மணிமுடிபத்துமணிதில்லையம்பலவன்
நெருக்கிமிதித்தவிரல்கண்ட கண்கொண்டுகாண்பதென்னே.'

திருச்சிற்றம்பலம்.

---

திருவிருத்தம். ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கருநட்டகண்டனையண்டத்தலைவனைக்கற்பகத்தைச்
செருநட்டமும்மதிலெய்யவல்லானைச்செந்தீமுழங்கத்
திருநட்டமாடியைத்தில்லைக்கிறையைச்சிற்றம்பலத்துப்
பெருநட்டமாடியைவானவர்கோனென்றுவாழ்த்துவனே.

ஒன்றியிருந்துநினைமின்களுந்தமக்கூனமில்லைக்
கன்றியகாலனைக்காலாற்கடிந்தானடியவர்க்காய்ச்
சென்றுதொழுமின்கடில்லையுட்சிற்றம்பலத்துநட்ட
மென்றுவந்தாயெனுமெம்பெருமான்றன்றிருக்குறிப்பே. 2

குனித்தபுருவமுங்கொவ்வைச்செவ்வாயிற்குமிண்சிரிப்பும்
பனித்தசடையும்பவளம்போன்மேனியிற்பால்வெண்ணீறு
மினித்தமுடையவெடுத்தபொற்பாதமுங்காணப்பெற்றான்
மனித்தப்பிறவியும்வேண்டுவதேயிந்தமாநிலத்தே. 4

வாய்த்ததுநந்தமக்கீதோர்பிறவிமதித்திடுமின்
பார்த்தற்குப்பாசுபதமருள்செய்தவன்பத்தருள்ளீர்
கோத்தன்றுமுப்புரந்தீவிளைத்தான்றில்லையம்பலத்துக்
கூத்தனுக்காட்பட்டிருப்பதன்றோநந்தங்கூழைமையே. 5

முடிகொண்டமத்தமுமுக்கண்ணினோக்குமுறுவலிப்புந்
துடிகொண்டகையுந்துதைந்தவெண்ணீறுஞ்சுரிகுழலாள்
படிகொண்டபாகமும்பாய்புலித்தோலுமென்பாவிநெஞ்சிற்
குடிகொண்டவாதில்லையம்பலக்கூத்தன்குரைகழலே. 7

படைக்கலமாகவுன்னாமத்தெழுத்தஞ்செனாவிற்கொண்டே
னிடைக்கலமல்லேனெழுபிறப்பும்முனக்காட்செய்கின்றேன்
றுடைக்கினும்போகேன்றொழுதுவணங்கித்தூநீறணிந்துன்
அடைக்கலங்கண்டாயணிதில்லைச்சிற்றம்பலத்தரனே. 8

சாடவெடுத்ததுதக்கன்றன்வேள்வியிற்சந்திரனை
வீடவெடுத்ததுகாலனைநாரணனான்முகனுந்
தேடவெடுத்ததுதில்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
ஆடவெடுத்திட்டபாதமன்றோநம்மையாட்கொண்டதே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அன்னம்பாலிக்குந்தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்குமேலுமிப்பூமிசை
யென்னம்பாலிக்குமாறுகண்டின்புற
இன்னம்பாலிக்குமோவிப்பிறவியே. 1

அரும்பற்றப்படவாய்மலர்கொண்டுநீர்
சுரும்பற்றப்படத்தூவித்தொழுமினோ
கரும்பற்றச்சிலைக்காமனைக்காய்ந்தவன்
பெரும்பற்றப்புலியூரெம்பிரானையே. 3

அல்லலென்செயுமருவினையென்செயுந்
தொல்லைவல்வினைத்தொண்டன்றனென்செயுந்
தில்லைமாநகர்ச்சிற்றம்பலவனார்க்
கெல்லையில்லதோரடிமைபூண்டேனுக்கே. 4

நாடிநாரணனான்முகனென்றிவர்
தேடியுந்திரிந்துங்காணவல்லரோ
மாடமாளிகைசூழ்தில்லையம்பலத்
தாடிபாதமென்னெஞ்சுளிருக்கவே. 10

மதுரவாய்மொழிமங்கையோர்பங்கினன்
சதுரன்சிற்றம்பலவன்றிருமலை

யதிராவார்த்தெடுத்தான்முடிபத்திற
மிதிகொள்சேவடிசென்றடைந்துய்ம்மினே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பனைக்கைமும்மதவேழமுரித்தவன்
நினைப்பவர்மனங்கோயிலாக்கொண்டவன்
அனைத்தும்வேடமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனே. 1

தீர்த்தனைச்சிவனைச்சிவலோகனை
மூர்த்தியைமுதலாயவொருவனைப்
பார்த்தனுக்கருள்செய்தசிற்றம்பலக்
கூத்தனைக்கொடியேன்மறந்துய்வனே. 2

மாணிபால்கறந்தாட்டிவழிபட
நீணுலகெலாமாளக்கொடுத்தவன்
ஆணியைச்செம்பொனம்பலத்துண்ணின்ற
தாணுவைத்தமியேன்மறந்துய்வனே. 4

முழுதும்வானுலகத்துளதேவர்கள்
தொழுதும்போற்றியுந்தூயசெம்பொன்னினால்
எழுதிமேய்ந்தசிற்றம்பலக்கூத்தனை
இழுதையேன்மறந்தெங்ஙனமுய்வனே. 8

ஓங்குமால்வரையேந்தலுற்றான்சிரம்
வீங்கிவிம்முறவூன்றியதாளினான்
தேங்குநீர்வயல்சூழ்தில்லைக்கூத்தனைப்
பாங்கிலாத்தொண்டனேன்மறந்துய்வனே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## பெரியதிருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அரியானையந்தணர்தஞ்சிந்தையானையருமறையினகத்தானையணுவையார்க்குந், தெரியாததத்துவனைத்தேனைப்பாலைத் திகழொளியைத்தேவர்கடங்கோனைமற்றைக், கரியானைநான்முகனைக்கனலைக்காற்றைக்கனைகடலைக்குலவரையைக்கலந்துநின்ற, பெரியானைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. 1

அருந்துணையையடியார்தமல்லறீர்க்குமருமருந்தையகன்ஞாலத்தகத்துட்டோன்றி, வருந்துணையுஞ்சுற்றமும்பற்றும்விட்டுவான்புலன்களகத்தடக்கிமடவாரோடும், பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமாற்றிப் பொதுநீக்கித்தனைநினையவல்லோர்க்கென்றும், பெருந்துணையைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. 5

காரொளியதிருமேனிச்செங்கண்மாலுங்கடிக்கமலத்திருந்தயனுங்காணாவண்ணஞ், சீரொளியதழற்பிழம்பாய்நின்றதொல்லைத்திகழொளியைச்சிந்தைதனைமயக்கந்தீர்க்கு, மேரொளியையிருநிலனும்விசும்பும்விண்ணுமேழுலகுங்கடந்தண்டத்தப்பானின்ற, பேரொளியைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## புக்கதிருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மங்குன்மதிதவழுமாடவீதிமயிலாப்பிலுள்ளார்மருகலுள்ளார், கொங்கிற்கொடுமுடியார்குற்றாலத்தார்குடமூக்கிலுள்ளார்போய்க்கொள்ளம்பூதூர்த், தங்குமிடமறியார்சாலநாளார்தருமபுரத்துள்ளார்தக்களூரார், பொங்குவெண்ணீறணிந்துபூதஞ்சூழப்புலியூர்ச்சிற்றம்பலமேபுக்கார்தாமே. 1

காரார்கமழ்கொன்றைக்கண்ணிசூடிக்கபாலங்கையேந்
திக்கணங்கள்பாட, வூராரிடும்பிச்சைகொண்டுழலுமுத்தம
ராய்நின்றவொருவனார்தாம், சீரார்கழல்வணங்குந்தேவதேவர்
திருவாரூர்த்திருமூலட்டானமேயார், போரார்விடையேறிப்
பூதஞ்சூழப்புலியூர்ச்சிற்றம்பலமேபுக்கார்தாமே. 5

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-குறிஞ்சி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மடித்தாடுமடிமைக்கணன்றியேமனனேநீவாழுநாளு
ந், தடுத்தாட்டித்தருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்
கொள்வான், கடுத்தாடுங்கரதலத்திற்றமருகமுமெரியகலுங்
கரியபாம்பும், பிடித்தாடிப்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெரு
மானைப்பெற்றாமன்றே. 1

பேராதுகாமத்திற்சென்றாற்போலன்றியேபிரியாதுள்
கிச், சீரார்ந்தவன்பராய்ச்சென்றுமுன்னடிவீழுந்திருவினரை,
யோராதுதருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்
வான், பேராளர்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்
றாமன்றே. 2

முட்டாதமுச்சந்திமூவாயிரவர்க்குமூர்த்தியென்னப்,
பட்டானைப்பத்தராய்ப்பாவிப்பார்பாவமும்வினையும்போக, வி
ட்டானைமலையெடுத்தவிராவணனைத்தலைபத்துநெரியக்காலாற்,
றொட்டானைப் புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றா
மன்றே. 7

பாரூருமரவல்குலுமைநங்கையவள்பங்கன்பைங்கணே
ற்ற, னாரூரன்றருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்
கொள்வா, னாரூரன்றம்பிரானாரூரன்மீகொங்கிலணிகாஞ்சிவா
ய்ப், பேரூர்பெருமானைப்புலியூர்ச்சிற்றம்பலத்தேபெற்றாம
ன்றே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**கோயில்:**—இது ஸ்ரீ சிதம்பரம், தில்லவனம், பெரும்பற்றப் புலியூர், புண்டரீகபுரம், வியாக்ரபுரம், தகராகாச க்ஷேத்திரம், பூலோக கயிலாசம் என்னும் பல பெயருடையது; பிண்டமாகிய சரீரத்திலே இருதயத்தானமாகிய தகரபுண்டரீக வீட்டினுள் பிரமமாகிய சிவம் இருப்பதுபோல் பிரமாண்டமாகிய உலகத்திலே தில்லைவனமாகிய தகரவீட்டினில் பிரமமாகிய நடேசப்பெருமான் இருந்து லோகானுக்கிரகத்தின்பொருட்டுச் சிவகாமவல்லியார் காண பஞ்ச கிருத்திய ஞானநடனஞ் செய்யும் பெருமை வாய்ந்தது.

இங்கு வியாக்ரபாதர், பதஞ்சலி, உபமன்யு, திருவுடையந்தணர் மூவாயிரவர், வியாசர், சுகர், சௌனகர், சைமினி, சூதர் முதலிய முனிவர்களும்; ஸ்ரீ மணிவாசக மூர்த்திகள், திருநீலகண்ட நாயனர், திருநாளைப்போவார் நாயனர், கூற்றுவ நாயனர், கணம்புல்ல நாயனர், கோச்செங்கட்சோழ நாயனர், சேக்கிழார் நாயனர் என்னும் உண்மை நாயன்மார்களும்; மறைஞான சம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் என்னும் சந்தானசாரியர்களும்; சேந்தனர், பெற்றான் சாம்பனர், இரணிய வன்மனர் முதலிய மெய்யடியார்களும் வழிபட்டு முத்திபெற்றருளினர்; திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் தில்லைவாழந்தணரைச்சிவசாரூப்யராய்த் தரிசித்துப் பாடினர்; திருநாவுக்கரசு நாயனர் மிதித்தற்கு அஞ்சித் திருவீதியில் அங்கப்பிரதக்ஷிணம் செய்தனர்; சுந்தரமூர்த்தி நாயனர் திருப்பேருரிலே கண்ட நிருத்த தரிசனத்தைத் தினைத்துப்'பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாம்' என்று உவகை கொண்டருளினர்; ஸ்ரீமன்மணிவாசக மூர்த்திகள் புத்தரை வாதில் வென்று ஊமைப்பெண்ணைப் பேசுவித்து சைவஸ்தாபனஞ் செய்தருளினர்; நம்பியாண்டார்நம்பிகள் தேவாரம் முதலிய திருவருட் டிருமுறைகளைத் திருவறையிலே கண்டு உதவியருளினர்; தொண்டர்சீர் பரவவல்ல சேக்கிழார்பெருமான் பெரியபுராணஞ் செய்து அரங்கேற்றியருளினர்; உமாபதி சிவாசாரிய சுவாமிகள் பெற்றான் சாம்பனருக்கும் முள்ளிச் செடிக்கும் முத்திகொடுத்தருளினர்.

இன்னும் இது தரிசிக்க முத்திதரும் தன்மையது; அத்தயாமத்தில் சகல க்ஷேத்திரங்களிலுமுள்ள மூர்த்திகளின் கலைகள் வந்தொடுங்குவது; சேரமான்பெருமாணயனர் சுந்தரமூர்த்தி நாயனரைத் தோழராகப் பெறும்பொருட்டுச் சிலம்பொலியைத் தாழ்ப்பித்துப் பொன்வண்ணத்தந்தாதியைப்பெற்றது ; வேடமே மெய்ப்பொருள் என வீழ்ந்த மெய்ப்பொருணயனருக்குச் சிலம்பொலிகேட்பித்தது.

இதற்குத் தேவாரப் பதிகம் கக-ம் திருவாசகப் பதிகம் உரு-ம் திருக்கோவையாரும், திருவிசைப்பாப்பதிகம் கரு-ம் திருப்பல்லாண்டும் பத்தாந் திருமுறையிற் பல திருமந்திரங்களும் பதினொராந் திருமுறையில் பொன்வண்ணத்தந்தாதி கோயினான்மணிமாலை, கோயிற்றிருப்பண்ணியர்த்திருவிருத்தங்களும், பெரியபுராணத் திருவிருத்தங்களும் ஆயதிருவருட்பாக்கள் உண்டு.

வடமொழியில் சாந்தோக்யம், கைவல்யம் என்னும் உபநிஷத்துக்களும், மகேதிகாசமாகிய சிவரஹஸ்யம், சூதசம்மிதை, சிதம்பர மான்மியம், புண்டரீகபுர மான்மியம், வியாக்ரபுர மான்மியம், ஏம சபா மான்மியம், தில்லவன மான்மியம் முதலியனவும், தமிழில் கோயிற்புராணம், சிதம்பர புராணம், சபாநடேசபுராணம் முதலியனவும் இதன் மாகாத்மியத்தைக் கூறும்.

| | சுவாமிபெயர் | தேவியார் பெயர். |
|---|---|---|
| திருமூலஸ்தானம் | திருமூலநாதர் | உமையம்மையார். |
| கனகசபை | சபாநாயகர் | சிவகாமவல்லியார் |

சிதம்பரத்தில் க. கனக சபைக்கு வடக்கே சிவகங்கையும், உ. கிழக்கே பரமானந்தகூபமும், ந. திருக்கோயிலுக்குத் தெற்கே புலிமடுவும், ச. திருப்புலீச்சரத்துக்கு எதிரே வியாக்ரபாத தீர்த்தமும், [இளமை நாயனார் குளம்], ரு. திருவனந்தேச்சுரத்துக்கு முன்னே அனந்த தீர்த்தமும், சு. இதற்கு மேற்கே நாக சேரியும், எ. திருக்களாஞ் சேரியில் பிரம தீர்த்தமும், அ. பிரமசாமுண்டி கோவிலுக்கு முன்னே சிவப்பிரியையும், கூ. இதற்குத் தென்கிழக்கே திருப்பாற்கடலும், க0. சமுத்திரத்தில் பாசமறுத்ததுறையில் குய்ய தீர்த்தமும் எனப் பத்துதீர்த்தங்கள் உண்டு.

ஸ்தல விருக்ஷம் - ஆலவிருக்ஷம்.

சிதம்பரம் :— தென் இந்தியா இருப்புப்பாதையில் ஒரு ஸ்டேஷன். ஸ்டேஷனுக்கு வடமேற்கே முக்கால் மைலில் உள்ளது.

---

# உ. திருவேட்களம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அந்தமுமா தியுமாகியவண்ணலாரழலங்கையமர்ந்திலங்க
மந்தமுழவமியம்பமலைமகள்கா ணநின்றாடிச்
சந்தமிலங்குநகுதலைகங்கைதண்மதியம்மயலேததும்ப
வெந்தவெண்ணீறுமெய்பூசும்வேட்களநன்னகராரே. 1

சடைதனைத்தாழ்தலுமேறமுடித்துச்சங்கவெண்டோடு சரிந்திலங்கப், புடைதனிற்பாரிடஞ்சூழப்போதருமாறிவர் போல்வார், உடைதனில்விரற்கோவணவாடையுண்பதுமூ ரிடுபிச்சைவெள்ளை, விடைதனையூர்திநயந்தார்வேட்களநன்ன கராரே. 2

விண்ணியன்மாடம்விளங்கொளிவீதிவெண்கொடியெங் கும்விரிந்திலங்க, நண்ணியசீர்வளர்காழிநற்றமிழ்ஞானசம் பந்தன், பெண்ணினல்லாளொருபாகமமர்ந்துபேணியவேட் களமேன்மொழிந்த, பண்ணியல்பாடல்வல்லார்கள்பழியொ டுபாவமிலாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நன்றுநாடொறுநம்வினைபோயறும்
என்றுமின்பந்தழைக்கவிருக்கலாஞ்
சென்றுநீர்திருவேட்களத்துள்ளுறை
துன்றுபொற்சடையானைத்தொழுமினே. 1

கருப்புவெஞ்சிலைக்காமனைக்காய்ந்தவன்
பொருப்புவெஞ்சிலையாற்புரஞ்செற்றவன்
விருப்பன்மேவியவேட்களங்கைதொழு
திருப்பனாகிலெனக்கிடரில்லையே. 2

சேடனாருறையுஞ்செழுமாமலை
ஓடியாங்கெடுத்தான்முடிபத்திற
வாடவூன்றிமலரடிவாங்கிய
வேடனாருறைவேட்களஞ்சேர்மினே 10

திருச்சிற்றம்பலம்.

திருவேட்களம்—இது மூங்கில்வனம் என்றுங் கூறப்பெறும்; அருச்சுனருக்குப் பாசுபதாஸ்திரம் கொடுத்த தலமென்று கருதப்பெறுகிறது. இதனைச் சுவாமியின் திருநாமமும் இத்தலத்துள்ள பாசுபதமேந்திய உற்சவமூர்த்தமும் அருச்சுனவிக்ரகமும் திருக்குறுந்தொகையில் வேடனுர் என்ற குறிப்பும் வற்புறுத்துகின்றன. சுவாமியின் பெயர் - பாசுபதேசுவரர், தேவியார் பெயர் - நல்லநாயகி. இத்தலத்திற்குத் தேவாரப்பதிகம் இரண்டு.

இது சிதம்பரம் ஸ்டேஷனுக்குக் கிழக்கே மட்பாதையில் ஒரு மைலில் உள்ளது.

---

# ரு. திருநெல்வாயில்.

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர்.

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

புடையினுர்புள்ளிகால்பொருந்திய
மடையினுர்மணிநீர்நெல்வாயிலார்
நடையினுல்விரற்கோவணம்நயந்
துடையினுரெமதுச்சியாரே. 1

வாங்கினுர்மதின்மேற்கணைவெள்ளந்
தாங்கினுர்தலையாயதன்மைபர்
நீங்குநீரநெல்வாயிலார்தொழ
வோங்கினுரெமதுச்சியாரே. 2

நெண்பயங்குநெல்வாயிலீசனைச்
சண்பைஞானசம்பந்தன்சொல்லிவை
பண்பயன்கொளப்பாடவல்லவர்
விண்பயன்கொளும்வேட்கையாளரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருநெல்வாயில்—இது சிவபுரி என வழங்கப்பெறும். சுவாமிபெயர்-உச்சிநாதர், அம்மையார் பெயர்-கனகாம்பிகை. சுவாமி பெயர் திருப்பதிகத் திருப்பாட்டுதோறும் வைக்கப் பெற்றிருக்கிறது. இத்தலம் சிதம்பரம் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்காய் ஒன்றரை மைலில் உள்ளது.

---

## ௪. திருக்கழிப்பாலை.

### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-கௌசிகம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வெந்தகுங்கிலியப்புகைவிம்மவே
கந்தநின் றுலவுங்கழிப்பாலையார்
அந்தமும்மளவும்மறியாததோர்
சந்தமாலவர்மேவியசாந்தமே. 1

வானிலங்கவிளங்குமிளம்பிறை
தானலங்க லுகந்த தலைவனார்
கானிலங்கவருங்கழிப்பாலையார்
மானலம்மடநோக்குடையாளொடே. 2

அந்தண்காழியருமறைஞானசம்
பந்தன்பாய்புனல்சூழ்கழிப்பாலையைச்
சிந்தையாற்சொன்னசெந்தமிழ்வல்லவர்
முந்திவா னுலகாடன்முறைமையே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநாவுக்கரசு நாயனார்.

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஊனுடுத்தியொன்பதுவாசல்வைத்துவொள்ளெலும்பு
தூணாவுரோமமேய்ந்து, தாமெடுத்தகூரைதவிரப்போவார்தய
க்கம்பலபடைத்தார்தாமரையினார், கானெடுத்துமாமயில்களா

டுஞ்சோலைக் கழிப்பாலைமேயகபாலப்பனுர், வானிடத்தையூடறுத்து வல்லைச்செல்லும் வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே. 1

விண்ணப்பவிச்சாதரர்களேத்தவிரிகதிரானெரிசுடரான் விண்ணுமாகிப், பண்ணப்பன்பத்தர்மனத்துளேயும்பசுபதிபாசுபதன்றேசமூர்த்தி, கண்ணப்பன் கண்ணப்பக்கண்டுகந்தார்கழிப்பாலைமேயகபாலப்பனுர், வண்ணப்பிணிமாயயாக்கைநீங்கவழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. 6

பிணம்புல்குபீறற்குரம்பைமெய்யாப்பேதப்படுகின்றபேதைமீர்காள், நிணம்புல்குசூலத்தர்நீலகண்டரெண்டோளரெண்ணிறைந்தகுணத்தினலே, கணம்புல்லன் கருத்துகந்தார்காஞ்சியுள்ளார்கழிப்பாலைமேயகபாலப்பனுர், மணம்புல்குமாயக்குரம்பைநீங்கவழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. 7

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனர்.

பண்-நட்டராகம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

செடியேன்றீவினையிற்றடுமாறக்கண்டாலும்
அடியானவனென்றொழிதறகவாமே
முடிமேன்மாமதியும்மரவும்முடன்றுயிலும்
வடிவேதாமுடையார்மகிழுங்கழிப்பாலையதே. 1

எங்கேனும்மிருந்துன்னடியேனுனைநினைந்தால்
அங்கேவந்தென்னொடுமுடனுகிநின்றருளி
இங்கேயென்வினையையறுத்திட்டெனையாளுங்
கங்காநாயகனேகழிப்பாலைமேயானே. 2

பழிசேரில்புகழான்பரமன்பரமேட்டி
கழிபார்செல்வமல்குங்கழிப்பாலைமேயானைத்
தொழுவானவலர்கோனூரனுரைத்ததமிழ்
வழுவாமாலைவல்லார்வானேருலகாள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கழிப்பாலை—இத்தலம் முன்னர் கொள்ளிடத்திரு நதியின் வடகரையில் காரைமேடு என்னும் இடத்திலிருந்து ஆறு கொண்டு ஜீர்ணமாய் விட்டபடியால் தத்காலம் ௩வது திருநெல்வாயில் என்னும் சிவபுரியில் தனியாலயம் அமைத்துப் பிரதிஷ்டிக்கப் பெற்றிருக்கிறது. சுவாமி-பால்வண்ணநாதர், சிவலிங்கம்-வெண்ணிறத்திருமேனி, அம்மையார்-வேதநாயகி. வன்மீக மஹருஷி பூசித்ததலமென்று சொல்லப்பெறுகிறது. இத்தலத்துக்குத் தேவாரப்பதிகம் அ.

இது சிவபுரிக்குத் தெற்கு கால் மைலில் உள்ளது.

---

# ரு. திருநல்லூர்ப் பெருமணம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

### பண்-அந்தாளிக்குறிஞ்சி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கல்லூர்ப்பெருமணம்வேண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம்பாட்டுமெய்பாய்த்தில
சொல்லூர்ப்பெருமணஞ்சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமணமேயநம்பானே. 1

தருமணலோதஞ்சேர்தண்கடனித்திலம்
பருமணலாக்கொண்டுபாவைநல்லார்கள்
வருமணங்கூட்டிமணஞ்செயுநல்லூர்ப்
பெருமணத்தான்பெண்ணோர்பாகங்கொண்டானே. 2

தக்கிருந்தீரன்றுதாளாலரக்கனை
உக்கிருந்தொல்கவுயர்வரைக்கீழிட்டு
நக்கிருந்தீரின்றுநல்லூர்ப்பெருமணம்
புக்கிருந்தீரெமைப்போக்கருளீரே. 8

நறும்பொழிற்காழிபுண்ஞானசம்பந்தன்
பெறும்பதநல்லூர்ப்பெருமணத்தானை
யுறும்பொருளாற்சொன்னவொண்டமிழ்வல்லார்க்
கறும்பழிபாவமவலமிலரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருநல்லூர்ப் பெருமணம்**—இது ஓர்கற்பத்தில் பிரம தேவர் சீகாழிக்குத் தேவர்களோடு எழுந்தருள்கையில் இத்தல மகிமையை யறிந்து "நல்லூர்" என்றமையின் நல்லூரெனப் பெற்றது; பிறகு திருஞான சம்பந்தப் பெருந்தகையாரது திருமணசம்பந்தத்தினால் நல்லூர்ப் பெருமணமாயது. கயிலாய தரிசனத்தை விரும்பிய மஹாருஷிகளுக்குச் சிவபெருமான் இங்கு சிவலோக தரிசனம் கொடுத்தருளினர். ஞானசம்பந்தப் பெருந்தகையார் எழுந்தருளி விவாகம் செய்துகொண்டு எரிவலம் வரும் சமயத்தில் ஆலயத்தையடைந்து "கல்லூர்ப் பெருமணம்" என்னும் திருப்பதிகத்தை எடுத்து "நல்லூர்ப் பெருமணம்புக்கிருந்தீர் எமை இன்று போக்கருளீரே" என்று முத்தி விண்ணப்பஞ் செய்து ஆலயம் ஜோதியாக அதனுள் வாயில் வகுக்கப் பெற்று சிவாக்ஞையால் தாமும் தேவியாரும் சுற்றத்தவரோடும் திருமணம் சேவிக்கவந்த திருநீலநக்க நாயனர், முருக நாயனர், திருநீலகண்டயாழ்ப்பாண நாயனர் முதலிய அடியாரோடும் பரிஜனங்களோடும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை யோதிக்கொண்டு சிற்சோதியிற் கலந்தருளினர். பிள்ளையாரது திருத்தேவியார் தலமாதலின் ஆச்சாபுரம் என்று வழங்குகிறது. சுவாமி-சிவலோகத்தியாகர், அம்மையார்-திருவெண்ணீற்றுமையம்மை. தீர்த்தம் கோயிலுக்கு முன்னே பஞ்சாக்கரத் தீர்த்தமும் எட்டுத்திக்கிலும் ருஷிகளால் கண்ட எட்டுத் தீர்த்தங்களும் உண்டு.

இத்தலம் அணைக்கரைக்காரன் சத்திரம் என்று சொல்லப்பெறும் கோள்ளிடம் ஸ்டேஷனுக்கு கிழக்கே மட்பாதையில் 3-வது மைலில் உள்ளது.

---

## கூ. திருமயேந்திரப்பள்ளி.

### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர்.

பண்-கோல்லி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

திரைதருபவளமுஞ்சீர்திகழ்வைரமுங்
கரைதருமகிலொடுகனவளைபுகுதரும்
வரைவிலாலெலிபிலெப்தமயேந்திரப்பள்ளியுள்
அரவரையழகனையடியிணைப்பணிமினே. 1

சந்திரன் கதிரவன்றருபுகழயனேடும்
இந்திரன்வழிபடவிருந்தவெம்மிறையவன்
மந்திரம்மறைவளர்மயேந்திரப்பள்ளியுள்
அந்தமில்லழகனையடிபணிந்துய்ம்மினே. 6

வம்புலாம்பொழிலணிமயேந்திரப்பள்ளியுள்
நம்பனுர்கழலடிஞானசம்பந்தன்சொல்
நம்பரமிதுவெனநாவினனவில்பவர்
உம்பரரெதிர்கொளவுயர்பதிபணைவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருமயேந்திரப்பள்ளி— இது கோயிலடிப்பாளையம் என்று வழங்கப்பெறும். மஹேந்திரன் என்னும் ஓர் இந்திரன் வழிபட்ட காரணத்தினுல் "மயேந்திரப்பள்ளி" என்னும் திருப்பெயர் பெற்றது; இவனன்றி சந்திர சூரியரும் பிரமதேவரும் பூசித்துள்ளார். இதனை 6-ம் திருப்பாட்டிற்காண்க. சுவாமி-திருமேனியழகர், பதிகத்து அழகன் எனவும் அந்தமில் அழகன் எனவும் பெயர்க் குறிப்புக்காண்க தேவியார் - வடிவாம்பிகை.

இது ஆச்சாபுரத்துக்கு வடகிழக்கே நான்கு மைலில் உள்ளது.

---

# எ. தென் திருமுல்லைவாயில்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண்-பியந்தைக்காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

துளிமண்டியுண்டுநிறம்வந்தகண்டனடமன்னுதுன்னுசுடரோன், ஒளிமண்டியும்பருலகங்கடந்தவுமைபங்கனெங்களரனுர், களிமண்டுசோலைகழனிக்கலந்த கமலங்கடங்குமதுவிற், றெளிமண்டியுண்டுசிறைவண்டுபாடுந்திருமுல்லைவாயிலிதுவே. 1

ஒன்றென்றொடொன்றுமொருநான்கொடைந்துமிருமூன்றொடேழுமுடனுய், அன்றின்றொடென்றுமறிவானவர்க்

குமறியாமைநின்றவரனூர், குன்றொன்றொடொன்றுகுலை யொன்றொடொன்றுகொடியொன்றொடொன்றுகுழுமிச், செ ன்றொன்றொடொன்றுசெறிவாநிறைந்த திருமுல்லைவாயிலிது வே. 4

அணிகொண்டகோதையவணன்றுமேத்தவருள்செய் தவெந்தைமருவார், திணிகொண்டமூன்றுபுரமெய்தவில்லி திருமுல்லைவாயிலிதன்மேற், றணிகொண்டசிந்தையவர்காழி ஞானமிகுபந்தனெண்டமிழ்களின், அணிகொண்டபத்துமி சைபாடபத்தரகல்வானமாள்வர்மிகவே. 11

திருச்சிற்றம்பலம்.

---

தென்றிருமுல்லைவாயில்—இது தொண்டைநாட்டு மற் றோர் திருமுல்லைவாயிலை நோக்கித் "தென் திருமுல்லைவாயில்" எனப் பெயரெய்தியது. இங்கு உமாதேவியார் தவமிருந்து பூசித்து தக்ஷிணா மூர்த்தியினிடம் ஸ்ரீபஞ்சாக்ஷர உபதேசம் பெற்றருளிய தாகத்தெரிகி றது. இதனைப் பதிகத்திருக்கடைக்காப்பில் "அணிகொண்ட கோதை யவணன்றுமேத்த வருள்செய்த எந்தை" என்ற குறிப்பாலுணர்க. தேவேந்திரனும் சுதர்மனும் பூசித்துள்ளார்கள். சுவாமி-முல்லைவன நாதர், தேவியார்-கோதையம்மை

இத்தலம் சீகாழிக்குக் கிழக்கே 8 மைலில் கற்பாதையில் கட ற்கரையில் உள்ளது.

---

# அ. திருக்கலிக்காமூர்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

பண்-பழம்பஞ்சுரம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மடல்வரையின்மதுவிம்முசோலைவயல்சூழ்ந்தழகாருங்
கடல்வரையோதங்கலந்துமுத்தஞ்சொரியுங்கலிக்காமூர்
உடல்வரையின்னுயிர்வாழ்க்கையாயவொருவன்கழலேத்த
இடர்தொடராவினையானசிந்துமிறைவன்னருளாமே. 1

மைவரைபோற்றிரையோடுகூடிப்புடையேமலிந்தோதங்
கைவரைபால்வளர்சங்கமெங்குமிருக்குங்கலிக்காழூர்
மெய்வரையான்மகள்பாகன்றன்னைவிரும்பவுடல்வாழும்
ஐவரையாசறுத்தாளுமென்பாதுவுஞ்சாதமே. 2

ஆழியுணஞ்சமுதாரவுண்டன்றமரர்க்கமுதுண்ண
ஊழிதொறும்முளராவளித்தானுலகத்துயர்கின்ற
காழியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழாற்கலிக்காழூர்
வாழியெம்மானைவணங்கியேத்தமருவாபிணிதானே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கலிக்காமூர்—இது அன்னப்பன்பேட்டை என்று வழங்குகிறது. பராசரர் பூசித்தது. சுவாமி-சுந்தரேசர், தேவியார்-அழகம்மை. இத்தலம் மாயூரம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்காய்த் திருவெண்காட்டுக்குச் சென்று அங்குநின்றும் வடகிழக்காய் 3 மைலில் உள்ளது. திருமுல்லைவாயிலினின்றும் சென்றால் உப்பனாறு கடக்கவேண்டியிருத்தலின் சங்கடமாயிருக்கும்.

---

# கூ, திருச்சாய்க்காடு.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-சீகாமரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மண்புகார்வான்புகுவர்மனமிளையார்பசியாலுங்
கண்புகார்பிணியறியார்கற்றாருங்கேட்டாரும்
விண்புகாரெனவேண்டாவெண்மாடநெடுவீதித்
தண்புகார்ச்சாய்க்காட்டெந்தலைவன்றாள்சார்ந்தாரே. 1

நீநாளுநன்னெஞ்சேநினைகண்டாயாரறிவார்
சாநாளும்வாழ்நாளுஞ்சாய்க்காட்டெம்பெருமாற்கே
பூநாளுந்தலைசுமப்பப்புகழ்நாமஞ்செவிகேட்ப
நாநாளுநவின்றேத்தப்பெறலாமேநல்வினையே. 3

வையநீரேற்றானுமலருறையுநான்முகனும்
ஐயன்மாரிருவர்க்குமளப்பரிதாலவன்பெருமை
தையலார்பாட்டோவாச்சாய்க்காட்டெம்பெருமானைத்
தெய்வமாப்பேணாதார்தெளிவுடைமைதேறோமே. 9

நொம்பைந்துபுடைத்தொல்குநூபுரஞ்சேர்மெல்லடியார்
அம்பந்தம்வரிக்கழலுமாவஞ்செய்பூங்காழிச்
சம்பந்தன்றமிழ்பகர்ந்தசாய்க்காட்டுப்பத்திவையும்
எம்பந்தமெனக்கருதியேத்துவார்க்கிடர்கெடுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானத்திளமதியும்பாம்புந்தன்னில்வளர்சடைமேலாக ரிப்பவைத்தார்போலுந், தேனைத்திளைத்துண்டுவண்டுபாடுந்தி ல்லைநடமாடுந்தேவர்போலும், ஞானத்திரளாய்நின் றார்போலு நன்மையுந்தீமையுமானார்போலுந், தேனைத்தடி யார்க்கினியார்போலுந் திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல் வர்தாமே. 1

விலையிலாவாரஞ்சேர்மார்பர்போலும்வெண்ணீறுமெய்க் கணிந்தவிகிர்தர்போலும், மலையினார்மங்கைமணாளர்போலு மாற்பேறுகாப்பாய்மகிழ்ந்தார்போலுந், தொலைவிலார்புரமூ ன்றுந் தொலைத்தார்போலுஞ் சோற்றுத்துறை துருத்தியுள் ளார்போலுஞ், சிலையினார்செங்கணரவர்போலுந்திருச்சாய்க் காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. 8

திருச்சிற்றம்பலம்.

---

கூ. **திருச்சாய்க்காடு:**—இது சாயாவனம், பூம்புகார் எனவும் வழங்கும். முன்னோர் காலத்து இந்திரன் தினந்தோறும் தனது மாதா பூலோகம் வந்து அமுதேச்சுரரைப் பூசிக்கும் சிரமத்தை ஒழிக்கவெண்ணித் திருச்சாய்க்காட்டுக்குச் சமீபத்திலுள்ள

வள்ளி மலையின் சிகரத்தில்வந்து அமுதேச்சுரர் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தை நாகலோகம்வரையும் தோண்டியும் சிவலிங்கம் ஊடுருவியிருப்பதையும் ஆதிசேடனது பணுமகுடங்களிலுள்ள நாகரத்தினங்களினது ஒளி எங்கும் வீசி யாவர் கண்ணும் மங்கச்செய்வதையும் உத்தேசித்துத் தான் நினைந்தது கூடாதென்றெண்ணி முன்போல அவ்வாலயத்தைப் புதுக்கியமைத்துத் தேவ பூஜையாயிருந்ததை நகரத்திற் குடியேற்றி மானவபூஜையாகச் செய்து சிறப்புறுவித்தான். ஆதிசேடனது மாணிக்கச்சாயை பரவிய காரணத்தினல் சாயாவனமாயிருக்கலாம்போலும். அக்காலத்து தேவியார் பயந்து கூ கூ என்றமையின் தேவியார்க்குக் கூவென்ற மென்மொழியாள் என்னும் திருநாமமும் வழங்கியது. இங்கு உபமன்யு பகவானும் பூசித்துப் பேறுபெற்றனரென்ப. இத்தல சம்பந்தமான பல கதைகள் சங்க நூல்கள் முதலிய பல நூல்களிலும் ஏராளமாகவிருத்தலின் விரிவஞ்சிவிடுத்தோம். இத்தலம் வேதாரண்யம், திருவையாறு, கௌரீமாயூரம், திருவிடைமருதூர், சாயாவனம் ஸ்ரீவாஞ்சியம் என்னும் ஆறனுள் ஒன்று. அதனை,

வேதாரண்யம் வஞ்சநதம் கௌரீமாயூரம் அர்ஜுநம்
சாயாவநஞ்ச ஸ்ரீவாஞ்ச்யம் காசீக்ஷேத்ரஸமா நிஷட்

என்பதனல் அறிக.

சுவாமி-சாயவனேசுரர், தேவியார்-குயிலினும்நன்மொழியம்மை தீர்த்தம்-காவேரி. இத்தலத்துக்குத் தேவாரப்பதிகம் 4. இது மாடக்கோயில்களுள் ஒன்று.

இத்தலம் சீகாழிக்குத் தென்கிழக்கு ஒன்பது மைல் தூரத்தில் உள்ளது. இதுவன்றி மாயூரத்திலிருந்து இடையில் திருவிளநகர் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டும் இத்தலத்தை யடையலாம்.

---

## ௧0. திருப்பல்லவனீச்சரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-பழம்பஞ்சுரம்-ஈரடி ந-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாசுபாணியர்பாடல்வீணையர்பட்டினத்துறைபல்லவனீச்ச
ராசுபேணிநின்றாரிவர்தன்மையறிவாரார். [ரத் 1
பட்டநெற்றியர்நட்டமாடுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திட்டமாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். 2

பல்வினைஓட்டினர்பலிகொண்டுண்பவர்பட்டினத்துறைபல்லவ
னீச்சரத்தெல்லியாட்டுகந்தாரிவர்தன்மையறிவாரார். 5

பச்சைமேனியர்பிச்சைகொள்பவர்பட்டினத்துறைபல்லவ
னீச்சரத்திச்சையாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். 6

பாதங்கைதொழவேதமோதுவர்பட்டினத்துறைபல்லவனீச்ச
ரத்தாதியாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். 7

வானமாள்வதற்கூனமொன்றிலைமாதர்பல்லவனீச்சரத்தானை
ஞானசம்பந்தனற்றமிழ்சொல்லவல்லவர்நல்லரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**பல்லவனீச்சரம்**—இது காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம் எனப்பெறும். பல்லவராஜன் பூசித்து வழிபடலின் இப்பெயரெய்தியது. பூர்வம் குபேராவதாரமாகிய பட்டினத்தடிகளும் இத்தலத்தில் திருவவதாரஞ்செய்து சிவபிரானை மகவாகப்பெற்றுத் துறவடைந்து பேறுபெற்றனர். இயற்பகை நாயனர் திருவவதாரஞ்செய்து முற்றத் துறந்த முனிவரும் செய்தற்கரிய செய்கையாகிய தம் மனைவியைத் தூர்த்தவேடத்தோடு எழுந்தருளிய சிவபெருமானுக்களித்து அதனைத் தடுத்த தம்முடைய சுற்றத்தாரையும் மனைவியாரது சுற்றத்தாரையும் தடிந்து முத்தியடைந்தனர். இதற்குத் தேவாரப்பதிகம் இரண்டு. சுவாமி-பல்லவனேசுரர். தேவியார் - சௌந்தர நாயகி தீர்த்தம் காவேரி சங்கம தீர்த்தம்.

இத்தலம் சாயாவனத்திற்குக் கிழக்கே கால்மைலில் உள்ளது.

---

# கக. திருவெண்காடு.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

பண்-சீகாமரம் உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கண்காட்டுநுதலானுங்கனல்காட்டுங்கையானும்
பெண்காட்டுமுருவானும்பிறைகாட்டுஞ்சடையானும்
பண்காட்டுமிசையானும்பயிர்காட்டும்புயலானும்
வெண்காட்டினுறைவானும்விடைகாட்டுங்கொடியானே. 1

பேயடையாபிரிவெய்தும்பிள்ளையினோடுள்ளநினை
வாயினவேவரம்பெறுவரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கன்வெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையாரவர்தம்மைத்தோயாவாந்தீவினையே. 2

சக்கரமாற்கீந்தானுஞ்சலந்தரனைப்பிளந்தானும்
அக்கரைமேலசைத்தானுமடைந்தயிராவதம்பணிய
மிக்கதனுக்கருள்சுரக்கும்வெண்காடுவினைதுரக்கு
முக்குளநன்குடையானுமுக்கணுடையிறையவனே. 7

தண்பொழில்சூழ்சண்பையர்கோன்றமிழ்ஞானசம்பந்தன்
விண்பொலிவெண்பிறைச்சென்னிவிகிர்தனுறைவெண்காட்
பண்பொலிசெந்தமிழ்மாலைபாடியபத்திவைவல்லார் [டைப்
மண்பொலியவாழ்ந்தவர்போய்வான்பொலியப்புகுவாரே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

திருத்தாண்டகம். ௬-ம் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தூண்டுசுடர்மேனித்தூநீறாடிச்சூலங்கையேந்தியோர்சுழல்வாய்நாகம், பூண்டுபொறிபரவங்காதிற்பெய்துபொற்சடைகளவைதாழப்புரிவெண்ணூலர், நீண்டுகிடந்திலங்குதிங்கள்சூடிநெடுந்தெருவேவந்தெனதுநெஞ்சங்கொண்டார், வேண்டுநடைநடக்கும்வெள்ளேறேறிவெண்காடுமேவிய விகிர்தனாரே. 1

நென்னலையோரோடேந்திப்பிச்சைக்கென்றுவந்தார்க்கு வந்தேனென்றில்லேபுக்கேன், அந்நிலையேநிற்கின்றாரையங்கொள்ளாருகேவருவார்போனோக்குகின்றார், அந்நிலைமையேதோநும்மூர்தானேதோவென்றேனுக்கொன்றாகச்சொல்லமாட்டார், மென்முலையார்கூடிவிரும்பியாடும்வெண்காடுமேவியவிகிர்தனாரே. 3

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி நாயனர்.

பண்-இந்தளம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

படங்கொணாகஞ்சென்னிசேர்த்திப்பாய்புலித்தோலரையில்
அடங்கலாரூரெரியச்சீறியன்றுமூவர்க்கருள்புரிந்தீர் [வீக்கி
மடங்கலானைச்செற்றுகந்தீர்மனைகடோறுந்தலைகையேந்தி
விடங்கராகித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. 1

இழித்துகந்தீர்முன்னைவேடமிமையவர்க்குமுரைகள்பேணு
தொழித்துகந்தீர்நீர்முன்கொண்டவுயர்தவத்தையமரர்
அழிக்கவந்தகாமவேளையவனுடையதாதைகாண [வேண்ட
விழித்துகந்தவெற்றியென்னேவேலைசூழ்வெண்காடனீரே. 2

விரித்தவேதமோதவல்லார்வேலைசூழ்வெண்காடுமேய
விருத்தனைவேதன்றன்னைவிரிபொழிற்றிருநாவலூரன்
அருத்தியலாரூரன்றொண்டனடியன்கேட்டமாலைபத்துந்
தெரித்தவண்ணமொழியவல்லார்செம்மையாளர்வானுளாரே.

திருச்சிற்றம்பலம்.

---

**திருவெண்காடு:**—இது சுவேதவனம் என்றும் சுவேதாரண்யம் என்றும் சொல்லப்பெறும். இங்கு தேவேந்திரனும் ஐராவதமும் பூசித்துச் சாபவிமோசனமடைந்தனர். இது "அயிரா பதம் பணிய" என்றும், "விண்ணவர்கோன் வழிபட" என்றும் தேவாரத்து வருவது காண்க; சந்திர சூர்ய அக்னி என்னும் மூவரும் தத்தம் பெயராற்றீர்த்தங் கண்டிருக்கின்றனர். அவை சோமசூர்யாக்னி தீர்த்தமென்று சொல்லப்பெறும். முக்குளம் என்றும் வழங்கும். தீர்த்தங் கண்டோர் தன்மைக்கேற்ப வெவ்வேறு விதமான பரிசங்களுடையன. இத்தீர்த்தமகிமை எண்ணிறந்தது. இதனைத் திருஞானசம்பந்தப்பெருந்தகையார் "பேயடையா பிரிவெய்தும்." என்னும் ஓர் திருப்பாட்டின் பாராட்டியுள்ளார்கள். இதன் மஹிமை, திருப்பெண்ணாகடத்தில்வாழ்ந்த அச்சுதகளப்பாளர் புத்திரப்பேறின்றி வருந்திய காலத்துத் தமதாசிரியார் அருணந்தி சிவாசார்ய மூர்த்திகள் அருளியபடி, தேவாரத்திருமுறையிற் கயிறு சாத்தி இத் திருப்பாட்டுநோ, அக்

கருத்துப்படித் தாம் திருவெண்காட்டையடைந்து விதிப்படி இத்தீர்த்தத்தில் மூழ்கி வழிபட்டு சுவேதவனப்பெருமான் என்னும் ஸ்ரீ மெய்கண்ட சிவாசார்ய மூர்த்திகளாய சைவபிரதம சந்தானாசார்ய மூர்த்திகளைப் புத்திரராகப் பெற்றருளினர், என்பதனாலும் உணரக்கிடக்கும். இங்கு வீரபத்ர மூர்த்தி விசேடசாந்நித்யமாய் எழுந்தருளியிருப்பர். சுவாமி-சுவேதாரண்யேசுரர், தேவியார்-பிரமவித்யாநாயகி. தீர்த்தம்-முக்குளம். இதற்குத் தேவாரப்பதிகம் 6.

இத்தலம் சீகாழிக்குத் தென்கிழக்கு எழுமைலில் உள்ளது; மாயூரம் வழியாகவும் செல்லலாம்.

---

# கஉ. திருக்காட்டுப்பள்ளி.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

செய்யருகேபுனல்பாயவோங்கிச்செங்கயல்பாயச்சிலமலர்த்தேன், கையருகேகனிவாழையீன்றுகானலெலாங்கமழ்காட்டுப்பள்ளிப், பையருகேயழல்வாயவைவாய்ப்பாம்பணையான்பணைத்தோளிபாக, மெய்பருகேயுடையானையுள்கிவிண்டவரேறுவர்மேலுலகே. 1

தோலுடையான்வண்ணப்போர்வையினான்சுண்ணவெண்ணீறுதுதைந்திலங்கு, நூலுடையானிமையோர்பெருமானுண்ணறிவால்வழிபாடுசெய்யுங், காலுடையான்கரிதாயகண்டன்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளி, மேலுடையானிமையாதமுக்கண்மின்னிடையாளொடும்வேண்டினனே. 4

பொன்னியருமரைநீலநெய்தல்போதுகளாற்பொலிவெய்துபொய்கைக், கன்னியர்தாங்குடைகாட்டுப்பள்ளிக்காதலனைக்கடற்காழியர்கோன், றன்னியவின்னிசையாற்றுதைந்துசொல்லியஞானசம்பந்தனல்ல, தன்னிசையாற்சொன்னமாலைபத்துந்தாங்கவல்லார்புகழ்தாங்குவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

கீழைத்திருக்காட்டுப்பள்ளி:—இது காவிரிக்குத் தென் கரையில் தஞ்சைக்கு மேற்கே உள்ள மற்றோர் திருக்காட்டுப்பள்ளியை உத்தேசித்து இப்பெயரெய்தியது. தேவர்கள் தம்மரசனாகிய இந்திரன் விருத்திரனைக் கொன்ற பழி நீங்கித் தம்முலகடையப் பூசித்துச் சித்தியடைந்த தலம். சுவாமி-ஆரணியசுந்தரர், தேவியார்-அகிலாண்டநாயகி.

இத்தலம் திருவெண்காட்டினின்றும் மேற்கே ஒரு மைலில் உள்ளது. மாயூரம் வழியாகவும் திருவெண்காட்டுப் பாதையாகச் செல்லலாம்.

---

# கரு. திருக்குருகாவூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-அந்தாளிக்குறிஞ்சி. ௩-ம் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண்ணீறணிமார்பிற்றோல்புனைந்
தெண்ணரும்பல்கணமேத்தநின்றாடுவார்
விண்ணமர்பைம்பொழில்வெள்ளடைமேவிய
பெண்ணமர்மேனியெம்பிஞ்ஞகனாரே. 1

திரைபுல்குகங்கைதிகழ்சடைவைத்து
வரைமகளோடுடனாடுதிர்மல்கு
விரைகமழ்தண்பொழில்வெள்ளடைமேவிய
வரைமல்குவாளரவாட்டுகந்தீரே. 2

காவியங்கண்மடவாளொடுங்காட்டிடைத்
தீயகலேந்திநின்றாடுதிர்தேன்மலர்
மேவியதண்பொழில்வெள்ளடைமேவிய
ஆவினிலைந்துகொண்டாட்டுகந்தீரே. 6

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். எ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

இத்தனையாமாற்றையறிந்திலேனெம்பெருமான்
பித்தரேயென்றும்மைப்பேசுவார்பிறரெல்லாம்
முத்தினைமணிதன்னைமாணிக்கமுளைத்தெழுந்த
வித்தனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. 1

பாடுவார்பசிதீர்ப்பாய்பரவுவார்பிணிகளைவாய்
ஓடுநன்கலனாகவுண்பலிக்குழல்வானே
காடுநின்னிடமாகக்கடுவிருணடமாடும்
வேடனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. 3

பண்ணிடைத்தமிழொப்பாய்பழத்தினிற்சுவையொப்பாய்
கண்ணிடைமணியொப்பாய்கடுவிருட்சுடரொப்பாய்
மண்ணிடையடியார்கள்மனத்திடர்வாராமே
விண்ணிடைக்குருகாவூர்வெள்ளடைநீயன்றே. 6

வளங்கனிபொழின்மல்குவயலணிந்தழகாய
விளங்கொளிகுருகாவூர்வெள்ளடையுறைவானை
இளங்கிளையாரூரன்வனப்பகையவளப்பன்
உளங்குளிர்தமிழ்மாலைபத்தர்கட்குரையாமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருக்குருகாவூர்**—இங்கு சுந்தரமூர்த்திநாயனார் சீகாழியினின்றும் நீர்வேட்கையோடும் மிக்க பசியோடும் எழுந்தருள்கையில் சிவபெருமான் வழியில் தண்ணீர்ப்பந்தல் அமைத்து நாயனார்க்கும் திருத்தொண்டர்களுக்கும் பொதிசோறும் தண்ணீரும் அளித்து அயர்ந்து பள்ளிகொள்கையில் பந்தரோடு மறைந்தருளினார். சுந்தரமூர்த்தி நாயனார் துயிலுணர்ந்து "இத்தனையாம் மாற்றையறிந்திலேன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு திருக்கோயிலையடைந்து வணங்கினார். திருப்பதிகத்துப் "பாடுவார் பசிதீர்ப்பாய்" என்ற குறிப்புக் காண்க. சுவாமி வேட வடிவத்தோடுவந்து வழிகாட்டினமையின் "வேடனே" என்று பதிகத்துப்பாடப் பெற்றனர் என்றும், திருத்

தொண்டர்க்கு அமுதூட்டிய இடமுதலியவை இப்பொழுதும் "வரிசைப்பற்று" முதலிய பெயரோடு வழங்குமென்றும் கூறுப. கோயிலுக்குவெளியே பாற்கிணறு என்றோர் தீர்த்தம் தை அமாவாசையில் சுவாமி தீர்த்தம் கொடுக்கும் சமயத்தில் பால் நிறமாக ஆவது அற்புதமானது. சுவாமி-வெள்ளடைநாதர். அம்மையார்-காவியங்கண்ணி. இத்தலத்துக்குப் பதிகம் உ.

இத்தலம் சீகாழிக்குக் கிழக்கே திருமுல்லைவாயிலுக்குப் போகும்பாதையில் மூன்றாவது மைலில் தெற்கே திரும்பிச் செல்லின் அரைமைலில் உள்ளது.

---

# கச. திருப்பிரமபுரம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடி
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 1

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனாப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. [தப்

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுலகின்முதலாகியவோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 3

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி. க-ம் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அரனையுள்குவீர், பிரமனூருளெம்
பரனையேமனம், பரவியுய்ம்மினே. 1

காணவுள்குவீர், வேணுநற்புரத்
தாணுவின்கழல், பேணியுய்ம்மினே. 2

நாதனென்பிர்காள், காதலொண்புகல்
ஆதிபாதமே, ஓதியுய்ம்மினே. 3

அங்கமாதுசேர், பங்கமாயவன்
வெங்குருமன்னும், எங்களீசனே. 4

வாணிலாச்சடைத், தோணிவன்புரத்
தாணிநற்பொனைக், காணுமின்களே. 5

பாந்தளார்சடைப், பூந்தராய்மன்னும்
ஏந்துகொங்கையாள், வேந்தனென்பரே. 6

கரியகண்டனைச், சிரபுரத்துளெம்
அரசைநாடொறும், பரவியுய்ம்மினே. 7

நறவமார்பொழிற், புறவநற்பதி
இறைவனாமமே, மறவனெஞ்சமே. 8

தென்றிலரக்கனைக், குன்றிற்சண்பைமன்
அன்றுநெரித்தவா, நின்றுநினைமினே. 9

அயனுமாலுமாய், முயலுங்காழியான்
பெயல்வையெய்திநின், றியலுமுள்ளமே. 10

தேரமணரைச், சேர்வில்கொச்சைமன்
நேரில்கழனினைந், தோருமுள்ளமே. 11

தொழுமனத்தவர், கழுமலத்துறை
பழுதில்சம்பந்தன், மொழிகள்பத்துமே. 12

திருச்சிற்றம்பலம்.

பண்-சீகாமரம் உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எம்பிரானெனக்கமுதமாவானுந்தன்னடைந்தார்
தம்பிரானுவானுந்தழலேந்துகையானுங்
கம்பமாகரியுரித்தகாபாலிகறைக்கண்டன்
வம்புலாம்பொழிற்பிரமபுரத்துறையும்வானவனே. 1

நன்னெஞ்சேயுனையிரந்தேனம்பெருமான்றிருவடியே
உன்னஞ்செய்திருகண்டாயுய்வதனைவேண்டுதியேல்
அன்னஞ்சேர்பிரமபுரத்தாரமுதையெப்போதும்
பன்னுஞ்சீர்வாயதுவேபார்கண்ணேபரிந்திடவே. 3

எங்கேனுமியாதாகிப்பிறந்திடினுந்தன்னடியார்க்
கிங்கேயென்றருள்புரியுமெம்பெருமானெருதேறிக்
கொங்கேயுமலர்ச்சோலைக்குளிர்பிரமபுரத்துறையுஞ்
சங்கேயொத்தொளிர்மேனிச்சங்கரன்றன்றன்மைகளே. 6

திருச்சிற்றம்பலம்.

---

## வேணுபுரம்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வண்டார்குழலரிவையொடும்பிரியாவகைபாகம்
பெண்டான்மிகவானுன்பிறைச்சென்னிப்பெருமானூர்
தண்டாமரைமலராளுறைதவளந்நெடுமாடம்
விண்டாங்குவபோலும்மிகுவேணுபுரமதுவே. 1

படைப்புந்நிலைபிறுதிப்பயன்பருமையொடுநேர்மை
கிடைப்பல்கணமுடையான்கிரிபூதப்படையானூர்
புடைப்பாளையின்கமுகின்னொடுபுன்னைமலர்நாற்றம்
விடைத்தேவருதென்றல்மிகுவேணுபுரமதுவே. 2

வேதத்தொலியானும்மிகுவேணுபுரந்தன்னைப்
பாதத்தினின்மனம்வைத்தெழுபந்தன்றனபாடல்
ஏதத்தினையில்லாவிவைபத்தும்மிசைவல்லார்
கேதத்தினையில்லார்சிவகெதியைப்பெறுவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பூந்தராய்.

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பந்துசேர்விரளாள்பவளத்துவர்வாயினுள்பனிமாமதிபோன்
தந்தமில்புகழாண்மலைமாதொடுமாதிப்பிரான் [முகத்
வந்துசேர்விடம்வானவரெத்திசையுந்நிறைந்துவலஞ்செய்து
புந்திசெய்திறைஞ்சிப்பொழிபூந்தராய்போற்றுதுமே. [மாமலர்

காவியங்கருங்கண்ணினாள்கனித்தொண்டைவாய்க்கதிர்முத்தநல்வெண்ணகைத், தூவியம்பெடையன்னநடைச்சுரிமென்குழலாள், தேவியுந்திருமேனியோர்பாகமாயொன்றிரண்டொருமூன்றொடுசேர்பதி, பூவிலந்தணனொப்பவர்பூந்தராய்போற்றுதுமே. 2

தேம்பனுண்ணிடையாள்செழுஞ்சேலனகண்ணியோடண்ணல்சேர்விடந்தேனமர், பூம்பொழிறிகழ்பொற்பதிபூந்தராய்போற்றுதுமென், றேப்புதன்மையன்முத்தமிழ்நான்மறைஞானசம்பந்தனொண்டமிழ்மாலைகொண், டாம்படியிவையேத்தவல்லார்க்கடையாவினையே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## சீகாழி

பண்-சீகாமரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழிமங்கைமார்பலர்பாடியாடியவோசைநாடொறுங், கண்ணினேரபலேபொலியுங்கடற்காழிப், பெ

ண்ணிமேனொருபங்குடைப் பெருமானையெம்பெருமானென்
றென் னுன் னும், அண்ணலாரடியாரருளாலுக்குறைவிலரே. 1

மொண்டலம்பியவார்திரைக்கடன்மோதிமீதெறிசங்கம்
வங்கமுங், கண்டலம்புடைசூழ்வயல்சேர்கலிக்காழி, வண்ட
லம்பியகொன்றையானடிவாழ்த்திமேத்தியமாந்தர்தம்வினை,
விண்டலங்கெளிதாமதுநல்விதிபாமே. 2

பெயரெனும்மிவைபன்னிரண்டினுமுண்டெனப்பெயர்
பெற்றவூர்திகழ், கயனுலாம்வயல்சூழ்ந்தழகார்கலிக்காழி,
நயனடன்கழலேத்திவாழ்த்திய ஞானசம்பந்தன்செந்தமிழு
ரை, உயருமாமொழிவாருலகத்துயர்ந்தாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

சீகாழி-திருவிராகம்-பண்-நட்டராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

நம்பொருணம்மக்களென்றுநச்சியிச்சைசெய்துநீர்
அம்பரமடைந்துசாலவல்லலுப்பதன்முனம்
உம்பர்நாதனுத்தமனொளிமிகுத்தசெஞ்சடை
நம்பன்மேவுநன்னகர்நலங்கொள்காழிசேர்மினே. 1

பாவமேவுமுள்ளமோடுபத்தியின்றிநித்தலும்
ஏவமானசெய்துசாவதன்முனம்மிசைந்துநீர்
தீபமாலைதூபமுஞ்செறிந்தகையராகிநந்
தேவதேவன்மன்னுமூர்திருந்துகாழிசேர்மினே 2

காலினேடுகைகளுந்தளர்ந்துகாமநோய்தனல்
ஏலவார்குழலினரிகழ்ந்துரைப்பதன்முனம்
மாலினேடுநான்முகன்மதித்தவர்கள்காண்கிலா
நீலமேவுகண்டனார்நிகழ்ந்தகாழிசேர்மினே. 9

தக்கனார்தலையரிந்தசங்கனறனதரை
யக்கினேடரவசைத்தவந்திவண்ணர்காழியை
ஒக்கஞானசம்பந்தனுரைத்தபாடல்வல்லவர் [யே.
மிக்கவின்பமெய்திவீற்றிருந்துவாழ்தன்மெய்ம்மை

திருச்சிற்றம்பலம்.

## திருக்கழுமலம்.

திருத்தாளச்சதி பண்-வியாழக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பந்தத்தால்வந்தெப்பால்பயின்றுநின்றவும்பரப்-பாலே சேர்வாயேனோர்கான்பயில்கணமுனிவர்களுஞ், சிந்தித்தே வந்திப்பச்சிலம்பின்மங்கைதன்னொடுஞ்-சேர்வார்நாணுநீள் கயிலைத்திகழ்தருபரிசதெலாஞ், சந்தித்தேயிந்தப்பார்சனங் கணின்றுதங்கணுற்-றுமேகாணுவாழ்வாரத்தகவுசெய்தவன திடங், கந்தத்தாலெண்டிக்குங்கமழ்ந்திலங்குசந்தனக்-கா டார்பூவார்சீர்மேவுங்கழுமலவளநகரே. 1

கஞ்சத்தேனுண்டிட்டேகளித்துவண்டுசண்பகக்-கானே தேனேபோராருங்கழுமலநகரிறையைத், தஞ்சைச்சார்சண் பைக்கோன்சமைத்தநற்கலைத்துறை - தாமேபோல்வார்தே னோரார்தமிழ்வரகனமொழிகள், எஞ்சத்தேய்வின்றிக்கேபி மைத்திசைத்தமைத்தகொண்-டேழேயேழேநாலேமூன்றிய லிசையிசையியல்பா, வஞ்சத்தேய்வின்றிக்கேமனங்கொளப் பயிற்றுவோர் - மார்பேசேர்வாள்வானோர்சீர்மதிநுதன்மட வாலே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-மேகராகக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சேவுயருந்திண்கொடியான்றிருவடியேசரணென்றுசிற ந்தவன்பால், நாவியலுமங்கையொடுநான்முகன்றான்வழிபட் டநலங்கொள்கோயில், வாவிதொறும்வண்கமலமுகங்காட்ட ச்செங்குமுதம்வாய்கள்காட்டக், காவியிருங்கருங்குவளைகரு நெய்தல்கண்காட்டுங்கழுமலமே. 1

புவிமுதலைம்பூதமாய்ப்புலனைந்தாய்நிலனைந்தாய்க்கரண நான்காய், அவையவைசேர்பயனுருவாயல்லவுருவாய்நின்று

னமருங்கோயில், தவழுயல்வோர்மலர்பறிப்பத்தாழுவிடுகொ
ம்புதைப்பக்கொக்கின்காய்கள், கவணெறிகற்போற்சுனையிற்
கரைசேரப்புள்ளிரியுங்கழுமலமே. 7

திருச்சிற்றம்பலம்.

---

பண்-கொல்லி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மண்ணினல்லவண்ணம்வாழலாம்வைகலும்
எண்ணினல்லகதிக்கியாதுமோர்குறைவில்லை
கண்ணினல்லஃதுறுங்கழுமலவளநகர்ப்
பெண்ணினல்லாளொடும்பெருந்தகையிருந்ததே. 1

போதையார்பொற்கிண்ணத்தடிசில்பொல்லாதெனத்
தாதையார்முனிவுறத்தானெனையாண்டவன்
காதையார்குழையினன்கழுமலவளநகர்ப்
பேதையாளவளொடும்பெருந்தகையிருந்ததே. 2

கருந்தடந்தேன்மல்குகழுமலவளநகர்ப்
பெருந்தடங்கொங்கையோடிருந்தவெம்பிரான்றனை
அருந்தமிழ்ஞானசம்பந்தனசெந்தமிழ்
விரும்புவாரவர்கள்போய்விண்ணுலகாள்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவெழுகூற்றிருக்கை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஓருருவாயினைமானாங்காரத்
தீரியல்பாயொருவிண்முதல் பூதலம்
ஒன்றியவிருசுடரும்பர்கள்பிறவும்
படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை
இருவரோடொருவனாகிநின்றனை
ஓராநீழலொண்கழலிரண்டும்
முப்பொழுதேத்தியநால்வர்க்கொளிநெறி
காட்டினைநாட்டமூன்றுகக்கோட்டினை

இருநதியரவமோடொருமதிசூடினை
ஒருதாளீரயின்மூவிலைச்சூலம்
நாற்கான்மான்மறியைந்தலையரவம்
ஏந்தினைகாய்ந்தநால்வாய்மும்மதத்
திருகோட்டொருகரியீடழித்துரித்தனை
ஒருதனுவிருகால்வளையவாங்கி
முப்புரத்தோடுநானிலமஞ்சக்
கொன்றுதலத்துறவவுணரையறுத்தனை
ஐம்புலனாலாமந்தக்கரணம்
முக்குணமிருவளியொருங்கியவானோர்
ஏத்தநின்றனைபொருங்கியமனத்தோ
டிருபிறப்போர்ந்துமுப்பொழுதுகுறைமுடித்து
நான்மறையோதியைவகைவேள்வி
அமைத்தாறங்கமுதலெழுத்தோதி
வரன்முறைபயின்றெழுவான்றனைவளர்க்கும்
பிரமபுரம்பேணினை
அறுபதமுரலும்வேணுபுரம்விரும்பினை
இகலியமைந்துணர்புகலியமர்ந்தனை
பொங்குநாற்கடல்சூழ்வெங்குருவிளங்கினை
பாணிமூவுலகும்புதையமேன்மிதந்த
தோணிபுரத்துறைந்தனைதொலையாவிருநிதி
வாய்ந்தபூந்தராயேய்ந்தனை
வரபுரமென்றுணர்சிரபுரத்துறைந்தனை
ஒருமலையெடுத்தவிருதிறலரக்கன்
விறல்கெடுத்தருளினைபுறவம்புரிந்தனை
முந்நீர்த்துயின்றோனான்முகனறியாப்
பண்பொடுநின்றனைசண்பையமர்ந்தனை
ஐயுறுமமணருமறுவகைத்தேரரும்
ஊழியுமுணராக்காழியமர்ந்தனை
எச்சனேழிசையோன்கொச்சையைமெச்சினை
ஆறுபதமுமைந்தமர்கல்வியும்

மறைமுதனான்கும்
மூன்றுகாலமுந்தோன்றநின்றனை
இருமையினொருமையுமொருமையின்பெருமையும்
மறுவிலாமறையோர்
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியனறியும்
அனையதன்மையையாதலினின்னை
நினையவல்லவரில்லைநீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

## திருத்தோணிபுரம்.

### திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாதியென்றுமனைக்கிருவென்றக்கால்
நீதிதான்சொலநீயெனக்காரெனுஞ்
சோதியார்தருதோணிபுரவர்க்குத்
தாதியாவனோவென்னுமென்றையலே. 1

நக்கம்வந்துபலியிடென்றார்க்கிட்ட
மிக்கதையலைவெள்வளைகொள்வது
தொக்கநீர்வயற்றோணிபுரவர்க்குத்
தக்கதன்றுதமதுபெருமைக்கே. 2

உறவுபேய்க்கணமுண்பதுவெண்டலை
உறைவதீமமுடலிலோர்பெண்கொடி
துறைகளார்கடற்றோணிபுரத்துறை
இறைவனார்க்கிவளென்கண்டன்பாவதே. 3

இட்டமாயினசெய்வாளென்பெண்கொடி
கட்டம்பேசியகாரரக்கன்றனைத்

திட்டடக்கியதோணிபுரத்துறை
யட்டமூர்த்திக்குவன்பதுவாகியே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கழுமலம்.

திருவிருத்தம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பார்கொண்டுமூடிக்கடல்கொண்டஞான்றுநின்பாதமெல்லா
நாலஞ்சுபுள்ளினமேந்தினவென்பர்நளிர்மதியம் [ம்
கால்கொண்டவண்கைச்சடைவிரித்தாடுங்கழுமலவர்க்
காளன்றிமற்றுமுண்டோவந்தணுழியகவிடமே. 1

படையார்மழுவொன்றுபற்றியகையன்பதிவினவிற்
கடையார்கொடிநெடுமாடங்களோங்குங்கழுமலமாம்
மடைவாய்க்குருகினம்பாளைவிரிதொறும்வண்டினங்கள்
பெடைவாய்மதுவுண்டுபோராதிருக்கும்பெரும்பதியே. 1

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனர்.

பண்-தக்கேசி. ஏ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சாதலும்பிறத்தலுந்தவிர்த்தெனைவகுத்துத்தன்னருள் தந்தவெந்தலைவனைமலையின், மாதினைமதித்தங்கொர்பால்கொண்டமணியைவருபுனல்சடையிடைவைத்தவெம்மானை, ஏதிலென்மனத்துக்கொ ரிரும்புண்ட நீரையெண்வகை யொருவனையெங்கள்பிரானைக், காதில்வெண்குழையனைக்கடல்கொளமிதந்தகழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. 1

குண்டலங்குழைதிகழ்காதனேயென்றுங்கொடுமழுவாட்படைக்குழகனேயென்றும்,வண்டலம்பும்மலர்க்கொன்றையனென்றும்வாய்வெருவித்தொழுதேன்விதியாலே, பண்டைநம்பலமனமுங்களைந்தொன்றாய்ப்பசுபதி பதிவினவிப் பலநா

ளூங், கண்டலங்கழிக்கரையோதம்வந்துலவுங்கழுமலவள
நகர்க்கண்டுகொண்டேனே. 5

செழுமலர்க்கொன்றையுங்கூவிளமலரும்விரவியசடை
முடியடிகளைநினைந்திட், டழுமலர்க்கண்ணிணையடியவர்க்கல்
லாலறிவரிதவன்திருவடியிணையிரண்டும், கழுமலவளநகர்க்
கண்டுகொண்டோன் சடையன்றன் காதலன் பாடியபத்தும்,
தொழுமலரெடுத்தகையடியவர்தம்மைத்துன்பமுமிடும்பை
யுஞ்சூழகிலாவே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருப்பிரமபுரம்**—இது சீகாழி எனப்பிரசித்தமாக வழங்கப்பெறும். இத்திருப்பதி (1) பிரமதேவர் பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் **பிரமபுரம்** எனவும் (2) இந்திரன் போருக்குடைந்த சூரபத்மன் பூசித்தகாலையில் சிவபெருமான் வேணு (மூங்கில்) வாய் முளைத்து அனுக்கிரகம்புரிந்த காரணத்தானும், இந்திரன் ஆசாரியர்ப் பிழைத்த பழிபோகவும் விருத்திராசுரனைக்கொன்ற பழிதுடைக்கவும் அகத்தியமுனிவர் உபதேசப்படி வேணுவழியாய் இத்தலத்தை யடைந்து பூசித்த காரணத்தானும் **வேணுபுரம்** எனவும், (3) சூரபத்மனால் துயரடைந்த தேவராதியர் பிரமேசரைப் புகலடைந்து வழிபட்டகாரணத்தால் **புகலி** எனவும் (4) பிரமதேவரால் இகழப்பட்ட அசுரகுருவாகிய சுக்ரன் நாரதமுனிவர் உபதேசம்பெற்றுவந்து பூசித்துத் தேவகுருவுக்குச் சமத்வம்பெற்ற காரணத்தானும், யமதருமன் நரகவாசிகள் தன்னைக் கொடியன் என்று இகழும்பழி நீங்குமாறு பூசித்து அவர் பூர்வஉணர்ச்சிபெற்று மௌனமாய் இருக்க அருள்பெற்ற காரணத்தானும் **வெங்குரு** எனவும், (5) கற்பாந்தத்தில் சிவபெருமான் உமாதேவியாரோடு சுத்தமாயை (பிரணவம்) யாகிய தோணியில் வீற்றிருப்பத் தான் அழியாதிருக்கின்ற காரணத்தால் **தோணிபுரம்** எனவும், (6) இரணியாக்கனைச் சுவேதவராக வுருக்கொடுகொன்று பூமியைக்கொம்பிலேற்று வருத்திய பழிபோகத்திருமால் பூசித்தகாரணத்தால் **பூந்தராய்** எனவும், (7) சயிங்கேயன் என்னும் அசுரன் வேற்றுருவாய்த் தேவருடன் இருந்து அமுதுண்ண, சூரியனால் காட்டப்பெற்று விட்ணுவால் வெட்டுண்ட தலைக்கூறாகிய இராகு பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் **சிரபுரம்** எனவும் (8) யாககாலத்து இந்திரன் பருந்துரு

வாகவும் அக்னி புறவுருவாகவும் வந்து தன்னைப் பரிசோதித்தபோது சிபிச்சக்ரவர்த்தி புறவின் எடைக்குத் தன்தசையறிந்திட்டும் போதா மைகண்டு தான் துலையேறித் தன்புகழ்நிறுத்த, புறவாம் அக்னி அப் பாபம் போமாறு பூசித்த காரணத்தால் புறவம் எனவும், (9) கபில முனிவர் சாபப்படி தங்குலத்தினன் வயிற்றிற்பிறந்த இருப்புலக்கையைப் பொடித்துக்கொட்டியதுகள் சண்பைப்புல்லாக முளைத்திருந்ததை ஆயுதமாகக்கொண்டு போர்செய்து மடிந்த யாதவர் கொலைப்பழி தம்மை யணுகாவண்ணம் கிருஷ்ணமூர்த்தி பூசித்தகாரணத்தால் சண்பை எனவும், (10) நடனத்தில் தோற்ற காளியம்மையார் பூசித்துப் பேறுபெற்ற காரணத்தானும் காளிதன் என்னும் சர்ப்பம் பூசித்த காரணத்தானும் சீகாழி (ஸ்ரீகாளி) எனவும் (11) பராசரர் தாம் மச்சகந்தியை ஆற்றிடையிற் புணர்ந்துபெற்ற துர்க்கந்தமும் பழியும் போமாறு பூசித்தகாரணத்தால் கோச்சைவயம் எனவும், (12) உரோமசமுனிவர் இங்கடைந்து ஞானோபதேசம்பெற்றுத்தம்மலங் கழுவப்பெற்றகாரணத்தால் கழுமலம் எனவும் பன்னிரண்டு திருப்பெயருடையதாம்; முத்தமிழ் விரகாகிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் திருவவதாரஞ்செய்து மூன்றும் ஆண்டில் பிரமதீர்த்தக்கரையில் திருத்தோணியுடையார் பெரிய நாயகியாருடன் எழுந்தருளித் திருமுலைப்பால் ஊட்டியருளப்பெற்று ஆளுடைய பிள்ளையாரான மகிமைவாய்ந்தது; ஸ்ரீ வாகீசமூர்த்திகள் எழுந்தருளி ஆளுடைய பிள்ளையார் நட்பு பெற்றுப் பெருமையுற்றது; சுந்தரமூர்த்திநாயனர் பிள்ளையார்திருவவதாரத்தலமென்று மிதித்தற்கு அஞ்சி வலம்வந்தபோது சிவபெருமான் எழுந்தருளிக் காட்சிகொடுக்கத் தரிசித்துக் கயிலையினில் இருந்தபடி கண்டுகொண்டேன் எனப் பதிகத்திற் சிறப்பித்தருளிய தன்மைவாய்ந்தது; திருநீலகண்ட யாழ்ப்பாணர் எழுந்தருளிப் பிள்ளையாரது பதிகங்களை யாழிலிட்டு வாசிக்கும் பேறுபெற்றது; வைதிகப்பிராமண குலத்துதித்த கணநாத நாயனர் திருத்தோணியப்பர் திருவடிக்கடிமைபூண்டு தம்மையடைந்த அடியவர்களைப் பலவிதமான திருப்பணியில் பயில்வித்துத் தாம் ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான் றிருவடியினை மறவாதேத்திப் பரமசிவனருள்பெற்றுத் திருக்கைலையில் கணங்கட்கு நாதராகப் பெற்றருளிய வனப்புற்றது; சிவபெருமான் பிரமேசராகிய லிங்கம், தோணியப்பராகிய குரு, சட்டைநாதராகிய சங்கமம் என்னும் மூவுருவோடும் விளங்கும் மேன்மையெய்தியது; இரணியனைச் சம்மரித்த நரசிம்மத்தைத் தடிந்து அதன் சர்மத்தையும், வாமனரைத்

தடிந்து அவர் முதுகெலும்பையும் சட்டையாகவும் தண்டமாகவும் தரித்த பிரளயகால ருத்ராகிய சட்டைநாதர் ஆபதுத்தாரணர் என்னும் நாமத்துடன் எழுந்தருளியிருக்கும் எழிலுடையது; மேலே சொன்னவரன்றி விரோதன், காலவர், சந்திரன், முருகவேள், ஆதிசேடன், கேது, தேவாதியர் பூசித்துப் பேறுபெற்றது. பிரமபுரத்தில் சுவாமி-பிரமபுரீசர், தேவியார்-திருநிலைநாயகி (ஸ்திரசுந்தரி) திருத்தோணியில் சுவாமி-தோணியப்பர், தேவியார்-பெரியநாயகி, திருத்தோணிச்சிகரத்தில்-சட்டைநாதர். தீர்த்தம் ஆலயத்தில் பிரமதீர்த்தம். இஃதன்றிச் சூல தீர்த்தம், ஆனந்த தீர்த்தம், காளி தீர்த்தம், இராகு தீர்த்தம், வயிணவதீர்த்தம், ஆழி தீர்த்தம், சங்க தீர்த்தம், சுக்ர தீர்த்தம், பராசர கூபம், அகஸ்திய தீர்த்தம், கௌதம தீர்த்தம், கழுமலநதி, புருநதி முதலிய எண்ணில் தீர்த்தங்களும் உண்டு. இதற்குத் திருப்பதிகம் 71. திருவாசகத்தில் பிடித்தபத்தும் பதினோராந் திருமுறையில் திருக்கழுமல மும்மணிக்கோவையும் ஞானசம்பந்தர் விஷயமாகப் பல பிரபந்தங்களும் உண்டு.

இத்தலம் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே முக்கால் மைலில் உள்ளது.

---

## கரு. திருக்கோலக்கா.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மடையில்வாளைபாயமாதரார்
குடையும்பொய்கைக்கோலக்காவுளான்
சடையும்பிறையுஞ்சாம்பற்பூச்சுங்கீழ்
உடையுங்கொண்டவுருவமென்கொலோ. 1

பெண்டான்பாகமாகப்பிறைச்சென்னி
கொண்டான்கோலக்காவுகோயிலாக்
கண்டான்பாதங்கையாற்கூப்பவே
உண்டானஞ்சையுலகமுய்யவே 2

தழுக்கொள்பாவந்தளரவேண்டுவீர்
மழுக்கொள்செல்வன்மறிசேரங்கையான்
குழுக்கொள்பூதப்படையான்கோலக்கா
இழுக்காவண்ணமேத்திவாழ்மினே. 4

நலங்கொள்காழிஞானசம்பந்தன்
குலங்கொள்கோலக்காவுளானையே
வலங்கொள்பாடல்வல்லவாய்மையார்
உலங்கொள்வினைபோயோங்கிவாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-தக்கேசி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

புற்றில்வாளரவார்த்தபிரானைப்பூதநாதனைப்பாதமே தொழுவார், பற்றுவான்றுணையெனக்கெளிவந்தபாவநாசனை மேவரியானை, முற்றலார்திரிபுரமொருமூன்றும்பொன்றவென்றிமால்வரையரியம்பாக், கொற்றவில்லங்கையேந்தியகோனைக்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே. 1

ஆத்தமென்றனையாளுகந்தானையமரர்நாதனைக்குமரனைப்பயந்த, வார்த்தயங்கியமுலைமடமானைவைத்துவான்மிசைக்கங்கையைக்கரந்த, தீர்த்தனைச்சிவனைச்செழுந்தேனைத்தில்லையம்பலத்துண்ணிறைந்தாடுங், கூத்தனைக்குருமாமணிதன்னைக்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே. 4

அன்றுவந்தெனையகலிடத்தவர்முன்னாளதாகவென்றுவணங்காட்டி, நின்றுவெண்ணெய்நல்லூர்மிசையொளித்தநித்திலத்திரட்டொத்தினைமுத்திக், கொன்றினான்றனையும்பர்பிரானையுயரும்வல்லாணங்கெடச்சீறுங், குன்றவில்லியைமெல்லியலுடனேகோலக்காவினிற்கண்டுகொண்டேனே. 5

நாளுமின்னிசையாற்றமிழ்பரப்புஞானசம்பந்தனுக்குல
கவர்முன், தாளமீந்தவன்பாடலுக்கிரங்குந்தன்மையாளனை
யென்மனக்கருத்தை, ஆளும்பூதங்கள்பாடநின்றாடுமங்கண
ன்றனையெண்கணமிறைஞ்சுங், கோளிலிப்பெருங்கோயிலு
ளானைக்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே. 8

திருச்சிற்றம்பலம்.

---

**திருக்கோலக்கா:**—இது 'திருத்தாளமுடையார் கோயில்' என வழங்கும். இங்கு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருமுலைப்பாலுண்ட மறுநாள் கையினால் ஒத்தறுத்துப் பதிகம் பாடிய போது சிவபெருமான் ஸ்ரீ பஞ்சாக்ஷரம் எழுதப்பெற்ற பொற்றாளம் கொடுத்தருளினர். இது சுந்தரமூர்த்தி நாயனாரால் பதிகத்துப் பாடப் பெற்றிருத்தல் காண்க. சுவாமி-சத்தபுரீசுவரர், அம்மையார்-ஓசை கொடுத்தநாயகி. இத்தலத்துக்குப் பதிகம் 2.

இத்தலம் சீகாழிக்குத் தென்மேற்கு அரைமைலிலும் ஸ்டேஷனிலிருந்து தெற்கு கால்மைலிலும்உள்ளது. தெற்குவருவது கழுமல நதியைக் கடக்கவேண்டியும் வயல் வழியாற் செல்லவேண்டியும் இருத்தலின் சங்கடமானது.

---

## கசு. திருப்புள்ளிருக்குவேளூர்.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-சீகாமரம் உ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதியம்
உள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளானார்க்கரையனிடம்புள்ளிருக்குவேளூரே. 1

கீதத்தைமிகப்பாடுமடியார்கள்குடியாகப்
பாதத்தைத்தொழநின்றபரஞ்சோதிபயிலுமிடம்
வேதத்தின்மந்திரத்தால்வெண்மணலேசிவமாகப்
போதத்தால்வழிபட்டான்புள்ளிருக்குவேளூரே. 5

திறங்கொண்டவடியார்மேற்றீவினைநோய்வாராமே
அறங்கொண்டுசிவதன்மமுரைத்தபிரானமருமிடம்
மறங்கொண்டங்கிராவணன்றன்வலிகருதிவந்தானைப்
புறங்கண்டசடாயென்பான்புள்ளிருக்குவேளூரே. 6

பண்ணொன்றவிசைபாடுமடியார்கள்குடியாக
மண்ணின்றிவிண்கொடுக்குமணிகண்டன்மருவுமிடம்
எண்ணின்றிமுக்கோடிவாணாளதுடையானைப்
புண்ணொன்றப்பொருதழித்தான்புள்ளிருக்குவேளூரே. 8

செடியாயவுடறீர்ப்பான்றீவினைக்கோர்மருந்தாவான்
பொடியாடிக்கடிமைசெய்தபுள்ளிருக்குவேளூரைக்
கடியார்ந்தபொழிற்காழிக்கவுணியன்சம்பந்தன்சொல்
மடியாதுசொல்லவல்லார்க்கில்லையாமறுபிறப்பே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆண்டானையடியேனையாளாக்கொண்டுவடியோடுமுடியயன்மாலறியாவண்ணம், நீண்டானைநெடுங்களமாநகரான்றன்னைநேமிவான்படையானீளுராவோனுகங், கீண்டானைக்கேதாரமேவினானைக் கேடிலியைக்கிளர்பொறிவாளரவோடென்பு, பூண்டானைப்புள்ளிருக்குவேளூரானைப்போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. 1

பத்திமையாற்பணிந்தடியேன்றன்னைப்பன்னாட்பாமாலைபாடப்பயில்வித்தானை, எத்தேவுமேத்துமிறைவன்றன்னையெம்மானையென்னுள்ளத்துள்ளேயூறும், அத்தேனையமுதத்தையாவின்பாலையண்ணிக்குந்தீங்கரும்பையானையாதிப், புத்தேளைப்புள்ளிருக்குவேளூரானைப்போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. 3

போராயிரம்பரவிவானோரேத்தும்பெம்மானைப்பிரிவிலாவடியார்க்கென்றும், வாராதசெல்வம்வருவிப்பானைமந்திரமுந்தந்திரமுமருந்துமாகித், தீராநோய்தீர்த்தருளவல்லான்றன்னைத்திரிபுரங்கடீயெழத்திண்சிலைகைக்கொண்ட, போரானைப்புள்ளிருக்குவேளூரானைப்போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. 9

திருச்சிற்றம்பலம்.

---

திருப்புள்ளிருக்குவேளூர்—இது வைத்தீச்சுரன்கோவிலெனவழங்கும். சூர்யமண்டலஞ்சென்று சிறகிழந்த சம்பாதி ஜடாயு என்னும் கழுகரசர் பூசித்துச்சிறகும் பேறும்பெற்றனர். சம்பாதி தன் பூஜைக்குப் பூம்புகாரில் நந்தவனம்வைத்துப் பூசித்த செய்தி பதிகத்து "யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளு மொழியாமே பூசனை செய்தினிதிருந்தான்" என்று குறிப்புகாணப்படுகிறது. இவரன்றி வேதம், முருகக்கடவுள், சூரியன் அங்காரகன் முதலிய கிரகங்கள், இராமர் இலக்குமணர், அநுமானாதி வானரவீரர்முதலிய பலர்பூசித்துச் சித்திபெற்றனர். புள்ளிருக்குவேளூர் என்னும் ஊர்ப்பெயரிலேயே புள் (ஜடாயு சம்பாதி) இருக்கு (வேதம்) வேள் (முருகக்கடவுள்) ஊர் (சூரியன்) இன்னோர் பூசித்ததென்பது அடங்கியிருத்தல்காண்க. இங்கு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி சந்நிதிவிசேடம். சுவாமி-வைத்யநாதர், அம்மையார்-தையனாயகி. தீர்த்தம்-சாத்யாமிர்த தீர்த்தம். இது மிக்க மகிமையுடையதாய் மூழ்கினோர் வியாதி தீர்த்துச் சுகமளிப்பது. இத்தலத்திற்குத் தேவாரப்பதிகம். ௩.

இது வைத்தீச்சுரன்கோவில் ஷ்டேஷனுக்குக் கிழக்கே அரைமைலில் உள்ளது.

---

# ௧௭. திருக்கண்ணார் கோயில்

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-குறிஞ்சி. ௧-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தண்ணார்திங்கட்பொங்கரவந்தாழ்புனல்சூடிப்
பெண்ணாண்ணயபேரருளாளன்பிரியாத

கண்ணார்கோயில்கைதொழுவோர்கட்கிடர்பாவம்
நண்ணாவாகுநல்வினையாயநணுகும்மே. 1

மறுமாணுருவாய்மற்றிணையின்றிவானோரைச்
செறுமாவலிபாற்சென்றுலகெல்லாமளவிட்ட
குறுமாணுருவன்றற்குறியாகக்கொண்டாடுங்
கறுமாகண்டன்மேயதுகண்ணார்கோயிலே. 5

முன்னொருகாலத்திந்திரனுற்றமுனிசாபம்
பின்னொருநாளவ்விண்ணவரேத்தப்பெயர்வெய்தித்
தன்னருளாற்கண்ணாயிரமீந்தோன்சார்வென்பர்
கன்னியர்நாளுந்துன்னமர்கண்ணார்கோயிலே. 7

காமருகண்ணார்கோயிலுளானைக்கடல்சூழ்ந்த
பூமருசோலைப்பொன்னியல்மாடப்புகலிக்கோன்
நாமருதொன்மைத்தன்மையுண்ஞானசம்பந்தன்
பாமருபாடல்பத்தும்வல்லார்மேற்பழிபோமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருக்கண்ணார்கோயில்.**—இது குறுமாணக்குடி என்று வழங்கும். கௌதமமுனிவரால் சபிக்கப்பெற்ற இந்திரன் பூசித்துத் தன் சரீரத்துப் பொருந்திய குறிகள் கண்களாக மாறப்பெற்றதனால் இத்தலம் கண்ணார் கோயிலெனப் பெற்றது. ௭-ந் திருப்பாட்டிற்காண்க. வாமனமூர்த்தியும் பூசித்தனர் என்பது ௫-ந் திருப்பாட்டானும் குறுமாணக்குடி என்னும் மறு பெயரானும் ஊகிக்கக்கிடக்கிறது. சுவாமி-கண்ணாயிரநாதர், அம்மையார்-முருகுவளர்கோதை, தீர்த்தம்-இந்திர தீர்த்தம்.

இத்தலம் ஆனைதாண்டாபுரம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 2-மைலில் உள்ள திருநின்றியூரினின்றும் வடக்கே 3-மைலில் சென்று கதிராமங்கலத்தையடைந்து கிழக்கே திரும்பில் அரைமைலில் உள்ளது. வைத்தீச்சுரன் கோயில் ஸ்டேஷனிலிருந்து மாயூரம் போகிற பாதையில் 3-வது மைலில் கதிராமங்கலத்தை யடைந்தும் போகலாம்.

---

# க௮. திருக்கடைமுடி.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-வியாழக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அருத்தனையறவனையமுதனைநீர்
விருத்தனைப்பாலனைவினவுதிரேல்
ஒருத்தனையல்லதிங்குலகமேத்துங்
கருத்தவன்வளநகர்கடைமுடியே. 1

திரைபொருதிருமுடி திங்கள்விம்மும்
அரைபொருபுலியதளடிகளிடம்
திரையொடுநுரைபொருதெண்சுனைநீர்
கரைபொருவளநகர்கடைமுடியே. 2

பொன்றிகழ்காவிரிப்பொருபுனல்சீர்
சென்றடை கடைமுடிச்சிவனடியை
நன்றுணர்ஞானசம்பந்தன்சொன்ன
இன்றமிழிவைசொலவின்பமாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கடைமுடி.—இது கீழூர் எனப்பெறும். காவிரியின் கடைமுடியாதலின் இப்பெயரெய்திது போலும்? பிரமன் பூசித்துப் பேறுபெற்றது. சுவாமி - கடைமுடிநாதர், அம்மையார் - அபிராமியம்மை.

இத்தலம் மாயூரம் மார்க்கத்திலுள்ள காவிரிக்குத் தென்கரை திருநனிபள்ளிக்குச்சென்று வடமேற்கே மட்சாலையில் காவிரியைக்கடந்தால் ஒருமைலில் உள்ளது; ஆனைதாண்டாபுரத்திலிறங்கித் திருநின்றியூரையடைந்தும் செல்லலாம்.

---

# கக. திருநின்றியூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சூலம்படைச்சுண்ணப்பொடிசாந்தஞ்சுடுநீறு
பாலம்பதிபவளச்சடைமுடிமேலதுபண்டைக்
காலன்வலிகாலினெடுபோக்கிக்கடிகமழும்
நீலம்மலர்ப்பொய்கைநின்றியூரின்னிலேயோர்க்கே. 1

அச்சம்மிலர்பாவம்மிலர்கேடும்மிலரடியார்
நிச்சம்முறுநோயும்மிலர்தாமுந்நின்றியூரில்
நச்சம்மிடறுடையார்நறுங்கொன்றைநயந்தானைப்
பச்சம்முடையடிகடிருப்பாதம்பணிவாரே. 2

குன்றமதுவெடுத்தானுடறோளுநெறிவாக
நின்றங்கொருவிரலாலுறவைத்தானின்றியூரை
நன்றார்தருபுகலித்தமிழ்ஞானம்மிகுபந்தன்
குன்றாத்தமிழ்சொல்லக்குறைவின்றிநிறைபுகழே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனர்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொடுங்கண்வெண்டலேகொண்டுகுறைவிலேப்
படுங்கணென்றிலாய்ப்பலிதேர்ந்துண்பர்
நெடுங்கண்மங்கையராட்டயர்நின்றியூர்க்
கடுங்கைக்கூற்றுதைத்திட்டகருத்தரே. 1

வீதிவேனெடுங்கண்ணியர்வெள்வளே
நீதியேகொளப்பாலதுநின்றியூர்
வேதமோதிவிளங்குவெண்டோடாய்க்
காதில்வெண்குழைவைத்தவெங்கள்வரே. 2

எளியனாமொழியாவிலங்கைக்கிறை
களியினாற்கயிலாயமெடுத்தவன்
நெளியவூன்றவலானமர்நின்றியூர்
அளியினாற்றொழுவார்வினையல்குமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். எ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

அற்றவனாடியார்தமக்காயிழைபங்கினராம்
பற்றவனாரெம்பராபரனென்றுபலர்விரும்புங்
கொற்றவனார்குறுகாதவரூர்நெடுவெஞ்சரத்தால்
செற்றவனார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே. 1

வாசத்தினார்மலர்க்கொன்றையுள்ளார்வடிவார்ந்தநீறு
பூசத்தினார்புகலிந்நகர்போற்றுமெம்புண்ணியத்தார்
நேசத்தினாரென்னையாளுங்கொண்டார்நெடுமாகடல்சூழ்
தேசத்தினார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே. 2

வஞ்சங்கொண்டார்மனஞ்சேரகிலார்நறுநெய்தயிர்பால்
அஞ்சுங்கொண்டாடியவேட்கையினாதிகைப்பதியே
தஞ்சங்கொண்டார்தமக்கென்றுமிருக்கைசரணடைந்தார்
நெஞ்சங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே. 5

சேரும்புகழ்த்தொண்டர்செய்கையறாத்திருநின்றியூரில்
சீருஞ்சிவகதியாயிருந்தானைத்திருநாவலார்
ஊரனுரைத்தவுறுதமிழ்பத்தும்வல்லார்வினைபோய்ப்
பாரும்விசும்புந்தொழப்பரமன்னடிகூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-தக்கேசி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

திருவும்வண்மையுந்திண்டிறலரசுஞ்சிலந்தியார்செய்த
செய்பணிகண்டு,மருவுகோச்செங்கணான்றனக்களித்தவார்த்

தைகேட்டு நுன்மலரடியடைந்தேன், பெருகுபொன்னிவந்து ந்துபன்மணியைப் பிள்ளைப் பல்கணம் பண்ணையுணண்ணித், தெருவுந்தெற்றியு முற்றமும்பற்றித் திரட்டுந் தென்திரு நின்றியூரானே. 1

அணிகொளாடையம்பூணணிமாலையமுதுசெய்தமுதம் பெறுதண்டி, இணைகொளேழெழுநூறிருபனுவலீன்றவன் றிருனாவினுக்கரையன், கணைகொள்கண்ணப்பனென்றிவர்பெற்றகாதலின்னருளாதரித்தடைந்தேன், திணைகொள்செந்தமிழ்பைங்கிளிதெரியுஞ்செல்வத்தென்றிருநின்றியூரானே. 2

மொய்த்தசீர்முந்நூற்றறுபதுவேலிமூன்றுநூறுவேதியரொடுநுனக்கு, ஒத்தபொன்மணிக்கலசங்களேந்தியோங்குநின்றியூரென்றுனக்களிப்பப், பத்திசெய்தவப்பரசுராமற்குப்பாதங்காட்டியநீதிகண்டடைந்தேன், சித்தவானவர்தானவர்வணங்குஞ்செல்வத்தென்றிருநின்றியூரானே. 3

திருச்சிற்றம்பலம்.

---

திருநின்றியூர்.—இது இலக்குமிபூசித்த தலமென்று தேவாரத்தில் குறிப்பு காண்கிறது; உபமந்ய பக்தவிலாசத்திலும் ஸ்ரீ புரம் என்று சொல்லப்பெறுகிறது; ஆயினும் பூம்புகாரினின்றும் அத்தயாம தரிசனத்துக்கு நியமமாகச் செல்லும் ஓர் சோழனுக்குத் திரி (தீவர்த்தி)நின்று லிங்கஜ்யோதிஸ்தோன்றி வெளிப்பட்டகாரணத்தால் திரிநின்றவூர் என்பது "திருநின்றியூர்" எனமருவியது என்று ஒருமான்மியம் வழங்கும். இங்கு சுந்தரமூர்த்திநாயனர் தமதுபதிகத்தில் வாகீசமூர்த்திகள் 49-ஆயிரம் திருப்பதிகம்பாடிய செய்தியைச் சிறப்பித்துள்ளார்கள். சுவாமி-மகாலக்ஷிமீ நாதர், அம்மையார்-உலகநாயகி. இத்தலத்திற்குப் பதிகம். 4

இத்தலம் ஆனைதாண்டாபுரம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மட்சாலையில் 2-மைலில் உள்ளது.

---

# ௨௰. திருப்புன்கூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முந்திநின்றவினைகளவைபோகச்
சிந்திநெஞ்சேசிவனார்திருப்புன்கூர்
அந்தமில்லாவடிகளவர்போலும்
கந்தமல்குகமழ்புன்சடையாரே. 1

மூவராயமுதல்வர்முறையாலே
தேவரெல்லாம்வணங்குந்திருப்புன்கூர்
ஆவரென்னுமடிகளவர்போலும்
ஏவினல்லாரெயின்மூன்றெரித்தாரே. 2

மாடமல்குமதில்சூழ்காழிமன்
சேடர்செல்வருறையுந்திருப்புன்கூர்
நாடவல்லஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பரவிவாழ்மினே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

## திருப்புன்கூரும் திருநீடூரும்.

திருத்தாண்டகம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பிறவாதேதோன்றியபெம்மான்றன்னைப்பேணாதாரவர்
தம்மைப்பேணாதானைத், துறவாதேகட்டறுத்தசோதியானைத்
தூநெறிக்குந்தூநெறியாய்நின்றான்றன்னைத், திறமாயவெத்
திசைக்குந்தானேயாகித் திருப்புன்கூர்மேவிய சிவலோகனை,
நிறமாமொளியானை நீடூரானை நீதனேனென்னேநா னினையா
வாறே. 1

கலைஞானங்கல்லாமேகற்பித்தானைக்கடுநரகஞ்சாராமே காப்பான்றன்னைப், பலவாயவேடங்கடானேயாகிப்பணிவார் கட்கங்கங்கேபற்றானைச், சிலையாற்புரமெரித்ததீயாடியைத் திருப்புன்கூர்மேவியசிவலோகனை, நிலையார்மணிமாடநீடூரா னைநீதனேனென்னேநானினையாவாறே. 4

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-தக்கேசி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுதவவனைக்காப்பதுகா ரணமாக, வந்தகாலன்றனாருயிரதனைவவ்வினாய்க்குன்றன்வண் மைகண்டடியேன், எந்தைநீயெனைநமன்றமர்நலியிலிவன்மற் றென்னடியானெனவிலக்குஞ், சிந்தையால்வந்துன்றிருவடி யடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. 1

வையகமுற்றுமாமழைமறந்துவயலினீரிலைமாநிலந்தரு கோம், உய்யக்கொள்கமற்றெங்களையென்னவொளிகொள் வெண்முகிலாய்ப்பரந்தெங்கும், பெய்யுமாமழைப்பெருவெ ள்ளந்தவிர்த்துப் பெயர்த்தும் பன்னிருவேலி கொண்டருளு ஞ், செய்கைகண்டுநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற் றிருப்புன்கூருளானே. 2

நற்றமிழ்வல்லஞானசம்பந்தனாவினுக்கரையனாளைப்போ வானுங், கற்றசூதனற்சாக்கியன்சிலந்திகண்ணப்பன்கணம் புல்லனென்றிவர்கள், குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங் கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன், பொற்றிரண்மணி க்கமலங்கண்மலரும்பொய்கைசூழ்திருப்புன்கூருளானே. 4

மூவெயில்செற்றஞான்றுய்ந்தமூவரிலிருவர்நின்றிருக் கோயிலின்வாய்தல், காவலாளரென்றேவியபின்னையொருவ னீகரிகாடரங்காக, மானைநோக்கியோர்மாநடமகிழமணிமுழா

முழக்கவருள்செய்த, தேவதேவனின் றிருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. 8

திருச்சிற்றம்பலம்.

திருப்புன்கூர்:—இது ஸ்தலவிருக்ஷம் புன்கு ஆதலால் காஞ்சாரண்யம் எனவும் திருப்புன்கூர் எனவும்வழங்கும்; திருநாளைப் போவார்நாயனர் ஆதனூரினின்றும் எழுந்தருளித் திருவாயிலுக்கு நேரேநின்று சுவாமி தரிசனஞ்செய்ய விரும்பியபோது சுவாமி விருஷபதேவரை விலகும்படிசெய்து காக்ஷி கொடுக்கப்பெற்றது; இந்நாயனர் சந்நிதிக்கருகில் குளந்தொட்டுக் கைங்கர்யஞ் செய்யப்பெற்றது; வடக்கேஒருமைலில் திருப்பெருமங்கலத்தில் எழுந்தருளியிருந்த ஏயர் கோன்கலிக்காமநாயனர் அதிகமான திருப்பணிகள் செய்தருளியது; சுந்தரமூர்த்திநாயனர் எழுந்தருளி யிவர் சூலேநோய் தீர்த்ததன் பின்னர் இருவரும் அடைந்து வழிபடப்பெற்றது; மழையின்றிப் பஞ்சமாகியபோது மழைபெய்யும் பொருட்டுப் பன்னிருவேலியும் பின்பு வெள்ளந்தவிரப் பன்னிருவேலியும் பெற்ற பெருமையது. இக் கதையும் ஏயர் கோனர்து திருப்பணியும் திருப்பதிகத்துக் கூறியிருத்தல் காண்க. சுவாமி-சிவலோகநாதர், அம்மையார் - சோக்கநாயகியம்மை. இத்தலத்திற்குப் பதிகம். ௩.

இத்தலம் வைத்தீச்சுரன் கோவில் ஸ்டேஷனிலிருந்து மேற்கே மட்சாலையில் ஒன்றேமுக்கால் மைலில் உள்ளது.

## உக. திருநீடூர்.

### சுந்தரமூர்த்தி நாயனர்.

பண்-தக்கேசி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஊர்வதோர்விடையொன் றுடையானையொண் ணுதற்றனிக்கண் ணுதலானைக், காரதார்கறைமாமிடற்றனைக்கருதலார்புரமூன்றெரித்தானை, நீரில்வாளைவரால்குதிகொள்ளுநிறைபுனற்கழனிச்செல்வநீடூரப், பாருளார்பரவித்தொழநின்ற பரமனைப்பணியாவிடலாமே. 1

துன்னுவார்சடைத்தூமதிபானைத்துயக்குறுவகைதோன்றுவிப்பானைப், பன்னுநான்மறைபாடவல்லானைப்பார்த்தனுக்கருள்செய்தபிரானை, என்னையின்னருளெய்துவிப்பானையேதிலார்தமக்கேதிலன்றன்னைப், புன்னைமாதவிபோதலர்நீடூர்ப்புனிதனைப்பணியாவிடலாமே. 2

பேரோராயிரமும்முடையானைப்பேசிறைப்பெரிதும்மினியானை, நீரூர்வார்சடைநின்மலன்றன்னைநீடூர்நின்றுகந்திட்டபிரானை, ஆரூரன்னடிகாண்பதற்கன்பாயாதரித்தழைத்திட்டவிம்மாலை, பாரூரும்பாவித்தொழவல்லார்பத்தராய்முத்திதாம்பெறுவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருநீடூர்.—இது வகுளாரண்யம் எனவும் மகிழவனம் எனவும் சொல்லப்பெறும்; எக்காலத்தும் அழிவில்லாது நீடியிருத்தலின் நீடூரெனப்பெற்றது. இங்கு இந்திரன், சூரியன், சந்திரன், பாதகத்தால் நண்டுருவெய்திய தன்மசுதன் என்னும் பிராம்மணன், ஆலாலசுந்தரி (காளி) இவர்கள் பூசித்துப் பேறுபெற்றனர். சுந்தரமூர்த்திநாயனர் திருநீடூர் பணியாதுசென்று பின்பு திருவருட்டிறத்தால் நினைந்து அடைந்து நீடூர் பணியாவிடலாமே என்று பாடியருளினர். முனையடுவார்நாயனர் இத்தலத்திற் றிருவவதாரஞ்செய்து பகைவர்க்குடைந்தவர்க்குத் தாம் போர்முனையில் நின்றுவென்று நிதியங்கொண்டு சிவனடியார்க்கு வேண்டுவவளித்துச் சிவபதம் அடைந்தார். சுவாமி-அருட்சோமநாதர், கானநிர்த்தசங்கரர், அம்மையார்-வேயுறுதோளியம்மை, அதிகாந்தியம்மை, வேதநாயகி; தீர்த்தங்கள்-சந்திரபுட்கரணி, இந்திரதீர்த்தம், பத்திரகாளிதீர்த்தம், ஆனந்ததீர்த்தம், பரிதிகுண்டம், வருணதீர்த்தம், இரவிபுட்கரணி, செங்கழுநீரோடை, முநிவரர்தீர்த்தம் என ஒன்பது உண்டு. விருக்ஷம்-மகிழமரம்.

இத்தலம் ஆனதாண்டவபுரம் ஸ்டேஷனிலிருந்து தென் மேற்கே மட்சாலையில் ஒரு மைலில் உள்ளது.

---

# உஉ. திருஅன்னியூர்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மன்னியூரிறை, சென்னியார்பிறை
அன்னியூரமர், மன்னுசோதியே. 1

பழகுந்தொண்டர்வம், அழகனன்னியூர்க்
குழகன்சேவடி, தொழுதுவாழ்மினே. 2

இன்பம்வேண்டுவீர், அன்பனன்னியூர்
நன்பொனென்னுமின், உம்பராகவே. 6

பூந்தராய்ப்பந்தன், ஆய்ந்தபாடலால்
வேந்தனன்னியூர், சேர்ந்துவாழ்மினே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாறலைத்தபடுவெண்டலையினன்
நீறலைத்தசெம்மேனியனேரிழை
கூறலைத்தமெய்கோளரவாட்டிய
ஆறலைத்தசடையன்னியூரரே. 1

பண்டொத்தமொழியாளையோர்பாகமாய்
இண்டைச்செஞ்சடைபன்னிருள்சேர்ந்ததோர்
கண்டத்தன்கரியின்னுரிபோர்த்தவன்
அண்டத்தப்புறத்தானன்னியூரரே. 2

வஞ்சரக்கன்கரமுஞ்சிரத்தொடும்
அஞ்சுமஞ்சுமொராறுநான்கும்மிறப்
பஞ்சின்மெல்விரலாலடர்த்தாயிழை
அஞ்சலஞ்சலென்றானன்னியூரரே. 10

திருச்சிற்றம்பலம்.

திரு அன்னியூர்.—இது பொன்னூர் என்று வழங்குகிறது வருணன் பூசித்தது. சுவாமி-ஆபத்சகாயர், தேவியார்-பெரியநாயகியம்மை, தீர்த்தம்-வருணதீர்த்தம். இத்தலத்திற்குப் பதிகம் ௨.

இத்தலம் திருநீடூரினின்றும் மேற்கே மட்சாலையில் மூன்று மைலில் உள்ளது.

---

# ௨௩. திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-சாதாரி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஓங்கிமேலுழிதருமொலிபுனற்கங்கையையொருசடைமேல்
தாங்கினரிடுபலிதலைகலனக்கொண்ட தம்மடிகள்
பாங்கினலுமையொடும்பகலிடம்புகலிடம்பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. 1

ஆறுசேர்சுடலையிற்சுடரெரியாடுவர் துளங்கொளிசேர்
நீறுசாந்தெனவுகந்தணிவர்வெண்பிறைபுல்குசடைமுடியார்
நாறுசாந்திளமுலையரிவையோடொருபகலமர்ந்தபிரான்
வீறுசேர்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. 2

விண்ணுலாம்விரிபொழில்விரைமணற்றுருத்திவேள்விக்குடியும்
ஒண்ணுலாமொலிகழலாடுவாரரிவையோடுறைபதியை
நண்ணுலாம்புகலியுளருமறைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணுலாமருந்தமிழ்பாடுவாராடுவார்பழியிலரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனர்.

மூப்பதுமில்லை-பண்-நட்டராகம். ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மூப்பதுமில்லைபிறப்பதுமில்லையிறப்பதில்லை
சேர்ப்பதுகாட்டகத்தூரினுமாகச்சிந்திக்கினல்லால்

காப்பதுவேள்விக்குடி தண்டுருத்தியெங்கோனரைமேல்
ஆர்ப்பதுநாகமறிந்தோமேனுமிவர்க்காட்படோமே. 1

குறவனார்தம்மகடம்மகனார்மணவாட்டிகொல்லை
மறவனாராயங்கோர்பன்றிப்பின்போவதுமாயங்கண்டீர்
இறைவனாராதியார்சோதியாராயங்கோர்சோர்வுபடா
அறவனாராவதறிந்தோமேனுமிவர்க்காட்படோமே. 6

கூடலர்மன்னன்குலநாவலூர்க்கோனலத்தமிழைப்
பாடவல்லபரமன்னடியார்க்கடிமைவழுவா
நாடவல்லதொண்டனாரூரனாட்படுமாறுசொல்லிப்
பாடவல்லார்பரலோகத்திருப்பதுபண்டமன்றே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவேள்விக்குடி.—இது சிவபெருமானது விவாக வேள்வி நடந்த தலமாதலின் இப்பெயரெய்தியது; திருத்துருத்தி யோடுசேர்த்துப் பதிகங்களில் பாடப்பெற்றிருக்கிறது. பகற்காலத்து வேள்விக்குடியிலும் இரவு துருத்தியிலும் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதாகப் பதிகங்கூறுகின்றது. சுவாமி மணவாளக்கோலம். சுவாமி-கலியாணசுந்தரர், தேவியார்-பரிமளசுகந்தநாயகி, இத்தலத்திற்குப் பதிகம் ௩

இத்தலம்-மாயூரத்தையடுத்த குற்றாலம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மட்சாலையில் முக்கால்மைலில் உள்ள திருத்துருத்தியையடைந்து அதனின்றும் வடக்கே ஒருமைலில் காவிரியைக்கடந்து மஞ்சிவாய்க்கால் வடகரை வழியாய்க் கிழக்கே மாயூரம் மட்சாலை சாலையில் ஒருமைலில் உள்ளது.

---

# உ௪. திரு எதிர்கொள்பாடி.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

பண்-இந்தளம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மத்தயானையேறிமன்னர்சூழவருவீர்காள்
செத்தபோதிலாருமில்லைச்சிந்தையுள்வைம்மின்கள்

வைத்தவுள்ளமாற்றவேண்டாவம்மின்மனத்தீரே
அத்தர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. 1

தோற்றமுண்டேன்மரணமுண்டு துயரமனைவாழ்க்கை
மாற்றமுண்டேல்வஞ்சமுண்டுநெஞ்சமனத்தீரே!
நீற்றரேற்றர்நீலகண்டர்நிறைபுனனீள்சடைமேல்
ஏற்றர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. 2

அந்தையாருந்தவ்வையாருமெட்டனைச்சார்வாகார்
வந்துநம்மோடுள்ளளாவிவானநெறிகாட்டுஞ்
சிந்தையீரேநெஞ்சினீரேதிகழ்மதிபஞ்சூடும்
எந்தைகோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. 9

முத்துநீற்றுப்பவளமேனிச்செஞ்சடையானுறையும்
பத்தர்பந்தத்தெதிர்கொள்பாடிப்பரமனையேபணியச்
சித்தம்வைத்ததொண்டர்தொண்டன்சடையனவன்சிறுவன்
பத்தனூரன்பாடல்வல்லார்பாதம்பணிவாரே. 11

---

திரு எதிர்கோள்பாடி—இது மேலைத் திருமணஞ்சேரி எனவழங்கும்; மணக்கோலத்துடன்வந்த அன்பனான அரசகுமாரன் ஒருவனைப் பரமசிவன் மாதுலராக எதிர்கொண்டு அழைத்துச் சென்ற காரணத்தால் இப்பெயரெய்தியது; இந்திரன்யானையாகிய ஐராவதம் பூசித்துப் பேறுபெற்றது. சுவாமி-ஐராவதேசுரர், தேவியார்-மலர்க்குழனாயகி.

இத்தலம் திருவேள்விக்குடியினின்றும் வடக்கே கரைமார்க்கமாய் ஒன்றரைமைலில் உள்ளது.

---

## உரு திருமணஞ்சேரி.

### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-இந்தளம் உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அயிலாருமம்பதனாற்புரமூன்றெய்து
குயிலாருமென்மொழியாளொருகூறாகி

மயிலாருமல்கியசோலைமணஞ்சேரி
பயில்வானைப்பற்றிநின்றார்க்கில்லைபாவமே. 1

விதியானைவிண்ணவர்தாந்தொழுதேத்திய
நெதியானைநீள்சடைமேனிகழ்வித்தவான்
மதியானைவண்பொழில்சூழ்ந்தமணஞ்சேரிப்
பதியானைப்பாடவல்லார்வினைபாறுமே. 2

கண்ணாருங்காழியர்கோன்கருத்தார்வித்த
தண்ணார்சீர்ஞானசம்பந்தன்றமிழ்மாலை
மண்ணாருமாவயல்சூழ்ந்தமணஞ்சேரி
பண்ணாரப்பாடவல்லார்க்கில்லைபாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பட்டநெற்றியர்பாய்ப்புலித்தோலினர்
நட்டநின்றுநவில்பவர்நாடொறுஞ்
சிட்டர்வாழ்திருவார்மணஞ்சேரியெம்
வட்டவார்சடையார்வண்ணம்வாழ்த்துமே. 1

துன்னுவார்குழலாளுமையாளொடும்
பின்னுவார்சடைமேற்பிறைவைத்தவர்
மன்னுவார்மணஞ்சேரிமருந்தினை
உன்னுவார்வினையாயினவோயுமே. 2

கடுத்தமேனியரக்கன்கயிலையை
எடுத்தவன்னெடுநீண்முடிபத்திறப்
படுத்தனும்மணஞ்சேரியருளெனக்
கொடுத்தனன்கொற்றவாளொடுநாமமே. 10

திருச்சிற்றம்பலம்.

திருமணஞ்சேரி.—இது கீழைத் திருமணஞ்சேரி என்று வழங்கும்; மன்மதன் பூசித்துப் பேறுபெற்றது; இங்கு வைசிய வம்சத்திற்பிறந்த பெண்கள் இருவர் தங்களுக்குப்பிறக்கும் சந்ததிகளுக்குச் சம்பந்தம் செய்துகொள்ள உடன்பட்டுப் பிறகு ஒருத்திக்குப் பிறந்த பிள்ளை ஆமையா யிருந்தமையின் மற்றவள் தன் பெண்ணைக் கொடுக்க மறுத்தபோது ஆமைபூசித்து மனிதஉருவடைந்து உத்தேசித்த பெண்ணை மணந்தது. சுவாமி அருள்வள்ளனுத்ர், தேவியார் யாழினுமென்மொழியம்மை. இதற்குத் தேவாரப்பதிகம் உ

இத்தலம் திருவெதிர்கொள்பாடியி னின்றும் கிழக்கே கால் மைலில் உள்ளது.

---

# உசு. திருக்குறுக்கைவீரட்டம்.

## திருநாவுக்கரசு நாயனர்.

### திருநேரிசை. சுந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தழைத்ததோரா த்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
அழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்றாதை தாளைப்பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே. 3

சிலந்தியுமானைக்காவிற்றிருநிழற்பந்தர்செய்து
உலந்தவணிறந்தபோதேகோச்செங்கணானுமாகக்
கலந்தநீர்க்காவிரிசூழ்சோணாட்டுச்சோழர்தங்கள்
குலந்தனிற்பிறப்பித்திட்டார்குறுக்கைவீரட்டனாரே. 4

ஏறுடனேழடர்த்தானெண்ணியாயிரம்பூக்கொண்டு
ஆறுடைச்சடையினானையர்ச்சித்தானடியிணைக்கீழ்
வேறுமோர்பூக்குறையமெய்ம்மலர்க்கண்ணைமிண்டக்
கூறுமோராழியீந்தார்குறுக்கைவீரட்டனாரே. 5

காப்பதோர்வில்லுமம்புங்கையுடையிறைச்சிப்பாரந்
தோற்பெருஞ்செருப்புத்தொட்டுத்தூயவாய்க்கலசமாட்டித்
தீப்பெருங்கண்கள்செய்யகுருதிநீரொழுகத்தன்கண்
கோப்பதும்பற்றிக்கொண்டார்குறுக்கைவீரட்டனாரே. 7

நிறைமறைக்காடுதன்னினீண்டெரிதீபந்தன்னைக்
கறைநிறத்தெலிதன்மூக்குச்சுட்டிடக்கனன்றுதூண்ட
நிறைகடன்மண்ணும்விண்ணும்நீண்டவானுலகுமெல்லாம்
குறைவறக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. 8

அணங்குமைபாகமாகவடக்கியவாதிமூர்த்தி
வணங்குவாரிடர்கடீர்க்குமருந்துநல்லருந்தவத்த
கணம்புல்லர்க்கருள்கள்செய்துகாதலாமடியார்க்கென்றுங்
குணங்களைக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. 9

திருச்சிற்றம்பலம்.

---

**திருக்குறுக்கை வீரட்டம்**— இது அட்டவீரட்டங்களுள் ஒன்று; மன்மத தகனஸ்தலம். அட்டவீரட்ட விவாத்தை

பூமன் சிரங்கண்டியந்தகன் கோவற்புரமதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை யமன் கடவூ ரிந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே.

என்னும் அபியுக்தவசனத்தால் அறிக. இத்தலத்துச்சபை "காமாங்க நாசினிசபை" என்றும், "சம்பு விநோதசபை" என்றும் வேதாரண்ய புராணம் கூறுகின்றது. சுவாமி - வீரட்டேசுரர், தேவியார்-ஞானம்பிகை. இதற்குப் பதிகம் உ

இத்தலம் (22) திருஅன்னியூரிலிருந்து வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் மூன்றுமைல் சென்று அங்குநின்றும் ஐயாவையன் வாய்க்காலுக்கு மேல்பக்கமாய் அரைமைலில் உள்ளது.

---

# உஎ. திருக்கருப்பறியலூர்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

திருவிராகம். பண்- இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சுற்றமொடுபற்றவைதுயக்கறவறுத்துக்
குற்றமில்குணங்களொடுகூடுமடியார்கள்

மற்றவரைவானவர்தம்வானுலகமேற்றக்
கற்றவனிருப்பதுகருப்பறியலூரே. 1

விண்ணவர்கள்வெற்பரசுபெற்றமகண்மெய்த்தேன்
பண்ணமருமென்மொழியினாளையணைவிப்பான்
எண்ணிவருகாமனுடல்வேவவெரிகாலும்
கண்ணவனிருப்பதுகருப்பறியலூரே. 6

நலந்தருபுனற்புகலிஞானசம்பந்தன்
கலந்தவர்கருப்பறியன்மேயகடவுளைப்
பலந்தருதமிழ்க்கிளவிபத்துமிவைகற்று
வலந்தருமவர்க்குவினைவாடலெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். ௭-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

சிம்மாந்துசிம்புளித்துச்சிந்தையினில்வைத்துகந்துதிறம்பாவண்ணம், கைம்மாவினுரிவைபோர்த்துமைவெருவக்கண்டானைக்கருப்பறியலூர்க், கொய்ம்மாவின்மலர்ச்சோலைக்குயில்பாடமயிலாடுங்கொகுடிக்கோயில், எம்மானைமனத்தினினைந்தபோதவர்நமக்கினியவாறே. 1

நீற்றுருமேனியராய்நினைவார்தம்முள்ளத்தேநினைந்துதோன்றும், காற்றானைத்தீயானைக்கதிரானைமதியானைக்கருப்பறியலூர்க், கூற்றானைக்கூற்றுதைத்துக் கோல்வளையாளவளோடுங்கொகுடிக்கோயில், ஏற்றானைமனத்தினினைந்தபோதவர்நமக்கினியவாறே. 2

கலைமலிந்ததென்புலவர்கற்றோர்தம்மிடர்தீர்க்குங்கருப்பறியலூர்க், குலைமலிந்தகோட்டெங்குமட்டொழுகும்பூஞ்சோலைக்கொகுடிக்கோயில், இலைமலிந்தமழுவானைமனத்தினாலன்புசெய்தின்பமெய்தி, மலைமலிந்ததோளூரன்வனப்பகையப்பனுரைத்தவண்டமிழ்களே. 11

திருச்சிற்றம்பலம்.

திருக்கருப்பறியலூர்—இது "மேலைக்காழி" எனவும் "தலைஞாயிறு" எனவும் வழங்கும். இவ்வாலயம் "கொகுடிக்கோயில்" என்று பதிகத்துட் கூறப்படுகிறது. கொகுடி - முல்லைவிசேடம். "கொகுடி முல்லை" என்றும் பிரயோகம் காண்க. இத்தலத்து அகங்காரத்தோடு கைலைக்குச்சென்றபோது தன்முன் யக்ஷவடிவத்தோடு தோன்றிய சிவபெருமான்மீது வஜ்ரப்பிரயோகம் செய்த இந்திரன் சுவாமி யென்று அறிந்து வணங்கி மன்னிப்படைந்து வந்து அக்குற்ற நிவர்த்தியின் பொருட்டுப் பூசித்து அநுக்கிரகம் அடைந்தான். சுவாமி குற்றம்பொறுத்தநாதர், தேவியார்-கோல்வளைநாயகி. தீர்த்தம்-இந்திரதீர்த்தம். இத்தலத்துக்குப் பதிகம் 2

இத்தலம் 20 வது திருப்புன்கூரினின்றும் மேற்கே மட்சாலையில் 2-மைல் சென்று மண்ணிப்பள்ளத்தை அடைந்து அங்கிருந்து வடக்கே மட்சாலையில் அரைமைலில் உள்ளது.

---

# உஅ. திருக்குரக்குக்கா.

## திருநாவுக்கரசு நாயனர்

### திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மரக்கொக்காமெனவாய்விட்டலறிநீர்
சரக்குக்காவித்திரிந்தயராதுகால்
பரக்குங்காவிரிநீரலைக்குங்கரைக்
குரக்குக்காவடையக்கெடுங்குற்றமே. 1

கட்டாறேகழிகாவிரிபாய்வயல்
கொட்டாறேபுனலூறுகுரக்குக்கா
முட்டாறுவடியேத்தமுயல்பவர்க்
கிட்டாறுவிடரோடவெடுக்குமே. 2

இரக்கமின்றிமலையெடுத்தான்முடி
உரத்தையொல்கவடர்த்தானுறைவிடம்
குரக்கினங்குதிகொள்ளுங்குரக்குக்கா
வரத்தனைப்பெறவானுலகாள்வரே. 10

திருச்சிற்றம்பலம்.

திருக்குரக்குக்கா.—இது ஹநுமான் பூசித்தகாரணத்தால் இப்பெயரெய்தியதாகத் தெரிகிறது. சுவாமி-குந்தளேசுரர், தேவியார்- குந்தளநாயகி.

இத்தலம் 27-வது திருக்கருப்பறியலூரினின்றும் வடக்கே மட்சாலையில் முக்கால்மைலில் உள்ளது. ஆற்றைப்பரிசினுற் கடக்க வேண்டியது.

---

# உகூ. திருவாழ்கொளிபுத்தூர்.

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர்.

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்பூதகணம்புடைசூழக், கொடியுடையூர்திரிந்தையங்கொண்டுபலபலகூறி, வடிவுடைவாணெடுங்கண்ணுமைபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க், கடிகமழ்மாமலரிட்டுக்கறைமிடற்றுனடிகாண்போம். 1

அரைகெழுகோவணவாடையின்மேலோராடரவம்மசைத்தையம், புரைகெழுவெண்டலையேந்திப்போர்விடையேறிப்புகழ, வரைகெழுமங்கையதாகமோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர், விரைகமழ்மாமலர்தூவிவிரிசடையானடிசேர்வோம். 2

கல்லுயர்மாக்கடனின்றுமுழங்குங்கரைபொருகாழியமூதூர், நல்லுயர்நான்மறைநாவினற்றமிழ்ஞானசம்பந்தன், வல்லுயர்சூலமும் வெண்மழுவாளும் வல்லவன் வாழ்கொளிபுத்தூர்ச், சொல்லியபாடல்கள்வல்லார்துயர்கெடுதல்லெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனுர்.

பண்-தக்கேசி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தலைக்கலன்றலைமேற்றரித்தானைத்தன்னையென்னைநினைக்கத்தருவானைக், கொலைக்கையானையுரிபோர்த்துகந்தானைக்

கூற்றுதைத்தகுரைசேர்கழலானை, அலைத்தசெங்கண்விடை யேறவல்லானையானையாவடியேனடிநாயேன், மலைத்தசெந் நெல்வயல்வாழ்கொளிபுத்தூர்மாணிக்கத்தை மறந்தென்னி னைக்கேனே. 1

தேனையாடியகொன்றையினானைத்தேவர்கைதொழுந்தே வர்பிரானை, ஊனமாயினதீர்க்கவல்லானையொற்றையேற்றனை நெற்றிக்கண்ணனைக், கானவானையின்கொம்பினைப்பீழ்ந்தகள் ளப்பிள்ளைக்குங்காண்பரிதாய, வானநாடனைவாழ்கொளிபுத் தூர்மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. 8

திருச்சிற்றம்பலம்.

---

திருவாழ்கொளிபுத்தூர்.—இது திருவாளொளிபுத்தூர் எனவும் வாளப்புற்றூர் எனவும் வழங்குகிறது; விஷ்ணுபூசித்த மாணி க்க லிங்கத்தை யுடைமையின் வடமொழியில் "அரதனபுரம் எனவும் பெறும். இஃதன்றி வண்டு பூசித்ததும், அருச்சுனன் பூசித்ததும் பதிகத்துக் காணப்பெறுகின்றன. இறைவன் அருச்சுனன் வாளைப் புற்றில் ஒளித்தமையின் வாள் ஒளிபுற்றூர் எனத் தலத்துக்குப்பெயர். சுவாமி-மாணிக்கவண்ணர். தேவியார்-வண்டமர்பூங்குழலி. இதற்குப் பதிகம் உ.

இத்தலம் 20-வது திருப்புன்கூரினின்றும் மண்ணிப்பள்ளத்தை யடைந்து அங்குநின்றும் மேற்கே மட்சாலையில் ஒன்றேகால் மைலில் உள்ளது.

---

## ௩0. திருப்பழமண்ணிப்படிக்கரை.

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-நட்டராகம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முன்னவனெங்கள்பிரான்முதல்காண்பரிதாயபிரான்
சென்னியிலெங்கள்பிரான்றிருநீலமிடற்றெம்பிரான்
மன்னியவெங்கள்பிரான்மறைநான்குங்கல்லாலிழற்கீழ்ப்
பன்னியவெங்கள்பிரான்பழமண்ணிப்படிக்கரையே. 1

அண்டகபாலஞ்சென்னியடிமேலலரிட்டுநல்ல
தொண்டங்கடிபரவித்தொழுதேத்திநின்றாடுமிடம்
வெண்டிங்கள்வெண்மழுவன்விரையார்கதிர்மூவிலைய
பண்டங்கன்மேயவிடம்பழமண்ணிப்படிக்கரையே. 2

பல்லுயிர்வாழுந்தெண்ணீர்ப்பழமண்ணிப்படிக்கரையை
அல்லியந்தாமரைத்தாராரூரனுரைத்ததமிழ்
சொல்லுதல்கேட்டல்வல்லாரவர்க்குந்தமர்க்குங்கிளைக்கும்
எல்லியுநண்பகலுமிடர்கூறுதலில்லையன்றே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருமண்ணிப்படிக்கரை.**—இது இலுப்பைப்பட்டு என்றுவழங்குகிறது. இங்கு சிவபெருமான் விஷபானஞ்செய்த காலத்து அம்பாள் கண்டத்தைக் கரத்தால்பற்றி விஷத்தை உள்ளேபோகாது நிறுத்தியதனால் சுவாமி நீலகண்டம் காட்டினார் என்று சரித்ரம் வழங்குகிறது. இது சுவாமி அம்பாள் பெயர்களாலும் "திருநீலமிடற்றெம்பிரான்" என்னும் பதிகக்குறிப்பாலும் வற்புறுத்தப்பெறுகிறது; பாண்டவர் பூசித்த ஐந்து லிங்கங்கள் உள்ளன. சுவாமி-நீலகண்டர், தேவியார்-அமிர்தகரவல்லி.

இத்தலம் 29-வது திருவாழ்கொளி புத்தூரினின்றும் மேற்கே மட்சாலையில் ஒருமைலில் உள்ளது.

---

## ௩௧ திருஓமாம்புலியூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-புறநீர்மை. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பூங்கொடிமடவாளுமையொருபாகம்புரிதருசடைமுடி
யடிகள், வீங்கிருணட்டமாடுமெம்விகிர்தர்விருப்பொடுமுறை
விடம்வினவில், தேங்கமழ்பொழிலிற்செழுமலர்கோதிச்செறி
தருவண்டிசைபாடும், ஓங்கியபுகழாரோமமாம்புலியூருடை
யவர்வடதளியதுவே. 1

சம்பாற்கருளிச்சலந்தரான்வீயத்தழலுமிழ்சக்கரம்படைத்த, எம்பெருமானுரிமையவரேத்தவினிதிணங்குறைவிடம் வினவில், அம்பரமாகியழலுமிழ்புகையினாகுதியான்மழை பொழியும், உம்பர்களேத்துமோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. 2

பாங்குடைத்தவத்துப் பகீரதற்கருளிப்படர்சடைக்கரந்தநீர்க்கங்கை, தாங்குதறவிர்த்துத்தாரதலத்திழித்ததத்துவனுறைவிடம்வினவில், ஆங்கெரிமூன்றுமமர்ந்துடனிருந்தவங்கையாலாகுதிவேட்கும், ஓங்கியமறையோரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. 3

விளைதருவயலுள்வெயில்செறிபவளமேதிகண்மேய்புலத்திடறி, ஒளிதரமல்குமோமமாம்புலியூருடையவர்வடதளியானைக், களிதருநிவப்பிற்காண்டகுசெல்வக்காழியுண்ஞானசம்பந்தன், அளிதருபாடல்பத்தும்வல்லார்களமரலோகத்திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனர்.

### திருத்தாண்டகம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆரூருமூவிலைவேலங்கையானை யலைகடனஞ்சயின்றானையமரரேத்தும், ஏராருமதிபொதியுஞ்சடையினனையெழுபிறப்புமெனையாளாவுடையான்றன்னை, ஊராரும்படநாகமாட்டுவானையுயர்புகழ்சேர்தருமோமாம்புலியூர்மன்னுஞ், சீராரும்வடதளியெஞ்செல்வன்றன்னைச் சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. 1

திருச்சிற்றம்பலம்.

---

திருவோமாம்புலியூர்.—இது "பிரணவ வியாக்ரபுரம்" என உபமந்யு பக்தவிலாசத்திற் கூறியிருக்கிறது. இங்கு ஆலயம் வட

தளி. புலிக்குப்பயந்து வில்வமரத்திலேறிய வேடன் இராத்திரிமுழுவதும் நித்திரை வாராமைப்பொருட்டுப் பறித்துப்போட்ட வில்வபத்ரம் மரத்தடியிலிருந்த சிவபெருமான்மீது வீழ்ந்து முத்தியடைந்ததலம். அம்பாள் தக்ஷிணாமூர்த்தியினிடம் பிரணவோபதேசம் பெற்றதலம். சுவாமி-துயரந்தீர்த்தநாதர், தேவியார்-பூங்கொடிநாயகி, தீர்த்தம்-கொள்ளிடம். இதற்குப்பதிகம். ௨

இத்தலம் 30-வது திருமண்ணிப் படிக்கரையினின்றும் வடமேற்கே 2-மைலில் கொள்ளிடம் வடகரையில் உள்ளது. சிதம்பரத்தினின்றும் காட்டுமன்னார்குடி வழியாகவும் செல்லலாம்.

---

## ௩௨. திருக்கானாட்டுமுள்ளூர்.

### சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-கொல்லிக்கௌவாணம். ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வள்வாயமதிமிளிரும்வளர்சடையினானைமறையவனைவாய்மொழியைவானவர்தங்கோனைப், புள்வாயைக்கீண்டுலகம்விழுங்கியுமிழ்ந்தானைப்பொன்னிறத்தின்முப்புரிநூலானைமுகத்தினானை, முள்வாயமடற்றழுவிமுடத்தாழையீன்றுமொட்டலர்ந்துவிரைநாறுமுருகுவிரிபொழில்சூழ், கள்வாயகருங்குவளைகண்வளருங்கழனிக்கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. 1

ஒருமேகமுகிலாகியொத்துலகந்தானாயூர்வனவுநிற்பனவுமூழிகளுந்தானாய்ப், பொருமேவுகடலாகிப்பூதங்களைந்தாய்ப்புனைந்தவனைப்புண்ணியனைப்புரிசடையினானைத், திருமேவுசெல்வத்தார்தீமூன்றும்வளர்த்த திருத்தக்கவந்தணர்களோதுநகரெங்குங், கருமேதிசெந்தாமரைமேயுங்கழனிக்கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. 2

திரையினார்கடல்சூழ்ந்ததென்னிலங்கைக்கோனைச்செற்றவனைச்செஞ்சடைமேல்வெண்மதியினானைக், கரையினார்புனற்றழுவுகொள்ளிடத்தின்கரைமேற்கானாட்டுமுள்ளூரிற் கண்டுகழல்தொழுது, வுரையினார்மதயானைநாவலாரூரனுரிமையா

னுரைசெய்தவொண்டமிழ்கள்வல்லார், வரையினார்வகைஞால மாண்டவர்க்குந்தாம்போய்வானவர்க்குந்தலைவராய்நிற்பரவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கானாட்டுமுள்ளூர்:—சுவாமியின் திருநாமம் இது பதஞ்சலி பூசித்ததலமென்று தெரிவிக்கிறது. சுவாமி-பதஞ்சலிநாதர் தேவியார்-கானார்குழலி, கோல்வளைக்கையம்மை.

இத்தலம் 31-வது திருவோமாம்புலியூரினின்றும் கிழக்கே கொள்ளிடம் வடகரை மட்சாலை மார்க்கமாய் 3-மைலில் உள்ளது.

---

# ௩௩. திருநாரையூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

### பழம்பஞ்சுரம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காம்பினைவென்றமென்றோளிபாகங்கலந்தானலந்தாங்கு
தேம்புனல்சூழ்திகழ்மாமடுவிற்றிருநாரையூர்மேய
பூம்புனல்சேர்புரிபுன்சடையான்புலியின்னுரிதோன்மேற்
பாம்பினைவீக்கியபண்டரங்கன்பாதம்பணிவோமே. 1

தீவினையாயினதீர்க்கநின்றான்றிருநாரையூர்மேயான்
பூவினைமேவுசடைமுடியான்புடைசூழப்பலபூதம்
ஆவினிலைந்துங்கொண்டாட்டுகந்தானடங்கார்மதின்மூன்றும்
ஏவினையெய்தழித்தான்கழலேபரவாவெழுவோமே. 2

தண்மதிதாழ்பொழில்சூழ்புகலித்தமிழ்ஞானசம்பந்தன்
ஒண்மதிசேர்சடையானுறையுந்திருநாரையூர்தன்மேற்
பண்மதியாற்சொன்னபாடல்பத்தும்பயின்றார்வினைபோகி
மண்மதியாதுபோய்வான்புகுவர்வானோரெதிர்கொளவே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனர்.

### திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சொல்லானைப்பொருளானைச்சுருதியானைச்சுடராழிநெடு மாலுக்கருள்செய்தானை, அல்லானைப்பகலானையரியான்றன் னையடியார்கட்கெளியானையரண்மூன்றெய்த, வில்லானைச்சரம் விசயர்க்கருள்செய்தானைவெங்கதிரோன் மாமுனிவர்விரும்பி யேத்தும், நல்லானைத்தியாகேசன்றன்னைநாரையூர்நன்னகரி ற்கண்டேனுனே. 1

செம்பொன்னைநன்பவளந்திகழுமுத்தைச்செழுமணி யைத்தொழுமவர்தஞ்சித்தத்தானை, வம்பவிழுமலர்க்கணைவே ளுலக்கநோக்கிமகிழ்ந்தானைமதிற்கச்சிமன்னுகின்ற, கம்பனை யெங்கயிலாயமலையான்றன்னைக்கழுகினெடுகொகுத்தன்கருதி யேத்தும், நம்பனையெம்பெருமான்றன்னைநாரையூர்நன்னக ரிற்கண்டேனுனே. 4

தக்கனதுவேள்விகெடச்சாடினானைத்தலைகலனுப்பலி யேற்றதலைவன்றன்னைக்,கொக்கரைசச்சரிவீணைப்பாணியானை க்கோணுகம்பூணுகக்கொண்டான்றன்னை, அக்கினெடுமென் பணிந்தவழகன்றன்னை யறுமுகனே டானைமுகற்கன்பன்றன் னை,நக்கனைவக்கரையானை நள்ளாற்ருனை நாரையூர்நன்னகரிற் கண்டேனுனே. 7

திருச்சிற்றம்பலம்.

---

**திருநாரையூர்.**— இது நாரை பூசித்தகாரணத்தால் இப்பெ யரெய்தியது; திருத்தொண்டர் திருவந்தாதி செய்தருளிய நம்பியா ண்டார் நம்பிகள் திருவவதாரஸ்தலம்; இவர் மூலமாய் உலகத்துக் குத் திருமுறைகளை வெளிப்படுத்திய சுயம்பு மூர்த்தியாகிய பொல் லாப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் திருப்பதி. சுவாமி-சௌந்த ரேசுரர் தேவியார்-திரிபுரசுந்தரி. இதற்குத் திருப்பதிகம். ரு

இத்தலம் சிதம்பரத்துக்குத் தென்மேற்கே மட்சாலையில் 10 மைலில் உள்ளது. வைத்தீச்சுரன் கோவில் ஸ்டேஷனிலிருந்து திரு வோமாம்புலியூர் திருநாரையூர் திருக்கடம்பூர் வழியாகவும்செல்லலாம்.

# ௬௪. திருக்கடம்பூர்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-காந்தாரம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானமர்திங்களுநீருமருவியவார்சடையானைத்
தேனமர்கொன்றையினானைத்தேவர்தொழப்படுவானைக்
கானமரும்பிணைபுல்கிக்கலைபயிலுங்கடம்பூரில்
தானமர்கொள்கையினானைத்தாடொழவீடெளிதாமே. 1

அரவினொடாமையும்பூண்டுவெந்துகில்வேங்கையதளும்
விரவுந்திருமுடிதன்மேல்வெண்டிங்கள்சூடிவிரும்பிப்
பரவுந்தனிக்கடம்பூரிற்பைங்கண்வெள்ளேற்றண்ணல்பாதம்
இரவும்பகலும்பணியவின்பநமக்கதுவாமே. 2

விடைநவிலுங்கொடியானைவெண்கொடிசேர்நெடுமாடம்
கடைநவிலுங்கடம்பூரிற்காதலனைக்கடற்காழி
நடைநவின்ஞானசம்பந்தனன்மையாலேத்தியபத்தும்
படைநவில்பாடல்பயில்வார்பழியொடுபாவமிலாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தளருங்கோளரவத்தொடுதண்மதி
வளருங்கோலவளர்சடையார்க்கிடம்
கிளரும்பேரிசைக்கின்னரம்பாட்டறாக்
களருங்கார்க்கடம்பூர்க்கரக்கோயிலே. 1

நங்கடம்பனைப்பெற்றவள்பங்கினன்
தென்கடம்பைத்திருக்கரக்கோயிலான்
தன்கடனடியேனையுந்தாங்குதல்
என்கடன்பணிசெய்துகிடப்பதே. 9

வரைக்கணுலேஞ்சுதோளுடையான்றலை
அரைக்கவூன்றியருள்செய்தவீசனுர்
திரைக்குந்தண்புனல்சூழ்கரக்கோயிலை
உரைக்குமுள்ளத்தவர்வினையோயுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கடம்பூர்—இது "மேலைக்கடம்பூர்"என்றுவழங்கும். இத்தலத்தில் தேவேந்திரன் வழிபட்டு ஆலயத்தினைத் தன்னுலகம் கொண்டுபோக எண்ணிப்பாதளம்வரை தனது கரத்தால் அகழ்ந்து ஊடுருவிச் செல்வதுகண்டு பழயபடி யமைத்துப் பூசித்தான். இது பற்றி இவ்வாலயம் கரக்கோயில் என்னப்பட்டது. ஸ்ரீவாசகத்தில் ஸ்ரீமன் மணிவாசக மூர்த்திகளும் "கடம்பூர்தன்னில் இடம்பெற விருந்தும்" என இதனைப் பாராட்டினுர்கள். சுவாமி-அமிர்தகடேசர், தேவியார்-சோதிமின்னம்மை. இதற்குப் பதிகம் ௩

இத்தலம் 31-வது திருவோமாம் புலியூரினின்றும் வடமேற்கே மட்சாலையில் நான்குமைலில் உள்ளது.

---

## ௩௫. திருப்பந்தணைநல்லூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண்-புறநீர்மை. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

இடறினுர்கூற்றைப்பொடிசெய்தார் மதிலையிவைசொல் வியுலகெழுந்தேத்தக், கடறினாவர்காற்றுளாராவர்காதலித்துறைதருகோயில், கொடிறனுர்யாதுங்குறைவிலார்தாம் போய்க்கோவணங்கொண்டுகூத்தாடும், படிறனுர்போலும் பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. க

கழியுளாரெனவுங்கடலுளாரெனவுங்காட்டுளார்நாட்டுளாரெனவும், வழியுளாரெனவுமலையுளாரெனவுமண்ணுளார் விண்ணுளாரெனவும், சுழியுளாரெனவுஞ்சுவடுதாமறியார் தொண்டர்வாய்வந்தனசொல்லும், பழியுளார்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. 2

கல்லிசைபூணக்கலையொலியோவாக்கழுமலமுதுபதி தன்னில், நல்லிசையாளன்புல்லிசைகேளாநற்றமிழ்ஞானசம் பந்தன், பல்லிசைபகுவாய்ப்படுதலையேந்திமேவியபந்தணை நல்லூர், சொல்லியபாடல்பத்தும்வல்லவர்மேற்றொல்வினை சூழகிலாவே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனர்.

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நோதங்கமில்லாதார்நாகம்பூண்டார்நூல்பூண்டார்நூன் மேலோராமைபூண்டார், பேய்தங்குநீள்காட்டினட்டமாடிப்பி றைசூடுஞ்சடைமேலோர்புனலுஞ்சூடி, ஆதங்குழைபங்குழ லாள்பாகங்கொண்டாரனல்கொண்டாரந்திவாய்வண்ணங்கொ ண்டார், பாதங்கணீரேற்றார்பைங்கணேற்றார்பலியேற்றார்பந் தணைநல்லூராரே. 1

திருச்சிற்றம்பலம்.

---

**திருப்பந்தணை நல்லூர்:**—இது அம்பிகை யாடிய பந்து அணைந்த காரணம் பற்றி இப் பெயரெய்தியது; தேவகன்னியரும், தேவப்பசு முதலியவும் பூசித்தது. சுவாமி-பசுபதீச்சுரர், தேவியார் காம்பன்னதோளியார், விருக்ஷம் கொன்றை. இதற்குப்பதிகம் 2.

இத்தலம் குற்றாலம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே ஒன்றே முக்கால் மைலில் காவிரிக்கு வடகரையில் உள்ள மஞ்சிவாய்க்கால் பாலத்தினின்றும் வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் நாலரை மைலில் உள்ளது.

---

# ௩௯. திருக்கஞ்சனூர்.

## திருநாவுக்கரசு நாயனர்.

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மூவிலைவேற்சூலம்வலனேந்தினானைமூன்றுசுடர்க்கண்ணு னைமூர்த்திதன்னை, நாவலனைநரைவிடையொன்றேறுவானை

நால்வேதமாறங்கமாயினானை, ஆவினிலைந்துகந்தானையமரர் கோவையயன்றிருமாலானானையனலோன்போற்றுங், காவலனைக்கஞ்சனூராண்டகோவைக்கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. 1

மடலாழித்தாமரையாயிரத்திலொன்றுமலர்க்கணிடந்திடுதலுமேமலிவான்கோலச், சுடராழிநெடுமாலுக்கருள்செய்தானைத்தும்பியுரிபோர்த்தானைத்தோழன்விட்ட, வடலாழித்தேருடையவிலங்கைக்கோனை யருவரைக்கீழடர்த்தானை யருளார்கருணைக், கடலானைக்கஞ்சனூராண்டகோவைக்கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. 10

திருச்சிற்றம்பலம்.

**திருக்கஞ்சனூர்:**—இது கம்ஸனது நகரமானதுபற்றி கம்ஸபுரமென வழங்கும். இங்கு ஹரதத்த சிவாசாரியசுவாமிகள் திருவவதாரஞ்செய்து சிவசாந்நித்யராய் தப்த பீடத்திலிருந்து சைவஸ்தாபனஞ்செய்தருளினர். தலத்துக்கு மேற்கே தனியாலயத்தில் இவரும் இவருபாசித்த சிவலிங்க மூர்த்தியும் பிரதிஷ்டிக்கப் பெற்றிருக்கின்றனர்;பிரம்மதேவரும் அக்னியும் பூஜித்தது; "அனலோன் போற்றும்" என்னுங் குறிப்பு தேவாரத்தில் காண்க. சுவாமி-அக்னீச்சுரர், தேவியார்-கற்பகநாயகி, தீர்த்தம்-அக்னி தீர்த்தம், இத்தலத்தில் நடராஜ சிவகாமசுந்தரி மூர்த்தங்கள் சிலா மூர்த்தங்களாக உள்ளன. இதற்குப் பதிகம். 1.

இது நரசிங்கன் பேட்டை ஸ்டேஷனிலிருந்து வடக்கே காவிரிக்கு வடகரையில் ஒரு மைலில் உள்ளது. இங்கு ஆற்றைக் கடக்கப் பரிசலுண்டு.

## ௩௭ திருக்கோடிகா.

### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

திருவிராகம். பண்-நட்டராகம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

இன்றுநன்றுநாளைநன்றென்றுநின்றவிச்சையால்
பொன்றுகின்றவாழ்க்கையைப்போகவிட்டுப்போதுமின்
மின்றயங்குசோதியான்வெண்மதிவிரிபுனற்
கொன்றைதுன்றுசென்னியான்கோடிகாவுசேர்மினே. 1

அல்லன்மிக்கவாழ்க்கையையாதரித்திராதுநீர்
நல்லதோர்நெறியினைநாடுதுங்கடம்மினோ
வில்லையன்னவாணுதல்வெள்வளையோர்பாகமாம்
கொல்லைவெள்ளையேற்றினான்கோடிகாவுசேர்மினே. 2

முன்னைநீர்செய்பாவத்தான்மூர்த்திபாதஞ்சிந்தியா
தின்னநீரிடும்பையின்மூழ்கிநீரெழும்மினோ
பொன்னைவென்றகொன்றையான்பூதம்பாடவாடலான்
கொன்னவிலும்வேலினான்கோடிகாவுசேர்மினே. 5

கொந்தணிகுளிர்பொழிற்கோடிகாவுமேவிய
செந்தழலுருவனைச்சீர்மிகுதிறலுடை
யந்தணர்புகலியுளாயகேள்விஞானசம்
பந்தனதமிழ்வல்லார்பாவமானபாறுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்

### திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சங்குலாமுன்கைத்தையலோர்பாகத்தன்
வெங்குலாமதவேழம்வெகுண்டவன்
கொங்குலாம்பொழிற்கோடிகாவாவென
எங்கிலாததோரின்பம்வந்தெய்துமே. 1

வாடிவாழ்வதென்னாவதுமாதர்பால்
ஓடிவாழ்வினையுள்கிநீர்நாடொறும்
கோடிகாவனைக்கூறீரேற்கூறினேன்
பாடிகாவலிற்பட்டுக்கழிதிரே. 2

நாடிநாரணனான்முகன்வானவர்
தேடியேசறவுந்தெரியாததோர்
கோடிகாவனைக்கூறாதநாளெலாம்
பாடிகாவலிற்பட்டுக்கழியுமே. 6

வரங்களால்வரையையெடுத்தான்றனை
அரங்கவூன்றியருள்செய்தவப்பனூர்
குரங்குசேர்பொழிற்கோடிகாவாவென
இரங்குவேன்மனத்தேதங்கடராவே. 10

திருச்சிற்றம்பலம்.

திருக்கோடிகா:— இது திரிகோடி அதாவது மூன்று கோடி ருஷிகள் பூசித்த காரணத்தால் இப்பெயரெய்தியது. சுவாமி-கோடிகாவீசுரர், தேவியார்-வடிவம்மை, தீர்த்தம் - சிருங்கதீர்த்தம். இதற்குப் பதிகம். 4.

இத்தலம் திருக்கஞ்சனூரினின்றும் கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 2-மைலில் உள்ளது.

## ௩அ. திருமங்கலக்குடி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சீரினார்மணியுமகில்சந்துஞ்செறிவரை
வாரிநீர்வருபொன்னிவடமங்கலக்குடி
நீரின்மாமுனிவன்னெடுங்கைகொடுநீர்தனைப்
பூரித்தாட்டியர்ச்சிக்கவிருந்தபுராணனே. 1

பணங்கொளாடரவல்குனல்லார்பயின்றேத்தவே
மணங்கொண்மாமயிலாலும்பொழின்மங்கலக்குடி
இணங்கிலாமறையோரிமையோர்தொழுதேத்திட
அணங்கினோடிருந்தானடியேசரணாகுமே. 2

மந்தமாம்பொழில்சூழ்மங்கலக்குடிமன்னிய
எந்தையையெழிலார்பொழிற்காழியர்காவலன்
சிந்தைசெய்தடிசேர்த்திடுஞானசம்பந்தன்சொல்
முந்தியேத்தவல்லாரிமையோர்முதலாவரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தங்கலப்பிய தக்கன்பெருவேள்வி
அங்கலக்கழித் தாருள்செய்தவன்
கொங்கலர்க்குழற் கொம்பனையாளொடு
மங்கலக்குடிமேயமணாளனே. 1

மங்கலக்குடியீசனைமாகாளி
வெங்கதிர்ச்செல்வன்விண்ணொடுமண்ணுநேர்
சங்குசக்கரதாரிசதுர்முகன்
அங்ககத்தியனும்மர்ச்சித்தாரன்றே. 3

மங்கலக்குடியான்கயிலைம்மலை
அங்கலைத்தெடுக்குற்றவரக்கர்கோன்
தன்கரத்தொடுதாடலைதோடகர்ந்
தங்கலைத்தழுதுய்ந்தனன்றானன்றே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திரு மங்கலக்குடி:—இத்தலத்தில் காளி, சூரியன், விட்டுணு, பிரம்மதேவர், அகஸ்தியர் என்னும் இவர்கள் பூசித்து வழிபட்டன ரென்பது ஸ்ரீ வாகீச மூர்த்திகளது திருக்குறுந்தொகையாற் காண்கிறது. அன்றியும், இங்கு அரசனிடம் தண்டலாளரான ஒரு சிவனடியார் அரசன் தண்டற்பணத்தைத் திருப்பணிக்கு விநியோகித்து அரசன் கேட்டபோது பயந்து உயிர் துறந்துவிட இவர்மனைவியார் ஸ்ரீ மங்களநாயகியைவழிபட்டுத்தம் நாயகனைப் பிழைப்பித்தார். சுவாமி-புராணேசுரர், தேவியார்-மங்களநாயகி, இதற்குப் பதிகம். 2.

இத்தலம் ஆடுதுரை ஸ்டேஷனுக்கு வடக்கே இரண்டரை மைலில் வடகரையிலுள்ளது. காவிரிக்குப் பாலம் உண்டு.

# ௩௬. திருப்பனந்தாள்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-பஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கண்பொலிநெற்றியினான்றிகழ்கையிலோர்வெண்மழுவான்
பெண்புணர்கூறுடையான்மிகுபீடுடைமால்விடையான்
விண்பொலிமாமதிசேர்தருசெஞ்சடைவேதியனார்
தண்பொழில்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. 1

விரித்தவனான்மறையைமிக்கவிண்ணவர்வந்திறைஞ்ச
எரித்தவன்முப்புரங்களியலேழுலகில்லுயிரும்
பிரித்தவன்செஞ்சடைமேனிறைபேரொலிவெள்ளந்தன்னைத்
தரித்தவனார்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. 2

தண்வயல்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரத்துக்
கண்ணயலேபிறையானவன்றன்னைமுன்காழியர்கோன்
நண்ணியசெந்தமிழான்மிகுஞானசம்பந்தனல்ல
பண்ணியல்பாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பனந்தாள்:— இத்தலத்து ஆலயம் தாடகை பூசித்த காரணத்தால் "திருத் தாடகையீச்சரம்" எனவழங்கும். தாடகையம்மை அருச்சித்து வழிபடுங் காலையில் உடுத்திருந்த வஸ்திரம் நெகிழ்ந்துவிடவும் அருச்சித்தலை நிறுத்தி யாடையையுடுக்க அஞ்சி நிற்கையில் சிவபெருமான் இவரது அன்புக்கிரங்கித் திருமுடி சாய்த்தருளினார். பிறகு சோழராஜா சிவலிங்கப்பெருமானை நிமிரச்செய்து தரிசிக்க விரும்பித் தன் ஆனை சேனை முதலிய எல்லாம் பூட்டி ஈர்க்கவும் நிமிராதிருக்கின்ற செய்தியைத் திருக்கடவூரினின்றும் போந்த குங்கிலியக்கலயநாயனார் அக்கயிற்றினைத் தங்கழுத்தில்மாட்டி யிழுத்து நிமிரச்செய்து தரிசித்து அரசனையும் உவகையெய்துவித்தார். ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகளால் ஸ்தாபிக்கப் பெற்ற மிக்க பிரசித்தியும் மகிமையும் உள்ள காசிமடம் இவ்விடம் உண்டு. சுவாமி-சடையப்பர் தேவியார்- பெரியநாயகி, விருக்ஷம் - பனை, தீர்த்தம் - பொய்கை மேற்கு நோக்கிய சந்நிதி.

இத்தலம் ஆடுதுறை ஸ்டேஷனிலிருந்து வடக்கே எழுமைலில் உள்ளது.

---

## ௪௰. திருவாப்பாடி.

### திருநாவுக்கரசு நாயனார்.

திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கடலகமேழினொடும்புவனமுங்கலந்தவிண்ணும்
உடலகத்துயிரும்பாருமொள்ளழலாகிநின்று
தடமலர்க்கந்தமாலைதண்மதிபகலுமாகி
மடலவிழ்கொன்றைசூடிமன்னுமாப்பாடியாரே. 1
திண்டிறலரக்கனோடிச்சீகயிலாயந்தன்னை
எண்டிறலிலனுமாகியெடுத்தலுமேழையஞ்ச
விண்டிறனெரியவூன்றிமிகக்கடுத்தலறிவீழப்
பண்டிறல்கேட்டுகந்தபரமராப்பாடியாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருவாப்பாடி:**—இது சண்டேசுர நாயனார் ஆனிரைகளை மேய்த்துச் சிவபூஜை செய்த இடம். இதனைப் பதிகத்து நாலாந் திருப்பாட்டிற்காண்க. இங்கு தினந்தோறும் காலிடறி வீழ்ந்து பாற்குடம் கவிழப்பெற்ற ஆயன் ஒருவன் ஓர்நாள் வாளினாலெறிய சுவாமி வெளிப்பட்டகாரணத்தால் சுவாமிக்குப்பாலுகந்த நாதரெனத் திருநாமம் வழங்கியதெனச் சரித்ரம் கூறுவர். சுவாமி-பாலுகந்த நாதர், தேவியார்-பெரியநாயகி, தீர்த்தம்-மண்ணியாறு-விருக்ஷம்-திருவாத்தி

இத்தலம் திருப்பனந்தாளினின்றும் மேற்கே மட்சாலை மார்க்கமாய் ஒன்றரை மைலில் உள்ளது.

---

## ௪௧. திருச்சேய்ஞலூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பழந்தக்கராகம். ௧-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நூலடைந்தகொள்கையாலேநன்னடிகூடுதற்கு
மாலடைந்தநால்வர்கேட்கநல்கியநல்லறத்தை

ஆலடைந்தநீழன்மேவியருமறைசொன்னதென்னே
சேலடைந்ததண்கழனிச்சேய்ஞலூர்மேயவனே. 1
பீரடைந்தபாலதாட்டப்பேணாதவன்றாதை
வேரடைந்துபாய்ந்ததாளைவேர்த்தடிந்தான்றனக்குத்
தாரடைந்தமாலைசூட்டித்தலைமைவகுத்ததென்னே
சீரடைந்தகோயின்மல்குசேய்ஞலூர்மேயவனே. 7
சேயடைந்தசேய்ஞலூரிற்செல்வனசீர்பரவித்
தோயடைந்ததண்வயல்சூழ்தோணிபுரத்தலைவன்
சாயடைந்தஞானமல்குசம்பந்தனின்னுரைகள்
வாயடைந்துபாடவல்லார்வானுலகாள்பவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சேய்ஞலூர்:—இது சூரசம்மாரத்தின் பொருட்டு எழுந்தருளிய காலத்தில் முருகக்கடவுள் நல்ல ஊர் என்று கண்டு தங்கி சிவபூஜை செய்த இடமாதலின் இப்பெயரெய்தியது; சண்டேசுர நாயனார் திருவவதாரஞ் செய்து அநுக்ரகமடைந்த தலம், இவற்றைப் பதிகத்து ௧௧-ந் திருப்பாட்டிலும், ௭-ந் திருப்பாட்டிலும் முறையே காண்க. இத்தலத்திற்குத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் எழுந்தருளியபோது சண்டேசுர நாயனார் திருவவதாரஞ் செய்தருளிய தலமென்று முத்துச்சிவிகையினின்றும் இறங்கி நடந்து சென்று வழிபட்டருளினர். சுவாமி-சத்தகிரீசுரர், தேவியார்-சகி தேவியார், தீர்த்தம்-மண்ணி.

இத்தலம் திருவாப்பாடியினின்றும் தெற்கே அரைமைலில் உள்ளது.

---

## ௪௨. திருந்துதேவன்குடி.

### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-கொல்லி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மருந்துவேண்டில்லிவைமந்திரங்கள்ளிவை
புரிந்துகேட்கப்படும்புண்ணியங்கள்ளிவை
திருந்துதேவன்குடித்தேவர்தேவெய்திய
அருந்தவத்தோர்தொழுமடிகள்வேடங்களே. 1

வீதிபோக்காவனவினையைவீட்டுவ்வன
ஓதியோர்க்கப்படாப்பொருளையோர்விப்பன
தீதிறேவன்குடித்தேவர்தேவெய்திய
ஆதியந்தம்மிலாவடிகள்வேடங்களே. 2

சேடர்தேவன்குடித்தேவர்தேவன்றனை
மாடமோங்கும்பொழின்மல்குதண்காழியான்
நாடவல்லதமிழ்ஞானசம்பந்தன
பாடல்பத்தும்வல்லார்க்கில்லைபாம்பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருந்து தேவன்குடி:—இது வயல்மத்தியில் வீடுவாயில்கள் இன்றி ஆலயமாத்திரமாய் இருக்கின்றது. ஆலயத்தைச்சுற்றி மூன்று பக்கத்தும் ஒரு தீர்த்தம் அகழ் போன்றிருக்கின்றது. நண்டு பூசித்துப் பேறுபெற்றதலம். சுவாமியின் முடியில் நண்டு உருவம் காணப்படுகிறது. இத்தலத்து இரண்டு அம்பாள் சந்நிதிகள் உண்டு. சுவாமி-கர்க்கடகேசுவரர், தேவியார்-அருமருந்தம்மை.

இத்தலம் 43-வது திருவியலூருக்கு வடக்கே வறப்புவழியாய் ஒரு மைலில் உள்ளது. மழைக்காலத்தில் செல்வது கஷ்டம்.

---

## சசு. திருவியலூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

குரவங்கமழ்நறுமென்குழலரிவையவள்வெருவப்
பொருவெங்கரிபடவென்றதனுரிவையுடலணிவோன்
அரவும்மலைபுனலும்மிளமதியுந்நகுதலையும்
விரவுஞ்சடையடிகட்கிடம்விரிநீர்வியலூரே. 1

ஏரூர்தருமொருவன்பலவுருவன்னிலையானான்
ஆரூர்தருசடையன்னனலுருவன்புரியுடையான்
மாரூர்புரமெரியச்சிலைவளைவித்தவன்மடவாள்
வீரூர்தரநின்றானிடம்விரிநீர்வியலூரே. 2

விளங்கும்பிறைசடைமேலுடைவிகிர்தன்வியலூரைத்
தளங்கொண்டதொர்புகலித்தகுதமிழ்ஞானசம்பந்தன்
றுளங்கிறமிழ்பாவித்தொழுமடியாரவரென்றும்
விளங்கும்புகழதனோடுயர்விண்ணும்முடையாரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருவியலூர்:—இது பண்டாரவாடைத் திருவிச நல்லூர் என்று வழங்கப் பெறும். சுவாமி-யோகாநந்தேசுரர், தேவியார்-சாந்தநாயகி, இதற்குப் பதிகம் 1.

இத்தலம் திருவிடைமருதூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே வேப்பத்தூர் மட்சாலை மார்க்கமாய் நான்கு மைலில் உள்ளது

## சச. திருக்கொட்டையூர்.

### திருநாவுக்கரசு நாயனர்.

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கருமணிபோற் கண்டத்தழகன் கண்டாய் கல்லானிழற் கீழிருந்தான் கண்டாய், பருமணிமாநாகம்பூண்டான்கண்டாய் பவளக்குன்றன்னபரமன்கண்டாய், வருமணிநீர்ப்பொன்னி வலஞ்சுழியான்கண்டாய் மாதேவன்கண்டாய்வாதன்கண்டாய், குருமணிபோலழகமருங் கொட்டையூரிற் கோடீச்சரத் துறையுங்கோமான்றனே. 1

தளங்கிளருந் தாமரையாதனத்தான்கண்டாய் தசரதன்றன்மகனசைவு தவிர்த்தான்கண்டாய், இளம்பிறையுமுதிர் சடைமேல்வைத்தான்கண்டா யெட்டெட்டிருங்கலையுமானான் கண்டாய்,வளங்கிளர்நீர்ப் பொன்னிவலஞ்சுழியான்கண்டாய் மாமுனிகட்டொழுதெழுபொற் கழலான்கண்டாய்,குளங்கிளர் செங்குவளைகிளர் கொட்டையூரிற் கோடீச்சரத்துறையுங் கோமான்றனே. 9

திருச்சிற்றம்பலம்.

திருக்கொட்டையூர்:— கொட்டை (ஆமணக்கு) விருக்ஷம் ஸ்தல விருக்ஷ மாதல்பற்றி இப்பெய ரெய்தியது. சோழனுக்கு சுவாமி திருமேனியில் கோடிலிங்க தரிசனஞ் செய்வித்தமையின் ஆல

யம் கோடீச்சுரம் எனவழங்கும். எண்டர் அனுக்ரகம் பெற்ற தலம். மார்க்கண்ட முனிவரும் பூசித்துள்ளார். சுவாமி-கோடீச்சுரர், தேவியார்-பந்தாடு நாயகி. இதற்குப் பதிகம். 1

இத்தலம் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே காவிரிக்கு வடகரை சுவாமி மலை கற்சாலை மார்க்கமாய் மூன் றுமைலில் உள்ளது.

## சரு. திருஇன்னம்பர்.

### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர்

பண்-சாதாரி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எண்டிசைக்கும்புகழின்னம்பர்மேவிய
வண்டிசைக்குஞ்சடையீரே
வண்டிசைக்குஞ்சடையீருமைவாழ்த்துவார்
தொண்டிசைக்குந்தொழிலோரே. 1

யாழ்நரம்பின்னிசையின்னம்பர்மேவிய
தாழ்தருசடைமுடியீரே
தாழ்தருசடைமுடியீருமைச்சார்பவர்
ஆழ்துயாருவினையிலரே. 2

ஏடமர்பொழிலணியின்னம்பரீசனை
நாடமர்ஞானசம்பந்தன்
நாடமர்ஞானசம்பந்தனதற்றமிழ்
பாடவல்லார்பழியிலரே. 11

திருச்சிற்றம்பலம்.

### திருநாவுக்கரசுநாயனர்.

திருவிருத்தம். ச-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மன்னுமலைமகள்கையால்வருடினமாமறைகள்
சொன்னதுறைதொறுந்தூப்பொருளாயினதூக்கமலத்
தன்னவடிவினவன்புடைத்தொண்டர்க்கமுதருத்தி
இன்னல்களைவனவின்னம்பாரான்றனிணையடியே. 1

போற்றுந்தகையனபொல்லாமுயலகன்கோபப்புன்மை
ஆற்றுந்தகையனவாறுசமயத்தவரவரைத்

தேற்றுந்தகையனதேறியதொண்டரைச்செந்நெறிக்கே
எற்றுந்தகையனவின்னம்பரான்றனிணையடியே. 7
பயம்புன்மைசேர்தருபாவந்தவிர்ப்பனபார்ப்பதிதன்
குயம்பொன்மைமாமலராகக்குலாவினகூடவொண்ணாச்
சயம்புவென்றேதகுதாணுவென்றேசதுர்வேதங்கணின்
றியம்புங்கழலினவின்னம்பரான்றனிணையடியே. 8

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்குறுந்தொகை. ௫-ந்திருமுறை

திருச்சிற்றம்பலம்.

என்னிலாருமெனக்கினியாரில்லை
என்னிலும்மினியானொருவன்னுளன்
என்னுளேயுயிர்ப்பாய்ப்புறம்போந்துபுக்
கென்னுளேநிற்குமின்னம்பரீசனே. 1
தொழுதுதூமலர்தூவித்துதித்துநின்
றழுதுகாமுற்றரற்றுகின்றாரையும்
பொழுதுபோக்கிப்புறக்கணிப்பாரையும்
மெழுதுங்கீழ்க்கணக்கின்னம்பரீசனே. 8
சனியும்வெள்ளியுந்திங்களுஞாயிறும்
முனிவனாய்முடிபத்துடையான்றனைக்
கனியவூன்றியகாரணமென்கொலோ
இனியனாய்நின்றவின்னம்பரீசனே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அல்லிமலர் நாற்றத்துள்ளார்போலு மன்புடையார்சிந்தையகலார்போலும், சொல்லினருமறைகடாமேபோலுந்தூநெறிக்குவழிகாட்டுந் தொழிலார்போலும், வில்லிற்புரமூன்றெரித்தார்போலும் வீங்கிருளு நல்வெளியுமானார்போலும், எல்லிநடமாட வல்லார்போலு மின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. 1

கோழிக்கொடியோன்றன்றாதைபோலுங் கொம்பனாள் பாகங்குளிர்ந்தார்போலும், ஊழிமுதல்வருந்தாமேபோலு முள்குவாருள்ளத்தினுள்ளார்போலும், ஆழித்தேர்வித்தக ருந்தாமேபோலு மடைந்தவர்கட்கன்பராய்நின்றார்போலும் எழுபிறவிக்குந்தாமேபோலு மின்னம்பர்த்தான்றோன்றியீச னாரே. 2

திருச்சிற்றம்பலம்.

---

திருவின்னம்பர்:—இது இன்னம்பூர் என்று வழங்கும்; சூரியன் (இனன்) அகஸ்தியர், ஐராவதம் முதலியோர் பூசித்தது; இனன் நம்பூர் என்பது இன்னம்பர் எனமருவிய தென்பர். சுவாமி எழுத்தறிந்த நாதர், தேவியார்-பூங்கோம்புநாயகி, தீர்த்தம்-ஐராவத தீர்த்தம். இதற்குப் பதிகம் 5.

இத்தலம் திருக்கொட்டையூரினின்றும் வடமேற்கே மட்சாலை யில் ஒன்றரை மைலில் உள்ளது.

---

# சசு. திருப்புறம்பயம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மறம்பயமலைந்தவர்மதிற்பரிசறுத்தனை
நிறம்பசுமைசெம்மையொடிசைந்துனதுநீர்மை
திறம்பயனுறும்பொருடெரிந்துணருநால்வர்க்
கறம்பபனுரைத்தனைபுறம்பயமமர்ந்தோய். 1

விரிந்தனைகுவிந்தனைவிழுங்குயிருமிழ்ந்தனை
திரிந்தனைகுருந்தொசிபெருந்தகையுநீயும்
பிரிந்தனைபுணர்ந்தனைபிணம்புகுமயானம்
புரிந்தனைமகிழ்ந்தனைபுறம்பயமமர்ந்தோய். 3

கருங்கழிபொருந்திரைகரைக்குலவுமுத்தம்
தருங்கழுமலத்திறைதமிழ்க்கிழமைஞானன்

சுரும்பவிழ்புறம்பயமமர்ந்ததமிழ்வல்லார்
பெரும்பிணிமருங்கறவொருங்குவர்பிறப்பே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொடிமாடநீடெருவுகூடல் கோட்டூர் கொடுங்கோளூர் தண்வளவிகண்டியூரும், நடமாடுநன்மருகல்வைகிநாளு நலமாகுமொற்றியூரொற்றியாகப், படுமாலைவண்டறையும் பழனம் பாசூர் பழையாறும்பாற்குளமுங்கைவிட்டிந்நாள், பொடியேறுமேனியராய்ப்பூதஞ்சூழப் புறம்பயநம்மூரென்று போயினாரே. 1

செத்தவர்தந்தலைமாலை கையிலேந்திச் சிரமாலைசூடிச் சிவந்தமேனி, மத்தகத்தயானையுரிவைமூடி மடவாளவளோடு மானொன்றேந்தி, அத்தவத்ததேவரறுபதின்மராறுநூறாயிரவர்க்காடல்காட்டிப், புத்தகங்கைக்கொண்டுபுலித்தோல்வீக்கிப் புறம்பயநம்மூரென்றுபோயினாரே. 5

கோவாயவிந்திரனுள்ளிட்டாராகக் குமரனும் விக்கினவிநாயகனும்,பூவாயபீடத்துமேலயனும் பூமியளந்தானும் போற்றிசைப்பப், பாவாயவின்னிசைகள் பாடியாடிப் பாரிடமுந்தாமும்பரந்துபற்றிப், பூவார்ந்தகொன்றைபொறிவண்டார்க்கப் புறம்பயநம்மூரென்றுபோயினாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

### பண்-கொல்லி ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அங்கமோதியோராறைமேற்றளிநின்றும்போந்துவந்தின்னம்பர்த், தங்கினோமையு மின்னதென்றிலரீசனாரெழுநெஞ்சமே, கங்குலேமக்கள்கொண்டுதேவர்களேத்திவானவ

தான்றொழும், பொங்குமால்விடையேறிசெல்வப்புறம்பயந் தொழப்போதுமே. 1

பதியுஞ்சுற்றமும்பெற்றமக்களும்பண்டையாரல்லர்பெண்டிரும், நிதியிலிம்மனைவாழும்வாழ்க்கையுநினைப்பொழிமடநெஞ்சமே, மதியஞ்சேர்சடைக்கங்கையானிடம்மகிழுமல்லிகைசெண்பகம், புதியபூமலர்ந்தெல்லிநாறும்புறம்பயந்தொழப்போதுமே. 2

துஞ்சியும்பிறந்துஞ்சிறந்துந் துயக்கறாதமயக்கிவை, அஞ்சியூரன்திருப்புறம்பயத்தப்பனைத்தமிழ்ச்சீரினால், நெஞ்சினாலேபுறம்பயந்தொழுதுய்துமென்றுநினைத்தன, வஞ்சியாதுரைசெய்யவல்லவர்வல்லவானுலகாள்வரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருப்புறம்பயம்:— இது பிரளய வெள்ளம் உள்ளே பிரவேசிக்காமல் வெளியில் நின்றமையின் இப்பெயரெய்தியது (புறம் வெளி, பயம்-ஜலம்) பிரளயங்காத்த பிள்ளையார் என்னும் விநாயகர் திருநாமமும் இதனை வலியுறுத்தும். வைப்பூரினின்றும் தன்னை வாக்குப்பெற்ற கணவனோடு தன் பெற்றோரைத்துறந்து வந்த வைஸ்யப் பெண் பாம்புகடித்திறந்த தன் கணவனைத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரால் கிடைத்து விவாகஞ்செய்து கொண்டதலம். இது திருவிளையாடற் புராணக்கதை. திருத்தொண்டர் புராணத்து இது நிகழ்ந்தது திருமருகலென்று கூறப்பட்டது. இப் பெண்ணுக்குச் சாக்ஷி சொன்ன காரணமாக சுவாமி-சாக்ஷி நாதராயினர், தேவியார் கரும்படு சொல்லன்னம், ஞானசம்பந்தர் 5-ந்திருப்பாட்டிற் குறிப்புக் காண்க. இத்தலத்தில் பரமசிவன் ஸநகாதியர்களுக்குத் தர்மோபதேசம் செய்தருளின ரென்பது "திறம்பயனுறும் பொருடெரிந்துணரு நால்வர்க் கறம்பயனுரைத்தனை" என்பதனாலறியக் கிடக்கும். இச்சரித்ரமே "புறம்பய மதனிலறம் பலவருளியும்" என்னுந் திருவாசகத்தானும் தெரியவரும். சந்நிதிக்குக் கிழக்கே தீர்த்தக்கரையில் எழுந்தருளியுள்ள குருமூர்த்தமே இவ்வுபதேச மூர்த்திபோலும். திருமடைப்பள்ளிக்கு விறகு கொணர்ந்த பஞ்சம அடியருக்கு அனுக்கிரகிக்க எழுந்தருளியதென்று கர்ணபரம்பரை. இதற்குத் தேவாரம். 3

இத்தலம் திருவின்னம்பரி னின்று வடமேற்கே மட்சாலையில் இரண்டு மைலில் உள்ளது.

## சஎ. திருவிசயமங்கை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மருவமர்குழலுமைபங்கர்வார்சடை
அரவமர்கொள்கையெம்மடிகள்கோயிலாம்
குரவமர்சுரபுன்னைகோங்குவேங்கைகள்
விரவியபொழிலணிவிசயமங்கையே. 1

கீதமுன்னிசைதரக்கிளரும்வீணையர்
பூதமுன்னியல்புடைப்புனிதர்பொன்னகர்
கோதனம்வழிபடக்குலவுநான்மறை
வேதியர்தொழுதெழுவிசயமங்கையே. 2

விண்ணவர்தொழுதெழுவிசயமங்கையை
நண்ணியபுகலியுண்ஞானசம்பந்தன்
புண்ணியசெந்தமிழ்பத்தும்வல்லவர்
விண்ணவர்சிவகதிபுகுதனிண்ணமே. 11

திருச்சிற்றம்பலம்.

### திருநாவுக்கரசு நாயனர்

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

குசையுமங்கையிற்கோசமுங்கொண்டவவ்
வசையின்மங்கலவாசகர்வாழ்த்தவே
இசையமங்கையுந்தானுமொன்றாயினன்
விசையமங்கையில்வேதியன்காண்மினே. 1

கொள்ளிடக்கரைக்கோவந்தபுத்தூரில்
வெள்விடைக்கருள்செய்விசயமங்கை

உள்ளிடத் துறைகின்றவுருத்திரன்
கிள்ளிடத்தலையற்றதயனுக்கே. 8

பாண்டுவின்மகன்பார்த்தன்பணிசெய்து
வேண்டுநல்வரங்கொள்விசயமங்கை
ஆண்டவன்னடியேநினைந்தாசையால்
காண்டலேகருத்தாகியிருப்பனே. 8

இலங்கைவேந்தனிருபதுதோளிற
விலங்கல்சேர்விரலான்விசயமங்கை
வலஞ்செய்வார்களும்வாழ்த்திசைப்பார்களும்
நலஞ்செய்வாரவர்நன்னெறிநாடியே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருவிஜயமங்கை:** இது அருச்சுனன் பூசித்தகாரணம் பற்றி இப்பெயரெய்தியது. இதனை எட்டாந் திருக்குறுந்தொகையிற்காண்க. கோதனம் (பசு) பூசித்துவழிபட்ட செய்தியினை ஞானசம்பந்தமூர்த்திகள் பதிகத்துச் சிறப்பித்திருக்கின்றார்கள். இதுவும் மூன்றாந்திருக்குறுந்தொகையிற் குறிப்பித்திருக்கிறது. சுவாமி விஜயநாதர், தேவியார் மங்கைநாயகி, அருச்சுனதீர்த்தம். இதற்குப்பதிகம்-2.

இத்தலம் திருப்புறம்பயத்தி னின்றும் மேற்கே மட்சாலை மார்க்கமாய் ஒருமைலில் உள்ளது.

---

## சஅ. திருவைகாவூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கோழைமிடறாககவிகோளுமிலவாகவிசைகூடும்வகையால்
ஏழையடியாரவர்கள்யாவைசொனசொன்மகிழுமீசனிடமாம்
தாழையிளநீர்முதிபகாய்கமுகின்வீழநிரைதாறுசிதறி
வாழையுதிர்வீழ்கனிகளூறிவயல்சேறுசெயும்வைகாவிலே.

அண்டமுறுமேருவரையங்கிகணைநாணரவதாகவெழிலார்
விண்டவர்தமுப்புரமெரித்தவிகிர்தன்னவன்விரும்புமிடமாம்

புண்டரிகமாமலர்கள்புக்குவிளையாடுவயல்சூழ்தடமெலாம்
வண்டினிசைபாடவழகார்குயின்மிழற்றுபொழில்வைகாவிலே
முற்றுநமையாளுடையமுக்கண்முதல்வன்றிருவைகாவிலதனைச்
செற்றமவினார்சிரபுரத்தலைவன் ஞானசம்பந்தனுரைசெய்
உற்றதமிழ்மாலையீரைந்துமிவைவல்லவருருத்திரரெனப்
பெற்றமரலோகமிகவாழ்வர்பிரியாரவர்பெரும்புகழொடே.

திருச்சிற்றம்பலம்.

---

**திருவைகாவூர்:** இங்கு ஓர் சிவராத்திரியில் புலிக்குப்பயந்து வில்வமரத்தேறிய வேடன் நித்திரை வாராமைப்பொருட்டு இரவெல்லாம் வில்வபத்ரத்தைப் பறித்துச் சிவலிங்கப்பெருமான் மீதிட்டுமுத்தியெய்தினன். சிவராத்ரி விசேடமாகக் கொண்டாடப் படுகிறது. சுவாமி வில்வவனநாதர், தேவியார் வளைக்கைநாயகி, கொன்றை விருக்ஷம், இயமதீர்த்தம். இதற்குப்பதிகம் 1.

இத்தலம் திருவிஜயமங்கையினின்றும் மேற்கே மட்சாலைமார்க்கமாய் ஒருமைலில் உள்ளது:

---

## சசு. திருவடகுரங்காடுதுறை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-சாதாரி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கோங்கமேகுரவமேகொழுமலர்ப்புன்னையேகொகுடிமுல்லை
வேங்கையேஞாழலேவிம்முபாதிரிகளேவிரவியெங்கும்
ஓங்குமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
வீங்குநீர்ச்சடைமுடியடிகளாரிடமெனவிரும்பினாரே. 1

கோலமாமலரொடுதூபமுஞ்சாந்தமுங்கொண்டுபோற்றி
வாலியார்வழிபடப்பொருந்தினார்திருந்துமாங்கனிகளுந்தி
ஆலுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
நீலமாமணிமிடற்றடிகளைநினையவல்வினைகள்வீடே. 7

தாழிளங்காவிரிவடகரையடைகுரங்காடுதுறைப்
போழிளமதிபொதிபுரிதருசடைமுடிப்புண்ணியனைக்
காழியானருமறைஞானசம்பந்தனகருதுபாடல்
கோழையாவழைப்பினுங்கூடுவார்நீடுவானுலகினூடே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருவடகுரங்காடுதுறை:** இது வாலிபூசித்துவழிபட்டகாரணத்தினால் இப்பெயரெய்தியது. இச்சரிதத்தை 6, 8ந்திருப்பாட்டுக்களிற்காண்க. இங்கு பூர்ணகர்ப்பிணியாய் வழிவருத்தத்துடனும் நீர்வேட்கையொடும் வந்த ஓர்பெண்ணுக்குச் சுவாமி தெங்கங்குலையை வணக்கி உதவியருளினரென்ப. இதனைச் சுவாமி திருப்பெயர்வற்புறுத்தும். சுவாமி குலைவணங்குநாதர், தேவியார் அழகுசடைமுடியம்மை. தீர்த்தம் காவிரி. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் அய்யம்பேட்டை ஸ்டேஷனுக்கு மேற்கே முக்கால் மைலில் உள்ள திருச்சக்கரப்பள்ளியினின்று மூன்றுமைலில் வடக்கே குடமுருட்டியினையும் காவிரியையும் பரிசினாற்கடந்து கணபதி அக்ரஹாரத்துக்குக் கிழக்கே அரைமைலில் உள்ளது.

---

# ௫०. திருப்பழனம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-தக்கேசி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார்புலியினுரிதோலார்
நாதாவெனவுநக்காவெனவுநம்பாவெனநின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே. 1

கண்மேற்கண்ணுஞ்சடைமேற்பிறையுமுடையார்காலனைப்
புண்ணாறுதிரமெதிராவோடப்பொன்றப்புறந்தாளால்
எண்ணாதுதைத்தவெந்தைபெருமானிமவான்மகளோடும்
பண்ணார்களிவண்டறைபூஞ்சோலைப்பழனநகராரே. 2

வேய்முத்தோங்கிவிரைமுன்பரக்கும்வேணுபுரந்தன்னுள்
நாவுய்த்தனையதிறலான்மிக்கஞானசம்பந்தன்
பேசற்கினியபாடல்பயிலும்பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்தமாலைபத்தும்வல்லார்நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

பண்-பழந்தக்கராகம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சொன்மாலைபயில்கின்றகுயிலினங்காள்சொல்லீரே
பன்மாலைவரிவண்டுபண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலைநகுதிங்கள்முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனென்புதுநலமுண்டிகழ்வானோ. 1

கண்டகங்காள்முண்டகங்காள்கைதைகாள்நெய்தல்காள்
பண்டரங்கவேடத்தான்பாட்டோவாப்பழனத்தான்
வண்டுலாந்தடமூழ்கிமற்றவனென்றளிர்வண்ணம்
கொண்டநாள்தானறிவான்குறிக்கொள்ளாதொழிவானோ.

மனைக்காஞ்சியிளங்குருகேமறந்தாயோமதமுகத்த
பனைக்கைம்மாவுரிபோர்த்தான்பலர்பாடும்பழனத்தான்
நினைக்கின்றநினைப்பெல்லாமுரையாயோநிகழ்வண்டே
சுனைக்குவளைமலர்க்கண்ணாள்சொற்றூதாய்ச்சோர்வாளோ.

வஞ்சித்தென்வளைகவர்ந்தான்வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம்பரந்தார்க்கும்பழனத்தான்
அஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்புமப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்றசேவடியாய்கோடியையே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## திருநேரிசை ௪-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

கண்ணனும்பிரமனோடுகாண்கிலராகிவந்தே
எண்ணியுந்துதித்துமேத்தவெரியுருவாகிநின்று

வண்ணநன்மலர்கடூவிவாழ்த்துவார்வாழ்த்தியேத்தப்
பண்ணுலாம்பாடல்கேட்டார்பழனத்தெம்பரமனாரே. 9
திருச்சிற்றம்பலம்.

---

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.
திருச்சிற்றம்பலம்.

அலையார்கட னஞ்சமுண்டார்தாமே யமரர்களுக்கருள் செய்யுமாதிதாமே, கொலையாயகூற்றமுதைத்தார்தாமேகொல்வேங்கைத்தோலொன்றசைத்தார்தாமே, சிலையாற்புரமூன்றெரித்தார்தாமேதீநோய்களைந்தென்னையாண்டார்தாமே,பலிதேர்ந்தழகாயபண்பர்தாமேபழனநகரெம்பிரானார்தாமே. 1
திருச்சிற்றம்பலம்.

---

**திருப்பழனம்:**—இது திருவையாறு ஸப்தஸ்தான க்ஷேத்ரங்களில் ஒன்று. இத்தலப்பதிகத்தில் ஸ்ரீ வாகீஸமூர்த்திகள் அப்பூதியடிகளையனாரைச் சிறப்பித்தருளினர். இதற்கு வடக்கே ஒருமைலில் அப்பூதியடிகள் எழுந்தருளியிருந்த திங்களூர் என்னும் வைப்புத்தலமிருக்கின்றது. சுவாமி ஆபத்சகாயகர், தேவியார் பெரியநாயகி, இதற்குப் பதிகம் 6.

இத்தலம் தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலையில் கண்டியூர் மார்க்கமாய் எழுமைமைலில் உள்ள திருவையாற்றினின்றும் கிழக்கே இரண்டரைமைலிலும், வடதாங்காடுதுறைந்த மேற்கே மூன்றுமைலிலும் உள்ளது.

---

# ௫க. திருவையாறு.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

பண்-மேகராகக்குறிஞ்சி. ௧-ந் திருமுறை.
திருச்சிற்றம்பலம்.

புலனைந்தும்பொறிகலங்கிநெறிமயங்கியறிவழிந்திட்டைமேலுந்தி, யலமந்தபோதாகவஞ்சேலென்றருள்செய்வானமருங்கோயில், வலம்வந்தமடவார்கணடமாடமுழவதிரமழையென்றஞ்சிச், சிலமந்தியலமந்துமரமேறிமுகில்பார்க்குந்திருவையாறே. 1

கங்காளர்கயிலாயமலையாளர்கானப்பேராளர்மங்கை,பங்காளர் திரிசூலப்படையாளர்விடையாளர்பயிலுங் கோயில், கொங்காளப்பொழினுழைந்துகூர்வாயாலிறகுலர்த்திக்கூதனீங்கிச், செங்காலனல்வெண்குருகுபைங்கானலிரைதேருந் திருவையாறே. 2

வேந்தாகிவிண்ணவர்க்குமண்ணவர்க்குநெறிகாட்டும்விகிர்தனாகிப், பூந்தாமநறுங்கொன்றைச்சடைக்கணிந்தபுண்ணியனார்நண்ணுங்கோயில், காந்தாரமிசையமைத்துக் காரிகையார்பண்பாடக்கவினார்வீதித், தேந்தாமென்றரங்கேறிச்சேயிழையார்நடமாடுந் திருவையாறே. 6

அன்னமலிபொழில்புடை சூழையாற்றெம்பெருமானையந்தண்காழி, மன்னியசீர்மறைநாவன் வளர்ஞானசம்பந்தன் மருவுபாடல், இன்னிசையாலிவைபத்து மிசையுங்காலீசனடியேத்துவார்கள், தன்னிடைசோ டமருலகிற்றவநெறி சென்றெய்துவார்தாழாதன்றே.

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

பண்-காந்தாரம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். 1

போழிளங்கண்ணியினானைப்பூந்துகிலாளொடும்பாடி
வாழியம்போற்றியென்றேத்திவட்டமிட்டாடாவருவேன்
ஆழிவலவனின்றேத்துமையாறடைகின்றபோது
கோழிபெடையொடுங்கூடிக்குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். 2

வளர்மதிக்கண்ணியினானைவார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததோர்காலங்காண்பான் கடைக்கணிக்கின்றேன்
அளவுபடாததோரன்போடையாறடைகின்றபோது
இளமணநாகுதழுவியேறுவருவனகண்டேன்
கண்டேனவர் திருப்பாதங்கண்டறியாதனகண்டேன்.
திருச்சிற்றம்பலம்.

---

பண்-பழந்தக்கராகம். ௬-ந் திருமுறை.
திருச்சிற்றம்பலம்.

விடகிலேனடிநாயேன்வேண்டியக்காலியாதொன்றும்
இடைகிலேனமணர்கடமறவுரைகேட்டலமந்தேன்
தொடர்கின்றேனுன்னுடைய தூமலர்ச்சேவடிகாண்பான்
அடைகின்றேனையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. 1

செம்பவளத்திருவுருவர்திகழ்சோதிக்குழைக்காதர்
கொம்பமருங்கொடிமருங்கிற்கோல்வளையாளொருபாகர்
வம்பவிழுமலர்க்கொன்றைவளர்சடைமேல்வைத்துகந்த
அம்பவளவையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. 2

நணியானேசேயானேநம்பானேசெம்பொன்னின்
துணியானேதோலானேசுண்ணவெண்ணீற்றானே
மணியானேவானவர்க்குமருந்தாகிப்பிணிதீர்க்கும்
அணியானேயையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. 3

கருவரைசூழ்கடலிலங்கைக்கோமானைக்கருத்தழியத்
திருவிரலாலுதாகணஞ்செய்துகந்தசிவமூர்த்தி
பெருவரைசூழ்வையகத்தார்பேர்நந்தியென்றேத்தும்
அருவரைசூழையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. 10
திருச்சிற்றம்பலம்.

---

பண்-திருநேரிசை. ௬-ந் திருமுறை.
திருச்சிற்றம்பலம்.

தானலாதுலகமில்லைசகமலாதடிமையில்லைக்
கானலாதாடவில்லைகருதுவார்தங்களுக்கு

வானலா தருளுமில்லைவார்குழன்மங்கையோடும்
ஆனலா தூர்வதில்லையையனையாறனார்க்கே. 1

எரியலா லுருவமில்லையேறலா லேறவில்லை
கரியலாற்போர்வையில்லைகாண்டகுசோதியார்க்குப்
பிரிவிலாவமரர்கூடிப்பெருந்தகைப்பிரானென்றேத்தும்
அரியலாற்றேவியில்லையையனையாறனார்க்கே. 5

சகமலா தடிமையில்லைதானலாற்றுணையுமில்லை
நகமெலாந்தேயக்கையானாண்மலர்தொழுதுதூவி
முகமெலாங்கண்ணீர்மல்கமுன்பணிந்தேத்துந்தொண்டர்
அகமலாற்கோயிலில்லையையனையாறனார்க்கே. 8

திருச்சிற்றம்பலம்.

---

## திருவிருத்தம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சிந்திப்பரியனசிந்திப்பவர்க்குச்சிறந்துசெந்தேன்
முந்திப்பொழிவனமுந்திகொடுப்பனமொய்த்திருண்டு
பந்தித்துநின்றபழவினைதீர்ப்பனபாம்புசுற்றி
அந்திப்பிறையணிந்தாடுமையாறனடித்தலமே. 1

இருடருதுன்பப்படலமறைப்பமெய்ஞ்ஞானமென்னும்
பொருடருகண்ணிழந்துண்பொருணாடிப்புகலிழந்த
குருடருந்தம்மைப்பரவக்கொடுநரகக்குழிநின்
றருடருகைகொடுத்தேற்றுமையாறனடித்தலமே. 4

துன்பக்கடலிடைத்தோணித்தொழில்பூண்டதொண்டர்தம்மை
இன்பக்கரைமுகந்தேற்றுந்திறத்தனமாற்றயலே (ருந்தா
பொன்பட்டொழுகப் பொருந்தொளிசெய்யுமப் பொய்பொ
அன்பர்க்கணியனகாண்கவையாறனடித்தலமே. 6

திருச்சிற்றம்பலம்.

## திருவிருத்தம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மலையார்மடந்தைமனத்தனவானோர்மகுடமன்னி
நிலையாயிருப்பனநின்றோர்மதிப்பனநீணிலத்துப்
புலையாடுபுன்மைதவிர்ப்பனபொன்னுலகம்மளிக்கும்
அலையார்புனற்பொன்னிசூழ்ந்தவையாறனடித்தலமே. 1

பொலம்புண்டரீகப்புதுமலர்போல்வனபோற்றியென்பார்
புலம்பும்பொழுதும்புணர்துணையாவனபொன்னனையாள்
சிலம்புஞ்செறிபாடகமுஞ்செழுங்கிண்கிணித்திரளும்
அலம்புந்திருவடிகாண்கவையாறனடித்தலமே. 3

உற்றாரிலாதார்க்குறுதுணையாவனவோதிநன்னூல்
கற்றார்பரவப்பெருமையுடையனகாதல்செய்ய
கிற்பார்தமக்குக்கிளரொளிவானகந்தான்கொடுக்கும்
அற்றார்க்கரும்பொருள்காண்கவையாறனடித்தலமே. 4

பேணித்தொழுமவர்பொன்னுலகாளப்பிறங்கருளால்
ஏணிப்படிநெறியிட்டுக்கொடுத்திமையோர்முடிமேல்
மாணிக்கமொத்துமரகதம்போன்றுவயிரமன்னி
ஆணிக்கனகமுமொக்குமையாறனடித்தலமே. 6

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஓசையொலியெலாமானாய்நீயேயுலகுக்கொருவனாய்நின்றாய்நீயே, வாசமலரெலாமானாய்நீயேமலையான்மருகனாய்நின்றாய்நீயே, பேசப்பெரிதுமினியாய்நீயேபிரானாபடியென்மேல்வைத்தாய்நீயே, தேசவிளக்கெலாமானாய்நீயேதிருவையாறகலாதசெம்பொற்சோதீ. 1

எல்லாவுலகமுமானாய்நீயேயேகம்பமேவியிருந்தாய்நீயே, நல்லாரைநன்மையறிவாய்நீயேஞானச்சுடர்விளக்காய்நின்றாய்-

நீயே, பொல்லாவினைகளறுப்பாய்நீயேபுகழ்ச்சேவடியென்
மேல்வைத்தாய்நீயே, செல்வாயசெல்வந்தருவாய்நீயேதிரு
வையாறகலாதசெம்பொற்சோதீ. 7

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-காந்தாரபஞ்சமம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பரவும்பரிசொன்றறியேனான்பண்டேயும்மைப்பயிலாதேன்
இரவும்பகலுநினைந்தாலுமெய்தநினையமாட்டேனான்
கரவிலருவிகமுகுண்ணத்தெங்கங்குலைக்கீழ்க்கருப்பாலை
அரவந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. 1

எங்கேபோவேனாயிடினுமங்கேவந்தென்மனத்தீராய்ச்
சங்கையொன்றுமின்றியேதலைநாள்கடைநாளொக்கவே
கங்கைசடைமேற்கரந்தானேகலைமான்மறியுங்கனன்மழுவுந்
தங்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. 2

கூடியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பில்லீர்
ஊடியிருந்துமுணர்கிலேனும்மைத்தொண்டனூரனேன்
தேடியெங்குங்காண்கிலேன்றிருவாரூரேசிந்திப்பன்
ஆடுந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. 11

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு:—இது வடமொழியில் பஞ்சநதம் எனவழங்கும். ஐயாறு ஸ்வாமி பாதகங்கை, தேவி கங்கை, விருஷப கங்கை. காவிரி என்பன. இங்கு தூர்வாசர் முதலிய மஹரிஷிகளும் ஹரி பிரம்மேந்திராதிகளும் எழுந்தருளியிருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபம் செய்து வித்தியடைதலால் இதற்கு ஜப்யேஸம் என்னும் நாமமும் வழங்கும். சையகிரியினின்றும் வந்த காவிரி இத்தலவாஸத்தை விரும்பித் தங்கிவிட ஸமுத்ரராஜன் வந்து ஸ்வாமியைப் பூஜித்துக் காவிரியை அடைந்தான். எனினும் காவிரி எல்லாக் கலைகளாலும் இங்கு பிரகாசித்து ஒரு கலையோடுமட்டும் ஸமுத்ரராஜனோடு கிழக்கே செல்

லுவாள். ஸமுத்ரராஜன் பூஜித்தது "ஆழிவலவனின்றேத்தும் ஐயாறு" என்னுங் குறிப்பால் அறியத்தக்கது. திருநந்திதேவர் பூஜித்து ஸாரூப்யம் கணாதிபத்யம் முதலிய பெற்று ஸுயசையை மணஞ்செய்வித்து அபிஷேகிக்கப்பெற்ற தலம். தம்மை உபாஸித்த ஓர் பிராமணப்பிள்ளையின் பொருட்டுப்பரமசிவன் இயமனைத்தண்டித்து அப்பிள்ளையை ஆட்கொண்டு ஆட்கொண்டார் என்னும் திருநாமத்தோடு தக்ஷிண கோபுரத்வாரத்தில் எழுந்தருளியிருக்கின்றார். ஸப்தஸ்தான ஸ்தலத்தில் முதன்மையானது. இலக்ஷ்மீ பூஜித்துத் தவம் செய்யும் தலம். தம்மை அருச்சிக்கும் சைவர் ஒருவர் காசிக்குப் போயிருந்த சமயத்தில் குறித்தகாலத்தில் வாராமையால் அவர் முறைதவறுவதான போது ஸ்வாமி அவர்வடிவோடு எழுந்தருளித் தம்மைத்தாமே பூசித்த க்ஷேத்ரம். "ஐயாறதனிற் சைவனாகியும்" எனத் திருவாசகம் கூறுகின்றது. இப்போதும் இலக்ஷ்மீ இரண்டாவது ஆவரணத்தில் தவஞ்செய்வதாகச் சொல்லப் பெறுதலால் அங்கு ஒருவரும் போவதில்லை. இந்திரன் வாலி முதலியோர் பூசித்தது பதிகத்துக் காணப்பெறும். திருநாவுக்கரசு நாயனார் திருக்கைலாய தரிசனத்தை உத்தேசித்துச் சிவாக்ஞையால் வடதேசத்தில் ஓர் தீர்த்தத்தில் மூழ்கி இத்தலத்தில் ஓர் தீர்த்தத்தில் எழுந்து கைலாய தரிசனம் செய்த தலம். இந்த ஐதிஹ்ய உற்சவம் ஆடி ஆமாவாசையில் அப்பர் காக்ஷி என்னும் பெயரோடு இன்றும் நடைபெறுகிறது. சுவாமிகள் வெளிவந்தகுளம் கோவிலுக்கு வடமேற்கே ஸமுத்ர தீர்த்தம் எனவும், உப்பங்கோட்டைப் பிள்ளையார் கோவில் குளம் எனவும் வழங்கும். ஆலயத்தில் உத்தரதக்ஷிண கைலாஸங்கள் இரண்டும் இரு பக்கத்திலும் உள்ளன. சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமாணாயனாரோடு திருக்கண்டியூரைத் தரிசனஞ்செய்த போது திருவையாறு நேரே தோன்றியதனால் தரிசிக்கவிரும்பி காவிரி கரை புரண்டு செல்வதனால் கடத்தற்கு இன்றி "ஐயாறுடைய வடிகளோ" என்று அழைத்தருளலும் ஸ்வாமி கன்றை நினைத்துக் கதறுகின்ற பசுப்போல "ஓலம்" "ஓலம்" என்று அழைத்துக் காவிரியின் வெள்ளத்தை மேற்பக்கம் பளிங்கு மலைபோல் நிற்பித்துத் தம்மையடையும்படி செய்தார். நாயன்மார் இருவரும் வழிபட்டுத் திரும்பிய உடன் மேற்பக்கம் நின்ற வெள்ளம் தொடர்ந்து ஓடியது. சுவாமி-செம்பொற்சோதி நாதர், தேவியார்-தர்மஸம்வர்த்தனி, விநாயகர்-ஆதிவிநாயகர், தீர்த்தம்-சூர்ய புஷ்கரணி, காவிரி முதலியன. இதற்குப் பதிகம். 18.

இத்தலம் தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலை மார்க்கமாய் ஆறுமைலில் திருக்கண்டியூரினின்றும் வடக்கே கற்சாலை மார்க்கமாய் ஒன்றரை மைலில் உள்ளது.

---

# ருஉ. திருநெய்த்தானம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மையாடியகண்டன்மலைமகள்பாகமதுடையான்
கையாடியகேடில்கரியுரிமூடியவொருவன்
செய்யாடியகுவளைம்மலர்நயனத்தவளோடும்
நெய்யாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. 1

பறையும்பழிபாவம்படுதுயரம்பலதீரும்
பிறையும்புனலரவும்படுசடையெம்பெருமானூர்
அறையும்புனல்வருகாவிரியலைசேர்வடகரைமேல்
நிறையும்புனைமடவார்பயினெய்த்தானமெனீரே. 2

தலமல்கியபுனற்காழியுட்டமிழ்ஞானசம்பந்தன்
நிலமல்கியபுகழான்மிகுநெய்த்தானனைநிகரில்
பலமல்கியபாடல்லிவைபத்தும்மிகவல்லார்
சிலமல்கியசெல்வன்னடிசேர்வர்சிவகதியே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மெய்த்தானத்தகம்படியுளைவர்நின்றுவேண்டிற்றுக்குறை முடித்துவினைக்குக்கூடாம், இத்தானத்திருந்திங்ஙனுய்வா னெண்ணுமிதனையொழியியம்பக்கேளாய்நெஞ்சே, மைத் தானநீணயனிபங்கன்வங்கம்வருதிரைநீர்நஞ்சுண்டகண்டன்

மேய, நெய்த்தானநன்னகரென்றேத்திநின்றுநினையுமாநினைந்
தக்காலுய்யலாமே. 1

தினைத்தனையோர்பொறையிலாவுயிர்போங்கூட்டைப்
பொருளென்றுமிகவுன்னிமதியாலிந்த, அனைத்துலகுமாள
லாமென்றுபேசுமாங்காரந்தவிர்நெஞ்சேயமரர்க்காக, முனைத்
துவருமதின்மூன்றும்பொன்றவன்று முடுகியவெஞ்சிலைவளை
த்துச்செந்தீமூழ்க, நினைத்தபெருங்கருணையனெய்த்தான
மென்றுநினையுமாநினைந்தக்காலுய்ப்பலாமே. 5

பேசப்பொருளலாப்பிறவிதன்னைப்பெரிதென்றுசிறும
னத்தால்வேண்டியீண்டு, வாசக்குழன்மடவார் போகமென்
னும்வலைப்பட்டுவீழாதேவருகநெஞ்சே, தூசக்கரியுரித்தான்
றூநீறாடித்துதைந்திலங்குநூன்மார்பன்றொடராகில்லா, நீசர்
க்கரியவனெய்த்தானமென்றுநினையுமாநினைந்தக்காலுய்யலா
மே. 7

திருச்சிற்றம்பலம்.

---

**திருநெய்த்தானம்:**—இது வடமொழியில் கிருதஸ்தானம் என்று வழங்குகிறது; திருவையாறு ஸப்தஸ்தான க்ஷேத்ரங்களில் ஒன்று. ஸரஸ்வதி பூசித்து வழிபட்டது. சுவாமி - நெய்யாடியப்பர், தேவியார் - வாலாம்பிகை. இதற்குப்பதிகம் 6.

இத்தலம் திருவையாற்றிற்கு (51) மேற்கே மட்சாலையில் ஒரு மைலில் உள்ளது.

---

## ருஉ. திருப்பெரும்புலியூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம். 69137

மண்ணுமோர்பாகமுடையார்மாலுமோர்பாகமுடையார்
விண்ணுமோர்பாகமுடையார்வேதமுடையவிமலர்
கண்ணுமோர்பாகமுடையார்கங்கை சடையிற்கரந்தார்
பெண்ணுமோர்பாகமுடையார்பெரும்புலியூர்பிரியாரே. 1

துன்னுகடற்பவளஞ்சேர்தூயனநீண்ட திரடோள்கள்
மின்னுசுடர்க்கொடிபோலுமேனியினுளொருகங்கைக்
கன்னிகளின்புனைபோடுகலைமதிமாலைகலந்த
பின்னுசடைப்பெருமானூர்பெரும்புலியூர்பிரியாரே. 2

பிறைவளரும்முடிச்சென்னிப்பெரும்புலியூர்ப்பெருமானை
நறைவளரும்பொழிற்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
மறைவளருந்தமிழ்மாலைவல்லவர்தந்துயர்நீங்கி
நிறைவளர்நெஞ்சினராகிநீடுலகத்திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பெரும்புலியூர்:— இது கொள்ளிடத்தின் தென்கரையில் உள்ளது. வியாக்ரபாதமுனிவர் பூசித்தது. சுவாமி வியாக்ரபுரீசுவரர், தேவியார்-சௌந்தரநாயகி. இதற்குப்பதிகம் 1.

இத்தலம் திருவையாற்றிற்கு வடமேற்கே ஒன்றரை மைலில் கரைமார்க்கமாய் உள்ளது.

---

## ௫௪. திருமழபாடி.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-கொல்லி ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காலையார்வண்டினங்கிண்டியகாருறும்
சோலையார்பைங்கிளிசொற்பொருள்பயிலவே
வேலையார்விடமணிவேதியன்விரும்பிட
மாலையார்மதிதவழ்மாமழபாடியே. 1

கறையணிமிடறுடைக்கண்ணுதனண்ணிய
பிறையணிசெஞ்சடைப்பிஞ்ஞகன்பேணுமூர்
துறையணிகுருகினந்தூமலர்துதையவே
மறையணிநாவினன்மாமழபாடியே. 2

ஞாலத்தாராதிரைநாளினானாடொறுஞ்
சீலத்தான்மேவியதிருமழபாடியை
ஞாலத்தான்மிக்கசீர் ஞானசம்பந்தன்சொல்
கோலத்தாற்பாடுவார்குற்றமற்றார்களே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

அலையடுத்தபெருங்கடனஞ்சமுதாவுண்டுவமரர்கடந்தலைகாத்தவையர்செம்பொற், சிலையெடுத்துமாநாகநெருப்புக்கோத்துத்திரிபுரங்கடீயிட்டசெல்வர்போலு, நிலையடுத்தபசும்பொன்னான்முத்தானீண்டநிரைவயிரப்பலகையாற்குவைபார்த்துற்றமலையடுத்தமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 1

சுழித்துணையாம்பிறவிவழித்துக்கநீக்குஞ்சுருள்சடையெம்பெருமானேதூயதெண்ணீர், இழிப்பரியபசுபாசப்பிறப்பைநீக்குமென்றுணையே யென்னுடையபெம்மான்றம்மான், பழிப்பரியதிருமாலுமயனுங்காணாப் பரிதியேசுருதிமுடிக்கணியாய்வாய்த்த, வழித்துணையாமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 7

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-நட்டராகம். ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேன்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
அன்னேயுன்னையல்லாவினியாரைநினைக்கேனே. 1

கீளார்கோவணமுந்திருநீறுமெய்ப்பூசியுன்றன்
தாளேவந்தடைந்தேன்றலைவாவெனையென்றுகொணீ

வாளார்கண்ணிபங்காமழபாடியுண்மாணிக்கமே
கேளாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. 2

ஏரார்முப்புரமுமெரியச்சிலைதொட்டவனை
வாரார்கொங்கையுடன்மழபாடியுண்மேபவனைச்
சீரார்நாவலர்கோனூரனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருமழபாடி**:— இது அக்னி நிருத்தஞ்செய்த ஸ்தலம். மழுவாடி எனப்பாலது மழபாடி எனத் திரிந்தது. பிரம்மலோகத்திருந்த சிவலிங்கத்தைப்புருஷாமிருகம்கொணர்ந்துபிரதிஷ்டைசெய்தபோது பிரம்மதேவர் தம்மாற்றலாற் பெயர்த்தெடுக்கப் பிரயத்தினஞ்செய்து கூடாமைகண்டு வஜ்ரஸ்தம்பமோவென வியந்தமையின் ஸ்வாமி வஜ்ரஸ்தம்பமூர்த்தி யாயினர். திருநந்திதேவர் ஸுயஸாதேவியை விவாஹஞ்செய்த தலம். விஷ்ணுமூர்த்தியும் இந்திரனும் பூசித்துள்ளார்கள். சுந்தரமூர்த்திநாயனார் திருவாலம்பொழிலில் எழுந்தருளி யிருந்தராத்ரி சுவாமி கனவிற் சென்று “மழபாடிக்குவர மறந்தனையோ’ என்று நினைப்பிக்க நாயனார் பொன்னார்மேனியனே என்னும் பதிகமெடுத்து “உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே” என்று பாடிச்சென்று வழிபட்டருளினார், இங்கு சோமாஸ்கந்தமூர்த்தி சிலாமூர்த்தமாக இருக்கிறார். சுவாமி-வஜ்ரஸ்தம்பேசுவரர், தேவியார்-அழகம்மை. இதற்குப்பதிகம் 6.

இத்தலம் திருப்பெரும்புலியூரினின்றும் கொள்ளிடத்தைப் பரிசினாற்கடந்து கரைமார்க்கமாய் இரண்டுமைலில் உள்ளது. இங்கு கொள்ளிடம் உத்தரவாகினியாய்ச் செல்லுகிறது.

---

# ௫௫. திருப்பழுவூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முத்தன்மிகுமூவிலைநல்வேலன்விரிநூலன்
அத்தனெமையாளுடையவண்ணலிடமென்பர்

மைத்தழைபெரும்பொழிலின்வாசமதுவீசப்
பத்தரொடுசித்தர்ப்பயில்கின்றபழுவூரே. 1

கோடலொடுகோங்கவைகுலாவுமுடிதன்மேல்
ஆடரவம்வைத்தபெருமானதிடமென்பர்
மாடமலிசூளிகையிலேறிமடவார்கள்
பாடலொலிசெய்யமலிகின்றபழுவூரே. 2

அந்தணர்களானமலையாளரவரேத்தும்
பந்தமலிகின்றபழுவூரரனையாரச்
சந்தமிகுஞானசம்பந்தனுரைபேணி
வந்தவணமேத்துமவர்வானமுடையாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பழுவூர்:— இது மலையாளர் வழிபட்டுப் பூசித்ததலமென்பது பதிகத்தும் திருத்தொண்டர் புராணத்தும் அறியப்படுகிறது. பரசுராமர் பூசித்ததென்று சொல்லுகின்றன. சுவாமி-வடமூலநாதர், தேவியார்-அருந்தவநாயகி, இதற்குப் பதிகம் 1.

இத்தலம் திருவையாற்றினின்றும் வடகிழக்கே கொள்ளிடத்துக்கு வடக்கே அரியலூர் மார்க்கத்தில் பத்துமைலில் உள்ளது.

---

## ௫௬. திருக்கானூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கேசி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானார்சோதிமன்னுசென்னிவன்னிபுனங்கொன்றைத்
தேனார்போதுதானார்கங்கைதிங்களொடுசூடி
மானார்நோக்கிகண்டங்குவப்பமாலையாடுவார்
கானூர்மேயகண்ணார்நெற்றியானூர்செல்வரே. 1

நீந்தலாகாவெள்ளமூழ்குநீள்சடைதன்மேலோர்
ஏய்ந்தகோணற்பிறையோடரவுகொன்றையெழிலாரப்
போந்தமென்சொலின்பம்பயந்தமைந்தரவர்போலாம்
காந்தள்விம்முகானூர்மேயசாந்தநீற்றாரே. 2

கழுதுதுஞ்சுங்கங்குலாடுங்கானூர்மேயானைப்
பழுதில்ஞானசம்பந்தன்சொற்பத்தும்பாடியே
தொழுதுபொழுதுதோத்திரங்கள்சொல்லித்துதித்துநின்று
அழுதுனக்குமன்புசெய்வாரல்லலறுப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனர்

### திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

திருவினாதனுஞ்செம்மலர்மேலுறை
உருவனாபுலகத்தினுயிர்க்கெலாங்
கருவனாகிமுளைத்தவன்கானூரில்
பரமனாயபரஞ்சுடர்காண்மினே. 1

பெண்டிர்மக்கள்பெருந்துணைநன்னிதி
யுண்டின்றேயென்றுகவன்மினைமைகாள்
கண்டுகொண்மினீர்கானூர்முளையினைப்
புண்டரீகப்பொதும்பிலொதுங்கியே. 2

வன்னிகொன்றையெருக்கணிந்தான்மலை
யுன்னியேசென்றெடுத்தவனொண்டிறல்
தன்னைவீழத்தனிவிரல்வைத்தவன்
கன்னிமாமதிற்கானூர்க்கருத்தனே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருக்கானூர்:**—இங்கு உமாதேவியார் சிவயோகத்தமர்ந்திருந்தபோது சுவாமி அக்னிப்பிழம்புருவமாகத் தரிசனங் கொடுத்ததாகக் கூறுப. சுவாமி-செம்மேனிநாதர், தேவியார்-சிவயோகநாயகி. இதற்குப்பதிகம் 2.

இத்தலம் பூதலூர்ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலைமார்க்கமாய் 5-மைலிலுள்ள திருக்காட்டுப்பள்ளியினின்றும் வடக்கே விஷ்ணும்பேட்டை மட்சாலையில் இரண்டுமைலில் உள்ளது.

# ௫௭. திருஅன்பிலாலந்துறை.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கணைநீடெரிமாலரவம்வரைவில்லா
இணையாவெயின்மூன்றுமெரித்தவிறைவர்
பிணைமாமயிலுங்குயில்சேர்மடவன்னம்
அணையும்பொழிலன்பிலாலந்துறையாரே. 1

சடையார்சதுரன்முதிராமதிசூடி
விடையார்கொடியொன்றுடையெந்தைவிமலன்
கிடையாரொலியோத்தரவத்திசைகிள்ளை
அடையார்பொழிலன்பிலாலந்துறையாரே. 2

அரவார்புனலன்பிலாலந்துறைதன்மேல்
கரவாதவர்காழியுண்ஞானசம்பந்தன்
பரவார்தமிழ்பத்திசைபாடவல்லார்போய்
விரவாகுவர்வானிடைவீடெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

பண்-திருநேரிசை. ச-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானஞ்சேர்மதிசூடியமைந்தனை
நீநெஞ்சேகெடுவாய்நினைகிற்கிலை
யானஞ்சாடியையன்பிலாலந்துறைக்
கோனெஞ்செல்வனைக்கூறிடகிற்றியே. 1

காரணத்தர்கருத்தர்கபாலியார்
வாரணத்துரிபோர்த்தமணாளனார்
ஆரணப்பொருளன்பிலாலந்துறை
நாரணற்கரியானொருநம்பியே. 2

இலங்கைவேந்தனிருபதுதோளிற்று
மலங்கமாமலைமேல் விரல்வைத்தவன்
அலங்கலெம்பிரானன்பிலாலந்துறை
வலங்கொள்வாரைவானோர்வலங்கொள்வரே.

திருச்சிற்றம்பலம்.

---

**திருவன்பிலாலந்துறை:**—இது அன்பில்என்றும் வழங்கும். பிரம்மதேவர், வாகீசமுனிவர் முதலியோர் பூசித்தது. சுவாமி - ஸத்யவாகீசர், தேவியார் - சௌந்தரநாயகி. இதற்குப் பதிகம் ௨.

இத்தலம் பூதலூர்ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள திருக்காட்டுப்பள்ளியினின்றும் மேற்கே காவிரிவடகரை மட்சாலையில் ஐந்துமைலில் உள்ள கோயிலடியினின்றும் கொள்ளிடத்தைப் பரிசிலேறிக்கடந்து வடகரையில் மட்சாலையில் இரண்டுமைலில் உள்ளது.

---

# ௫அ. திருமாந்துறை.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

செம்பொனார்தருவேங்கையுஞாழலுஞ்செருந்திசெண்பகமா
கொம்புமாமுமாதவிசுரபுன்னைகுருந்தலர்போந்துந்தி [னைக்
அம்பொனேர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகின்ற [மே
எம்பிரானிமையோர்தொழுபைங்கழலேத்துதல்செய்வோ

விளவுதேனொடுசாதியின்பலங்களும்வேய்மணிநிரந்துந்தி
அளவிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானைத்
துளவமான்மகனைங்கணைக்காமனைச்சுடவிழித்தவனெற்றி
அளகவாணுதலரிவைதன்பங்கனையன்றிமற்றறியோமே.

வரைவளங்கவர்காவிரிவடகரைமாந்துறையுறைவானைச்
சிரபுரம்பதியுடையவன்கவுணியன்செழுமறைநிறைநாவன்
அரவெனும்பணிவல்லவன்ஞானசம்பந்தனன்புறுமாலை
பாவிடுந்தொழில்வல்லவரல்லலும்பாவமுமிலர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

திருமாந்துறை:— இது ஆம்பிரவனம் என்றுஞ் சொல்லப்பெறும். திருமங்கலக்குடிக்குச்சமீபமாயுள்ள வைப்புத்தலமாகியதென்கரை மாந்துறையோடு வடகரை மாந்துறையாகிய இது மயங்கற்பாலதன்று. மருத்துக்கள் பூசித்துவழிபட்டது பதிகத்துக்கூறி யிருக்கிறது. கண்வரும் பூசித்துள்ளார். சுவாமி-ஆம்பிரவனநாதர், தேவியார்-அழகம்மை. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் திரிசிராப்பள்ளிக்கோட்டை ஸ்டேஷனிலிருந்து வடக்கேமூன்றரை மைலில்உள்ள திருவானைக்காவினின்றும்வடகிழக்கே லால்குடி மார்க்கத்தில் மட்சாலையில் பத்துமைலில் உள்ளது.

---

## ௫௬. திருப்பாற்றுறை.

### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-பழந்தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காரார்கொன்றைகலந்தமுடியினர்
சீரார்சிந்தைசெலச்செய்தார்
பாரார்நாளும்பரவியபாற்றுறை
ஆராதிமுதல்வரே. 1

நல்லாருமவர்தீயரெனப்படுஞ்
சொல்லார்நன்மலர்சூடினார்
பல்லார்வெண்டலைச்செல்வரெம்பாற்றுறை
எல்லாருந்தொழுமீசரே. 2

பத்தர்மன்னியபாற்றுறைமேவிய
பத்துநூறுபெயரானைப்
பத்தன்ஞானசம்பந்தனதின்றமிழ்
பத்தும்பாடிப்பரவுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பாற்றுறை:-- இது மார்க்கண்டேய முனிவர் சிவபூஜைக்குப் பால் கிடையாது வருந்தியபோது பரமசிவன் அருளினால் பால் பெருகிய காரணத்தினால் இப்பெயரடைந்தது. சுவாமி-திருமூலநாதர், தேவியார்-மோகநாயகி. இதற்குப் பதிகம் 1

இத்தலம் திருவெறும்பூர்த் தலத்தினின்றும் வடக்கே கற்சாலையில் மூன்றரை மைலில் உள்ள உத்தமச்சேரிப் பாலத்தினின்றும் வடக்கே அரைமைலில் உள்ளது.

---

# சுo. திருவாவணக்கா.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர்.

பண்-கௌசிகம். திருவிராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானைக்காவில்வெண்மதிமல்குபுல்குவார்சடைத்
தேனைக்காவின்மொழித்தேவிபாகமாயினன்
ஆனைக்காவிலண்ணலையபயமாகவாழ்பவர்
ஏனைக்காவல்வேண்டுவார்க்கேதுமேதமில்லையே. 1

சேறுபட்டதண்வயற்சென்றுசென்றுசேணுலா
ஆறுபட்டநுண்டுறையானைக்காவிலண்ணலார்
நீறுபட்டமேனியார்நிகரில்பாதமேத்துவார்
வேறுபட்டசிந்தையார்விண்ணிலெண்ணவல்லரே. 2

ஊழியூழிவையகத்துயிர்கடோற்றுவாநெடும்
ஆழியானுங்காண்கிலாவானைக்காவிலண்ணலைக்
காழிஞானசம்பந்தன்கருதிச்சொன்னபத்திவை
வாழியாகக்கற்பவர்வல்வினைகண்மாயுமே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனூர்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கோனைக்காவிக்குளிர்ந்தமனத்தராய்த்
தேனைக்காவியுண்ணார்சிலதெண்ணர்கள்
ஆனைக்காவிலெம்மானையணைகிலார்
ஊனைக்காவியுழிதர்வருமரே. 1

நடையைமெய்யென்றுநாத்திகம்பேசாதே
படைகள்போல்வரும்பஞ்சமாபூதங்கள்
தடையொன்றின்றியேதன்னடைந்தார்க்கெலாம்
அடையநின்றிடுமானைக்காவண்ணலே. 6

ஓதமாகடல்சூழிலங்கைக்கிறை
கீதங்கின்னரம்பாடக்கெழுவினான்
பாதம்வாங்கிப்பரிந்தருள்செய்தங்கோர்
ஆதியாயிடுமானைக்காவண்ணலே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எத்தாயரெத்தந்தையெச்சுற்றத்தாரெம்மாடுசும்மாடா மேவர்நல்லார், செத்தால்வந்துதவுவாரொருவரில்லைச்சிறு விறகாற்றீமூட்டிச்செல்லாநிற்பர், சித்தாயவேடத்தாய்நீடு பொன்னித்திருவானைக்காவுடையசெல்வாவென்றன், அத்தா வுன்பொற்பாதமடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியே னென்செய்கேனே. 1

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

### பண்-காந்தாரம். ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மறைகளாயினநான்குமற்றுளபொருள்களுமெல்லாம்
துறையுந்தோத்திரத்திறையுந்தொன்மையுநன்மையுமாய
அறையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளும்
இறைவனென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. 1

தாரமாகியபொன்னித்தண்டுறைபாடிவிழுத்து
நீரினின்றடிபோற்றிநின்மலகொள்ளெனவாங்கே

ஆரங்கொண்டவெம்மானைக்காவுடையாதியைநாளும்
ஈரமுள்ளவர்நாளுமெம்மையுமாளுடையாரே. 7

ஆழியாற்கருளானைக்காவுடையாதிபொன்னடியின்
நீழலேசரணாகநின்றருள்கூறநினைந்து
வாழவல்லவன்றொண்டன்வண்டமிழ்மாலைவல்லார்போய்
எழுமாப்பிறப்பற்றுவெம்மையுமாளுடையாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவானைக்கா:—இது யானை பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் ஆனைக்காவெனவும் ஜம்பு நாவல் (வெண்ணாவல்) ஸ்தல விருக்ஷமாதலின் ஜம்புகேஸ்வரமெனவும் வழங்கப்பெறும். அம்பிகை கைலாயத்தினின்றும் எழுந்தருளி ஞானோபதேசம் பெற்ற காரணத்தால் ஞானக்ஷேத்ரமாகும். பஞ்சபூதஸ்தலங்களில் அப்புஸ்தலம் ஆதலால் அப்புலிங்கம். "செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே" என்று அப்பமூர்த்திகள் தேவாரத்தோதியது காண்க. லிங்க மூலத்தில் நீரூறுவது இன்றும் என்றும் காணத்தக்கதாம். பூர்வஜன்மத்திற் சிலந்தியாயிருந்து பூசித்த புண்யத்தால் சோழவம்சத்தில் அரசராகப் பிறந்த கோச்செங்கட் சோழநாயனார் பூர்வம் தம்பூஜைக்கு இடையூறு செய்த யானையிடத்துக்கொண்ட பகைமை வாசனையோடு யானை புகக்கூடாதபடி கட்டிய மாடக்கோயில்களுள் முதன்மையானது. பாதலம்வரை ஊடுருவிச் செல்லும் திருமதில், ஸ்வாமி எழுந்தருளித் திருநீற்றைக் கூலியாகக் கொடுத்துக்கட்டியதாகலின் திருநீறிட்டான் திருமதிலெனவழங்கும். உறையூரிலே அரசுசெய்த சோழர் ஒருவர் காவிரியில் நீராடும்போது கழுத்தில் தரித்திருந்த ஹாரம் விழுந்துவிட்டபோது ஸ்வாமியை த்யானித்து வேண்ட சுவாமி அவ்வாரத்தைத் திருமஞ்சனக்குடத்தே வருவித்துத் தரித்துக்கொண்ட செய்தி ஸ்ரீ சுந்தரமூர்த்திகளது தேவாரத்து எ-ந் திருப்பாட்டிற் கூறப்பெற்றது. ஜம்புமுனிவர், விட்டுணு மூர்த்தி, பிரம்மதேவர் முதலியோர் பூசித்துப் பேறுபெற்றது. சுவாமி-ஜம்புகேஸ்வரர், தேவியார்-அகிலாண்ட நாயகி, தீர்த்தம் இந்திர தீர்த்தம் முதலியன. விருக்ஷம்-வெண்ணாவல் இதற்குப் பதிகம் 7.

இத்தலம் திரிச்சிராப்பள்ளிக் கோட்டை ஸ்டேஷனுக்கு வடக்கே கற்சாலை மார்க்கமாய் மூன்றரை மைலில் உள்ளது.

# ௬௧. திருப்பைஞ்ஞீலி.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆரிடம்பாடிலரடிகள்காடலால்
ஓரிடங்குறைவிலருடையர்கோவணம்
நீரிடஞ்சடைவிடையூர்திநித்தலும்
பாரிடம்பணிசெயும்பயில்பைஞ்ஞீலியே. 1

மருவிலார்திரிபுரமெரியமால்வரை
பருவிலாக்குனித்தபைஞ்ஞீலிமேவலான்
உருவிலான்பெருமையையுளங்கொளாதவத்
திருவிலாரவர்களைத்தெருட்டலாகுமே. 2

கண்புனல்விளைவயற்காழிக்கற்பகம்
நண்புணருமறைஞானசம்பந்தன்
பண்பினர்பரவுபைஞ்ஞீலிபாடுவார்
உண்பினவுலகினிலோங்கிவாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்

திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

உடையர்கோவணமொன்றுங்குறைவிலர்
படைகொள்பாரிடஞ்சூழ்ந்தபைஞ்ஞீலியார்
சடையிற்கங்கைதரித்தசதுரரை
அடையவல்லவர்க்கில்லையவலமே. 1

மத்தமாமலர்சூடியமைந்தனார்
சித்தராய்த்திரிவார்வினைதீர்ப்பரால்
பத்தர்தாந்தொழுதேத்துபைஞ்ஞீலியெம்
அத்தனைத்தொழவல்லவர்நல்லரே. 2

தருக்கிச்சென் றுதடவரைபற்றலும்
நெருக்கியூன் றநினைந் துசிவனையே
அரக்கன்பாடவருளுமெம்மானிடம்
இருக்கைஞீலியென்பார்க்கிடரில்லையே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

### பண்-கொல்லி எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காருலாவியநஞ்சையுண் டிருள்கண்டர்வெண்டலையோடுகொண்
டூரெலாந்திரிந் தென்செய்வீர்பலியோரிடத்திலேகொள்ளுநீர்
பாரெலாம்பணிந் தும்மையேபரவிப்பணியும்பைஞ்ஞீலியீர்
ஆரமாவதுநாகமோசொலுமாரணீயவிடங்கரே. 1

செந்தமிழ்த்திறம்வல்லிரோசெங்கணரவமுன்கையிலாடவே
வந் துநிற்குமிதென்கொலோபலிமாற்றமாட்டோமிடகிலோம்
பைந்தண்மாமலருந் துசோலைகள்கந்தநாறுபைஞ்ஞீலியீர்
அந்திவானமுமேனியோசொலுமாரணீயவிடங்கரே. 4

அன்னஞ்சேர்வயல்சூழ்பைஞ்ஞீலியிலாரணீயவிடங்கரை, மின்னும் நுண்ணிடைமங்கை மார்பலர்வேண்டிக்காதல் மொழிந்தசொல், மன்னுதொல்புகழ்நாவலூரன்வன்றொண்டன் வாய்மொழிபாடல்பத், துன்னியின்னிசைபாடுவாருமைகேள்வன்சேவடிசேர்வரே.

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பைஞ்ஞீலி:—இது பசியஞ்ஞீலியை (ஓர்வகைவாழை) ஸ்தலவிருக்ஷமாக உடைமையின் இப்பெயரெய்தியது. பசிதாபங்களால் வருந்தியெழுந்தருளிய அப்பமூர்த்திகட்குச் சிவபெருமான் பிராம்மண வேடத்தோடு எழுந்தருளிப் பொதிசோறும் தண்ணீரும் கொடுத்ததலம். சுவாமி அப்போது உண்டுபண்ணிய தோட்டமும் தடாகமும் ஸமீபத்தில் உள்ளன. சுவாமி-நீலகண்டர் ஆரணீயவிடங்கர், தேவியார்-விசாலாக்ஷி, நீணெடுங்கண்ணி இதற்குப் பதிகம். 3.

இத்தலம் திருவானைக்காவிலிருந்து (60) வடமேற்கே மட்சாலையில் எழுமைலிலுள்ள மண்ணச்சநல்லூரினின்றும் மேற்கே ஒன்றரைமைலில் உள்ளது.

---

# ௬௨. திருப்பாச்சிலாச்சிராமம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண்-தக்கராகம். ௧-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

துணிவளர்திங்கள்துளங்கிவிளங்கச்சுடர்ச்சடைசுற்றிமுடித்துப், பணிவளர்கொள்கைபர்பாரிடஞ்சூழவாரிடமும்பலிதேர்வர், அணிவளர்கோலமெலாஞ்செய்துபாச்சிலாச்சிராமத்துறைகின்ற, மணிவளர்கண்டரோமங்கையைவாடமயல்செய்வதோவிவர்மாண்பே. 1

கலைபுனைமானுரிதோலுடையாடைகனல்சுடராலிவர்கண்கள்
தலையணிசென்னியர்தாரணிமார்பர்தம்மடிகளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில்சூழ்ந்தமர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
இலைபுனைவேலரோவேழையைவாடவிடர்செய்வதோவிவரீடே.

அகமலியன்பொடுதொண்டர்வணங்கவாச்சிராமத்துறைகின்ற
புகைமலிமாலைபுனைந்தழகாயபுனிதர்கொலாமிவரென்ன
நகைமலிதண்பொழில்சூழ்கருகாழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
தகைமலிதண்டமிழ்கொண்டிவையேத்தச்சாரகிலாவினைதானே

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்

பண்-தக்கராகம். ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வைத்தனன்றனக்கேதலையுமென்னாவுநெஞ்சமும்வஞ்சமொன்றின்றி, உய்த்தனன்றனக்கேதிருவடிக்கடிமையுரைத்தக்காலுவமனேயொக்கும், பைத்தபாம்பார்த்தோர்கோவணத்தோடுபாச்சிலாச்சிராமத்தெம்பரமர், பித்தரேயொத்தோர்நச்சிலராகிலிவரலாதில்லையோபிரானார். 1

அன்னையேயென்னேனத்தனேயென்னேனடிகளேயமை யுமென்றிருந்தேன், என்னையுமொருவனுளனென்றுகருதி யிறையிறைதிருவருள்காட்டாய்,அன்னமாம்பொய்கைசூழ்த ருபாச்சிலாச்சிராமத்துறையடிகள், பின்னையேயடியார்க் கருள்செய்வதாகிலிவரலாதில்லையோபிரானர். 2

ஏசினவல்லவிகழ்ந்தனவல்லவெம்பெருமானென்றேப் போதும்,பாயினபுகழான்பாச்சிலாச்சிராமத்தடிகளைபடிதொ ழப்பன்னாள், வாயினாற்கூறிமனத்தினானினைவான்வளவயனு வலாரூரன், பேசினபேச்சைப்பொறுக்கிலாகிலிவரலாதில்லை யோபிரானர். 12

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பாச்சிலாச்சிராமம்:—இது திருவாசி என வழங்கு கிறது. இங்கு திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் கொல்லி மழவன் என்னும் சைவ அரசனது புத்திரியின் முயலகன் நோய்தீர்த்து அநு க்கிரகித்தருளினர். நாயனர் பதிகத்தில் கட்டளையிட்டபடி நடராஜ மூர்த்தி முடித்த சடையோடும் ஸமீபத்திருந்து வணங்கும் முயலக னேடும் எழுந்தருளியிருக்கின்றார். சுந்தரமூர்த்தி நாயனர் ஸ்வாமி தம க்குப் பொன் கொடாமையால் "இவரலாதில்லையோ பிரானர்" என்று பாடி பொற்றுவை பெற்றருளினர். சுவாமி மாற்றறிவாதர், தேவியார்– பாலசுந்தரி, இதற்குப் பதிகம். 2.

இத்தலம் திருவானைக்காவினின்றும் (60) வடமேற்கே கொள் ளிடம் வடகரையில் பிச்சாண்டார் கோவில் மட்சாலையில் 3 மைலில் உள்ளது.

---

## ௬௩. திருஈங்கோய்மலை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-தக்கேசி க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானத்துயர்தண்மதிதோய்சடைமேல்மத்தமலர்சூடித்
தேனொத்தனமென்மொழிமான்விழியாடேவிபாகமாத்

கானத்திரவிலெரிகொண்டாடுங்கடவுளுலகேத்த
எனத்திரள்வந்திழியுஞ்சாரலீங்கோய்மலையாரே. 1

சூலப்படையொன்றேந்தியிரவிற்சுடுகாடிடமாகக்
கோலச்சடைகடாழக்குழல்யாழ்மொந்தைகொட்டவே
பாலொத்தனையமொழியாள்காணவாடும்பரமனார்
ஏலத்தொடுநல்லிலவங்கமழுமீங்கோய்மலையாரே. 2

விழவாரொலியுமுழவுமோவாவேணுபுரந்தன்னுள்
அழலார்வண்ணத்தடிகளருள்சேரணிகொள்சம்பந்தன்
எழிலார்சுனையும்பொழிலும்புடைசூழீங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல்பத்தும்வல்லார்கவலைகழல்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவீங்கோய்மலை:—இது தற்காலம் திருவிங்கநாதமலை என மருவிவழங்குகிறது. அகஸ்தியர் ஈ உருவமாய்ப் பூசித்தமையின் இப்பெயரெய்தியது. காவிரித் தென் கரையில் இரண்டாவது தலமாகிய கடம்பந்துறையைக் காலையிலும் முதற்றலமாகிய திருவாட்போக்கியை மத்யாநத்திலும் வடகரை 63 வது தலமாகிய இத்தலத்தை மாலையிலும் ஒரேநாளில் தரிசிப்பின் தரிசிப்போர் பெரும் பலன் பெறுவதாகச் சொல்லப்பெறுகிறது. "காலைக்கடம்பர் மத்யாநச் சொக்கர் மாலைத் திருவிங்கநாதர்" என்பது பிரசித்த வாக்யம். சுவாமி-மரகதாசலர், தேவியார்-மரகதவல்லியார். இதற்குப்பதிகம். 1.

இத்தலம் திரிசிராப்பள்ளி ஈரோட் சேர்க்கைப் பாதையிலுள்ள குளித்தலை ஸ்டேஷனிலிருந்து வடக்கே அகண்டகாவிரியைப் பரிசிறைற் கடந்து இரண்டு மைலிலிருக்கும் முசியிலிருந்து மேற்கே கற்சாலையில் மூன்றுமைலில் உள்ளது.

காவிரிக்குத்தென்கரை.

## க. திருவாட்போக்கி.

### திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காலபாசம்பிடித்தெழுதூதுவர்
பாலகர்விருத்தர்பழையாரெனார்
ஆலநீழலமர்ந்தவாட்போக்கியார்
சீலமார்ந்தவர்செம்மையுணிற்பரே. 1

விடுத்ததூதுவர்வந்துவினைக்குழிப்
படுத்தபோதுபயனில்லைபாவிகாள்
அடுத்தகின்னரங்கேட்கும்வாட்போக்கியை
எடுத்துமேத்தியுமின்புறுமின்களே. 2

இரக்கமுன்னறியாதெழுதூதுவர்
பாக்கழித்தவர்பற்றுதன்முன்னமே
அரக்கனுக்கருள்செய்தவாட்போக்கியார்
காப்பதுங்கரப்பாரவர்தங்கட்கே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவாட்போக்கி:—இது இரத்னகிரி எனவும் வழங்கும். மாணிக்கம் வேண்டிவந்த ஆரிய தேசத்தரசனுக்குச் சுவாமி நீர்த்தொட்டி ஒன்றைக் காட்டி யதனைக் காவிரி ஜலத்தால் நிரப்பும்படி யாக்ஞாபிக்க அரசன் மிக்க சிரமத்தோடு முயன்றும் முடியாததுகண்டு இறைவன்மீது தன்வாளை வீசச் சுவாமி யவ்வாளைப் போக்கி இரத்னம் கொடுத்த காரணத்தால் "வாட்போக்கி" எனவும் இரத்னகிரி எனவும் பெயரெய்தியது. பிறகு அரசன் உலகினை வெறுத்துப் பணி செய்து முத்தியடைந்தான். இந்திரன், ஜயந்தன், சூரியன், வாயு, சேடன், அகஸ்தியர், முதலியோர் பூசித்தது. மலைக்கோயில். சுவாமி-ரத்னகிரி நாதர், தேவியார்-சுரும்பார்குழலியம்மை, தீர்த்தம்-காவிரி இதற்குப் பதிகம். 1.

இத்தலம் குழித்தலை ஸ்டேஷனிலிருந்து தெற்கே மட்சாலையில் ஆறரைமைலில் உள்ளது.

---

# உ. திருக்கடம்பந்துறை.

## திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முற்றிலாமுலையாளிவளாகிலும்
அற்றந்தீர்க்குமறிவிலளாகிலும்
கற்றைச்செஞ்சடையான்கடம்பந்துறைப்
பெற்றமூர்த்தியென்றாளெங்கள்பேதையே. 1

தனகிருந்ததோர்தன்மையாகிலும்
முனகுதிரத்தொழுதெழுமின்களோ
கனகப்புன்சடையான்கடம்பந்துறை
நினையவல்லவர்நீள்விசும்பாள்வரே. 2

நூலானன்றுநினைமின்கணோய்கெடப்
பாலனாஞ்சுடனுடம்பாமனார்
காலனான்றுகந்தான்கடம்பந்துறை
மேலனாஞ்செய்தவல்வினைவீடுமே. 10

திருச்சிற்றம்பலம்.

**திருக்கடம்பந்துறை:**— இது கடம்பர் கோவில் என வழங்கும். கண்வமுநிவரும் தேவர்களும் சுவாமியைக் கடம்பவநத்திற் சாக்ஷியெய்திய தலம். சுவாமி-கடம்பவனேசுரர், தேவியார்-முற்றிலா முலையார். தீர்த்தம் காவிரி, விருக்ஷம் கடம்பு இதற்குப் பதிகம். 1

இத்தலம் குழித்தலை ஸ்டேஷனிலிருந்து மட்சாலையில் ஒன்றரை மைலில் உள்ளது

# கூ. திருப்பராய்த்துறை.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-மேகராகக்குறிஞ்சி, க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீறுசேர்வதோர்மேனியர்நேரிழை
கூறுசேர்வதோர்கோலமாய்ப்

பாறுசேர்தலைக்கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடையண்ணலை. 1

கந்தமாமலர்கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல்வைத்தவர்
பைந்தண்மாதவிசூழ்ந்தபராய்த்துறை
அந்தமில்லவடிகளே. 2

செல்வமல்கியசெல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற்சிதையாதன
செல்வன்ஞானசம்பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவைசெப்பவே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்

### திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கரப்பர்காலமடைந்தவர்தம்வினை
சுருக்குமாறுவல்லார்கங்கைசெஞ்சடைப்
பரப்புநீர்வருகாவிரித்தென்கரைத்
திருப்பராய்த்துறைமேவியசெல்வரே. 1

தொண்டுபாடியுந்தூமலர்தூவியும்
இண்டைகட்டியிணையடியேத்தியும்
பண்டரங்கர்பராய்த்துறைப்பாங்கரைக்
கண்டுகொண்டடியேனுய்ந்துபோவனே. 10

அரக்கனாற்றலழித்தவழகனைப்
பரக்குநீர்ப்பொன்னிமன்னுபராய்த்துறை
இருக்கைமேவியவீசனையேத்துமின்
பொருக்கநம்வினைபோயறுங்காண்மினே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருப்பாய்த்துறை:**—இது தலவிருக்ஷம் பராய் ஆதலின் இப்பெயரெய்தியது. இந்திரன், குபேரன், ஸப்தருஷிகள் இவர் பூசித்தது. இத்தலம் அகண்ட காவிரித்துறையில் உள்ளது என்பது "பரக்கு நீர்ப்பொன்னி மன்னு பராய்த்துறை" எனப்பதிகத்தோதப் பெற்றிருக்கிறது. சுவாமி-பராய்த்துறை நாதர், தேவியார்-பொன்மயிலம்மையார், தீர்த்தம் காவிரி, விருக்ஷம்-பராய் இதற்குப் பதிகம். 2.

இத்தலம் எழுமனூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் ஒன்றரை மைலில் உள்ளது.

---

## ச. திருக்கற்குடி.

### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வடந்திகழ்மென்முலையாளைப்பாகமதாகமதித்துத்
தடந்திரைசேர்புனன்மாதைத்தாழ்சடைவைத்தசதுரர்
இடந்திகழ்முப்புரிநூலர்துன்பமொடின்பமதெல்லாங்
கடந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. 1

அங்கமொராறுடைவேள்வியானவருமறைநான்கும்
பங்கமில்பாடலோடாடல்பாணிபயின்றபடிறர்
சங்கமதார்குறமாதர்தங்கையின்மைந்தர்கடாவிக்
கங்குலின்மாமதிபற்றுங்கற்குடிமாமலையாரே. 2

காமருவார்பொழில்சூழுங்கற்குடிமாமலையாரை
நாமருவண்புகழ்க்காழிநலந்திகழ்ஞானசம்பந்தன்
பாமருசெந்தமிழ்மாலைபத்திவைபாடவல்லார்கள்
பூமலிவானவரோடும்பொன்னுலகிற்பொலிவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநாவுக்கரசு நாயனார்.

திருத்தாண்டகம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மூத்தவனைவானவர்க்குமூவாமேனிமுதலவனைத்திருவரையின்மூக்கப்பாம்பொன்,ருர்த்தவனையக்கரவமாரமாகவணி

ந்தவனைப்பணிந்தடியாரடைந்தவன்போ, டேத்தவனையிறுவரையிற்றேனை யேனோர்க்கின்னமுதமளித்தவனை யிடரையெல்லாங், காத்தவனைக்கற்குடியில்விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக்கண்டேனே. 1

மண்ணதனிலைந்தைமாநீரினான்கை வயங்கெரியின்மூன்றைமாருதத்திரண்டை, விண்ணதனிலொன்றைவிரிகதிரைத் தண்மதியைத்தாரகைகடம்மைமிக்க, வெண்ணதனிலெழுத்தையேழிசையைக்காம னெழிலழியவெரியுமிழ்ந்தவிமையாநெற்றிக், கண்ணவனைக்கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனே. 3

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விடையாருங்கொடியாய்வெறியார்மலர்க்கொன்றையினாய்
படையார்வெண்மழுவாபரமாயபரம்பரனே
கடியார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அடிகேளெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. 1

மறையோர்வானவருந்தொழுதேத்திவணங்கநின்ற
இறைவாவெம்பெருமானெனக்கின்னமுதாயவனே
கறையார்சோலைகள்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அறவாவங்கணனேயடியேனையுமஞ்சலென்னே. 2

அலையார்தண்புனல்சூழ்ந்தழகாகிவிழவமருங்
கலையார்மாதவர்சேர்திருக்கற்குடிக்கற்பகத்தைச்
சிலையார்வாணுதலாணல்லசிங்கடியப்பனுரை
விலையார்மாலைவல்லார்வியன்மூவுலகாள்பவரே. 10

---

திருக்கற்குடி:—இது உய்யக்கொண்டான்மலை என வழங்கும். குடமுருட்டி ஆற்றுக்கு மேற்கே உள்ளது. திருக்காட்டுப்பள்ளியில் பிரியும் குடமுருட்டியன்று. மலைக்கோவில். ஈழநாட்டரசன் பூசி

த்துப் பேறுபெற்றது. சுவாமி-உச்சி நாதர், கற்பக நாதர், தேவியார்-அஞ்ஞாக்ஷிபம்மை. அம்மன் சந்நிதி. 2

இத்தலம் திரிச்சிராப்பள்ளி ஜங்ஷன் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே ஒன்றரை மைலிலும் கோட்டையிலிருந்து மேற்கே மூன்று மைலிலும் உள்ளது. இதற்குப்பதிகம். 3

---

# ரு. திருமூக்கீச்சரம்.

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-செவ்வழி. உ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

சாந்தம்வெண்ணீறெனப்பூசிவெள்ளஞ்சடைவைத்தவர்
காந்தளாரும்விரலேழைபோடாடியகாரணம்
ஆய்ந்துகொண்டாங்கறிபந்நிறைந்தாரவாரர்கொலோ
வேந்தன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்மெய்ம்மையே.

வெண்டலையோர்கலனாப்பலிதேர்ந்துவிரிசடைக்
கொண்டலாரும்புனல்சேர்த்துமையாளொடுங்கூட்டமா
விண்டவர்தம்மதிலெய்தபின்வேனில்வேள்வெந்தெழக்
கண்டவர்மூக்கீச்சரத்தெம்மடிகள்செய்கன்மமே. 2

மல்லையார்மும்முடிமன்னர்மூக்கீச்சரத்தடிகளைச்
செல்வராகவினையும்படிசேர்த்தியசெந்தமிழ்
நல்லராய்வாழ்பவர்காழியுண்ஞானசம்பந்தன
சொல்லவல்லாரவர்வானுலகாளவும்வல்லரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருமூக்கீச்சரம்:—இது உறையூர் என்று வழங்கும். ஸ்தலவிருக்ஷம் வில்வமாதலால் வில்வாரணியம் என்றும் வீரவாதித்த சோழன் பவனிவரும்போது கோழியொன்றினால் அவனைத் தோல்வியடைவித்துத் தம்மை இறைவன் வெளிப்படுத்திய காரணத்தால் கோழியென்றும் சொல்லப்பெறும். உதங்கமுனி பூசித்து முற்பிறப்பில் சிவத்திரவியங் கவர்ந்த மனைவியைக் கூடிய பாபம்போய் முத்தியடைந்தனர். காசிபன்மனைவி கத்துரு பூசித்துத் தன் சக்களத்தியை வஞ்சித்த பாபத்தினா லெய்திய வியாதிநீங்கி யுய்ந்தாள். கத்து

ருவின் மகன் கார்க்கோடகன் வந்து பூசித்துத் தன் பேரன்னையை வஞ்சித்த பாபத்தினு லெய்திய குருடு நீங்கி யுய்ந்தனன். கருடன் பூசித்துத் தன்னைத் தரிசித்தோர் தன் ஒலிகேட்டோர் யாவரும் பயன் பெறும் வரம்பெற்றான். ஆனிரை கவர்ந்து செல்லும் வேடன் தனக்கு இடையூறுயிருந்த கிழ நோய்ப் பசுவினை விட்ட காரணத்தால் பேற டைந்தான். வேதச்சுருதி யென்னும் அந்தணன் பூசித்துப் பேயுரு நீங்கி யுய்ந்தான். சூரவாதித்த சோழன் நாகராஜன்கன்னி காந்திமதியை மணந்து நாகலோகத்திருந்து கொணர்ந்த ஐந்து லிங்கங்களை வேறு பிரதிட்டிக்க வெண்ணியபோது 'அவை யாவும் மூலலிங்கத்துக் கலந்து சுவாமி பஞ்சவர்ணேசுராயினர். மூவேந்தரும் சேர்ந்து வழிபட்டது. பதிகத்துக் காண்கிறது. சுவாமி-பஞ்சவர்ண நாதர், தேவியார்-காந்தி மதியம்மை, தீர்த்தம்-சிவதீர்த்தம், விருக்ஷம்-வில்வம். இதற்குப்பதிகம். 1

இத்தலம் திருசிராப்பள்ளிக் கோட்டை ஸ்டேஷனுக்குமேற்கே ஒன்றேகால் மைலில் உள்ளது.

---

## சூ. திருச்சிராப்பள்ளி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-குறிஞ்சி க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நன்றுடையானைத்தீயதில்லானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமையொருபாகமுடையானைச்
சென்றடையாததிருவுடையானைச்சிராப்பள்ளிக்
குன்றுடையானைக்கூறவென்னுள்ளங்குளிரும்மே. 1

கைம்மகவேந்திக்கடுவனோடுகழைபாய்வான்
செம்முகமந்திகருவரையேறுஞ்சிராப்பள்ளி
வெம்முகவேழத்தீருரிபோர்த்தவிகிர்தாநீ
பைம்முகநாகம்மதியுடன்வைத்தல்பழியன்றே. 2

தேனயம்பாடுஞ்சிராப்பள்ளியானைத்திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங்கழுமலவூரிற்கவுணியன்

ஞானசம்பந்தனலமிகுபாடலிவைவல்லார்
வானசம்பந்தத்தவரொடுமன்னிவாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

### திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மட்டுவார்குழலாளொடுமால்விடை
இட்டமாவுகந்தேறுமிறைவனார்
கட்டுநீத்தவர்க்கின்னருளேசெயுஞ்
சிட்டர்போலுஞ்சிராப்பள்ளிச்செல்வரே. 1

அரிச்சிராப்பகலைவாராலாட்டுண்டு
சுரிச்சிராதுநெஞ்சேயொன்றுசொல்லக்கேள்
திரிச்சிராப்பள்ளியென்றலுந்தீவினை
நரிச்சிராதுநடக்குநடக்குமே. 3

தாயுமாயெனக்கேதலைகண்ணுமாய்ப்
பேயனேனையுமாண்டபெருந்தகை
தேயநாதன்சிராப்பள்ளிமேவிய
நாயனாரெனநம்வினைநாசமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிராப்பள்ளி:— இது திரிசிரன் என்பான் பூசித்துத் தன திருக்கையாப் பெற்றிருந்த காரணத்தால் இப்பெயரெய்தியது. வாயுவும் சேடனும் இகலிச்செய்த போரில் வாயுவினால் தகர்த்தெறிந்த மேருவின் மூன்று சிகரங்களுள் ஒன்றாய் தக்ஷிண கைலாயம் என்று சொல்லப் பெறுவது. இந்திரன், பிரமன், இராமன், நாககன்னியர், அநுமான் முதலியோர் பூசித்தது. அநுமான் பூசித்தகுறியாக அநும முத்திரை மலையிலுள்ளது. அகஸ்தியர் பூசித்து இம்மலையோடு பொருவ உயர்ந்திருந்த மலையொன்றைப் பாதலத்தில் அழுத்தியது. தம்மிடத்து மிக்க அன்புடைய பெண்ணொருத்தியின் பொருட்டுச் சுவாமி அவள் பிரசவகாலத்தில் வர அநுகூலப்படாத அவள்தாய் போற்சென்று மருத்துவம்பார்த்துத் தாயுமானவராயினர். இந்நகரத்து அரசனிடத்

தில் மந்திரியாயிருந்த ஸ்ரீ தாயுமானுர் சுவாமிகள் உபாசித்து சித்தியடைந்தது. ஸாரமாமுனிவர் நாகலோகத்திருந்துகொணர்ந்த செவ்வந்திப்பூவைப் பராந்தகசோழன் கவர்ந்த சிவாபராதத்தின் பொருட்டுச் சுவாமி மேற்கே திரும்பி நோக்கி உறையூரை மண்மாரி பெய்யச் செய்தது. நந்திமுதலியன கிழக்கேயிருந்தும் சுவாமி அதுமுதல் மேற்கு நோக்கியிருக்கிறார். மலையுச்சியில் உச்சிப்பிள்ளையார் கோவில். சுவாமி-தாயுமானவர், தேவியார்-மட்டுவார்குழலி. தீர்த்தம்-நன்றுடையான் தீர்த்தம், தீயதில்லான் தீர்த்தம் முதலியன. இதற்குப் பதிகம். 2

இத்தலம் திரிசிராப்பள்ளிக்கோட்டை ஸ்டேஷனுக்குக் கிழக்கே அரைமைலில் உள்ளது.

---

## எ. திருவெறும்பியூர்.

### திருநாவுக்கரசு நாயனுர்.

#### திருத்தாண்டகம். சு-ம் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பன்னிபசெந்தமிழறியேன்கவியேன்மாட்டேனெண்ணேடுபண்ணிறைந்தகலைகளாய, தன்னையுந்தன்றிறத்தறியாப்பொறியிலேனைத்தன்றிறமுமறிவித்துநெறியுங்காட்டி, அன்னையுமத்தனையும்போலவன்பாயடைந்தேனைத் தொடர்ந்தென்னையாளாக்கொண்ட, தென்னெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனே.

பளிங்கினிழலுட்பதித்தசோதியானைப்பசுபதியைப்பாசுபதவேடத்தானை, விளிந்தெழுந்தசலந்தரனைவீட்டினானைவேதியனைவிண்ணவனைமேவிவையம், அளந்தவனைநான்முகனையல்லதீர்க்குமருமருந்தையாமாறறிந்தெனுள்ளந், தெளிந்தெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனே. 2

திருச்சிற்றம்பலம்.

---

திருவெறும்பியூர்:—தேவர்கள் எறும்புருவம் எடுத்துப் பூசித்த காரணம் பற்றி வந்த பெயர். மலைக்கோயில். பிரம்மதேவர், நை

மிசமுனிவர் முதலியோர் பூசித்தது பதிகத்துக் காணத்தக்கது. சுவாமி-எறும்பீசர், தேவியார்-நறுங்குழனுயகி. இதற்குப் பதிகம். 2

இத்தலம் திருவெறும்பியூர் ஸ்டேஷனி லிருந்து வடமேற்கே கற்சாலையில் அரைமைலில் உள்ளது.

## அ. திருநெடுங்களம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-பழந்தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மறையுடையாய்தோ லுடையாய்வார்சடைமேல்வளரும்
பிறையுடையாய்பிஞ்ஞகனேயென் றுன்னைப்பேசினல்லாற்
குறையுடையார்குற்றமோராய்கொள்கையினலுயர்ந்த
நிறையுடையாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. 1

கனைத்தெழுந்தவெண்டிரைசூழ்கடலிடைநஞ்சுதன்னைத்
தினைத்தனையாமிடற்றில்வைத்ததிருந்தியதேவநின்னை
மனத்தகத்தோர்பாடலாடல்பேணியிராப்பகலும்
நினைத்தெழுவாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. 2

நீடவல்லவார்சடையான்மேயநெடுங்களத்தைச்
சேடர்வாழுமாமறுகிற்சிரபுரக்கோனலத்தால்
நாடவல்லபனுவன்மாலைஞானசம்பந்தன்சொன்ன
பாடல்பத்தும்பாடவல்லார்பாவம்பறையுமே. 11

திருச்சிற்றம்பலம்.

**திருநெடுங்களம்:**—இது திருநட்டாங்குளமென வழங்கும். இங்கு வங்கிய சோழன் பூசித்துப் பேறுபெற்றனன். சுவாமி-நித்யசுந்தரர். தேவியார்-ஒப்பிலா நாயகி, இதற்குப்பதிகம். 1

இத்தலம் திருவெறும்பியூர் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே ரெயில் லயனுக்குத் தெற்கே எட்டு மைலில் உள்ளது.

## ௯. மேலைத்திருக்காட்டுப்பள்ளி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண்-கொல்லி ௩-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

வாருமன்னும்முலைமங்கைபோர்பங்கினன்
ஊருமன்னும்பலியுண்பதும்வெண்டலை
காருமன்னும்பொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
நீருமன்னுஞ்சடைநிமலர்தந்நீர்மையே. 1

திருத்தனார்நீள்சடைமதியொடுபாம்பணி
கருத்தனார்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
அருத்தனாழகமர்மங்கையோர்பாகமாய்
பொருத்தனார்கழலிணைபோற்றுதல்பொருளதே. 2

பொருபுனல்புடையணிபுறவநன்னகர்மன்னன்
அருமறையவைவல்லவணிகொள்சம்பந்தன்சொல்
கருமணிமிடற்றினன்கருதுகாட்டுப்பள்ளி
பரவியதமிழ்சொலப்பறையுமெய்ப்பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாட்டுப்பள்ளிமகிழ்ந்துறைவீர்க்கெலாங்
கேட்டுப்பள்ளிகண்டீர்கெடுவீரிது
ஓட்டுப்பள்ளிவிட்டோடலுறாமுனங்
காட்டுப்பள்ளியுளான்கழல்சேர்மினே. 1

மாட்டைத்தேடிமகிழ்ந்துநீர்நும்முளே
நாட்டுப்பொய்யெலாம்பேசிடுநாணிலீர்
கூட்டைவிட்டுயிர்போவதன்முன்னமே
காட்டுப்பள்ளியுளான்கழல்சேர்மினே. 2

எண்ணிலாவரக்கன்மலையேந்திட
எண்ணிநீண்முடிபத்துமிறுத்தவன்
கண்ணுளார்கருதுங்காட்டுப்பள்ளியை
நண்ணுவாரவர்தம்வினைநாசமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

மேலைத்திருக்காட்டுப்பள்ளி:— இது தனது நாயகனான பராந்தகசோழன் தனக்குக் கொடுத்த பரமசிவனுக்குரிய செவ்வந்திப் பூவினைச் சிவாபராதத்துக் கஞ்சி அநுபவியாது மண்மாரிக்குத் தப்பின சோழராஜ பத்னிக்கு அநுக்கிரகித்த தலம். சுவாமி-தீயாடியப்பர். தேவியார்-வார்கொண்டமுலையாள். இதற்குப் பதிகம். 2

இத்தலம் பூதலூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலையில் 5 மைலில் காவிரியினின்றும் குடமுருட்டி பிரியும் தலைப்பில் குடமுருட்டிக்குத் தென் கரையில் உள்ளது.

---

# ௧0. திருவாலம்பொழில்.

## திருநாவுக்கரசு நாயனார்

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கருவாகிக்கண்ணுதலாய்நின்றான்றன்னைக்கமலத்தோன்றலையரிந்தகாபாலிய்யை, உருவார்ந்தமலைமகளோர்பாகத்தானைப் புணர்வெலாமானானைப்போகமாகி, வருவானைவலஞ்சுழியெம்பெருமான்றன்னைமறைக்காடுமாவடுதண்டுறையுமேய, திருவானைத் தென்பரம்பைக்குடியின்மேயதிருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. 1

உருமூன்றாயுணர்வின்கண்ணொன்றானானையோங்காரமெய்ப்பொருளையுடம்பினுள்ளால், கருவீன்றவெங்களவையறிவான்றன்னைக்காலனைத்தன்கழலடியாற்காய்ந்துமாணிக், கருளீன்றவாரமுதையமரர்கோனைபள்ளூரியெம்பெருமானென்பார்க்கென்றுந், திருவீன்றதென்பரம்பைக்குடியின்மேயதிருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. 3

திருச்சிற்றம்பலம்.

திருவாலம்பொழில்:— இது வசுக்கள் பூசித்து வழிபட்டது. பஸ்சிமாபிமுக சந்நிதி. சுவாமி-ஆத்மநாதர், தேவியார்-ஞானம்பிகை. தீர்த்தம், காவிரி, விருக்ஷம், ஆல் இதற்குப்பதிகம், 1

இத்தலம் தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலையில் ஆறுமைலிலுள்ள திருக்கண்டியூரினின்றும் மேற்கே மட்சாலையில் இரண்டு மைலில் உள்ள திருப்பூந்துருத்தியினின்றும் மேற்கே ஒரு மைலில் உள்ளது.

---

# கக. திருப்பூந்துருத்தி.

## திருநாவுக்கரசு நாயனர்

### திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நில்லாதநீர்சடைமேனிற்பித்தானைநினையாவென்னெஞ்சைநினைவித்தானைக்,கல்லாதனவெல்லாங்கற்பித்தானைக்காணாதனவெல்லாங்காட்டினானைச், சொல்லாதனவெல்லாஞ்சொல்லியென்னைத்தொடர்ந்திங்கடியேனையாளாக்கொண்டு,பொல்லாவென்னேய்தீர்த்தபுநிதன்றன்னைப் புண்ணியனைப்பூந்துருத்திக்கண்டேனானே. 1

மறுத்தானைமலைகோத்தங்கெடுத்தான்றன்னைமணிமுடிபோடிருபதுதோணெரியக்காலால், இறுத்தானையெழுநரம்பினிசைகேட்டானையெண்டிசைக்குங்கண்ணானைச்சிரமேலொன்றை, அறுத்தானையமரர்களுக்கமுதீந்தானையாவர்க்குந்தாங்கொணாநஞ்சமுண்டு, பொறுத்தானைப்புண்ணியனைப்புநிதன்றன்னைப்பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனானே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பூந்துருத்தி:— இது இந்திரன், காசிபர், சோழன், முதலியோர் பூசித்தது. திருவையாற்று ஸப்தஸ்தான தலங்களில் ஒன்று. இங்கு ஞானசம்பந்த மூர்த்திகளுக்குத் தரிசனந்தர நந்திகள் விலகினவென்று கூறுப. ஸ்ரீ வாகீசமூர்த்திகள் திருமடங் கட்டிக்கொண்டு எழுந்தருளியிருந்து அநேகந் திருப்பதிகங்கள் அருளிய தலம். பாண்டி நாட்டினின்றும் எழுந்தருளிய ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான் முத்

துச்சிவிகையினை ஸ்ரீ வாகீச மூர்த்திகள் ஒருவரும் அறியாது தாங்கி வந்து "அப்பர் எங்குற்றார்" என வினவியபோது, தேவரீரைத்தாங்கி வரும் பெருவாழ்வுபெற்று இங்குற்றேன்" என்று வெளிப்பட்டு அளவளாவிய க்ஷேத்ரம். ஸ்வாமி பதிகத்தில் "ஆதிபுராணன்" எனவும் "பொய்பிலி" எனவும் ஓதப்பெற்றிருக்கிறார். சுவாமி-புஷ்பவந நாதர் தேவியார்-அழகார்ந்தநாயகி, இதற்குப் பதிகம். 3

இத்தலம் தஞ்சாவூர் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள திருக்கண்டியூருக்கு மேற்கே இரண்டு மைலில் உள்ளது.

---

## கஉ. திருக்கண்டியூர்வீரட்டம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-கொல்லி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வினவினேனறியாமையில்லுரைசெய்ம்மினீரருள்வேண்டுவீர்
கனைவிலார்புனற்காவிரிக்கரைமேயகண்டியூர்வீரட்டன்
றனமுனேதனக்கின்மையோதமராயினாண்டமாளத்தான்
வனனில்வாழ்க்கைகொண்டாடிப்பாடியிவ்வையமாப்பலிதேர்ந்ததே.

உள்ளவாறெனக்குரைசெய்மின்னுயர்வாயமாதவம்பேணுவீர், கள்ளவிழ்பொழில்சூழுங்கண்டியூர்வீரட்டத்துறை காதலான், பிள்ளைவான்பிறைசெஞ்சடைம்மிசைவைத்ததும் பெருநீரொலி, வெள்ளந்தாங்கியதென்கொலோமிகுமங்கையாளுடனாகவே. 2

கருத்தனைப்பொழில்சூழுங்கண்டியூர்வீரட்டத்துறைகள்வனை, அருத்தனைத்திறமடியர்பான்மிகக்கேட்டுகந்தவினவுரை, திருத்தமாந்திகழ்காழிஞானசம்பந்தன்செப்பியசெந்தமிழ்,ஒருத்தராகிலும்பலர்களாகிலுமுரைசெய்வாருயர்ந்தார்களே

திருச்சிற்றம்பலம்.

---

### திருநாவுக்கரசு நாயனர்.

திருவிருத்தம், ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானவர்தானவர்வைகன்மலர்கொணர்ந்திட்டிறைஞ்சித்
தானவர்மால்பிரமன்னறியாததகைமையினன்

ஆனவனாதிபுராணனன்றேடியப்பன்றியெய்த
கானவனைக்கண்டியூரண்டவாணர்தொழுகின்றதே. 1

பண்டங்கறுத்ததோர்கையுடையான்படைத்தான்றலையை
உண்டங்கறுத்ததுமூரொடுநாடவைதானறியுங்
கண்டங்கறுத்தமிடறுடையான்கண்டியூரிருந்த
தொண்டர்பிரானைக்கண்டீரண்டவாணர்தொழுகின்றதே. 3

மாய்ந்தனதீவினைமங்கினநோய்கண்மறுகிவிழத்
தேய்ந்தனபாவஞ்செறுக்ககிலாநம்மைச்செற்றநங்கைக்
காய்ந்தபிரான்கண்டியூரெம்பிரானங்கமாறினையும்
ஆய்ந்தபிரானல்லனோவடியேனையாட்கொண்டவனே. 9

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கண்டியூர்:—இது அட்ட வீரட்ட ஸ்தலங்களுள் பிரம்ம சிரஸ்சேதஞ் செய்த தலம். ஞானசம்பந்தர் திருப்பதிகத்து 6-ந் திருப்பாட்டினும் ஸ்ரீ வாகீஸர் திருப்பதிகத்து 3-ந் திருப்பாட்டினும் ஓதியிருத்தல்காண்க. திருவையாற்று ஸப்தஸ்தான க்ஷேத்ரங்களில் ஒன்று. ஸதாநந்தர் பூசித்து வழிபட்டது. திருஞான சம்பந்தர் திருப்பதிகம் வினுவுரைப்பதிகமாய் சிவபாத்வம் கூறும். சுவாமி-வீரட்டேசுரர், தேவியார்-மங்கள நாயகி, இதற்குப்பதிகம். 2

இத்தலம் தஞ்சாவூர் ஸ்டேஷனுக்கு வடக்கே கற்சாலையில் 6-மைலில் உள்ளது.

---

## கரு. திருச்சோற்றுத்துறை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

செப்பநெஞ்சேநெறிகொள்சிற்றின்பம்
துப்பனென்னாதருளேதுணையாக
ஒப்பரொப்பர்பெருமானொளிவெண்ணீற்
றப்பர்சோற்றுத்துறைசென்றடைவோமே. 1

பாலுநெய்யுந்தயிரும்பயின்றாடித்
தோலுநூலுந்துதைந்தவரைமார்பர்
மாலுஞ்சோலைபுடைசூழ்மடமஞ்ஞை
ஆலுஞ்சோற்றுத்துறைசென்றடைவோமே. 2
அந்தண்சோற்றுத்துறையெம்மாதியைச்
சிந்தைசெய்ம்மினடியாராயினீர்
சந்தம்பரவுஞானசம்பந்தன்
வந்தவாறேபுனைதல்வழிபாடே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மூத்தவனாயுலகுக்குமுந்தினானேமுறைமையாலெல்லாம் படைக்கின்றானே, ஏத்தவனாயேழுலகுமாயினானேயின்பனாய்த் துன்பங்களைகின்றானே, காத்தவனாயெல்லாந்தான்காண்கின்றானேகடுவினையேன்றீவினையைக்கண்டுபோகத், தீர்த்தவனே திருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவனேயுன்னபயநானே. 1

நம்பனேநான்மறைகளாயினானேநடமாடவல்லானேஞானக்கூத்தா, கம்பனேகச்சிமாநகருளானேகடிமதில்கண்மூன்றினையும்பொடியாவெய்த, அம்பனேயளவிலாப்பெருமையானேயடியார்கட்காரமுதேயானேறுஞ்,செம்பொனேதிருச்சோற்றுத்துறையுளானேதிகழொளியேசிவனேயுன்னபயநானே. 5

வானவனாய்வண்மைமனத்தினானேமாமணிசேர்வானோர் பெருமானீயே,கானவனாயேனத்தின்பின்சென்றானேகடியவரணங்கண்மூன்றட்டானே, தானவனாய்த்தண்கயிலைமேவினானேதன்னொப்பாரில்லாதமங்கைக்கென்றுந், தேனவனேதிருச்சோற்றுத்துறையுளானேதிகழொளியேசிவனேயுன்னபயநானே. 7

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-கௌசிகம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அழனீரொழுகியனையசடையும்
உழையீருரியும்முடையானிடமாம்
கழைநீர்முத்துங்கனகக்குவையுஞ்
சுழனீர்ப்பொன்னிச்சோற்றுத்துறையே. 1

பண்டைவினைகள்பறியநின்ற
அண்டமுதல்வனமலன்னிடமாம்
இண்டைகொண்டன்பிடையறாத
தொண்டர்பரவுஞ்சோற்றுத்துறையே. 2

இறந்தாரென்புமெருக்குஞ்சூடிப்
புறங்காட்டாடும்புனிதன்கோயில்
சிறந்தார்சுற்றந்திருவென்றின்ன
துறந்தார்சேருஞ்சோற்றுத்துறையே. 7

இலையாலன்பாலேத்துமவர்க்கு
நிலையாவாழ்வைநீத்தாரிடமாம்
தலையாற்றாழுந்தவத்தோர்க்கென்றுந்
தொலையாச்செல்வச்சோற்றுத்துறையே. 9

சுற்றார்தருநீர்ச்சோற்றுத்துறையுள்
முற்றாமதிசேர்முதல்வன்பாதத்
தற்றாரடியாரடிநாயூரன்
சொற்றானிவைகற்றார்துன்பிலரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருச்சோற்றுத்துறை:**—இது கௌதமாஸ்ரமம். பஞ்சகாலத்தில் சிவபக்தர்களை வைத்துக்கொண்டு ரக்ஷித்த தலம். துறந்தார் சேரும் சோற்றுத்துறை என்னுங் குறிப்புத் தேவாரத்துக் காண்க. திருவையாற்று ஸப்த ஸ்தான தலங்களில் ஒன்று. அருளாளர் என்னும் பிராம்மண பக்தருக்கு அக்ஷயபாத்ரம் அநுக்கிரகித்தது. இந்திரன் சூர்யன் முதலியோர் பூசித்தது. சூர்யபூஜை திருநேரிசையில் அ-ந்

திருப்பாட்டிற் காண்க. சுவாமி-தோலையாச் செல்வர், தேவியார்-ஒப்பிலாவம்மை, சோறளித்தமைபற்றி ஸ்வாமி யம்மையார் ஓதனவநேசுரர், அன்னபூரணி எனவும் கூறப்பெறுவர். இதற்குப் பதிகம், 6

இத்தலம் திருக்கண்டியூரினின்றும் கிழக்கே ஒன்றரை மைலிலுள்ள திருவேதிகுடியினின்றும் வடக்கே கரைமார்க்கமாய் இரண்டு மைலில் உள்ளது. குடமுருட்டியைப் பரிசினாற் கடக்கவேண்டும்.

---

## கச. திருவேதிகுடி.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-சாதாரி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீறுவரியாடரவொடாமைமனவென்புநிரைபூண்பரிடபம்
ஏறுவரியாவருமிறைஞ்சுகழலாதியரிருந்தவிடமாம்
தாறுவிரிபூகமலிவாழைவிரைநாறவிணைவாளைமடுவில்
வேறுபிரியாதுவிளையாடவளமாரும்வயல்வேதிகுடியே. 1

சொற்பிரிவிலாதமறைபாடிநடமாடுவர்தொலாணையுரிவை
மற்புரிபுயத்தினிதுமேவுவரெந்நாளும்வளர்வானவர்தொழத்
துற்பரியநஞ்சமுதமாகமுனயின்றவரியன்றதொகுசீர்
வெற்பரையன்மங்கையொருபங்கர்நகரென்பர்திருவேதிகுடியே

கந்தமலிதண்பொழினன்மாடமிடைகாழிவளர்ஞானமுணர்சம்
பந்தன்மலிசெந்தமிழின்மாலைகொடுவேதிகுடியாதிகழலே
சிந்தைசெயவல்லவர்கணல்லவர்களென்னநிகழ்வெய்தியிமையோர்
அந்தவுலகெய்தியரசாளுமதுவேசரதமாணைநமதே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநாவுக்கரசு நாயனார்.

திருவிருத்தம், ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கையதுகாலெரிநாகங்கனல்விடுசூலமது
வெய்யதுவேலைநஞ்சுண்டவிரிசடைவிண்ணவர்கோன்

செய்யினினீலமணங்கமழுந்திருவேதிகுடி
ஐயனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. 1

வருத்தனைவாளரக்கன்முடிதோளொடுபத்திறுத்த
பொருத்தனைப்பொய்யாவருளனைப்பூதப்படையுடைய
திருத்தனைத்தேவர்பிரான்றிருவேதிகுடியுடைய
அருத்தனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே.

திருச்சிற்றம்பலம்.

திருவேதிகுடி;—இது வேதம் பூசித்த தலங்களுள் ஒன்று. விநாயகரும் வேதவிநாயகர் எனவழங்கப் பெறுவர். திருவையாற்று ஸப்தஸ்தான தலங்களில் ஒன்று. சுவாமி-வேதபுரீஸ்வரர், தேவியார்-மங்கையர்க்கரசி, இதற்குப் பதிகம். 2

இத்தலம் திருக்கண்டியூரினின்றும் கிழக்கே மட்சாலையில் ஒன்றரை மைலில் உள்ளது.

## கரு. திருத்தென்குடித்திட்டை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-தோல்லி. ந-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முன்னைநான்மறையவைமுறைமுறைகுறையொடும்
தன்னதாடொழுதெழநின்றவன்றன்னிடம்
மன்னுமாகாவிரிவந்தடிவருடநல்
செந்நெலார்வளவயற்றென்குடித்திட்டையே. 1

ஊறினாரோசையுள்ளொன்றினொன்றிமால்
கூறினாரமர்தருங்குமரவேடாதையூர்
ஆறினார்பொய்யகத்தையுணர்வெய்திமெய்
தேறினார்வழிபடுந்தென்குடித்திட்டையே. 6

கானலைக்கும்மவன்கண்ணிடந்தப்பநீள்
வானலைக்குந்தவத்தேவுவைத்தானிடம்
தானலைத்தெள்ளமூர்தாமரைத்தண்டுறை
தேனலைக்கும்வயற்றென்குடித்திட்டையே. 7

தேனலார்சோலைசூழ்தென்குடித்திட்டையைக்
கனலார்கடிபொழில்சூழ்தருங்காழியுள்
ஞானமார்ஞானசம்பந்தனசெந்தமிழ்
பானலார்மொழிவலார்க்கில்லையாம்பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தென்குடித்திட்டை:— இது திட்டையெனவழங்கும். வசிஷ்டர், கௌதமர், ஆதிசேடன், காமதேனு முதலியோர் பூசித்தது. சுவாமி-பசுபதிநாதர், தேவியார்-உலகநாயகி. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் திட்டை ஸ்டேஷனிலிருந்து மேற்கே முக்கால் மைலில் உள்ளது.

---

## கசூ. திருப்புள்ளமங்கை.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாலுந்துறுதிரளாயினபரமன்பிரமன்றான்
போலுந்திறலவர்வாழ்தருபொழில்சூழ்புளமங்கைக்
காலன்றிறலறச்சாடியகடவுள்ளிடங்கருதில்
ஆலந்துறைதொழுவார்தமையடையாவினைதானே. 1

மலையான்மகள்கணவன்மலிகடல்சூழ்தருதன்மைப்
புலையாயினகளைவானிடம்பொழில்சூழ்புளமங்கைக்
கலையான்மலிமறையோரவர்கருதித்தொழுதேத்த
அலையார்புனல்வருகாவிரியாலந்துறையதுவே. 2

பொந்தின்னிடைத்தேனூறியபொழில்சூழ்புளமங்கை
அந்தண்புனல்வருகாவிரியாலந்துறையானைக்
கந்தம்மலிகமழ்காழியுட்கலைஞானசம்பந்தன்
சந்தம்மலிபாடல்சொலியாடத்தவமாமே. 11

திருச்சிற்றம்பலம்.

திருப்புள்ளமங்கை:— இது சிவபெருமான் விஷபானஞ் செய்தருளிய தலமென்று கருதப்படுகிறபடியால் ஆலந்துறை யென வழக்கிலும் பதிகத்தும் காணப்பெறுகிறது. வேளாளப் பசுபதிகோவி லெனவழங்கும். பிரம்மதேவர் பூசித்துப் போற்றியது. புள்ளமங்கை யென்பதற்கேற்ப கோபுரத்திற் கழுகுகள் நிரந்தரமாக வசிப்பதாகத் தெரிகிறது. "பொந்தின்னிடைத் தேனூறிய" என்று பதிகத்திற் கூறியாங்கு எங்கும் பொந்துக்களிலெல்லாம் தேன்கூடு காணப்பெறும். திருச்சக்கரப்பள்ளி ஸப்த ஸ்தலங்களில் ஒன்று. சுவாமி-ஆலந்துறை நாதர், தேவியார்-அல்லியங்கோதை. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் அய்யன்பேட்டை ஸ்டேஷனுக்கு மேற்கே முக்கால் மைலில் திருச்சக்கரப்பள்ளியினின்றும் மேற்கே கற்சாலையில் ஒன்றே கால் மைல் சென்று வடக்கேதிரும்பிக் கால்மைலில் உள்ளது.

---

# கள. திருச்சக்கரப்பள்ளி.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

பண்-கொல்லி ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

படையினர்வெண்மழுப்பாய்புலித்தோலரை
உடையினருமையொருகூறனரூர்வதோர்
விடையினர்வெண்பொடிப்பூசியார்விரிபுனல்
சடையினருறைவிடஞ்சக்கரப்பள்ளியே. 1

பாடினாருமறைபனிமதிசடைமிசைச்
சூடினார்படுதலைதுன்னெருக்கதனொடும்
நாடினாரிடுபலிநண்ணியோர்காலனைச்
சாடினார்வளநகர்சக்கரப்பள்ளியே. 2

தண்வயல்புடையணிசக்கரப்பள்ளியெம்
கண்ணுதலவனடிக்கழுமலவளநகர்
நண்ணியசெந்தமிழ்ஞானசம்பந்தன்சொல்
பண்ணியவிவைசொலப்பறையுமெய்ப்பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

திருச்சக்கரப்பள்ளி:— இது சக்ரவாகம் பூசித்தகாரணத்தால் இப்பெயரெய்தியது. ஜயந்தன் தேவர்முதலியோரும் பூசித்தனர். இத்தலம் ஸ்ரீ சிவரஹஸ்யம், பிரம்மகைவர்த்தபுராணம், இலிங்கபுராணம், புண்டரீகபுர மாஹாத்மியம், தேஜிச்வநபுராணம் முதலியவற்றுள் மிகப்பாராட்டியுள்ள ஸப்த ஸ்தலங்களுள் முதன்மையானது. ஸப்தஸ்தலங்கள், 1. திருச்சக்கரப்பள்ளி, 2. அரிமங்கை, 3. சூலமங்கை, 4. நந்திமங்கை, 5. பசுபதிமங்கை, 6. தாழைமங்கை, 7. புள்ளமங்கை என்பன. இதனை

சக்ரவாகோ ஹரிர்ப்ரஹ்மா நந்தீ ச பசுபதிஸ் ததா: |
சதுர்வக்த்ரஸ்ச ஸப்தைதே ஸப்தஸ்தல ஸம்பூஜகா: ||

என்னும் ஸ்லோகத்தாலுமறிக.

ப்ராஹ்மி, மாஹேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, மாஹேந்திரி, சாமுண்டி என்னும் ஸப்தமங்கைகளால் முறையே பூஜிக்கப் பெற்றமையின் இவை ஸப்தமங்கள க்ஷேத்ரங்களென்றும் வழங்கப்பெறும். நாதஸர்மா என்னும் ப்ராம்மணோத்தமர் தன்பத்நியாகிய அநவித்யையோடும் தேவகாத தீர்த்தத்தில் மூழ்கி நியமமாக இவ்வேழு க்ஷேத்ரங்களையும் வழிபட்டுப் பேறுபெற்றனர். சுவாமி-சக்ரவாகேஸ்வரர், தேவியார்-தேவநாயகி. இதற்குப் திகம் 1.

இத்தலம் துருக்கர்களால் ஜீர்ணமடைந்து பரிதாபநிலையி லிருந்ததைத் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனம் மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் ஜீர்ணோத்தாரணஞ்செய்து உந்நதநிலைக்குக் கொணர்ந்து சிறப்புற்று வருகிறது.

இத்தலம் ஐயம்பேட்டை ஸ்டேஷனுக்கு மேற்கே முக்கால்மைலில் உள்ளது.

---

# கஅ. திருக்கருகாவூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-கௌசிகம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முத்திலங்குமுறுவல்லுமையஞ்சவே
மத்தயானைமறுகவ்வுரிவாங்கியக்

கத்தைபோர்த்தகடவுள்கருகாவூரெம்
அத்தர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. 1

விழுதவல்லசடையான்றனையுள்குவார்க்
கழுதநீழலகலாததோர்செல்வமாங்
கழுதமுல்லைகமழ்கின்றகருகாவூர்
அமுதர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. 2

கலவமஞ்ஞையுலவுங்கருகாவூர்
நிலவுபாடலுடையான்றன்னீள்கழல்
குலவுஞானசம்பந்தனசெந்தமிழ்
சொலவல்லாரவர்தொல்வினைதீருமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

குருகாம்வயிரமாங்கூறுநாளாங்கொள்ளுங்கிழமையாங் கோளேதானும், பருகாவமுதமாம்பாலினெய்யாம்பழத்தினிரதமாம்பாட்டிற்பண்ணும், ஒருகாலுமையாளோர்பாகனுமாமுண்ணின்றநாவிற்குரையாடியாம், கருவாயுலகுக்குமுன்னேதோன்றுங்கண்ணுங்கருகாவூரெந்தைதானே. 1

பூத்தானும்பூவினிறத்தானுமாம்பூக்குளால்வாசமாய்மன்னிநின்ற, கோத்தானுங்கோல்வளையாள்கூறனாகுங்கொண்டசமயத்தார்தேவனாகி, எத்தாதார்க்கென்றுமிடரேதுன்பமீவானுமென்னெஞ்சத்துள்ளேநின்று, காத்தானுங்காலனடையாவண்ணங்கண்ணுங்கருகாவூரெந்தைதானே. 3

திருச்சிற்றம்பலம்.

---

**திருக்கருகாவூர்:**—இது திருக்களாவூர் எனவழங்கும். ஸ்தல விருக்ஷம் முல்லை யாதலின் முல்லைவநம், மாதவீவனம் எனவும், அநாதையான ஒரு பெண்ணின் கர்ப்பங்காத்த காரணத்தால் கருகாவூர் எனவுங் கூறப்பெறும். இதுகாரணம்பற்றியே அம்பிகை கர்ப்பாக்ஷகி என வழங்கப்பெறுவாள். லிங்கம் நீண்ட சைகதலிங்கமாய் முல்லைக்

கொடிசுற்றிய அடையாளத்துடன் விளங்குகிறது. சந்திரன் பூசித்தது. சுவாமி-முல்லைவநநாதர், தேவியார்-கரும்பனையாள், தீர்த்தம்-க்ஷீரதீர்த்தம், விருக்ஷம்-முல்லை. இதற்குப் பதிகம் 2.

இத்தலம் பாபவிநாசம் ஸ்டேஷனிலிருந்து தெற்கே சாலியமங்கலம் கற்சாலையில் நான்குமைலில் வெட்டாற்றின் தென்கரையில் உள்ளது.

## கக௬. திருப்பாலைத்துறை.

### திருநாவுக்கரசு நாயனர்

திருக்குறுந்தொகை. ரு ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீலமாமணிகண்டத்தர்நீள்சடைக்
கோலமாமதிகங்கையுங்கூட்டினர்
சூலமான்மழுவேந்திச்சுடர்முடிப்
பானெய்யாடுவர்பாலைத்துறையரே. 1

கவளமாகளிற்றி னுரிபோர்த்தவர்
தவளவெண்ணகைமங்கையொர்பங்கினர்
திவளவானவர்போற்றித்திசைதொழும்
பவளமேனியர்பாலைத்துறையரே. 2

உரத்தினலரக்க னுயர்மாமலை
நெருக்கினனைநெரித்தவன்பாடலும்
இரக்கமாவருள்செய்தபாலைத்துறை
கரத்தினற்றொழுவார்வினைபோயுமே. 11

திருச்சிற்றம்பலம்.

திருப்பாலைத்துறை:— இது முன்னர் பாலைவனமாயிருந்தமையின் இப்பெயரெய்தியது. சுவாமி வியாக்ரஸம்ஹாரஞ் செய்து அதன் தோலை அணிந்ததலம். அம்பாள் ஆலயம் தக்ஷிணத்தில் தனியாய் உள்ளது. சுவாமி-பாலைவநநாதர், தேவியார்-தவளவெண்ணகையாள். இதற்குப் பதிகம் 1.

இத்தலம் பாபவிநாசம் ஸ்டேஷனுக்கு வடகிழக்கே மட்சாலையில் ஒருமைலில் உள்ளது.

# உ0. திருநல்லூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-குறிஞ்சி க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொட்டும்பறைசீராற்குழுமவனலேந்தி
நட்டம்பயின்றாடுநல்லூர்ப்பெருமானை
முட்டின்றிருபோதுமுனியாதெழுந்தன்பு
பட்டமனத்தார்களறியார்பாவமே. 1

எறிலெருதேறுமெழிலாயிழையோடும்
வேறும்முடனுமாம்விகிர்தரவரென்ன
நாறும்மலர்ப்பொய்கைநல்லூர்ப்பெருமானைக்
கூறும்மடியார்கட்கடையாகுற்றமே. 2

தண்ணம்புனற்காழிஞானசம்பந்தன்
நண்ணும்புனல்வேலிநல்லூர்ப்பெருமானை
வண்ணம்புனைமாலைவைகலேத்துவார்
விண்ணுந்நிலனுமாய்விளங்கும்புகழாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்

பண்-திருவிருத்தம். ச-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அட்டுமினில்பலியென்றென்றகங்கடைதோறும்வந்து
மட்டவிழுங்குழலார்வளைகொள்ளும்வகையென்கொலோ
கொட்டியபாணியெடுத்திட்டபாதமுங்கோளரவும்
நட்டநின்றாடியநாதர்நல்லூரிடங்கொண்டவரே. 1

தேற்றப்படத்திருநல்லூரகத்தேசிவனிருந்தால்
தோற்றப்படச்சென்றுகண்டுகொள்ளார்தொண்டர்துன்மதியால்
ஆற்றிற்கெடுத்துக்குளத்தினிற்றேடியவாதரைப்போல்
காற்றிற்கெடுத்துலகெலாந்திரிதர்வர்காண்பதற்கே. 6

காட்கொண்டதாமரைப்பூத்தடஞ்சூழ்ந்தநல்லூரகத்தே
கீட்கொண்டகோவணங்காவென்றுசொல்லிக்கிறிபடத்தான்
வாட்கொண்டநோக்கிமனைவியொடுமங்கோர்வாணிகனை
ஆட்கொண்டவார்த்தையுரைக்குமன்றோவிவ்வகலிடமே. 7

திருச்சிற்றம்பலம்.

---

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நினைந்துருகுமடியாரைநையவைத்தார்நில்லாமேதீவினைக
ணீங்கவைத்தார், சினந்திருகுகளிற்றுரிவைப்போர்வைவைத்
தார்செழுமதியின்றளிர்வைத்தார்சிறந்துவானோர், இனந்து
ருவிமணிமகுடத்தேறத்துற்ற வினமலர்கள்போதவிழ்ந்தும
துவாய்ப்பில்கி, நனைந்தனைய திருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. 1

குலங்கிளரும்வருதிரைகளேழும்வைத்தார்குருமணிசேர்
மலைவைத்தார்மலையைக்கையால், உலங்கிளரவெடுத்தவன்
றோண்முடியுநோவவொருவிரலாலுறவைத்தாரிறைவாவென்
று, புலம்புதலுமருளொடுபோர்வாளும்வைத்தார்புகழ்வைத்
தார்புரிந்தாளாக்கொள்ளவைத்தார், நலங்கிளருந்திருவடியெ
ன்றலைமேல்வைத்தார்நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருநல்லூர்:—இது ஸ்ரீ வாகீசமூர்த்திகளால் "வடபாற்கயிலையும் தென்பானல்லூருந் தம்வாழ்பதியே" என்று மிகப்பாராட்டப்பெற்றதலம். கோச்செங்கட் சோழநாயனாராற் கட்டப்பெற்ற மாடக்கோயில்களுள் ஒன்று. திருநாவுக்கரசுநாயனார் திருச்சத்திமுற்றத்திலே "பூவாரடிச்சுவடு என்மேற் பொறித்துவை" என்று விண்ணப்பஞ்செய்ய சுவாமி "நல்லூருக்குவா" என அருளி இங்குவந்தபோது "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்று திருவடிசூட்ட நாயனார் ஆராமையால் அதனைப் பதிகத்துப்பாராட்டி யருளினார்கள். இத்தலத்தையடுத்த திருவாறையிலே திருவவதாரஞ்செய்த அமர்நீதிநாயனார் இங்குவந்து திருமடங்கட்டிச் சிவனடியார்களுக்குக் கந்தைகீள்கோவணம் முதலியகொடுக்கும் நியமமுடையவராய்க் கடைசியில் சிவபெருமானது கோவணம் நேர்நிற்கத் தாம்தம்மனைவி புத்ரருடன் துலை

யேறி அத்தூலயே விமானமாகச் சிவபதம் அடைந்தது. இது அப்பமூர்த்திகளது திருவிருத்தத்துள் சிறப்பித்துள்ளது. சிவலிங்கம் ஸ்வர்ணச்சாயையோடும் பஞ்சவர்ணத்தோடும் விளங்கும் மஹிமை உடையது. பிருங்கி வண்டுருபமாய்ப் பூசித்தகாரணத்தால் திருமேனியில் த்வாரங்கள் உள்ளன. அகஸ்தியருக்குக் கல்யாணகோலம் காட்டிய தலமாதலின் கலியாணகோலமும் அகஸ்தியலிங்கமும் கர்ப்பக்கிருஹத்திலிருக்கின்றன. சுவாமி-பெரியாண்டேசுவரர், கல்யாணசுந்தரேசர், பஞ்சவர்ணேசர், தேவியார்-பருவசுந்தரி, கல்யாணசுந்தரி, தீர்த்தம்-ஸப்தஸாகாதீர்த்தம். இதற்குப்பதிகம் 5.

இத்தலம் சுந்தரப்பெருமாள்கோவில் ஸ்டேஷனுக்குத் தெற்கே மட்சாலயில் இரண்டுமைலில் உள்ளது.

# உக திருஆவூர்ப் பசுபதீச்சரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

புண்ணியர்பூதியர்பூதநாதர்புடைபடுவார்தம்மனத்தார் திங்கட், கண்ணியரென்றென்றுகாதலாளர்கைதொழுதேத்த விருந்தவூராம்,விண்ணுயர்மாளிகைமாடவீதிவிரைகமழ்சோலைசுலாவியெங்கும், பண்ணிபல்பாடலறாதவாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. 1

முத்தியர்மூப்பிலராப்பிலுள்ளார்முக்கணர்தக்கன்றன் வேள்விசாடும், அத்தியரென்றென்றடியரேத்துமையனணங்கோடிருந்தவூராம், தொத்தியலும்பொழில்மாடுவண்டுதுதைந்தெங்கும்தூமதுபாயக்கோயிற், பத்திமைப்பாடலறாதவாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. 2

எண்டிசையாரும்வணங்கியேத்துமெம்பெருமானையெழில்கொளாவூர்ப், பண்டுரியார்சிலர்தொண்டர்போற்றும்பசுபதியீச்சரத்தாதின்மேற், கண்டல்கண்மிண்டியகானற்காழிக்கவுணியன்ஞானசம்பந்தன்சொன்ன, கொண்டினிதாவிசைபாடியாடிக்கூடுமவருடையார்கள்வானே. 11

திருச்சிற்றம்பலம்.

**திருவாவூர்ப் பசுபதீச்சரம்:**—இப்பெயரில் ஆவூர் என்பது தலமும், பசுபதீச்சரம் என்பது திருக்கோயிலும் என அறிக. பசுக்கள் பூசித்தகாரணத்தால் இப்பெயரெய்தியது. சுவாமி-பசுபதீச்சுரர், தேவியார்-மங்களநாயகி. இதற்குப்பதிகம் 1.

இத்தலம் பாபவிநாசம் ஸ்டேஷனிலிருந்து தெற்கே சாலியமங்கலம் கற்சாலையில் நான்குமைலில் உள்ள திருக்கருகாவூரினின்றும் வடகிழக்கே 4-மைலில் உள்ளது. தாரேச்சுரத்தினின்றும் வருவது மழைக்காலத்தில் ஆறுகளைக்கடப்பது ஸங்கடம்.

---

# ௨௨. திருச்சத்திமுற்றம்.

திருவிருத்தம், ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கோவாய்முடுகியடுதிறற்கூற்றங்குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவைபோகவிடின்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய்முழங்குந்தழற்கைத்
தேவாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. 1

காய்ந்தாயனங்கனுடலம்பொடிபடக்காலனைமுன்
பாய்ந்தாயுயிர்செகப்பாதம்பணிவார்தம்பல்பிறவி
ஆய்ந்தாய்ந்தறுப்பாயடியேற்கருளாயுன்னன்பர்சிந்தை
சேர்ந்தாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. 2

நில்லாக்குரம்பைநிலையாக்கருதியிந்நீணிலத்தொன்
றல்லாக்குழிவீழ்ந்தயர்வுறுவேனைவந்தாண்டுகொண்டாய்
வில்லேர்புருவத்துமையாள்கணவாவிடிற்கெடுவேன்
செல்வாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. 4

கருவுற்றிருந்துன்கழலேநினைந்தேன்கருப்புவியில்
தெருவிற்புகுந்தேன்றிகைத்தடியேனைத்திகைப்பொழிவி
உருவிற்றிகழுமுமையாள்கணவாவிடிற்கெடுவேன்
திருவிற்பொலிசத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. 5

வெம்மைநமன்றமர்மிக்குவிரவிவிழுப்பதன்முன்
இம்மையுன்றாளென்றனெஞ்சத்தெழுதிவைஈங்கிகழில்

அம்மையடியேற்கருளுதியென்பதிங்காரறிவார்
செம்மைதருசத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. 6

பொறித்தோரக்கன்பொருப்பெடுத்துற்றவன்பொன்முடிதோள்
இறத்தாளொருவிரலூன்றிட்டலறவிரங்கியொள்வாள்
குறித்தேகொடுத்தாய்கொடியேன்செய்குற்றக்கொடுவினைநோய்
செறுத்தாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சத்திமுற்றம்:—இது சத்தி சுவாமியைப் பூசித்துத் தழுவி முத்தமிட்ட காரணத்தால் இப்பெயரெய்தியது. அம்பாள் சுவாமியைத் தழுவி முத்தமிட்டபடியுள்ள திருக்கோலம் இன்றும் ஆலயத்தில் தரிசிக்கத்தக்கது. முத்தம் என்றிருக்கவேண்டுவது முற்றம் எனப்பிறழ்ந்திருப்பதாகக் காண்கிறது. அம்பிகை பூசித்தது 7ங் திருப்பாட்டிற்காண்க. திருநாவுக்கரசுநாயனர் திருவடி தீக்ஷையின்பொருட்டு விண்ணப்பஞ்செய்த தலம். சுவாமி-சிவக்கொழுந்தீசர், தேவியார்-பெரியநாயகி. இதற்குப்பதிகம் 1.

இத்தலம் தாரேச்சுரம் ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே மட்சாலையில் இரண்டுமைலில் உள்ளது.

---

# ௨௫. திருப்பட்டீச்சரம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

பண்-சாதாரி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாடன்மறைசூடன்மதிபல்வளையோர்பாகமதின்மூன்றோர்கணையால்
கூடவெரியூட்டியெழில்காட்டிநிழல்கூட்டுபொழில்சூழ்பழையுள்
மாடமழபாடியுறைபட்டிச்சரமேயகடிகட்டரவினர்
வேடநிலைகொண்டவரைவீடுநெறிகாட்டிவினைவீடுமவரே. 1

நீரின்மலிபுன்சடையர்நீளரவுகச்சையதுநச்சிலையதோர்
கூரின்மலிசூலமதுவேந்தியுடைகோவணமுமானினுரிதோல்
காரின்மலிகொன்றைவிரிதார்கடவுள்காதல்செய்துமேயநகர்தான்
பாரின்மலிசீர்பழசைபட்டிச்சரமேத்தவினைபற்றறுமே. 2

மந்தமலிசோலைமழபாடிநகர்நீடுபழையாறையதனுள்
பந்தமுயர்வீடுநலபட்டிசரமேயபடர்புன்சடையனை
அந்தண்மறையோரினிதுவாழ்புகலிஞானசம்பந்தனணியார்
செந்தமிழ்கள்கொண்டினிதுசெப்பவலதொண்டர்வினைநிற்பதிலவே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பட்டீச்சரம்:— இது காமதேனுவின் புத்ரியாகிய பட்டி பூசித்தகாரணத்தான் வந்தபெயர். ஸ்ரீராமபிரான் பூசித்துச் சாயாஹத்தி நீங்கியதலம். இந்தஇதிஹ்யம் தனுர்மாத அமாவாசையில் மிகச் சிறப்பாய்நடக்கிறது. மிகக்காலங்கண்ட ராமபடம்ஒன்று ஆலயத்துள் ளது. ஞானசம்பந்தமூர்த்திகள் தூரத்திலெழுந்தருளியபோதே சுவாமி நந்திகளைவிலக்கித் தரிசனங் கொடுத்தது, ஆளுடையபிள்ளையார் திருச் சத்திமுற்றத்தினின்றும் இத்தலத்துக்கு எழுந்தருளினகாலம் முது வேனிலாய் மிக்ககடுமையாய் இருந்தமையின் பரமசிவன் சிவபூதங்களை க்கொண்டு முத்துப்பந்தர் கொடுத்தருளிய க்ஷேத்ரம். இத்தலத்தில் விசேஷ திருப்பணிசெய்த கோவிந்ததீக்ஷிதர் மனைவிஸகிதயாக ஆல யத்தில் ப்ரதிஷ்டிக்கப் பெற்றிருக்கிறார். சுவாமி-பட்டீச்சரநாதர். தேவியார்-பல்வளைநாயகி. தீர்த்தம்-ஞானதீர்த்தம், விருக்ஷம்-வன்னி, இதற்குப்பதிகம் 1.

இத்தலம் தாரேச்சுரம் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே மட் சாலையில் இரண்டுமைலில் உள்ள திருச்சத்திமுற்றத்தினின்றும் தெற்கே ஒருபர்லாங்கில் (அடுத்தவீதியில்) திருமலைராயன் ஆற்றுக்கு வடகரையில் உள்ளது.

## உச. திருப்பழையாறைவடதளி.

### திருநாவுக்கரசு நாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தலையெலாம்பறிக்குஞ்சமண்கையருள்
நிலையினான்மறைத்தான்மறைக்கொண்ணுமே
அலையினார்பொழிலாறைவடதளி
நிலையினானடியேநினைந்துய்ம்மினே. 1

மூக்கினான்முரன்றோதியக்குண்டிகை
தூக்கினார்குலந்தூறுத்தேதனக்
காக்கினானணியாறைவடதளி
நோக்கினார்க்கில்லையாலருநோய்களே. 2

வாயிருந்தமிழேபடித்தாளுறா
ஆயிரஞ்சமணும்மழிவாக்கினான்
பாயிரும்புனலாறைவடதளி
மேயவன்னெனவல்வினைவீடுமே 9

செருத்தனைச்செயுஞ்சேணரக்கனுடல்
எருத்திறவிரலாலிறையூன்றிய
அருத்தனைப்பழையாறைவடதளித்
திருத்தனைத்தொழுவார்வினைதேயுமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பழையாறை வடதளி:—இது பழையாறை என்னும் ஊரிலே உள்ள வடதளியென்று பொருள்படும். பழையாறை, வடதளி என்னும் இருதலங்களும் சேர்த்துப் பாடப்பெற்றிருத்தலின் இப்பெயரெய்தியது எனவும் வழங்குவர். சந்திரன்பூசித்து வழிபட்டது. அமர்நீதிநாயனார் திருவவதாரஸ்தலம். திருநாவுக்கரசு நாயனார் பழையாறையை யடைந்து வடதளி சமணர்களால் மறைக்கப்பட்டிருத்தலை யறிந்து சமணர்கள் செயலைக்கெடுத்துத் தரிசித்தன்றிப் போகேன் என்று எழுந்தருளியிருந்தபோது சுவாமி அரசன் கனவிற்சென்று இதனை யறிவிக்க அரசன் காலையில் பரிவாரத்தோடு வந்து சுவாமியை வெளிப்படுத்திச் சமணர்களை யானைகளாற் றுகைப்பித்து நாயனாரைத் தரிசிப்பித்தான். ஸ்ரீ வாகீசமூர்த்திகள் இதனை முதற்றிருபாட்டினும் ஒன்பதாந் திருப்பாட்டினும் ஓதியிருத்தல் காண்க. சுவாமி-சோமேசர், தேவியார்-சோமகலாநாயகி தீர்த்தம்-சோமதீர்த்தம். இதற்குப்பதிகம் 1.

(இது பழையாறை) வடதளி காமதேனுவின் மற்றொரு புத்ரியாகிய விமலி பூசித்தது. சுவாமி-தர்மபுரீஸ்வரர், தேவியார்-விமலநாயகி. காமதேனுவின் வேறொரு புத்ரி சபளி பூசித்த மேற்றளி ஸமீ

பத்தில் உள்ளது. சுவாமி-கைலாசநாதர், தேவியார்-சபளநாயகி. காமதேனுவின் பின்னொருபுத்ரி நந்தினி பூசித்த வைப்புத்தலமாகிய முழையூரும் ஸமீபமே. சுவாமி-பாசுநாதேசுவரர், தேவியார்-ஞானம்பிகை. இது ஒரு மாடக்கோயில் தாரேச்சுரம் ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே இரண்டுமைலில் திருப்பட்டீச் சாத்தினின்றும் கிழக்கே ஒரு மைலில் முழையூரும், இதற்குக் கால்மைலில் வடதளியும், இதற்குத் தென்கிழக்கில் ஒருமைலில் ஆற்றின் தென்கரையில் திருப்பழையாறையும் உள்ளன. ஆற்றுக்குப் பரிசுண்டு.

---

# ௨௫. திருவலஞ்சுழி.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-நட்டராகம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

என்னபுண்ணியஞ்செய்தனைநெஞ்சமேயிருங்கடல்வையத்து
முன்னைநீபுரிநல்வினைப்பயனிடைமுழுமணித்தரளங்கள்
மன்னுகாவிரிசூழ்திருவலஞ்சுழிவாணனைவாயாரப்
பன்னியாதரித்தேத்தியும்பாடியும்வழிபடுமதனாலே. 1

விண்டொழிந்தனநம்முடைவல்வினைவிரிகடல்வருநஞ்சம்
உண்டிறைஞ்சுவானவர்தமைத்தாங்கியவிறைவனையுலகத்தில்
வண்டுவார்குழன்மங்கையொர்பங்கனைவலஞ்சுழியிடமாகக்
கொண்டநாதன்மெய்த்தொழில்புரிதொண்டரோடினிதிருந்தமையாமே.

தொர்கூறனைவலஞ்சுழிமருவியமருந்தினைவயற்காழி [லே
நாதன்வேதியன்ஞானசம்பந்தன்வாய்நவிற்றியதமிழ்மாலை
ஆதரித்திசைகற்றுவல்லார்சொலக்கேட்டுகந்தவர்தம்மை
வாதியாவினைமறுமைக்குமிம்மைக்கும்வருத்தம்வந்தடையாவே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனர்.

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அலைபார்புனற்கங்கைநங்கைகாணவம்பலத்திலருநட்டமாடிவேடம்,தொலையாதவென்றியார்நின்றியூருநெடுங்களமு

மேவிவிடையைமேல்கொண், டிலைபார்படைகையிலேந்தி
யெங்குமிமையவருமுமைபவளுமிறைஞ்சியேத்த, மலைபார்தி
ரளருவிப்பொன்னிசூழ்ந்தவலஞ்சுழியேபுக்கிடமாமருவினரே.

திருச்சிற்றம்பலம்.

---

திருவலஞ்சுழி:—காவிரி வலஞ்சுழித்து வந்த காரணத்தால் இப்பெயரெய்தியது. இது த்ரிணுவர்த்தமென்றும தக்ஷிணுவர்த்தமென்றும் சொல்லப்பெறும். பாதலத்தினின்றும் சேடன் வெளிவந்தபிலத்தில் காவிரி இறங்கிவிட்டபோது சோழராஜாவருந்திப் பிரார்த்திக்கக் காவிரி இறங்கிய இடத்தில் சடைத்தலையாயினும் முடித்தலையாயினும் பலியிட்டால் நதிவெளிப்படுமென அசரீரிகூறக் கொட்டையூரிற் தவஞ்செய்திருந்த ஏரண்டர் பிலத்தில் இறங்கிக் காவிரியை மேலே பிரவஹிக்கச் செய்தார். வழஞ்சுழித்து மேலேகிளம்பிய இடம் வலஞ்சுழியெனவும், காவிரி அங்கு மேலக்காவிரியெனவும் இப்போதும் வழங்கும். சேடன்பாதாளத்தினின்றும் வந்து ஓர்சிவராத்திரியில் நான்குசாமத்திலும் பூசித்த நான்கு தலங்களுள் இது ஒன்று. மற்றைய மூன்று திருநாகேச்சுரம், திருப்பாம்புரம், திருநாகைக்காரோணம் என்பனவாம். அமுதமதனகாலத்தில் அமுதம் திரளும்படி பூசித்த வெள்ளைப் பிள்ளையார் இந்திரனல் இங்கு பிரதிஷ்டிக்கப்பெற்றிருக்கிருர். கோயிலில், பிலத்வாரத்தில் த்ரிணுவர்த்த ஈஸ்வரரும் ஸமீபத்தில் ஏரண்டமுனிவரும் வீற்றிருக்கின்ருர்கள். இந்திரன் பூசித்தது. சுவாமி-கபர்த்தீஸர், தேவியார்-பெரியநாயகி, தீர்த்தம்-காவிரி. இதற்குப் பதிகம் 5.

இத்தலம் சுந்தரப் பெருமாள்கோவில் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே மட்சாலையில் ஒருமைலில் உள்ளது. திருவலஞ்சுழிக்கு வடக்கே காவிரி அரிசொல்லாறு ஆகிய இரண்டையும் பரிசிலுற்கடந்து சென்ருல் ஒருமைலில் ஸ்ரீ முருகக்கடவுள் நான்காவது படைவீடாகிய திருவேரகம் என்னும் சுவாமிமலை இருக்கிறது.

---

# ௨௬. திருக்குடமூக்கு.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அரவிரிகோடனீடலணிகாவிரியாற்றயலே
மரவிரிபோதுமவ்வன்மணமல்லிகைகள்ளவிழும்
குரவிரிசோலைசூழ்ந்தகுழகன்குடமூக்கிடமா
இரவிரிதிங்கள்சூடியிருந்தானவனெம்மிறையே. 1

ஒத்தரவங்களோடுமொலிகாவிரியாற்றயலே
பூத்தரவங்களோடும்புகைகொண்டடிபோற்றிநல்ல
கூத்தரவங்களோவாக்குழகன்குடமூக்கிடமா
ஏத்தரவங்கள்செய்யவிருந்தானவனெம்மிறையே. 2

வெண்கொடிமாடமோங்குவிறல்வெங்குருநன்னகரான்
நண்பொடுநின்றசீரான்றமிழ்ஞானசம்பந்தனல்ல
தண்குடமூக்கமர்ந்தானடிசேர்தமிழ்பத்தும்வல்லார்
விண்புடைமேலுலகம்வியப்பெய்துவர்வீடெளிதே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்

திருக்குறுந்தொகை ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பூவணத்தவன்புண்ணியனண்ணியங்
காவணத்துடையானடியார்களைத்
தீவணத்திருநீறுமெய்பூசியோர்
கோவணத்துடையான்குடமூக்கிலே. 1

துறவிநெஞ்சினராகியதொண்டர்காள்
பிறவிநீங்கப்பிதற்றுமின்பித்தராய்
மறவனாப்பார்த்தன்மேற்கணைதொட்டவெங்
குறவனாருறையுங்குடமூக்கிலே. 6

காமியஞ்செய்துகாலங்கழியாதே
ஓமியஞ்செய்தங்குள்ளத்துணர்மினோ
சாமியோடுசரச்சுவதிபவள்
கோமியும்முறையுங்குடமூக்கிலே. 8

அன்றுதானரக்கன்கயிலாயத்தைச்
சென்றுதானெடுக்கவுமையஞ்சலும்
நன்றுதானக்குநல்விரலூன்றிப்பின்
கொன்றுகீதங்கேட்டான்குடமூக்கிலே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருக்குடமூக்கு:—இது கும்பகோணமெனப் பிரசித்தமாக வழங்கும். ஓர் பிரளய வெள்ளத்தில் சகலாத்மாக்களையும் சேமித்து இட்ட குடத்தின்மூக்கு இருந்த இடமாதலின் இப்பெயரெய்தியது. மூழ்கினோரது ஸமஸ்தபாபங்களையும் போக்குகிற கங்கையாதிய தீர்த்த மாதாக்கள் வந்து மூழ்கித் தங்கள் பாபங்களைப் போக்கிக்கொண்ட மஹாமகதீர்த்தத்தைத் தன்னிடங்கொண்ட மஹிமையுடையது. ஏம ருஷியாதியார் பூசித்தது. விஷ்ணு பூசித்துச் சக்ரமும் ஸார்ங்கமும் பெற்றது. ஸுயம்புவாகிய ம்ருத்லிங்கம். திருமேனி அதிசயமானது. சுவாமி-கும்பேசர், தேவியார்-மங்களநாயகி, தீர்த்தம்-மஹாமகதீர்த்தம். இதற்குப் பதிகம் 2.

இத்தலம் கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலையில் ஒருமைலில்உள்ளது.

---

## உஎ. திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்.

### திருநாவுக்கரசு நாயனர்.

திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சொன்மலிந்தமறைநான்காறங்கமாகிச்சொற்பொருளுங்கடந்தசுடர்ச்சோதிபோலும், கன்மலிந்தகயிலைமலைவாணர்போலுங்கடனஞ்சமுண்டிருண்டகண்டர்போலும், மன்மலிந்

தமணிவரைத்திண்டோளர்போலு மலையரையன்மடப்பாவை
மணாளர்போலும், கொன்மலிந்தமழுவிலைவேற்குழகர்போலு
ங்குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. 1

ஏவியிடர்க்கடலிடைப்பட்டிளைக்கின்றேனையிப்பிறவி
யறுத்தேறவாங்கியாங்கே, கூவிமலருலகனைத்துமுருவிப்போ
கக்குறியிலறுகுணத்தாண்டுகொண்டார்போலும்,தாவிமுதற்
காவிரிநல்யமுனைகங்கைசரச்சுதிபொற்றாமரைபுட்கரணிதெ
ண்ணீர்க், கோவியொடுகுமரிவருதீர்த்தஞ்சூழ்ந்தகுடந்தைக்
கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்:—இது கும்பகோணத்திலுள்ள நாகேசுவரஸ்வாமி கோயில். சூரியன் பூசித்ததலம். இவ்வைதிஹ்யம் சித்திரைமாதம் 11உ முதல் மூன்றுநாள் சூர்யரஸ்மி ஸ்வாமியின்மேற் படுவதால் ப்ரத்யக்ஷமாகக் காணப்பெறும். கோவிலில் யிரளயகாலமூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். ஆதிசேடன் பூசித்த காரணத்தால் சுவாமி-நாகேசுவரர், மடந்தைபாகர், தேவியார்-பெரியநாயகி. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே அரைமைலில் மஹாமக தீர்த்தத்திலிருந்து மேற்கே கால்மைலில்உள்ளது.

---

# உஅ. திருக்குடந்தைக்காரோணம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கேசி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வாரார்கொங்கைமாதோர்பாகமாகவார்சடை
நீரார்கங்கைதிங்கள்சூடிநெற்றியொற்றைக்கண்
கூரார்மழுவொன்றேந்தியந்தண்குழகன்குடமூக்கில்
காரார்கண்டத்தெண்டோளெந்தைகாரோணத்தாரே. 1

முடியார்மன்னர்மடமான்விழியார்மூவுலகும்மேத்தும்
படியார்பவளவாயார்பலரும்பாவிப்பணிந்தேத்தக்

கொடியார்விடையார்மாடவீதிக்குடந்தைக்குழகாரும்
கடியார்சோலைக்கலவமயிலார்காரோணத்தாரே. 2

கருவார்பொழில்சூழ்ந்தழகார்செல்வக்காரோணத்தாரைத்
திருவார்செல்வமல்குசண்பைத்திகழுஞ்சம்பந்தன்
உருவார்செஞ்சொன்மாலையிவைபத்துரைப்பாருலகத்துக்
கருவாவரிடும்பைப்பிறப்பதறுத்துக்கவலைகழிவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்குடந்தைக்காரோணம்:— இது கும்பகோணத்தில் மகாமஹதீர்த்தத்திற்கு ஈசான்யத்திலுள்ள ஸ்ரீ காசிவிஸ்வநாதர் கோவில். உமாதேவியார், மாந்தாதா, தீர்த்தமாதாக்கள் முதலியோர் பூசித்தது. இம்மூர்த்தி கங்கைமுதலிய தீர்த்தமாதாக்களை காசியினின்றும் அழைத்துவந்து தாம் பஸ்சிமாபிமுகமாய் இருந்து தமக்குநேரே அவர்களைத் தீர்த்தத்தில் மூழ்கச்செய்தவர். தீர்த்தமாதாக்கள் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கிறார்கள். சுவாமி-சோமநாதர், தேவியார்-தேனார்மொழியாள். இதற்குப் பதிகம் 1.

இத்தலம் கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே அரமைலில் மகாமஹதீர்த்தத்தின் வடகரையில்உள்ளது.

---

# ௨௯. திருநாகேச்சரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-செவ்வழி. ௨-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

தழைகொள்சந்தும்மகிலும்மயிற்பீலியுஞ்சாதியின்
பழமுமுந்திப்புனல்பாய்பழங்காவிரித்தென்கரை
நழுவில்வானோர்தொழநல்குசீர்மல்குநாகேச்சரத்
தழகர்பாதந்தொழுதேத்தவல்லார்க்கழகாகுமே. 1

காளமேகந்நிறக்காலனோடந்தகன்கருடனும்
நீளமாய்நின்றெய்தகாமனும்பட்டனநினைவுறின்
நாளுநாதனமர்கின்றநாகேச்சரநண்ணுவார்
கோளுநாளுந்தீயவேனுநன்காங்குறிக்கொண்மினே. 6

கந்தநாறும்புனற்காவிரித்தென்கரைக்கண்ணுதல்
நந்திசேருந்திருநாகேச்சரத்தின்மேன்ஞானசம்
பந்தனுவிற்பனுவல்லிவைபத்தும்வல்லார்கள்போய்
எந்தையீசனிருக்குமுலகெய்தவல்லார்களே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனர்

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தாயவனைவானோர்க்குமேனோருக்குந் தலையவனைமலையவனையுலகமெல்லாம், ஆயவனைச்சேயவனையணியான்றன்னையழலவனைநிழலவனையறியவொண்ணா, மாயவனைமறையவனைமறையோர்தங்கண்மந்திரனைத்தந்திரனைவளராநின்ற, தீயவனைத்திருநாகேச்சரத்துளானைச்சேராதார் நன்னெறிக்கட்சேராதாரே. 1

அளிபானைபண்ணிக்குமான்பாறன்னைவான்பயிரையப்பயிரின்வாட்டந்தீர்க்கும், துளியானையயன்மாலுந்தேடிக்காணாச்சுடரானைத்துரிசறத்தொண்டுபட்டார்க், கெளியானையாவர்க்குமரியான்றன்னையின்கரும்பின் றன்னுள்ளாலிருந்ததேறற், றெளியானைத்திருநாகேச்சரத்துளானைச்சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. 9

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனர்.

பண்-பஞ்சமம். ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பிறையணிவாணுதலாளுமையாளவள்பேழ்கணிக்க
நிறையணிநெஞ்சனுங்கநீலமால்விடமுண்டதென்னே
குறையணிகுல்லைமுல்லையளைந்துகுளிர்மாதவிமேல்
சிறையணிவண்டுகள்சேர்திருநாகேச்சரத்தானே. 1
தங்கியமாதவத்தின்றழல்வேள்வியினின்றெழுந்த
சிங்கமுநீள்புலியுஞ்செழுமால்கரியோடலறப்

பொங்கியபோர்புரிந்துபிளந்திருரிபோர்த்ததென்னை
செங்கயல்பாய்கழனித்திருநாகேச்சரத்தானே. 6

கொங்கணைவண்டாற்றக்குயிலும்மயிலும்பயிலும்
தெங்கணைபூம்பொழில்சூழ்திருநாகேச்சரத்தானை
வங்கமலிகடல்சூழ்வயனாவலவூரன்சொன்ன
பங்கமில்பாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே. 11

திருச்சிற்றம்பலம்.

திருநாகேச்சரம்:—இது நாகராஜனாகிய சேடன் பூசித்த காரணத்தினால் இப்பெயரெய்தியது. சூர்யன் சந்திரன்,சேடன் முதலியோர் பூசித்தது. இதனைப் பதிகத்துக்காண்க. சண்பகாரண்யம் எனவும் வழங்கும். ஸ்ரீ சேக்கிழார் நாயனார் ஆன்மார்த்தஸ்தலம். இதற்குப் ப்ரதியாகவே தொண்டைநாட்டில் குன்றத்தூரையடுத்த திருநாகேஸ்வரம் அம்மூர்த்திகளால் பிரதிஷ்டிக்கப்பட்டது. சுவாமி-சண்பகாரணியர், தேவியார் குன்றுமுலைநாயகி, தீர்த்தம்-சூர்யபுஷ்கரணி. இதற்குப்பதிகம் 6.

இத்தலம் திருநாகேச்வரம் ஸ்டேஷனுக்குத் தெற்கே முக்கால் மைலில் உள்ளது.

# ௩௦ திருவிடைமருதூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருவிராகம் பண்-வியாழக்குறிஞ்சி க-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

விரிதருபுலியுரிவிரவியவரையினர்
திரிதருமெயிலவைபுனைகணையினிலெய்த
எரிதருசடையினரிடைமருதடைவுனல்
புரிதருமனனவர்புகழ்மிகவுளதே. 1

மறிதிரைபடுகடல்விடமடைமிடறினர்
எறிதிரைகரைபொருமிடைமருதெனுமவர்
செறிதிரைநரையொடுசெலவிலருலகினில்
பிறிதிரைபெறுமுடல்பெறுகுவதரிதே. 2

பொருகடலடைதருபுகலியர்தமிழொடு
விரகினன்விரிதருபொழிலிடைமருதினைப்
பரவியவொருபதுபயிலவல்லவரிடர்
விரவிலர்வினையொடுவிய னுலகுறவே. 1

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாசமொன்றிலராய்ப்பலபத்தர்கள்
வாசநாண்மலர்கொண்டடிவைகலும்
ஈசனெம்பெருமானிடைமருதினில்
பூசநாம்புகுதும்புனலாடவே. 1

கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினும்
தனிமுடிகவித்தாளுமரசினும்
இனியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

மண்ணையுண்டமால்காணான்மலரடி
விண்ணைவிண்டயன்காணான்வியன்முடி
மொண்ணைமாமருதாவென்றென்மொய்குழல்
பண்ணையாயமுந்தானும்பயிலுமே. 5

மங்கைகாணக்கொடார்மணமாலையைக்
கங்கைகாணக்கொடார்முடிக்கண்ணியை
நங்கைமீரிடைமருதரிந்நங்கைக்கே
எங்குவாங்கிக்கொடுத்தாரிதழியே. 6

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சூலப்படையார்தாமேபோலுஞ்சுடர்த்திங்கட்கண்ணியுடையார்போலும், மாலைமகிழ்ந்தொருபால்வைத்தார்போலுமந்திரமுந்தந்திரமுமானார்போலும், வேலைக்கடனஞ்சமுண்டார்போலுமேல்வினைகடீர்க்கும்விகிர்தர்போலும், ஏலக்கமழ்குழலாள்பாகர்போலுமிடைமருதுமேவியவீசனாரே. 1

பிரியாதகுணமுயிர்கட்கஞ்சோடஞ்சாய்ப்பிரிவுடையகுணம்பேசிற்பத்தோடொன்றாய், விரியாதகுணமொருகானான்கேயென்பர்விரிவிலாக்குணநாட்டத்தாறேயென்பர், தெரிவரியகுணமஞ்சுஞ்சமிதையஞ்சும்பதமஞ்சுங்கதியஞ்சுஞ்செப்பினாரும், எரியாயதாமரைமேலியங்கினாருமிடைமருதுமேவியவீசனாரே. 7

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-தக்கேசி. ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கழுதைகுங்குமந்தான்சுமந்தெய்த்தாற்கைப்பர்பாழ்புகமற்றதுபோலப், பழுதுநானுழன்றுட்டடுமாறிப்படுசுழித்தலைப்பட்டனனெந்தாய், அழுதுநீயிருந்தென்செய்திமனனேயங்கணாவரனேயெனமாட்டா, இழுதையேனுக்கோருய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. 1

புன்னுனைப்பனிவெங்கதிர்கண்டாற்போலும்வாழ்க்கைபொருளிலைநாளும், என்னெனக்கினியிற்றைக்குநாளையென்றிருந்திடருற்றனனெந்தாய், முன்னமேயுனசேவடிசேராமூர்க்கனாகிக்கழிந்தனகாலம், இன்னமென்றனக்குய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. 3

குற்றந்தன்னொடுகுணம்பலபெருக்கிக்கோலநுண்ணிடையாரொடுமயங்கிக், கற்றிலேன்கலைகள்பலஞானங்கடிய

வாயினகொடுமைகள்செய்தேன், பற்றலாவதோர்பற்றுமற்றில்லேன்பாவியேன்பலபாவங்கள்செய்தேன், எற்றுளேனெனக்குய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. 6

கொடுக்ககிற்றிலேனொண்பொருடன்னைக்குற்றஞ்செற்றமிவைமுதலாக, விடுக்ககிற்றிலேன்வேட்கையுஞ்சினமும்வேண்டிலேம்புலனென்வசமல்ல, நடுக்கமுற்றதோர்மூப்புவந்தெய்திநமன்றமர்நரகத்திடலஞ்சி, இடுக்கணுற்றனனுய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. 7

ஏழைமாநுடவின்பினைநோக்கியிளையவர் வலைப்பட்டிருந்தின்னம், வாழைதான்பழுக்கும்நமக்கென்றுவஞ்சவல்வினையுள்வலைப்பட்டுக், கூழைமாந்தர்தஞ்செல்கதிப்பக்கம்போகமும்பொருளொன்றறியாத, ஏழையேனுக்கோருய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. 9

அரைக்குஞ்சந்தனத்தோடகிலுந்திையவனஞ்சுமந்தார்த்திருப்பாலூர், இரைக்குங்காவிரித்தென்கரைதன்மேலிடைமருதுறையெந்தைபிரானை, உரைக்குமூரனொளிதிகழ்மாலையுள்ளத்தாலுகந்தேத்தவல்லார்கள், நரைப்புமூப்பொடுநடலையுமின்றிநாதன்சேவடிநண்ணுவர்தாமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவிடைமருதூர்:— வடக்கே மல்லிகார்ஜுனமும் தெற்கே ஸ்புடார்ஜுனமும் இருபுறமும் அமர இது இடையில் அமர்ந்தகாரணத்தால் இப்பெயரெய்தியது. ஸ்தலவிருக்ஷம் மருது ஆகையின் மருதூராயிற்று. மத்தியார்ஜ்ஜுனம் எனவும்வழங்கும். உமாதேவியார், மூத்தபிள்ளையார், இளையபிள்ளையார். விட்டுணுமூர்த்தி, பிரம்மதேவர், காளி, இலக்குமி, ஸரஸ்வதி, கோடியுருத்திரர், இந்திரன், ஐராவதம், த்வாதசாதித்தர், சந்திரன் அக்னி, நிருதி, இயமன், வேதங்கள், வருணன், வாயு, குபேரன், வசுக்கள், மூன்றுகோடிருஷிகள், நாரததும்புருக்கள், வசிட்டர், கபிலர், அகஸ்தியர், சமயாசாரியர், சிவவாக்யர், வரகுணதேவர், பட்டினத்தடிகள், பத்ரகிரியார்முதலியோர் வழிபட்டேத்திய பெருஞ்சிறப்புள்ளது. வரகுணதேவருக்குப்

பிரம்மஹத்தி நீங்கியது. இப்பிரம்மஹத்தி பூர்வகோபுரத்வாரததில் வலப்புறத்துள்ளது. தைப்பூசத்தில் தீர்த்தவிசேடம் பதிகத்துக்காணப் பெறும். பூர்வ பஸ்சிம கோபுரத்வாரங்களில் பட்டினத்தடிகளும் பத்ரகிரியாரும் எழுந்தருளுயிருந்தது. அம்பாள் மௌனமாய்த்தபஞ்செய்த மூகாம்பாள் சந்நிதி தனியேயிருக்கிறது. சுவாமி-மஹாலிங்கேசுவரர் மருதப்பர்,-தேவியார்-நல்முலைநாயகி, தீர்த்தம்-காவிரி, விருக்ஷம்-மருது. இதற்குப் பதிகம் 12. ஏனைய திருமுறைகளிலும் பதிகங்கள் உண்டு.

இத்தலம் திருவிடைமருதூர்ஸ்டேஷனுக்குவடக்கே அரைமையில் உள்ளது.

---

## ௩௧. திருத்தென்குரங்காடுதுறை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-இந்தளம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாவக்கெடும்வல்வினைபாரிடஞ்சூழ
இரவிற்புறங்காட்டிடைநின்றெரியாடி
அரவச்சடையந்தணன்மேயவழகார்
குரவப்பொழில்சூழ்குரங்காடுதுறையே 1

விண்டார்புரமூன்றுமெரித்தவிமலன்
இண்டார்புறங்காட்டிடைநின்றெரியாடி
வண்டார்கருமென்குழன்மங்கையொர்பாகம்
கொண்டானகர்போல்குரங்காடுதுறையே. 2

நல்லார்பயில்காழியுண்ஞானசம்பந்தன்
கொல்லேறுடையான்குரங்காடுதுறைமேல்
சொல்லார்தமிழ்மாலைபத்துந்தொழுதேத்த
வல்லாரவர்வானவரோடுறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனர்

திருக்குறுந்தொகை ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

இரங்காவன்மனத்தார்களியங்குமுப்
புரங்காவல்லழியப்பொடியாக்கினன்
தரங்காடுந்தடநீர்ப்பொன்னித்தென்கரைக்
குரங்காடுதுறைக்கோலக்கபாலியே. 1

முத்தினைமணியைப்பவளத்தொளிர்
தொத்தினைச்சுடர்ச்சோதியைச்சோலைசூழ்
கொத்தலர்குரங்காடுதுறையுறை
அத்தனென்னவண்ணித்திட்டிருந்தமே. 2

கடுத்தமேதாரக்கன்கயிலைமலை
எடுத்ததோடலையிற்றலறவ்விரல்
அடுத்தலும்மவனின்னிசைகேட்டருள்
கொடுத்தவன்குரங்காடுதுறையனே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தென்குரங்காடுதுறை:—இது ஆடுதுறை' என வழங்கும். சுக்ரீவன் அநுமான் இவர்கள் பூசித்தது. சுவாமி-ஆப்தசகாயர், தேவியார்-பவளக்கொடியாள். தீர்த்தம்-காவிரி. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் ஆடுதுறை ஸ்டேஷனுக்கு வடமேற்கே மட்சாலையில் முக்கால்மைலில் உள்ளது.

---

# ௬௨. திருநீலக்குடி.

## திருநாவுக்கரசு நாயனர்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வைத்தமாடுமனைவியுமக்கனீர்
செத்தபோதுசெறியார்பிறிவதே

நித்தநீலக்குடியரனைநினை
சித்தமாகிற்சிவகதிசேர்திரே. 1
செய்யமேனியன்றேனொடுபாறயிர்
நெய்யதாடியநீலக்குடியரன்
மையலாய்மறவாமனத்தார்க்கெலாம்
கையிலாமலகக்கனியொக்குமே. 2
கல்வினொடெனைப்பூட்டியமண்கையர்
ஒல்லைநீர்புகநூக்கவென்வாக்கினால்
நெல்லுநீள்வயனீலக்குடியரன்
நல்லநாமநவிற்றியுய்ந்தேனன்றே. 7
தருக்கிவெற்பதுதாங்கியவீங்குதோள்
அரக்கனாருடலாங்கோர்விரலினால்
நெரித்துநீலக்குடியரன்பின்னையும்
இரக்கமாயருள்செய்தனனென்பரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருநீலக்குடி:—இது தென்னல்குடியெனவழங்கும். தேவகன்னிகைகளும் வருணனும் பூசித்ததலம். இங்கு கோயிலிலே சுத்தமாய் எண்ணெய் ஆட்டி ஸ்வாமிக்குஅபிஷேகஞ் செய்தால் பாதிஎண்ணெய் லிங்கத்தில் சுவறிவிடுவதாக சரித்ரம். அதுபற்றி சுவாமி தைலமாட்யேஸ்வரர், விஸ்ருஷைசெய்த காரணத்தால் தேவியார் விஸ்ருஷாம்பிகை. அநூபமஸ்தனநாயகி எனவும் வழங்கும். திருமுறையில் சுவாமி-நீலக்குடியீசர், தேவியார்·அழகம்மை. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் ஆடுதுறை ஸ்டேஷனுக்குத் தெற்கே மட்சாலையில் இரண்டுமைலில் உள்ளது.

---

## ௩௩. திருவைகன்மாடக்கோயில்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

துளமதியுடைமறிதோன்றுகையினர்
இளமதியணிசடையெந்தையாரிடம்

உளமதியுடையவர்வைகலோங்கிய
வளமதிதடவியமாடக்கோயிலே. 1

மெய்யகமிளிரும்வெண்ணூலர்வேதியர்
மையகண்மலைமகளோடும்வைகிடம்
வையகமகிழ்தரவைகன்மேற்றிசைச்
செப்பகண்வளவன்முன்செய்தகோயிலே. 2

மைந்தனதிடம்வைகன்மாடக்கோயிலைச்
சந்தமர்பொழிலணிசண்பைஞானசம்
பந்தனதமிழ்கெழுபாடல்பத்திவை
சிந்தைசெய்பவர்சிவலோகஞ்சேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருவைகன் மாடக்கோயில்:**—இது வைகல், இதன் மேற்கிலுள்ள மாடக்கோயில் ஆகியஇரண்டும் ஒன்றுசேர்த்துப் பாடப்பெற்றதனால் இப்பெயரெய்தியது. இரண்டிடத்துங் கோயில்கள் உள்ளன. மாடக்கோயில் கோச்செங்கட் சோழரால் கட்டிய மாடக்கோயில்களுள் ஒன்று. இது வைகலின்மேற்றிசையில் உள்ளது. இவை பதிகத்து ஓதப்பெற்றது. சுவாமி-வைகநாதேசுரர், தேவியார்-கொம்பிலிளங்கோதை. இதற்குப் பதிகம் 1.

ஆடுதுறை ஸ்டேஷனிலிருந்து தெற்கே இரண்டுமைலில் பழியஞ்சியநல்லூர் மார்க்கமாய் தெற்கே ஒருமைலில் 1. வைகலும் இதற்குத்தென்மேற்கே அரைக்கால்மைலில் 2. மாடக்கோயிலும் உள்ளன.

---

# ௩௪. திருநல்லம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கல்லானிழல்மேயகறைசேர்கண்டாவென்
றெல்லாமொழியாலுமிமையோர்தொழுதேத்த
வில்லாலரண்மூன்றும்வெந்துவிழவெய்த
நல்லானமையாள்வானல்லநகரானே. 1

தக்கன்பெருவேள்விதன்னிலமரரைத்
துக்கம்பலசெய்துசுடர்பொற்சடைதாழக்
கொக்கின்னிறகோடுகுளிர்வெண்பிறைசூடும்
நக்கன்னமையாள்வானல்லநகரானே. 2

நலமார்மறையோர்வாழ்நல்லநகர்மேய
கொலைசேர்மழுவானைக்கொச்சையமர்ந்தோங்கு
தலமார்தமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
கலைகளிவைவல்லார்கவலைகழிவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொல்லத்தானமனார்தமர்வந்தக்கால்
இல்லத்தார்செய்யலாவதெனேழைகாள்
நல்லத்தானமையாளுடையான்கழல்
சொல்லத்தான்வல்லிரேற்றுயர்தீருமே. 1

தமக்குநல்லதுதம்முயிர்போயினால்
இமைக்கும்போதுமிராதிக்குரம்பைதான்
உமைக்குநல்லவன்றானுறையும்பதி
நமக்குநல்லதுநல்லமடைவதே. 4

மல்லைமல்கியதோளரக்கன்வலி
ஒல்லையில்லொழித்தானுறையும்பதி
நல்லநல்லமெனும்பெயர்நாவினால்
சொல்லவல்லவர்தூநெறிசேர்வரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருநல்லம்:—இது கோனேரிராஜபுரம் என வழங்கும். சுவாமிபெயர் திருக்குறுந்தொகை 4-ந்திருபாட்டிற்காண்கிறது. சுவாமி உமாமகேசர், தேவியார்-மங்களநாயகி. இதற்குப் பதிகம் 2.

இத்தலம் ஆடுதுறை ஸ்டேஷனிவிருந்து தெற்கேமட்சாலையில் இரண்டுமைலில் திருநீலக்குடியிலிருந்து கிழக்கே இரண்டுமைலில் மட்சாலையில்உள்ள பழியஞ்சியநல்லூர்மார்க்கமாய் கிழக்கே அரைமைலில் பிரியும்புதூர் மார்க்கமாய் நாட்டார் வாய்க்காலைக் கடந்து தென்கிழக்கில் மூன்றுமைலில் உள்ளது.

---

## ௯௩ திருக்கோழம்பம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

பண்-இந்தளம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீற்றானைநீள்சடைமேனிறைவுள்ளதோர்
ஆற்றானையழகமர்மென்முலையாளையோர்
கூற்றானைக்குளிர்பொழிற்கோழம்பமேவிய
வேற்றானையேத்துமினும்மிடரேகவே.

மையானகண்டனைமான்மறியேந்திய
கையானைக்கடிபொழிற்கோழம்பமேவிய
செய்யானைத்தேனெய்பாலுந்திகழ்ந்தாடிய
மெய்யானைமேவுவார்மேல்வினைமேவாவே. 2

தண்புனலோங்குதண்ணந்தராய்மாநகர்
நண்புடைஞானசம்பந்தனம்பானுறை
விண்பொழிற்கோழம்பமேவியபத்திவை
பண்கொளப்பாடவல்லார்க்கில்லைபாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநாவுக்கரசு நாயனர்

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வேழம்பத்தைவர்வேண்டிற்றுவேண்டிப்போய்
ஆழம்பற்றிவீழ்வார்பலவாதர்கள்
கோழம்பத்துறைகூத்தன்குரைகழல்
தாழம்பத்தர்கள்சாலச்சதுரரே. 1

சமரசூரபன்மாவைத்தடிந்தவேற்
குமரன்றாதைநற்கோழம்பமேவிய
அமரர்கோவினுக்கன்புடைத்தொண்டர்கள்
அமரலோகமதாளுடையார்களே. 10

துட்டனாகிமலையெடுத்தானுங்கீழ்ப்
பட்டுவீழ்ந்துபடர்ந்துய்யப்போயினான்
கொட்டநாறியகோழம்பத்தீசனென்
றிட்டகீதமிசைத்தவரக்கனே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கோழம்பம்.— இது இந்திரனாற் குயிலுருவாகும்படி சபிக்கப்பெற்ற சந்தன் என்னும் வித்யாதரன் பூசித்துச் சாபம் நீங்கியது. திருக்குறுத்தொகை 2-ந்திருப்பாட்டிற் குறிப்புக்காண்க, சுவாமி-கோகிலேசுரர், தேவியார்-சௌந்தரநாயகி இதற்குப்பதிகம் 2.

இத்தலம் நரசிங்கன்பேட்டை ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே மட்சாலையில் ஒருமைலில் உள்ள திருவாவடுதுறையினின்றும் தெற்கேமட்சாலை கரைமார்க்கங்களாய் ஒன்றரைமைலில் உள்ளது.

---

## ௩௬. திருவாவடுதுறை.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

நாலடிமேல்வைப்பு.

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

இடரினுந்தளரினுமெனதுறுநோய்
தொடரினுமுனகழறொழுதெழுவேன்
கடறனிலமுதொடுகலந்தநஞ்சை
மிடறினிலடக்கியவேதியனே
இதுவோவெமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. 1

வாழினுஞ்சாவினும்வருந்தினும்போய்
வீழினுமுனகழல்விடுவேனல்லேன்

தாழிளந்தடம்புனறயங்குசென்னிப்
போழிளமதிவைத்தபுண்ணியனே
இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. 2

அலைபுனலாவடுதுறையமர்ந்த
இலைநுனைவேற்படையெம்மிறையை
நலமிகுஞானசம்பந்தன்சொன்ன
விலையுடையருந்தமிழ்மாலைவல்லார்
வினையாயினநீங்கிப்போய்விண்ணவர்வியனுலகம்
நிலையாகமுன்னேறுவர்நிலமிசைநிலையிலரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

பண்-திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாயிருஞாலமெல்லாமலரடிவணங்கும்போலும்
பாயிருங்கங்கைபாளைப்படர்சடைவைப்பர்போலும்
காயிரும்பொழில்கள்சூழ்ந்தகழுமலவூரர்க்கம்பொன்
ஆயிரங்கொடுப்பர்போலுமாவடுதுறையனாரே. 1

பார்த்தனுக்கருள்வர்போலும்படர்சடைமுடியர்போலும்
எத்துவாரிடர்கடீரவின்பங்கள்கொடுப்பர்போலும்
கூத்தராய்ப்பாடியாடிக்கொடுவலியரக்கன்றன்னை
ஆர்த்தவாயலறுவிப்பாராவடுதுறையனாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நம்பனைநால்வேதங்கரைகண்டானைஞானப்பெருங்கடலை நன்மைதன்னைக், கம்பனைக்கல்லாலிருந்தான்றன்னைக்கற்பகமாயடியார்கட்கருள்செய்வானைச், செம்பொன்னைப்பவளத்தைத்திரளுமுத்தைத்திங்களைஞாயிற்றைத்தீயைநீரை, அம்

பொன்னேயாவடுதண்டுறையுண்மேயவனடியேயடிநாயேன
டைந்துய்ந்தேனே. 1

பேணியநற்பிறைதவழ்செஞ்சடையினனைப்பித்தராமடி யார்க்குமுத்திகாட்டும், எணியையிடர்க்கடலுட்சுழிக்கப் பட்டிங்கிளைக்கின்றேற்கக்கரைக்கேயேறவாங்கும், தோணி யைத்தொண்டனேன்றூயசோதிச் சுலாவெண்குழையானைச் சுடர்பொற்காசின், ஆணியையாவடுதண்டுறையுண்மேயவா னடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. 4

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

திருவேயென்செல்வமேதேனேவானோர்செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற்சோதிமிக்க, உருவேயென்னுறவேயென்னூ னேயூனினுள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற, கருவேயென் கற்பகமேகண்ணேகண்ணிற் கருமணியே மணியாடுபாவாய் காவாய், அருவாயவல்வினைநோயடையாவண்ணமாவடுதண் டுறையுறையுமமரரேறே. 1

மாற்றேனெழுத்தஞ்சுமென்றனுள்ளின்மறவேன்றிருவ ருள்கள்வஞ்சநெஞ்சின், ஏற்றேன்பிறதெய்வமெண்ணுநாயே னெம்பெருமான்றிருவடியேயெண்ணினல்லால், மேற்றானீ செய்வனகள் செய்யக்கண்டு வேதனைக்கேயிடங்கொடுத்துநா ளுநாளும், ஆற்றேனடியேனையஞ்சேலென்னுயாவடுதண்டுறை யுறையுமமரரேறே. 2

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனர்.

பண்-தக்கேசி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மறையவனொருமாணிவந்தடையவாரமாயவனுருயிர்நி றுத்தக், கறைகொள்வேலுடைக்காலனைக்காலாற்கடிந்தகார

ணங்கண்டுகண்டடியேன், இறைவனெம்பெருமானென்றெப்போதுமேத்தியேத்திநின் றஞ்சலிசெய்துன், அறைகொள்சேவடிக்கண்பொடுமடைந்தேனாவடுதுறையாதியெம்மானே. 1

தெருண்டவாயிடைநூல்கொண்டுசிலந்திசித்திரப்பந்தர்சிக்கெனவியற்றச், சுருண்டசெஞ்சடையாயதுதன்னைச்சோழனாக்கியதொடர்ச்சிகண்டடியேன், புரண்டுவீழ்ந்துநின்பொன்மலர்ப்பாதம்போற்றிபோற்றியென்றன்பொடும்புலம்பி அருண்டென்மேல்வினைக்கஞ்சிவந்தடைந்தேனாவடுதுறையாதியெம்மானே. 2

திகழுமாலவனாயிரமலராலேத்துவானொருநீண்மலர்குறையப், புகழினாலவன்கண்ணிடந்திடலும்புரிந்துசக்கரங்கொடுத்தல்கண்டடியேன், திகழுநின்றிருப்பாதங்கள்பரவித்தேவதேவநின்றிறம்பலபிதற்றி, அகழும்வல்வினைக்கஞ்சிவந்தடைந்தேனாவடுதுறையாதியெம்மானே. 3

வீரத்தாலொருவேடுவனாகிவிசைத்தொர்கேழலைத்துரந்துசென்றணைந்து, போரைத்தான்விசயன்றனக்கன்பாய்ப்புரிந்துவான்படைகொடுத்தல்கண்டடியேன், வாரத்தாலுனநாமங்கள்பரவிவழிபட்டுன்றிறமேநினைந்துருகி, ஆர்வத்தோடும்வந்தடியிணையடைந்தேனாவடுதுறையாதியெம்மானே. 4

ஒக்கமுப்புரமோங்கெரிதூவவுன்னைமுன்னிபமூவர்நின்சரணம், புக்குமற்றவர்பொன்னுலகாளப்புகழினாலருளீய்ந்தமையறிந்து, மிக்கநின்கழலேதொழுதரற்றிவேதியாவாதிமூர்த்திநின்னரையில், அக்கணிந்தவெம்மானுனையடைந்தேனாவடுதுறையாதியெம்மானே. 5

திருச்சிற்றம்பலம்.

**திருவாவடுதுறை:**—இது திருக்கைலாயத்தில் இறைவனோடு சொக்கட்டானாடிக் களித்தமையா லெய்திய பசுவடிவம், உமா

தேவியார் எய்திப் பூசித்து நீங்கப்பெற்றமையால் இப்பெயரெய்தியது; அநாதி முத்த ஸ்தலமெனவும், கோமுத்திபுரம் எனவும், பிப்பிலாரண்யமெனவும், நவகோடிசித்த வாச புரமெனவும், பலபெயருடையது; முசுகுந்தச் சக்ரவர்த்தி பூசித்துப் புத்திரப்பேறெய்தியது; ஸ்ரீமன் மணிவாசகமூர்த்திகள் குருமூர்த்தி தரிசனங்கண்டு போற்றியது; திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் "இடரினுந் தளரினும்" என்னுந் திருப்பதிகம்பாடித் தமது பிதாவின்யாகத்தின்பொருட்டு உலவாக்கிழிபெற்றருளியது; திருநாவுக்கரசுநாயனுர் எழுந்தருளிச் சுவாமியைத் துதித்துத் தமது திருநேரிசையில் "கழுமலவூரர்க்கம்பொன் ஆயிரங்கொடுப்பர்போலும்" என ஞானசம்பந்தருக்கு உலவாக்கிழி கொடுத்ததைச் சிறப்பித்தருளியது; சுந்தரமூர்த்திநாயனுர் எழுந்தருளித் தமக்கு வலது நேத்ரம் இல்லாமையைக்குறித்து வருந்திக் "கங்கைவார்சடையாய்" என்னுந் திருபதிகத்தைப்பாட சுவாமி திருவாரூரிலேயுள்ள தமது கோலத்தைக் காட்டியருளக்கண்டு திளைத்தமையைச் "சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்ச் செம்பொனே" என்று குறிப்பித்தருளினது; திருக்கைலாயத்தினின்றும் அகஸ்தியரைத்தரிசிக்கும்பொருட்டு தக்ஷிணத்தெழுந்தருளிய வித்தர் பசுக்களின்பொருட்டு மூலர்சரீரத்துப் புகுந்தருளி திருவுளக்குறிப்பறிந்து திருவரசின்கீழ் யோகமிருந்து வருடத்திற்கொரு திருமந்திரமாகத் திருமந்திரத்திருமுறையருளியது; ஆளுடைய பிள்ளையார் சுவாமிதரிசனஞ் செய்யும்பொழுது பத்ரபீடம் தமிழ் மணங்கமழ்கின்றதை யறிந்து திருமந்திரத் திருமுறையை வெளிப்படுத்தி யருளியது; திருவிசைப்பாச் செய்தருளிய நாயன்மார்களுள் திருமாளிகைத் தேவர் பலமஹிமாதிசயங்களைச் செய்தருளிச் சாந்நித்யமாயிருப்பது; போகமுனிவரின்திருவடி வீற்றிருக்கும் சிறப்புடையது; திருக்கைலாயச் சைலாதிபரம்பரையில் ஞானதேசிகராய் எழுந்தருளிய ஸ்ரீ அருணமச்சிவாயமூர்த்திகள் வழித்தாகிய திருவாவடுதுறைத் திருமடம் குலவும் ஞானராஜதானியாய் உள்ளது. சுவாமி-மாசிலாமணியீஸர், செம்பொற்றியாகர், தேவியார்-ஒப்பிலாமுலையம்மை, தீர்த்தம்-கோமுத்தித்தீர்த்தம், விருக்ஷம்-அரசு. இதற்குப்பதிகம்.8

இத்தலம் நாரசிங்கன்பேட்டை ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே மட்சாலையில் ஒருமைலில் உள்ளது.

# ௬௭. திருத்துருத்தி.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண்-நட்டராகம். ௨-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

வரைத்தலைப்பசும்பொனோடருங்கலன்களுந்திவந்
திரைத்தலைச்சுமந்துகொண்டெறிந்திலங்குகாவிரிக்
கரைத்தலைத்துருத்திபுக்கிருப்பதேகருத்தினாய்
உரைத்தலைப்பொலிந்துனக்குணர்த்துமாறுவல்லமே. 1

அடுத்தடுத்தகத்தியோடுவன்னிகொன்றைகூவிளந்
தொடுத்துடன்சடைப்பெய்தாய்துருத்தியாயொர்காலனைக்
கடுத்தடிப்புறத்தினாலிறத்துதைத்தகாரணம்
எடுத்தெடுத்துரைக்குமாறுவல்லமாகினல்லமே. 2

கற்றுமுற்றினார்தொழுங்கழும்மலத்தருந்தமிழ்
சுற்றுமுற்றுமாயினானவன்பகர்ந்தசொற்களால்
பெற்றமொன்றுயர்த்தவன்பெருந்துருத்திபேணவே
குற்றமுற்றுமின்மையிற்குணங்கள்வந்துகூடுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொருத்தியகுரம்பைதன்னைப்பொருளெனக்கருதவேண்டா
இருத்தியெப்போதுநெஞ்சுளிறைவனையேத்துமின்கள்
ஒருத்தியைப்பாகம்வைத்தங்கொருத்தியைச்சடையுள்வைத்த
துருத்தியஞ்சுடரினானைத்தொண்டனேன்கண்டவாறே. 1

பாதியிலுமையாடன்னைப்பாகமாவைத்தபண்பன்
வேதியனென்றுசொல்லிவிண்ணவர்விரும்பியேத்தச்

சாதியாஞ்சதுர்முகனுஞ்சக்கரத்தானுங்காணுச்
சோதியைத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. 7

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனுர்.

பண்-காந்தாரம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மின்னுமாமேகங்கள்பொழிந்திழிந்தருவிவெடிபடக் கரையொடுதிரைகொணர்ந்தெற்றும், அன்னமாங்காவிரியகன் கரையுறைவாரடியிணைதொழுதெழுமன்பராமடியார், சொன் னவாறறிவார்துருத்தியார்வேள்விக்குடியுளாரடிகளைச்செடிய னேனுயேன், என்னைநான்மறக்குமாறெம்பெருமானையென் னுடம்படும்பிணியிடர்கெடுத்தானை. 1

கூடுமாறுள்ளனகூடியுங்கோத்துங்கொய்புனவேனலோ டைவனஞ்சிதறி, மாடுமாகோங்கமேமருதமேபொருதுமலை யெனக்குலைகளைமறிக்குமாறுந்தி, ஓடுமாகாவிரித்துருத்தி யார்வேள்விக்குடியுளாரடிகளைச்செடியனேனுயேன், பாடுமா றறிகிலேனெம்பெருமானைப்பழவினையுள்ளனபற்றறுத்தானை.

மங்கைமீபார்கூறுகந்தேறுகந்தேறிமாறலார்திரிபுர நீறெழச்செற்ற, அங்கையான்கழலடியன்றிமற்றறியானடிய வர்க்கடியவன்றெழுவனூரன், கங்கையார்காவிரித்துருத்தி யார்வேள்விக்குடியுளாரடிகளைச்சேர்த்தியபாடல், தங்கை யாற்றெழுதுதந்நாவின்மேற்கொள்வார்தவநெறிசென்றமரு லகமாள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருத்துருத்தி:—இது குற்ருலம் எனவழங்கும், ஞானசம் பந்தமூர்த்திகளும், சுந்தரமூர்த்திகளும் இதனைச் சோழநாட்டு வடக ரை (23) த்தலம் திருவேள்விக்குடியுடன் சேர்த்துப் பாடியிருக்கின் றனர். இங்கு சுந்தரமூர்த்திநாயனுர் திருவாவடுதுறையினின் றும் எழுக்

தருளித் துதித்துச் சிவாக்ஞையால் கோயிலுக்கு வடபுறத்தில் உள்ள திருக்குளத்தில் மூழ்கித் தமது சரீரத்தில் உள்ள நோய் நீங்கி ப்ரகாசித்து "என்னுடம் படும்பிணி யிடர்கெடுத்தானை" என்பது முதலாகப் பல திருவார்த்தைகளாற் குறிப்பித்தருளினர். சிவபெருமான் அம்பிகையைத் திருவேள்விக்குடியில் விவாகஞ் செய்தருளும்முன்னர் பிரம்மசாரியாய் எழுந்தருளியிருந்து வேதம் ஓதி யருளினமையின் சுவாமி உத்தவேதீஸ்வரர். தாம் அருளிய வேதத்தைத் தாமே சொன்னமையின் சொன்னவாறறிவார், தேவியார்-மிருதுமுகிழாம்பிகை, தீர்த்தம்-வடகுளம், விருக்ஷம்-குற்றலம். இதற்குப் பதிகம் 3.

இத்தலம் குற்றாலம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மட்சாலையில் முக்கால் மைலில் உள்ளது.

---

# ௩அ. திருவழுந்தூர்.

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர்.

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தொழுமாறுவல்லார்துயர்தீரநினைந்
தெழுமாறுவல்லாரிசைபாடவிம்மி
அழுமாறுவல்லாரழுந்தைமறையோர்
வழிபாடுசெய்மாமடமன்னினையே. 1

கடலேறியநஞ்சமுதுண்டவனே
உடலேயுயிரேயுணர்வேயெழிலே
அடலேறுடையாயழுந்தைமறையோர்
விடலேதொழுமாமடமேவினையே. 2

அருஞானம்வல்லாரழுந்தைமறையோர்
பெருஞானமுடைப்பெருமானவனைத்
திருஞானசம்பந்தனசெந்தமிழ்கள்
உருஞானமுண்டாமுணர்ந்தார்தமக்கே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருவழுந்தூர்:**—இது தேரழுந்தூர் எனவழங்கும். ஊர்த்வரதன் என்னும்அரசன் கீழேபூமியில் அகஸ்தியர் சுவாமியைப் பூசித் திருத்தலையறியாது அந்தரத்தில் செலுத்தியதேர் அழுந்தினமையின் இப்பெயர்வந்தது. திக்பாலர், வேதம், தேவர் இவர் பூசித்தது. இது மாடக்கோயில், பதிகத்துக்காண்க. சுவாமி-வேதபுரீசர். தேவியார்-சௌந்தர்யாம்பிகை. தீர்த்தம்-வேததீர்த்தம். இதற்குப் பதிகம். 1

இத்தலம் குற்றாலம் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே க்ஷேத்ரபாலபுரம் மட்சாலையில் மூன்றுமைலில் உள்ளது.

---

## ௩௯. திருமயிலாடுதுறை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-சாதாரி. திருவிராகம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஏனவெயிறாடரவொடென்புவரியாமையிவைபூண்டிளைஞ
ராய், கானவரிநீடுழுவையதளுடையபடர்சடையர்காணியெ
னலாம், ஆனபுகழ்வேதியர்களாகுதியின்மீதுபுகைபோகியழ
கார், வானமுறு சோலைமிசைமாசுபடமூசுமயிலாடுதுறையே

அந்தண்மதிசெஞ்சடையரங்கணெழில்கொன்றையயொ
டணிந்தழகராம், எந்தமடிகட்கினியதானமதுவேண்டிலெழி
லார்பதியதாம், கந்தமலிசந்தினொடுகாரகிலும்வாரிவருகாவிரி
யுளால், வந்ததிரையுந்தியெதிர்மந்திமலர்சிந்துமயிலாடுதுறையே.

நிணந்தருமயானநிலவானமதியாதவொருசூலமொடு
பேய்க்,கணந்தொழுகபாலிகழலேத்திமிகவாய்த்தவொருகா
தன்மையினன், மணந்தண்மலிகாழிமறைஞானசம்பந்தன்ம
யிலாடுதுறையைப், புணர்ந்ததமிழ்பத்துமிசையாலுரைசெய்
வார்பெறுவர்பொன்னுலகமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்

### திருக்குறுந்தொகை ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொள்ளுங் காதன்மைபெய் துறுங்கோல்வளை
உள்ளமுள்கியுரைக்குந் திருப்பெயர்
வள்ளன் மாமயிலாடு துறையுறை
வெள்ளந் தாங்குசடையனை வேண்டியே. 1

அண்டர்வாழ்வுமமரிருக்கையும்
கண்டுவீற்றிருக்குங் கருத்தொன்றிலோம்
வண்டுசேர்மயிலாடு துறையரன்
தொண்டர்பாதங்கள் சூடித் துதையிலே. 3

கோலும்புல்லுமொருகையிற்கூர்ச்சமும்
தோலும்பூண்டு துபாமுற்றென்பயன்
நீலமாமயிலாடு துறையனை
நூலும்வேண்டுமோ நுண்ணுணர்ந்தோர்கட்கே. 8

பருத்ததோளுமுடியும்பொடிபட
இருத்தினனவனின்னிசைகேட்டலும்
வாத்தினன்மயிலாடுதுறைதொழும்
காத்தினர்வினைகட்டறுங்காண்மினே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருமயிலாடுதுறை:—இது மாயூரம் எனப் பிரசித்தமாக வழங்கும். தேவியார் மயிலுருவாய்ப் பூசித்த காரணத்தால் இப்பெயரெய்தியது. ஐப்பசி அமாவாசையில் தக்ஷிணாமூர்த்தி எழுந்தருளி வந்து காவிரியிற் கங்கையை வருவிப்பது. இந்த கட்டத்திற்கு விருஷபதீர்த்தமென்று பெயர். துலாஸ்தான விசேஷஸ்தலம். சுவாமி மாயூரநாதர், தேவியார்-அஞ்சநாயகி, தீர்த்தம்-காவிரி. இதற்குப்பதிகம் 3.

இத்தலம் மாயூரம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலையில் இரண்டு மைலில்உள்ளது.

---

## ௪௦. திருவிளநகர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம் ௨-ந் திருமுறை,

திருச்சிற்றம்பலம்.

ஒளிரிளம்பிறைசென்னிமேலுடையர்கோவணவாடையர்
குளிரிளம்மழைதவழ்பொழிற்கோலநீர்மல்குகாவிரி
நளிரிளம்புனல்வார்துறைநங்கைகங்கையைநண்ணினார்
மிளிரிளம்பொறியரவினார்மேயதுவிளநகரதே. 1

அக்கரவ்வணிகலனெனவதனொடார்த்ததோராமைபூண்
டுக்கவர்சுடுநீறணிந்தொளிமல்குபுனற்காவிரிப்
புக்கவர்துயர்கெடுகெனப்பூசுவெண்பொடிமேவிய
மிக்கவர்வழிபாடுசெய்விளநகரவர்மேயதே. 2

மென்சிறைவண்டியாழ்முரல்விளநகர்த்துறைமேவிய
நன்பிறைநுதலண்ணலைச்சண்பைஞானசம்பந்தன்சீர்
இன்புறுதமிழாற்சொன்னவேத்துவார்வினைநீங்கிப்போய்த்
துன்புறுந்துயரம்மிலாத்தூநெறிபெறுவார்களே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருவிளநகர்:**—இது நந்தனவனத் திருப்பணி செய்யும் அருள்வித்தன் என்னும் பிராம்மணோத்தமர் ஆற்றுவெள்ளத் தகப்பட்டுச் சிந்தித்தபோது ஸ்வாமி துறைகாட்டிக் கரையேற்றிய தலம், இக்காரணம் பற்றிச் சுவாமி துறைகாட்டும்வள்ளல் (பதிகத்துக்காணத்தக்கது) உசீரவனேசுவரர் எனவும் வழங்குவர், தேவியார்-வேயுறு தோளியம்மை, வம்சபுஜாம்பாள் எனவும் வழங்குவர். தீர்த்தம்-காவிரி. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் மாயூரம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலையில் இரண்டுமைலில் திருமயிலாடுதுறையிலிருந்து கிழக்கே மட்சாலையில் நான்குமைலில்உள்ளது.

# சச. திருப்பறியலூர்வீரட்டம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-மேகராகக்குறிஞ்சி க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கருத்தன்கடவுள்கனலேந்தியாடும்
நிருத்தன்சடைமேனிரம்பாமதியன்
திருத்தமுடையார்திருப்பறியலூரில்
விருத்தனெனத்தகும்வீரட்டத்தானே. 1

மருந்தன்னமுதன் மயானத்துண்மைந்தன்
பெருந்தண்புனற்சென்னிவைத்தபெருமான்
திருந்துமறையோர்திருப்பறியலூரில்
விரிந்தமலர்ச்சோலைவீரட்டத்தானே. 2

நறுநீருகுங்காழிஞானசம்பந்தன்
வெறிநீர்த்திருப்பறியல்வீரட்டத்தானை
பொறிநீடரவன்புனைபாடல்வல்லார்க்
கறுநீடவலமறும்பிறப்புத்தானே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பறியலூர் வீரட்டம்:—இது பறசலூர் எனவழங்கும். தக்ஷயாக ஸம்ஹாரஸ்தலம். தக்ஷயாகத்திருந்த தேவர்கள் பாபங்களைத் தண்டனைவழியாகப் பறித்த காரணத்தால் இப்பெயரெய்தியது. இங்கு வீரபத்ரமூர்த்தி தக்ஷனோடு எழுந்தருளியிருக்கிறார். சுவாமி வீரட்டேசர், தேவியார்-இளங்கொம்பனையாள். இதற்குப் பதிகம் 1

இத்தலம் (40) திருவிளநகரிலிருந்து கிழக்கே மட்சாலையில் ஒருமைலில் தெற்கே திரும்பி ஒருமைலில் உள்ளது.

# ௪௨. திருச்செம்பொன்பள்ளி.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கராகம். ௧-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

மருவார்குழலிமாதோர்பாகமாய்த்
திருவார்செம்பொன்பள்ளிமேவிய
கருவார்கண்டத்தீசன்கழல்களை
மருவாதவர்மேன்மன்னும்பாவமே. 1

வாரார்கொங்கைமாதோர்பாகமாய்ச்
சீரார்செம்பொன்பள்ளிமேவிய
ஏரார்புரிபுன்சடையெம்மீசனைச்
சேராதவர்மேற்சேரும்வினைகளே. 2

நறவார்புகலிஞானசம்பந்தன்
செறுவார்செம்பொன்பள்ளிமேயானைப்
பெறுமாறிசையாற்பாடலிவைபத்தும்
உறுமாசொல்லவோங்கிவாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

பண்-திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கானறாதகடிபொழில்வண்டினம்
தேனறாததிருச்செம்பொன்பள்ளியான்
ஊனறாததோர்வெண்டலையிற்பலி
தானறாததோர்கொள்கையன்காண்மினே. 1

என்புமாமையும்பூண்டங்குழிதர்வர்க்
கன்புமாயிடுமாயிழையீரினிச்
செம்பொன்பள்ளியுளான்சிவலோகனை
நம்பொன்பள்ளியுள்கவினைநாசமே. 2

திரியுமும்மதில்செங்கணையொன்றினல்
எரியவெய்தனலோட்டியிலங்கைக்கோன்
நெரியவூன்றியிட்டார்செம்பொன்பள்ளியார்
அரியவானமவரருள்செய்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருச்செம்பொன்பள்ளி:—இது செம்பொனார்கோயி லெனவழங்கும். இங்கு விருத்ராசுரவதத்தின் பொருட்டு இந்திரனும் தாரகாசுரவதத்தின்பொருட்டு சுப்ரமண்யக்கடவுளும் பூசித்தகாரணத் தால் இந்திரபுரி யெனவும் ஸ்கந்தபுரி யெனவும் கூறப்பெறும், அகஸ்தியர் பூசித்துப் புருஷார்த்தங்களையும் பிரம்மதேவர் பூசித் துச் சிருஷ்டி ஸாமர்த்தியத்தையும் இரதி பூசித்துப் பதியை யும், நாககன்னியர்கள் பூசித்து நல்லகணவரையும் இந்திரன்பூசித் து தக்ஷயாகத்தில் அடைந்த தோஷநிவாரணத்தையும் அடைந்தார் கள். வசிஷ்டர், திக்பாலகர், காவிரி, ஸமுத்திரம் முதலியவர்களும் பூசித்துள்ளார்கள். தக்ஷயாகஸம்ஹாரத்தின் பொருட்டு வீரபத்திரர் அவதரித்தது. இவ்விடத்துக் காவிரியிலிட்ட எலும்புகள் புஷ்ப விருக்ஷங்களாய் சிவபூஜைக்கு அர்ஹமாகும். சுவாமி-சுவர்ணபுரீஸ்வ ரர், தேவியார்-சுகந்தவனநாயகியம்மை. இதற்குப்பதிகம் 3.

இத்தலம் மாயூரம்ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலையில் திரு மயிலாடுதுறையிலிருந்து கிழக்கே கற்சாலையில் 7-மைலில் உள்ளது.

---

## சரு. திருநனிபள்ளி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-பியந்தைக்காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காரைகள்கூகைமுல்லைகளாவகையீகைபடர்தொடரிகள்
ளிகவினிச், சூரைகள்பம்மிவிம்முசுடுகாடமர்ந்தசிவன்மேவு
சோலைநகர்தான், தேரைகளாரைசாயமிதிகொள்ளவாளைகுதி
கொள்ளவள்ளைதுவள, நாரைகளாரல்வாரிவயன்மேதிவைகு
நனிபள்ளிபோலுநமர்காள். 1

சடையிடைப்புக்கொடுங்கியுளதங்குவெள்ளம்வளர்திங்கள்கண்ணியயலே, இடையிடைவைத்ததொக்குமலர்த்தொத்துமாலையிறைவன்னிடங்கொள்பதிதான், மடையிடைவாளைபாயமுகிழ்வாய்நெரிந்துமணநாறுநீலமலரும், நடையுடையன்னம்வைகுபுனலம்படப்பைநனிபள்ளிபோலுநமர்காள்.

கடல்வரையோதமல்குகழிகானல்பானல்கமழ்காழியென்றுகருதப், படுபொருளாறுநாலுமுளதாகவைத்தபதியானஞானமுனிவன், இடுபறையொன்றவத்தர்பியன்மேலிருந்தினிசையாலுரைத்தபனுவல், நடுவிருளாடுமெந்தைநனிபள்ளியுள்கவினைகெடுதலாணைநமதே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்

### திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

புலர்ந்தகால்பூவுநீருங்கொண்டடிபோற்றமாட்டா
வலஞ்செய்துவாயினூலால்வட்டணைப்பந்தர்செய்த
சிலந்தியையரசனாக்கிச்சீர்மைகளருளவல்லார்
நலந்திகழ்சோலைசூழ்ந்தநனிபள்ளியடிகளாரே. 2

துஞ்சிருள்காலைமாலைதொடர்ச்சியைமறந்திராதே
அஞ்செழுத்தோதிநாளுமரனடிக்கன்பதாகும்
வஞ்சனைப்பாற்சோறாக்கிவழக்கிலாவமணர்தந்த
நஞ்சமுதாக்குவித்தார்நனிபள்ளியடிகளாரே. 5

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

### பண்- பஞ்சமம். ௭-ந் திருமுறை.

ஆதியனாதிரையனயன்மாலறிதற்கரிய
சோதியன்சொற்பொருளாய்ச்சுருங்காமறைநான்கினையும்

ஓதியனும்பர்தங்கோனுலகத்தினுளெவ்வுயிர்க்கும்
நாதியனம்பெருமானண்ணுமூர்நனிபள்ளியதே. 1

பண்ணற்கரியதொருபடையாழிதனைப்படைத்துக்
கண்ணற்கருள்புரிந்தான்கருதாதவர்வேள்விபவி
உண்ணற்கிமையவரையுருண்டோடவுதைத்துகந்து
நண்ணற்கரியபிரானண்ணுமூர்நனிபள்ளியதே. 5

காலமுநாழிகையுந்நனிபள்ளிமனத்தினுள்கிக்
கோலமதாயவனைக்குளிர்நாவலவூரன்சொன்ன
மாலைமதித்துரைப்பார்மண்மறந்துவானேருலகில்
சாலநல்லின்பமெய்தித்தவலோகத்திருப்பவரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருநனிபள்ளி:**— இது புஞ்சை என்றுவழங்கும். ஞானசம்பந்தமூர்த்திகளது மாதாமகஸ்தலம். இது பூர்வத்திற் பாலையாய் இருந்ததை ஆளுடைய பிள்ளையார் அடியார் வேண்டுகோளுக்கியைய நெய்தலாகப் பாடியது திருக்களிற்றுப்படியாரிற் காணத்தக்கது. இத்தலப் பதிகத்திருக்கடைக்காப்பில் நாயனுர் தாம் தமது பிதாவின் திருத்தோளிலிருந்து பதிகம் பாடியது கூறப்பெற்றது. வாகீசமூர்த்திகள் திருநேரிசையில் 5-ந்திருப்பாட்டில் சமணர்கள் தமக்குக் கொடுத்த நஞ்சுகலந்த பாற்சோறு அமுதாகியது கூறப்பெற்றிருக்கிறது. சுவாமி-நற்றுணையப்பர், தேவியார்-பர்வதராஜபுத்ரி. இதற்குப் பதிகம் 3.

இத்தலம் (42) திருச்செம்பொன்பள்ளியினின்றும் வடகிழக்கே மட்சாலையில் ஒருமைலில் உள்ளது.

---

## சச. திருவலம்புரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண்-பழம்பஞ்சுரம் ௩-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

கொடியுடைமும்மதிலூடுருவக்குனிவெஞ்சிலைதாங்கி
இடிபடவெய்தவமரர்பிரானடியாரிசைந்தேத்தத்
துடியிடையாளையொர்பாகமாகத்துதைந்தாரிடம்போலும்
வடிவுடைமேதிவயல்படியும்வலம்புரநன்னகரே. 1

கோத்தகல்லாடையுங்கோவணமுங்கொடுகொட்டிகொண்டொருகை
தேய்த்தன்றநங்கனைத்தேசழித்துத்திசையார்தொழுதேத்தக்
காய்த்தகல்லாலதன்கீழிருந்தகடவுள்ளிடம்போலும்
வாய்த்தமுத்தீத்தொழிலுன்மறையோர்வலம்புரநன்னகரே. 2

நல்லிபனுன்மறையோர்புகலித்தமிழ்ஞானசம்பந்தன்
வல்லியந்தோலுடையாடையினுன்வலம்புரநன்னகரைச்
சொல்லியபாடல்கள்பத்துஞ்சொல்லவல்லவர்தொல்வினைபோய்ச்
செல்வனசேவடிசென்றணுகிச்சிவலோகஞ்சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனர்

திருத்தாண்டகம் சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மண்ணளந்தமணிவண்ணர்தாமுமற்றைமறையவரும்வானவருஞ்சூழநின்று,கண்மலிந்ததிருநெற்றியுடையாரொற்றைக்கதநாகங்கையுடையார்காணீரன்றே, பண்மலிந்தமொழியவருமியானுமெல்லாம்பணிந்திறைஞ்சித்தம்முடையபின்பின்செல்ல, மண்மலிந்தவயல்புடைசூழ்மாடவீதிவலம்புரமேபுக்கங்கேமன்னினரே. 1

செங்கண்மால்சிலைபிடித்துச்சேனையோடுஞ்சேதுபந்தனஞ்செய்துசென்றுபுக்குப்,பொங்குபோர்பலசெய்துபுகலால்வென்றபோராக்கனெடுமுடிகள்பொடியாய்வீழ, அங்கொருதன்றிருவிரலாலிறையேயூன்றியடர்த்தவற்கேயருள்புரிந்தவடிகளிந்நாள், வங்கமலிகடல்புடைசூழ்மாடவீதிவலம்புரமேபுக்கங்கேமன்னினரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனர்.

பண்-காந்தாரம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எனக்கினித்தினைத்தனைப்புகலிடமறிந்தேன்
பனைக்கனிபழம்படும்பரவையின்கரைமேல்

எனக்கினியவன் றமர்க்கினியவனெழுமையும்
மனக்கினியவன் றனதிடம்வலம்புரமே. 1

புரமவையெரிதாவளைந்தவில்லினனவன்
மாவுரிபுலியதளரைமிசைமருவினன்
அரவுரியிரந்தயனிரந்துணவிரும்பிநின்
றிரவெரியாடிதனிடம்வலம்புரமே. 2

வருங்கலமும்பலமேபணுதல்கருங்கடல்
இருங்குலப்பிறப்பர்தமிடம்வலம்புரத்தினை
அருங்குலத்தருந்தமிழூரன்வன்றொண்டன்சொல்
பெருங்குலத்தவர்கொடுபிதற்றுதல்பெருமையே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருவலம்புரம்:**—இது மேலப்பெரும்பள்ள மெனவழங்கும், சிவலிங்கப்பெருமானது திருமுடியில் பெரும்பள்ளம் இருக்குங் காரணத்தால் இப்பெயரெய்தியதெனக் கூறுப. விஷ்ணு பூசித்து ஶங்கம் பெற்றஸ்தலம். சுவாமி வலம்புரநாதர், தேவியார்-வடுவகிர்க்கண்ணியம்மை, இதற்குப் பதிகம் 4.

இத்தலம் வடகரை (10) திருப்பல்லவனீச்சரத்தினின்றும் தென்மேற்கே மட்சாலையில் இரண்டுமைலில் உள்ளது. மேலே (43) திருநனிபள்ளியினின்றும் 6 மைலிலுள்ள திருவெண்காட்டினின்றும் ஐந்துமைலில் உள்ளது.

---

## சரு. திருத்தலைச்சங்காடு.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

நலச்சங்கவெண்குழையுந்தோடும்பெய்தோர்நால்வேதம்
சொலச்சங்கையில்லாதீர்சுடுகாடல்லாற்கருதாதீர்
குலைச்செங்காய்ப்பைங்கமுகின்குளிர்கொள்சோலைக்குயிலாலும்
தலைச்சங்கைக்கோயிலேகோயிலாகத்தாழ்ந்தீரே. 1

துணிமல்குகோவணமுந்தோலுங்காட்டித்தொண்டாண்டீர்
மணிமல்குகண்டத்திரண்டர்க்கெல்லாமாண்பானீர்
பிணிமல்குநூன்மார்பர்பெரியோர்வாழுந்தலைச்சங்கை
அணிமல்குகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. 2

நளிரும்புனற்காழிநல்லஞானசம்பந்தன்
குளிருந்தலைச்சங்கையோங்குகோயின்மேயானை
ஒளிரும்பிறைபானையுரைத்தபாடலிவைவல்லார்
மிளிருந்திரைசூழ்ந்தவையத்தோர்க்குமேலாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தலைச்சங்காடு:—இது விஷ்ணுமூர்த்திக்குப் பாஞ்சசன்ய ஸங்கம் அருளிய காரணத்தினல் இப்பெய ரெய்தியது. மாடக்கோயில்களுள் ஒன்று. சுவாமி-ஸங்கருணயகர், தேவியார்-சௌந்தர்யாம்பிகை. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் (44) திருவலம்புரத்துக்குத் தென்மேற்கே மட்சாலையில் ஒருமைலில் உள்ளது.

---

## சசு. திருவாக்கூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்

பண்-சீகாமரம். உ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

அக்கிருந்தவாரமுமாடரவுமாமையும்
தொக்கிருந்தமார்பினன்றோலுடையான்வெண்ணீற்றான்
புக்கிருந்ததொல்கோயில்பொய்யிலாமெய்ந்நெறிக்கே
தக்கிருந்தாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. 1

நன்மையாஞாரணனுநான்முகனுங்காண்பரிய
தொன்மையான்றோற்றங்கேடில்லாதான்றோல்கோயில்
இன்மையாற்சென்றிரந்தார்க்கில்லையென்னதீந்துவக்கும்
தன்மையாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. 2

ஆடலமர்ந்தானையாக்கூரிற்றான்றோன்றி
மாடமமர்ந்தானைமாடஞ்சேர் தண்காழி
நாடற்கரியசீர் ஞானசம்பந்தன்சொல்
பாடலிவைவல்லார்க்கில்லையாம்பாவமே. 11.

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முடித்தாமரையணிந்தமூர்த்திபோலுமூவுலகுந்தாமாகி நின்றார்போலும், கடித்தாமரையேய்ந்தகண்ணார்போலுங்கல் லலகுபாணிபயின்றார்போலும், கொடித்தாமரைக்காடேகாடுந் தொண்டர்குற்றேவலுமகிழ்ந்தகுழகர்போலும், அடித்தாமரை மலர்மேல்வைத்தார்போலுமாக்கூரிற்றான்றோன்றியப்பனாரே

ஏகாசமாம்புலித்தோல்பாம்புதாழவிடுவெண்டலைகலனு வேந்தினாலும், மேகாசங்கட்டழித்தவெள்ளிமாலைபுனலார் சடைமுடிமேற்புனைந்தார்போலும்,மாகாசமாயவெண்ணீருந் தீயுமதியுமதிபிறந்தவிண்ணுமண்ணும், ஆகாசமென்றிவையு மானார்போலுமாக்கூரிற்றான்றோன்றியப்பனாரே. 5

திருச்சிற்றம்பலம்.

---

**திருவாக்கூர்த்தான்றோன்றிமாடம்**:—இது ஆக்கூர்என் னும் ஊர்ப்பெயரும் தான்றோன்றிமாடம் என்னும் தலப்பெயரும் சேர்ந்து இப்பெயரெய்தியது. இங்கு சுவாமி சுயம்புவாய காரணத்தி னால் தான்றோன்றியப்பனார் என்னும் பெயருடையவ ராதலின் ஆல யம் தான்றோன்றி மாடமாயிற்று. இது பதிகத்துக் காணப்பெறும் பெருங்கொடையாளர் வதிந்தபதிஇது என்பது ஆளுடைய பிள்ளையா ரது திருப்பதிகத்து 9-ந்திருப்பாட்டிற் காணத்தக்கது. ஸ்ரீமத் சேக் கிழார் நாயனாரும் இத்திருப்பாட்டைச் சிறப்புலிநாயனாரது புராணத் து அமைத்திருக்கிறார்கள். சிறப்புலிநாயனார் திருவவதாரஞ்செய்து பெருங்கொடை வள்ளலாய் சிவபூஜை மாகேஸ்வரபூஜைகளைச் சிறப்

புற நடத்துவித்துத் திருவடியடைந் தருளிய தலம். "சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலி" எனத் திருத்தொண்டத் தொகையிலும் பாராட்டியது காண்க. ஆலயம் மாடக்கோயில். சுவாமி-சுயம்புநாதர் தேவியார்-கட்கநேத்ரி. இதற்குப் பதிகம் 2.

இத்தலம் மாயூரம் தரங்கம்பாடிக் கற்சாலையிலிருந்து பத்தாவது மைலில் சாலையிலிருந்து வடக்கேதிரும்பி ஒருமைலில் உள்ளது.

---

## சஎ. திருக்கடவூர்வீரட்டம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர்.

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சடையுடையானுநெய்யாடலானுஞ்சரிகோவண
உடையுடையானுமையார்ந்தவொண்கண்ணுமைகேள்வனும்
கடையுடைநன்னெடுமாடமோங்குங்கடவூர்தனுள்
விடையுடையண்ணலும்வீரட்டானத்தானல்லனே. 1

எரிதருவார்சடையானும்வெள்ளையெருதேறியும்
புரிதருமாமலர்க்கொன்றைமாலைபுனைந்தேத்தவே
கரிதருகாலனைச்சாடினானுங்கடவூர்தனுள்
விரிதருதொல்புகழ்வீரட்டானத்தானல்லனே. 2

வெந்தவெண்ணீறணிவீரட்டானத்துறைவேந்தனை
அந்தணர்தங்கடவூருளானையணிகாழியான்
சந்தமெல்லாமடிச்சாத்தவல்லமறைஞானசம்
பந்தனசெந்தமிழ்பாடியாடக்கெடும்பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநாவுக்கரசு நாயனூர்

திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பெரும்புலர்காலைமூழ்கிப்பித்தர்க்குப்பத்தராகி
அரும்பொடுமலர்கள்கொண்டாங்கார்வத்தையுள்ளேவைத்து
விரும்பிநல்விளக்குத்தூபம்விதியினாலிடவல்லார்க்குக்

கரும்பினிற்கட்டிபோல்வார்கடவூர்வீரட்டனாரே. 4

பழியுடையாக்கைதன்னிற்பாழுக்கேநீரிறைத்து
வழியிடைவாழமாட்டேன்மாயமுந்தெளியகில்லேன்
அழிவுடைத்தாயவாழ்க்கையைவாலலைக்கப்பட்டுக்
கழியிடைத்தோணிபோன்றேன்கடவூர்வீரட்டனீரே. 6

சேலினேரனையகண்ணார்திறம்விட்டுச்சிவனுக்கன்பாய்ப்
பாலுநற்றயிர்நெய்யோடுபலபலவாட்டியென்று
மாலினைத்தவிரநின்றமார்க்கண்டர்க்காகவன்று
காலனையுதைப்பர்போலுங்கடவூர்வீரட்டனாரே. 9

திருச்சிற்றம்பலம்.

---

திருவிருத்தம், ௬-ந் திருமுறை,

திருச்சிற்றம்பலம்.

மருட்டுயர்தீரவன்றர்ச்சித்தமாணிமார்க்கண்டேயற்காய்
இருட்டியமேனிவளைவாளெயிற்றெரிபோலுங்குஞ்சிச்
சுருட்டியநாவில்வெங்கூற்றம்பதைப்பவுதைத்துங்கனே
உருட்டியசேவடியான்கடவூருறையுத்தமனே. 1

பாலனுக்காயன்றுபாற்கடலீந்துபணைத்தெழுந்த
ஆலினிற்கீழிருந்தாரணமோதியருமுனிக்காய்ச்
சூலமும்பாசமுங்கொண்டுதொடர்ந்தடர்ந்தோடிவந்த
காலனைக்காய்ந்தபிரான்கடவூருறையுத்தமனே. 6

கேழலதாகிக்கிளறியகேசவன்காண்பரிதாய்
வாழிநன்மாமலர்க்கண்ணிடந்திட்டவம்மாலவற்கன்
றூழியுமீந்தவடிதிறற்காலனையன்றடர்த்து
வூழியுமாயபிரான்கடவூருறையுத்தமனே. 9

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்

பண்- நட்டராகம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொடியார்மேனியனேபுரிநூலொருபாற்பொருந்த
வடியார்மூவிலைவேல்வளர்கங்கையின்மங்கையொடும்

கடியார்கொன்றையனேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அடிகேளென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. 1

பிறையாருஞ்சடையாய்பிரமன்றலையிற்பலிகொள்
மறையார்வானவனேமறையின்பொருளானவனே
கறையாரும்மிடற்றாய்கடவூர்தனுள்வீரட்டத்தெம்
இறைவாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. 2

காராரும்பொழில்சூழ்கடவூர்த்திருவீரட்டத்துள்
ஏராரும்மிறையைத்துணையாவெழினாவலர்கோன்
ஆரூரன்னடியானடித்தொண்டனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருக்கடவூர் வீரட்டம்:**—இது அட்ட வீரட்டத்தில் காலஸம்ஹாரஸ்தலம். பாத்மகல்பத்தில் பிரம்மதேவர் சிவஞான ப்ராப்தியின் பொருட்டுப் பரமசிவனால் கொடுக்கப்பட்ட சிவஞான வித்தையிட்டுத் தோற்றிய வில்வ விருக்ஷத்தையுடைமையினால் வில்வாரணிய க்ஷேத்ரமென்றும், ராதந்தரகல்பத்தில் விட்டுணு மூர்த்திமுதலிய தேவர்கள் பரிஸுத்தஸ்தானமாகிய இவ்விடத்தில் உண்ணும்படி கொணர்ந்துவைத்த அமுதகடம் அமுதலிங்கமாக ஆவிர்ப்பவித்தமையின் கடபுரி, கடவூர் எனவும், பிரம்மரந்திர க்ஷேத்ரமெனவும் சொல்லப்பெறும். மார்க்கண்டேயரை இயமனையுதைத்து ஆட்கொண்டு அநுக்கிரகித்த தலம். காலஸம்ஹாரமூர்த்தி தனியே எழுந்தருளியிருக்கிறார். அகஸ்தியர், புலஸ்தியர் பூசித்த பாபவிமோசன லிங்கம், புண்யவர்த்தன லிங்கம் என இரண்டு லிங்கங்கள் விசேஷ ஸாந்நித்யமாப் உண்டு. குங்குலியக்கலய நாயனார் திருவவதாரஞ்செய்து தாம் செய்துவந்த குங்குலியத் திருப்பணியை வறுமைவந்தகாலத்தும் விடாது மனைவியாரது திருமங்கிலியத்தை மாறியும் செய்து அநுக்கிரகம்பெற்றுத் திருக்கடவூருக்குத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் எழுந்தருளியபோது அவர்களை உபசரித்து அவர்களது நட்பைப்பெற்று முத்தியடைந்த தலம். காரிநாயனார் அவதரித்து சொல்விளங்கப் பொருள்மறையக் கவிகள்பாடி அரசர்பாற் சென்று நிதிபெற்று அநேக திருப்பணிகள் செய்து முத்தியடைந்த க்ஷேத்ரம்.

ஸப்தகந்நிகைகள், வாஸுகி, துர்க்கை முதலியோரும் பூசித்த தலம். மேற்குநோக்கிய ஸந்நிதி. சுவாமி-அமிர்தகடேசர், தேவியார்-அபிராமியம்மை, தீர்த்தம்-அமிர்த புஷ்கரணி, கங்கை கால தீர்த்தம் முதலியன, விருக்ஷம்-வில்வம், ஜாதி. இதற்குப்பதிகம். 5.

இத்தலம் மாயூரம் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே தரங்கம்பாடிச்சாலையில் 13-வது மைலில் உள்ளது.

---

## சஅ. திருக்கடவூர்மயானம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வரியமறையார்பிறையார்மலையோர்சிலைபாவணக்கி
எரியமதில்களெய்தாரெறியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல்வருவாரவரெம்பெருமானடிகளே. 1

மங்கைமணந்தமார்பர்மழுவாள்வலனென்றேந்திக்
கங்கைசடையிற்கரந்தார்கடவூர்மயானமமர்ந்தார்
செங்கண்வெள்ளேறேறிச்செல்வஞ்செய்யாவருவார்
அங்கையேறியமறியாரவரெம்பெருமானடிகளே. 2

மாவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
அரவமசைத்தபெருமானகலமறியலாகப்
பரவுமுறையேபயிலும்பந்தன்செஞ்சொன்மாலை
இரவும்பகலும்பரவிநினைவார்வினைகளிலரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநாவுக்கரசு நாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

குழைகொள்காதினர்கோவணவாடையர்
உழையர்தாங்கடவூரின்மயானத்தார்
பழையதம்மடியார்செய்தபாவமும்
பிழையுந்தீர்ப்பர்பெருமானடிகளே. 1

உன்னிவானவரோதியசிந்தையில்
கன்னறேன்கடவூரின்மயானத்தார்
தன்னைநோக்கித்தொழுதெழுவார்க்கெலாம்
பின்னையென்னார்பெருமானடிகளே. 2

அரவுகையினராதிபுராணனார்
மரவுசேர்கடவூரின்மயானத்தார்
பரவுவாரிடர்தீர்ப்பர்பணிகொள்வர்
பிரமன்மாற்கும்பெருமானடிகளே. 8

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-பழம்பஞ்சுரம். எ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேன்மாதோடுமகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. 1

விண்ணோர்தலைவர்வெண்புரிநூன்மார்பர்வேதகீதத்தர்
கண்ணார்நுதலர்நகுதலையர்காலகாலர்கடவூரர்
எண்ணார்புரமூன்றெரிசெய்தவிறைவரிமைபோலொருபாகம்
பெண்ணாணவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. 2

மாடமல்குகடவூரின்மறையோரேத்துமயானத்துப்
பீடைதீரவடியாருக்கருளும்பெருமானடிகள்சீர்
நாடிநாவலாரூரன்சொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற்பாவமானபறையுமே. 10

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூர் மயானம்:—இது பிரம்மதேவரை தஹனம் செய்து மீண்டும் உயிர்ப்பித்து சிருஷ்டி ஸாமர்த்தியம் அநுக்கிரகம் செய்தகாரணத்தால் இப்பெயரெய்தியது. பிரம்மதேவர் பூசித்தது. இத்தலத்துக்குத் தெற்கு அரைமைலில் உள்ள காசி தீர்த்தத்தில்

அமிர்தகடேசர் பங்குனிமீ அச்சுவினி நக்ஷத்திரத்தில் தீர்த்தங்கொடுப்பது விசேடம். சுவாமி-பிரம்மபுரேசர், தேவியார்-அமலக்குய மின்னம்மை, தீர்த்தம்-காசிதீர்த்தம், இதற்குப்பதிகம். 3

இத்தலம் (47) திருக்கடவூருக்குக் கிழக்கே ஒருமைலில் மணற்பாதையிலுள்ளது.

---

## சசு. திருவேட்டக்குடி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-பஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வண்டிரைக்கும்மலர்க்கொன்றைவிரிசடைமேல்வரியரவம்
கண்டிரைக்கும்பிறைச்சென்னிக்காபாலிகழல்கள்
தொண்டிரைத்துத்தொழுதிறைஞ்சத்துளங்கொளிநீர்ச்சுடர்ப்பவளம்
தெண்டிரைக்கண்கொணர்ந்தெறியுந் திருவேட்டக்குடியாரே.

தோத்திரமாமணலிலிங்கந்தொடங்கியவானிரையிற்பால்
பாத்திரமாவாட்டுதலும்பாஞ்சோதிபரிந்தருளி
ஆத்தமெனமறைநால்வர்க்கறம்புரிநூலன்றுரைத்த
தீர்த்தமல்குசடையாருந் திருவேட்டக்குடியாரே. 3

தெண்டிரைசேர்வயலுடுத்த திருவேட்டக்குடியாரைத்
தண்டலைசூழ்கவிக்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
ஒண்டமிழ்நூலிவைபத்துமுணர்ந்தேத்தவல்லார்போய்
உண்டுடுப்பில்வானவரோடுயர்வானத்திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருவேட்டக்குடி:**— இது அருச்சுனருக்குச் சிவபெருமான் வேடருபமாக வெளிப்பட்ட தலமெனக் கருதுகிறபடியால் இப்பெயரெய்தியதாயிருக்கலாம். சந்நிதிக்குக்கிழக்கே கடற்கரைக்குச் சமீபமாய் தினந்தோறும் ராத்திரியில் தீ எரிதலுண்டென்றும் அதுவே திருப்பதிகத்தில் "தீ யெரிகை மகிழ்ந்தாரும்" என்று பதிகத்துக் கூறப்பட்டதென்றும் சொல்லுவர். சுவாமி- திருமேனியழகர், தேவியார் சாந்தநாயகி, இதற்குப் பதிகம் 1.

இத்தலம் புரையாறுரோட் ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலையில் மூன்றுமைலிலுள்ள வரிச்சி குடியினின்றும் கிழக்கே மட்சாலையில் ஒருமைலில்உள்ளது.

---

## ருய. திருத்தெளிச்சேரி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம் உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பூவலர்ந்தனகொண்டுமுப்போதுமும்பொற்கழல்
தேவர்வந்துவணங்குமிகுதெளிச்சேரியீர்
மேவருந்தொழிலாளொடுகேழற்பின்வேடனாம்
பாவகங்கொடுநின்றதுபோலுநம்பான்மையே. 1

விளக்கும்பத்திக்குவிண்ணவர்மண்ணவரேத்தவே
திளைக்குந்தீர்த்தமறுதநிகழ்தெளிச்சேரியீர்
வளைக்குந்திண்சிலைமேலைந்துபாணமுந்தானெய்து
களிக்குங்காமனையெங்ஙனநீர்கண்ணிற்காய்ந்ததே. 2

திக்குலாம்பொழில்சூழ்தெளிச்சேரியெஞ்செல்வனை
மிக்ககாழியுண்ஞானசம்பந்தன்விளம்பிய
தக்கபாடல்கள்பத்தும்வல்லார்கட்டமுடித்
தொக்கவானவர்சூழவிருப்பவர்சொல்லிலே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தெளிச்சேரி:—இது கோயிற்பத்து எனவழங்கும். திருஞான சம்பந்தமூர்த்திகள் எழுந்தருளும்போது "பரசமய கோளரி வந்தார்" என்று அடியார் பணிமாறுகிற திருச்சின்ன ஒலியைப் பொருத புத்தர்கள் புத்த நந்தியைத் தலைவனாகக்கொண்டு எதிர்க்கத் திருமுறை எழுதும் சம்பந்த சரணாலய சுவாமிகள் பஞ்சாக்கரத் திருப்பதிகத்தில் "புத்தர்சமண் கழுக்கையர்" என்னுந் திருப்பாட்டையோதி புத்தநந்தியின் தலையை இடியினால் சிதறச்செய்தார். பயந்தோடிய புத்தர் மீண்டும் சாரிபுத்தனைத் தலைவனாக் கொண்டுவந்து சம்பந்த சரணாலயரோடு வாதிற்றோற்றுச் சைவராய் உய்ந்த தலம். பங்குனிமாதச்

தில் சூரியபூஜை. மேற்குநோக்கிய சந்நிதி, சுவாமி-பார்ப்பதீச்சுரர், தேவியார்-சத்தியம்மை, இதற்குப்பதிகம். 1

இத்தலம் புரையாறுரோட் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே அரைமைலில் உள்ளது.

---

# ௫௧. திருத்தருமபுரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

யாழ்மூரி. ௧-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாதர்ம டப்பிடியும்-மட-வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின்-றிசை-பாடவு மாடுவ
ரவர்-படர் சடைந் நெடு-முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா-டுவ-ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங்-கும-லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயில்-தருமபு ரம்பதியே. 1

பொன்னெடு நன்மணிமா-ளிகை சூழ்விழ வம்மலி
பொருஉபுன றிருஉ வமர்-புகலியென் றுலகில்
றன்னொடு நேர்பிறவில்-பதி-ஞானசம் பந்தனஃ
துசெந் தமிழ்த் தடங் கடற்-றருமபுரம் பதியைப்
பின்னெடு வார்சடையிற்-பிறை யும்மர வும்முடை
யவன் பிணை துணை கழல் கள்பே ணுத லுரியார்
இன்னெடு நன்னுலகெய்-துவ-ரெய்திய போகமும்
முறு வர்கள் ளிடர் பிணி-துயரணைவ் விலரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருத்தருமபுரம்:**—இது தருமராஜன் பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் இப்பெயரெய்தியது. பிரம்மதேவரும் பூசித்துள்ளார். இது திருநீலகண்ட யாழ்ப்பாணரது மாதாயகஸ்தான மாதலின்

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளியபோது யாழ்ப்பாணரது சுற்றத்தார் சுவாமிகளது பதிகங்களை இவர் யாழிலிட்டு வாசித்தலினால் சிறக்கின்றனவென்று கூறக்கேட்டு யாழ்ப்பாணர் நடுநடுங்கி இதற்குத் தம் யாழேகாரண மென அதனைத் தரையின் மோதப்புக சுவாமிகள் "மாதர் மடப்பிடி" என்னும் யாழ்மூரிப் பதிகம்பாடி யாழிலடங்காமையைக் காட்டிச் சுற்றத்தவரைத் தெளிவித்துத் தாம் முன்பு அதனைப் பாடிக்காட்டியும் ஒன்றினும் அடங்காத பரமசிவனது புகழ் யாழின் அடங்கக்கூடாமையையும் கூடிய வரைவாசித்தலே மரபென்பதையும் விளக்கியும் அநுக்கிரகித்த தலம். சுவாமி-யாழ்மூரி நாதர், தேவியார்-மதுரமின்னம்மை இதற்குப் பதிகம். 1

இத்தலம் காரைக்கால் ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலையில் அரைமைலில் உள்ளது. திருநள்ளாற்றினின்றும் கிழக்கே இரண்டுமைல்.

---

# ருஉ. திருநள்ளாறு.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-பழந்தக்கராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாடன் றனொடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற் றண்ணல்பரமேட்டி
ஆகமார்த்ததோலுடையன் கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான் மேயதுநள்ளாறே. 1

தோடுடையகாதுடையன் றோலுடையன்றலையாப்
பீடுடையபோர்விடையன்பெண் ணுமோர்பாலுடையன்
ஏடுடையமேலுலகோ டேழ்கடலுஞ்சூழ்ந்த
நாடுடையநம்பெருமான் மேயதுநள்ளாறே. 2

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
நண்புநல்லார்மல்குகாழி ஞானசம்பந்தனல்ல
பண்புநள்ளாறேத்துபாடல்பத்துமிவைவல்லார்
உண்புநீங்கிவானவரோடுலகிலுறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

### திருவிராகம்-பண்-இந்தளம் உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஏடுமலிகொன்றையரவிந்துவிளவன்னி
மாடவலசெஞ்சடையெமைந்தனிடமென்பர்
கோடுமலிஞாழல்குரவேறுசுரபுன்னை
நாடுமலிவாசமதுவீசியநள்ளாறே. 1

பாலனடிபேணவவனாருயிர்குறைக்கும்
காலனுடன்மாளமுனுதைத்தவரனூராம்
கோலமலர்நீர்க்குடமெடுத்தமறையாளர்
நாலின்வழிநின்றுதொழில்பேணியநள்ளாறே. 3

ஆடலரவார்சடையனாயிழைதனோடும்
நாடுமலிவெய்திடவிருந்தவனள்ளாற்றை
மாடமலிகாழிவளர்பந்தனதுசெஞ்சொல்
பாடலுடையாரையடையாபழிகளே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருவிராகம்-பண்-சாதாரி.ங-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளிதனதெழிறருதிகழ்மலைமகள்
குளிரிளவளரொளிவனமுலையிணையவைகுலவலின்
நளிரிளவளரொளிமருவுநள்ளாறர்தந்நாமே
மிளிரிளவளரெரியிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. 1

போதமர்தருபுரிகுழலெழின்மலைமகள்பூணணி
சீதமதணிதருமுகிழிளவனமுலைசெறிதலின்
நாதமதெழிலுருவனையநள்ளாறர்தந்நாமமே
மீதமதெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. 2

சிற்றிடையரிவைதன்வனமுலையிணையொடுசெறிதரும்
நற்றிறமுறுகழுமலநகர்ஞானசம்பந்தன
கொற்றவனெதிரிடையெரியினிலிடிலிவைகூறிய
சொற்றெரிபொருபதமறிபவர்துயரிலர்தூயரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆதிக்கணான்முகத்திலொன்றுசென்றுவல்லாதசொல்
லுரைக்கத்தன்கைவாளால், சேதித்ததிருவடியைச்செல்லநல்
லசிவலோகநெறிவகுத்துக்காட்டுவானை, மாதிமையைமாதோர்
கூறுபினானைமாமலர்மேலயனோடுமாலுங்காணா, நாதியைநம்பி
யைநள்ளாற்றானைநானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. 1

குலங்கெடுத்துக்கோணீக்கவல்லான்றன்னைக்குலவரை
யன்மடப்பாவையிடப்பாலானை, மலங்கெடுத்துமாதீர்த்தமா
ட்டிக்கொண்டமறையவனைப்பிறைதவழ்செஞ்சடையினானைச்,
சலங்கெடுத்துத்தயாமூல தன்மமென்னுந்தத்துவத்தின் வழி
நின்றுதாழ்ந்தோர்க்கெல்லாம், நலங்கொடுக்குநம்பியைநள்
ளாற்றானைநானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. 6

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

### பண்-தக்கேசி. ௭-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

செம்பொன்மேனிவெண்ணீறணிவானைக்கரியகண்டனை
மாலயன்காணாச், சம்புவைத்தழலங்கையினானைச்சாமவேத
னைத்தன்னொப்பிலானைக், கும்பமாகரியின்னுரியானைக்கோ
வின்மேல்வருங்கோவினைகங்கள், நம்பனைநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே. 1

மறவனையன்றுபன்றிப்பின்சென்றமாயனைநால்வர்க்கா
லின்கீழுரைத்த, அறவனையமரர்க்கரியானையமரர்சேனைக்கு
நாயகனான, குறவர்மங்கைதன்கேள்வனைப்பெற்றகோனைநான்
செய்தகுற்றங்கள்பொறுக்கும், நறைவிரியுநள்ளாறனையமு
தைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. 7

மாதினுக்குடம்பிடங்கொடுத்தானைமணியினைப்பணிவார் வினைகெடுக்கும், வேதனைவேதவேள்வியர்வணங்கும்விமலனை யடிபேற்கெளிவந்த, தூதனைத்தன்னைத்தோழமையருளித் தொண்டனேன்செய்ததுரிசுகள்பொறுக்கும், நாதனைநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. 8

செறிந்தசோலைகள்சூழ்ந்தநள்ளாற்றெஞ்சிவனைநாவலூர்ச்சிங்கடிதந்தை, மறந்துநான்மற்றுநினைப்பதேதென்றுவனப்பகையப்பனூரன்வன்றொண்டன், சிறந்தமாலைகொடைஞ்சினோடஞ்சுஞ்சிந்தையுள்ளுருகிச்செப்பவல்லார்க், கிறந்துபோக்கில்லைவரவில்லையாகியின்பவெள்ளத்துளிருப்பர்களினிதே.

திருச்சிற்றம்பலம்.

---

**திருநள்ளாறு:**—இது நளன் பூசித்த காரணத்தால் இப்பெயர்பெற்றது; முதல்யுகத்தில் ஆதிபுரியெனவும், இரண்டாம்யுகத்தில் தருப்பாரண்ய மெனவும், மூன்றாம்யுகத்தில் விடங்கபுரமெனவும், நான்காம்யுகத்தில் நளேச்சரம் எனவும் கூறப்பெற்றது; கலிங்காதிபதி பிராம்மணசாபத்தால் வந்த யானையுரு நீங்கி வழிபட்டது; நளன் பூசித்துத் தன்னைப்பற்றிய சனிநீங்கப்பெற்றுத் திருப்பணியும் திருவிழாவும் நடத்தியது; கோக்கொலைசெய்த வேதியர் கோஹத்தி நீங்கி யுழவாரத்திருப்பணி செய்துகொண்டிருந்து சிவனடிசேர்ந்தது; உருசிராஜன் அன்னதானஞ்செய்து முத்தியடைந்தது; தெண்டிகுப்தன் புத்ரர்களாகிய அக்னிவண்ணர் பூசித்துத் தம்பாவமொழிந்து சிவசாரூப்யமடைந்தது; இன்னும் பிரம்மதேவர், திக்பாலகர், விட்டுணுமூர்த்தி, வசுக்கள், காசிபர், அகஸ்தியர், அருச்சுனன், போஜன் முதலியோர் பூசித்தது; சனீச்சுரன் கோபுரத்வாரத்தில் எழுந்தருளியிருந்து தன்னை வழிபட்டோர்க்கு எல்லாப்பேற்றையு மளிப்பது; முசுகுந்த சக்ரவர்த்தி ப்ரதிஷ்டைசெய்த ஸப்தவிடங்கத் தலங்களுள் ஒன்றாயுள்ளது; திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மதுரையில் அனல்வாதஞ்செய்ய அக்கினியில் இட்ட "போகமார்த்தபூண்முலையாள்" என்னும் பச்சைப்பதிக முடையது. சுவாமியின் திருவுருவம் தருப்பைக்கொழுந்துபோன்ற அடையாளங்களுடையது. சுவாமி-தர்ப்பாரண்யேச்சுவரர், தேவியார்-போகமார்த்தபூண்முலையாள், தியாகர்-நகவிடங்கந்

தியாகர், நடனம் - உன்மத்தநடனம், தீர்த்தம் - சிவகங்கை, பிரம்ம தீர்த்தம்,நளகூபம்முதலியன, விருக்ஷம்-தர்ப்பை. இதற்குப்பதிகம் 7.

இத்தலம் பேரளம்காரைக்கால் சேர்க்கை ரயிலில் திருநள்ளாறு ஸ்டேஷனுக்குத் தெற்கு மட்சாலையில் அரைமைலில் உள்ளது

## ருரு. திருக்கோட்டாறு.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண்-சீகாமரம். உ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

கருந்தடங்கணின்மாதரார்இசைசெய்யக்காரதிர்கின்றபூம்பொழிற்
குருந்தமாதவியின் விரைமல்குகோட்டாற்றில்
இருந்தவெம்பெருமானையுள்கியிணையடிதொழுதேத்துமாந்தர்கள்
வருந்துமாறறியார்நெறிசேர்வர்வானூடே. 1

விரவிநாளும்விழாவிடைப்பொலிதொண்டர்வந்துவியந்துபண்செயக்
குரவமாருநீழற்பொழின்மல்குகோட்டாற்றில்
அரவநீள்சடையானையுள்கிநின்றுதரித்துமுன்புசெய்தடி
பரவுமாறுவல்லார்பழிபற்றறுப்பாரே. ௨

காலனைக்கழலாலுதைத்தொருகாமனைக்கனலாகச்சீறிமெய்
கோலவார்குழலார்குடிகொண்டகோட்டாற்றின்
மூலனைமுடிவொன்றிலாதவெம்முத்தனைப்பயில்பந்தன்சொல்லிய
மாலைபத்தும்வல்லார்க்செளிதாகும்வானகமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கோட்டாறு:—இது திருக்கொட்டாரம் எனவழங்கும். ஐராவதம் பூசித்துப் பேறுபெற்ற தலம். இதனை ஞான சம்பந்தர் சீகாமரப்பதிகத்து இரண்டாந் திருப்பாட்டிற்காண்க. சுவாமி-ஐராவதநாதர், தேவியார்-வண்டமர் பூங்குழலி, இதற்குப் பதிகம். 2

இத்தலம் பேரளம் காரைக்கால் ரெயிலில் அம்பகரத்தூர் ஸ்டேஷனுக்கு வடகிழக்கே மட்சாலையில் ஒன்றரை மைலில் உள்ளது. இதற்குக் கிழக்கே இரண்டு மைலில் இளையான்குடிமாறர் அவதரித்த இளையான்குடி இருக்கிறது.

# ௫௪. திருஅம்பர்ப்பெருந் திருக்கோயில்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

எரிதரவனல்கையிலேந்தியெல்லியில்
நரிதிரிகானிடைநட்டமாடுவார்
அரிசிலம்பொருபுனலம்பர்மாநகர்க்
குரிசில்செங்கண்ணவன்கோயில்சேர்வரே. 1

மையகண்மலைமகள்பாகமாயிருள்
கையதோர்கனலெரிகனலவாடுவர்
ஐயநன்பொருபுனலம்பர்ச்செம்பியர்
செய்யகண்ணிறைசெய்தகோயில்சேர்வரே. 2

அழகரையடிகளையம்பர்மேவிய
நிழறிகழ்சடைமுடிநீலகண்டரை
உமிழ்திரையுலகினிலோதுவீர்கொண்மின்
றமிழ்கெழுவிரகினன்றமிழ்செய்மாலையே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்:** — இது அம்பரிலுள்ள (கோச்செங்கட் சோழ நாயனார் கட்டிய) மாடக்கோயிலாதலின் இப்பெயரெய்தியது. மாடக்கோயிலென்றாலும் பெருங்கோயிலென்றாலும் ஒன்றேயாம். கோச்செங்கட் சோழரது திருப்பணியென்பது பதிகத்துக் காணக்கூடியது. இங்கு சோமாசிமாற நாயனார் திருவவதாரஞ் செய்து ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தூதுவளங்கீரை கொடுத்து ஆட்பட்டுப் பரமசிவனை உத்தேசித்து அநேக யாகங்கள் செய்து திருவடியடைந்தார். இவ்யாக உற்சவம் வைகாசிமீ ஆயில்ய நக்ஷத்திரத்தில் நடைபெறுகிறது. கர்ப்ப கிருகத்தில் லிங்கமூர்த்திக்குப் பின்னே சுவாமி யம்மையார் திருவுருவங்கள் அமைந்திருக்கின்றன. சுவாமி-பிரம்மபுரி நாதர், தேவியார்-பூங்குழனாயகி, தீர்த்தம்-பிரம தீர்த்தம், விருக்ஷம்-புன்னை இதற்குப்பதிகம். 1.

இத்தலம் பேரளம் திருவாரூர் ரெயிலில் பூந்தோட்டம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே மட்சாலையில் ஒன்றரைமைலில் திருமாகாளத்துக்குக் கிழக்கே அரைமைலில் உள்ளது.

---

## ரு௫. திருஅம்பர்மாகாளம்.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அடையார்புரமூன்றுமனலாய்விழவெய்து
மடையார்புனலம்பர்மாகாளம்மேய
விடையார்கொடியெந்தைவெள்ளைப்பிறைசூடும்
சடையான்கழலேத்தச்சாராவினைதானே. 1

தேனார்மதமத்தந்திங்கள்புனல்சூடி
வானார்பொழிலம்பர்மாகாளம்மேய
ஊனார்தலைதன்னிற்பலிகொண்டுழல்வாழ்க்கை
ஆனான்கழலேத்தவல்லலடையாவே. 2

வெருநீர்கொளவோங்கும்வேணுபுரந்தன்னுள்
திருமாமறைஞானசம்பந்தன்சேணார்
பெருமான்மலியம்பர்மாகாளம்பேணி
உருகாவுரைசெய்வாருபர்வானடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திரு அம்பர்மாகாளம்:**— இது அம்பன் அம்பாசுரன் என்னும் இராக்ஷதர்களைக்கொன்ற ஹத்திநீங்கக்காளி பூசித்த தலமாதலின் இப்பெயரெய்தியது. கோயில் மாகாளமெனவும் வழங்கும். வைசாகமாதத்தில் சோமாசிமாறநாயனார் யாகோற்சவம் விசேடவைபவமானது. காளியாலயம் தெற்குப்பிராகாரத்தில் உள்ளது. மஹாகாள ருஷியும் பூசித்துப் பேறுபெற்றனர். காளிபூஜை பதிகத்துக் காணப்பெறும். சுவாமி-காளகண்டேசுவரர், தேவியார்-பக்ஷநர்யகி, தீர்த்தம்-மாகாளதீர்த்தம்- இதற்குப்பதிகம் 3.

இத்தலம் பேரளந்திருவாரூர் சேர்க்கைரயிலில் பூந்தோட்டம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே மட்சாலையில் ஒன்றரைமைலில் உள்ளது.

---

## ௫௬. திருமீயச்சூர்

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காயச்செவ்விக்காமற்காய்ந்துகங்கையைப்
பாயப்படர்புன்சடையிற்பதித்தபரமேட்டி
மாயச்சூரன்றறுத்தமைந்தன்றாதைதன்
மீயச்சூரேதொழுதும்வினையைவீட்டுமே. 1

பூவார்சடையின்முடிமேற்புனலானல்கொள்வர்
நாவார்மறையர்பிறையர்நறவெண்டலையேந்தி
ஏவார்மலையேசிலையாக்கழியம்பெரிவாங்கி
மேவார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. 2

வேடமுடையபெருமானுறைபுமீயச்சூர்
நாடும்புகழார்புகலிஞானசம்பந்தன்
பாடலாயதமிழீரைந்துமொழிந்துள்கி
ஆடுமடியாரகல்வானுலகமடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருமீயச்சூர்:— இது சூரியன் பூசித்து வழிபட்டது. ஸ்வாமி விமானம் கஜபிருஷ்டவிமானம். தேவியார் இருந்தகோலம். சூரியன் ஸ்வாமி யம்மையார்களை யானையின்மீதிருத்திப் பூசித்தான் எனவழங்குப. சுவாமி-முயற்சிநாதர், தேவியார்-சுந்தரநாயகி, தீர்த்தம்-சூர்ய புஷ்கரணி, விருக்ஷம்-வில்வம். இதற்குப் பதிகம் 1.

இத்தலம் பேரளம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே மட்சாலையில் ஒருமைலில் உள்ளது.

---

## ௫௭. திருமீயச்சூரிளங்கோயில்.

### திருநாவுக்கரசு நாயனார்

பண்-திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தோற்றுங்கோயிலுந்தோன்றியகோயிலும்
வேற்றுக்கோயில்பலவுளமீயச்சூர்க்

கூற்றம்பாய்ந்த குளிர்புன் சடையாற்
கேற்றங் கோயில்கண் டீரிளங் கோயிலே. 1

வேதத்தா னென்பர் வேள்வியுளா னென்பர்
பூதத்தா னென்பர் புண்ணியன் றன்னையே
கீதத்தான் கிளருந் திருமீயச்சூர்
ஏதந்தீர்க்க நின்றாரிளங் கோயிலே. 6

கடுக்கண்டன் கயிலாய மலைதன்னை
எடுக்க லுற்ற விராவண னீடற
விடுக்க ணின்றி வெகுண்டவன் மீயச்சூர்
இடுக்கண் டீர்க்க நின்றாரிளங் கோயிலே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருமீயச்சூரிளங்கோயில் :—இது திருமீயச்சூர் சுவாமி பாலாலயஞ் செய்திருந்தபோது திருஞானசம்பந்தர் பாடியதனால் இப்பெய ரெய்தியது என்பர். காளி பூசித்து வழிபட்டது. சுவாமி-சகலபுவனேச்வரர், தேவியார்-மின்னுமேகலாம்பாள். இதற்குப்பதிகம்1,

இத்தலம் (56) திருமீயச்சூர்) ஆலயத்தில் வடக்கு ப்ராகாரத்தில் உள்ளது.

---

## ௫அ. திருத்திலதைப்பதி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

பண்-செவ்வழி. உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொடிகள்பூசிப் பலதொண்டர் கூடிப் புலர்காலையே
அடிகளாரத் தொழுதேத்த நின்றவழகன்னிடம்
கொடிகளோங்கிக் குலவும் விழவார் திலதைப்பதி
வடிகொள் சோலைம்மலர் மணங்கமழும் மதிமுத்தமே. 1

புரவியேழும் மணிபூண்டியங்குங் கொடித்தேரினான்
பரவிநின்று வழிபாடுசெய்யும் பரமேட்டியூர்
விரவிஞாழல் விரிகோங்குவேங்கை சுரபுன்னைகள்
மரவமவ்வன் மலருந் திலதைம் மதிமுத்தமே. 5

மந்தமாரும்பொழில்சூழ்திலதைமதிமுத்தமேல்
கந்தமாருங்கடற்காழியுளான்றமிழ்ஞானசம்
பந்தன்மாலைபழிதீரநின்றேத்தவல்லார்கள்போய்ச்
சிந்தைசெய்வார்சிவன்சேவடிசேர்வதுதிண்ணமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருத்திலதைப்பதி:—இது இங்கு இராமலக்ஷ்மணர் தசரதர்க்குத் திலதர்ப்பணஞ் செய்தகாரணத்தானும் சந்திரன்பூசித்த காரணத்தானும் இப்பெயரெய்தியது. எழுத்துக்கள் நிலைமாறி சிதலைப்பதிஎன வழங்குகிறது. 5-வது திருப்பாட்டினால் சூர்யபூஜையும் தெரிகிறது. இங்கு தர்ப்பணம் சிராத்தமாதியசெய்தோர் ஒன்றனந்தமாய்ப் பலம் பெறுவர். சுவாமி-முத்தீசர், தேவியார்-பொற்கோடிநாயகி, தீர்த்தம்—சந்திரதீர்த்தம், விருக்ஷம்-மந்தாரை. இதற்குப்பதிகம் 1.

இத்தலம் பூந்தோட்டம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே மட்சாலையில் ஒருமைலில் அரிசொலாற்றின் தென்கரையில் உள்ளது.

---

# ருசு. திருப்பாம்புரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சீரணிதிகழ்திருமார்பில்வெண்ணூலர்திரிபுரமெரிசெய்த செல்வர், வாரணிவனமுலைமங்கையோர்பங்கர்மான்மறியேந்தியமைந்தர், காரணிமணிதிகழ்மிடறுடையண்ணல்கண்ணுதல்விண்ணவரேத்தும், பாரணிதிகழ்தருநான்மறையாளர் பாம்புரநன்னகராரே. 1

மாவினுக்கன்றுசக்கரமீந்துமலரவற்கொருமுகமொழித்தே, ஆலின்கீழறமோர்நால்வருக்கருளியனலதுவாடுமெம்மடிகள், காலனைக்காய்ந்துதங்கழலடியாற்காமனைப்பொடிபடநோக்கிப், பாலனுக்கருள்கள்செய்தவெம்மடிகள்பாம்புரநன்னகராரே. 7

பார்மலிந்தோங்கிப்பருமதில்சூழ்ந்தபாம்புரநன்னகரா
ரைக், கார்மலிந்தழகார்கழனிசூழ்மாடக்கழுமலமுதுபதிக்
கவுணி, நார்மலிந்தோங்குநான்மறைஞானசம்பந்தன்செந்த
மிழ்வல்லார், சீர்மலிந்தழகார்செல்வமோங்கிச்சிவனடிநண்
ணுவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பாம்புரம்:—இது பாம்பு(நாகராஜன்)பூசித்தகாரணத்
தால் இப்பெயரெய்தியது. இதற்கடையாளமாகக் கோவிலில் ஆதி
சேடன் மூலஉற்சவ விக்ரஹங்கள் எழுந்தருளச் செய்திருக்கின்றன.
சுவாமி - பாம்புரேச்சுரர், தேவியார் - வண்டார்குழலி, விருக்ஷம் -
வன்னி. இதற்குப்பதிகம் 1.

இத்தலம் பேரளம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே ஒருமைலில் திரு
மீயச்சூரைக்கடந்து மேற்கே மட்சாலையில் இரண்டுமைலில் உள்ளது.

---

## கூ0. திருச்சிறுகுடி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

பண்-சாதாரி. ௩-ந் திருமுறை,

திருமுக்கால்.

திருச்சிற்றம்பலம்.

திடமதிமதிலணிசிறுகுடிமேவிய
படமலியரவுடையீரே
படமலியரவுடையீருமைப்பணிபவர்
அடைவதுமமருலகதுவே. 1

சிற்றிடையுடன்மகிழ்சிறுகுடிமேவிய
சுற்றியசடைமுடியீரே
சுற்றியசடைமுடியீருமதொழுகழல்
உற்றவருறுபிணியிலரே. 2

தேனமர்பொழிலணிசிறுகுடிமேவிய
மானமர்கரமுடையீரே

மானமர்காமுடையீருமைவாழ்த்திய
ஞானசம்பந்தனதமிழே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருச்சிறுகுடி:**—இது பெயருக்கேற்ப மிகச்சிறிய கோயில்; கருடன், அங்காரகன், கந்தர்வர் முதலியோர் பூசித்தது. சுவாமி-மங்களநாதர். தேவியார்-மங்களநாயகி. இதற்குப்பதிகம் 1.

இத்தலம் பேரளம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே மட்சாலையில் மூன்றுமைலில் திருமீயச்சூர் திருப்பாம்புரங்களைக் கடந்து அதன் மேல் தென்மேற்கே கரைமார்க்கமாய் இரண்டுமைலில் உள்ளது.

---

## சுக. திருவீழிமிழலை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சடையார்புனலுடையானொருசரிகோவணமுடையான்
படையார்மழுவுடையான்பலபூதப்படையுடையான்
மடமான்விழியுமைமாதிடமுடையானெனையுடையான்
விடையார்கொடியுடையானிடம்வீழிம்மிழலையே. 1

ஈறாய்முதலொன்றாயிருபெண்ணாண்குணமூன்றாய்
மாறாமறைநான்காய்வருபூதம்மவையைந்தாய்
ஆறார்சுவையேழோசையொடெட்டுத்திசைதானாய்
வேறாயுடனானிடம்வீழிம்மிழலையே.

வீழிம்மிழலைம்மேவியவிகிர்தன்றனைவிரைசேர்
காழிந்நகர்க்கலைஞானசம்பந்தன்றமிழ்பத்தும்
யாழின்னிசைவல்லார்சொலக்கேட்டாரவரெல்லாம்
ஊழின்வலிவினைபோயிடவுயர்வானடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வாசிதீரவே, காசுநல்குவீர்
மாசின்மிழலையீர், ஏசலில்லையே. 1

இறைவராயினீர், மறைகொண்மிழலையீர்
கறைகொள்காசினை, முறைமைநல்குமே. 2

காழிமாநகர், வாழிசம்பந்தன்
வீழிமிழலைமேல், தாழுமொழிகளே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-மேகராகக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எரிசையும்வடவாலின்கீழிருந்தங்கிருவர்க்கிரங்கிநின்று,நேரியநான்மறைப்பொருளையுரைத்தொளிசேர்நெறியளித்தோனின்றகோயில், பாரிசையும்பண்டிதர்கள்பன்னாளும்பயின்றேத்துமோசைசேட்டு, வேரிமலிபொழிற்கிளிகள்வேதங்கள்பொருட்சொல்லுமிழலையாமே.

உரைச்சேருமெண்பத்துநான்குநூறாயிரமாம்யோனிபேத, நிரைச்சேரப்படைத்தவற்றினுயிர்க்குயிராயங்கங்கேநின்றான்கோயில், வரைச்சேருமுகின்முழவமயில்கள்பலநடமாடவண்டுபாட, விரைச்சேர்பொன்னிதழிதரமென்காந்தள்கையேற்குமிழலையாமே.

ஆறாடுசடைமுடியனனலாடுமலர்க்கையனிமயப்பாவை, கூறாடுதிருவுருவன்கூத்தாடுகுணமுடையோன்குளிருங்கோயில், சேறாடுசெங்கழுநீர்த் தாதாடிமதுவுண்டுசிவந்தவண்டு, வேறாயவுருவாகிச்செவ்வழிநற்பண்பாடுமிழலையாமே.

திருச்சிற்றம்பலம்.

---

பண்-புறநீர்மை ௩ ந்-திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

புள்ளித்தோலாடைபூண்பதுநாகம்பூசுசாந்தம்பொடிநீறு,கொள்ளித்தீவிளக்குக்கூளிகள்கூட்டங்காளியைக்குணஞ்

செய்கூத்துடையோன், அள்ளற்காராமையகடுவான்மதியமே
ய்க்குமுட்டாழைகளானை,வெள்ளைக்கொம்பினும்விரிபொழில்
வீழிமிழலையானெனவினைகெடுமே. 1

தன்றவம்பெரியசலந்தரனுடலந்தடிந்தசக்கரமெனக்கரு
ளென், றன்றரிவழிபட்டிழிச்சியவிமானத்திறையவன்பிறை
யணிசடையன், நின்றநாள்காலையிருந்தநாண்மாலைகிடந்தமண்
மேல்வருகலிபை, வென்றவேதியர்கள்விழாவறாவீழிமிழலையா
னெனவினைகெடுமே. 7

வேந்தர்வந்திறைஞ்சவேதியர்வீழிமிழலையுள்விண்ணிழி
விமானத், தேய்ந்ததன்றேவியோடுறைகின்றவீசனையெம்பெ
ருமானைத், தோய்ந்தநீர்த்தோணிபுரத்துறைமறையோன்றா
மொழிஞானசம்பந்தன், வாய்ந்தபாமாலைவாய்நவில்வாரைவா
னவர்வழிபடுவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனர்.

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

போரானையீருரிவைப்போர்வையானைப்புலியதளேயுடை
யாடைபோற்றினானைப், பாரானைமதியானைப்பகலானானைப்பல்
லுயிராய்நெடுவெளியாய்ப்பரந்துநின்ற, நீரானைக்காற்றானைத்
தீயானானைநினையாதார்புரமெரியநினைந்ததெய்வத், தேரானைத்
திருவீழிமிழலையானைச்சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே.

அன்றாலின்கீழிருந்தங்கறஞ்சொன்னானையகத்தியனையு
கப்பானையயன்மாறேட, நின்றானைக்கிடந்தகடனஞ்சுண்டா
னைநேரிழையைக்கலந்திருந்தேபுனல்கரந்தும், வென்றானை
மீயச்சூர்மேவினானை மெல்லியலாடவத்தினிறை யளக்கலுற்
றுச், சென்றானைத்திருவீழிமிழலையானைச்சேராதார்தீநெறிக்
கேசேர்கின்றாரே. 3

அறுத்தானையயன்றலைகளஞ்சிலொன்றையஞ்சாதேவரை
யெடுத்தவரக்கன்றோள்கள், இறுத்தானையெழுநரம்பினிசை

கேட்டானையிந்துவினைத்தேய்த்தானையிரவிதன்பல், பறித்தானைப்பகீரதற்காவானோர்வேண்டப் பாந்திழியும்புனற்கங்கைபனிபோலாகச், செறுத்தானைத்திருவீழிமிழலையானைச்சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. 10

திருச்சிற்றம்பலம்.

—

திருச்சிற்றம்பலம்.

கண்ணவன்காண்கண்ணொளிசேர்காட்சியான்காண்கந்தருவம்பாட்டிசையிற்காட்டுகின்ற, பண்ணவன்காண்பண்ணவற்றின்றிறலானன்காண்பழமாகிச்சுவையாகிப்பயக்கின்றான்காண், மண்ணவன்காண்டீயவன்காணீரானன்காண்வந்தலைக்குமாருதன்காண்மழைமேகஞ்சேர்,விண்ணவன்காண்விண்ணவர்க்குமேலானன்காண்விண்ணிழிதண்வீழிமிழலையானே. 1

ஆலைப்படுகரும்பின்சாறுபோலவண்ணிக்குமஞ்செழுத்தினமத்தான்காண், சீலமுடையடியார்சிந்தையான்காண்டிரிபுரமூன்றெரிபடுத்தசிலையினன்காண், பாலினொடுதயிர்நறுநெய்யாடினன்காண் பண்டரங்கவேடன்காண்பலிதேர்வான்காண், வேலைவிடமுண்டமிடற்றினன்காண்விண்ணிழிதண்வீழிமிழலையானே. 2

மெய்த்தவன்காண்மெய்த்தவத்தினிற்பார்க்கெல்லாம்விருப்பிலாவிருப்புமனவினையர்க்கென்றும், பொய்த்தவன்காண்புத்தன்மறவாதோடிபெறிசல்விபுதுமலர்களாக்கினன்காண், உய்த்தவன்காணுயர்கதிக்கேயுள்கினரையுலகனைத்துமொளித்தளித்திட்டுய்யச்செய்யும், வித்தகன்காண்வித்தகர்தாம்விரும்பியேத்தும்விண்ணிழிதண்வீழிமிழலையானே. 8

திருச்சிற்றம்பலம்.

—

திருச்சிற்றம்பலம்.

சமரமிகுசலந்தான்போர்வேண்டினானைச் சக்கரத்தாற்பிளப்பித்தசதுரர்போலும், நமனையொருகால்குறைத்தநாதர்போலுநாரணனையிடப்பாகத்தடைத்தார்போலும், குமரனையு

மகனாகவுடையார்போலுங்குளிர் வீழிமிழலையமர்குழகர்போ
லும், அமரர்கள்பினமுதுணநஞ்சுண்டார்போலுமடியேனையா
ளுடையவடிகடாமே. 2

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

### பண்-சீகாமரம் எ-ந்-திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நம்பினார்க்கருள்செய்யுமந்தணர்நான்மறைக்கிடமாயவேள்வியுள்
செம்பொனேர்மடவாரணிபெற்றதிருமிழலை
உம்பரார்தொழுதேத்தமாமலையாளொடும்முடனேயுறைவிடம்
அம்பொன்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. 1

விடங்கொண்டமாமிடற்றீர்வெள்ளைச்சுருளொன்றிட்டுவிட்டகாதினீ
திடங்கொள்சிந்தையினார்கலிகாக்குந்திருமிழலை [ரொன்று
மடங்கல்பூண்டவிமானமண்மிசைவந்திழிச்சியவானநாட்டையும்
அடங்கல்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. 2

வேதவேதியர்வேதநீதியரோதுவார்விரிநீர்மிழலையுள்
ஆதிவீழிகொண்டீரடியேற்குமருளுகென்று
நாதகீதம்வண்டோதுவார்பொழினாவலூரன்வன்றொண்டனற்றமிழ்
பாதமோதவல்லார்பரனோடுகூடுவரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவீழிமிழலை:—இது தலவிருக்ஷம் வீழியாதலின் இப்பெயரெய்தியது. இங்கு விட்டுணுமூர்த்தி கண்ணையிடந்து பூசித்துச் சக்கரம்பெற்றது வாகீசர் திருநேரிசையிற் காண்க. சுவாமி எழுந்தருளியிருக்கும் விமானம் விட்டுணுமூர்த்தி விண்ணுலகத்தினின்றுங்கொணர்ந்து பிரதிட்டித்த காரணம் பற்றி விண்ணிழிவிமானம் எனப்பெறும். பதிகங்களிற்காண்க. கருப்பகிருகத்தில் சுவாமியின் பின்னர் பார்வதி பரமேஸ்வர ஸ்வரூபங்கள் எழுந்தருளச் செய்திருக்கின்றர். உற்சவமூர்த்தியின் திருவடியில் விஷ்ணுமூர்த்தியின் கண் அமைந்திருத்தல் காணப்பெறும். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் ஏககாலத்தில் கிழக்குப்பீடத்தும் மேற்குப்பீ

டத்தும் படிக்காசுப்பெற்றுப் பறைசாற்றி அடியார்க்கு மாஹேஸ்வர பூஜைசெய்த தலம். பரமசிவன் ஞானசம்பந்தருக்குச் சீகாழியில் திருத்தோணியில் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் காட்டியருள அவர் இரண்டு திருப்பதிகளையும் சேர்த்து "மைம்மலிபூங்குழல்" என்று திருப்பதிகம் பாடியருளினார். மேற்கு ப்ராகாரத்தில் இரண்டு நாயன்மார்களும் படிக்காசுப் பிள்ளையாரும் எழுந்தருளி யிருக்கின்றனர். சுவாமி-வீழியழகர், தேவியார்-சுந்தரகுஜாம்பிகை, தீர்த்தம்-விஷ்ணு தீர்த்தம் விருக்ஷம்-வீழி. இதற்குப் பதிகம் 24

இத்தலம் பூந்தோட்டம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே ஒருமையில் திலதைப்பதி (58)யைக் கடந்து மேற்கே மட்சாலையில் 4 மையில்உள்ளது.

---

## ௬௨. திருவன்னியூர்.

### திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ௫-ந்திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காடுகொண்டரங்காக்கங்குல்வாய்க்கணம்
பாடமாநடமாடும்பரமனார்
வாடமானிறங்கொள்வர்மணங்கமழ்
மாடமாதிள்சூழ்வன்னியூரரே. 1

செங்கணாகமரையதுதீத்திரள்
அங்கையேந்திநின்றெரியாடுவர்
கங்கைவார்சடைமேலிடங்கொண்டவர்
மங்கைபாகம்வைத்தார்வன்னியூரரே. 2

நலங்கொள்பாகனைநன்றுமுனிந்திடா
விலங்கல்கோத்தெடுத்தானதுமிக்கிடவ்
விலங்கைமன்னனிருபதுதோளினை
மலங்கவூன்றிவைத்தார்வன்னியூரரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவன்னியூர்:—இது அன்னூர்என்று வழங்கும். அக்னி பூசித்ததலம். சுவாமி-அக்கினீச்சுவரர், தேவியார்-பார்வதியார். தீர்த்தம்-அக்கினிதீர்த்தம். இதற்குப் பதிகம் 1.

இத்தலம் பூந்தோட்டம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே மட்சாலையில் 5 மைலில் திருவீழிமிழலையைக் கடந்து அங்கிருந்து வடமேற்கே மட்சாலையில் ஒன்றரைமைலில் உள்ளது.

---

## ௱௫. திருக்கருவிலியூர்.

### திருநாவுக்கரசு நாயனார்.

திருக்குறுந்தொகை.௫-ந்திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்டகுழலார்சுழலில்வலைப்
பட்டிட்டுமயங்கிப்பரியாதுநீர்
கட்டிட்டவினைபோகக்கருவிலிக்
கொட்டிட்டையுறைவான்கழல்கூடுமே. 1

வாடிநீர்வருந்தாதேமனிதர்காள்
வேடனாய்விசயற்கருள்செய்தவெண்
காடனாருறைகின்றகருவிலிக்
கோடுநீள்பொழிற்கொட்டிட்டைசேர்மினே. 4

பாருளீரிதுகேண்மின்பருவரை
பேருமாறெடுத்தானையடர்த்தவன்
கார்கொணீர்வயல்சூழ்தண்கருவிலிக்
கூர்கொள்வேலினன்கொட்டிட்டைசேர்மினே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கருவிலிக்கொட்டிட்டை:—இது கருவிலி என்னும் ஊர்ப்பெயரும் கொட்டிட்டை என்னும் ஆலயப்பெயரும்சேர்ந்து ஆகியது. சத்குணன் என்னுமரசனுக்குப் பிறவிப்பிணி தீர்த்த காரணத்தானே அன்றித்தாம் என்றும் பிறவிப்பிணியில்லாமையானே கருவிலிஎன்னும்பெயரெய்தியது. இந்திரனும்தேவர்களும்பூசித்தது, சுவாமி-சத்குணநாயகர், தேவியார்-சர்வாங்கநாயகி. இதற்குப்பதிகம் 1.

இத்தலம் ஆடுதுறை ஸ்டேஷனிலிருந்து தெற்கே மட்சாலையில் இரண்டுமைலில் திருநீலக்குடி (32)யிலிருந்து கிழக்கே மட்சாலையில் இரண்டு மைலுள்ள பழியஞ்சியநல்லூரினின்றும் கிழக்கே அரைமை

லில் புதூர்மார்க்கமாய் நாட்டார் வாய்க்காலைக்கடந்து தென்கிழக்கே மூன்றுமைலில் திருநல்லத்தையடைந்து அங்கிருந்து தென்மேற்கே மட்சாலையில் ஒன்றரைமைலில் உள்ளது.

(62) திருவன்னியூரினின்றும் தென்மேற்கே கரைமார்க்கமாய் இரண்டரைமைல்.

---

## உ௪. திருப்பேணுபெருந்துறை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பைம்மாநாகம்பன்மலர்கொன்றைபன்றிவெண்கொம்பொன் றுபூண்டு, செம்மாந்தையம்பெய்கென்றுசொல்லிச்செய்தொ ழில்பேணியோர்செல்வர், அம்மானேக்கியவந்தளிர்மேனிய ரிவையோர்பாகமமர்ந்த, பெம்மானல்கியதொல்புகழாளர்பே ணுபெருந்துறையாரே. 1

மூவருமாகியிருவருமாகிமுதல்வனுமாய்நின்றமூர்த்தி பாவங்களூர்தாநல்வினைநல்கிப்பல்கணநின்றுபணியச் சாவமதாகியமால்வரைகொண்டுகண்மதின்மூன்றுமெரித்த தேவர்கடேவரெம்பெருமானர்தீதில்பெருந்துறையாரே. 2

கடையார்மாடநன்கெழுவீதிக்கழுமலவூரன்கலந்து நடையாரின்சொன்ஞானசம்பந்தனல்லபெருந்துறைமேய படையார்சூலம்வல்லவன்பாதம்பரவியபத்திவைவல்லார் உடையாராகியுள்ளமுமொன்றியுலகினின்மன்னுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பேணுபெருந்துறை:—இது இப்போது திருப் பந்துறை என்று வழங்கும். அம்பிகை, சுப்ரமண்யர், பிரமாதியர் பூசித் தது. சுவாமி-சிவானந்தர், தேவியார்-மலையரசி, தீர்த்தம்-மங்களதீர்த் தம், விருக்ஷம்-வன்னி. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து தெற்கே நீடாமங்க லம் கற்சாலையில் 2 மைலில் சாக்கோட்டையையும் அங்கிருந்து தென்

கிழக்கே நாலரைமைலில் திருஅரிசிற்கரைப்புத்தூரையும் அங்கிருந்து தென்கிழக்கே 2 மைலில் நறையூர்ச்சித்தீச்சரத்தையும் கடந்து அங்கிருந்து கிழக்கே 2 மைலில் உள்ளது.

---

# ௬௫. திருநறையூர்ச்சித்தீச்சரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கராகம் க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஊருலாவுபலிகொண்டுலகேத்த
நீருலாவுநிமிர்புன்சடையண்ணல்
சீருலாவுமறையோர்நறையூரில்
சேருஞ்சித்தீச்சரஞ்சென்றடைநெஞ்சே. 1

காடுநாடுங்கலக்கப்பலிநண்ணி
ஓடுகங்கையொளிர்புன்சடைதாழ
வீடுமாகமறையோர்நறையூரில்
நீடுஞ்சித்தீச்சரமேநினைநெஞ்சே. 2

மெய்த்துலாவுமறையோர்நறையூரில்
சித்தன்சித்தீச்சரத்தையுயர்காழி
அத்தன்பாதமணிஞானசம்பந்தன்
பத்தும்பாடப்பறையும்பாவமே 11

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-குறிஞ்சி எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீரும்மலருநிலவுஞ்சடைமேல்
ஊரும்மரவம்முடையானிடமாம்
வாரும்மருவிமணிபொன்கொழித்துச்
சேருந்நறையூர்ச்சித்தீச்சரமே. 1

அளைப்பையரவேரிடையாளஞ்சத்
துளைக்கைக்கரித்தோலுரித்தானிடமாம்

வளைக்கைம்மடவார்மடுவிற்றடநீர்
திளைக்குந்நறையூர்ச்சித்தீச்சரமே. 2

போரார்புரமெய்புனிதன்னமரும்
சீரார்நறையூர்ச்சித்தீச்சரத்தை
ஆரூரன்சொல்லிவைவல்லவர்கள்
ஏராரிமையோருலகெய்துவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநறையூர்ச்சித்தீச்சரம்:—இது ஊர்ப்பெயர் நறையூரும், ஆலயப்பெயர் சித்தீச்சரமும் சேர்ந்தது. சித்தர்கள் பூசித்ததாகச் சொல்லப்பெறுகிறது-சுவாமி-சித்தநாதர்—தேவியார்--அழகம்மை-தீர்த்தம்-பிரமதீர்த்தம். இதற்குப் பதிகம். 4-

இத்தலத்துக்குப் பாதை மேலே (64) பேணுபெருந்துறைக்குச் சொல்லியதைப் பார்க்க.

## கூகூ. அரிசிற்கரைத்திருப்புத்தூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

மின்னுஞ்சடைமேலிளவெண்டிங்கள்விளங்கவே
துன்னுங்கடனஞ்சிருடோய்கண்டர்தொன்மூதூர்
அன்னம்படியும்புனலாரரிசிலலைகொண்டு
பொன்னும்மணியும்பொருதென்கரைமேற்புத்தூரே. 1

மேவாவசுரர்மேவெயில்வேவமலைவில்லால்
ஏவாரெரிவெங்கணையாலெய்தானெய்துமூர்
நாவாலுதனுமமோதிநாடோறும்
பூவானீராற்பூசுரர்போற்றும்புத்தூரே. 2

நறவங்கமழ்பூங்காழிஞானசம்பந்தன்
பொறிகொளரவம்பூண்டானண்டபுத்தூர்மேல்
செறிவண்டமிழ்செய்மாலைசெப்பவல்லார்கள்
அறவன்கழல்சேர்ந்தன்போடின்பமடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

முத்தூரும்புனன்மொய்யரிசிற்கரைப்
புத்தூரன்னடிபோற்றியென்பாரெல்லாம்
பொய்த்தூரும்புனலைந்தொடுபுல்கிய
மைத்தூரும்வினைமாற்றவும்வல்லரே. 1

அருப்புப்போன்முலையாரல்லல்வாழ்க்கைமேல்
விருப்புச்சேர்நிலைவிட்டுநல்விட்டமாய்த்
திருப்புத்தூரனைச்சிந்தைசெயச்செயக்
கருப்புச்சாற்றிலுமண்ணிக்குங்காண்மினே. 5

செருத்தனாற்றனதேர்செலவுய்த்திடும்
கருத்தனாய்க்கயிலையெடுத்தானுடல்
பருத்ததோள்கெடப்பாதத்தொருவிரல்
பொருத்தினார்பொழிலார்ந்தபுத்தூரரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-இந்தளம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மலைக்குமகளஞ்சமதகரியையுரித்தீரெரித்தீர்வருமுப்புரங்கள், சிலைக்குங்கொலைச்சேவுகந்தேற்றொழியீர்சில்பலிக்கில்கடொறுஞ்செலவொழியீர், கலைக்கொம்புங்கரிமருப்புமிடறிக்கலவம்மயிற்பீலியுங்காரகிலும், அலைக்கும்புனல்சேரரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூரழகனீரே. 1

அருமலரோன்சிரமொன்றறுத்தீர்செறுத்தீரழற்சூலத்திலந்தகனைத், திருமகள்கோனெடுமால்பலநாள்சிறப்பாகியபூசனைசெய்பொழுதில், ஒருமலராயிரத்திற்குறைவாநிறைவாகவொர்கண்மலர்சூட்டலுமே, பொருவிறலாழிபுரிந்தளித்தீர்பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே. 2

அகத்தடிமைசெய்யுமந்தணன்றானரிசிற்புனல்கொண்டு வந்தாட்டுகின்றான், மிகத்தளர்வெய்திக்குடத்தைநும்முடி மேல்விழுத்திட்டுநடுங்குதலும், வகுத்தவனுக்குநித்தற்படி யும்வருமென்றொருகாசினைநின்றநன்றிப், புகழ்த்துணைகைப்பு கச்செய்துகந்தீர்பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே. 6

காரூர்மழைபெய்துபொழியருவிக்கழையோடகிலுந்தி ட்டிருகரையும், போரூர்புனல்சேரரிசிற்றென்கரைப்பொழி லார்திருப்புத்தூர்ப்புனிதர்தம்மை, ஆரூரனருந்தமிழைந்தி னுடைந்தழகாலுரைப்பார்களுங்கேட்பவரும், சீரூர்தரு தேவர்கணங்களொடுமிணங்கிச்சிவலோகமதெய்துவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

அரிசிற்கரைப்புத்தூர்:—இது அரிசொலாற்றின் கரை யில் உள்ள புத்தூராதலின் இப்பெய ரெய்தியது. அழகார் புத்தூ ரென்றும் சிறுவிலிப்புத்தூரென்றும் வழங்கும். பாண்டி நாட்டிலுள் ளபுத்தூரோடு மயங்கற்பாலதன்று. இங்கு புகழ்த்துணைநாயனார் ஆதி சைவகுலத்திற் றிருவவதாரஞ்செய்து பரமசிவனைப் பூசித்துவரும்நா ளில் பஞ்சமுண்டாகியும் நெடுநாட்பட்டினியாய்ப்பசிபுரிந்தும் எங்கோ மான்றனை விடுவேனல்லேன் என்று அர்ச்சிக்கும்போது கை சோர்ந்து திருமஞ்சனக்குடத்தைச் சிவபெருமான் திருமுடிமீது வீழ்த்துத்திருவருளால் நித்திரையெய்திக் கனவிற் சிவபெருமானால் ஆக்ஞாபித்தபடி நித்தமும் சிவலிங்கபீடத்தில் பஞ்சம் நீங்கும் வரைப் படிகாசுபெற்றும் பின்னும் நெடுங்காலம் மெய்யடிமை செய்தும் திருவடியடைந்தனரென்பது ஞானசம்பந்தரும் சுந்தரமூர்த்தியும் பதி கத்து ஓதியருளினர். உண்மையாநந்த முனிவரும் பூசித்துள்ளனர். சுவாமி–படிக்காசுவைத்தபரமர், தேவியார்-அழகம்மையார். இதற் குப்பதிகம் 3.

இத்தலப்பாதைக்கும் (64) பேணுபெருந்துறைக்குச் சொல்லி யிருப்பதைக்காண்க.

---

# ௬௭. திருச்சிவபுரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

### திருவிராகம்-பண்-நட்டபாடை. ௧-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

புவம்வளிகனல்புனல்புவிகலையுரைமறைதிரிகுணமமர்நெறி
திவமலிதருசுரர்முதலியர்திகழ்தருமுயிரவையவைதம
பவமலிதொழிலதுநினைவொடுபதுமநன்மலரதுமருவிய
சிவனதுசிவபுரநினைபவர்செழுநிலனினினிலைபெறுவரே. 1

மலைபலவளர்தருபுவியிடைமறைதருவழிமலிமனிதர்கள்
நிலைமலிசுரர்முதலுலகுகணிலைபெறுவகைநினைவொடுமிகும்
அலைகடனடுவறிதுயிலமரரியுருவியல்பரனுறைபதி
சிலைமலிமதிள்சிவபுரநினைபவர்திருமகளொடுதிகழ்வரே. 2

திகழ்சிவபுரநகர்மருவியசிவனடியிணைபணிசிரபுர
நகரிறைதமிழ்விரகனதுரைநலமலியொருபதுநவில்பவர்
நிகழ்குலநிலநிறைதிருவுருநிகரிலகொடைமிகுசயமகள்
புகழ்புவிவளர்வழியடிமையின்மிகைபுணர்தரநலமிகுவரே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனர்.

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானவன்காண்வானவர்க்குமேலானான்காண்வடமொழி
யுந்தென்றமிழுமறைகணான்கும், ஆனவன்காணானைந்துமாடி
னான்காணையன்காண்கையிலனலேந்தியாடும், கானவன்காண்
கானவனுக்கருள்செய்தான்காண் கருதுவாரிதயத்துக் கமலத்
தூறும், தேனவன்காண்சென்றடையாச்செல்வன்றான்காண்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. 1

பாரவன்காண்பாரதனிற்பயிரானான்காண்பயிர்வளர்க்குந்
துளியவன்காண்டுளியினின்ற, நீரவன்காணீர்சடைமேனிகழ்
வித்தான்காணிலவேந்தர்பரிசாகநினைவுற்றோங்கும், பேரவன்

காண்பிறையெயிற்றுவெள்ளைப்பன்றிபிரியாதுபலநாளும்வழி பட்டேத்தும், சீரவன்காண்சீருடையதேவர்க்கெல்லாஞ்சிவ னவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. 6

திருச்சிற்றம்பலம்.

சிவபுரம்:— இது ஸ்வேதவராக கல்பத்தில் விஷ்ணுமூர்த்தி ஸமுத்திரத்தில் மூழ்கிய உலகினை வெள்ளைப்பன்றி உருவெடுத்துத் தமது கோரதந்தத்தின்மிசை நிறுவிப்பூசித்து வழிபட்டது. இது சம் பந்தமூர்த்திகளது தேவாரத்தில் ௬-ந் திருப்பாட்டினும் வாகீசமூர்த்தி களது திருத்தாண்டகத்தில் 6-ந்திருப்பாட்டினும் ஓதப்பட்டமைகாண்க. இத்தலம் முன்னர்ச் சண்பகச்சோலையாயிருந்தது போலும். தத்காலத் திலும் திருக்கோயிலின் முன் சண்பகவிருக்ஷ மிருப்பதும், தேவாரத் தில் "சண்பக மலர்ப்பொழிற் சிவபுரம்" என ஓதப்பட்டிருத்தலும் அறிதற்பாலன. சுவாமி-பிரமபுரிநாதர், தேவியார்-பெரியநாயகி, விரு க்ஷம்-சண்பகம். இதற் குப் பதிகம் 4.

இத்தலம் கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து தெற்கே நீடாமங் கலம் கற்சாலையில் கலயநல்லூரி (சாக்கோட்டை) விலிருந்து கிழக்கே இரண்டரைமைலில் இருக்கின்றது.

---

## சுஅ. திருக்கலயநல்லூர்.

### சுந்தரமூர்த்திநாயனர்.

பண்.தக்கராகம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

குரும்பைமுலைமலர்க்குழலிகொண்டதவங்கண்டுகுறிப் பினெடுஞ்சென்றவடன்குணத்தினைநன்கறிந்து, விருப்புவ ரங்கொடுத்தவளைவேட்டருளிச்செய்தவிண்ணவர்கோன் கண் ணுதலோன்மேவியவூர்வினவில், அரும்பருகேசுரும்பருவ வறுபதம்பண்பாடவணிமயில்கணடமாடுமணிபொழில்சூழய லின், கரும்பருகேகருங்குவளைகண்வளருங்கழனிக்கமலங்கண் முகமலருங்கலயநல்லூர்காணே. 1

செருமேவுசலந்தரனைப்பிளந்தசுடராழிசெங்கண்மலர்ப் பங்கயமாச்சிறந்தானுக்கருளி, இருண்மேவுமந்தகன்மேற்றிரி

சூலம்பாய்ச்சியிந்திரனைத்தோண்முரித்த விறையவனூர் வினவில், பெருமேதைதமறையொலியும்பேரிமுழவொலியும்பிள் ளையினந்துள்ளிவிளையாட்டொலியும்பெருகக், கருமேதிபுனன் மண்டக்கயன்மண்டக்கமலங்களிவண்டின்கணமிரியுங் கலயநல் லூர்காணே. 2

தண்புனலும்வெண்மதியுந்தாங்கியசெஞ்சடையன்றா மரையோன்றலைகலனாக்காமாமுன்பாடி, உண்பலிகொண்டுழல் பரமனுறையுமூர்நிறைநீரொழுகுபுனலரிசிலின்றென் கலயநல் லூரதனை, நண்புடையநன்சடையனிசைஞானிசிறுவனாவலர் கோனாரூரனுவினயந்துரைசெய், பண்பயிலும்பத்துமிவைபத் திசெய்துநித்தம்பாடவல்லாரல்லலொடுபாவமிலர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

---

திருக்கலயநல்லூர்:—இது தற்காலம் சாக்கோட்டை என்று வழங்குகின்றது. உயிர்களையடைத்த கும்பத்தின்கலயம் பிரளய வெள்ளத்தில் தங்கிய இடமாதலின் இப்பெயரெய்தியது என்ப. அரி அழைத்து வந்த அரிசொல்லாற்றின் தென்கரையில் உள்ளது. திருக் கோயிலைச் சுற்றித் தாமரை யோடை இருக்கிறது. இத்தல தேவாரத் திப்புராணசரித்திரங்கள் அமைத்துப் பாடப்பெற்றிருப்பதைத் திருத் தொண்டர் புராணத்துப் பாராட்டப்படுதல் காண்க. சுவாமி-அமிர்த கலாநாதர், தேவியார்-அமிர்தவல்லி. இதற்குப்பதிகம்-1.

இத்தலம் கும்பகோணம் ஸ்டேஷனுக்குத்தெற்கே நீடாமங்கலம் கற்சாலையில் இரண்டாவது மைலில் அரிசொல்லாற்றின் தென்க ரையில் உள்ளது.

---

## ௬௯. திருக்கருக்குடி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நனவிலுங்கனவிலுநாளுந்தன்னொளி
நினைவிலுமெனக்குவந்தெய்துநின்மலன்

கலைகடல்வையகந்தொழுகருக்குடி
அனலெரியாடுமெம்மடிகள்காண்மினே. 1

வேதியன்விடையுடைவிமலனொன்னலர்
மூதெயிலெரியெழமுனிந்தமுக்கணன்
காதியல்குழையினன்கருக்குடியமர்
ஆதியையடிதொழவல்லலில்லையே. 2

கானலில்விரைமலர்விம்முகாழியான்
வானவன்கருக்குடிமைந்தன்றன்னொளி
ஆனமெய்ஞ்ஞானசம்பந்தன்சொல்லிய
ஊனமின்மொழிவலார்க்குயருமின்பமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கருக்குடி:—இது மருதாந்தநல்லூர் என வழங்கும்; பிரம்மதேவர், சத்குணராஜன், இராமபிரான் முதலியோர் பூசித்தது. அபுத்தி பூர்வமாய்ச்செய்த மாதுர்கமனத்தின் பொருட்டுப் பூசித்துத் தோஷம் நீங்கிய வணிகன் உருவம் தேவிசந்நிதியில் பிரதிஷ்டித்திருக்கிறது. சுவாமி திருவுருவம் சைகதம். சுவாமி-சற்குணநாதர், தேவியார்-சர்வாலங்கிருதமின்னம்மை. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து தெற்கே நீடாமங்கலம் கற்சாலையில் 2 மைலில் சாக்கோட்டையைக் கடந்து ஒருமைலில் உள்ளது.

---

## எ௦. திருவாஞ்சியம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வன்னிகொன்றைமதமத்தமெருக்கொடுகூவிளம்
பொன்னியன்றசடையிற்பொலிவித்தபுராணனார்
தென்னவென்றுவரிவண்டிசைசெய்திருவாஞ்சியம்
என்னையாளுடையானிடமாகவுகந்ததே. 1

காலகாலர்கரிகானிடைமாநடமாடுவர்
மேலர்வேலைவிடமுண்டிருள்கின்றமிடற்றினர்

மாலைகோலமதிமாடமன்னுந் திருவாஞ்சியம்
ஞாலம்வந்துபணியப்பொலி கோயிலமர்ந்ததே. 2

தென்றறுன்றும்பொழில்சென்றணையுந் திருவாஞ்சியத்
தென்றுநின்றவிறையானையுணர்ந்தடியேத்தலால்
நன்றுகாழிமறைஞானசம்பந்தனசெந்தமிழ்
ஒன்றுமுள்ளமுடையாரடைவாருயர்வானமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

### திருக்குறுந்தொகை. ரு-ந்திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

படையும்பூதமும்பாம்பும்புல்வாயதள்
உடையுந்தாங்கியவுத்தமனார்க்கிடம்
புடைநிலாவிபூம்பொழில்வாஞ்சியம்
அடையவல்லவர்க்கல்லலொன்றில்லையே. 1

பறப்பையும்பசுவும்படுத்துப்பல
திறத்தவும்முடையோர்திகழும்பதி
கறைப்பிறைச்சடைக்கண்ணுதல்சேர்தரு
சிறப்புடைத்திருவாஞ்சியஞ்சேர்மினே. 2

அருக்கனங்கியமனொடுதேவர்கள்
திருத்துஞ்சேவடியான்றிகழுநகர்
ஒருத்திபாகமுகந்தவன்வாஞ்சியம்
அருத்தியாலடைவார்க்கில்லையல்லலே. 7

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

### பண்-பியந்தைக்காந்தாரம் எ-ந்-திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொருவனார்புரிநூலர்புணர்முலையுமையவளோடு
மருவனார்மருவார்பால்வருவதுமில்லைநம்மடிகள்

திருவனார்பணிந்தேத்துந்திகழ்திருவாஞ்சியத்துறையும்
ஒருவனாடியாரையூழ்வினைநலியவொட்டாரே. 1

தொறுவிலானிளவேறுதுண்ணெனவிடைகுரல்வெருவிச்
செறுவில்வாளைகளோடச்செங்கயல்பங்கயத்தொதுங்கக்
கறுவிலாமனத்தார்கள்காண்டகுவாஞ்சியத்தடிகள்
மறுவிலாதவெண்ணீறுபூசுதன்மன்னுமொன்றுடைத்தே. 2

செங்கெலங்கலங்கழனித்திகழ்திருவாஞ்சியத்துறையும்
மின்னலங்கலஞ்சடையெம்மிறைவனதறைகழல்பரவும்
பொன்னலங்கனன்மாடப்பொழிலணிநாவலாரூரன்
பன்னலங்கனன்மாலைபாடுமின்பத்தருளீரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவாஞ்சியம்:—இது ஸ்ரீ வாஞ்சியம் என்றும் வழங்கும்; தக்ஷிணத்தில் காசிக்குச்சமமாகச் சொல்லும் ஆறு க்ஷேத்ரங்களுள் ஒன்று; ஸ்ரீயை (இலக்ஷ்மியை) வாஞ்சித்து விஷ்ணுமூர்த்தி பூசித்த தலமாதலின் இப்பெயரெய்தியது. இயமனும் பூசித்தது. இங்கு இறப்பவருக்கு மரணாவஸ்தை இல்லைஎன்பது ஐதிஹ்யம். இயமன் சந்நிதி தனியே திருக்கோயிலுக்கு வெளியே ஆக்னேயதிக்கி லிருக்கிறது. சுவாமி-வாஞ்சியநாதர், தேவியார்-வாழவந்தநாயகி, தீர்த்தம்-குப்தகங்கை, விருக்ஷம்-சந்தனம். இதற்குப் பதிகம் 3.

இத்தலம் நன்னிலம் (செங்நாலூர்) ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலையில் ஒன்றரைமைலில்(72) திருக்கொண்டீச்சரத்தையும், அதினின்றும் மேற்கே ஒன்றரைமைலில் (71) நன்னிலத்துப் பெருங்கோயிலையும் கடந்து தென்மேற்கே மாப்பிள்ளைக்குப்பம் மட்சாலை மார்க்கமாய் 3 மைலில் புத்தாற்றின் வடகரையில் உள்ளது.

---

## எக. திருநன்னிலத்துப்பெருங் கோயில்.

### சுந்தரமூர்த்திநாயனார்

பண்-பஞ்சமம் எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தண்ணியல்வெம்மையினான்றலையிற்கடைதோறும்பலி
பண்ணியன்மென்மொழியாரிடக்கொண்டுழல்பண்டரங்கன்

புண்ணியனான்மறையோர்முறையாலடிபோற்றிசைப்ப
நண்ணியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. 1

வலங்கிளர்மாதவஞ்செய்மலைமங்கையொர்பங்கினனாய்ச்
சலங்கிளர்கங்கைதங்கச்சடையொன்றிடையேதரித்தான்
பலங்கிளர்பைம்பொழில்தண்பனிவெண்மதியைத்தடவ
நலங்கிளர்நன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. 2

கோடுயர்வெங்களிற்றுத்திகழ்கோச்செங்கணான்செய்கோயில்
நாடியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனைச்
சேடியல்சிங்கிதந்தைசடையன்திருவாரூரன்
பாடியபத்தும்வல்லார்புகுவார்பரலோகத்துளே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருநன்னிலத்துப் பெருங்கோயில்:—இது மதுவனம் என்றுவழங்கும்; மாடக்கோயில்களுள் ஒன்று; இதனைத் திருப்பதிகத்துப் 10-11-ந் திருப்பாட்டுக்களில் காண்க; சூரியன் பூசித்து வழிபட்டது. சுவாமி-பிரமேசுரர், மதுவனேசுரர், தேவியார்-பிரமேசுவரி, மதுவனநாயகி, தீர்த்தம்-பிரமதீர்த்தம். இதற்குப் பதிகம் 1.

இத்தலத்திற்குப் பாதை (70) ஸ்ரீ வாஞ்சியத்திற்குச் சொல்லியதிற்பார்க்க.

---

## எ௨. திருக்கொண்டீச்சரம்.

### திருநாவுக்கரசு நாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

கண்டபேச்சினிற்காளையர்தங்கள்பால்
மண்டியேச்சுழலுமாதரைச்சேராதே
சண்டியீச்சுரவர்க்கருள்செய்தவக்
கொண்டியீச்சுரவன்கழல்கூறுமே. 1

சுற்றமுந்துணைநன்மடவாளொடு
பெற்றமக்களும்பேணலொழிந்தனர்

குற்றமில்புகழ்க்கொண்டீச்சரவனார்
பற்றலாலொருபற்றுமற்றில்லையே. 2

நிலையினார்வரைநின்றெடுத்தான்றனை
மலையினாலடர்த்துவிறல்வாட்டினான்
குலையினார்பொழிற்கொண்டீச்சரவனைத்
தலையினால்வணங்கத்தவமாகுமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கொண்டீச்சரம்:—இது வில்வாரணியம் எனவழங்கும்; இங்கு தேவியார் பசு வுருவாய்த் தேடிக் கொம்பினால் கிளறிய போது ஸ்வாமி வெளிப்பட்டன ரென்று சரித்திரம். இலிங்கத்திருவுருவத்தில் கோட்டின் வடு காணப்பெறும். கோயிலைச் சுற்றி க்ஷீர புஷ்கரணி தீர்த்தம் அகழிபோல் விளங்கிருக்கின்றது. காமதேனு பூசித்து வழிபட்டது. சுவாமி-பசுபதிநாதர், தேவியார்-சாந்தநாயகி. இதற்குப் பதிகம் 2.

இத்தலத்திற்குப் பாதை (70) ஸ்ரீ வாஞ்சியத்திற்குச் சொல்லியிருப்பதிற் காண்க.

---

## ௭௩. திருப்பனையூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கராகம். ௧-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அரவச்சடைமேல்மதிமத்தம்
விரவிப்பொலிகின்றவனூராம்
நிரவிப்பலதொண்டர்களாளும்
பரவிப்பொலியும்பனையூரே. 1

எண்ணொன்றிநினைந்தவர்தம்பால்
உண்ணின்றுமகிழ்ந்தவனூராம்
கண்ணின்றெழுசோலையின்வண்டு
பண்ணின்றொலிசெய்பனையூரே. 2

பாரசர்விடையார்பனையூர்மேல்

சீரார்தமிழ்ஞானசம்பந்தன்
ஆராதசொன்மாலைகள்பத்தும்
ஊரூர்நினைவாருயர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-சீகாமரம், ஏ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாடமாளிகைகோபுரத்தொடுமண்டபம்வளரும்வளர்பொழில்
பாடல்வண்டறையும்பழனத்திருப்பனையூர்த்
தோடுபெய்தொருகாதினிற்குழை தூங்கத்தொண்டர்கடுள்ளிப்பாட
ருடுமாறுவல்லாரவரேயழகியரே. [நின் 1

நாறுசெங்கழுநீர்மலர்நல்லமல்லிகைசண்பகத்தொடு
சேறுசெய்கழனிப்பழனத்திருப்பனையூர்
நீறுபூசிநெய்யாடிதன்னை நினைப்பவர்தம்மனத்தனுகிநின்
றூறுசூடவல்லாரவரேயழகியரே. 2

வஞ்சிநுண்ணிடைமங்கைபங்கினர்மாதவர்வளரும்வளர்பொழில்
பஞ்சின்மெல்லடியார்பயிலுந்திருப்பனையூர்
வஞ்சியும்வளர்நாவலூரன்வனப்பகையவளப்பன்வன்றொண்டன்
செஞ்சொற்கேட்டுகப்பாரவரேயழகியரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பனையூர்:—இங்கு சுந்தரமூர்த்தி நாயனார் எழுந்தருளும்போது ஸ்வாமி நடனதரிசனங் காட்டியருள நாயனார் "ஆடுமாறு வல்லாரவரே யழகியரே" என்று சிறப்பித்துப் பதிகம் பாடியருளினார். பராசரர் பூசித்துப் பேறுபெற்றதலம். கரிகால்வளவனுக்குத் துணைசெய்த காரணத்தால் விநாயகருக்குத் துணையிருந்த பிள்ளையார் என்று திருநாமம். சுவாமி-சௌந்தரநாதர், தேவியார்-பெரியநாயகி தீர்த்தம்-அமிர்தபுஷ்கரணி, விருக்ஷம்-பனை. இதற்குப் பதிகம்-2.

இத்தலம் நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே கரைமார்க்கமாய் ஒருமைலில் உள்ளது.

# எச. திருவிற்குடிவீரட்டம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-நட்டராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வடிகொண்மேனியர்வானமாமதியினர்நதியினர்மதுவார்ந்த, கடிகொள்கொன்றைபஞ்சடையினர்கொடியினருடைபுலிபதளார்ப்பர்,விடையதேறுமெம்மானமர்ந்தினிதுறைவிற்குடிவீரட்டம், அடியராகிநின்றேத்தவல்லார்தமையருவினையடையாவே. 1

களங்கொள்கொன்றையுங்கதிர்விரிமதியமுங்கடிகமழ்சடைக்கேற்றி, உளங்கொள்பத்தர்பாலருளியபெருமையர்பொருகரியுரிபோர்த்து, விளங்குமேனியரெம்பெருமானுறைவிற்குடிவீரட்டம், வளங்கொண்மாமலராணினைந்தேத்துவார்வருத்தமதறியாரே. 2

விலங்கலேசிலையிடமெனவுடையவன்விற்குடிவீரட்டத், திலங்குசோதியையெம்பெருமான்றனையெழிறிகழ்கழல்பேணீ, நலங்கொள்வாழ்பொழிற்காழியுண்ஞானசம்பந்தனற்றமிழ்மாலை,வலங்கொடேயிசைமொழியுமின்மொழிந்தக்கான்மற்றதுவரமாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருவிற்குடிவீரட்டம்:**— இது அஷ்டவீரட்டத்திலொன்று; ஜலந்தராசுரஸம்ஹாரஸ்தலம், ஸ்வாமிசந்நிதி கட்டுமலையிலிருக்கின்றமையின் மாடக்கோயிலென வெண்ண இடந்தருகின்றது. உற்சவமூர்த்தியின் திருக்கரத்தில் ஜலந்தராசுரஸம்ஹாரஞ் செய்தருளிய சக்கரம் அமைந்திருக்கிறது காணப்பெறும். சுவாமி-வீரட்டநாதர், தேவியார்-ஏலவார்குழலி. இதற்குப்பதிகம்-1.

இத்தலம் வெட்டாறு ஸ்டேஷனிலிருந்து வடக்கிழக்கே மட்சாலை மார்க்கமாய் மூன்றரைமைலில் உள்ளது.

# ௭௫. திருப்புகலூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-செவ்வழி. ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்முகுழலிளையராடவ்வெறிவிரவுநீர்ப்
பொங்குசெங்கட்கருங்கயல்கள்பாயும்புகலூர்தனுள்
திங்கள்சூடித்திரிபுரமொரம்பாலெரியூட்டிய
எங்கள்பெம்மானடிபரவநாளுமிடர்கழியுமே. 1

வாழ்ந்தநாளுமினிவாழுநாளுமிவையறிதிரேல்
வீழ்ந்தநாளெம்பெருமானையேத்தாவிதியில்லிகாள்
போழ்ந்ததிங்கட்புரிசடையினான்றன்புகலூரையே
சூழ்ந்தவுள்ளமுடையீர்களுங்கடுயர்தீருமே. 2

புந்தியார்ந்தபெரியோர்களேத்தும்புகலூர்தனுள்
வெந்தசாம்பற்பொடிப்பூசவல்லவிடையூர்தியை
அந்தமில்லாவனலாடலானையணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்பாடியாடக்கெடும்பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

திருவிருத்தம். ௪-ந்திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தன்னைச்சரணென்றுதாளடைந்தேன்றன்னடியடையப்
புன்னைப்பொழிற்புகலூரண்ணல்செய்வனகேண்மின்களோ
என்னைப்பிறப்பறுத்தென்வினைகட்டறுத்தேழ்நரகத்
தென்னைக்கிடக்கலொட்டான்சிவலோகத்திருத்திடுமே. 1

பொன்னைவகுத்தன்னமேனியனேபுணர்மென்முலையாள்
தன்னைவகுத்தன்னபாகத்தனேதமியேற்கிரங்காய்
புன்னைமலர்த்தலைவண்டுறங்கும்புகலூரரசே
என்னைவகுத்திலையேலிடும்பைக்கிடம்யாதுசொல்லே. 2

திருச்சிற்றம்பலம்.

### திருத்தாண்டகம் கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எண்ணுகேனென்சொல்லியெண்ணுகேனோவெம்பெருமான்றிருவடியேயெண்ணினல்லால், கண்ணிலேன்மற்றோர்களைகணில்லேன்கழலடியேகைதொழுதுகாணினல்லால், ஒண்ணுளே யொன்பதுவாசல்வைத்தாயொக்கவடைக்கும்போதுணரமாட்டேன், புண்ணியாவுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. 1

தேவார்ந்ததேவனைத்தேவரெல்லாந்திருவடிமேலலரிட்டுத்தேடிநின்று, நாவார்ந்தமறைபாடிநட்டமாடிநான்முகனுமிந்திரனுமாலும்போற்றக், காவார்ந்தபொழிற்சோலைக்கானப்பேராய்கழுக்குன்றத்துச்சியாய்கடவுளேநின், பூவார்ந்தபொன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே.

ஒருவனையுமல்லாதுணராதுள்ளமுணர்ச்சித்தடுமாற்றத்துள்ளேநின்ற, இருவரையுமூவரையுமென்மேலேவியில்லாததரவறுத்தாய்க்கில்லேனேலக், கருவரைசூழ்கானலிலங்கைவேந்தன்கடுந்தேர்மீதோடாமைக்காலாற்செற்ற, பொருவரையாயுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே.

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

### பண்-கொல்லி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சார்வினுந்தொண்டர்தருகிலாப், பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள், இம்மையேதருஞ்சோறுங்கூறையுமேத்தலாமிடர்செடலுமாம், அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. 1

நரைகள்போந்துமெய்தளர்ந்துமூத்துடனடுங்கிநிற்குமிக்கிழவனை, வரைகள்போற்றிரடோளனேயென்றுவாழ்த்தினுங்கொடுப்பாரிலை, புரைவெள்ளேறுடைப்புண்ணியன்புகலூ

ரைப்பாடுமின்புலவீர்காள், அரையனாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. 4

வஞ்சநெஞ்சனைமாசழக்கனைப்பாவியைவழக்கில்லியை, பஞ்சதுட்டனைச் சாதுவேயென்று பாடினுங்கொடுப்பாரிலைப், பொன்செய்செஞ்சடைப்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்காள், நெஞ்சினோயறுத் துஞ்சுபோவதற்கியாதுமையுறவில்லையே. 5

எள்விழுந்திடம்பார்க்குமாகிலுமீக்குமீகிலனாகிலும், வள்ளலேயெங்கண்மைந்தனேயென்றுவாழ்த்தினுங்கொடுப்பாரிலை, புள்ளெலாஞ்சென்றுசேரும்பூம்புகலூரைப்பாடுமின்புலவீர்காள், அள்ளற்பட்டழுந்தாதுபோவதற்கியாதுமையுறவில்லையே. 8

செறுவினிற்செழுங்கமலமோங்குதென்புகலூர்மேவிய செல்வனை, நறவம்பூம்பொழினாவலூரன்வனப்பகையப்பன் சடையன்றன், சிறுவன்வன்றொண்டனூரன்பாடியபாடல்பத் திவைவல்லவர், அறவனாடிசென்றுசேர்வதற்கியாதுமையுற வில்லையே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருப்புகலூர்:—இது அக்னி பூசித்தகாரணத்தால் அக்னீசம் என்றும், ஸ்ரீ வாகீஸமூர்த்திகள் சரணடைந்த காரணத்தால் ஸரண்யபுரம் என்றும், சுவாமியின் திருவுருவம் சாய்ந்திருத்தலின் கோணேசம் என்றும், புன்னை ஸ்தலவிருக்ஷமாதலின் புன்னைவனம் என்றும் வழங்குகின்றது. 'ஆலயம் கருங்கற்றிருப்பணிசெய்த் அகழி போன்ற அக்னிதீர்த்தத்தினாற் சூழ்ந்திருக்கின்றது. திருநாவுக்கரசு நாயனார் திருப்பூந்துருத்தியினின்றும் இங்கெழுந்தருளியிருந்து பல விதமான திருப்பதிகங்களை மொழிந்து உழவாரஞ்செய்யுமிடங்களிலிருந்த நவமணிகளைப் பருக்கைக்கற்களோடு சேர்த்தெடுத்து வாவியிற்புகவெறிந்தும், தம்மைப் பரீக்ஷிக்கவந்த அரம்பாதியர்களை "திருவாரூர் அம்மானுக்காளாயினேன், உம்மாலாட்டுண்ணேன்" எனச் சொல்லி நிக்ரஹித்தும், ஓர் சித்திரைச்சதயமாம்திருநாளில்'புண்ணி

உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே" என்னும் திருத்தாண்டகம் ஓதி நண்ணரிய சிவாநந்த ஞானவடிவாயின தலம். சுந்தரமூர்த்திநாயனர் பங்குனி உத்திரத் திருநாளுக்குப் பரவையாருக்குப் பொன் கொண்டுவருதற்குப் புறப்பட்டு இங்கெழுந்தருளி சுவாமிதரிசனஞ்செய்து திருப்பணியின் பொருட்டுக் கிடந்தசெங்கற்களை உயரப்பண்ணி உத்தரியத்தை விரித்து நித்திரைசெய் தெழுந்தபோது செங்கற்கள் பொன்னுய் "தம்மையேபுகழ்ந்திச்சை" என்னும் திருப்பதிகம் பாடியருளிய க்ஷேத்ரம். சுவாமி அம்மை திருப்பெயர்கள் பதிகத்துக்காண்க. இங்கு பூத பௌவ்ஷ்ய வர்த்தமான லிங்கங்கள் மூன்றும் தரிசிக்கப்பாலன. சுவாமி-அக்னீசர், கோணேசர், தேவியார்-கருந்தார்க்குழலி. தீர்த்தம்-அக்னிதீர்த்தம், விருக்ஷம்-புன்னை இதற்குப் பதிகம்- 8.

இத்தலம் நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே மட்சாலையில் 4 மைலில் உள்ளது.

---

## எசா. திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

பண்-பியந்தைக்காந்தாரம் உ-ந்-திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பட்டம்பானிறமதியம்படர்சடைச்சுடர்விடுபாணி
நட்டநள்ளிருளாடுநாதனார்நவின்றுறைகோயில்
புட்டன்பேடையொடாடும்பூம்புகலூர்த்தொண்டர்போற்றி
வட்டஞ்சூழ்ந்தடிபரவும்வர்த்தமானீச்சரத்தாரே. 1

தொண்டர்தண்கயமூழ்கித்துணையலுஞ்சாந்தமும்புகையும்
கொண்டுகொண்டடிபரவிக்குறிப்பறிமுருகன்செய்கோலம்
கண்டுகண்டுகண்குளிரக்களிபரந்தொளிமல்குகள்ளார்
வண்டுபண்செயும்புகலூர்வர்த்தமானீச்சரத்தாரே 3

ஈசனேறமர்கடவுளின்னமிர்தெந்தையெம்பெருமான்
பூசுமாசில்வெண்ணீற்றர்பொலிவுடைப்பூம்புகலூரில்
மூசுவண்டறைகொன்றைமுருகன்முப்போதுஞ்செய்முடிமேல்

வாசமாமலருடையார்வர்த்தமானீச்சரத்தாரே. 5

பொங்குதண்புனல்சூழ்ந்துபோதணிபொழிற்புகலூரில்
மங்குன்மாமதிதவழும்வர்த்தமானீச்சரத்தாரைத்
தங்குசீர்திகழ்ஞானசம்பந்தன்றண்டமிழ்பத்தும்
எங்குமேத்தவல்லார்களெய்துவரிமையவருலகே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்**:—இது திருப்புகலூரில் வர்த்தமானலிங்கம் எழுந்தருளியிருக்கும் ஸ்தலமாதலின் இப்பெயரெய்தியது. இங்கு வைதிகப் பிராம்மணகுலத்தில் திருவவதாரஞ்செய்த முருகநாயனார் வைகறையில் தீர்த்தஸ்நானஞ்செய்து விதிப்படி கோட்டுப்பூ, கொடிப்பூ, நீலப்பூ நீர்ப்பூ என்னும் நால்வகைப்பூக்களையும் பலவிதமான மாலைகள், இண்டை, பிணையல், கண்ணி முதலியனவாகக்கட்டிப் பரமசிவனைப் பூசித்துப் பின்னர் ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமானுடைய நட்பினைபடைந்து அவராற்றிருப்பதிகத்துச்சிறப்பிக்கப்பெற்று, அவர்களது திருக்கல்யாணத்தில் பரமுத்தியைத் தலைக்கூடினர். இவரது திருவுருவம் சுவாமிசந்நிதியில் எழுந்தருளச்செய்திருக்கிறது. சுவாமி-வர்த்தமானீச்சுரர், தேவியார்-கருந்தார்க்குழலி. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் (75) திருப்புகலூர் ஆலயத்தில் சுவாமிசந்நிதிக்கு அடுத்த வடபுரத்தில் உள்ளது.

---

# எஎ. திருவிராமனதீச்சரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-வியாழக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சங்கொளிர்முன்கையர்தம்மிடையே
அங்கிடுபலிகொளுமவன்கோபப்
பொங்கரவாடலோன்புவனியோங்க
எங்குமனிராமனதீச்சரமே. 1

சந்தநன்மலரணிதாழ்சடையன்
தந்தமதத்தவன்றாதையோதான்

அந்தமில்பாடலோனழகனல்ல
எந்தவனிராமனதீச்சரமே. 2

தழைமயிலேறவன்றாதையோதான்
மழைபொழிசடையவன்மன்னுகாதிற்
குழையதுவிலங்கியகோலமார்பின்
இழையவனிராமனதீச்சரமே. 3

திருச்சிற்றம்பலம்.

---

**திருவிராமனதீச்சரம்**:—இது இராமபிரான் பூசித்தகாரணத்தால் இப்பெயரெய்தியது. சுவாமி-இராமநாதர், தேவியார்-சரிவார்குழலி, தீர்த்தம்-இராமதீர்த்தம். இதற்குப் பதிகம் 1.

இத்தலம் (75) திருப்புகலூரிலிருந்துதெற்கே முடிகொண்டான் ஆற்றைக்கடந்து ஒருமைலில் மட்சாலையில் திருக்கண்ணபுரத்துக்குக் கிழக்கே உள்ளது.

---

# எஅ. திருப்பயற்றூர்.

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருநேரிசை. ச-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

உரித்திட்டாரானையின்றோலுதிரவாறொழுகியோட
விரித்திட்டாருமையாளஞ்சிவிரல்விதிர்த்தலக்கநோக்கித்
தரித்திட்டார்சிறிதுபோதுதரிக்கிலராகித்தாமும்
சிரித்திட்டாரெயிறுதோன்றத்திருப்பயற்றூரனாரே. 1

மூர்த்திதன்மலையின்மீதுபோகாதாமுனிந்துநோக்கிப்
பார்த்துத்தான்பூமிமேலாற்பாய்ந்துதான்மலையைப்பற்றி
ஆர்த்திட்டான்முடிகள்பத்துமடர்த்துநல்லரிவையஞ்சத்
தேத்தெத்தாவென்னக்கேட்டார்திருப்பயற்றூரனாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருப்பயற்றூர்**:—இது திருப்பயற்றங்குடி என்றுவழங்கும். பைரவமஹருஷி பூசித்ததலமெனக் கூறுவர். சுவாமி-பயற்றூர்நாதர்,

தேவியார்-காவியங்கண்ணியம்மை. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் வெட்டாறு ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மட்சாலையில் மூன்றரைமைலில் (74) திருவிற்குடியினின்றும் கிழக்கேமட்சாலையில் மூன்றுமைலில் உள்ளது.

---

## எசு. திருச்செங்காட்டங்குடி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-பஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பைங்கோட்டுமலர்ப்புன்னைப்பறவைகாள்பயப்பூரச்
சங்காட்டந்தவிர்த்தென்னைத்தவிராநோய்தந்தானே
செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டன்பணிசெய்ய
வெங்காட்டுளனலேந்திவிளையாடும்பெருமானே. 1

பொன்னம்பூங்கழிக்கானற்புணர்துணையோடுடன்வாழும்
அன்னங்காளன்றில்காளகன்றும்போய்வருவீர்காள்
கன்னவிலுேட்சிறுத்தொண்டன்கணபதீச்சரமேய
இன்னமுதனிணையடிக்கீழெனதல்லலுரையீரே. 2

செந்தண்பூம்புனல்பரந்தசெங்காட்டங்குடிமேய
வெந்தநீறணிமார்பன்சிறுத்தொண்டனவன்வேண்ட
அந்தண்பூங்கலிக்காழியடிகளையேயடிபரவும்
சந்தங்கொள்சம்பந்தன்றமிழுரைப்போர்தக்கோரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநாவுக்கரசுநாயனர்.

திருந்தாண்டகம் ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பெருந்தகையைப்பெறற்கரியமாணிக்கத்தைப்பேணிநினைந்தெழுவார்தம்மனத்தேமன்னி, இருந்தமணிவிளக்கதனைநின்றபூமேலெழுந்தருளியிருந்தானையெண்டோள்வீசி, அருந்திறன்மாநடமாடும்மான்றன்னையங்கனகச்சுடர்க்குன்றையன்

ருவின்கீழ்க், திருந்துமறைப்பொருணால்வர்க்கருள்செய்தா
னைச்செங்காட்டங்குடியதனிற்கண்டேனானே. 1

உருகுமனத்தடியவர்கட்கூறுந்தேனையும்பர்மணிமுடிக்
கணியையுண்மைநின்ற, பெருகுநிலைக்குறியாளரறிவுதன்னைப்
பேணியவந்தணர்க்குமறைப்பொருளைப்பின்னும்,முருகுவிரிந
றுமலர்மேலயற்குமாற்குமுழுமுதலைமெய்த்தவத்தோர்துணை
யைவாய்த்த, திருக்குழலுமைநங்கைபங்கன்றன்னைச்செங்
காட்டங்குடியதனிற்கண்டேனானே. 3

திருச்சிற்றம்பலம்.

---

**திருச்செங்காட்டங்குடி:—** இது விநாயகக்கடவுள் கயமுகாசுரனைச் சம்ஹாரஞ்செய்தகாலத்து அவன் இரத்தவெள்ளம் பெருகிய காரணத்தால் இப்பெயரெய்தியது. ஸ்தலம் கணபதியினாற் பிரதிட்டித்த லிங்கமூர்த்தி எழுந்தருளியிருத்தலின் கணபதீச்சரமாயிற்று. இவற்றைக் கந்தபுராணத்துக் காண்க. மாமாத்திரப் பிராம்மணகுலத்தில் திருவவதாரஞ்செய்து சிவனடியார் சந்நிதியில் மிகச்சிறியராய் ஒழுகிய சிறுத்தொண்டநாயனார் உத்தராபதியினின்றும் பைரவவேடத்தோடு எழுந்தருளிய சிவபெருமானுக்குத் தமது புதல்வர் சீராளதேவரைக் கறிசமைத்திட்டுத் திருவடியடைந்த தலம். இவர் ஸ்ரீ ஞானசம்பந்தர் வாகீசர் எழுந்தருளிய காலத்தில் அவரோடு அளவளாவி அவர் நட்பைப்பெற்றுத் திருப்பதிகத்திற் சிறப்பிக்கப்பெற்றவர். பைரவமூர்த்தி எழுந்தருளியிருந்த திருவாத்தி விருக்ஷம் ஆலயத்தில் உற்சவமூர்த்தியின் சந்நிதிக்கெதிரில் உள்ளது. ஷை சந்நிதிக்கெதிரிலேயே கிழக்கே சிறுத்தொண்டர் தமது தேவியார் திருவெண்காட்டுநங்கையார், புதல்வர் சீராளதேவர், தாதியார் சந்தநநங்கை இவர்களோடு எழுந்தருளி யிருக்கின்றனர். தெற்குவீதி மேலக்கோடியில் உத்தராபதியீச்சுரர் திருவமுதுகொண்ட இடத்தில் எழுந்தருளியிருப்பது காணப்பெறும். இந்நாயனாருக் கநுக்கிரஹிக்கும்போது சுவாமி தேவியாரோடும் முருகக்கடவுளோடும் எழுந்தருளித் தாம் நாயனாருக்கும், தேவியார் மனைவியாருக்கும், இளைய பிள்ளையார் சீராளதேவருக்கும் அருளினமை வியக்கத்தக்கது. சுவாமி-கணபதீச்சுரர், தேவியார்-திருக்குழனன்மாது, விருக்ஷம்-திருவாத்தி, தீர்த்தம்-சூர்யதீர்த்தம் இதற்குப் பதிகம் 3.

இத்தலம் நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே நான்குமைலில் திருப்புகலூரையும், அங்கிருந்து தெற்கே ஒருமைலில் இராமனதீச்சரத்தையும் (சண்ணபுரம்) கடந்து கிழக்கேமட்சாலையில் இரண்டுமைலில் உள்ளது.

---

# ௮௦. திருமருகல்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

விடந்தீர்த்த திருப்பதிகம். பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சடையாயெனுமால்சரணீயெனுமால்
விடையாயெனுமால்வெருவாவிழுமால்
மடையார்குவளைமலரும்மருகல்
உடையாய்தகுமோவிவளுண்மெலிவே. 1

சிந்தாயெனுமால்சிவனேயெனுமால்
முந்தாயெனுமான்முதல்வாவெனுமால்
கொந்தார்குவளைகுலவும்மருகல்
எந்தாய்தகுமோவிவளேசறவே. 1

வயஞானம்வல்லார்மருகற்பெருமான்
உயர்ஞானமுணர்ந்தடியுள்குதலால்
இயன்ஞானசம்பந்தனபாடல்வல்லார்
வியன்ஞாலமெல்லாம்விளங்கும்புகழே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

பெருகலாந்தவம்பேதமைதீரலாம்
திருகலாகியசிந்தைதிருத்தலாம்
பருகலாம்பரமாயதோரானந்தம்
மருகலானடிவாழ்த்திவணங்கவே.

ஓதுமைங்கிளிக்கொண்பாலமுதூட்டிப்
பாதுகாத்துப்பலபலகற்பித்து
மாதுதான்மருகற்பெருமானுக்குத்
தூதுசொல்லவிடத்தான்றொடங்குமே. 4

ஆதிமாமலையன்றெடுத்தானிற்றுச்
சோதியென்றலுந்தொல்லருள்செய்திடும்
ஆதியான்மருகற்பெருமான்றிறம்
ஓதிவாழ்பவரும்பர்க்குமும்பரே. 10

திருச்சிற்றம்பலம்

---

திருமருகல்.—இங்கு ஸ்தலவிருக்ஷம்வாழையும், மருகலென்பது ஒருவாழை விசேஷமுமாதலின் இது இப்பெயரெய்தியதென்ப. பாண்டிநாட்டிலேஉள்ள வைப்பூரிலேவாழும் தாமனென்னும் வணிகன் தன்மருகனுக்குத் தன்கன்னியர் எழுவருள் அறுவரையும் ஒவ்வொருவராகத் தருவதாகச்சொல்லிப் பிறருக்குக் கொடுத்துவிடலும் ஏழாவதவள் தன் தாய்தந்தையரை மறைத்து அம்மருகனோடுவந்து திருமருகலையடைந்து ஒருமடத்தில் இராத்தங்கினபோது அவன் விஷந்தீண்டி இறந்ததனால் அவள் திருக்கோயிலைநோக்கிப் பரமசிவனைவேண்டிப் புலம்பாநிற்கையில் திருஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளி அவள் முறைப்பாட்டைக்கேட்டுத் திருப்பதிகம்பாடி யவனை யெழுப்பி அவ்விருவருக்கும் விவாகஞ்செய்தருளி யநுக்ரஹித்த தலம். இஃதொரு மாடக்கோயிலாகக் காண்கிறது. தெற்குச்சந்நியில் விடந்தீர்த்த கணபதி எழுந்தருளியிருக்கிறார். சுவாமி-மாணிக்கவண்ணர், தேவியார்--வண்டுவார்குழலி, ஸ்தலவிருக்ஷம்--வாழை. இதற்குப் பதிகம்-3.

இத்தலம் நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கேமட்சாலையில் 4 மைலில் திருப்புகலூரையடைந்து அங்கிருந்துகிழக்கே 3 மைலில் மட்சாலையில் உள்ளது. திருச்செங்காட்டங்குடியினின்றும் வடகிழக்கே 2 மைல்.

---

## அக. திருச்சாத்தமங்கை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

திருமலர்க்கொன்றைமாலை திளைக்கும்மதிசென்னிவைத்தீர்
இருமலர்க்கண்ணிதன்னோடுடனாவதுமேற்பதொன்றே

பெருமலர்ச்சோலைமேகமுரிஞ்சும்பெருஞ்சாத்தமங்கை
அருமலராதிமூர்த்தியயவந்தியமர்ந்தவனே. 1

பொடிதனைப்பூசுமார்பிற்புரிநூலொருபாற்பொருந்தக்
கொடியனசாயலாளோடுடனாவதுங்கூடுவதே
கடிமணமல்கிநாளுங்கமழும்பொழிற்சாத்தமங்கை
அடிகணக்கன்பரவவயவந்தியமர்ந்தவனே. 2

மறையினார்மல்குகாழித்தமிழ்ஞானசம்பந்தன்மன்னும்
நிறையினார்நீலநக்கனெடுமாநகரென்றுதொண்டர்
அறையுமூர்சாத்தமங்கையயவந்திமேலாய்ந்தபத்தும்
முறைமையாலேத்தவல்லாரிமையோரிலுமுந்துவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சாத்தமங்கை:—இது செய்யாத்தமங்கை என்றுவழங்குகிறது; இங்குள்ள ஆலயத்திற்கு "அயவந்தி" என்று பெயரிருத்தலின் பிரம்மதேவர் பூசித்ததலமென்று ஊகிக்கப்பெறுகிறது. இங்கு வைதிகப் பிராம்மணகுலத்திலே திருவவதாரஞ்செய்த திருநீலநக்கநாயனார் ஆலயத்திலே சுவாமியை வழிபட்டுவரும்நாளில் ஒருநாள் சிலந்தியொன்று சிவலிங்கப்பெருமான்மீது வீழ்ந்தபோது இவர்மனைவியார்மிக்கபதைப்போடும் தங்குழவிமேல் வீழ்ந்தாலொத்த பரிவோடும் அதனைத்தம்வாயால் ஊதித்துமிப்ப அதனைக்கண்டநாயனார் அது அநுசிதமென்றுகருதித் தம்மனைவியாரைக் கடிந்துவிலக்கிவிடலும் சுவாமி அன்றிராத்திரி நாயனார்கனவிலேதோன்றித் தமது திருமேனியைக்காட்டி ஊதியொழிந்த இடந்தவிர மற்றவிடங்களில் கொப்புள் என்றருள நாயனார் மிக்கபதைப்போடும் எழுந்து திருவருளைவியந்து ஆலயத்தையடைந்து அங்கேயே எழுந்தருளியிருந்த தம்மனைவியாரை உடன்கொண்டு மீண்டு வெகுநாள் திருப்பணிசெய்து ஞானசம்பந்தப்பெருமான் இங்கெழுந்தருளியபோது அவர் நட்பைப்பெற்று அவராற் பதிகத்துச் சிறப்பிக்கப்பெற்றுப் பின் அவர் திருமணத்தைச் சேவித்துச் சிவபதம் அடைந்தார், நாயனார் அவர் மனைவியார் இருவர் திருவுருவமும் தேவியார்சந்நிதியில் பிரதிஷ்டிக்கப்பெற்றிருக்கின்றன. சுவாமி—அயவந்திநாதர், தேவியார்—மலர்க்கண்ணம்மை. இதற்குப்பதிகம் 1.

இத்தலம் (80) திருமருகலுக்கு வடகிழக்கே மட்சாலையில் ஒருமைலில் ஆற்றுக்கு வடகரையில் உள்ளது. ஆற்றைப்பரிசினாற் கடக்கவேண்டும்.

---

# அ௨. திருக்கடனாகைக்காரோணம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-செவ்வழி. ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான்றநெடுவெண்ணிலா
ஏனற்பூத்தம்மராங்கோதையோடும்விராவுஞ்சடை
வானநாடன்னமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. 1

விலங்கலொன்றுசிலையாமதின்மூன்றுடன்வீட்டினான்
இலங்குகண்டத்தெழிலாமைபூண்டார்க்கிடமாவது
மலங்கியோங்கிவ்வருவெண்டிரைமல்கியமால்கடல்
கலங்கலோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. 2

மல்குதண்பூம்புனல்வாய்ந்தொழுகும்வயற்காழியான்
நல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லார்கண்முன்
வல்லவாறேபுனைந்தேத்துங்காரோணத்துவண்டமிழ்
சொல்லுவார்க்குமிவைகேட்பவர்க்குந்துயரில்லையே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

திருவிருத்தம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தூமென்மலர்க்கணைகோத்துத்தீவேள்வித்தொழிற்படுத்த
காமன்பொடிபடக்காய்ந்தகடனாகைக்காரோணநின்
னாமம்பரவிநமச்சிவாயவென்னுமஞ்செழுத்தும்
சாமன்றுரைக்கத்தருதிகண்டாயெங்கள்சங்கரனே. 3

வங்கமலிகடனாகைக்காரோணத்தெம்வானவனே
எங்கள்பெருமானோர்விண்ணப்பமுண்டதுகேட்டருளீர்
கங்கைசடையுட்கரந்தாயக்கள்ளத்தைமெள்ளவுமை
நங்கையறியிற்பொல்லாதுகண்டாயெங்கணாயகனே. 8

திருச்சிற்றம்பலம்.

### திருத்தாண்டகம் ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாரார்பரவும்பழனத்தானைப்பருப்பதத்தானைப்பைஞ்ஞீ
லியானைச், சீரார்செழும்பவளக்குன்றொப்பானைத்திகழுந்திரு
முடிமேற்றிங்கள்சூடிப், பேராயிரமுடையபெம்மான்றன்னைப்
பிறர்தன்னைக்காட்சிக்கரியான்றன்னைக், காரார்கடல்புடைசூ
ழ்ந்தனாகைக்காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. 1

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

### கொல்லிக்கௌவாணம். ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

பத்தூர்புக்கிரந்துண்டுபலபதிகம்பாடிப்பாவையரைக்கிறி
பேசிப்படிறாடித்திரிவீர், செத்தார்தம்மெலும்பணிந்துசேவே
றித்திரிவீர்செல்வத்தைமறைத்துவைத்தீரெனக்கொருநாளிர
ங்கீர், முத்தாரமிலங்கிமிளிர்மணிவயிரக்கோவையவைபூணத்
தந்தருளிமெய்க்கினிதாநாறும், கத்தூரிகமழ்சாந்தும்பணித்த
ருளவேண்டுங்கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. 1

மண்ணுலகும்விண்ணுலகுமும்மதேயாட்சிமலையரையன்
பொற்பாவைசிறுவனையுந்தேறேன், எண்ணிலியுண்பெருவயி
றன்கணபதியொன்றறியானெம்பெருமானிதுதகவோவியம்பி
யருள்செய்யீர், திண்ணெனவென்னுடல்விருத்திதாரீரேயாகி
ற்றிருமேனிவருந்தவேவளைக்கின்றேனாளைக், கண்ணறையன்
கொடும்பாடனென்றுரைக்கவேண்டா கடனாகைக்காரோண
மேவியிருந்தீரே. 9

பண்மயத்தமொழிப்பரவைசங்கிலிக்குமெனக்கும்பற்றா
யபெருமானேமற்றாரையுடையேன், உண்மயத்தவுமக்கடியே
ன்குறைதீர்க்கவேண்டுமொளிமுத்தம்பூணாரமொண்பட்டும்பூ
வும்,கண்மயத்தகத்தூரிகமழ்சாந்தும்வேண்டுங்கடனாகைக்கா

ரோணமேவியிருந்தீரென்றண்மயத்தாலணிநாவலாரூரன்சொ
ன்னவருந்தமிழ்களிவைவல்லாரமருலகாள்பவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருநாகைக்காரோணம்:**—இது நாகராஜனாகிய ஆதிசேடன் பூசித்தகாரணத்தால் "நாகை" யெனவும், புண்டரீகமஹாருஷியைச் சுவாமி திருமேனியில் ஆரோஹணஞ் செய்துகொண்டமையின் 'காயாரோஹணம்' என்பது மருவிக் 'காரோணம்' எனவும் பெற்று நாகைக்காரோணம் ஆகியது. இங்கு சுந்தரமூர்த்திநாயனார் சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடிப் பொன்னும், நவமணியும், திருவாபரணங்களும், பட்டு, குதிரை, உடைவாள் முதலியவும் பெற்று உவந்தருளினார்; அதிபத்தநாயனார் பரதவர்குலத்திலே திருவவதாரஞ்செய்து சிவபெருமானையும் சிவனடியாரையும் வழிபட்டுவருவார் பிரதிதினமும் கடலிலே வலைவீசி முதலிலே படுக்கும்மீனைச் சிவபெருமானுக்கென மீண்டும் கடலிலே விட்டுவருநாளிலே பலநாளும் ஒவ்வொரு மீனேபடுத்துக் கடலிலேவிட்டுக் கடைசியில் தேஜோமயமாய் நவரத்னகசிதமான மீன் ஒன்றைப்படுத்து மிகவுவந்து அதனைச் சிவபெருமானுக்கென விடுத்துச்சுவாமி காக்ஷிகொடுக்கப்பெற்றுச் சிவபதம் அடைந்தார். இது ஸப்தவிடங்கஸ்தலங்களில் ஒன்று; சுந்தரவிடங்கஸ்தலம்; தரங்கநடனம்-தியாகராஜாவுக்குமுன் சுந்தரமூர்த்தி சுவாமிகள்வீற்றிருக்கிறார். சுவாமி-காயாரோஹணேசுவரர்; தேவியார்-நீலாயதாக்ஷியம்மை, தீர்த்தம்-தேவதீர்த்தமும், புண்டரீகதீர்த்தமும், முறையே கோயிலுக்குத் தெற்கிலும், மேற்கிலும் உள்ளன. விருக்ஷம்-மாவிருக்ஷம். இதற்குப் பதிகம்-7.

இத்தலம் நாகபட்டினம் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே முக்கால் மைலில் உள்ளது.

---

## ௮௬. திருச்சிக்கல்.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-இந்தளம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானுலாவும்மதிவந்துலாவும்மதின்மாளிகை
தேனுலாவும்மலர்ச்சோலைமல்குந்திகழ்சிக்கலுள்

வேனல்வேளைவிழித்திட்டவெண்ணெப்பெருமானடி
ஞானமாகநினைவார்வினையாயினநையுமே. 1

மடங்கொள்வாளைகுதிகொள்ளுமணமலர்ப்பொய்கைசூழ்
திடங்கொண்மாமறையோரவர்மல்கியசிக்கலுள்
விடங்கொள்கண்டத்தவெண்ணெய்ப்பெருமானடிமேவியே
அடைந்துவாழும்மடியாரவரல்லலறுப்பரே. 2

கந்தமார்பொழிற்காழியுண் ஞானசம்பந்தனல்
செந்தண்பூம்பொழிற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடிச்
சந்தமாச்சொன்னசெந்தமிழ்வல்லவர்வானிடை
வெந்தநீறணியும்பெருமானடிமேவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருச்சிக்கல்:**—இது வசிஷ்டர் காமதேனுவினது வெண்ணெயினால் பிரதிஷ்டித்துப் பூசித்த இலிங்கம் மீண்டும் எடுக்கக்கூடாமல் சிக்கிய காரணத்தால் இப்பெயரெய்தியது. ஸ்வாமியினது பெயரும் இதனை வற்புறுத்தும், மாடக்கோயில்களுள் ஒன்று. திருப்புகழ் பெற்ற சுப்பிரமணியசுவாமியினது முக்கியமான க்ஷேத்திரங்களுள் ஒன்று. ஸ்கந்தஷஷ்டி உற்சவம் வெகுவைபவமானது. வசிஷ்டர் பூசித்துக் காமதேனுவைப் பெற்றதலம். நவநீதப்பெருமான் என்னும் நாமத்தோடு விஷ்ணுமூர்த்தியும வடக்கு ஆவரணத்தில் எழுந்தருளியிருக்கிறார். சுவாமி-நவநீதநாதர், தேவியார்-வேனெடுங்கண்ணியம்மை, சுப்பிரமணியர்-சிங்காரவேலர், தீர்த்தம்-க்ஷீரபுஷ்கரணி, விருக்ஷம்-மல்லிகை. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் சிக்கல் ஸ்டேஷனிலிருந்து வடக்கே அரைமைலில் உள்ளது.

---

# அச. திருக்கீழ்வேளூர்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-நட்டராகம். உ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

மின்னுலாவியசடையினர்விடையினர்மிளிர்தருமரவோடும்
பன்னுலாவியமறையொலிநாவினர்கறையணிகண்டத்தர்

பொன்னுலாவியகொன்றையந்தாரினர்புகழ்மிகுகீழ்வேளூர்
உன்னுலாவியசிந்தையர்மேல்வினையோடிடவீடாமே. 1

நீருலாவியசடையிடையரவொடுமதிசிரநிரைமாலை
வாருலாவியவனமுலையவளொடுமணிசிலம்பவையார்க்க
வேருலாவியவிறைவனதுறைவிடமெழிறிகழ்கீழ்வேளூர்
சீருலாவியசிந்தைசெய்தணைபவர்பிணியொடுவினைபோமே. 2

குருண்டவார்குழற்சடையுடைக்குழகனையழகமர்கீழ்வேளூர்த், திரண்டமாமறையவர்தொழும்பெருந்திருக்கோயிலெம்பெருமானை, இருண்டமேதியினமிகுவயன்மல்குபுகலிமன்சம்பந்தன், தெருண்டபாடல்வல்லாரவர்சிவகதிபெறுவதுதிடமாமே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருத்தாண்டகம். சு -ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆளானவடியவர்கட்கன்பன்றன்னையானஞ்சுமாடியைநாணபயம்புக்கத், தாளானைத்தன்னொப்பாரில்லாதானைச்சந்தனமுங்குங்குமமுஞ்சாந்துந்தோய்ந்த,தோளானைத்தோளாதமுத்தொப்பானைத் தூவெளுத்த கோவணத்தை யரையி லார்த்த, கீளானைக்கீழ்வேளூராளுங் கோவைக்கேடிலியை நாடுமவர்கேடிலாரே. 1

காட்பாவுகமலமலர்தயங்குவானைத்தலையறுத்துமாவிரதந்தரித்தான்றன்னைக்,கோட்பாவுநாளெல்லாமானான்றன்னைக்கொடுவினையேன்கொடுநரகக்குழியினின்றல், மீட்பானைவித்துருவின் கொத்தொப்பானை வேதியனை வேதத்தின் பொருள்கொள்வீணை, கேட்பானைக்கீழ்வேளூராளுங்கோவைக்கேடிலியைநாடுமவர்கேடிலாரே. 4

திருச்சிற்றம்பலம்.

**திருக்கீழ்வேளூர்:**—இது முருகக்கடவுள் பூசித்த தலமாதலின் இப்பெயரெய்தியது. புள்ளிருக்குவேளூரோடு மயங்கற்பாலதன்று; மாடக்கோயில்களுள் ஒன்று. அகஸ்தியர், இந்திரன், குபேரன் இவர்களும் பூசித்துச் சித்தியடைந்தனர். முருகக்கடவுளது தவத்தைத் தேவியார் பஞ்சதிக்குகளினும் காத்தமையின் 'அஞ்சுவட்டநாயகி' என்னும்பெயரோடு முதலாவாணத்தில் வடபக்கத்தில் எழுந்தருளியிருக்கின்றனர். அகஸ்தியர் ஸ்ரீமங்கடராஜமூர்த்தியின், வலதுபாத தரிசனம் பெற்ற தலம். சுவாமிபெயர் 'கேடிலி' எனப் பதிகத்துக் காணப்பெறும். சுவாமி-அக்ஷயநாதர், தேவியார்-வனமுலைநாயகி, தீர்த்தம்-சரவணப்பொய்கை, விருக்ஷம்-இலந்தை. இதற்குப் பதிகம்-2

இத்தலம் கீழ்வேளூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கே ஒருமைலில் உள்ளது.

---

# அரு. திருத்தேவூர்

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

### திருவிராகம் பண்-சாதாரி, ங-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காடுபயில்வீடுமுடையோடுகலன்மூடுமுடையாடைபுலிதோல்
தேடுபலியூணதுடைவேடமிகுவேதியர்திருந்துபதிதான்
நாடகமதாடமஞ்ஞைபாடவரிகோடல்கைமறிப்பநலமார்
சேடுமிகுபேடையனமூடிமகிழ்மாடமிடைதேவூரதுவே. 1

கோளரவுகொன்றைநகுவெண்டலையெருக்குவனிகொக்கிறகொடும், வாளரவுதண்சலமகட்குலவுசெஞ்சடைவரத்திறைவனூர், வேளரவுகொங்கையிளமங்கையர்கள்குங்குமம்விரைக்குமணமார், தேளரவுதென்றறெருவெங்குநிறைவொன்றிவருதேவூரதுவே. 2

தங்குமிகுபொங்கரவுதங்குசடைநங்களிறைதுன்றுகுழலார், செங்கயல்கண்மங்கையுமைநங்கையொருபங்கனமர்தேவூரதன்மேல், பைங்கமலமங்கணிகொடிண்புகலிஞானசம்பந்தனுரைசெய், சங்கமலிசெந்தமிழ்கள்பத்துமிவைவல்லவர்கள்சங்கையிலரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருத்தேவூர்—இது தேவர்கள் பூசித்து மந்திரோபதேசம் பெற்றதலமாதலின் இப்பெயரெய்தியது; இந்திரன், குபேரன் முதலிய தேவரும் பிருகஸ்பதி, கௌதமர் முதலிய மஹாருஷிகளும் பூசித்த தலம்; மாடக்கோயில்களுள் ஒன்று. சுவாமி-தேவகுருநாதர், தேவியார்-மதுரபாஷிணியம்மை, தீர்த்தம்-தேவதீர்த்தம், விருக்ஷம்-கதலி, இதற்குப் பதிகம்-2

இத்தலம் கீழ்வேளூர் ஸ்டேஷனிலிருந்து தெற்கே மட்சாலையில், மூன்றுமைலில் உள்ளது.

---

## அசு. திருப்பள்ளியின் முக்கூடல்.

### திருநாவுக்கரசு நாயனார்.

திருத்தாண்டகம் சூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆராதவின்னமுதையம்மான்றன்னையயனொடுமாலறியாதவாதியானைத், தாராருமலர்க்கொன்றைச்சடையான்றன்னைச் சங்கரனைத்தன்னொப்பாரில்லாதானை, நீரானைக்காற்றானைத்தீயானானைநீள்விசும்பாயாழ்கடல்களேழுஞ்சூழ்ந்த, பாரானைப்பள்ளியின்முக்கூடலானைப்பயிலாதேபாழேநானுழன்றவாறே.

தடுத்தானைத்தான்முனிந்துதன்றோள்கொட்டித்தடவரையையிருபதுதோடலையினாலும், எடுத்தானைத்தாள்விரலான்மாளவூன்றியெழுநரம்பினிசைபாடலினிதுகேட்டுக், கொடுத்தானைப்பேரோடுங்கூர்வாடன்னைக்குரைகழலாற்கூற்றுவனைமாளவன்று, படுத்தானைப்பள்ளியின்முக்கூடலானைப்பயிலாதேபாழேநானுழன்றவாறே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பள்ளியின் முக்கூடல்:—இது தத்காலம் "அரிக்கரியான்பள்ளி" எனவழங்கும். இதற்கும் திருவாரூருக்கும் இடையில் இராமபிரான் பூசித்த 'கயாகரை' என்னும் தலம். 'கேகரை' எனமருவி வழங்குகிறது. தேவியார்திருநாமம் பதிகத்துக்காணப்பெறும் சுவாமி முக்கோணநாதர், தேவியார் மைமேவுங்கண்ணி. இதற்குப்பதிகம்-1.

இத்தலம் வெட்டாறு ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே ஒரு மைலில் உள்ளது. திருவாரூர்ப்பாதை சிரமமானது.

---

# ௮௭. திருவாரூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம் ௨-ந்-திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பவனமாய்ச்சோடையாய்நாவெழாப்பஞ்சுதோய்ச்சட்ட வுண்டு
சிவனதாட்சிந்தியாப்பேதைமார்போலநீவெள்கினாயே
கவனமாய்ப்பாய்வதோரேறுகந்தேறியகாளகண்டன்
அவனதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.

தந்தையார்போயினார்தாயரும்போயினார்தாமும்போவார், கொந்தவேல்கொண்டொருகூற்றத்தார்பார்க்கின்றார் கொண்டுபோவார், எந்தநாள்வாழ்வதற்கேமனம்வைத்தியா லேழைநெஞ்சே, அந்தணாரூர்தொழுதுய்யலாமையல்கொண் டஞ்சனெஞ்சே. 2

என்பினாற்கழிநிரைத்திறைச்சிமண்சுவரெறிந்திதுநம்மில்லம்
புன்புலானாறுதோல்போர்த்துப்பொல்லாமையான்முகடுகொண்டு
முன்பெலாமொன்பதுவாய்தலார்குரம்பையின்மூழ்கிடாதே
அன்பனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. 8

தந்தைதாய்தன்னுடன்றோன்றினார்புத்திரர்தாரமென்னும்
பந்தநீங்காதவர்க்குய்ந்துபோக்கில்லெனப்பற்றினாயே
வெந்தநீறாடியாராதியார்சோதியார்வேதகீதர்
எந்தையாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. 9

பல்லிதழ்மாதவியல்லிவண்டியாழ்செயுங்காழியூரன்
நல்லவேநல்லவேசொல்லியஞானசம்பந்தனாரூர்
எல்லியம்போதெரியாடுமெம்மீசனையேத்துபாடல்
சொல்லவேவல்லவர்தீதிலரோதநீர்வையகத்தே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவிராகம். பண்-நட்டராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பருக்கையானைமத்தகத்தரிக்குலத் துகிர்ப்புகந்
நெருக்கிவாயநித்திலங்நிரக்குநீள்பொருப்பனூர்
கருக்கொள்சோலைசூழநீடுமாடமாளிகைக்கொடி
அருக்கன்மண்டலத்தணவுமந்தணாரூரென்பதே. 1

விண்டவெள்ளெருக்கலர்ந்தவன்னிகொன்றைமத்தமும்
இண்டைகொண்டசெஞ்சடைமுடிச்சிவனிருந்தவூர்
கெண்டைகொண்டலர்ந்தகண்ணினார்கள்கீதவோசைபோய்
அண்டரண்டமூடறுக்குமந்தணாரூரென்பதே. 2

வல்லிசோலைசூழநீடுமன்னுவீதிபொன்னுலா
வல்லிமாதமர்ந்திருந்தவந்தணாரூர்தனைய
நல்லசொல்லுஞானசம்பந்தனவினின்னுரை
வல்லதொண்டர்வானமாளவல்லர்வாய்மைபாகவே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

பண்-காந்தாரம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாடிளம்பூதத்தினானும்பவளச்செவ்வாய்வண்ணத்தானுங்
கூடிளமென்முலையாளைக்கூடியகோலத்தினானும்
ஓடிளவெண்பிறையானுமொளிதிகழ்சூலத்தினானும்
ஆடிளம்பாம்பசைத்தானுமாரூரமர்ந்தவம்மானே 1

நரியைக்குதிரைசெய்வானுநரகரைத்தேவுசெய்வானும்
விரதங்கொண்டாடவல்லானும்விச்சின்றிநாறுசெய்வானும்
முரசதிர்ந்தானைமுன்னோடமுன்பணிந்தன்பர்களேத்த
அரவரைச்சாத்திநின்றானுமாரூரமர்ந்தவம்மானே. 2

ஆயிரந்தாமரைபோலுமாயிரஞ்சேவடியானும்
ஆயிரம்பொன்வரைபோலுமாயிரந்தோளுடையானும்

ஆயிரஞாயிறுபோலுமாயிரநீண்முடியானும்
ஆயிரம்பேருகந்தானு மாரூரமர்ந்தவம்மானே 8

பையஞ்சுடர்விடுநாகப்பள்ளிகொள்வானுள்ளத்தானுங்
கையஞ்சுநான்குடையானைக்கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப்புகழ்புரிந்தார்க்கருள்செய்யும்
ஐயஞ்சினப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவாரூர்ப்பழமொழி. பண்-காந்தாரம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மெய்யெல்லாம்வெண்ணீறுசண்ணித்தமேனியான்றாடொழாதே, உய்யலாமென்றெண்ணியுறிதூக்கியுழிதந்தென்னுள்ளம்விட்டுக், கொய்புலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலுமாரூரரைக், கையினற்றொழாதொழிந்துகனியிருக்கக்காய்கவர்ந்தகள்வனேனே. 1

கதியொன்றுமறியாதேகண்ணழலத்தலைபறித்துக்கையிலுண்டு, பதியொன்றுநெடுவீதிப்பலர்காணநகைநாணாதுழிதர்வேற்கு, மதிதந்தவாரூரில்வார்தேனைவாய்மடுத்துப்பருகியுய்யும், விதியின்றிமதியிலியேன்விளக்கிருக்கமின்மினித்தீக்காய்ந்தவாறே. 7

மறித்தானோர்வல்லரக்கனீரைந்துமுடியினொடுதோளுந்தாளும், இறுத்தானையெழின்முளரித்தவிசின்மிசையிருந்தான்றன்றலையிலொன்றை, அறுத்தானையாரூரிலம்மானையாலாலமுண்டுகண்டங், கறுத்தானைக்கருதாதேகரும்பிருக்கவிரும்புகடித்தெய்த்தவாறே. 10

திருச்சிற்றம்பலம்.

---

பண்-சீகாமரம் ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

சூலப்படையானைச்சூழாகவீழருவிக்
கோலத்தோட்டுங்குமஞ்சேர்குன்றெட்டுடையானைப்

பாலொத்தமென்மொழியாள்பங்கனைப்பாங்காய
ஆலத்தின்கீழானைநான்கண்டதாரூரே. 1

தாங்கோலவெள்ளெலும்புபூண்டுதம்மேறேறிப்
பாங்கானவூர்க்கோலஞ்செல்லும்பரமனார்
தேங்காவிநாறுந்திருவாரூர்த்தொன்னகரில்
பூங்கோயிலுண்மகிழ்ந்துபோகாதிருந்தாரே. 5

போழொத்தவெண்மதியஞ்சூடிப்பொலிந்திலங்கு
வேழத்துரிபோர்த்தான்வெள்வளையாடன்வெருவ
ஊழித்தீயன்னானையோங்கொலிமாப்பூண்டதோர்
ஆழித்தேர்வித்தகனைநான்கண்டதாரூரே. 7

தாடவுடுக்கையன்றாமரைப்பூஞ்சேவடியன்
கோடலாவேடத்தன்கொண்டதோர்வீணையினான்
ஆடரவக்கிண்கிணிக்காலன்றானோர்சேடனை
ஆடுந்தீக்கூத்தனைநான்கண்டதாரூரே. 10

மஞ்சாடுகுன்றடரவூன்றிமணிவிரலால்
துஞ்சாப்போர்வாளரக்கன்றோணெரியக்கண்குருதிச்
செஞ்சாந்தணிவித்துத்தன்மார்பிற்பால்வெண்ணீற்
றஞ்சாந்தணிந்தானைநான்கண்டதாரூரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-சீகாமரம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காண்டலேகருத்தாநினைந்திருந்தேன்மனம்புகுந்தாய்கழலடி
பூண்டுகொண்டொழிந்தேன்புறம்போயினாலறையோ
ஈண்டுமாடங்கணீண்டமாளிகைமேலெழுகொடிவானிளம்மதி
தீண்டிவந்துலவுந்திருவாரூரம்மானே. 1

நாடினார்கமலம்மலரயனோடிரணியனுரங்கீண்டவன்
நாடிக்காணமாட்டாத்தழலாயநம்பானைப்
பாடுவார்பணிவார்பல்லாண்டிசைகூறுபத்தர்கள்சித்தத்துள்புக்குத்
தேடிக்கண்டுகொண்டேன்திருவாரூரம்மானே. 10

திருச்சிற்றம்பலம்.

திருவாதிரைத்திருப்பதிகம். பண்-குறிஞ்சி. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முத்துவிதானமணிப்பொற்கவரிமுறையாலே
பத்தர்களோடுபாவையர்சூழப்பலிப்பின்னே
வித்தகக்கோலவெண்டலைமாலைவிரதிகள்
அத்தனாரூராதிரைநாளாலதுவண்ணம். 1

நணியார்சேயார்நல்லார்தீயார்நாடோறும்
பிணிதான்றீருமென்றுபிறங்கிக்கிடப்பாரும்
மணியேபொன்னேமைந்தா மணாளாவென்பார்கட்
கணியானாரூராதிரைநாளாலதுவண்ணம். 2

பாரூர்பவ்வத்தானைப்பத்தர்பணிந்தேத்தச்
சீரூர்பாடலாடலறாதசெம்மாப்பார்ந்
தோரூரொழியாதுலகமெங்குமெடுத்தேத்தும்
ஆரூரன்றனாதிரைநாளாலதுவண்ணம் 10

திருச்சிற்றம்பலம்.

---

திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

படுகுழிப்பவ்வத்தன்னபண்டியைப்பெய்தவாற்றால்
கெடுவதிம்மனிதர்வாழ்க்கைகாண்டொறுங்கேதுகின்றேன்
முடுகுவரிருந்துளைவர்மூர்க்கரேவிவர்களோடும்
அடியனேன்வாழமாட்டேனாரூர்மூலட்டனீரே. 1

புழுப்பெய்தபண்டிதன்னைப்புறமொருதோலான்மூடி
ஒழுக்கறுவொன்பதுவாயொற்றுமையொன்றுமில்லை
சழக்குடையிதனுளைவர்சங்கடம்பலவுஞ்செய்ய
அழிப்பனாப்வாழமாட்டேனாரூர்மூலட்டனீரே. 2

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

நாகத்தைநங்கையஞ்சநங்கையைமஞ்ஞையென்று
வேகத்தைத்தவிரநாகம்வேழத்தினுரிவைபோர்த்துப்

பாகத்தினிமிர்தல்செய்யாத்திங்களைமின்னென்றஞ்சி
ஆகத்திற்கிடந்தநாகமடங்குமாரூரனார்க்கே. 2

திருச்சிற்றம்பலம்.

---

திருவிருத்தம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம்பாவருகுண்டர்முன்னேநமக்குண்டுகொல்லோ
அலம்பலம்பாவருதண்புனலாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாவருசேவடியான்றிருமூலட்டானம்
புலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. 1

கையிலிடுசோறுநின்றுண்ணுங்காதலமணரைவிட்
டுய்புநெறிகண்டிங்குய்யாப்போந்தேனுக்குமுண்டுகொலோ
ஐயனணிவயலாரூர்த்திருமூலட்டானனுக்குப்
பொய்யன்பிலாவடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. 9

குற்றமுடையவமணர்திறமதுகையகன்றிட்
டுற்றகருமஞ்செய்துய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
மற்பொலிதோளானிராவணன்வலிவாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தாண்டகம் சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

உயிராவணமிருந்துற்றுநோக்கியுள்ளக்கிழியினுருவெழுதி, உயிராவணஞ்செய்திட்டுன் கைத்தந்தா லுணரப் படுவாரோ டொட்டிவாழ்தி, அயிராவணமேறாதானேறேறியமரர்நாடாளாதேயாரூராண்ட, அயிராவணமேயென்னம்மானேநின்னருட்கண்ணானோக்காதாரல்லாதாரே. 1

கருவாகிக்குழம்பிருந்துகலித்துமூளைகருநரம்புமெவள்ளெலும்புஞ்சேர்ந்தொன்றாகி, உருவாகிப் புறப்பட்டிங்கொருத்திதன்னால்வளர்க்கப்பட்டுயிராருங்கடைபோகாரான், மருவாகிநின்னடியேமறவேனம்மான்மறித்தொருகாற்பிறப்புண்

டேன்மறவாவண்ணம், திருவாரூர்மணவாளா திருத்தெங்கூரா
ய்செம்பொனேகம்பனேதிகைத்திட்டேனே, 6

முன்னமவனுடையநாமங்கேட்டாண்மூர்த்தியவனிருக்
கும்வண்ணங்கேட்டாள், பின்னையவனுடையவாரூர்கேட்டாள்
பெயர்த்துமவனுக்கேபிச்சியானாள், அன்னையையுமத்தனையும
ன்றேநீத்தாளகன்றாளகலிடத்தாராசாரத்தைத், தன்னைமறந்
தாடன்னுமங்கெட்டாடலைப்பட்டாணங்கைதலைவன்றாளே. 7

ஆடுவாய்நீநட்டமளவிற்குன்றாவவியடுவாரருமறையோ
ரறிந்தேனுன்னைப், பாடுவார்தும்புருவுநாரதாதிபரவுவாரமரர்
களுமமரர்கோனுந், தேடுவார்திருமாலுநான்முகனுந்தீண்டி
வாண்மலைமகளுங்கங்கையாளுங், கூடுமேநாயடியேன்செய்குற்
றேவல்குறையுண்டேதிருவாரூர்குடிகொண்டீர்க்கே. 8

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

மெய்ப்பால்வெண்ணீறணிந்தமேனியானைவெண்பளிங்
கினுட்பதித்தசோதியானை, ஒப்பானையொப்பிலாவொருவன்
றன்னையுத்தமனைநித்திலத்தைபுலகமெல்லாம், வைப்பானைக்
களைவானைவருவிப்பானைவல்வினையேமனத்தகத்தேமன்னினா
னை, அப்பாலைக் கப்பாலைக்கப்பாலானையாரூரிற்கண்டடியேனய
யர்த்தவாறே. 4

திருச்சிற்றம்பலம்

---

திருச்சிற்றம்பலம்.

பொய்ம்மாயப்பெருங்கடலிற்புலம்பாநின்றபுண்ணிய
ங்காடீவினைகாடிருவேநீங்கள், இம்மாயப்பெருங்கடலையரித்து
த்தின்பீர்க்கில்லையேகிடந்ததுதானியானல்வானோர், தம்மா
னைத்தலை மகனைத்தண்ணலாரூர்த்தடங்கடலைத்தொடர்ந்தோ
ரையடங்கச்செய்யும்,எம்மான்றனடித்தொடர்வானுழிதர்கின்
றேனிடையிலேன்கெடுவீர்காளிடறேன்மின்னே. 1

திருச்சிற்றம்பலம்.

---

[library stamp]

திருச்சிற்றம்பலம்,

திருமணியைத்தித்திக்குந்தேனைப்பாலைத்தீங்கரும்பினின்சுவையைத்தெளிந்ததேறற்,குருமணியைக்குழன்மொந்தைதாளம்வீணைகொக்கரையின்சச்சரியின்பாணியானைப், பருமணியைப்பவளத்தைப்பசும்பொன்முத்தைப்பருப்பதத்திலருங்கலத்தைப்பாவந்தீர்க்கும், அருமணியையாரூரிலம்மான்றன்னையறியாதடிநாயேனயர்த்தவாறே. 1

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

இடர்கெடுமாறெண்ணுதியேனெஞ்சேநீ வாவீண்டொளிசேர் கங்கைச்சடையாயென்றுஞ், சுடரொளியாயுள்விளங்குசோதீயென்றுந்தூநீறுசேர்ந்திலங்குதோளாவென்றுங், கடல்விடமதுண்டிருண்டகண்டாவென்றுங்கலைமான்மறியேந்துகையாவென்றும், அடல்விடையாயாரமுதேயாதீயென்றுமாரூராவென்றென்றேயலறாநில்லே. 1.

நிலைபெறுமாறெண்ணுதியேனெஞ்சேநீவாநித்தலுமெம்பிரானுடையகோயில்புக்குப், புலர்வதன்முன்னலகிட்டுமெழுக்குமிட்டுப்பூமாலைபுனைந்தேத்திப்புகழ்ந்துபாடித், தலையாரக்கும்பிட்டுக்கூத்துமாடிச்சங் கராசயபோற்றி போற்றியென்றும், அலைபுனல்சேர்செஞ்சடையெம்மாதீயென்றுமாரூராவென்றென்றேயலறாநில்லே. 3

புண்ணியமுநன்னெறியுமாவதெல்லாநெஞ்சமேயிதுகண்டாய்பொருந்தக்கேணீ, நண்ணியவெண்ணூல்கிடந்தமார்பாவென்றுநந்தாதவொண்சுடரேயென்றுநாளும், விண்ணியங்குதேவர்களும்வேதநான்கும் விரைமலர்மேலுன்முகனுமாலுங்கூடி,எண்ணரியதிருநாமமுடையாயென்றுமெழிலாரூராவென்றேயேத்தாநில்லே. 4

பற்றிநின்றபாவங்கள்பாற்றவேண்டிற்பரகதிக்குச்செல்வதொருபரிசுவேண்டில், சுற்றிநின்றசூழ்வினைகள்வீழ்க்கவேண்டிற்சொல்லுகேன்கேணெஞ்சேதுஞ்சாவண்ணம், உற்றவருமுறுதுணையுநீயேயென்றுமுன்னையல்லாலொருதெய்வமுள்கேனென்றும், புற்றரவக்கச்சார்த்தபுனிதாவென்றும்பொழிலாரூராவென்றேபோற்றுநில்லே. 7

மதிதருவனெஞ்சமேயுஞ்சுபோகவழிபாவதிதுகண்டாய்வானோர்க்கெல்லாம், அதிபதியேயாரமுதேயாதியென்றுமம்மானேயாரூரெம்மையாவென்றும், துதிசெய்துதுன்றுமலர்கொண்டுதூவிச்சூழும்வலஞ்செய்துதொண்டுபாடிக், கதிர்மதிசேர்சென்னியனேகாலாகாலாகற்பகமேயென்றென்றேகதறுநில்லே. 8

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

சங்கரனேநின்பாதப்போற்றிபோற்றிசதாசிவனேநின்பாதம்போற்றிபோற்றி, பொங்கரவாநின்பாதம்போற்றிபோற்றிபுண்ணியனேநின்பாதம்போற்றிபோற்றி, அங்கமலத்தயனொடுமாலுங்காணாவனலுருவாநின்பாதம்போற்றிபோற்றி செங்கமலத்திருப்பாதம்போற்றிபோற்றிதிருமூலட்டானனேபோற்றிபோற்றி. 6

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

ஒருவனாயுலகேத்தநின்றநாளோவோருருவேமூவுருவமானநாளோ, கருவனாய்க்காலனைமுன்காய்ந்தநாளோகாமனையுங்கண்ணழலால்விழித்தநாளோ, மருவனாய்மண்ணும்விண்ணுந்தெரித்தநாளோமான்மறிக்கையேந்தியோர்மாதோர்பாகந், திருவினாள்சேர்வதற்குமுன்னோபின்னோதிருவாரூர்கோயிலாக்கொண்டநாளே. 1

பாடகஞ்சேர்மெல்லடிநற்பாவையாளுநீயும்போய்ப்பார்த்தனதுபலத்தைக்காண்பான், வேடனாய்வில்வாங்கியெய்த

நாளோவிண்ணவர்க்குங்கண்ணவனாய்நின்றநாளோ,மாடமோ
டுமாளிகைகண்மல்குதில்லைமணிதிகழுமம்பலத்தேமன்னிக்
கூத்தை, ஆடுவான்புகுவதற்குமுன்னோபின்னோ வணியாரூர்
கோயிலாக்கொண்டநாளே. 3

பாதத்தான்முயலகனைப்பாதுகாத்துப்பாரகத்தேபரஞ்
சுடராய்நின்றநாளோ, கீதத்தைமிகப்பாடுமடியார்க்கென்றுங்
கேடிலாவானுலகங்கொடுத்தநாளோ, பூதத்தான்பொருநீலிபு
னிதன்மேவிப் பொய்யுரையாமறைநால்வர் விண்ணோர்க்கென்
றும், வேதத்தைவிரிப்பதற்குமுன்னோபின்னோவிழவாரூர்கோ
யிலாக்கொண்டநாளே. 8

புகைவெட்டும்போக்கெட்டும்புலன்களெட்டும்பூதலங்க
ளவையெட்டும்பொழில்களெட்டும், கலையெட்டுங்காப்பெட்
டுங்காட்சியெட்டுங்கழற்சேவடியடைந்தார் களைகணெட்டும்,
நகையெட்டுநாளெட்டு நன்மையெட்டுநலஞ்சிறந்தார்மனத்தக
த்துமலர்களெட்டும், திசையெட்டுந்தெரிப்பதற்குமுன்னோபி
ன்னோதிருவாரூர்கோயிலாக்கொண்டநாளே. 9

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்- கொல்லி ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

குருகுபாயக்கொழுங்கரும்புகண்ணெரிந்தசா
றருகுபாயும்வயலந்தணாரூரரைப்
பருகுமாறும்பணிந்தேத்துமாறுந்நினைந்
துருகுமாறுமிவையுணர்த்தவல்லீர்களே. 1

பறக்குமெங்கிள்ளைகாள்பாடுமெம்பூவைகாள்
அறக்கணென்னத்தகுமடிகளாரூரரை
மறக்ககில்லாமையும்வளைகணில்லாமையும்
உறக்கமில்லாமையுமுணர்த்தவல்லீர்களே. 2

வண்டுகாள்கொண்டல்காள்வார்மணற்குருகுகாள்
அண்டவாணர்தொழுமடிகளாரூரரைக்

கண்டவாறுங்காமத்தீக்கனன்றெரிந்துமெய்
உண்டவாறும்மிவைபுணர்த்தவல்லீர்களே. 6

நித்தமாகநினைந்துள்ளமேத்தித்தொழும்
அத்தனம்பொற்கழலடிகளாரூரரைச்
சித்தம்வைத்தபுகழ்ச்சிங்கடியப்பன்மெய்ப்
பத்தனூரன்சொன்னபாடுமின்பத்தரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்தொண்டத்தொகை.

### பண்-கொல்லிக்கௌவாணம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்தம்மடியார்க்குமடியேன்றிருநீலகண்
டத்துக்குயவனார்க்கடியேன், இல்லையேயென்னாதவியற்பகைக்
குமடியேனிளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன், வெல்
லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன் விரிபொழில்சூழ்கு
ன்றையார்விறன்மிண்டற்கடியேன், அல்லிமென்முல்லையந்தா
ரமர்நீதிக்கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. 1

இலைமலிந்தவேனம்பியெறிபத்தர்க்கடியேனேனாதிநாதன்
றனடியார்க்குமடியேன், கலைமலிந்த சீர்நம்பிகண்ணப்பர்க்கடி
யேன் கடவூரிற்கலயன்றனடியார்க்குமடியேன், மலைமலிந்த
தோள்வள்ளன்மானக்கஞ்சாறனெஞ்சாதவாட்டாயனடியார்க்
குமடியேன், அலைமலிந்தபுனன்மங்கையானாயற்கடியேனாரூரனா
ரூரிலம்மானுக்காளே. 2

மும்மையாலுலகாண்டமூர்த்திக்குமடியேன்முருகனுக்
குமுருத்திரபசுபதிக்குமடியேன், செம்மையே திருநாளைப்
போவார்க்குமடியேன்றிருக்குறிப்புத்தொண்டர்தம்மடியார்க்
குமடியேன், மெய்ம்மையேதிருமேனிவழிபடாநிற்கவெகுண்
டெழுந்ததாதைதாண்மழுவினாலெறிந்த, அம்மையானடிச்ச
ண்டிப்பெருமானுக்கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. 3

திருநின்றசெம்மையேசெம்மையாக்கொண்டதிருநாவுக்
கரையன்றனடியார்க்குமடியேன், பெருநம்பிகுலச்சிறைதன்
னடியார்க்குமடியேன்பெருமிழலைக்குறும்பர்க்கும்பேயார்க்கு
மடியேன், ஒருநம்பியப்பூதியடியார்க்குமடியேனொலிபுனல்சூழ்
சாத்தமங்கைநீலநக்கற்கடியேன், அருநம்பிநமிநந்தியடியார்க்கு
மடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. 4

வம்பறுவரிவண்டுமணநாறமலருமதுமலர்நற்கொன்றை
யானடியலாற்பேணா, எம்பிரான்சம்பந்தனடியார்க்குமடியே
னேயர்கோன்கலிக்காமனடியார்க்குமடியேன், நம்பிரான்றி
ருமூலனடியார்க்குமடியேனாட்டமிகுதண்டிக்குமூர்க்கற்குமடி
யேன், அம்பரான்சோமாசிமாறனுக்குமடியேனாரூரனாரூரிலம்
மானுக்காளே. 5

வார்கொண்டவனமுலையாளுமைபங்கன்கழலேமறவாது
கல்லெறிந்தசாக்கியற்குமடியேன், சீர்கொண்டபுகழ்வள்ளல்
சிறப்புலிக்குமடியேன் செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்
டற்கடியேன், கார்கொண்டகொடைக்கழறிற்றறிவார்க்குமடி
யேன்கடற்காழிக்கணநாதனடியார்க்குமடியேன், ஆர்கொண்
டவேற்கூற்றன்களந்தைக்கோனடியேனாரூரனாரூரிலம்மானுக்
காளே. 6

பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்பொழிற்கரு
வூர்த்துஞ்சியபுகழ்ச்சோழற்கடியேன், மெய்யடியானரசிங்க
முனையரையற்கடியேன்விரிதிரைசூழ்கடனாகையதிபத்தற்கடி
யேன், கைதடிந்தவரிசிலையான்கலிக்கம்பன்கலியன்கழற்சத்
திவரிஞ்சையர்கோனடியார்க்குமடிபேன், ஐயடிகள்காடவர்
கோனடியார்க்குமடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. 7

கறைக்கண்டன்கழலடியேகாப்புக்கொண்டிருந்தகணம்
புல்லநம்பிக்குங்காரிக்குமடியேன், நிறைக்கொண்டசிந்தையா
னெல்வேலிவென்றநின்றசீர்நெடுமாறனடியார்க்குமடியேன்,
துறைக்கொண்டசெம்பவளமிருளகற்றுஞ்சோதித்தொன்ம

யிலைவாயிலானடியார்க்குமடியேன், அறைக்கொண்டவேனம்பிமுனையடுவார்க்கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. 8

கடல்சூழ்ந்தவுலகெலாங்காக்கின்றபெருமான்காடவர்கோன்கழற்சிங்கனடியார்க்குமடியேன், மடல்சூழ்ந்ததார்நம்பியிடங்கழிக்குந் தஞ்சைமன்னவனாஞ்செருத்துணை தன்னடியார்க்குமடியேன், புடைசூழ்ந்தபுலியதண்மேலரவாடவாடிபொன்னடிக்கேமனம்வைத்தபுகழ்த்துணைக்குமடியேன், அடல்சூழ்ந்தவேனம்பிகோட்புலிக்குமடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. 9

பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன்பரமனையே பாடுவாரடியார்க்குமடியேன், சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்க்குமடியேன் திருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்குமடியேன், முப்போதுந்திருமேனிதீண்டுவார்க்கடியேன்முழுநீறுபூசியமுனிவர்க்குமடியேன், அப்பாலுமடிச்சார்ந்தாரடியார்க்குமடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. 10

மன்னியசீர்மறைநாவனின்றவூர்ப்பூசல்வரிவளையாண்மானிக்குநேசனுக்குமடியேன், தென்னவனாயுலகாண்டசெங்கணார்க்கடியேன் திருநீலகண்டத்துப்பாணனார்க்கடியேன், என்னவனாமரனடியேயடைந்திட்டசடையனிசைஞானி காதலன் றிருநாவலூர்க்கோன், அன்னவனாமாரூரனடிமைகேட்டுவப்பாராரூரிலம்மானுக்கன்பராவாரே. 11

திருச்சிற்றம்பலம்

பண்-பழம்பஞ்சுரம். ௭-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

பத்திமையும்மடிமையையுங்கைவிடுவான்பாவியேன்
பொத்தினநோயதுவிதனைப்பொருளறிந்தேன்போய்த்தொழுவேன்
முத்தினைமாமணிதன்னைவயிரத்தைமூர்க்கனேன்
எத்தனைநாட்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. 1

ஏழிசையாயிசைப்பயனாயின்னமுதாயென்னுடைய
தோழனுமாயான்செய்யுந்துரிசுகளுக்குடனாகி

மாழையொண்கண்பரவையைத்தந்தாண்டானைமதியில்லா
ஏழையேன்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. 10

வங்கமலிகடனஞ்சைவானவர்கடாமுய்ய
நுங்கியமுதவர்க்கருளிநொய்யேனைப்பொருட்படுத்துச்
சங்கிலியோடெனைப்புணர்த்ததத்துவனைச்சழக்கனேன்
எங்குலக்கப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. 11

பேரூருமதகரியினுரியானைப்பெரியவர்தம்
சீரூருந்திருவாரூர்ச்சிவனடியேதிறம்விரும்பி
ஆரூரனடித்தொண்டனடியன்சொல்லகலிடத்தில்
ஊரூரனிவைவல்லாருலகவர்க்குமேலாரே. 12

திருச்சிற்றம்பலம்,

---

பண்-தக்கேசி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொன்னுமெய்ப்பொருளுந்தருவானைப்போகமுந்திருவும் புணர்ப்பானைப், பின்னையென்பிழையைப்பொறுப்பானைப்பிழையெலாந்தவிரப்பணிப்பானை, இன்னதன்மையனென்றறிவொண்ணாவெம்மானையெளிவந்தபிரானை, அன்னம்வைகும்வயற்பழனத்தணியாரூரானைமறக்கலுமாமே. 1

ஓட்டியாட்கொண்டுபோயொளித்திட்டவுச்சிப்போதனை நச்சரவார்த்த, பட்டியைப்பகலையிருடன்னைப்பாவிப்பார்மனத்தூறுமத்தேனைக், கட்டியைக் கரும்பின்றெளிதன்னைக் காதலாற்கடற்சூர்தடிந்திட்ட, செட்டியப்பனைப்பட்டனைச்செல்வவாரூரானைமறக்கலுமாமே. 10

ஓரூரென்றுலகங்களுக்கெல்லாமுரைக்கலாம்பொருளாயுடன்கூடிக், காரூருங்கமழ்கொன்றைநன்மாலைமுடியன்காரிகைகாரணமாக, ஆரூரைம்மறத்தற்கரியானையம்மான்றன்றிருப்பேர்கொண்டதொண்டன், ஆரூரனடிநாயுரைவல்லாரமரலோகத்திருப்பவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

பண்-காந்தாரம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கரையுங்கடலுமலையுங்காலையுமாலையுமெல்லாம்
உரையில்விரவிவருவானொருவனுருத்திரலோகன்
வரையின்மடமகள்கேள்வன்வானவர்தானவர்க்கெல்லாம்
அரையனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். 1

தனியனென்றெள்கியறியேன்றம்மைப்பெரிதுமுகப்பன்
முனிபவர்தம்மைமுனிவன்முகம்பலபேசிமொழியேன்
கனிகள்பலவுடைச்சோலைக்காய்க்குலையீன்றகமுகின்
இனியனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். 2

எந்தையிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோவென்று
சிந்தைசெயுந்திறம்வல்லான்றிருமருவுந்திரடோளன்
மந்தமுழவமியம்பும்வளவயனாவலாரூரன்
சந்தமிசையொடும்வல்லார்தாம்புகழெய்துவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-புறநீர்மை. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அந்தியுநண்பகலுமஞ்சுபதஞ்சொல்லி
முந்தியெழும்பழையவல்வினைமூடாமுன்
சிந்தைபராமரியாத்தென்றிருவாரூர்புக்
கெந்தைபிரானாரையென்றுகொலெய்துவதே. 1

நல்லநினைப்பொழியநாள்களிலாருயிரைக்
கொல்லநினைப்பனவுங்குற்றமுமற்றொழியச்
செல்வவயற்கழனித்தென்றிருவாரூர்புக்
கெல்லைமிதித்தடியேனென்றுகொலெய்துவதே. 4

மின்னெடுஞ்செஞ்சடையான்மேவியவாரூரை
நன்னெடுங்காதன்மையானாவலர்கோனூரன்
பன்னெடுஞ்சொன்மலர்கொண்டிட்டனபத்தும்வல்லார்
பொன்னுடைவிண்ணுலகநண்ணுவர்புண்ணியரே. 10

திருச்சிற்றம்பலம்.

பண்-செந்துருத்தி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகத்தான்மிகவாடி
ஆளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே. 1

விற்றுக்கொள்வீரொற்றியல்லேன்விரும்பியாட்பட்டேன்
குற்றமொன்றுஞ்செய்ததில்லைக்கொத்தையாக்கினீர்
எற்றுக்கடிகேளென்கண்கொண்டீர்நீரேபழிப்பட்டீர்
மற்றைக்கண்டான்றாராதொழிந்தால்வாழ்ந்துபோதீரே. 2

அன்றின்முட்டாதடையுஞ்சோலையாரூரகத்தீரே
கன்றுமுட்டியுண்ணச்சுரந்தகாலியவைபோல
என்றுமுட்டாப்பாடுமடியார்தங்கண்காணாது
குன்றின்முட்டிக்குழியில்வீழ்ந்தால்வாழ்ந்துபோதீரே. 3

காரூர்கண்டத்தெண்டோண்முக்கண்கலைகள்பலவாகி
ஆரூர்த்திருமூலட்டானத்தேயடிப்பேராரூரன்
பாரூரறியவென்கண்கொண்டீர்நீரேபழிப்பட்டீர்
வாரூர்முலையாள்பாகங்கொண்டீர்வாழ்ந்துபோதீரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருவாரூர்:**—இது திரு (இலக்ஷ்மி) பூசித்து வசிக்கும் தலமாதலின் இப்பெயரெய்தியது; பஞ்சபூதஸ்தலங்களுள் ப்ருதிவிஸ்தலமென்று கருதப்படுவது; பிறக்க முத்திதரும் தன்மையது; விராட்புருடனது மூலாதாரஸ்தலமெனப் போற்றுவது; ஸப்தவிடங்கக்ஷேத்ரங்களுள் முதன்மையானது; சோழமஹாராஜாக்களது ராஜதானியைந்தனுள் ஒன்றானது; தேவாரமுதலிய பதினொரு திருமுறைகளையும், பன்னிரண்டாந் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்தையும் முறையே வெளிப்படுத்தியும் ஆக்குவித்தும் செப்பேடுசெய்து ஸ்ரீ தியாகராஜப் பெருமான் சந்நிதியில் பிரதிஷ்டித்த அபயகுலசேகர சோழரும் அநபாய சோழரும் எழுந்தருளியிருந்தது; ஸ்ரீ வாகீசமூர்த்தி பால் திருவாதிரைச்சிறப்பைக் கேட்டு ஞானசம்பந்த மூர்த்திகள் தரிசித்துப் போற்றியது; திருநாவுக்கரசு நாயனார் இத்தலத்துள்ள

தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் கிடைக்கப் பெறுங்கொல் என்றுபாராட்டியது; சுந்தரமூர்த்திநாயனார் ஸ்ரீ நடராஜப் பெருமானாரது "ஆரூரில் வருகநம்பால்" எனும் ஆணைப்படி வந்து சிவாக்ஞையால் முன்னரே அங்கு திருவவதாரஞ் செய்திருந்த பரவையாரை விவாகம் செய்துகொண்டு மணக்கோலத்தோடும் வீற்றிருந்தும், தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளியிருந்த திருத்தொண்டரை வணங்காது சென்றபோது விறன்மிண்ட நாயனார் இவனும் இவனையாட்கொண்ட பரமசிவனும் புறகு என்றதைக்கேட்டுப் பரமசிவனிடம் விண்ணப்பித்து அவர் அடியெடுத்துக் கொடுக்கப்பெற்றுத் திருத்தொண்டத்தொகைபாடியும், தமக்கு விருத்தாசலத்தில் கொடுத்து மணிமுத்தாநதியில் இட்டபொன்னைக் கமலாலயத்தில் எடுத்தும், திருவொற்றியூரில் சங்கிலியாரை விவாகஞ் செய்துகொண்டு செய்தசபதம் வழுவினமையின் இழந்தகண்களுள் வலக்கண்ணைப் பெற்றும், தம்பொருட்டுப் பரமசிவன் பரவையார்பால் தூது செல்லப்பெற்றும், திருவஞ்சைக்களத்தினின்றும் எழுந்தருளிய சேரமான்பெருமாணாயனாரைத் தோழமைகொண்டும் வீற்றிருந் தருளியது; விறன்மிண்ட நாயனார் சிவனடியார் பத்திசெய்தும், நமிநந்தியடிகள் திருவிளக்கிட்டும், தண்டியடிகள்நாயனார் கமலாலயத்தை ஜீர்ணோத்தாரணஞ்செய்தும், கழற்சிங்கநாயனார் பரமசிவனுக்குச் சாத்தும்பூவை எடுத்த தமது மனைவியாரது கையைத்தடிந்தும், செருத்துணைநாயனார் பூவைஎடுத்துமோந்த கழற்சிங்கரது பத்னியாரது மூக்கினைக்கொய்தும் முத்தியடைந்தருளியது.

இங்கு முசுகுந்தச் சக்ரவர்த்தி இந்திரனது சத்ருக்களை வென்று அவன்பால் ஸ்ரீ நாராயணமூர்த்தி பூசித்துப் போற்றிய ஆத்மார்த்தமூர்த்தியைப் பெற்றுவந்து பிரதிட்டித்த மூர்த்தியே தியாகராஜாவெனப் படுவர். மநுநீதிசோழர் பசுவின் கன்றினைக் கொன்றனென்று தம் மகனைத் தேர்க்காலிற்கிடத்தி யூர்ந்து வீதிவிடங்கப்பெருமான் திருவருளால் மீண்டும்அருளப்பெற்றனர். இந்தத்தலம், திருக்கோயில், திருக்குளம், செங்கழுநீரோடை ஒவ்வொன்றும் ஐந்தைந்துவேலியளவுள்ளதாம். இத்தலத்து ஆலயம் திருமூலட்டானம் எனவும் பூங்கோயில் எனவும் வழங்கும். ஸ்வாமி-வன்மீகநாதர், தேவியார்-அல்லியங்கோதையம்மை, கமலாம்பாள் சந்நிதி வேறு வடக்குப் பிராகாரத்தில் உள்ளது. தீர்த்தம்-கமலாலயம். தியாகர் வீதிவிடங்கர், நடனம்-அசபாநடனம். இதற்குப் பதிகம்-34.

இத்தலம் திருவாரூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே கற்சாலையில் ஒருமைலில் உள்ளது.

## ௮௮. திருவாரூரறநெறி.

### திருநாவுக்கரசு நாயனர்.

பண்-இந்தளம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எத்தீபுகினுமெமக்கொருதீதிலை
தெத்தேயெனமுரன்றெம்முளுழிதர்வர்
முத்தீயனையதோர்மூவிலைவேல்பிடித்
தத்தீநிறத்தாராரநெறியாரே. 1

வீரமும்பூண்பர்விசயனொடாயதோர்
தாரமும்பூண்பர்தமக்கன்புபட்டவர்
பாரமும்பூண்பர்நற்பைங்கண்மிளிரா
வாரமும்பூண்பாரநெறியாரே. 2

விழித்தனர்காமனைவீழ்தரவிண்ணின்
றிழித்தனர்கங்கையையேத்தினர்பாவம்
கழித்தனர்கல்சூழ்கடியரண்மூன்றும்
அழித்தனராரூரநெறியாரே. 4

பொருண்மன்னனைப்பற்றிப்புட்பகங்கொண்ட
மருண்மன்னனையெற்றிவாளுடனீந்து
கருண்மன்னுகண்டங்கறுக்கநஞ்சுண்ட
அருண்மன்னராரூரநெறியாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருத்தாண்டகம் ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

பொருங்கைமதகரியுரிவைப்போர்வையானைப்பூவணமும் வலஞ்சுழியும்பொருந்தினானைக், கரும்புதருகட்டியையின்னமிர்தைத்தேனைக்காண்பரியசெழுஞ்சுடரைக் கனகக்குன்றை, இருங்கனகமதிலாரூர்மூலட்டானத்தெழுந்தருளியிருந்தானையிமையோரேத்தும், அருந்தவனையாரநெறியிலப்பன்றன்னையடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. 1

நந்திபணிகொண்டருளுநம்பன்றன்னைநாகேச்சரமிடமா நண்ணினானைச், சந்திமலரிட்டணிந்துவானோரேத்துந்தத்துவனைச்சக்கரமாற்கீந்தான்றன்னை, இந்துநுழைபொழிலாரூர்மூலட்டானமிடங்கொண்டபெருமானை யிமையோர்போற்றும், அந்தணனையாரெறியிலப்பன்றன்னை யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. 4

திருச்சிற்றம்பலம்.

---

திருவாரூராநெறி:— இது திவாரூர்ப்பூங்கோயிலுள் உளதாதலின் இப்பெயரெய்தியது; இங்குதிருவாரூருக்குச்சமீபத்திலுள்ளஏமப்பேறூரில் வைதிகப்பிராமண குலத்தில் திருவவதாரஞ்செய்தநமிநந்தியடிகணாயனார் திருவாரூரையடைந்து அரநெறியை வணங்கும்போது அந்திப்போதாய்த் திருவிளக்குத்திருப்பணி செய்யவேண்டுமென்னுங்கருத்துத்தோன்றுதலினால் நெய்யின்பொருட்டு அமணர்வீடென்று அறியாது கேட்டு அவர் கையின் மழுவுள்ளசிவனுக்கு விளக்குமிகையென்ன விழித்துரைக்கக்கேட்டு வருந்திப் பரமசிவனது அசரீரித்திருவாக்கின்படிக் கமலாலய நீரைமுகந்து கொணர்ந்து இரவுமுழுதும் திருப்பணிசெய்தும்,சோழராஜாவினால் பங்குனி உத்திரத்திருநாளைச்சிறப்புறச்செய்வித்தும், வீதிவிடங்கப்பெருமான் திருமணலிக்கெழுந்தருளியபோது சேவித்துத் தம்வீடடைந்து பலரும் தீண்டலின் விழுப்பென்று ஆன்மார்த்த பூஜைமுதலிய செய்ய ஸ்நாநத்தின் பொருட்டு நீர்கொணர மனைவியாருக்குச்சொல்லிப் புறத்தே இருந்தபோது திருவருளினால் நித்திரையெய்திக்கனவிலே 'திருவாரூரிலேஉள்ளவர் யாவரும் சிவகணநாதராவார்'என உணர்த்தப்பெற்று அஞ்சிவிழித்து அதனை மனைவியாருக்கும் உணர்த்தி பூஜைமுடித்து வைகறையில் திருவாரூரையடைந்து யாவரையும் சிவசாரூப்பராகத்தரிசித்தும் நெடுநாட்டிருப்பணி செய்தும் திருவடியடைந்தார். இவரை ஸ்ரீ வாகீஶமூர்த்திகள் "தொண்டர்க்கு ஆணி" என்றும் இவரது தொண்டை "நீராற்றிருவிளக்கிட்டமை நீணாடறியுமன்றே" என்றும் "பங்குனியுத்திரம் பாற்படுத்தான்" என்றும் தமது திருப்பதிகத்திற் சிறப்பிக்கின்றனர்.-சுவாமி அகிலேசர், தேவியார்-அகிலேசுவரி, இதற்குப்பதிகம்.2

இத்தலம் திருவாரூர் ஆலயத்தின் இரண்டாம் ஆவரணத்தில் தென்கிழ்த்திசையில் மேற்குமுகமாய் அமைந்துள்ளது.

# அசு. திருவாரூர்ப் பரவையுண் மண்டளி.

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-பஞ்சமம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தூவாயாதொண்டுசெய்வார்படுதுக்கங்கள்
காவாயேகண்டுகொண்டாரைவர்காக்கிலும்
நாவாயாலுன்னையேநல்லனசொல்லுவேற்
காவாவென்பரவையுண்மண்டளியம்மானே. 1

பொன்னானேபுலவர்க்குநின்புகழ்போற்றலாம்
தன்னானேதன்னைப்புகழ்ந்திடுந்தற்சோதி
மின்னானேசெக்கர்வானத்திளஞாயி
றன்னானேபரவையுண்மண்டளியம்மானே. 2

கரந்தையும்வன்னியுமத்தமுங்கூவிளம்
பரந்தசீர்ப்பரவையுண்மண்டளியம்மானை
நிரம்பியவூரனுரைத்தனபத்திவை
விரும்புவார்மேலையார்மேலையார்மேலாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி:—இது துலாநாயனார் கோயில் என்று வழங்கப்பெறும் ஓர்கால் மிக் கெழுந்துவந்த கடலையுண்டு நிலைபெற்றகாரணத்தால் இப்பெயரெய்தியது. தூவாய் நாயனார் துலாநாயனார் எனமருவியது. பதிகத்துக்காண்க. தூர்வாச முனிவர் பூசித்துப் பேறுபெற்ற தலம். இவர் திருவுருவம் ஆலயத் துக் கணபதியருகிற் பிரதிஷ்டித்திருப்பது காணப்பெறும். சுவாமி-மண்டலேசுரர். தேவியார்-பஞ்சின்மெல்லடியாள். இதற்குப்பதிகம்-1

இத்தலம் திருவாரூர்க் கீழவீதியில் அமைந்துள்ளது.

## ௯௰. திருவிளமர்.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

திருவிராகம். பண்-சாதாரி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மத்தகமணிபெறமலர்வதோர்மதிபுரைநுதல்கரம்
ஒத்தகநகமணிமிளிர்வதொரரவினொளிகிளர்
அத்தகவடிதொழவருள்பெறுகணனொடுமுமையவள்
வித்தகருறைவதுவிரிபொழில்வளநகர்விளமரே. 1

பட்டிலகியமுலையரிவையருலகினிலிடுபலி
ஒட்டிலகிணைமரவடியினருமையுறுவடிவினர்
சிட்டிலகழகியபொடியினர்விடைமிசைசேர்வதோர்
விட்டிலகழகொளிபெயரவருறைவதுவிளமரே. 2

வெந்தவெண்பொடியணியடிகளைவிளமருள்விகிர்தரைச்
சிந்தையுளிடைபெறவுரைசெய்ததமிழிவைசெழுவிய
அந்தணர்புகலியுளழகமருமறைஞானசம்
பந்தனமொழியிவையுரைசெயுமவர்வினைபறையுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவிளமர்:—இது திருமயிலாடுதுறைக்குச்சமீபத்திலுள்ள திருவிளநகரோடு மயங்கப்பாலதன்று. பதஞ்சலி மஹா முனிவர் பூசித்து வழிபட்ட தலம். சுவாமி-பதஞ்சலிமனோஹரர், தேவியார்-யாழினுமென்மொழியாள், தீர்த்தம்-அக்கினிதீர்த்தம். இதற்குப்பதிகம்-I.

இத்தலம் திருவாரூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே மட்சாலையில் ஒன்றரைமைலில் ஆற்றின் தென்கரையில் உள்ளது.

---

## ௯௧. திருக்கரவீரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-பழந்தக்கராகம். ௧-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

அரியுநம்வினையுள்ளனவாசற
வரிகொண்மாமணிபோற்கண்டம்

கரியவன்றிகழுங்கரவீரத்தெம்
பெரியவன்கழல்பேணவே. 1

தங்குமோவினைதாழ்சடைமேலவன்
திங்களோடுடன்சூடிய
கங்கையான்றிகழுங்கரவீரத்தெம்
சங்கரன்கழல்சாரவே. 2

வீடிலான்விளங்குங்கரவீரத்தெம்
சேடன்மேற்கசிவாற்றமிழ்
நாடிஞானசம்பந்தனசொல்லிவை
பாடுவார்க்கில்லைபாவமே. 11

திருச்சிற்றம்பலம்

---

திருக்கரவீரம்:—இது கரம் (கழுதை) பூசித்தகாரணத்தால் இப்பெயரெய்தியதென்ப; கரையபுரம் என்றும் வழங்கும். கௌதமர் பூசித்ததலம். சுவாமி-கரவீரநாதர், தேவியார்-பிரத்யக்ஷமின்னம்மை. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் குழிக்கரை ஸ்டேஷனிலிருந்து வடக்கே மட்சாலையில் ஆற்றைப் பரிசிலாற்கடந்து நான்குமைலில் திருக்கண்ண மங்கையை யடைந்து அங்கிருந்து மேற்கே ஒருமைலில் உள்ளது.

---

## ௯௨. திருப்பெருவேளூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அண்ணாவுங்கழுக்குன்றுமாயமலையவைவாழ்வார்
விண்ணோருமண்ணோரும்வியந்தேத்தவருள்செய்வார்
கண்ணாவாருலகுக்குக்கருத்தானார்புரமெரித்த
பெண்ணாணும்பெருமானார்பெருவேளூர்பிரியாரே. 1

கருமானினுரியுடையர்கரிகாடரிமவானார்
மருமானாரிவரென்றுமடவாளோடுடனாவர்

பொருமானவிடையூர்வதுடையார்வெண்பொடிப்பூசும்
பெருமானார்பிஞ்ஞகனார்பெருவேளூர்பிரியாரே. 2

பைம்பொன்சீர்மணிவாரிப்பலவுஞ்சேர்கனியுந்தி
அம்பொன்செய்மடவாலரணிமல்குபெருவேளூர்
நம்பன்றன்கழல்பாவிநவில்கின்றமறைஞான
சம்பந்தன்றமிழ்வல்லார்க்கருவினைநோய்சாராவே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மறையணிநாவினானைமறப்பிலார்மனத்துளானைக்
கறையணிகண்டன்றன்னைக்கனலெரியாடினானைப்
பிறையணிசடையினானைப்பெருவேளூர்பேணினானை
நறையணிமலர்கடூவிநாடொறும்வணங்குவேனே. 1

குறவிதோண்மணந்தசெல்வக்குமரவேடாதையென்றும்
நறவிளநறுமென்கூந்தனங்கையோர்பாகத்தானைப்
பிறவியைமாற்றுவானைப்பெருவேளூர்பேணினானை
உறவினல்வல்லனாகியுணருமாறுணர்த்துவேனே. 3

விரிவிலாவறிவினார்கள்வேறொருசமயஞ்செய்து
எரிவினாற்சொன்னாரேனுமெம்பிராற்கேற்றதாகும்
பரிவினாற்பெரியோரேத்தும்பெருவேளூர்பற்றினானை
மருவிநான்வாழ்த்தியுய்யும்வகையதுநினைக்கின்றேனே. 9

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பெருவேளூர் :— இது காட்டூர் ஐயன்பேட்டை என்று வழங்கும். ஸ்வாமியின் திருநாமம் திருஞானசம்பந்தர் திருப்பதிகத்தில் "பிரியார்" எனவும், ஸ்ரீ வாகீசர் திருப்பதிகத்தில் "பேணினன்" எனவும் திருப்பாட்டுதோறும் காணப்பெறும். சுவாமி-பிரியாதநாதர், தேவியார்-ஏலவார்குழலி. இதற்குப் பதிகம்-2.

இத்தலம் (91) திருக்கரவீரத்தினின்றும் வடமேற்கே மட்சாலையில் ஒன்றரை மைலில் உள்ளது.

## கூரு. திருத்தலையாலங்காடு.

திருநாவுக்கரசு நாயனார்.

பண்-திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

சிவனாகித் திசைமுகனாய்த் திருமாலாகிச் செழுஞ்சுடரா யத்தீயாகிநீருமாகிப், புவனாகிப்புவனங்களனைத்துமாகிப்பொ ன்னாகிமணியாகிமுத்துமாகிப், பவனாகிப்பவனங்களனைத்து மாகிப்பசுவேறித்திரிவானோர்பவனாய்நின்ற, தவனாயதலையா லங்காடன்றன்னைச்சாராதேசாலநாள்போக்கினேனே. 4

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தலையாலங்காடு:—இது சிவபெருமான் தாருகாவன வாசிகள் ஏவிய முயலகன்மீது நடித்தருளிய தலம். சுவாமிபெயரை யும் உற்று நோக்குக. கபிலர் பூசித்துப் பேறு பெற்றது. சுவாமி-ஆட வல்லவாதர், தேவியார்-திருமடந்தை, இதற்குப் பதிகம்-1.

இத்தலம் (92) திருப்பெருவேளூரினின்றும் மேற்கே மட்சா லையில் இரண்டு மைலில் உள்ளது.

---

## கூசு. திருக்குடவாயில்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

திகழுந்திருமாலொடுநான்முகனும்
புகழும்பெருமானடியார்புகல
மகிழும்பெருமான்குடவாயின்மன்னி
நிகழும்பெருங்கோயினிலாயவனே. 1

ஓடுந்நதியும்மதியோடுரகம்
சூடுஞ்சடையன்விடைதொல்கொடிமேல்
கூடுங்குழகன்குடவாயிதனில்
நீடும்பெருங்கோயினிலாயவனே. 2

கடுவாய்மலி நீர்குடவாயிறனில்
நெடுமாபெருங் கோயினிலாயவனைத்
தடமார்புகலித்தமிழார்விரகன்
வடமார்தமிழ்வல்லவர்நல்லவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்குடவாயில் :—இது சிவபெருமான் தம்மைப் பூசித்த திருணபிந்துமுனிவருக்குக் குடத்தின் வாயில் வெளிப்பட்டுக்குட்ட நோய்தீர்த்து அநுக்கிரஹித்த காரணத்தால் இப்பெயரெய்தியது; கருடன் பூசித்து அமுதங்கொணர்ந்து தானும்தன்தாயும் சாபம்நீங்கப் பெற்ற தலம். மதிள் மண்டபமுதலிய வற்றின்மீது கருடன் வீற்றிருப்பது காணத்தக்கது. மாடக்கோயில்களுள் ஒன்று. சுவாமி கோணேசுவரர், தேவியார்-பெரியநாயகி. இதற்குப் பதிகம்-2.

இத்தலம் கொரடாச்சேரிஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலையில் நலரைமைலிலுள்ள செல்லூரினின்றும் மீண்டும் வடக்கே கற்சாலையில் மூன்றரை மைலில் உள்ளது.

---

## கூரு திருச்சேறை

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

திருவிராகம்-பண்-சாதாரி, ந- ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முறியுறுநிறமல்குமுகிழ்முலைமலைமகள்வெருவமுன்
வெறியுறுமதகரியதள்படவுரிசெய்தவிறலினர்
நறியுறுமிதழியின்மலரொடுநதிமதிநகுதலை
செறியுறுசடைமுடியடிகடம்வளநகர்சேறையே. 1

புனமுடைநறுமலர்பலகொடுதொழுவதொர்புரிவினர்
மனமுடையடியவர்படுதுயர்களைவதொர்வாய்மையர்
இனமுடைமணியினொடரசிலையொளிபெறமிளிர்வதோர்
சினமுதிர்விடையுடையடிகடம்வளநகர்சேறையே. 2

கற்றநன்மறைபயிலடியவரடிதொழுகவினுறு
சிற்றிடையவளொடுமிடமெனவுறைவதோர்சேறைமேல்

குற்றமில்புகலியுளிகலறுஞானசம்பந்தன
சொற்றகவுறமொழிபவாழிவிலர்துயர்தீருமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

திருநேரிசை. ச-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பெருந்திருவிமவான்பெற்றபெண்கொடிபிரிந்தபின்னை
வருந்துவான்றவங்கள்செய்யமாமணம்புணர்ந்துமன்னும்
அருந்திருமேனிதன்பாலங்கொருபாகமாகத்
திருந்திடவைத்தார்சேறைச்செந்நெறிச்செல்வனாரே. 1

விரித்தபல்கதிர்கொள்சூலம்வெடிபடுதமருகங்கை
தரித்ததோர்கோலகாலபைரவனாகிவேழம்
உரித்துமையஞ்சக்கண்டுவொண்டிருமணிவாய்விள்ளச்
சிரித்தருள்செய்தார்சேறைச்செந்நெறிச்செல்வனாரே. 6

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சேறை:— இது உடையார்கோயில் என வழங்குகிறது; தௌமியருஷி பூசித்தது. சுவாமி-செந்நெறியப்பர், தேவியார்-ஞானவல்லி. இதற்குப் பதிகம்-3.

இத்தலம் (94) திருக்குடவாயிலிலிருந்து வடக்கே கற்சாலையில் 2-மைலில் (96-1) திருநாலூரையும் இதினின்று வடகிழக்கே ஒரு மைலில் கரை மார்க்கத்தில் (96-2) திருநாலூர் மயானத்தையும் கடந்து வடமேற்கே சற்சாலையில் ஒரு மைலில் உள்ளது. கும்பகோணம் பாதையிலுள்ள (65) நறையூர்ச்சித்தீச்சரத்துக்குத் தென்கிழக்கு 3மைல்.

---

# கூசு· திருநாலூர்த் திருமயானம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-சீகாமரம் உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாலூருமலைப்பாம்பும்பனிமதியுமத்தமும்
மேலூருஞ்செஞ்சடையான்வெண்ணூல்சேர்மார்பினன்

நாலூர்மயானத்துநம்பான்றனடிநினைந்து
மாலூருஞ்சிந்தையர்பால்வந்தூராமறுபிறப்பே. 1

சூடும்பிறைச்சென்னிச்சூழ்காடிடமாக
ஆடும்பறைசங்கொலியோடழகாக
நாடுஞ்சிறப்போவாநாலூர்மயானத்தைப்
பாடுஞ்சிறப்போர்பாற்பற்றுவாம்பாவமே. 2

ஞாலம்புகழ்காழிஞானசம்பந்தன்றான்
நாலுமறையோதுநாலூர்மயானத்தைச்
சீலம்புகழாற்சிறந்தேத்தவல்லாருக்
கேலும்புகழ்வானத்தின்பாயிருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருநாலூர் மயானம்:—இது நாலூர், நாலூர் மயானம் என இரண்டு தலமாக இருக்கின்றது. நாலூர் மாடக்கோயில். மயானம் ஆபஸ்தம்பருஷி பூசித்தது. "பாலூரு மலைப்பாம்பும் பனிமதியுமத்தமும் மேலூருஞ் செஞ்சடையான்" என்று பதிகத்தோதியதற்கேற்ப பெரும்பாம் பொன்று அடிக்கடி சுவாமிசிரசில் ஊருவதைக்காணப்பெறுமென்று நகரவாசிகள் கூறுப. சுவாமி-பலாசவனநாதர்; தேவியார்-பெரியநாயகி. இதற்குப் பதிகம்-1.

இத்தலத்திற்குப் பாதை (95) திருச்சேறைக்குச்சொல்லி யிருப்பதிற் காண்க.

---

## கஎ. திருக்கடிவாய்க் கரைப்புத்தூர்.

### திருநாவுக்கரசுநாயனர்.

திருக்குறுந்தொகை. ரு-ம் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஒருத்தனைமூவுலகொடுதேவர்க்கும்
அருத்தனையடியேன்மனத்துள்ளமர்
கருத்தனைக்கடிவாய்ப்புனலாடிய
திருத்தனைப்புத்தூர்ச்சென்றுகண்டுய்ந்தனே. 1

யாவருமறிதற்கரியான்றனை
மூவரின்முதலாகியமூர்த்தியை
நாவினல்லுரையாகியநாதனைத்
தேவனைப்புத்தூர்ச்சென்றுகண்டுய்ந்தெனே. 2

அரக்கனாற்றலழித்தவன்பாடல்கேட்
டிரக்கமாகியருள்புரியீசனைத்
திரைக்கொணீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
இருக்குநாதனைக்காணப்பெற்றுய்ந்தெனே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்:— இது கடுவாய்நதிக்கரையிலுள்ளபுத்தூர்,என்று பொருள்படும்; தற்காலம் 'ஆண்டார் கோயில்' என்றும், 'ஆண்டாங்கோயில்' என்றும்வழங்கும்;காசிபர் பூசித்ததலம். சுவாமி-ஸ்வர்ணபுரீசர். தேவியார்-ஸ்வர்ணபுரீசுவரி. இதற்குப்பதிகம்-1

இத்தலம் கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து தெற்கே நீடாமங்கலம் கற்சாலையில் 2மைலில் சாக்கோட்டையையும், இதனின்று தெற்கே ஒருமைலில் திருக்கருக்குடியையும், இதனின்று தெற்கே 2-மைலில் வலங்கைமானையும் கடந்து கிழக்கே குடவாயில் மட்சாலையில் ஒன்றரைமைலில் உள்ளது. கொரடாச்சேரி மார்க்கத்திலுள்ள குடவாயிலிலிருந்து மேற்கே மட்சாலையில் மூன்றரைமைல்.

---

## ௬௮. திருவிரும்பூளை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

விறுவுரை. பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சீரார்கழலேதொழுவீரிதுசெப்பீர்
வாரார்முலைமங்கையொடும்முடனாகி
ஏரார்இரும்பூளையிடங்கொண்டவீசன்
காரார்கடனஞ்சமுதுண்டகருத்தே. 1

தொழலார்கழலேதொழுதொண்டர்கள்சொல்லீர்
குழலார்மொழிக்கோல்வளையோடுடனாகி

எழிலாரிரும்பூளையிடங்கொண்டவீசன்
கழலுன்கரிகானிடையாடுகருத்தே. 2

எந்தையிரும்பூளையிடங்கொண்டவீசன்
சந்தம்பயில்சண்பையுண்ஞானசம்பந்தன்
செந்தண்டமிழ்செப்பியபத்திவைவல்லார்
பந்தம்மறுத்தோங்குவர்பான்மையினாலே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவிரும்பூளை:—இது "பூளை" என்னும் செடி ஸ்தலவிருக்ஷமாதலின் இப்பெயரெய்தியது; "பூளைவனம்" என்றும் வழங்கும். விசுவாமித்திர மஹருஷி பூசித்ததலம். சுவாமி-காசியாரணியர், தேவியார்-உமையம்மை விருக்ஷம்-பூளை. இதற்குப்பதிகம் 1.

இத்தலம் நீடாமங்கலம் ஸ்டேஷனிலிருந்து வடக்கே கும்பகோணம் கற்சாலையில் 4 மைலில் உள்ளது.

---

# ௬௬. திருவரதைப்பெரும்பாழி.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-கொல்லி ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பைத்தபாம்போடரைக்கோவணம்பாய்புலி
மொய்த்தபேய்கண் முழக்கமுதுகாட்டிடை
நித்தமாகந்நடமாடிவெண்ணீறணி
பித்தர்கோயில்லரதைப்பெரும்பாழியே. 1

கயலசேலகருங்கண்ணியர்நாடொறும்
பயலைகொள்ளப்பலிதேர்ந்துழல்பான்மையார்
இயலைவானோர்நினைந்தோர்களுக்கெண்ணரும்
பெயரார்கோயில்லரதைப்பெரும்பாழியே. 2

நீரினார்புன்சடைநிமலனுக்கிடமெனப்
பாரினார்பரவரதைப்பெரும்பாழியைச்
சீரினார்காழியுண் ஞானசம்பந்தன்செய்
ஏரினார்தமிழ்வல்லார்க்கில்லைபாம்பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

திருவரதைப்பெரும்பாழி:—இது அரித்வாரமங்கலம் என்று வழங்கப்பெறும்; வராக அவதாரத்தில் விஷ்ணுமூர்த்தி பூசித்த தலமென்றும், அவ்வராகத்தின் கொம்பைப்பரமசிவன் பறித்தணிந்த தலமென்றும் கூறுப. சுவாமி சந்நிதானத்தில் வராகம் பறித்த பிலமுள்ளதாகவும் அறியப்படுகிறது. ஊர்ப்பெயர்களும் இதனை வற்புறுத்தும். இதனைச் சமீவநம் என்றும் வழங்குவர். சுவாமி-பாதாளவரதர், தேவியார்-அலங்காரவம்மை, தீர்த்தம்-பிரம்மதீர்த்தம், விருக்ஷம்-வன்னி. இதற்குப் பதிகம்-1

இத்தலம் சாலியமங்கலம் ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலையில் இரண்டரை மைலில் களஞ்சேரிப்பாலத்தை யடைந்து விண்ணாற்றைக்கடந்து வடகரையில் கிழக்கே மட்சாலையில் நான்கு மைலில் (100) திருவவளிவணல்லூரினின்றும் கிழக்கே ஒருமைலில் உள்ளது.

## க௦௦. திருவவளிவணல்லூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

திருவிராகம். பண்-சாதாரி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொம்பிரியவண்டுலவுகொன்றைபுரிநூலொடுகுலாவித்
தம்பரிசினோடுசுடுநீறுதடவந்திடபமேறிக்
கம்பரியசெம்பொனெடுமாடமதில்கல்வரைவிலாக
அம்பெரியவெய்தபெருமானுறைவதவளிவணலூரே. 1

ஓமையனகள்ளியனவாகையனகூகைமுரலோசை
ஈமமெரிசூழ்சுடலைவாசமுதுகாடுநடமாடித்
தூய்மையுடையக்கொடரவம்விரவிமிக்கொளிதுளங்க
ஆமையொடுபூணுமடிகளுறைவதவளிவணலூரே. 2

ஆனமொழியானதிறலோர்பரவுமவளிவணலூர்மேல்
போனமொழிநன்மொழிகளாயபுகழ்தோணிபுரவூரன்
ஞானமொழிமாலைபலநாடுபுகழ்ஞானசம்பந்தன்
தேனமொழிமாலைபுகழ்வார்துயர்களுபதிலர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுநாயனார்.

### திருநேரிசை. ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஊக்கினான்மலையையோடியுணர்விலாவரக்கன்றன்னைத்
தாக்கினான்விரலினாலேதலைபத்துந்தகரவூன்றி
நோக்கினானஞ்சத்தன்னைநோன்பிறவூன்றுசொல்லி
ஆக்கினாரமுதமாகவவளிவணல்லூராரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவவளிவணல்லூர்:—இது இங்கு தம்மைப் பூசிக்கும் ஆதிசைவரது மூத்தகுமாரத்தியை விவாஹஞ்செய்து கொடுக்கப் பெற்றவர் தீர்த்த யாத்திரைபோய்த் திரும்புங்காலையில் தம் மனைவி வைசூரியினால் உருமாறி நிறம்மாறிக் கண்ணிழந்திருப்பவும், அவளுக்கு இளையாளும் பின்னர் விவாஹஞ்செய்து வயதடைந்திருக்கவும் கண்டு பின்னவளே தம்மனையாளெனவும் முன்னவளைத் தம்மனைவியென்று ஏமாற்றுகின்றனரெனவும் வழக்கிட்டகாலையில் சுவாமி இடபாரூடராய்த்தோன்றி சாக்ஷிபகன்று நீ விவாஹஞ்செய்த அவள் இவள் எனக் காட்டியகாரணத்தால் இப்பெயரெய்தியதென்ப. சுவாமியும் சாக்ஷிநாதர் ஆயினார். சுவாமி அப்பெண்ணைத் தீர்த்தத்தில் மூழ்கச்செய்து கண் சரீரவனப்பு முதலியவை கொடுத்து அநுக்கிரஹித்தனர். மூலஸ்தானத்தில் இலிங்கமூர்த்தியின் பின்னர் இவ்வைதிஹ்யம் அமைக்கப்பெற்றிருக்கிறது. "தம்பரிசறிவார்" எனவும் சுவாமிக்கு ஓர் நாமமுண்டு. இதனை ஞானசம்பந்தமூர்த்தியின் திருப்பதிகத்து முதற்பாட்டிற் காண்க. ஸ்ரீ வாகீசமூர்த்தியின் திருப்பதிகத்தை உற்றுநோக்குங்கால் இத்தலத்தில் இராவணனுக்குச் சம்பந்தமுண்டு என்பது வற்புறுத்தப் பெறுகிறது. மேற்கே பூளைவனமும் (திருவிரும்பூளை) கிழக்கே பாடலீவனமாகிய இதுவும் இதன்கிழக்கே சமீவனமாகிய திருவரதைப்பெரும்பாழியும் அதன்கிழக்கே வில்வவனமாகிய திருக்கொள்ளம்பூதூரும் ஆக நான்குதலங்களும் ஒன்றின்கிழக்கு ஒன்றாய் நேர் நேராக உள்ளனவென்பது காண்க. வராகமூர்த்தியும் காஸ்யபராதியோரும் பூசித்து வழிபட்டது. சோம சூர்ய அக்கினிபெயரால் மூன்று தீர்த்தங்கள் உண்டு. சுவாமி-சாக்ஷிநாதர், தேவியார்-சௌந்தரவல்லி, தீர்த்தம்-சந்திரபுஷ்கரிணி, விருக்ஷம்-பாதிரி. இதற்குப் பதிகம்-2.

இத்தலம் சாலியமங்கலம் ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலையில் இரண்டரைமைலில் களஞ்சேரிப்பாலத்தால் விண்ணாற்றைக் கடந்து வெட்டி ஆற்றின் வடகரையில் மட்சாலையில் கிழக்கே நான்கு மைலில் உள்ளது.

## கoக. திருப்பரிதிநியமம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பழம்பஞ்சுரம் ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விண்கொண்டதூமதிசூடிநீடுவிரிபுன்சடைதாழப்
பெண்கொண்டமார்பில்வெண்ணீறுபூசிப்பேணார்பலிதேர்ந்து
கண்கொண்டசாயலொடேர்கவர்ந்தகள்வர்க்கிடம்போலும்
பண்கொண்டவண்டினம்பாடியாடும்பரிதிந்நியமமே. 1

அரவொலிவில்லொலியம்பினொலியடங்கார்புரமூன்றும்
நிரவவல்லார்நிமிர்புன்சடைமேனிரம்பாமதிசூடி
இரவிற்புகுந்தென்னெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பரவவல்லார்வினைபாழ்படுக்கும்பரிதிந்நியமமே. 2

பைபாரவம்விரிகாந்தள்விம்முபரிதிந்நியமத்துத்
தையலொர்பாகமமர்ந்தவனைத்தமிழ்ஞானசம்பந்தன்
பொய்யிலிமாலைபுனைந்தபத்தும்பரவிப்புகழ்ந்தேத்த
ஐயுறவில்லைப்பிறப்பறுத்தல்லவலம்மடையாவே. 11

திருச்சிற்றம்பலம்.

திருப்பரிதிநியமம்:—இது சூரியன் பூசித்துவழிபட்டதலமாதலின் இப்பெயரெய்தியது. 'பரிதியப்பார் கோயில்' எனவும்வழங்கும். சுவாமி-பரிதியப்பர், தேவியார்-மங்களநாயகி, தீர்த்தம்-சூரியதீர்த்தம். இதற்குப் பதிகம்-1

இத்தலம் தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே உரைத்தநாட்டுச்சத்திரம் மட்சாலையில் 8-மைலில் உள்ள உழுவூருக்குக்கிழக்கே அரைமைலில் உள்ளது

# ௧௦௨. திருவெண்ணியூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சடையானைச்சந்திரனோடுசெங்கண்ணரா
உடையானையுடைதலையிற்பலிகொண்டூரும்
விடையானைவிண்ணவர்தாந்தொழும் வெண்ணியை
உடையானையல்லதுள்காதெனதுள்ளமே. 1

சோதியைச்சுண்ணவெண்ணீறணிந்திட்டவெம்
ஆதியையாதியுமந்தமுமில்லாத
வேதியைவேதியர்தாந்தொழும்வெண்ணியில்
நீதியைநினையவல்லார்வினைநில்லாவே. 2

மருவாருமல்குகாழித்திகழ்சம்பந்தன்
திருவாருந்திகழ்தருவெண்ணியமர்ந்தானை
உருவாருமொண்டமிழ்மாலையிவைவல்லார்
பொருவாகப்புக்கிருப்பார்புவலோகத்தே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம் ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்,

தொண்டிலங்குமடியவர்க்கோர்நெறியினாருந் தூநீறுதுதைந்திலங்குமார்பினாரும், புண்டரிகத்தயனொடுமால்காணாவண்ணம்பொங்குதழற்பிழம்பாயபுராணனாரும், வண்டமருமலர்க்கொன்றைமாலையாரும் வானவர்க்காய்நஞ்சுண்டமைந்தனாரும், விண்டவர்தம்புரமூன்றுமெரிசெய்தாரும்வெண்ணியமர்ந்துறைகின்றவிகிர்தனாரே. 1

சடையேறுபுனல்வைத்தசதுரனாருந்தக்கன்றன்பெருவேள்விதடைசெய்தாரும், உடையேறுபுலியதண்மேனாகங் கட்டியுண்பலிக்கென்றூரூரினுழிதர்வாரும், மடையேறிக்க

யல்பாயவயல்கள்சூழ்ந்தமயிலாடுதுறையுறையுமணாளனாரும்,
விடையேறுவெல்கொடியெம்விமலனாரும் வெண்ணியமர்ந்து
உறைகின்றவிகிர்தனாரே. 4

திருச்சிற்றம்பலம்.

---

திருவெண்ணியூர்:—இது கோயில் வெண்ணி என்றும் இக்ஷுபுரி என்றும் வழங்கும். சுவாமியின் திருவுருவம் கருப்புக்கழி போன்ற அடையாளங்களையுடையதான ஸ்வயம்பு. சுவாமி—வெண்ணிநாதர், தேவியார்—அழகியநாயகி. இதற்குப் பதிகம்-3.

இத்தலம் கோயில்வெண்ணி ஸ்டேஷனிலிருந்து வடக்கே அரைமைலில் உள்ளது.

---

## ௧௦௩. திருப்பூவனூர்

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பூவனூர்ப்புனிதன்றிருநாமந்தான்
நாவினாறுநூறாயிரநண்ணினார்
பாவமாயினபாறிப்பறையவே
தேவர்கோவினுஞ்செல்வர்களாவரே. 1

என்னனென்மனையெந்தையெனாருயிர்
தன்னன்றன்னடியேன்றனமாகிய
பொன்னன்பூவனூர்மேவியபுண்ணியன்
இன்னனென்றறிவொண்ணானியற்கையே. 2

மைக்கடுத்தநிறத்தரக்கன்வரை
புக்கெடுத்தலும்பூவனூரன்னடி
மிக்கடுத்தவிரல்சிறிதூன்றலும்
பக்கடுத்தபின்பாடியுய்ந்தானன்றே. 11

திருச்சிற்றம்பலம்.

திருப்பூவனூர்:—இது "புஷ்பவநம்" என்றும் வழங்கும்; சுகப்பிரும்மருஷி பூசித்துப் போற்றியது. சுவாமி-புஷ்பவநநாதர், தேவியார்-கற்பகவல்லி. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் நீடாமங்கலம் ஸ்டேஷனிலிருந்து தெற்கே மன்னார்குடி கற்சாலையில் இரண்டுமைல் சென்று பாமணியாற்றைக் கடந்து மேல்கரையில் அரைமைலில் உள்ளது.

---

## க௦௯. திருப்பாதாளீச்சரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-வியாழக்குறிஞ்சி ௧-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மின்னியல்செஞ்சடைமேல்விளங்கும்மதிமத்தமொடுநல்ல
பொன்னியல்கொன்றையினோடுபுனல்சூடிப்பொற்பமரும்
அன்னமனநடையாளொருபாகத்தமர்ந்தருளிநாளும்
பன்னியபாடலினானுறைகோயில்பாதாளே. 1

நீடலர்கொன்றையொடுநிரம்பாமதிசூடிவெள்ளைத்
தோடமர்காதினல்லகுழையான்சுடுநீற்றான்
ஆடரவம்பெருகவனலேந்திக்கைவீசிவேதம்
பாடலினாலினியானுறைகோயில்பாதாளே. 2

பன்மலர்வைகுபொழில்புடைசூழ்ந்தபாதாளைச்சேரப்
பொன்னியன்மாடமல்குபுகலிந்நகர்மன்னன்
தன்னொளிமிக்குயர்ந்ததமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
இன்னிசைபத்தும்வல்லாரெழில்வானத்திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பாதாளீச்சரம்:—இது "பாமணி," "பாம்பணி" என்று வழங்குகிறது. திருப்பதிகத்தில் 'பாதாள்' என ஓதப்பெற்றிருக்கிறது. சர்ப்பபுரம்-வடமொழிப்பெயர். தனஞ்சயன் என்னும் சர்ப்பம் பூசித்துப் பேறுபெற்றது. சுவாமி சர்ப்பபுரேசர், தேவியார்-அமுதநாயகி. இதற்குப் பதிகம்-1

இத்தலம் (103) திருப்பூவனூரினின்றும் மன்னார்குடி கற்சாலையில் ஒன்பதுமைல் சென்று பாமணியாற்றின் வடகரை மட்சாலையில் வடகிழக்கே ஒன்றரைமைலில் உள்ளது.

---

## ௧௦௫. திருக்களர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-சீகாமரம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீருளார்கயல்வாவிசூழ்பொழினீண்டமாவயலீண்டுமாமதில்
தேரினார்மறுகில்விழாமல்குதிருக்களருள்
ஊருளாரிடுபிச்சைபேணுமொருவனேயொளிர்செஞ்சடைம்மதி
ஆரநின்றவனேயடைந்தார்க்கருளாயே. 1

தோளின்மேலொளிநீறுதாங்கியதொண்டர்வந்தடிபோற்றமிண்டிய
தாளினார்வளருந்தவமல்குதிருக்களருள்
வேளினேர்விசயற்கருள்புரிவித்தகாவிரும்புமடியாரை
ஆளுகந்தவனேயடைந்தார்க்கருளாயே. 2

இந்துவந்தெழுமாடவீதியெழில்கொள்காழிநகர்க்கவுணியன்
செந்துநேர்மொழியாரவர்சேருந்திருக்களருள்
அந்தியன்னதொர்மேனியானையமரர்தம்பெருமானைஞானசம்
பந்தன்சொல்லிவைபத்தும்பாடத்தவமாமே. 11

திருச்சிற்றம்பலம்

---

திருக்களர்:—இது "பாரிஜாதவநம்" என்றும் சொல்லப்பெறும். துர்வாஸமுனிவருக்கு ஸ்வாமி வெளிப்பட்டு நடனதரிசனங் கொடுத்ததலம். பராசர காளவராதி முனிவர்களும் வழிபட்டுப் போற்றினர். சுப்ரம்மண்யர் விசேடசான்னித்யம். நடராஜர் துர்வாசருக்குக் காக்ஷிகொடுத்தவர். சுவாமி-களர்முளைநாதர், தேவியார்-இளங்கொம்பன்னாள், தீர்த்தம்-துர்வாஸதீர்த்தம், விருக்ஷம்-பாரிஜாதம். இதற்குப் பதிகம்-1

இத்தலம் திருத்தருப்பூண்டி ஸ்டேஷனிலிருந்து மன்னார்குடிக்குப்போகிறமட்சாலையில் ஏழுமைல்சென்று திருப்புத்தூர் எல்லையிலு

ன்ன முள்ளியாற்று மதகிலிருந்து தெற்கே முத்துப்பேட்டைக்குப் போகிற தீவட்டிக்கரை மட்சாலையில் மூன்றுமைலில் உள்ளது.

---

## ௧௦௬. திருச்சிற்றேமம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-கொல்லிக்கௌவாணம். ௩-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

நிறைவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடநீள்சடைக்
குறைவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
சிறைவண்டியாழ்செய்பைம்பொழிற்பழனஞ்சூழ்சிற்றேமத்தான்
இறைவனென்றேயுலகெலாமேத்தநின்றபெருமானே. 1

மாகத்திங்கள்வாண்முகமாதர்பாடவார்சடைப்
பாகத்திங்கள்சூடியோராடன்மேயபண்டங்கன்
மேகத்தாடுசோலைசூழ்மிடைசிற்றேமமேவினான்
ஆகத்தேர்கொளாமையைப்பூண்டவண்ணலல்லனே. 2

கல்லிலோதமல்குதண்கானல்சூழ்ந்தகாழியான்
நல்லவாயவின்றமிழ்நவிலுஞானசம்பந்தன்
செல்வனூர்சிற்றேமத்தைப்பாடல்சீரார்நாவினால்
வல்லராகிவாழ்த்துவாரல்லலின்றிவாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றேமம்:—இது இப்போது 'சிற்றாம்பூர்' 'சிற்றாய்மூர்' 'எழிலூர்சேமம்' என்று பலபடி வழங்குகின்றது; அகஸ்தியர் இந்திரன், ஆதிசேடன், பிரமன், வேதம், சித்தர்கள் இவர்கள் பூசித்தது; சித்தர்கள் தேனீக்களுருவாய் பூசித்ததாகப் பிரஸ்தாபம். அர்த்தமண்டபத்தில் தென்பாகத்தில் இப்போதும் தேன்கூடு பிரத்யக்ஷமாய்ப் பார்க்கக்கூடியது. காலந்தோறும் இதற்குப் பூஜையுண்டு. இங்கு வியாபாரத்தின் பொருட்டு அயலூர்க்குச்சென்ற ஒருவணிகன் மனைவி சுவாமியை வழிப்பட்டுவந்தமையால் தினமும் ஒரு பொன்பெற்று அடுத்த ஊரில் மாறிச் சீவனஞ்செய்துகொண்டு வரும்போது நாயகன் திரும்பிவந்தான். வந்தவனிடம் அவ்வூர்வணிகர் அவள் கூடா ஒழுக்கமுடையாள் எனக் கூறலும் அம்மாது சிவசந்நிதியிற் பிரார்த்தித்து

சிவாக்ஞையால் கோவிலுக்குப் பின்னுள்ள ஆத்திவிருக்ஷம் கோவிலுக்குமுன்னும் பலிபீடத்துக்கு முன்னிருந்தநந்தி பலிபீடத்துக்குப் பின்னும் வரச்செய்து தன் பதிவிருதா தர்மத்தை நிறுத்தி அநுக்கிரஹம் பெற்றாள். சுவாமி பூசித்தவர்கள் பேரால் பல திருநாமங்களையுடையாரா யிருக்கின்றார். சுவாமி-பொன்வைத்தநாயகர், தேவியார்-அகிலாண்டேஸ்வரி, தீர்த்தம்-வேததீர்த்தம் கோவிலுக்கு மேற்கிலும், ஸ்வர்ணபுஷ்கரணி கோயிலுக்கு வடக்கிலும் உள்ளன. விருக்ஷம்-நாட்டாத்தி. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் நெல்லிக்கா ஸ்டேஷனிலிருந்து கிழக்கே மட்சாலையில் இரண்டுமைலில் (122) திருக்கைச்சினத்தையும் இதினின்றும் கிழக்கே மட்சாலையில் ஐந்துமைலில் (123) திருக்கோளிலியையும் இதினின்றும் தென்கிழக்கே மட்சாலையில் மூன்றுமைலில் (124) திருவாய்மூரையுங்கடந்து மேற்கே மட்சாலையில் ஒன்றரைமைலில் உள்ளது. பொன்னிரைஸ்டேஷனிலிருந்து வடக்கே நான்குமைல், அரிச்சந்திரநதியைக் கடக்கவேண்டும். மழைகாலத்தில் கஷ்டம்.

---

## ௧௦௭. திருவுசாத்தானம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-கொல்லி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீரிடைத்துயின்றவன்றம்பிநீள்சாம்புவான்
போருடைச்சுக்கிரீவனனுமான்றொழக்
காருடைநஞ்சுண்டுகாத்தருள்செய்தவெம்
சீருடைச்சேடர்வாழ்திருவுசாத்தானமே. 1

கொல்லையேறுடையவன்கோவணவாடையன்
பல்லையார்படுதலைப்பலிகொளும்பரமனார்
முல்லையார்புறவணிமுதுபதிநறைகமழ்
தில்லையானுறைவிடந்திருவுசாத்தானமே. 2

தாமலார்போலவேதக்கனார்வேள்வியை
ஊமனார்தங்கனாவாக்கினானொருநொடிக்
காமனாருடல்கெடக்காய்ந்தவெங்கண்ணுதல்
சேமமாவுறைவிடந்திருவுசாத்தானமே. 3

வரைதிரிந்திழியுநீர்வளவயற்புகலிமன்
திரைதிரிந்தெறிகடற்றிருவுசாத்தானரை
உரைதெரிந்துணருஞ்சம்பந்தனொண்டமிழ்வல்லார்
நரைதிரையின்றியேநன்னெறிசேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவுசாத்தானம்:—இது திருக்கோயிலூர் என்று வழங்கும். ஸ்ரீராமபிரான், இலக்குமணர், ஜாம்புவான், சுக்கிரீவன், அநுமான் முதலியோர் பூசித்தது. இங்கு இராமபிரான் மந்திரோபதேசம் பெற்ற காரணத்தால் சுவாமிக்கு மந்திரபுரீஸ்வரர் எனவும் மாவிருக்ஷமிக்க வனமாயிருந்தமையின் சூதவநேஸ்வரர் எனவும் பெயருண்டு. இலிங்கமூர்த்தி வெண்ணிறமான சுயம்பு மூர்த்தி. சுவாமி-மந்திரேசர் தேவியார்-பெரியநாயகி. இதற்குப்பதிகம்-1.

இத்தலம் முத்துப்பேட்டை ஸ்டேஷனுக்கு வடக்கே மட்சாலையில் ஒருமைலில் உள்ளது.

---

## க௦அ. திருவிடும்பாவனம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மனமார்தருமடவாரொடுமகிழ்மைந்தர்கண்மலர்தூய்த்
தனமார்தருசங்கக்கடல்வங்கத்திரளுந்திச்
சினமார்தருதிறல்வாளெயிற்றரக்கன்மிகுகுன்றில்
இனமாதவரிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. 1

தடுக்கையுடனிடுக்கித்தலைபறித்துச்சமணடப்பார்
உடுக்கைபலதுவர்க்கூறைகளுடம்பிட்டுழல்வாரும்
மடுக்கண்மலர்வயல்சேர்செந்நென்மலிநீர்மலர்க்கரைமேல்
இடுக்கண்பலகளைவானிடமிடும்பாவனமிதுவே. 10

கொடியார்நெடுமாடக்குன்றளூரிற்கரைக்கோல
இடியார்கடலடிவீழ்தருமிடும்பாவனத்திறையை

அடியாயுமந்தணர்காழியுளணிஞானசம்பந்தன்
படியாற்சொன்னபாடல்சொலப்பறையும்வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவிடும்பாவனம்:—இடும்பன் பூசித்து வாழ்ந்த தலமாதலின் இப்பெயரெய்தியது. இங்கு வெண்மை நிறத்தோடு கூடியவராய் விநாயகர் வெள்ளை விநாயகர் என்று பிரசித்தி பெற்றவர். கர்ப்பகிருஹத்தில் சிவலிங்க மூர்த்திக்குப்பின் பார்வதி பரமேஸ்வரர் கலியாண கோலத்தோடிருக்கின்றனர். அகஸ்தியருக்குக் காக்ஷி கொடுத்த தலம்போலும், சுவாமி-சத்குணநாதர், தேவியார்-மங்களநாயகி. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் பாண்டி ஸ்டேஷனிலிருந்து நான்கு மைலில் தெற்கே போகிற மட்சாலையும் முத்துப்பேட்டை வேதாரணியம் மட்சாலையும் சந்திக்கிற இடத்திலிருந்து மேற்கே கால்மைலில் உள்ளது.

---

## ௯௰௫. திருக்கடிக்குளம்,

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொடிகொண்மேனிவெண்ணூலினர்தோலினர்புலியுரி
யதளாடை, கொடிகொளேற்றினர்மணிகிணினெனவருகுரை
கழல்சிலம்பார்க்கக், கடிகொள்பூம்பொழில்சூழ்தருகடிக்கு
ளத்துறையுங்கற்பகத்தைத்தம், முடிகள்சாய்த்தடிவீழ்தரு
மடியவரைமுன்வினைமூடாவே. 1

விண்களார்தொழும்விளக்கினைத்துளக்கிலாவிகிர்தனைவிழவாரும்
மண்களார்துதித்தன்பராயின்புறும்வள்ளலைமருவித்தங்
கண்களார்தரக்கண்டுநங்கடிக்குளத்துறைதருகற்பகத்தைப்
பண்களார்தரப்பாடுவார்கேடிலர்புகழாமே. 2

தனமலிபுகழ்தயங்குபூந்தராயவர்மன்னனற்சம்பந்தன்
மனமலிபுகழ்வண்டமிழ்மாலைகண்மாலதாய்மகிழ்வோடும்

கனமலிகடலோதம்வந்துலவியகடிக்குளத்தமர்வானை
இனமலிந்திசைபாடவல்லார்கள்போயிறைவனோடுறைவாரே.

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கடிக்குளம்:—இது கற்பகநாதர் கோயில், கற்பகனூர் கோயில், கற்பகனூர்குளம் என்று பலவிதமாகவழங்கும்; கற்பகவிநாயகர் பூசித்து மாம்பழம் பெற்றகாரணத்தால் இப்பெயரெய்தியது. இவ்விநாயகர் ஆலயத்திற்கு வெளியே தென்மேற்கு மூலையில் இருக்கிறார். சுவாமி-கற்பகநாயகர், தேவியார்-சௌந்தரநாயகி, தீர்த்தம்-விநாயகதீர்த்தம். இதற்குப் பதிகம்-1.

இத்தலம் (108) திருவிடும்பாவனத்தினின்றும் கிழக்கே முக்கால் மைலில் உள்ளது.

---

## ககo. திருத்தண்டலை நீணெறி

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-கௌசிகம் ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விரும்புந்திங்களுங்கங்கையும்விம்மவே
சுரும்புந்தும்பியுஞ்சூழ்சடையார்க்கிடம்
கரும்புஞ்செந்நெலுங்காய்கமுகின்வளம்
நெருங்குந்தண்டலைநீணெறிகாண்மினே. 1

இகழுங்காலனிதயத்துமென்னுளும்
திகழுஞ்சேவடியான்றிருந்தும்மிடம்
புகழும்பூமகளும்புணர்பூசுரர்
நிகழுந்தண்டலைநீணெறிகாண்மினே. 2

நீற்றர்தண்டலைநீணெறிநாதனைத்
தோற்றுமேன்மையர்தோணிபுரத்திறை
சாற்றுஞானசம்பந்தன்றமிழ்வல்லார்
மாற்றில்செல்வர்மறப்பர்பிறப்பையே. 11

திருச்சிற்றம்பலம்.

திருந்தண்டலை நீணெறி:—இது இப்போது "தண்டலைச்சேரி" என்றுவழங்கும். சிவபெருமான் கூர்மாவதாரத்தில் கடலைக் கலக்கிய விஷ்ணுமூர்த்தியைச் செற்றுக் கூர்மத்தின் ஓட்டைமார்பில் அணிந்தருளிய தலம். கோச்செங்கட்சோழநாயனார் கட்டிய மாடக்கோயில்களுள் ஒன்று. இதனை ஒன்பதாந் திருப்பாட்டிற் காண்க. இங்கு இதற்கு அரைமைல் தூரத்தில் உள்ள கணமங்கலத்தில் வேளாளர்குலத்திற் றிருவவதாரஞ்செய்த அரிவாட்டாய நாயனார் சுவாமிக்குச் செந்நெல், மாவடு, செங்கீரை இவைகளைத் தினமும் நிவேதித்து வருபவர் ஒருநாள் இவைகளைச்சுவாமிக்கு நிவேதிக்கக் கொண்டுவரும்போது பலநாட் பட்டினிகிடந்து வருந்தியதனால் கால்இடறிக் கீழே வீழ்ந்து யாவும் கமரிற் சிந்திப்போக சுவாமிக்கு நிவேதனந் தவறிற்றே என்று வருந்தித் தமது ஊட்டியை அரிவாளால் அறுக்கப்புக சுவாமியின் கரந்தோன்றி யவர்கையைப் பிடித்துக்கொண்டு அவைகளை அங்கேயே அமுதுசெய்து காட்சிகொடுத்து அநுக்கிரஹிக்கப் பெற்றனர். சுவாமி—நீணெறிநாதர், தேவியார்—ஞானாம்பிகை, விருக்ஷம்—தருந்தம். இதற்குப் பதிகம்—1.

இத்தலம் திருத்தருப்பூண்டி ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலையில் இரண்டுமைலில் உள்ளது.

---

## ௧௩௩. திருக்கோட்டூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீலமார்தருகண்டனே நெற்றியோர்கண்ணனே யொற்
றைவிடைச், சூலமார்தருகையனே துன்றுபைம்பொழில்கள்
சூழ்ந்தழகாய, கோலமாமலர்மணங்கமழ்கோட்டூர்நற்கொழு
ந்தேயென்றெழுவார்கள், சாலநீடுலமதனிடைப்புகழ்மிகத்
தாங்குவர்பாங்காலே. 1

பங்கயம்மலர்ச்சீறடிப்பஞ்சுறுமெல்விரலாவல்குல், மங்
கைமார்பலர்மயில்குயில்கிளியெனமிழற்றிய மொழியார்மெ
ன், கொங்கையார்குழாங்குணலைசெய்கோட்டூர்நற்கொழுக்
தேயென்றெழுவார்கள், சங்கையொன்றிலராகிச்சங்கரன்றி
ருவருள்பெறலெளிதாமே. 2

பந்துலாவிரற்பவளவாய்த்தேன்மொழிப்பாவையோடுருவாரும், கொந்துலாமலர்விரிபொழிற்கோட்டூர்நற்கொழுந்தினைச்செழும்பவளம், வந்துலாவியகாழியுண் ஞானசம்பந்தன்வாய்ந்துரைசெய்த, சந்துலாந்தமிழ்மாலைகள்வல்லவர்தாங்குவர்புகழாலே. 11

திருச்சிற்றம்பலம்.

திருக்கோட்டூர்:—இங்கு தேவர்களும் குச்சாருஷியும் பூசித்துப் பேறுபெற்றனர். சுவாமிசந்நிதி மேற்குப்பார்த்ததும் தேவியார் சந்நிதி கிழக்குப்பார்த்ததுமா யிருக்கின்றன. சுவாமியின் திருநாமம் பதிகத்தின் திருப்பாட்டுதோறும் வருவது காண்க. சுந்தரமூர்த்திநாயனாரும் "கோட்டூர்க் கொழுந்தே" என்றார் ஊர்த்தொகையில். சுவாமி-கொழுந்துநாதர், தேவியார்-மதுரவசனியம்மை, விருக்ஷம்-வன்னி. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் திருத்தருப்பூண்டி ஸ்டேஷனிலிருந்து மன்னார்குடிக்குப் போகிற மட்சாலையில் ஏழாவது மைலிலுள்ள திருப்புத்தூரிலிருந்து மேற்கே ஷை சாலையில் இரண்டுமைலில் உள்ளது.

## ககஉ. திருவெண்டுறை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பஞ்சமம் .ந-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆதியனாதிரையன்னனலாடியவாரழகன்
பாதியோர்மாதினெடும்பயிலும்பரமாபரமன்
போதியலும்முடிமேற்புனலோடரவம்புனைந்த
வேதியன்மாதிமையால்விரும்பும்மிடம்வெண்டுறையே 1

காலனையோருதையில்லுயிர்வீடுசெய்வார்கழலான்
பாலொடுநெய்தயிரும்பயின்றாடியபண்டரங்கன்
மாலைமதியொடுநீராவம்புனைவார்சடையான்
வேலனகண்ணியொடும்விரும்பும்மிடம்வெண்டுறையே. 2

திண்ணமரும்புரிசைத்திருவெண்டுறைமேயவனைத்
தண்ணமரும்பொழில்சூழ்தருசண்பையர்தந்தலைவன்

எண்ணமர்பல்கலைபானிசைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணமர்பாடல்வல்லார்வினையாயினபற்றறுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவெண்டுறை:—இது திருவண்டுதுறை என்றும் வழங்கும். இங்கு ப்ருங்கிமுனிவர் வண்டுருவெடுத்து சுவாமிக்கும் அம்மையாருக்கும் இடையே ஊடுருவிச்சென்று வலம்வந்தது. வண்டின் ரீங்காரத்வனி இப்போதும் கர்ப்பகிருஹத்தில் கேட்கக்கூடுமென்று கூறுப; (பிருங்கம்-வண்டு) வித்தியாதரராதியரும் பூசித்துள்ளார். தேவியின்திருநாமம் இரண்டாந் திருப்பாட்டிற் காண்க. சுவாமி-வெண்டுறைநாதர், தேவியார்-வேனெடுங்கண்ணியம்மை. இதற்குப் பதிகம்-1.

இத்தலம்பொன்னிரை ஸ்டேஷனிலிருந்து மட்சாலையில் மூன்றரைமைலில் அரிச்சந்திரநதி வடகரையில் (115) திருக்கொள்ளிக்காட்டிலிருந்து ஆற்றிற்குத் தென்கரையில் மேற்கே மட்சாலையில் ஐந்துமைலில் உள்ளது.

---

## ககக. திருக்கொள்ளம்பூதூர்.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

ஈரடி மேல்வைப்பு-பண்-காந்தாரபஞ்சமம், ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொட்டமேகமழுங்கொள்ளம்பூதூர்
நட்டமாடியநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 1

கோட்டகக்கழனிக்கொள்ளம்பூதூர்
நாட்டகத்துறைநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 2

ஓடம்வந்தணையுங்கொள்ளம்பூதூர்
ஆடல்பேணியவடிகளையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 6

கொன்றைசேர்சடையான்கொள்ளம்பூதூர்
நன்றுகாழியுண் ஞானசம்பந்தன்
இன்றுசொன்மாலைகொண்டேத்தவல்லார்போய்
என்றும்வானவரோடிருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கொள்ளம்பூதூர்:—இது திருக்களம்பூர் என்று வழங்கப்பெறும்; வில்வவனம் என்றும் கூறப்பெறும். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருக்கூட்டத்தினரோடு முள்ளிவாய்க்கரையை அடைந்தபோது அந்த ஆறுமிகப்பெருகிக் கோல்நிலையாமையால் ஓடக்காரர்கள் ஓடத்தினைக்கட்டிச் சென்றனராக நாயனார் எதிரேதோன்றும் இத்தலத்தைத் தரிசிக்க அவாமேலிட்டு ஓடத்தை யவிழ்த்துத் திருக்கூட்டத்தை ஏற்றித் தாமும் ஏறிநின்று நாவலமே கோலாகக் "கொட்டமேகமழும்" என்னும் திருப்பதிகத்தைப் பாட ஓடம் அக்கரையைச் சென்றடைந்தது. நாயனாரும் அடியவர்களும் திருக்கோயிலையடைந்து சுவாமிதரிசனஞ்செய்து திருவருளை வியந்து கொண்டாடினார்கள் சுவாமி-வில்வவநநாதர், தேவியார்-சௌந்தரநாயகி, விருக்ஷம்-வில்வம். இதற்குப் பதிகம்-1

இத்தலம் கொரடாச்சேரி ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலையில் நாலரைமைலில் செல்லூரை யடைந்து அங்கிருந்து மேற்கே ஒருமைலில் உள்ளது.

---

## ககசு. திருப்பேரெயில்.

### திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மறையுமோதுவர்மான்மறிக்கையினர்
கறைகொள்கண்டமுடையகபாலியார்
துறையும்போகுவர் தூயவெண்ணீற்றினர்
பிறையுஞ்சூடுவர்பேரெயிலாளரே. 1

முன்னையார்மயிலூர்திமுருகவேள்
தன்னையாரெனிற்றானோர்தலைமகன்

என்னையாளுமிறையவனெம்பிரான்
பின்னையாரவர்பேரெயிலாளரே. 7

மதத்தவாளரக்கன் மணிப்புட்பகம்
சிதைக்கவேதிருமாமலைக்கீழ்ப்புக்குப்
பதைத்தங்கார்த்தெடுத்தான்பத்துநீண்முடி
பிதக்கவூன்றியபேரெயிலாளரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பேரெயில்.—இது இப்போது வங்காரம்பேரையூர் என்றும், ஓகைப்பேரையூர் என்றும் வழங்குகிறது. அக்னி பூசித்தது. சுவாமி-ஜகதீஸ்வரர், தேவியார்-பெண்ணமிர்தநாயகி, தீர்த்தம்-அக்னிதீர்த்தம். இதற்குப்பதிகம்-1

இத்தலம் திருநாட்டியத்தான்குடி ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே மூன்றுமைலில் மட்சாலையில் உள்ளது.

---

## கசரு. திருக்கொள்ளிக்காடு.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நிணம்படுசுடலையினீறுபூசிநின்
றிணங்குவர்பேய்களோடிடுவர்மாநடம்
உணங்கல்வெண்டலைதனிலுண்பராயினும்
குணம்பெரிதுடையர்நங்கொள்ளிக்காடரே. 1

ஆற்றனல்லடியிணையலர்கொண்டேத்துவான்
சாற்றியவந்தணன்றகுதிகண்டநாள்
மாற்றலனாகிமுன்னடர்த்துவந்தணை
கூற்றினையுதைத்தனர்கொள்ளிக்காடரே. 2

நற்றவர்காழியுண் ஞானசம்பந்தன்
குற்றமில்பெரும்புகழ்க்கொள்ளிக்காடரைச்

சொற்றமிழின்னிசைமாலைசோர்வின்றிக்
கற்றவர்கழலடிகாணவல்லரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கொள்ளிக்காடு:—இது அக்னி பூசித்த தலமாதலின் இப்பெயரெய்தியது. (கொள்ளி-அக்னி) பஶ்சிமாபிமுக சந்நிதி, சனீஶ்வரன் சந்நிதி பிரஸித்தியுள்ளது. சுவாமி-அக்னீஶ்வரர். தேவியார்-பஞ்சின் மெல்லடியாள். இதற்குப் பதிகம்-1

இத்தலம் பொன்னிரை ஸ்டேஷனிலிருந்து மேற்கே மட்சாலையில் மூன்றரைமைலில் அரிச்சந்திரநதி வடகரையில் உள்ளது.

---

## ககசு. திருத்தெங்கூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

பண்-பியந்தைக்காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

புரைசெய்வல்வினைதீர்க்கும்புண்ணியர்விண்ணவர்போற்றக்
கரைசெய்மால்கடனஞ்சையுண்டவர்கருதலர்புரங்கள்
இரைசெய்தாரழலூட்டியுழல்பவரிடுபலிக்கெழில்சேர்
விரைசெய்பூம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. 1

சித்தந்தன்னடிநினைவார்செடிபடுகொடுவினைதீர்க்கும்
கொத்திலங்குசடைமுடிமேற்கோளெயிற்றரவொடுபிறையன்
பத்தர்தாம்பணிந்தேத்தும்பரம்பரன்பைம்புனல்பதித்த
வித்தன்றாழ்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே

வெந்தநீற்றினர்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரைக்
கந்தமார்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
சந்தமாயினபாடற்றண்டமிழ்பத்திவல்லார்மேல்
பந்தமாயினபாவம்பாறுதலுறுதல்பயனே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தெங்கூர்:—இங்கு இலக்ஷ்மியும், நவக்கிரஹங்களும் பூசித்துச் சித்தியடைந்தனர். நவக்கிரஹங்கள் பூசித்ததென்பது 9-லிங்கங்கள் பிராகாரத்திலும், லக்ஷ்மி பூசித்த லிங்கம் லக்ஷ்மிசந்நிதியில்

லக்ஷ்மிக்கு எதிரிலும் உள்ளன. ஸ்வாமிசந்நிதி வெள்ளியங்கிரி என்று திருப்பாட்டுதோறும் கூறப்பெற்றிருக்கிறது. சுவாமி—வெள்ளிமலைநாதர், தேவியார்-பெரியநாயகி. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் திருநெல்விக்கா ஸ்டேஷனிலிருந்து மேற்கே கால்மைலில் திருநெல்விக்காவை யடைந்து அதினின்றும் தென்மேற்கே மட்சாலையில் ஒருமைலில் உள்ளது.

## ககஎ. திருநெல்விக்கா.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அறத்தானுயிர்காவலமர்ந்தருளி
மறத்தான்மதின்மூன்றுடன்மாண்பழித்த
திறத்தாற்றெரிவெய்தியதீவெண்டிங்கள்
நிறத்தானெல்விக்காவுணிலாயவனே. 1

பதிதானிடுகாடுபைங்கொன்றைதொங்கல்
மதிதானதுசூடியமைந்தனுந்தான்
விதிதான்வினைதான்விழுப்பம்பயக்கும்
நெதிதானெல்விக்காவுணிலாயவனே. 2

புகரேதுமிலாதபுத்தேளுலகில்
நிகராநெல்விக்காவுணிலாயவனை
நகரானலஞானசம்பந்தன்சொன்ன
பகர்வாரவர்பாவமிலாதவரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருநெல்விக்கா:—இது ஸ்தலவிருக்ஷம் நெல்லியாதலின் இப்பெயரெய்தியது. சூர்யனும் பிரம்மனும் பூசித்த தலம். பஸ்சிமாபிமுக சந்நிதி இப்போதும் சூர்யபூஜை ஐப்பிசிமாத கிருஷ்ணபக்ஷத்தில் சதுர்த்தசிமுதல் ஏழுநாளும் மாலைக்காலத்தில் நிகழ்வதைப் பார்க்கலாம். சுவாமி-நெல்லிவநநாதர், தே[illegible]-மங்களநாயகி, தீர்த்தம் தெற்கே-பிரம்மதீர்த்தம், வடக்கே-சூர்யதீர்த்தம், விருக்ஷம்-நெல்லி. இதற்குப் பதிகம்—1.

இத்தலம் திருநெல்லிக்கா ஸ்டேஷனிலிருந்து மேற்கே கால் மைலில் உள்ளது.

---

## கக௮. திருநாட்டியத்தான்குடி.

### சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-தக்கராகம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பூணாணவதொராரவங்கண்டஞ்சேன்புறங்காட்டாடல்கண்டிகழேன், பேணீராகிலும்பெருமைமையுணர்வேன்பிறவேனாகிலுமறவேன், காணீராகிலுங்காண்பனென்மனத்தாற்கருதீராகிலுங்கருதி, நாமேனும்மடிபாடுதலொழியேனாட்டியத்தான்குடிநம்பீ. 1

மட்டார்பூங்குழன்மலைமகள்கணவனைக்கருதாதார்தமைக்கருதேன், ஒட்டீராகிலுமொட்டுவனடியேனும்மடியடைந்தவர்க்கடிமைப், பட்டேனாகிலும்பாடுதலொழியேன்பாடியுநாடியுமறிய, நட்டேனாதலானமறக்கில்லேனாட்டியத்தான்குடிநம்பீ. 2

கூடாமன்னரைக்கூட்டத்துவென்றகொடிறன்கோட்புலிசென்னி, நாடார்தொல்புகழ்நாட்டியத்தான்குடிநம்பியைநாளுமறவாச், சேடார்பூங்குழற்சிங்கடியப்பன்றிருவாரூரனுரைத்த, பாடீராகிலும்பாடுமின்றொண்டீர்பாடநம்பாவம்பற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

---

**திருநாட்டியத்தான்குடி:**—இங்கு சுவாமி சர்ப்பாபரணம் தரித்து அஞ்சத்தக்க திருவடையாளங்களோடு காக்ஷிகொடுத்ததைக் குறிப்பித்து சுந்தரமூர்த்திகள் பதிகம் பாடியதாகக் கூறுவர். சுவாமி தேவிதிருநாமங்கள் பதிகத்துக் காண்க. வேளாளர் குலத்திலே திருவவதாரஞ்செய்து சிவபக்தி சிவனடியார் பக்தி முதலியவற்றாற் சிறந்த கோட்புலிநாயனார் சுந்தரமூர்த்திநாயனார் எழுந்தருளியபோது அவரை எதிர்கொண்டு தமது மனைக்கு அழைத்துக்கொண்டு சென்று

உபசரித்துத் தம் புத்திரியார் சிங்கடியார், வனப்பகையார் என்னும் இருவரையும் அவரை வணங்குவித்து அடிமைகளாகக் கொண்டருளல் வேண்டும் என்று பிரார்த்திக்க சுவாமிகள் அவர்களைத் தமது திருத் தொடையின்மீது இருத்தி உச்சிமோந்து தம்புத்திரியார் என்றுகூறி வேண்டுவ கொடுத்துச் சுவாமிதரிசனஞ் செய்தபோது பதிகத்து நாயனாரைச் சிறப்பித்துத் தம்மையும் சிங்கடியப்பன் என்று வைத்தருளினார். இக்கோட்புலிநாயனார் இவ்வாறு பலநாள் திருப்பணிசெய்து வருகையில் மாகேச்வரபூஜைக்கு எனச் சேர்கட்டிவைத்த நெல்லை பஞ்சகாலத்தில் பின்னர் கொடுத்துவிடலாமென எடுத்துக்கொண்ட பந்துக்களையும் அவருள் ஒருத்தி பாலையுண்ட குழவியையும் வாளின் வீசித் தம்பத்திலையை வெளிப்படுத்தி முத்தியடைந்தனர். இவர் திருவுருவம் கோயிலில் காணப்பெறும். சுவாமி—இரத்நகிரிநாதர், தேவியார்-மலர்மங்கைநாயகி. இத்தப் பதிகம்-1.

இத்தலம் திருநாட்டியத்தான்குடி ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே முக்கால்மைலில் மட்சாலையில் உள்ளது.

---

## கக௩. திருக்காறாயில்

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம், ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீரானே நீள்சடைமேலொர்நிரைகொன்றைத்
தாரானே தாமரைமேலயன்றான்றொழும்
சீரானே சீர்திகழுந்திருக்காறாயில்
ஊரானே யென்பவரூனமிலாதாரே 1

மதியானே வரியரவோடுடன்மத்தஞ்சேர்
விதியானே விதியுடைவேதியர்தாந்தொழும்
நெதியானே நீர்வயல்சூழ்திருக்காறாயிற்
பதியானே யென்பவர்பாவமிலாதாரே. 2

எய்ந்தசீரெழிறிகழுந்திருக்காறாயில்
ஆய்ந்தபிரானடியேத்தியருள்பெற்ற

பாய்ந்தநீர்க்காழியுண்ஞானசம்பந்தன்சொல்
வாய்ந்தவாறேத்துவார்வானுலகாள்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருக்காறாயில்:**—இது திருக்காறைவாசல் என்று வழங்கப்பெறும்; தேவேந்திரனிடம் பெற்று முசுகுந்த சக்ரவர்த்தி கொணர்ந்து பிரதிஷ்டித்த ஸப்தவிடங்கங்களுள் ஒன்று. இந்திரபூஜை இப்போதும் கன்யாமாஸ பௌர்ணிமையில் நடக்கிறது. முசுகுந்தர் அநுக்ரஹம் பெற்றதலம். சுவாமி-கண்ணாயிரநாதர், தேவியார்-கைலாசநாயகி, தீர்த்தம்-இந்திரதீர்த்தம், தியாகர்-ஆதிவிடங்கர், நடனம்-குக்குடநடனம். இதற்குப் பதிகம்-1.

இத்தலம் திருநாட்டியத்தான்குடி ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலையில் இரண்டுமைலில் திருவாரூர் திருத்தருப்பூண்டி ரஸ்தாவில் தென்புறத்தில் உள்ள புன்னவாசலிலிருந்து தெற்கே கற்சாலையில் ஒருமைலில் உள்ளது.

---

# ௧௨௦. திருக்கன்றாப்பூர்.

## திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

எவரேனுந்தாமாகவிலாடத்திட்ட திருநீறுஞ்சாதனமுங் கண்டாலுள்கி, உவராதேயவரவரைக்கண்டபோதுவகங்கடிமைக்திறநினைந்தங்குவந்துநோக்கி, இவர்தேவரவர்தேவரென்றுசொல்லியிரண்டாட்டா தொழிந்தீசன்றிறமேபேணிக், கவராதேதொழுமடியார்நெஞ்சினுள்ளே கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே. 1

பொசியினான்மிடைந்துபுழுப் பொதிந்தபோர்வைப் பொல்லாதபுலாலுடம்பைநிலாசுமென்று, பசியினான்மீதூரப்பட்டேயீட்டிப்பலர்க்குதவலது வொழிந்துபவளவாயார், வசியினாலகப்பட்டு வீழாமுன்னம் வானவர்கோன் திருநாமமஞ்சுஞ்சொல்லிக், கசிவினாற்றொழுமடியார்நெஞ்சினுள்ளே கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே. 6

ஐயினன்மிடறடைப்புண்டாக்கைவிட்டுவாவியார்போவதுமேயகத்தார்கூடி, மையிறற்கண்ணொழுதிமாலைசூட்டிமயானத்திலிடுவதன்முன்மதியஞ்சூடும், ஐயனார்க்காளாகியன்புமிக்குவகங்குழைந்துமெய்யரும்பியடிகள்பாதம், கையினற்றொழுமடியார் நெஞ்சினுள்ளேகன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கன்றாப்பூர்:—இது வைணவனுக்கு வாழ்க்கைப்பட்ட சைவர்வீட்டு பக்தசிரோமணியாகிய மாது ஒருத்தி தான்புக்க அகத்தில் புறச்சமயத்தவராகிய தம்முறவினர் காணுதபடி கன்றுகட்டுந் தறியைச் சிவலிங்கமாகப் பாவித்துப் பூசிக்கையில் அவள் கணவன் சினந்து அவ்வாப்பிணைக்கோடரியால் ஓங்கியபோது சுவாமிவெளிப்பட்டகாரணத்தால் (கன்று-ஆப்பு-ஊர்) இப்பெயரெய்தியது. சுவாமியும் நடுதறியீசராயினர். திருவுருவத்திலும் கோடரியின் குறி காணப்பெறும். இடைப்பன் பூசித்ததாகவும் வழங்கும். சுவாமி நடுதறியப்பர், தேவியார்-உமைநாயகி. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் திருநாட்டியத்தான்குடி ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலையில் இரண்டுமைலில் திருவாரூர்த் திருத்தருப்பூண்டிரஸ்தா சந்திப்பில் வடபுறத்திலுள்ள குன்னூரிலிருந்து கிழக்கே இரண்டரைமைலில் ஆதமங்கலத்தையடைந்து வடக்கே அரைமைலில் உள்ளது.

---

## கஉக. திருவலிவலம்.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

பண்-வியாழக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பூவியல்புரிகுழல்வரிசிலைநிகர்நுதல்
ஏவியல்கணைபிணையெதிர்விழியுமையவள்
மேவியதிருவுருவுடையவன்விரைமலர்
மாவியல்பொழில்வலிவலமுறையிறையே. 1

பிடியதனுருவுமைகொளமிகுகரியது
வடிகொடுதனதடிவழிபடுமவரிடர்

கடிகணபதிவரவருளினன்மிகுகொடை
வடிவினர்பயில்வலிவலமுறையிறையே. 5
மன்னியவலிவலநகருறையிறைவனை
இன்னியல்கழுமலநகரிறையெழின்மறை
தன்னியல்கலைவலதமிழ்விரகனதுரை
உன்னியவொருபதுமுயர்பொருடருமே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம் ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நல்லான்காணான்மறைகளாயினான்காணம்பன்காணணுகாதார்புரமூன்றெய்த, வில்லான்காண்விண்ணவர்க்குமேலானான்காண்மெல்லியலாள்பாகன்காண்வேதவேள்விச், சொல்லான்காண்சுடர்மூன்றுமாயினான்காண்டொண்டாகிப் பணிவார்க்குத்தொல்வானீய, வல்லான்காண் வானவர்கள்வணங்கியேத்தும்வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. 1

பங்கயத்தின்மேலானும்பாலகனாயுலகளந்தபடியானும் பரவிக்காணா, தங்கைவைத்தசென்னியரா யளக்கமாட்டா வனலவன்காணலைகடல்சூழிலங்கைவேந்தன், கொங்கலர்த்த முடிநெரியவிரலாலூன்றுங் குழகன்காணழகன்காண்கோலமாய, மங்கையர்க்கோர்கூறன்காண்வானோரேத்தும்வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. 10

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-தக்கேசி. ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஊனங்கத்துயிர்ப்பாயுயிர்க்கெல்லாமோங்காரத்துருவாகிநின்றானை, வானங்கத்தவர்க்குமளப்பரியவள்ளலையடியார்கடம்முள்ளத், தேனங்கத்தமுதாகியுள்ளூறுந்தேசனைத்தினைத்தற்கினியானை, மானங்கைத்தலத்தேந்தவல்லானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. 1

நல்லிசை ஞானசம்பந்தனுநாவினுக்கரசரும்பாடியநற்
றமிழ்மாலை, சொல்லியவேசொல்லியேத்துகப்பானைத்தொ
ண்டனேனறியாமையறிந்து, கல்லியன்மனத்தைக்கசிவித்
துக்கழலடிகாட்டியென்னைகளையறுக்கும், வல்லியல்வான
வர்வணங்கநின்றானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. 5

என்றவந்தணன்றலையினையறுத்து நிறைக்கமாலுதிரத்
தினையேற்றுத், தோன்றுதோண்மிசைக்களேபரந்தன்னைச்
சுமந்தமாவிரதத்தகங்காளன், சான்றுகாட்டுதற்கரியவனெ
ளியவன்றன்னைத்தன்னிலாமனத்தார்க்கு, மான்றுசென்றணை
யாதவன்றன்னைவலிவலந்தனில்வந்துகண்டேனே. 10

திருச்சிற்றம்பலம்.

திருவலிவலம்:—இது 'வலியன்' என்னும் கரிக்குருவி பூசித்த காரணத்தால் இப்பெயரெய்தியதென்ப; சூரியன் முதலியோர் பூசித்தது; திருப்புகலூர், திருமுண்டீச்சரம் முதலிய தலங்கள் போல் ஆலயம் அகழி சூழ்ந்திருக்கின்றது; மாடக்கோயில்களுள் ஒன்று. இங்கு சுந்தரமூர்த்திநாயனர் தமது பதிகத்தில் ஞானசம்பந்தர் நாவினுக்கரசர் இவர்கள் பாடிய நற்றமிழ்மாலையில் சொல்லியவே சொல்லியேத்துகப்பான் என்று சுவாமியைச் சிறப்பித்தார். சுவாமி-மனத்துணைநாதர், தேவியார்-மாழையங்கண்ணியம்மை. இதற்குப் பதிகம்-4

இத்தலம் (120) திருக்கன்றாப்பூரினின்றும் தெற்கே அரைமைலில் உள்ளது. வடகிழக்கேசமீபத்தில் திருவிசைப்பாத்தலம் திருச்சாட்டியக்குடி தரிசிக்கத் தக்கது.

## கஉஉ. திருக்கைச்சினம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-சீகாமரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தையலோர்கூறுடையான்றண்மதிசேர்செஞ்சடையான்
மையுலாமணிமிடற்றான்மறைவிளங்குபாடலான்
நெய்யுலாமூவிலைவேலேந்திவந்தொளிசேர்
கையுடையான்மேவியுறைகோயில்கைச்சினமே. 1

விடமல்குகண்டத்தான்வெள்வளைபோர்கூறுடையான்
படமல்குபாம்பரையான்பற்றார்புரமெரித்தான்
நடமல்குமாடலினான்மறையோர்பாடலினன்
கடமல்குமாவுரியானுறைகோயில்கைச்சினமே. 2

தண்வயல்சூழ்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
கண்ணுதலான்மேவியுறைகோயில்கைச்சினத்தைப்
பண்ணிசையாலேத்திப்பயின்றவிவைவல்லார்
விண்ணவராயோங்கிவியனுலகமாள்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கைச்சினம்:—இது இங்கு இந்திரன் சைகதத்தால் பிரதிட்டித்துப் பூசித்த சிவலிங்கத்தை உத்வாசனம் செய்ய எடுக்கும்போது "கைச்சின்னம்" திருவுருவத்தில் பதிந்த காரணத்தால் இப்பெய ரெய்தியது. ஸ்வாமியும் கைச்சின்னநாதராயினர். கைச்சின்னம் கைச்சினம் என்று மருவியது. திருணபிந்துமுனிவரும் பூசித்து வழிபட்ட தலம். சுவாமி-கைச்சினநாதர், தேவியார்-வெள்வளைநாயகி, தீர்த்தம்-இந்திரதீர்த்தம்,வஜ்ரதீர்த்தம் என இரண்டும் கோவிலுக்கு இருபுறமும் உள்ளன. விருக்ஷம்-கோங்கிலவு. உற்சவமூர்த்தி இந்திரனுக்கு காக்ஷிகொடுத்தவர்-தியாகராஜர். இதற்குப் பதிகம்-1

இத்தலம் திருநெல்லிக்கா ஸ்டேஷனிலிருந்து கிழக்கே மட்சாலையில் இரண்டுமைலில் உள்ளது.

---

## கஉரு. திருக்கோளிலி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பழந்தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நாளாயபோகாமேநஞ்சணியுங்கண்டனுக்கே
ஆளாயவன்புசெய்வோமடநெஞ்சேயரனாமம்
கேளாய்நங்கிளைகிளைக்குங்கேடுபடாத்திறமருளிக்
கோளாயநீக்குமவன்கோளிலியெம்பெருமானே. 1

வந்தமணலாலிலிங்கமண்ணியின்கட்பாலாட்டும்
சிந்தைசெய்வோன்றன்கருமந்தேர்ந்துசிதைப்பான்வருமத்
தந்தைதனைச்சாடுதலுஞ்சண்டீசனென்றருளிக்
கொந்தணவுமலர்கொடுத்தான்கோளிலியெம்பெருமானே 4

வஞ்சமனத்தஞ்சொடுக்கிவைகலுநற்பூசனையால்
நஞ்சமுதுசெய்தருளுநம்பியெனவேநினையும்
பஞ்சவரிற்பார்த்தனுக்குப்பாசுபதமீந்துகந்தான்
கொஞ்சுகிளிமஞ்சணவுங்கோளிலியெம்பெருமானே. 5

தாவியவனுடனிருந்துங்காணாததற்பரனை
ஆவிதனிலஞ்சொடுக்கியங்கணனென்றாதரிக்கும்
நாவியல்சீர்நமிநந்தியடிகளுக்குநல்குமவன்
கோவியலும்பூவெழுகோற்கோளிலியெம்பெருமானே. 6

நாணமுடைவேதியனுநாரணனுநண்ணவொணாத்
தாணுவெனையாளுடையான்றன்னடியார்க்கன்புடைமை
பாணனிசைபத்திமையாற்பாடுதலும்பரிந்தளித்தான்
கோணவிளம்பிறைச்சென்னிக்கோளிலியெம்பெருமானே. 9

நம்பனைநல்லடியார்கணாமுடைமாடென்றிருக்கும்
கொம்பனையாள்பாகனெழிற்கோளிலியெம்பெருமானை
வம்பமருந்தண்காழிச்சம்பந்தன்வண்டமிழ்கொண்
டின்பமரவல்லார்களெய்துவர்களீசனையே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முன்னமேநினையாதொழிந்தேனுனை
இன்னநாளுனசேவடியேத்திலேன்
செந்நெலார்வயல்சூழ்திருக்கோளிலி
மன்னனேயடியேனைமறவலே. 1

விண்ணுளார்தொழுதேத்தும்விளக்கினை
மண்ணுளார்வினைதீர்க்குமருந்தினைப்
பண்ணுளார்பயிலுந்திருக்கோளிலி
அண்ணலாரடியேதொழுதுய்ம்மினே. 2

அரக்கனையிலங்கையர்மன்னனை
நெருக்கியம்முடிபத்திறுத்தானவற்
கிரக்கமாகியவன்றிருக்கோளிலி
அருத்தியாயடியேதொழுதுய்ம்மினே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

### பண்-நட்டராகம். ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீளநினைந்தடியேனுமைநித்தலுங்கைதொழுவேன்
வாளனகண்மடவாளவள்வாடிவருந்தாமே
கோளிலியெம்பெருமான்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றேன்
ஆளிலையெம்பெருமானவைபட்டித்தரப்பணியே. 1

வண்டமருங்குழலாளுமைநங்கையோர்பங்குடையாய்
விண்டவர்தம்புரமூன்றெரிசெய்தவெம்வேதியனே
தெண்டிரைநீர்வயல்சூழ்திருக்கோளிலியெம்பெருமான்
அண்டமதாயவனேயவையட்டித்தரப்பணியே. 2

பாதியோர்பெண்ணைவைத்தாய்படருஞ்சடைக்கங்கைவைத்தாய்
மாதர்நல்லார்வருத்தமதுநீயுமறிதியன்றே
கோதில்பொழில்புடைசூழ்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றேன்
ஆதியேயற்புதனேயவையட்டித்தரப்பணியே. 3

கொல்லைவளம்புறவிற்றிருக்கோளிலிமேயவனை
நல்லவர்தாம்பரவுந்திருநாவலவூரனவன்
நெல்லிடவாட்கள்வேண்டிநினைந்தேத்தியபத்தும்வல்லார்
அல்லல்களைந்துலகினண்டர்வானுலகாள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்.

---



69137

திருக்கோளிலி:—இது இப்போது "திருக்குவளை" என வழங்குகிறது; பிரம்மதேவர், அகஸ்தியர் முதலியோர் பூசித்த தலம்; பஞ்சபாண்டவர்களுள் பீமன் பகாசுரனைக்கொன்ற பழிபோகப் பூசித்த க்ஷேத்திரம். பகாசுர பிரம்மஹத்தி உருவங்கள் கோபுர த்வாரத்தில் இருக்கின்றன. சமீபத்தில் குண்டையூரில் குண்டையூர்க்கிழார் என்பார் சுந்தரமூர்த்திகளுக்கு அமுதுபடி முதலியன கொடுத்துவரும் நியமம் பஞ்சம் வந்து தவறுதலானபோது சுவாமியைப் பிரார்த்திக்க அவருக்கு சுவாமி நென்மலைகளைக்கொடுத்து சுந்தரமூர்த்திகளுக்குக் கொடுக்கும்படி ஆக்ஞை செய்ய அவர் அவை தம்மாலெடுக்கப்படாவளவினையுடைமைகண்டு நாயனாருக்குத் தெரிவிக்க நாயனார் திருக்கோளிலிக்குவந்து "நீளநினைந்தடியேன்" என்னும் திருப்பதிகம் பாடியருள அன்றிரவில் சிவபெருமான் பூதங்களைக்கொண்டு அந்நென்மலைகளைத் திருவாரூரில் எங்கும் நிறையும்படி செய்விக்கச் சுந்தரமூர்த்தியும் பரவையாரும் திருவருளை வியந்து பறையறைவித்து அவரவர் வீடுகளில் உள்ள நென்மலைகளை அவரவர்களே எடுத்துக்கொள்ளச் செய்தார்கள். குண்டையூர் என்னும் ரிஷபபுரி கிழக்கே உள்ளது முசுகுந்தர் பிரதிஷ்டித்த ஸப்தவிடங்கங்களில் ஒன்று. சுவாமி-கோளிலிநாதர், தேவியார்-வண்டமர்பூங்குழலி, தீர்த்தம்-பிரம்மதீர்த்தம். தியாகர்-அவனிவிடங்கர், நடனம்-பிருங்கநடனம் இதற்குப்பதிகம் 4.

இத்தலம் திருநெல்லிக்கா ஸ்டேஷனிலிருந்து கிழக்கே மட்சாலையில் 2-மைலில் திருக்கைச்சினத்தினின்றும் கிழக்கேமட்சாலையில் 5-மைலில் உள்ளது. இதற்குத் தென்கிழக்கே ஒன்றரைமைலில்'எட்டுகுடி' என்னும் சுப்ரம்மண்ய க்ஷேத்ரம்.

---

## கஉச. திருவாய்மூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளி [illegible] டவோர் தழல்வீசிக்,கிளரிளமணியரவரையார்த்தாடும்வேடக்கிறிமையார்,விளரிள்முலையவர்க்கருணல்கி வெண்ணீறணிந்தோர் சென்னியின்மேல், வளரிளமதியமொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே.

வெந்தழல்வடிவினர்பொடிப்பூசிவிரிதருகோவணவுடை மேலோர், பந்தஞ்செய்தரவசைத்தொலிபாடிப்பலபலகடை தொறும்பலிதேர்வார், சிந்தனைபுகுந்தெனக்கருணல்கிச்செஞ் சுடர்வண்ணர்தம்மடிபரவ வந்தனைபலசெயவிவாறணிவாய் மூரடிகள்வருவாரே. 2

திங்களொடருவரைப்பொழிற்சோலைத்தேனலங்கானல ந்திருவாய்மூர், அங்கமொடருமறையொலிபாடலழனிறவ ண்ணர்தம்மடிபரவி, நங்கடம்வினைகெடமொழிபவல்ல ஞான சம்பந்தன்றமிழ்மாலை தங்கியமனத்தினாற்றொழுதெழுவார்த மர்நெறியுலகுக்கோர்தவநெறியே. 11

திருச்சிற்றம்பலம்

---

## திருநாவுக்கரசுநாயனர்.

### திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எங்கேயென்னையிருந்திடந்தேடிக்கொண்
டங்கேவந்தடையாளமருளினர்
தெங்கேசோலைத்திருவாய்மூர்ச்செல்வனார்
அங்கேவாவென்றுபோனாரதென்கொலோ. 1

மன்னுமாமறைக்காடுமணாளனார்
உன்னியுன்னியுறங்கிநின்றேனுக்குத்
தன்னைவாய்மூர்த்தலைவனாசொல்லி
என்னைவாவென்றுபோனாரதென்கொலோ. 2

பாடிப்பெற்றபரிசில்பழங்காசு
வாடிவாட்டந்தவிர்ப்பாரவரைப்போல்
தேடிக்கொண்டுதிருவாய்மூர்க்கேயெனா
ஓடிப்போந்திங்கொளித்தவாறென்கொலோ. 7

திறக்கப்பாடியவென்னினுஞ்செந்தமிழ்
உறைப்புப்பாடியடைப்பித்தாருநின்றார்
மறைக்கவல்லரோதம்மைத்திருவாய்மூர்ப்
பிறைக்கொள்செஞ்சடையாரிவர்பித்தரே. 8

தீண்டற்கரியதிருவடியொன்றினால்
மீண்டற்கும்மிதித்தாரரக்கன்றனை
வேண்டிக்கொண்டேன்றிருவாய்மூர்விளக்கினைத்
தூண்டிக்கொள்வனென்றலுந்தோன்றுமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தாண்டகம் ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாடவடியார்பரவக்கண்டேன் பத்தர்கணங்கண்டேன் மொய்த்தபூதம், ஆடன்முழவமதிரக்கண்டே னங்கையனல் கண்டேன்கங்கையாளைக், கோடலரவார்சடையிற்கண்டேன் கொக்கினிதழ்கண்டேன் கொன்றைகண்டேன், வாடற்றலை யொன்றுகையிற்கண்டேன் வாய்மூரடிகளைநான் கண்டவாறே.

பொருந்தாதசெய்கைபொலியக்கண்டேன்போற்றிசைத்துவிண்ணோர்புகழக்கண்டேன், பரிந்தார்க்கருளும்பரிசுங் கண்டேன்பாராகிப்புனலாகிநிற்கைகண்டேன், விருந்தாய்ப் பரந்ததொகுதிகண்டேன் மெல்லியலும்விநாயகனுந் தோன்றக்கண்டேன், மருந்தாய்ப்பிணிதீர்க்குமாறுகண்டேன்வாய் மூரடிகளைநான்கண்டவாறே. 8

திருச்சிற்றம்பலம்.

---

திருவாய்மூர்:—இது திருத்தென்றிருவாய்மூர் என்று வழங்கப்பெறும்; தொண்டைநன்னாட்டுத் திருவான்மியூரோடும் நடுநாட்டுத் திருவாமூரோடும் மயங்கற்பாலதன்று. சூர்யன் பூசித்த க்ஷேத்ரம். முசுகுந்தர் பிரதிஷ்டித்த ஸப்தவிடங்க க்ஷேத்ரங்களுள் ஒன்று. திருமறைக்காட்டில் வாகீஸர் தமக்குக் கதவு அரிதிற்றிறந்த தன்மையையுன்னி யுறங்கும்போது ஸ்வாமி கனவிற் றோன்றி "வாய்மூர்க்குவா" என்று ஆக்ஞாபிக்க நாயனார் விரைவில் எழுந்து ஸ்வாமியைத்தொடர்ந்துகொண்டே "எங்கேயென்னை" என்னும் திருக்குறுந்தொகையைப் பாடிக்கொண்டு இங்கெழுந்தருளி சமீபித்த உடன் ஓர் கோயிலைக் காட்டி மறைந்தருளினர். இதனுள்ளே ஆளுடைய பிள்ளையார் வாகீஸர் திருவாய்மூருக்குப் போகின்றாரென்று கேட்டுவந்து சேரலும் நாயனார் சுவாமியை, பிள்ளையாரே கதவைத்திறக்க வேண்டுமென்று

அறியாது திறந்து பிழைத்த எனக்கு மறைக்கலாம், பிள்ளையாருக்கு மறைக்கலாமோவெனக் கேட்டலும் சுவாமி பிள்ளையாருக்குக் காக்ஷி கொடுத்தருள அவர் நாயனாருக்குக்காட்ட அவர் கண்டுகளித்து "பாட வடியார்" என்னுந் திருத்தாண்டகம் பாடியருளினார். சுவாமி-வாய்மூர் நாதர், தேவியார்-பாலினுநன்மொழியாள், தீர்த்தம்—சூர்யதீர்த்தம், மூலஸ்தானத்துக்குப் பக்கத்தில் வேதாரண்யேசுரர் எழுந்தருளியிருக்கிறார். தியாகர்—நீலவிடங்கர், நடனம்-கமலநடனம். இதற்குப் பதிகம்-3

இத்தலம் (123) திருக்கோளிலியினின்றும் தென்கிழக்கே மட்சாலையில் மூன்றுமைலில் உள்ளது.

## கஉரு. திருமறைக்காடு.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம், உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சதுரம்மறைதான் றுதிசெய்துவணங்கும்
மதுரம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
இதுநன்கிறைவைத்தருள்செய்கவெனக்குன்
கதவந்திருக்காப்புக்கொள்ளுங்கருத்தாலே. 1

சங்கந்தரளம்மவைதான் கரைக்கெற்றும்
வங்கக்கடல்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
மங்கையுமைபாகமுமாகவிதென்கொல்
கங்கைசடைமேலடைவித்தகருத்தே. 2

பலகாலங்கள்வேதங்கள்பாதங்கள்போற்றி
மலரால்வழிபாடுசெய்மாமறைக்காடா
உலகேழுடையாய்கடைதோறுமுன்னென்கொல்
தலைசேர்பலிகொண்டதிலுண்டதுதானே. 6

காழிந்நகரான்கலைஞானசம்பந்தன்
வாழிம்மறைக்காடனைவாய்ந்தறிவித்த
ஏழின்னிசைமாலையீரைந்திவைவல்லார்
வாழியுலகோர்தொழவானடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுநாயனர்.

திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

இந்திரனோடுதேவரிருடிகளேத்துகின்ற
சுந்தரமானார்போலுந் துதிக்கலாஞ்சோதிபோலும்
சந்திரனோடுங்கங்கையரவையுஞ்சடையுள்வைத்து
மந்திரமானார்போலுமாமறைக்காடனாரே. 1
கால்கொடுத்திருகையேற்றிக்கழிநிரைத்திறைச்சிமேய்ந்து
தோல்படுத்துதிரநீராற்சுவரெடுத்திரண்டுவாசல்
ஏல்வுடைத்தாவமைத்தங்கேழுசாலேகம்பண்ணி
மால்கொடுத்தாவிவைத்தார்மாமறைக்காடனாரே. 4

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்ம்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே. 1
ஈண்டுசெஞ்சடையாகத்துளீசரோ
மூண்டகார்முகிலின்முறிக்கண்டரோ
ஆண்டுகொண்டநீரேயருள்செய்திடும்
நீண்டமாக்கதவின்வலிநீக்குமே. 2
அரக்கனைவிரலாலடர்த்திட்டநீர்
இரக்கமொன்றிலீரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னைகள்சூழ்மறைக்காடரோ
சரக்கவிக்கதவந்திறப்பிம்மினே. 10

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தூண்டுசுடரனையசோதிகண்டாய்தொல்லமரர்சூளாமணி
தான்கண்டாய், காண்டற்கரியானுள்கண்டாய்கருதுவார்க்

காற்றவெளியான்கண்டாய், வேண்டுவார்வேண்டுவதே யீ
வான்கண்டாய்மெய்ந்நெறிகண்டாய்விரதமெல்லாம், மாண்ட
மனத்தார்மனத்தான்கண்டாய் மறைக்காட்டுறையுமணாளன்
றானே. 1

கள்ளிமுதுகாட்டிலாடிகண்டாய்காலனையுங்காலாற்கடந்
தான்கண்டாய், புள்ளியுழைமானின் றோலான்கண்டாய்புலி
யுரிசே ராடைப்புனிதன்கண்டாய், வெள்ளிமிளிர்பிறைமேற்
சூடிகண்டாய் வெண்ணீற்றான்கண்டாய் நஞ்செந்தின்மேய,
வள்ளிமணாளற்குத்தாதைகண்டாய் மறைக்காட்டுறையுமணா
ளன்றானே. 4

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-காந்தாரம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

யாழைப்பழித்தன்னமொழிமங்கையொருபங்கன்
பேழைச்சடைமுடிமேற்பிறைவைத்தானிடம்பேணில்
தாழைப்பொழிலூடேசென்றுபூழைத்தலைநுழைந்து
வாழைக்கனிகூழைக்குரங்குண்ணும்மறைக்காடே. 1

சிகரத்திடையிளவெண்பிறைவைத்தானிடந்தெரியில்
முகரத்திடைமுத்தின்னொளிபவளத்திரளோதத்
தகரத்திடைதாழைத்திரண்ஞாழற்றிரணீழல்
மகரத்தொடுசுறவங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. 2

பாரூர்பலபுடைசூழ்வளவயனாவலர்வேந்தன்
வாரூர்வனமுலையாளுமைபங்கன்மறைக்காட்டை
ஆரூரனதமிழ்மாலைகள்பாடும்மடித்தொண்டர்
நீரூர்தருநிலனோடுபர்புகழாகுவர்தாமே. 10

திருச்சிற்றம்பலம்.

திருமறைக்காடு:—இது வேதாரணியம் என்றும் வழங்கப்பெறும். வேதங்கள் பூசித்தகாரணத்தால் இப்பெயரெய்தியது; ஆதிராமர் இங்கடைந்து சேதுபந்தனஞ்செய்து இராவணவதம்பண்ணிப் பாதகம்நீங்கப் பூசித்த க்ஷேத்ரமாதலின் ஆதிசேதுஎன்றும் கோடிக்கரை என்றும் சொல்லப்படும். பிரம்மதேவர் பூசித்து வேதோபதேசம் பெற்று சிருஷ்டிசாமர்த்யத்தையும், விஸ்வாமித்திரர் பூசித்து பிரம்மருஷித்வத்தையும், பிந்தியராமர் பூசித்து இராவணனது வீரஹத்தி நீக்கத்தையும் பெற்றதலம். கங்கை மூழ்கிப் புனிதமாகிய மணிகர்ணிகையும், காவேரிமூழ்கிப் புனிதமாகிய தேவபூஷணமும் தன்னிடத்தமைந்த க்ஷேத்ரம். பூமியைச்சமன்செய்யச் சிவாக்ஞையால் வந்த அகஸ்தியமுனிவர் மணவாளக்கோலம் தரிசித்த பழம்பதி. வேதங்கள்பூசித்துத் திருக்காப்பிட்ட திருக்கதவினைத் திருநாவுக்கரசுநாயனர் திறந்தும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அடைத்தும் தேவாரத் திருவருட்பாக்கள் தமிழ்வேதமாம் என்று வற்புறுத்திக் காட்டியவளநகர். சுந்தரமூர்த்திநாயனர் சேரமான்பெருமாணயனரோடு எழுந்தருளித் தரிசித்த நன்னகரம். நெய்யுண்ணவந்த எலி மங்கிய தீபத்தைத் தூண்டி மறுபிறப்பில் மாவலிச்சக்ரவர்த்தியாகிய திருப்பதி. (இதனைத் திருக்குறுக்கைத் திருநேரிசையிற் காண்க) முசுகுந்தர் பிரதிஷ்டித்த ஸப்தவிடங்கங்களுள் ஒன்று. சுவாமி-வேதாரண்யேசுரர், தேவியார்-யாழைப்பழித்தமொழியம்மை, தீர்த்தம்-வேததீர்த்தம் முதலியன. விருக்ஷம்-வன்னி, இலிங்கமூர்த்திக்குப் பின் மணவாளக்கோலம். விடங்கர் -- புவனவிடங்கர், நடனம் -- ஹம்ஸநடனம். இதற்குப் பதிகம்-10.

இத்தலம் திருத்தருப்பூண்டி ஸ்டேஷனிலிருந்து கிழக்கே மட்சாலையில் 10-மைலில் மேலமருதூரைக்கடந்து 13-மைலில் உள்ளது. நாகபட்டணத்திலிருந்து தெற்கே கழியில் தோணிமார்க்கம் 30-மைல்.

---

## கஉ௬. திருவகத்தியான்பள்ளி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வாடியவெண்டலைமாலைசூடிமயங்கிருள்
நீடெரிகொள்ளிவிளக்குமாகநிவந்தெரி

ஆடியவெம்பெருமானகத்தியான்பள்ளியைப்
பாடியசிந்தையினர்கட்கில்லையாம்பாவமே. 1

செறுத்ததுவுந்தக்கன்வேள்வியைத்திருந்தார்புரம்
ஒறுத்ததுவுமொளிமாமலருறைவான்சிரம்
அறுத்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
இறுத்ததுவுமரக்கன்றன்றோள்களிருபதே. 8

ஞாலமல்குந்தமிழ்ஞானசம்பந்தன்மாமயில்
ஆலுஞ்சோலைபுடைசூழகத்தியான்பள்ளியுள்
சூலநல்லபடையானடிதொழுதேத்திய
மாலைவல்லாரவர்தங்கண்மேல்வினைமாயுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவகத்தியான்பள்ளி:—மணவாளக்கோல தரிசனத்தின் பொருட்டு அகஸ்தியர் தங்கித் தவஞ்செய்த தலமாதலின் இப்பெயரெய்தியது. அகஸ்தியர்பூஜை. அகஸ்தியர் திருவுருவம் கோயிலில் அமைக்கப்பெற்றிருக்கிறது. ஸ்வாமி-அகஸ்தீஸ்வரர், தேவியார்-பாகம்பிரியாநாயகி, தீர்த்தம்-அக்னிதீர்த்தம். இதற்குப் பதிகம்-1.

இத்தலம் (125) திருமறைக்காட்டிலிருந்து தெற்கே கோடிக்கரைமார்க்கத்தில் இரண்டரைமைலில் உள்ளது.

---

## கஉஎ. திருக்கோடிக்குழகர்.

### சுந்தரமூர்த்திநாயனர்.

பண்-கொல்லி-எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கடிதாய்க்கடற்காற்றுவந்தெற்றக்கரைமேல்
குடிதானயலேயிருந்தாற்குற்றமாமோ
கொடியேன்கண்கள்கண்டனகோடிக்குழகீர்
அடிகேளுமக்கார்துணையாகவிருந்தீரே. 1

முன்றான்கடனஞ்சமுண்டவதனாலோ
பின்றான்பரவைக்குபகாரஞ்செய்தாயோ
குன்றாப்பொழில்சூழ்தருகோடிக்குழகா
என்றான்றனியேயிருந்தாயெம்பிரானே. 2

பாரூர்மலிசூழ்மறைக்காடதன்றென்பால்
ஏரார்பொழில்சூழ்தருகோடிக்குழகை
ஆரூரனுரைத்தனபத்திவைவல்லார்
சீரூர்சிவலோகத்திருப்பவர்தாமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கோடிக்குழகர்:—இது குழகர்கோயில் எனவழங்கும். தேவர்கள் பாற்கடலை மதனஞ்செய்து உண்டு எஞ்சிய அமுதை வாயுவின்கரத்தில் கொடுக்க அவன் அதனை ஆகாயவீதியிற் கொண்டு செல்லும்போது கீழ்வீழ்ந்து இலிங்கவுருவாய் அமைந்ததலம். தேவர்க்ள்பூசித்து அமுதம் பெற்றனர். ஸ்வாமி-அமிர்தகடேசர், தேவியார்-மையார்தடங்கண்ணியம்மை, தீர்த்தம்-அமுதவாரி. சிவபெருமான் கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றும் கடற்கரையில் தனித்திருப்பதைப் பாராட்டிச் சுந்தரமூர்த்திநாயனர் வருந்துகிறார்கள். இதற்குப் பதிகம்–1.

இத்தலம் (125) திருமறைக்காட்டினின்றும் தெற்கே மட்சாலையில் இரண்டுமைலில் திருவகத்தியான் பள்ளியைக்கடந்து அங்கிருந்துதெற்கு எழுமைலில் உள்ளது.

சோழநாட்டுத் தலங்கள் ககூ0-ம் முற்றின.

---

ஈழநாடு

## க. திருக்கோணமலை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-புறநீர்மை, ந-ந் திருமுறை,

திருச்சிற்றம்பலம்.

நிரைகழலரவஞ்சிலம்பொலியலம்பு நிமலர்நீறணிதிருமேனி, வரைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தவடிவினர் கொடியணிவிடையர், கரைகெழுசந்துங்காரகிற்பிளவுமளப்பருங்கனமணிவரன்றிக், குரைகடலோத நித்திலங்கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே. 1

கடிதெனவந்தகரிதனையுரித்துவவ்வுரிமேனிமேற்போர்ப்பர்,பிடியனநடையாள்பெய்வளைமடந்தைபிறைநுதலவளொடுமுடனுப்க், கொடிதெனக்கதறுங் குரைகடல்சூழ்ந்துகொள்ளமுனித்திலஞ்சுமந்து, குடிதனைநெருங்கிப்பெருக்கமாய்த்தோன்றுங்கோணமாமலையமர்ந்தாரே. 2

குற்றமிலாதார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரைக், கற்றுணர்கேள்விக்காழியர்பெருமான்கருத்துடைஞானசம்பந்தன், உற்றசெந்தமிழார்மாலையீரைந்துமுரைப்பவர்கேட்பவருயர்ந்தோர், சுற்றமுமாகித்தொல்வினையடையார்தோன்றுவர்வானிடைப்பொலிந்தே. 11

திருச்சிற்றம்பலம்.

திருக்கோணமலை:—இது "திருக்கணமலை" என்று வழங்கப்பெறும்,முன்வாயுவுக்கும் சேடனுக்கும் யார்வலியார் என நேர்ந்த விவாதத்தில் சேடன் மேருவைத் தன் உடலினுற்சுற்றிப் பிணித்து நிற்ப வாயு தன்பலத்தினுல் மேருவை இயக்குமாறு தாக்க அதன் கொடுமுடி மூன்றுதகர்ந்து தக்ஷிணத்துத் திருக்காளத்தியிலும், திரிசிராப்பள்ளியிலும் இங்கும் வந்துவீழ்ந்து நிலைபெற்று தக்ஷிண கைலாயங்களாயின. ஆகவே இது தக்ஷிணகைலாய மெனப்பெறும். இந்திரன் பூசித்துப் பேறுபெற்றதெனக் கூறுப. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரும், சுந்தரமூர்த்திநாயனுரும் இதனையும் திருக்கேதீச்சரத்தையும் திருவிராமேச்சரத்திலிருந்தே பாடியருளினர். சுவாமி-கோணேசுரர், தேவியார்-மாதுமைபாள். இதற்குப் பதிகம்-1.

இத்தலம் இலங்கைத்தீவில் யாழ்ப்பாணத்திற்குத் தென்கிழக்கில் உள்ளது.

## உ. திருக்கேதீச்சரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-நட்டராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விருதுகுன்றமாமேருவினுணரவாவனலெரியம்பாப்
பொருதுமூவெயில்செற்றவன்பற்றிநின்றுறைபதிபெந்நாளும்

கருதுகின்றவூர்கனைகடற்கடிகமழ்பொழிலணிமாதோட்டம்
கருதநின்றகேதீச்சரங்கைதொழக்கடுவினையடையாவே. 1

பாடல்வீணையர்பலபலசரிதையரெருதுகைத்தருநட்டம்
ஆடல்பேணுவரமரர்கள்வேண்டநஞ்சுண்டிருள்கண்டத்தர்
ஈடமாவதுவிருங்கடற்கரையினிலெழிறிகழ்மாதோட்டம்
கேடிலாதகேதீச்சரந்தொழுதெழக்கெடுமிடர்வினைதானே. 2

மாடெலாமணமுரசெனக்கடலினதொலிகவர்மாதோட்டத்
தாடலேறுடையண்ணல்கேதீச்சரத்தடிகளையணிகாழி
நாடுளோர்க்கிறைஞானசம்பந்தன்சொனவின்றெழுபாமாலை
பாடலாயினபாடுமின்பத்தர்கள்பரகதிபெறலாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண் நட்டபாடை. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நத்தார்புடைஞானன்பசுவேறிந்நனைகவிழ்வாய்
மத்தம்மதயானையுரிபோர்த்தமணவாளன்
பத்தாகியதொண்டர்தொழுபாலாவியின்கரைமேல்
செத்தாரெலும்பணிவான்றிருக்கேதீச்சரத்தானே. 1

சுடுவார்பொடிநீறுந்நலதுண்டப்பிறைக்கீளும்
கடமார்களியானையுரியணிந்தகறைக்கண்டன்
படவேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேல்
திடமாவுறைகின்றான்றிருக்கேதீச்சரத்தானே. 2

கறையார்கடல்சூழ்ந்தகழிமாதோட்டநன்னகருள்
சிறையார்பொழில்வண்டியாழ்செயுங்கேதீச்சரத்தானை
மறையார்புகழூரன்னடித்தொண்டன்னுரைசெய்த
குறையாத்தமிழ்ப்பத்துஞ்சொலக்கூடாகொடுவினையே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கேதீச்சரம்:—இது மாதோட்டம் என்று வழங்கிய தென்றும் பாலாவி என்னும் ஆற்றங்கரையில் இருந்ததாயும் இப்போது ஜீர்ணமாய்ப்போய் புதிதாக வெடுக்கப்படுகிற தெனவும் தெரிகிறது. சுவாமி-கேதீச்சரர், தேவியார்-கௌரியம்மை, தீர்த்தம்-பாலாவி. இதற்குப் பதிகம்-2.

இத்தலம் இலங்கைத்தீவில் யாழ்ப்பாணத்திற்குத் தென்கிழக்காயுள்ளதாம்.

ஈழநாட்டுத் தலங்கள் உ-ம் முற்றின.

---

## பாண்டிநாடு

## க. திருவாலவாய்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

திருவிருக்குக்குறள்.

பண்-குறிஞ்சி. க-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

நீலமாமிடற், றாலவாயில
பாலதாயினர், ஞாலமாள்வரே. 1

ஞாலமேழுமாம், ஆலவாயிலார்
சீலமேசொலீர், காலன்வீடவே. 2

ஆலநீழலார், ஆலவாயிலார்
காலகாலனர், பாலதாமினே. 3

அடிகளாலவாய்ப், படிகொள்சம்பந்தன்
முடிவிலின்றமிழ், செடிகணீக்குமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநீற்றுப்பதிகம்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு

தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிருவாலவாயான்றிருநீறே. 1
வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
ஓதத்தகுவதுநீறுவுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. 2
முத்திதருவதுநீறுமுனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறுதக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறுபரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. 3
காணவினியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. 4
பூசவினியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசைகெடுப்பதுநீறுவந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. 5
அருத்தமதாவதுநீறுவவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறுவானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறுபுண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. 6
எயிலதுவட்டதுநீறுவிருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறுபாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறுசுத்தமதாவதுநீறு
அயிலைப்பொலிதருசூலத்தாலவாயான்றிருநீறே. 7
இராவணன்மேலதுநீறுவெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறுபாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறுதத்துவமாவதுநீறு
அராவணங்குந்திருமேனியாலவாயான்றிருநீறே. 8

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண்மெய்யதுவெண்பொடிநீறு
ஏலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவதுநீறு
ஆலமதுண்டமிடற்றெம்மாலவாயான்றிருநீறே. 9

குண்டிகைக்கையர்களோடுசாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறுகருதவினியதுநீறு
எண்டிசைப்பட்டபொருளாரேத்துந்தகையதுநீறு
அண்டத்தவர்பணிந்தேத்துமாலவாயான்றிருநீறே. 10

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும்பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்நல்லவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-கொல்லி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடேல்
ஆனைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சேர்
ஈனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயானிற்கவே. 1

சந்துசேனனுமிந்துசேனனுந்தருமசேனனுங்கருமைசேர்
கந்துசேனனுங்கனகசேனனுமுதலதாகியபெயர்கொளா
மந்திபோற்றிரிந்தாரியத்தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா
அந்தகர்க்கெளியேனலேன்றிருவாலவாயானிற்கவே. 4

எக்காமமண்கையருக்கெளியேனலேன்றிருவாலவாய்ச்
சொக்கனென்னுளிருக்கவேதுளங்கும்முடித்தென்னன்முன்னிவை
தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்நாதன்ஞானசம்பந்தன்வாய்
ஒக்கவேயுரைசெய்தபத்துமுரைப்பவர்க்கிடரில்லையே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண் கௌசிகம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காட்டுமாவதுரித்துரிபோர்த்துடல்
நாட்டமூன்றுடையாயுரைசெய்வனான்
வேட்டுவேள்விசெய்யாவமண்கைபரை
ஓட்டிவாதுசெயத்திருவுள்ளமே. 1

மத்தயானையினீருரிமூடிய
அத்தனேயணிபாலவாயாய்பணி
பொய்த்தவன்றவவேடத்தராஞ்சமண்
சித்தரையழிக்கத்திருவுள்ளமே. 2

செந்தெனாமாலுந்திருவாலவாய்
மைந்தனேயென்றுவல்லமணாசறச்
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞான
பந்தன்சொற்பகரும்பழிநீங்கவே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-கௌசிகம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

செய்யனேதிருவாலவாய்மேவிய
ஐயனேயஞ்சலென்றருள்செய்யெனைப்
பொய்யராமமணர்கொளுவுஞ்சுடர்
பையவேசென்றுபாண்டியற்காகவே. 1

தக்கன்வேள்விதகர்த்தருளாலவாய்ச்
சொக்கனேயஞ்சலென்றருள்செய்யெனை
எக்கராமமணர்கொளுவுஞ்சுடர்
பக்கமேசென்றுபாண்டியற்காகவே. 3

அப்பனாலவாயாதியருளினால்
வெப்பந்தென்னவன்மேலுறமேதினிக்
கொப்பஞானசம்பந்தனுரைபத்தும்
செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருவிராகம்.

பண்-கௌசிகம், ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழல்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதில்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. 1

பட்டிசைந்தவல்குலாள்பாவையாளோர்பாகமா
ஒட்டிசைந்ததன்றியும்முச்சியாளொருத்தியாக்
கொட்டிசைந்தவாடலாய்கூடலாலவாயிலாய்
எட்டிசைந்தமூர்த்தியாயிருந்தவாறிதென்னையே. 2

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே. 3

போயநீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினால்
ஆயசொல்லின்மாலைகொண்டாலவாயிலண்ணலைத்
தீயதீரவெண்ணுவார்கள்சிந்தையாவர்தேவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## நாலடிமேல்வைப்பு.

பண்-பழம்பஞ்சுரம் ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வேதவேள்வியைநிந்தனைசெய்துழல்
ஆதமில்லியமணொடுதேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
பாதிமாதுடனாயபரமனே.
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. 1

வைதிகத்தின் வழிபொழுகாதவக்
கைதவம்முடைக் காரமண் டோரை
எய்திவாதுசெயத் திருவுள்ளமே
மைதிகழ்தருமாமணிகண்டனே
ஞாலநின்புகழேமிக வேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. 2

மறைவழக்கமிலாதமாபாவிகள்
பறிதலைக்கையர் பாயுடுப்பார்களை
முறியவாதுசெயத் திருவுள்ளமே
மறியுலாங்கையின் மாமழுவாளனே.
ஞாலநின்புகழேமிக வேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. 3

கூடலாலவாய்க் கோனைவிடைகொண்டு
வாடன் மேனியமணரைவாட்டிட
மாடக்காழிச்சம்பந்தன் மதித்தவிப்
பாடல்வல்லவர் பாக்கியவாளரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவியமகம். ந.-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

ஆலநீழலுகந்த திருக்கையே யானபாடலுகந்த திருக்கையே, பாலினேர்மொழியாளொருபங்கனே பாதமோதலர் சேர்புரபங்கனே, கோலநீறணி மேதகுபூதனே கோதிலார்மனமேவியபூதனே, ஆலநஞ்சமுதுண்டகளத்தனே யாலவாயுறையண்டர்களத்தனே. 1

பண்டயன்றலையொன்றுமறுத்தியே பாதமோதினர் பாவமறுத்தியே, துண்டவெண்பிறைசென்னியிருத்தியே தூயவெள்ளெருதேறியிருத்தியே, கண்டுகாமனை வேவவிழித்தியே காதலில்லவர் தம்மையிழித்தியே, அண்டநாயகனே மிகுகண்டனேயாலவாயினின் மேவியகண்டனே. 4

ஈனஞானிகட்கொடுவிரகனேயேறுபல்பொருண்முத்தமிழ்விரகனே, ஆனகாழியுண்ஞானசம்பந்தனேயாலவாயினின்மேயசம்பந்தனே, ஆனவானவர்வாயினுளத்தனேயன்பானவர்வாயினுளத்தனே, நானுரைத்தனசெந்தமிழ்பத்துமேவல்லவர்க்கிவைநற்றமிழ்பத்துமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-புறநீர்மை. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைம்மடமானி, பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப், பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி, அங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. 1

வெற்றவேயடியாரடிமிசைவீழும் விருப்பினன்வெள்ளைநீறணியும், கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்தும், ஒற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினிலியற்கையையொழிந்திட், டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. 2

நலமிலராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற
குலமிலராகக்குலமதுண்டாகத்தவம்பணிகுலச்சிறைபரவும்
கலைமலிகரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்டன்
அலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 6

முத்தின்றாழ்வடமுஞ்சந்தனக்குழம்புநீறுந்தன்மார்பினின்முயங்கப், பத்தியார்கின்றபாண்டிமாதேவிபாங்கொடுபணிசெயநின்ற, சுத்தமார்பளிங்கின்பெருமலையுடனேசுடர்மரகதமடுத்தாற்போல், அத்தனுமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. 7

பன்னலம்புணரும்பாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியும், அன்னலம்பெறுசீராலவாயீசன்றிருவடியாங்கவை

போற்றிக், கன்னலம்பெரியகாழியுண்ஞானசம்பந்தன்செந்த
மிழிவைகொண், டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்
றிருப்பவரினிதே. 11

திருச்சிற்றம்பலம்,

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வேதியாவேதகீதாவிண்ணவரண்ணாவென்றென்
றோதியேமலர்கடூவியொருங்கிநின்கழல்கள்காணப்
பாதியோர்பெண்ணைவைத்தாய்படர்சடைமதியஞ்சூடும்
ஆதியேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 1

நலந்திகழ்வாயினூலாற்சருகிலைப்பந்தர்செய்த
சிலந்தியையரசதாளவருளினையென்றுதிண்ணம்
கலந்துடன்வந்துநின்றாள்கருதிநான்காண்பதாக
அலந்தனனாலவாயிலப்பனேயருள்செயாயே. 9

பொடிக்கொடுபூசிப்பொல்லாக்குரம்பையிற்புந்தியொன்றிப்
பிடித்துநின்றாள்களென்றும்பிதற்றிநானிருக்கமாட்டேன்
எடுப்பனென்றிலங்கைக்கோன்வந்தெடுத்தலுமிருபதுதோள்
அடர்த்தனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 10

திருச்சிற்றம்பலம்.

---

### திருத்தாண்டகம் ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றிமுதிருஞ்
சடைமுடிமேன்முகிழ்வெண்டிங்கள், வளைத்தானைவல்லசுரர்
புரங்கண்மூன்றும்வரைசிலையாவாசுகிமாநாணுக்கோத்துத், து
ளைத்தானைச்சுடுசரத்தாற்றுவளநீறாத்தூமுத்தவெண் முறுவ
லுமையோடாடித், திளைத்தானைத்தென்கூடற்றிருவாலவாய்
ச்சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 1

மூவனைமூர்த்தியைமூவாமேனியுடையானைமூவுலகுந்தானேயெங்கும், பாவனைப்பாவமறுப்பான்றன்னைப்படியெழுதலாகாதமங்கையோடு, மேவனைவிண்ணோர்நடுங்கக்கண்டுவிரிகடலினஞ்சுண்டமுகமீந்த, தேவனைத் தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப்பெற்றேனனே. 6

வாயானைமனத்தானைமனத்துணின்றகருத்தானைக்கருத்தறிந்துமுடிப்பான்றன்னைத், தூயானைத்தூவெள்ளையேற்றான்றன்னைச் சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென், தாயானைத்தவமாயதன்மையானைத்தலையாயதேவாதி தேவர்க்கென்றும், சேயானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப்பெற்றேனனே. 8

திருச்சிற்றம்பலம்.

---

திருவாலவாய்:—இது மதுரை என்று பிரசித்தமாக வழங்கும்; முதல் ஓர்வணிகன் கண்டுவந்து தெரிவிக்க சிவாக்ஞைப்பால் குலசேகர பாண்டியன் திருநகரங் கண்டபோது சிவபெருமான் தம்சிரத்திற்றரித்த பிறைமிடத்துள்ள மது (அமிர்தம்) வைத் தெறித்துச் சுத்மாக்கிய காரணத்தால் மதுரை யெனவும், பாண்டியனிடங்கொண்ட பகையால் வருணன் ஏவிய ஸப்தமேகவருஷத்தில் மதுரை அழியாதபடி சோமசுந்தரக்கடவுள் ஏவிய நான்குமேகங்கள் கூடமாகக்கவிந்து ரக்ஷித்தமையின் நான்மாடக்கூடல் எனவும், கடல் வெள்ளத்தால் அழிந்த மதுரையைமீண்டும் அமைக்க வெண்ணிய பாண்டியன் கருத்து முற்றுப்பெற ஸுந்தரேஸக்கடவுள் தமது சரீரத்தில் அணிந்த ஆலவாய்(சர்ப்பம்)ஒன்றினல் எல்லை குறித்துக்காட்டினமையின் திருவாலவாய் எனவும், கடம்பு ஸ்தல விருக்ஷமாதலின் கடம்பவனம் எனவும், ஆதாரங்கடந்த நிராதாரப்பரவெளி க்ஷேத்ரமாதலின் துவாதசாந்த மெனவும்,சிவபெருமான் உமாதேவியாரோடு எழுந்தருளி அரசு செய்தமையின் பூலோககயிலாயம், சிவராஜதானி எனவும், இன்னும் இவைபோல்வனவாகிய பற்பல காரணத்தால் பல திருநாமங்களையுடையது; பாண்டிநாட்டின் ராஜதானி; பொய்யடிமையில்லாத புலவர்களாகிய நக்கீரர், கபிலர், பரணராதி உண்மைப்புலவர் எழுந்தருளியிருந்து பலபாசுரம் பாடிய பழம்பதி; மூம்மைச் சங்கமும் நிலைபெற்று முத்தமிழாராய்ந்த முதுநகர்; சிவபெருமான் திருவுருக்கொடு

எழுந்தருளி எண்ணெண்ணுடலியற்றிய திவ்யக்ஷேத்ரம்; வைசியகுலத்திலே திருவவதாரஞ்செய்த மூர்த்திநாயனார் சோமசுந்தரக்கடவுளுக்குச் சாத்தும்படி நித்யம் சந்தனத்திருக்காப்புத் திருப்பணிசெய்து வரும் நாளில் சமண்சமயச் சார்பினனாகிய கருநாடராஜன் செய்தகொடுமையால் திருப்பணி முட்டுப்பாடாக நாயனார் சந்தனத்துக்கு முட்டெனினும் தங்கரத்திற்கு முட்டிலது என்று தேய்த்து வன்றொண்டு புரிய பரமசிவன் வெளிப்பட்டு ஊறுதீர்த்து அநுக்கிரஹிக்கப் பெற்றும், மறுநாள் அவ்வரசன் இறந்தபோது சிவாக்ஞையால் தாமே அரசராகி உலகப்பற்றைவிட்டு விபூதி, உருத்ராக்ஷம், சடைமுடி என்னும் மும்மைச்சாதனங்களால் அரசாண்டும் முத்திபெற்ற மூதூர்; கனகஸபை, ரஜிதஸபை, இரத்னஸபை, தாம்ரஸபை, சித்ரஸபை என்னும் பஞ்சஸபைகளுள் ரஜிதஸபையாகிய வெள்ளியம்பலம்; அறுபான் மும்மை நாயன்மார்களுள் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறநாயனாரும், ஆளுடைய பிள்ளையார் திருமுலைப்பாலுண்ட செய்திகேட்டுத் தம் தனம் சுரக்கப்பெற்ற தலையன்பினராகிய அவர் மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும், இவர் சைவந்தழைக்க அரசுபுரிய அநுகூலராகிய குலச்சிறைநாயனாரும் ஆகிய மூவரும் வதிந்த திருநகரம்; இந்திரன் பிரம்மஹத்தி நீங்கவும், வருணன் வயிற்றுவலி தொலையவும், இராமலக்ஷ்மணர் ராவணவதஞ்செய்யவும், ரிஷிகள் வேதார்த்த ஞானசித்தியடையவும், பூசித்த க்ஷேத்ரம்; சிவபூஜையினது மஹிமையை உலகறிந்து பூசித்து உய்யுமாறு சோமசுந்தரக்கடவுள் தாமே தமது ஆன்மார்த்த மூர்த்தியாகப் பிரதிட்டித்துப் பூசித்த இஷ்டவரதர் (இம்மையே நன்மைதருவார்) எழுந்தருளியிருக்கும் தன்மையது; ... மாதாய வந்தியம்மையாரிடம் பிட்டருந்திவைகையடைத்துப் பாண்டியன் பிரம்படிபட்டுச் சொக்கலிங்கப்பெருமான் தாமே ஸர்வவியாபியாகிய விஸ்வாதிகனும் விஸ்வ ஸேவ்யனும், விஸ்வரூபியும் விஸ்வாந்தர்யாமியுமாமெனும் வேதவாய்மையை வெளிப்படுத்தியது; திருநீலகண்டப்பெரும்பாணர்க்குச் சிவபெருமான் அருளிய திறத்தை ஞானசம்பந்தர் திருவியமகத் திருப்பதிகத்தில் போற்றப்பெற்றது; பாணபத்திரருக்குப் பரமசிவன் 'மதிமலிபுரிசை' என்னும் திருப்பாசுரம் எழுதிச் சேரமான் பெருமானுபனால் நிதிகொடுப்பித்தது; ஞானசம்பந்தர் வாகீசரோடு வேதாரணியத்து எழுந்தருளியிருந்தகாலை மதுரை சமண் சமயக்காடு மூடிக் கூன்பாண்டியரும் அதன் சார்பினராய் இருந்தமையின் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் விண்ணப்பஞ்

செய்த பிள்ளையாரை மதுரைக்கு எழுந்தருள்வித்துப் பிள்ளையார் மடத்தில் சமணர்வைத்த தீ பிள்ளையாரது ஆக்ஞையால் சுரநோயாகப் பாண்டியரைப்பற்ற அதனை அவராற்றீர்வித்தும், பின்னர் அவரால் அனலில் திருநள்ளாற்றுப்பதிகத்தை இட்டும், வைகையில் திருப்பாசுரமெழுதிய ஏட்டினை இட்டும் சமணரோடு வாதஞ்செய்து வென்று சமணரைக்கழுவேற்றியும் அரசரைச் சைவராக்கி அவர் கூனையும் தீர்த்தும் சைவஸ்தாபனஞ் செய்தது; பிள்ளையார் சிவபாத விருதயர் இங்கு எழுந்தருளியபோது சீகாழியில் தமக்குப் பரமசிவன் முன் அருளியதை நினைந்து "மண்ணினல்ல வண்ணம் வாழலாம்" என்னும் திருப்பதிகம் பாடியது; வாகீஶர் எழுந்தருளி மூல லிங்கத்தைத் தரிசித்து அது மூலலிங்கமாதலை "மூலத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்று துதித்தருளினது; சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமாணாயனாரோடு எழுந்தருளியபோது இங்கிருந்த சோழபாண்டிய ராஜாக்களோடு சேர்ந்து மூவேந்தரோடும் தொழுதது; ஸ்ரீமன் மணிவாசக மூர்த்திகள் அரிமருத்தன பாண்டியனிடத்து முதன் மந்திரியாய், பாண்டியன் திரவியங்கொண்டு குதிரை வாங்கச் சென்று திருப்பெருந்துறையில் ஆட்கொள்ளப் பெற்றுப் பாண்டியனுக்குப் பரமசிவனால் குதிரைகள் கொடுப்பித்துப் பாண்டியனை உய்வித்துத் தாமும் உய்ந்தது; காசிமடங் கண்டவரும் சைவ சித்தாந்த பாநுவுமாகிய ஸ்ரீமன் குமரகுருபர சுவாமிகள் திருமலை நாயக்கர் காலத்தில் எழுந்தருளி பிள்ளைத்தமிழ் முதலிய பல பிரபந்தங்கள் பாடி மீனாக்ஷியம்மையாரது திருவருள் பெற்றது; இவை போல்வனவாய மஹிமாதிஸயங்கள் எண்ணிறந்தன உடையது. ஸ்வாமி-சொக்கலிங்கமூர்த்தி, தேவியார்-மீனாக்ஷியம்மை, விநாயகர்-சித்திவிநாயகர், அம்பலம்-வெள்ளியம்பலம், நடனம்-கான்மாறியாடியது, கல்லானைக்குக் கரும்பருத்திய எல்லாம் வல்லசித்தர் சந்நிதி சண்டேஸ்வரர் சந்நிதிக்கு மேற்கிலுள்ளது. விமானம் அஷ்டகஜங்களும் தாங்கும் இந்திரவிமானம், விருக்ஷம்-கடம்பு, தீர்த்தம்-பொற்றாமரை, எழுகடல், வைகை முதலியன. இதற்குப் பதிகம்-11. ஹாலாஸ்ய மாஹாத்மியம், நீபவநமாஹாத்மிய முதலியன வடமொழியிலும், திருவிளையாடற்புராணம், கடம்பவநபுராணம், வேப்பத்தூரார் திருவிளையாடல்முதலிய தமிழிலும் இதன் மஹிமையைக் கூறும். ஸங்கநூல்கள் பல இதன் பெருமை பகரும்.

இத்தலம் மதுரை ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலையில் முக்கால்மைலில் உள்ளது.

## உ. திருவாப்பனூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-குறிஞ்சி. உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முற்றுஞ்சடைமுடிமேன்முதிராவிளம்பிறையன்
ஒற்றைப்படவரவமதுகொண்டரைக்கணிந்தான்
செற்றமில்சீரானைத்திருவாப்பனூரானைப்
பற்றுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. 1

குரவங்கமழ்குழலாள்குடிகொண்டுநின்றுவிண்ணோர்
விரவுந்திருமேனிவிளங்கும்வளையெயிற்றின்
அரவமணிந்தானையணியாப்பனூரானைப்
பரவுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. 2

அந்தண்புனல்வைகையணியாப்பனூர்மேய
சந்தமலர்க்கொன்றைசடைமேலுடையானை
நந்தியடிபரவுநலஞானசம்பந்தன்
சந்தமிவைவல்லார்தடுமாற்றறுப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவாப்பனூர்:—இது இப்போது "திருவாப்புடையார் கோயில்" என்று வழங்கும்; பாண்டியராஜன்பொருட்டு ஸ்வாமி ஆப்பினிடத்தில் தோன்றியருளிய காரணத்தால் இப்பெயரெய்தியது. ஸ்ரீ நடராஜ சிவகாமசுந்தரி மூர்த்தங்கள் சிலையிலும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. சுவாமி-ஆப்பனூர்க்காரணர், தேவியார்-அம்பிகை, தீர்த்தம்-இடபதீர்த்தம். இதற்குப் பதிகம்-1.

இத்தலம் மதுரை ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே கற்சாலையில் ஒருமைலில் வைகையாற்றின் வடகரையி லுள்ளது.

---

## ௩. திருப்பரங்குன்றம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீடலர்சோதிவெண்பிறையோடுநிரைகொன்றை
சூடலனந்திச்சுடரெரியேந்திச்சுடுகானில்

ஆடலனஞ்சொலணியிழையாளையொருபாகம்
பாடலன்மேயநன்னகர்போலும்பரங்குன்றே. 1
அங்கமொராறுமருமறைநான்குமருள்செய்து
பொங்குவெண்ணூலும்பொடியணிமார்பிற்பொலிவித்துத்
திங்களும்பாம்புந்திகழ்சடைவைத்தோர்தேன்மொழி
பங்கினன்மேயநன்னகர்போலும்பரங்குன்றே. 2
தடமலிபொய்கைச்சண்பைமன்ஞானசம்பந்தன்
படமலிநாகமரைக்கசைத்தான்றன்பரங்குன்றைத்
தொடைமலிபாடல்பத்தும்வல்லார்தந்துயர்போகி
விடமலிகண்டனருள்பெறுதன்மைமிக்கோரே. 11

திருச்சிற்றம்பலம்

---

## திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும்.

### சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-இந்தளம். ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

கோத்திட்டையுங்கோவலுங்கோயில்கொண்டீருமைக் கொண்டுழல்கின்றதோர்கொல்லைச்சில்லைச், சேத்திட்டுக்குத் தித்தெருவேதிரியுஞ்சிலபூதமுநீருந்திசைதிசையன, சோத்தி ட்டுவிண்ணோர்பலருந்தொழநும்மரைக்கோவணத்தோடொரு தோல்புடைசூழ்ந், தார்த்திட்டதும்பாம்புகைக்கொண்டதும் பாம்படிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. 1

முண்டந்தரித்தீர்முதுகாடுறைவீர்முழுநீறுமெய்பூசுதிர் மூக்கப்பாம்பைக், கண்டத்திலுந்தோளிலுங்கட்டிவைத்தீர் கடலைக்கடைந்திட்டதோர்நஞ்சையுண்டீர், பிண்டஞ்சுமந்தும் மொடுங் கூட்டமாட்டோம் பெரியாரொடு நட்பினிதென்றிருத் தும், அண்டங்கடந்தப்புறத்துமிருந்தீரடிகேளுமக்காட் செய வஞ்சுதுமே. 2

அடிகேளுமக்காட்செயவஞ்சுதுமென்றமரர்பெருமானை யாரூரனஞ்சி, முடியாவுலகாண்டமூவேந்தர்முன்னேமொழிந் தாறுமோர்நான்குமோரொன்றினையும், படியாவிவைகற்றுவல்

லவடியார்பரங்குன்றமேயபரமனடிக்கே, குடியாகிவானோர்க்
குமோர்கோவுமாகிக்குலவேந்தராய்விண்முழுதாள்பவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பரங்குன்றம்:—திருப்பரங்கிரி என்றும் வழங்கும். முருகக்கடவுளது படைவீடு ஆறனுள் முதன்மையானது. அவை திருப்பரங்குன்றம், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், திருச்சீரலைவாய், திருப்பழமுதிர்சோலை என்பனவாம். சூரஸம்ஹாராந்தரம் தேவஸேனையாரைத் திருமணம் புணர்ந்த தலம். இத்திருமணக்காலத்தில் சிவபெருமான் உமாதேவியாரோடு எழுந்தருளி முருகக்கடவுளுக் கனுக்கிரஹித்துத் தேவர்களுக்கும் காக்ஷிகொடுத்தனர். சுந்தரமூர்த்திநாயனார் திருவாலவாயினின்றும் சேர சோழ பாண்டியராகிய தமிழ்வேந்தர் மூவரோடும் எழுந்தருளிச் சுவாமிதரிசனஞ் செய்து பரமசிவனுக்குத் தொண்டுசெய்யும் அருமையை எண்ணிக் "கோத்திட்டையும் கோவலும்" என்று எடுத்துத் திருப்பாட்டிறுதிதோறும் "அடிகேளுமக்காட்செய வஞ்சுதுமே" என்றுகூறித் திருக்கடைக்காப்பில் மூவேந்தரோடு அளவளாவினமையையும் வைத்தோதியருளினார். கோத்திட்டை என்பது பரங்குன்றம் என்பதன் பரியாயம்போலும். சுவாமி—பரங்கிரிநாதர், தேவியார்-ஆவுடைநாயகி, தீர்த்தம்-சரவணப்பொய்கை, மலைமேல் காசிதீர்த்தம். இதற்குப் பதிகம்-2.

இத்தலம் திருப்பரங்குன்றம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலையில் கால்மைலில் உள்ளது.

---

# ச. திருவேடகம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-கொல்லி, ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வன்னியுமத்தமுமதிபொதிசடையினன்
பொன்னியறிருவடிபுதுமலரவைகொடு
மன்னியமறையவர்வழிபடவடியவர்
இன்னிசைப்பாடலரேடகத்தொருவனே. 1

கொடிநெடுமாளிகைகோபுரங்குளிர்மதி
வடிவுறவமைதரமருவியவேடகத்
தடிகளையடிபணிந்தரற்றுமினன்பினல்
இடிபடும்வினைகள்போயில்லையதாகுமே. 2

கோடுசந்தனமகில்கொண்டிழிவைகைநீர்
ஏடுசென்றணைதருமேடகத்தொருவனை
நாடுதென்புகலியுண்ஞானசம்பந்தன
பாடல்பத்திவைவல்லார்க்கில்லையாம்பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவேடகம்:—இது மதுரையில் ஞானசம்பந்தப் பெருந்தகையார் சமணரோடு செய்த வாதத்தில் மூன்றாவதாகிய புனல்வாதத்தில் "வாழ்கவந்தணர்" என்னுந் திருப்பாசுரம் எழுதி வைகையில்விட்ட திருவேடு எதிரேறிச் சென்று தங்கிய தலமாதலின் இப்பெயரெய்தியது. குலச்சிறைநாயனர் அத்திருவேட்டைக் குதிரையேறி அதிவேகமாகத் தொடர்ந்து இங்குவந்து பிள்ளையாரது பதிகத்தால் தங்கிய அதனை எடுத்துக்கொணர்ந்து பிள்ளையார் திருக்கரத்தில் கொடுத்தருளினர். இக்குறிப்பு திருப்பதிகத் திருக்கடைக்காப்பில் "ஏடுசென்றணைதரும் ஏடகத்தொருவனை" என்றிருத்தல் காண்க. சுவாமி-ஏடகநாதர், தேவியார்-உமாதேவி, தீர்த்தம்—வைகை. இதற்குப் பதிகம்-1

இத்தலம் சோழவந்தான் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே சற்சாலையில் இரண்டரைமைலில் வைகைக் கீழ்க்கரையில் உள்ளது.

---

# ரு திருக்கொடுங்குன்றம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானிற்பொலிவெய்துமழைமேகங்கிழித்தோடிக்
கூனற்பிறைசேருங்குளிர்சாரற்கொடுங்குன்றம்
ஆனிற்பொலிவைந்துமமர்ந்தாடியுலகேத்தத்
தேனிற்பொலிமொழியாளொடுமேயான்றிருநகரே. 1

மயில்புல்குதண்பெடையோடுடனாடும்வளர்சாரல்
குயிலின்னிசைபாடுங்குளிர்சோலைக்கொடுகுன்றம்
அயில்வேன்மலிநெடுவெஞ்சுடரனலேந்திநின்றாடி
எயின்மூன்படவெய்தானவன்மேயவ்வெழினகரே. 2

கூனற்பிறைசடைமேன்மிகவுடையான்கொடுங்குன்றைக்
கானற்கழுமலமாநகர்த்தலைவன்னலகவுணி
ஞானத்துயர்சம்பந்தனநலங்கொடமிழ்வல்லார்
ஊனத்தொடுதுயர்தீர்ந்துலகேத்தும்மெழிலோரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கொடுங்குன்றம்:—இது "பிரான்மலை" என்று வழங்கப்பெறும்; திருக்கோயில் மலைத்தாழ்வரையில் உள்ளது. மஹோதாருஷியும் நாகராஜனும் பூசித்த தலம். இது சிவஸ்தல மாதலோடு முருகக்கடவுள் திருப்புகழ்பெற்றதலமுமாம். மலைமேல் வைரவர் சிவசந்நிதிகளும், சிவசந்நிதியில் ஸ்வாமி திருக்கல்யாணக் கோலமும், தேவசபாமண்டபமும் உள்ளன. சுவாமி-கொடுங்குன்றீசர், தேவியார்-குயிலமுதநாயகி. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் அம்மையநாயக்கனூர் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மட்சாலையில் 16-மைலில் உள்ளது.

---

## ௬. திருப்புத்தூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்முவெறியார்பொழிற்சோலை
திங்களோடுதிளைக்குந்திருப்புத்தூர்க்
கங்கைதங்குமுடியாரவர்போலும்
எங்களுச்சியுறையுமிறையாரே. 1

வேனல்விம்முவெறியார்பொழிற்சோலைத்
தேனும்வண்டுந்திளைக்குந்திருப்புத்தூர்

ஊனமின்றியுறைவாரவர்போலும்
ஏனமுள்ளுமெயிறும்புனைவாரே. 2

நல்லகேள்விஞானசம்பந்தன்
செல்வர்சேடருறையுந்திருப்புத்தூர்ச்
சொல்லல்பாடல்வல்லார்தமக்கென்றும்
அல்லறீருமவலமடையாவே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுநாயனார்.

### திருத்தாண்டகம் ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

புரிந்தமரர்தொழுதேத்தும்புகழ்தக்கான்காண்போர்விடையின்பாகன்காண்புவனமேழும், விரிந்துபலவுயிராகிவிளங்கினான்காண் விரைக்கொன்றைக் கண்ணியன்காண் வேதநான்கும், தெரிந்துமுதல்படைத்தோனைச்சிரங்கொண்டோன்காண்டீர்த்தன்காண்டிருமாலோர்பங்கத்தான்காண், திருந்துவயல்புடைதழுவுதிருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே.

மின்காட்டுங்கொடிமருங்குலுமையாட்கென்றும்விருப்பவன்காண்பொருப்புவலிச்சிலைக்கையோன்காண், நன்பாட்டுப்புலவனாய்ச்சங்கமேறிநற்கனகக்கிழிதருமிக்கருளினோன்காண், பொன்காட்டக்கடிக்கொன்றை மருங்கேநின்ற புனக்காந்தள் கைகாட்டக்கண்டுவண்டு, தென்காட்டுஞ்செழும்புறவிற்றிருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே, 3

உரமதித்தசலந்தரன்றனாகங்கீண்டவோராழிபடைத்தவன்காணுலகுசூழும், வரமதித்தகஇராவணைப்பற்கொண்டான்காண்வானவர்கோன்புயநெரித்தவல்லாளன்காண், அமரதித்துச்செம்பொன்னினாம்பூணுவணிந்தவன்கா ணிலைகடல்சூழிலங்கைவேந்தன், சிரநெரித்தசேவடிகாண்டிருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. 10

திருச்சிற்றம்பலம்.

திருப்புத்தூர்:— இங்குள்ள ஆலயம் திருத்தளி எனவும் ஸ்ரீ தளி எனவும் வழங்கப்பெறும். உமாதேவியார், இலக்ஷ்மி முதலியோர் பூசித்தது. ஸ்வாமி தேவியார் ஸந்நிதிகளுக்கு நடுவில் பைரவர் சந்நிதி விசேஷஸாந்நித்யம், சபாபதி மூர்த்தம் சிலாவிக்ரஹமாகவும் அமைக்கப்பெற்றிருக்கின்றது. இத்தலப்பதிகத்தில் ஸ்ரீ வாகீசர் சொக்கலிங்கப் பெருமான் தருமிக்குப் பொற்கிழிகொடுத்த அருளிப்பாட்டைச் சிறப்பித்திருக்கிறார். ஸ்வாமி-புத்தூரீசர், ஸ்ரீதளிநாதர், தேவியார்-சிவகாமியம்மை, தீர்த்தம்-ஸ்ரீதளிதீர்த்தம், சிவகங்கை, விருக்ஷம் கொன்றை. இதற்குப்பதிகம்—2.

இத்தலம் (5) பிரான்மலை யென்னும் திருக்கொடுங்குன்றத்தினின்றும் தென்கிழக்கே மட்சாலையில் 15 மைலில் உள்ளது.

---

# ௭. திருப்புனவாயில்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

மின்னியல்செஞ்சடைவெண்பிறைபன்விரிநூலினன்
பன்னியநான்மறைபாடிப்பாடிப்பலவூர்கள்போய்
அன்னமன்னந்நடையாளொடும்மமரும்மிடம்
புன்னைநன்மாமலர்பொன்னுதிர்க்கும்புனவாயிலே. 1

விண்டவர்தம்புரமூன்றெரித்துவிடையேறிப்போய்
வண்டமருங்குழன்மங்கையொடும்மகிழ்ந்தானிடம்
கண்டலுஞ்ஞாழலுநின்றுபெருங்கடற்கானல்வாய்ப்
புண்டரீகம்மலர்ப்பொய்கைசூழ்ந்தபுனவாயிலே. 2

பொற்றொடியாளுமைபங்கன்மேவும்புனவாயிலைக்
கற்றவர்தாந்தொழுதேத்தநின்றகடற்காழியான்
நற்றமிழ்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்நன்மையால்
அற்றமில்பாடல்பத்தேத்தவல்லாரருள்சேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-பழம்பஞ்சுரம் -எந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சித்தநீநினையென்னொடுசூளறும்வைகலும்
மத்தயானையினீருரிபோர்த்தமணாளனூர்
பத்தர்தாம்பலர்பாடிநின்றாடும்பழம்பதி
பொத்திலாந்தைகள்பாட்டறாப்புனவாயிலே. 1

கருதநீமனமென்னொடுசூளறும்வைகலும்
எருதுமேற்கொளுமெம்பெருமாற்கிடமாவது
மருதவானவர்வைகும்மிடம்மறவேடுவர்
பொருதுசாத்தொடுபூசலறாப்புனவாயிலே. 2

பொடியாடுமேனியன்பொன்புனஞ்சூழ்புனவாயிலை
அடியாரடியன்னாவலவூரனுரைத்தன
மடியாதுசுற்றிவையேத்தவல்லார்வினைமாய்ந்துபோய்க்
குடியாகிப்பாடிநின்றாடவல்லார்க்கில்லைகுற்றமே.

திருச்சிற்றம்பலம்.

---

திருப்புனவாயில்:—இது சுந்தரமூர்த்திநாயனார் திருப்பதிகத்துக் கூறியபடி "பழம்பதி" "விருத்தபுரி" எனவும் வழங்கப்பெறும். வேதங்கள் பூசித்தக்ஷேத்ரம். பாண்டிநாட்டுப் பழம்பதி பதினான்கின் மூர்த்திகளும் இங்கெழுந்தருளியிருக்கின்றனர். "பொத்திலாந்தைகள் பாட்டறாப் புனவாயில்" என்று கூறியவாறு பிரத்யக்ஷமாக இன்றுஞ் சாணப்பெறும். மூலலிங்கமும் ஆவுடையாளும் மிகப்பெரிய ஆகிருதியுடையன. இலிங்கமூர்த்திக்கு மூன்று முழப்பரிவட்டமும் ஆவுடையாளுக்கு முப்பது முழப்பரிவட்டமும் சாத்தவேண்டியிருக்கின்றமையின் இத்தலத்தைக்குறித்து 'மூன்றுமுழமும் ஒரு சுற்று முப்பது முழமும் ஒரு சுற்று' என்றோர் பழமொழிவழங்கும். ஸ்வாமி-பழம்பதி நாதர், தேவியார்-கருணை நாயகி, விருக்ஷம்-புன்னை, தீர்த்தம்-இலக்ஷிமி தீர்த்தம், பிரம்மதீர்த்தம். இதற்குப்பதிகம் 2.

இத்தலம் அறந்தாங்கி ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே எழு மைலில் உள்ள திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோவிலினின்றும் தெற்கே மட்சாலையில் 14 மைலில் உள்ளது.

---

## ௮. திருவிராமேச்சுரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அலைவளர்தண்மதியோடயலேயடக்கியுமை
முலைவளர்பாகமுயங்கவல்லமுதல்வன்முனி
இலைவளர்தாழைகள்விம்முகானவிராமேச்சுரம்
தலைவளர்கோலநன்மாலையன்றனிருந்தாட்சியே. 1

மானனநோக்கியைதேவிதன்னையொருமாயையால்
கானதில்வவ்வியகாரரக்கனுயிர்செற்றவன்
ஈனமிலாப்புகழண்ணல்செய்தவிராமேச்சுரம்
ஞானமுநன்பொருளாகிநின்றதொருநன்மையே. 3

சனிபுதன்ஞாயிறுவெள்ளிதிங்கட்பலதீயன
முனிவனசெய்துகந்தானைவென்றவ்வினைமூட்ட
இனியருணல்கிடென்றண்ணல்செய்தவிராமேச்சுரம்
பனிமதிசூடிநின்றாடவல்லபரமேட்டியே. 7

பகலவன்மீதியங்காமைக்காத்தபதியோன்றனை
இகலழிவித்தவனேத்துகோயிலிராமேச்சுரம்
புகலியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்புந்தியால்
அகலிடமெங்குநின்றேத்தவல்லார்க்கில்லையல்லலே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநாவுக்கரசு நாயனார்.

திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்ப[லம்]

பாசமுங்கழிக்ககில்லாவரக்க[illegible]க்க
வாசமிக்கலர்கள்கொண்டு[illegible]னமால்செய்கோயில்
நேசமிக்கன்பினாலேநினைமினீர்நின்றுநாளும்
தேசமிக்கானிருந்ததிருவிராமேச்சுரமே. 1

கடலிடைமலைகடம்மாலடைத்தமால்கருமமுற்றித்
திடலிடைச்செய்தகோயிற்றிருவிராமேச்சுரத்தைத்
தொடலிடைவைத்துநாவிற்சுழல்கின்றேன்றூய்மையின்றி
உடலிடைநின்றும்பேராவைவராட்டுண்டுநானே. 3

வரைகளொத்தேயுயர்ந்தமணிமுடியரக்கர்கோனை
விரையமுற்றறவொடுக்கிமீண்டுமால்செய்தகோயில்
திரைகண்முத்தால்வணங்குந்திருவிராமேச்சுரத்தை
உரைகள்பத்தாலுரைப்பாருள்குவாரன்பினாலே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருவிராமேச்சுரம்:**—இது இராமபிரான் இராவண கும்பகர்ணாதி ராக்ஷஸஹத்தி தோஷம் நீங்குமாறு பிரதிஷ்டை செய்த தலமாதலின் இப்பெயரெய்தியது. இவ்விஷயம் பதிகத்துட்கூறியிருத்தல் காண்க. பிரதிஷ்டைக்கு இலிங்கங்கொணரக்காசிக்குச் சென்ற அநுமான் வரத்தாழ்த்தமையின் பிராட்டியார் மணலிற் குவித்துச் செய்த இலிங்கத்தையே இராமபிரான் பூசித்துவிட்டார். பின்னர் அநுமான் கொணர்ந்த விலிங்கத்தையும் மூலலிங்கத்தின் வடபுறத்தில் பிரதிஷ்டித்தனர். இதுவே விஸ்வலிங்கமாம் இத்தலம் பன்னிரண்டுஜ்யோதிர் லிங்க க்ஷேத்திரங்களுள் ஒன்றாம். தம்மைப்பிரிந்து வந்து குணநிதி பாண்டியனிடத்து வளர்ந்த லக்ஷ்மியை விஷ்ணுமூர்த்தி பிராமணவுருவத்தோடு எழுந்தருளி மணந்து சேதுமாதவர் என்னும் திருநாமத்தோடு திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றனர். இவரைப் பூசியாதவர் இராமலிங்க பூஜாபலனையடையமாட்டார் எனச் சேதுமான்மியங்கூறும். பலவித தீர்த்தமாஹாத்மியங்கட்குச் சேதுபுராணம் பார்க்கத்தக்கது. இராவணவதத்தின் பொருட்டு இலங்கைக்குச் செல்ல இராமபிரான் அணைகட்டிய இடமாதலின் ஸேது என்றும் இத்தலம் கூறப்பெறும். ஸேதுவிலுள்ள தீர்த்தம் இராமபிரான் தனுவின் முனையால் கீறிக்கண்டதாதலின் 'தநுக்கோடி' என்று வழங்கும். ஊருக்கு வடக்கே கந்தமாதன பர்வதம் விளங்கும். அதன் மீது இராமபிரானது திருவடி விளங்காநிற்கும். ஸ்வாமி இராமநாதர், தேவியார்-பர்வதவர்த்னி, மலைவளர்காதலி. தீர்த்தம்- அக்கினிதீர்த்தம், இராமதீர்த்தம், இலக்ஷ்மணதீர்த்தம், தநுஷ்கோடி முதலிய எண்ணிறந்தனவாம். இதற்குப்பதிகம்-3.

இத்தலத்திற்குத் தற்காலம் பாம்பன் வாய்க்காலைக்கடந்து ஊரிலேயே ஸ்டேஷன் அமைந்துள்ளது.

---

## கூ. திருவாடானை,

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாதோர்கூறுகந்தேறதேறிய, ஆதியானுறையாடானைப்
போதினாற்புனைந்தேத்துவார்தமை, வாதியாவினைமாயுமே. 1

வாடல்வெண்டலையங்கையேந்தினின், றாடலானுறையாடானை
தோடுலாமலர்தூவிக்கைதொழ, வீடுநுங்கள்வினைகளே. 2

மங்கைகூறினன்மான்மறியுடை, அங்கையானுறையாடானை
தங்கையாற்றொழுதேத்தவல்லவர், மங்குநோய்பிணிமாயுமே.

வீடினார்மலிவெங்கடத்துநின், றாடலானுறையாடானை
நாடிஞானசம்பந்தன்செந்தமிழ், பாடநோய்பிணிபாறுமே.

திருச்சிற்றம்பலம்.

---

திருவாடானை:—இது "அஜகஜபுரம்" எனவடமொழியிற் கூறப்பெறும்; தூர்வாஸர் தம்மிடம் எழுந்தருளியபோது வந்தனை செய்யாமையால் (அஜம்) ஆட்டுத்தலையும், (கஜம்) யானையுடலும் உள்ள உருவமாகும்படி ஸபிக்கப்பெற்ற பிருகு முனிவர் அவ்வடிவத்தோடு பூசித்துச் சாபம் நீங்கிய தலமாதலின் இப்பெயரெய்தியது. இங்கு சூர்யன் நீலரத்னத்தைச் சிவலிங்கமாகப் பிரதிட்டித்துப் பூசித்தகாரணத்தால் ஸ்வாமிக்கு "ஆதிரத்னேஸ்வரர்" எனவும் திருநாமம். ஸ்வாமி-அஜகஜேஸ்வரர் (ஆடானைநாதர்,) தேவியார்-அம்பாயிரவல்லி, தீர்த்தம்—சூர்யதீர்த்தம் இதற்குப்பதிகம்-1.

இத்தலம் (7) திருப்புனவாயிலுக்குத் தெற்கே மட்சாலையில் 12 மைலில் உள்ளது.

---

# ௰. திருக்கானப்பேர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-கொல்லி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பிடியெலாம்பின்செலப்பெருங்கைமாமலர்தழீஇ
விடியலேதடமூழ்கிவிதியினால்வழிபடும்
கடியுலாம்பூம்பொழிற்கானப்பேரண்ணலின்
அடியலாலடைசரணுடையரோவடியரே. 1

நுண்ணிடைப்பேரல்குனூபுரமெல்லடிப்
பெண்ணினல்லாளையோர்பாகமாப்பேணினான்
கண்ணுடைநெற்றியான்கருதியகானப்பேர்
விண்ணிடைவேட்கையார்விரும்புதல்கருமமே. 2

காட்டகத்தாடலான்கருதியகானப்பேர்
கோட்டகத்திளவரால்குதிகொளுங்காழியான்
நாட்டகத்தோங்குசீர்ஞானசம்பந்தன
பாட்டகத்திவைவலார்க்கில்லையாம்பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-புறநீர்மை. ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டரடித்தொழலுஞ்சோதியிளம்பிறையுஞ்சூதன
மென்முலையாள்பாகமுமாகிவரும், புண்டரிகப்பரிசாமேனி
யும்வானவர்கள்பூசலிடக்கடனஞ்சுண்டகருத்தமரும், கொ
ண்டலெனத்திகழுங் கண்டமுமெண்டோளுங் கோலநறுஞ்
சடைமேல்வண்ணமுங்கண்குளிரக், கண்டுதொழப்பெறுவ
தென்றுகொலோ வடியேன் கார்வயல்சூழ்கானப் பேருறை
காளையையே. 1

கூதலிடுஞ்சடையுங்கோளரவும்விரவுங்கொக்கிறகுங்கு
ளிர்மாமத்தமுமொத்துனதாள், ஓதலுணர்ந்தடியாருன்பெரு

மைச்குநினைந்துள்ளுருகாவிரசும்மோனைச்சயைப்பாடலுநீ, ஆதலுணர்ந்தவரோடன்புபெருத்தடியே னங்கைபின்மாமலர்கொண்டென்கணதல்லல்கெடக், காதலுறத்தொழுவதென்றுகொலோவடியேன்கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. 2

கன்னலையின்னமுதைக்கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையொண்சிருறைதண்டமிழால், உன்னிமனத்தயாரவுள்ளுருகிப்பரவுமொண்பொழிறுவலர்கோனுகியவாரூரன், பண்ணுமிசைக்கிளவிபத்திவைபாடவல்லார் பத்தர்குணத்தினராகெபத்திசையும்புகழ, மன்னியிருப்பவர்கள்வானினிழிக்திடினுமண்டலநாயகராய்வாழ்வதுநிச்சயமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கானப்பேர்:— இது காளையார்கோவில் எனப்பிரசித்தமாக வழங்கும்; சுந்தரமூர்த்தி நாயனர் சேரமான் பெருமாளுயனரோடும் திருச்சுழியலில் ஸ்வாமி தரிசனஞ் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தபோது கானப்பேருடையார் காளைவடிவங்கொண்டு கையிற்பொற்செண்டும், முடியிற் சுழியமும் உடையராய் நாயனருடைய ஸ்வப்பனத்திலே தோன்றி "நாம் இருப்பது கானப்பேர்" என்று அருளிச்செய்யநாயனர்"தொண்டரடித்தொழலும்"என்னும் திருப்பதிகத்தை எடுத்து "கண்டு தொழப்பெறுவதென்றுகொலோ வடியேன் கார்வயல்சூழ் கானப்பேருறைகாளையையே" என்று பாடிக்கொண்டுவந்து தரிசனஞ்செய்தமையின் இப்பெயரெய்தியது. காட்டானையாய்ச் சாபமேற்ற ஐராவதம் விதிப்படி வழிபட்டுப் பூசித்துச் சாபநீங்கிய க்ஷேத்ரமென்பது ஸ்ரீ ஞானசம்பந்தரது திருப்பதிகத்து முதற்றிருப்பாட்டாற் காணப்பெறும். திருக்கோயிலில் சௌந்தரநாயகி ஸமேத ஸோமேஸ்வரர் ஸந்நிதி-1. ஸ்வர்ணவல்லீஸமேத ஸ்ரீகாளீஸ்வரர் சந்நிதி–2. மீனாக்ஷீ ஸமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரர் சந்நிதி-3. ஆகமூன்று சந்நிதிகள் உள்ளன. தீர்த்தம்-யானை மடு. இதற்குப்பதிகம்–2.

இத்தலம் (9) திருவாடானைக்கு மேற்கு கற்சாலையில் 21 மைலில் உள்ளது. தேவகோட்டையிலிருந்து தென்மேற்கே மட்சாலையில் 15 மைல்; மதுரையிலிருந்து கிழக்கே சிவகங்கை மார்க்கமாய் 39 மைல்.

---

## கக. திருப்பூவணம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-தக்கேசி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அறையார்புனலுமாமலருமாடரவார்சடைமேல்
குறையார்மதியஞ்சூடிமாதோர் கூறுடையானிடமாம்
முறையார்முடிசேர்தென்னர்சேரர்சோழர்கடாம்வணங்குந்
திறையாரொளிசேர்செம்மையோங்குந்தென்றிருப்பூவணமே.

மருவார்மதின்மூன்றென்றவெய்துமாமலையான்மடந்தை
ஒருபால்பாகமாகச்செய்தவும்பர்பிரானவனூர்
கருவார்சாலிபாலைமல்கிக்கழன்மன்னர்காத்தளித்த
திருவான்மலிந்தசேடர்வாழுந்தென்றிருப்பூவணமே. 2

திண்ணார்புரிசைமாடமோங்குந்தென்றிருப்பூவணத்துப்
பெண்ணார்மேனியெம்மிறையைப்பேரியலின்றமிழால்
நண்ணாருட்கக்காழிமல்குஞானசம்பந்தன்சொன்ன
பண்ணார்பாடல்பத்தும்வல்லார்பாவிலவதுவானிடையே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநாவுக்கரசுநாயனர்.

திருத்தாண்டகம் கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வடியேறுதிரிசூலந்தோன்றுந்தோன்றும்வளர்சடைமேலிளமதியந்தோன்றுந்தோன்றும், கடியேறுகமழ்கொன்றைக்கண்ணிதோன்றுங்காதில்வெண்குழைதோடு கலந்துதோன்றும், இடியேறுகளிற்றுரிவைப்போர்வைதோன்றுமெழிறிகழுந்திருமுடியுமிலங்கித்தோன்றும், பொடியேறுதிருமேனிபொலிந்துதோன்றும்பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனர்க்கே.

படைமலிந்தமழுவாளுமானுந்தோன்றும் பன்னிரண்டுகண்ணுடையபிள்ளைதோன்றும், நடைமலிந்தவிடையோடு

கொடியுந்தோன்று நான்மறையின்ஒலிதோன்று நயனந்தோன்றும், உடைமலிந்தகோவணமுங்கீளுந்தோன்றுமூரல்வெண்சிரமாலையுலாவித்தோன்றும், புடைமலிந்தபூதத்தின்பொலிவுதோன்றும்பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. 4

மயலாகுந்தன்னடியார்க்கருளுந்தோன்று மாசிலாப்புன்சடைமேன்மதியந்தோன்றும், இயல்பாகவிடுபிச்சையேற்றறேன்றுமிருங்கடனஞ்சுண்டிருண்டகண்டந்தோன்றும், கயல்பாயக்கடுங்கலுழிக்கங்கைநங்கையாயிரமாமுகத்தினொடுவானிற்றேன்றும், புயல்பாயச்சடைவிரித்தபொற்புத்தோன்றும்பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. 5

பாராழிவட்டத்தார்பரவியிட்டபன்மலருநறும்புகையும்பரந்துதோன்றும், சீராழித்தாமரையின்மலர்களன்னதிருந்தியமாநிறத்தசேவடிதோன்றும், ஓராழித்தேருடையவிலங்கைவேந்தனுடறுணித்தவிடர்பாவங்கெடுப்பித்தன்று, போராழிமுன்னீந்தபொற்புத்தோன்றும் பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. 6

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனர்.

பண்-இந்தளம். ஏ-ந் திருமுறை,

திருச்சிற்றம்பலம்.

திருவுடையார் திருமாலயனாலும்
உருவுடையாருமையாளொர்பாகம்
பரிவுடையாரடைவார்வினைதீர்க்கும்
புரிவுடையாருறைபூவணமீதோ. 1

எண்ணியிருந்துகிடந்துநடந்தும்
அண்ணலெனநினைவார்வினைதீர்ப்பார்
பண்ணிசையார்மொழியார்பலர்பாடப்
புண்ணியனாருறைபூவணமீதோ. 2

சீரின்மிகப்பொலியுந்திருப்பூவணம்
ஆரவிருப்பிடமாவுறைவான்றனை
ஊரனுரைத்தசொன்மாலைகள்பத்திவை
பாரிலுரைப்பவர்பாவமறுப்பரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பூவணம்:—இது புஷ்பவநம் என்றும் காசிக்குச்சமானமான க்ஷேத்திரமாதலால் புஷ்பவந காசியென்றும் கூறப்பெறும். இங்கு சிவபக்தி சிவனடியார் பக்தி மிகுந்து மாஹேஸ்வர பூஜை செய்யும் நியமுடைய பொன்னனையாள் என்னும் பரதநூலியல் நாடகப்பாவையாருக்கு மீனாக்ஷீ சுந்தரேஸ்வரர் சித்தரூபமாய் எழுந்தருளி இரசவாதஞ்செய்து ஸோமாஸ்கந்த திருவுருவம் அமைக்கும்படி அநுக்கிரஹித்தனர் என்பது ஆலவாய்ப்புராணத்துள் காணத்தக்கது. பிரம்மதேவர் பூசித்த க்ஷேத்திரம் என்பது பதிகத்துக் கூறப்பெற்றது. சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத்தை மூவேந்தரோடும் தரிசித்தனரென்று திருத்தொண்டர் புராணம் கூறும். இதன் முன்னரும் மூவேந்தரும் வழிபட்ட பதியென ஞானசம்பந்தரது பதிகம் கூறும். ஸ்வாமி-பூவணநாதர், தேவியார்-மின்னம்மை, விருக்ஷம்-பலா, தீர்த்தம்-வைகை, இதற்குப்பதிகம்-4. திருவிசைப்பாப் பதிகமும் ஒன்றுண்டு.

இத்தலம் மதுரைக்குக் கிழக்கே 12 மைலில் திருப்பூவணம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலையில் அரைமைலில் உள்ளது.

---

## ௧௨. திருச்சுழியல்.

### சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டபாடை. ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஊனாயுயிர்புகலாயகலிடமாய்முகில்பொழியும்
வானாய்வருமதியாய்விதிவருவானிடம்பொழிலின்
தேனாதரித்திசைவண்டினமிழற்றுந்திருச்சுழியல்
நானாவிதநினைவார்தமைநலியார்நமன்றமரே. 1

மலந்தாங்கியபாசப்பிறப்பறுப்பீர்துறைக்கங்கைச்
சலந்தாங்கியமுடியானமர்ந்திடமாந்திருச்சுழியல்

நிலந்தாங்கியமலராற்கொழும்புகையாணினைந்தேத்தும்
தலந்தாங்கியபுகழாமிகுதவமாஞ்சதுராமே. 6

நீரூர்தருநியமலன்றிருமலையார்க்கயலருகே
தேரூர்தருமாக்கன்சிரநெரித்தான்றிருச்சுழியல்
பேரூரெனவுறைவானடிபெயர்நாவலர்கோமான்
ஆரூரனதமிழ்மாலைபத்தறிவார்துயரிலரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சுழியல்:— இது பார்வதிதேவியாரும் சதாநந்த முனிவரும் பூசித்து வழிபட்ட க்ஷேத்ரம். ஸ்வாமி-திருமேனிநாதர், தேவியார்-துணைமாலைநாயகி, இதற்குப்பதிகம்—1.

இத்தலம் (11) திருப்பூவணத்திலிருந்து தெற்கே கற்சாலைமார்க்கமாய் 15 மைலில் உள்ளது.

---

## க௩. திருக்குற்றாலம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-குறிஞ்சி. க-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

வம்பார்குன்றநீடுயர்சாரல்வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக்கோலவண்டியாழ்செய்குற்றாலம்
அம்பானெய்யோடாடலமர்ந்தானலர்கொன்றை
நம்பான்மேயநன்னகர்போலுநமராங்காள். 1

பொடிகள்பூசித்தொண்டர்பின்செல்லப்புகழ்விம்மக்
கொடிகளோடுநாள்விழமல்குகுற்றாலம்
கடிகொள்கொன்றைகூவிளமாலைகாதல்செய்
அடிகண்மேயநன்னகர்போலுமடியீர்காள். 2

மாடவீதிவருபுனற்காழியார்மன்னன்
கோடலீன்றுகொழுமுனைகூம்புங்குற்றாலம்
நாடவல்லநற்றமிழ்ஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பாடநம்பாவம்பறையுமே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருக்குறும்பலா.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

திருந்தமதிசூடித்தெண்ணீர்சடைக்கரந்துதேவிபாகம்
பொருந்திப்பொருந்தாதவேடத்தாற்காடுறைதல்புரிந்தசெல்வர்
இருந்தவிடம்வினவிலேலங்கமழ்சோலையினவண்டியாழ்செய்
குருந்தமணநாறுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே.

நாட்பலவுஞ்சேர்மதியஞ்சூடிப்பொடியணிந்தநம்பானம்மை
ஆட்பலவுந்தானுடையவம்மானிடம்போலுமந்தண்சாரல்
கீட்பலவுங்கீண்டுகிளைகிளையன்மந்திபாய்ந்துண்டுவிண்ட
கோட்பலவின்றீங்கனியைமாக்கடுவனுண்டுகளுங்குறும்பலாவே.

கொம்பார்பூஞ்சோலைக்குறும்பலாமேவியகொல்லேற்றண்ணல்
நம்பானடிபரவுநான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
இன்பாயபாடலிவைபத்தும்வல்லார்விரும்பிக்கேட்பார்
தம்பாலதீவினைகள்போயகலுநல்வினைகளாவன்றே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்குற்றாலம்:—இது ஸ்தல விருக்ஷம் குறும்பலாவாதலின் திருக்குறும்பலா வெனவும் வழங்கும். திருக்குறும்பலா வென ஒரு தனிப்பதிகம் இருத்தலையும் காண்க. பூர்வம் அகஸ்திய முனிவர் எழுந்தருளியபோது இங்குள்ள வைணவப்பிராம்மணர் அவரை வெறுத்துத் துவேஷம் செய்தமையின் முனிவர் வைணவபாகவத வடிவங் கொடுவந்து திருக்கோயிலினுள் அவர் உபசரிப்பச்சென்று விட்டுணுமூர்த்தியின் திருமுடிமேல் தங்கரத்தை வைத்து அம்மூர்த்தியைச் சிவலிங்கமாக்கித் தலத்தையும் சிவத்தலமாக்கியதெனக்கந்தபுராணங்கூறுமாறு காண்க. இது பஞ்சஸபைகளுள் ஒன்றாகிய சித்ர ஸபையையுடையது. ஸ்வாமி-குறும்பலாநாதர், தேவியார்-குழல்வாய்மொழியம்மை, விருக்ஷம்-குறும்பலா, தீர்த்தம்-சித்திராநதி, இதற்குப் பதிகம்-2.

இத்தலம் தென்காசி ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலையில் மூன்றுமைலில் உள்ளது.

---

# கச. திருநெல்வேலி.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-சாதாரி. ங-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மருந்தவைமந்திரமறுமைநன்னெறியவைமற்றுமெல்லாம்
அருந்துயர்கெடுமவர்நாமமேசிந்தைசெய்நன்னெஞ்சமே [பூம்
பொருந்துதண்புறவினிற்கொன்றைபொன்சொரிதரத்துன்றுபைம்
செருந்திசெம்பொன்மலர்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே

என்றுமோரியல்பினரெனநினைவரியவரேறதேறிச்
சென்றுதாஞ்செடிச்சியர்மனைதொறும்பலிகொளுமியல்பதுவே
துன்றுதண்பொழினுழைந்தெழுவியகேதகைப்போதளைந்து
தென்றல்வந்துலவிய திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. 2

பெருந்தண்மாமலர்மிசையயனவனனையவர்பேணுகல்வித்
திருந்துமாமறையவர்திருநெல்வேலியுறைசெல்வர்தம்மைப்
பொருந்துநீர்த்தடமல்குபுகலியுண்ஞானசம்பந்தன்சொன்ன
அருந்தமிழ்மாலைகள்பாடியாடக்கெடுமருவினையே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருநெல்வேலி:— இது சிவபெருமான் வேதசன்மர் என்னும் பக்தர் தமது நிவேதனத்துக்குக்கட்டிய நெல்லை வெள்ளங்கொள்ளாதபடி காத்தமையின் இப்பெயரெய்தியது. ஸ்வாமி மூங்கிலடியில் முளைத்த காரணத்தால் வேணுவநம் எனவும் கூறப்பெறும். விஷ்ணுமூர்த்தி, பிரம்மதேவர், அகஸ்தியர் பூசித்து வழிபட்ட தலம். தாருகாவன ஐதிஹ்யம் இங்கு நடந்ததாகவும் புராணம் கூறும். பிக்ஷாடனத்திருவுருவம் ஸ்வாமியின் முதற்பிராகாரத்தில் மேற்குப்பக்கம் பிரதிஷ்டிக்கப்பெற்றிருக்கிறது. பதிகத்தும் குறிப்புக்காண்க. இத்தலம் பஞ்ச ஸபைகளுள் தாமிரஸபையுள்ளது. ஸ்வாமி-நெல்லையப்பர், வேணுவநநாதர், தேவியார்-காந்திமதியம்மை. தீர்த்தம்-தாமிரவருணி, சிந்துபூந்துறை. இதற்குப்பதிகம்-1.

இத்தலம் திருநெல்வேலிடவுன் ஸ்டேஷனிலிருந்து மேற்கேகற்சாலைமார்க்கமாய் ஒன்றரை மைலில் உள்ளது.

பாண்டிநாட்டுத் தலங்கள் கசு-ம் முற்றின.

---

## மலைநாடு.

# க. திருவஞ்சைக்களம்.

### சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தலைக்குத்தலைமாலையணிந்ததென்னேசடைமேற்கங்கை வெள்ளந் தரித்ததென்னே, அலைக்கும் புலித்தோல்கொண் டசைத்ததென்னேயதன்மேற் கதநாகக்கச்சார்த்ததென்னே, மலைக்குந்நிகரொப்பனவன்றிரைகள் வலித்தெற்றி முழங்கிவ லம்புரிகொண், டலைக்குங்கடலங்கரைமேன்மகோதையணியா ர்பொழிலஞ்சைக்களத்தப்பனே. 1

வெறுத்தேன்மனைவாழ்க்கையைவிட்டொழிந்தேன்விளங் குங்குழைக்காதுடைவேதியனே, இறுத்தாயிலங்கைக்கிறையா யவனைத்தலைபத்தொடுதோள்பலவிற்றுவிழக், கறுத்தாய்கட னஞ்சமுதுண்டுகண்டங் கடுகப்பிரமன்றலையைந்திலுமொன், ற றுத்தாய்கடலங்கரைமேன்மகோதையணியார்பொழிலஞ்சை க்களத்தப்பனே. 8

எந்தம்மடிகளிமையோர்பெருமானெனக்கென்றுமளிக் குமணிமிடற்றன், அந்தண்கடலங்கரைமேன்மகோதையணி யார்பொழிலஞ்சைக்களத்தப்பனை, மந்தம்முழவுங்குழலும்மி யம்பும்வளர்நாவலர்கோனம்பியூரன்சொன்ன, சந்தம்மிகுத ண்டமிழ்மாலைகள்கொண்டடிவீழவல்லார்தடுமாற்றிலரே.

திருச்சிற்றம்பலம்.

---

திருவஞ்சைக்களம்:—இது மலைநாடாகிய சேரநாட்டில் சேரராஜாக்களது ராஜதானியாகிய மகோதையிலுள்ள திருக்கோயில். பரசுராமர் தம் தாயையும் சகோதரர்களையும் கொன்ற ஹத்தி நீங்கப்பூசித்த தலமாம். இங்கு சேரமான்பெருமாணாயனார் என்னும் பெருமாக்கோதையார் திருவவதாரஞ்செய்து சிவபக்தி சிவனடியார் பக்தி மிகுந்தோராய் பரமசிவனுக்குத் தம்நாட்டுப் பலஆலயங்களினும் பல திருப்பணிகள் செய்து தம் ஆன்மார்த்த பூஜாமுடிவில் ஸ்ரீநடராஜப்பெருமா

ஞாத சிலம்பொலியைக்கேட்கும் பாக்கியமுடையவராய், யானையின் மீது பவனி வரும்போது சரீரம் உவர்மண்ணால் வெளுத்த வண்ணானை விபூதிபூசிய சிவனடியார் என வணங்கியும் திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம் கொணர்ந்த பாணபத்திரர்க்கு நிதிக்குவையளித்தும், சுந்தரமூர்த்திகளது நட்பைப்பெற்றும் பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞானவுலா என்னும் பிரபந்தங்கள் பாடியும் ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனாரோடு குதிரையிலாரோகணித்து திருக்கைலாய மடைந்தார். சுந்தரமூர்த்திநாயனார் திருப்புக்கொளியூரினின்றும் இங்கெழுந்தருளி ஒருநாள் ஆலயத்தையடைந்து பரமசிவனிடத்துத் தாம் மனைவாழ்க்கையை வெறுத்ததை விக்ஞாபனம் பண்ணிப்பிரார்த்தித்துப்பாடப் பரமசிவன் திருக்கைலாயத்தில் தம்மைச் சேவித்திருக்கும் பிரம்ம விஷ்ணுக்களைத் தம்யானையைக் கொண்டு நாயனாரை யழைத்து வரும்படி பணிக்க அவ்வாறே அவர் திருவஞ்சைக்களத்தில் யானையைக்கொணர்ந்து சுந்தரமூர்த்திநாயனாரையழைத்துச் சென்றனர். ஸ்வாமி-அஞ்சைக்களத்தப்பர், தேவியார்-உமையம்மை, தீர்த்தம்-சிவகங்கை, இதற்குப்பதிகம்-1.

இத்தலம் சோரனூர் ஜங்ஷனிலிருந்து கொச்சிரயிலில் இருஞாலக்கடை ஸ்டேஷனிலிருந்து 7மைலிலுள்ள இருஞாலக்கடைக்குப்போய் அங்கு நின்றும் 12 மைலில் உள்ள தோணித்துறையாகிய கருவப்பட்டணத்தையைச்சேர்ந்து தோணியேறி 5 மைல் உள்ள கொடுங்களூரையடைந்து மணற்பாதையாய் மூன்றுமைல் சென்றால் அடையத்தக்கது.

---

## கொங்கநாடு.

## க. திருப்புக்கொளியூரவிநாசி.

### சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எற்றான்மறக்கேனெழுமைக்குமெம்பெருமானையே
உற்றாயென்றுன்னையேயுள்குகின்றேனுணர்ந்துள்ளத்தால்
புற்றாடராவாபுக்கொளியூரவிநாசியே
பற்றாகவாழ்வேன்பசுபதியேபரமேட்டியே. 1

வழிபோவார் தம்மோடும்வந்துடன் கூடியமாணிநீ
ஒழிவதழகோசொல்லாயருளோங்குசடையானே
பொழிலாருஞ்சோலைப்புக்கொளியூரிற்குளத்திடை
இழியாக்குளித்தமாணிஎன்னைக்கிறிசெய்ததே. 2
எங்கேனும்போகினுமெம்பெருமானை நினைந்தக்கால்
கொங்கேபுகினுங்கூறைகொண்டாறலைப்பாரிலை
பொங்காடரவாபுக்கொளியூரவிநாசியே
எங்கோனேயுனைவேண்டிக்கொள்வேன்பிறவாமையே. 4
உரைப்பாருரையுகந்துள்கவல்லார் தங்களுச்சியாய்
அரைக்காடரவாவாதியுமந்தமுமாயினாய்
புரைக்காடுசோலைப்புக்கொளியூரவிநாசியே
கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே. 5
நீரேறவேறுநிமிர்புன்சடைநின்மலமூர்த்தியைப்
போரேறதேறியைப்புக்கொளியூரவிநாசியைக்
காரேறுகண்டனைத்தொண்டனாரூரன் கருதிய
சீரேறுபாடல்கள்செப்பவல்லார்க்கில்லைதுன்பமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருப்புக்கொளியூரவிநாசி:—இது புக்கொளியூரிலுள்ள விநாசம் இல்லாத க்ஷேத்ரம் என்று பொருள்படும். இங்கு சுந்தரமூர்த்திநாயனார் எழுந்தருளியபோது எதிரெதிராய் உள்ள இரண்டு வீடுகளில் ஒன்றின் மங்கல ஒலியும் ஒன்றில் அழுகையொலியும் நிகழ நாயனார் விசாரித்து ஐந்துவயதுடைய அவ்வீடுகளின் இரண்டு பிராமணப்பிள்ளைகள் ஒரு குளத்தில் குளிக்கும்போது ஒரு பிள்ளைமுதலை விழுங்கி யிறந்தான். மற்றவன் பிழைத்து இப்போது உபநயனஞ்செய்யப்பெறுகிறான் என்றும் இறந்த வீட்டில் அழுகையும் உபநயனக்கிருஹத்தில் மங்கலமும் நிகழ்கின்றனவென்றும் அறிந்து இறந்த அப்பிள்ளையை "எத்தான் மறக்கேன்" என்னும் திருப்பதிகத்தை அக்குளக்கரையில் பாடி உயிர்ப்பித்து அவனுக்கு உபநயனஞ்செய்து அவன் பிதா மாதாக்களை மகிழ்வித்தனர். அக்குளக்கரையில் உள்ள சுந்தரமூர்த்திசுவாமியின் கோயிலில் இவ்வைதிஹ்யம் காணத்தக்கது. ஸ்வாமி-அவிநாசியப்பர், தேவியார் பெருங்கருணைநாயகி, விருக்ஷம்-பாதிரி, இதற்குப்பதிகம்—1.

இத்தலம் திருப்பூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே 8 மைலில் (2) திருமுருகன் பூண்டியை யடைந்து அங்கிருந்து மேற்கே மூன்று மைலில் உள்ளது. மங்கலம் ஸ்டேஷனிலிருந்து 6 மைல்.

---

## உ. திருமுருகன்பூண்டி.

### சுந்தரமூர்த்திநாயனர்.

பண்-பழம்பஞ்சுரம் எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொடுகுவெஞ்சிலைவடுகவேடுவர்விரலாமைசொல்லித்
திடுகுமொட்டெனக்குத்திக்கூறைகொண்டாறலைக்குமிடம்
முடுகுநாறியவடுகர்வாழ்முருகன்பூண்டிமாநகர்வாய் [னிரே
இடுகுநுண்ணிடைமங்கைதன்னெடுமெத்தாங்கிங்கிருந்தீரெம்பிரா
வில்லைக்காட்டிவெருட்டிவேடுவர்விரவலாமைசொல்லிக்
கல்லினலெறிந்திட்டுமோதியுங்கூறைகொள்ளுமிடம்
முல்லைத்ாதுமணங்கமழ்முருகன்பூண்டிமாநகர்வாய் [னிரே
எல்லைகாப்பதொன்றில்லையாகினீரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரா
முந்திவானவர்தாந்தொழுமுருகன்பூண்டிமாநகர்வாய்ப்
பந்தணைவிரற்பாவைதன்னையொர்பாகம்வைத்தவனைச்
சிந்தையிற்சிவதொண்டனூரனுரைத்தபத்துங்கொண்
டெந்தம்மடிகளேயத்துவாரிடரொன்றுந்தாமிலரே, 10

திருச்சிற்றம்பலம்.

---

திருமுருகன்பூண்டி:—முருகக்கடவுள் பூசித்த தலமாதலின் இப்பெயரெய்தியது. சுந்தரமூர்த்திநாயனர் சேரமான் பெருமாளுயனர் கொடுத்த திரவியத்தை ஆட்களின் மீதும் யானை ஒட்டகங்களின் மீதும் எற்றிக்கொண்டு இத்தலத்தின் சமீபமாய் எழுந்தருளும்போது ஸ்வாமி சிவபூதங்களை வேடவுருவத்தோடு அனுப்பி அத்திரவியத்தைக்கவர நாயனர் "கொடுகு வெஞ்சிலை" என்னும் திருப்பதிகத்தை எடுத்து அடியாகளுக்கு அநலஞ்செய்யாதபோது அங்கிருப்பது எனென்று சுவாமியைப்பாட சுவாமி அவைகளை நாயனருக்கு மீட்டும் திருக்கோயிற்றிருவாயிலில் கொடுத்தருளினர். ஸ்வாமி-முருகாவுடையார், தேவியார்-ஆவுடைநாயகி, இதற்குப்பதிகம்-1.

இத்தலம் திருப்பூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே எட்டு மைலில் உள்ளது.

---

# ரு. திருநணா.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பந்தார்விரன்மடவாள்பாகமாநாகம்பூண்டேறதேறி
அந்தாரவணிந்தவம்மானிடம்போலுமந்தண்சாரல்
வந்தார்மடமந்திகூத்தாடவார்பொழிலில்வண்டுபாடச்
செந்தேன்றெளியொளிரத்தேமாக்கனியுதிர்க்குந்திருநணாவே.

நாட்டம்பொலிந்திலங்குநெற்றியினன்மற்றொருகைவீணையேந்தி
ஈட்டுந்துயரறுக்குமெம்மானிடம்போலுமிலைசூழ்கானில்
ஓட்டந்தருமருவிவீழ்விசைகாட்டமுந்தூழோசைச்
சேட்டார்மணிகளணியுந்திரைசேர்க்குந்திருநணாவே.

கல்வித்தகத்தாற்றிரைசூழ்கடற்காழிக்கவுணிசீரார்
நல்வித்தகத்தாலினிதுணருஞ் ஞானசம்பந்தனெண்ணும்
சொல்வித்தகத்தாலிறைவன்றிருநணாவேத்துபாடல்
வல்வித்தகத்தான்மொழிவார்பழியிலரிம்மண்ணின்மேலே.

திருச்சிற்றம்பலம்.

---

திருநணா:—இது பவானிமுக்கூடல் எனவும் தலவிருக்ஷம் இலந்தையாதலின் பதரீவநம் எனவும் கூறப்பெறும். குபேரன், விஸ்வாமித்திரர், பராசரர் என்னும் இவர்கள் பூசித்ததலம். ஆலயத்திற்குக் கிழக்கே காவிரியும், பவானியும், ஸ்வாமி பாத தீர்த்தமும் ஆக மூன்று தீர்த்தங்களும் கூடுதலின் பவானி முக்கூடலாய் திரிவேணிக்குச்சமமாய்ப்பாராட்டும் தீர்த்த விசேடம். ஆலயத்தில் ஆதிகேசவப்பெருமாள் சந்நிதிதனியே அமைந்திருக்கின்றது. ஸ்வாமி-சங்கமுகநாதர், தேவியார்-வேதமங்கையம்மை, விருக்ஷம்-இலந்தை, தீர்த்தம்-காவிரி பவாநி சங்கமம். இதற்குப்பதிகம்-1.

இத்தலம் ஈரோடு ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே கற்சாலையில் 9 மைலில் உள்ளது.

---

# ௪. திருக்கொடிமாடச்செங்குன்றூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-வியாழக்குறிஞ்சி. ௧-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்ணீறணிந்துவிரிநூறிகழ்மார்பினல்ல
பந்தணவும்விரலாளொருபாகமமர்ந்தருளிக்
கொந்தணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
வந்தணனைத்தொழுவாரவலமறுப்பாரே. 1

ஆலைமலிதண்புனலோடரவஞ்சடைக்கணிந்தாகம்
மலைமகள்கூறுடையான்மலைபாரிளவாழைக்
குலைமலிதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
தலைமகனைத்தொழுவார்தடுமாற்றறுப்பாரே. 2

அலைமலிதண்புனல்சூழ்ந்தழகார்புகலிந்நகர்பேணுந்
தலைமகனாகிநின்றதமிழ்ஞானசம்பந்தன்
கொலைமலிமூவிலையான்கொடிமாடச்செங்குன்றூரேத்தும்
நலமலிபாடல்வல்லார்வினையானநாசமே. 11

திருச்சிற்றம்பலம்,

---

திருக்கொடிமாடச் செங்குன்றூர்:— இது திருச்செங்கோடு, திருச்செங்குன்றூர், நாகாசலம் எனப் பலபடி வழங்கும். மலையும் நாகம்போல்வதான தோற்றமுடையது. சிவஸ்தலமாதலோடு திருப்புகழ்பெற்ற சுப்ரமண்ய க்ஷேத்ரமாயும் உள்ளது. திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் இங்கு எழுந்தருளியிருந்த போது மழைகாலம் நீங்கிப் பனிக்காலம் வந்து குளிர் மிகுதலும் பிள்ளையாருடைய திருக்கூட்டத்தடியார்கள் நளிர் சுரத்தினால் வருத்தமுறப் பிள்ளையார் "அவ்வினைக் கிவ்வினை" என்னும் திருநீலகண்டத்திருப்பதிகத்தைப் பாடியருளப்பிள்ளையாரது பரிஜனங்களன்றி அந்நாட்டிலுள்ள யாவரும் ஜ்வரம் நீங்கியுய்ந்தனர். சுவாமிஸந்நிதிபச்சிமாபிமுகம். சுப்ரம்மண்யசந்நிதிபூர்வாபிமுகம். ஆலயத்தில் விஷ்ணு சந்நிதி தனியேயிருக்கின்றது, ஸ்வாமி அர்த்தநாரீஸ்வரர், தேவியார்-அர்த்தநாரீஸ்வரி, இதற்குப்பதிகம்-1.

இத்தலம் சங்கரிதுருக் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலையில் 5 மைலில் உள்ளது.

## ரு. திருவெஞ்சமாக்கூடல்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-கொல்லிக்கௌவாணம், எ.ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எறிக்குங் கதிர்வேயுதிர்முத்தமொடேலமிலவங்கந்தக் கோலமிஞ்சி, செறிக்கும்புனலுட்பெய்துகொண்டுமண்டித்திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்கரைமேன், முறிக்குந்தழைமாமுடப்புன்னைஞாழல்குருக்கத்திகண்மேற்குயில்கூவலறா, வெறிக்குங்கலைமாவெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. 1

குளங்கள்பலவுங்குழியுந்நிறையக்குடமாமணி சந்தனமும்மகிலும், துளங்கும்புனலுட்பெய்துகொண்டுமண்டித்திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்கரைமேல், வளங்கொண்மதின்மாளிகைகோபுரமும்மணிமண்டபமும்மிவைமஞ்சுதன்னுள், விளங்கும்மதிதோய்வெஞ்சமாக்கூடல் விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. 2

வஞ்சிநுண்ணிடையார்மயிற்சாயலன்னார்வடிவேற்கணல்லார்பலர்வந்திறைஞ்சும், வெஞ்சாமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியேயென்றுதான் விரும்பி, வஞ்சியாதளிக்கும்வயனாவலர்கோன்வனப்பகைஅப்பன் வன்றொண்டன்சொன்ன, செஞ்சொற்றமிழ்மாலைகள்பத்தும்வல்லார்சிவலோகத்திருப்பது திண்ணமன்றே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவெஞ்சமாக்கூடல்:—இது வெஞ்சன் எனும் அசுரராஜன் ராஜதானியானமையின் இப்பெயரெய்தியது. கோட்டையிருந்த குறிப்புகள் காணப்படுகின்றன. சுவாமி பெயர் திருப்பாட்டுதோறும் காணப்பெறும். ஸ்வாமி-விகிர்தேசுரர்,தேவியார்-விகிர்தேசுவரி. இதற்குப்பதிகம்—1.

இத்தலம் கருவூர் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே கற்சாலையில் ஒன்றரை மைலில் கருவூரானிலையை யடைந்து அங்கிருந்து 12 மைலில் குழகனாற்றங்கரையிலுள்ளது.

---

# ௬. திருப்பாண்டிக்கொடுமுடி.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணமர்மேனியினாரும்பிறைபுல்குசெஞ்சடையாரும்
கண்ணமர்நெற்றியினாருங்காதமருங்குழையாரும்
எண்ணமருங்குணத்தாருமிமையவரேத்தநின்றாரும்
பண்ணமர்பாடலினாரும்பாண்டிக்கொடுமுடியாரே. 1

தனைக்கணிமாமலர்கொண்டுதாடொழுவாரவர்தங்கள்
வினைப்பகையாயினதீர்க்கும்விண்ணவர்விஞ்சையர்நெஞ்சில்
நினைத்தெழுவார்துயர்தீர்ப்பார்நிரைவளைமங்கைநடுங்கப்
பனைக்கைப்பகட்டுரிபோர்த்தார்பாண்டிக்கொடுமுடியாரே.

கலமல்குதண்கடல்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
பலமல்குவெண்டலையேந்திப்பாண்டிக்கொடுமுடிதன்னைச்
சொலமல்குபாடல்கள்பத்துஞ்சொல்லவல்லார்துயர்தீர்ந்து
நலமல்குசிந்தையராகிநன்னெறியெய்துவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சிட்டனைச்சிவனைச்செழுஞ்சோதியை
அட்டமூர்த்தியையாலநிழலமர்
பட்டனைத்திருப்பாண்டிக்கொடுமுடி
நட்டனைத்தொழநம்வினைநாசமே. 1

பிரமன்மாலறியாதபெருமையன்
தருமமாகியதத்துவனெம்பிரான்
பரமனாருறைபாண்டிக்கொடுமுடி
கருமமாகத்தொழுமடநெஞ்சமே. 2

நெருக்கியம்முடி நின்றிசைவானவர்
இருக்கொடும்பணிந் தேத்தவிருந்தவன்
திருக்கொடும்முடி யென்றலுந்தீவினைக்
கருக்கெடும்மிது கைகண்டயோகமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-பழம்பஞ்சுரம். எ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக்கின்றி நின்றிருப்பாதமே மனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. 1

இட்டனும்மடியேத்துவாரிகழ்ந்திட்டநாண்மறந்திட்டநாள்
கெட்டநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. 2

ஓவுநாளுணர்வழியுநாளுயிர்போகுநாளுயர்பாடைமேல்
காவுநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரிப்
பாவுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடி
நாவலாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. 3

கோணியபிறைசூடியைக்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி-[யைப்
பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப்பிறப்பில்லி [பறை
பாணுலாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படப்பாம் [மே.
நாணனைத்தொண்டனூரன் சொல்லிவைசொல்லுவார்க்கில்லைத்துன்ப

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பாண்டிக்கொடுமுடி:—இது கொடுமுடிஎனப் பிரசித்தமாகவழங்கும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இங்கு சுவாமிதரிசனஞ் செய்தபோது "தேவரீரை நான் மறப்பினும், என் நா உன்னுமத்தை மறவாது" என்று ஸ்ரீபஞ்சாக்ஷரத் திருப்பதிகத்தைப்பாடி யருளினார். இது காவிரிக் கரையிலுள்ளது என்பது பதிகத்துப் காணப்பெறும்.

ஆலயத்தில் அரங்கநாயக விஷ்ணு சந்நிதியும் அம்மூர்த்தியிலேயே பிரம்மதேவரும் உண்மையின் இத்தலம் திரிமூர்த்திகள் சந்நிதி என்று வழங்குவர். சுவாமி-கொடுமுடி நாதர், தேவியார்-பண்மொழியம்மை, தீர்த்தம்-காவிரி, விருக்ஷம்-வன்னி, இதற்குப்பதிகம்-3.

இத்தலம் கொடுமுடி ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலையில் கால்மைலில் உள்ளது.

---

## ௭. திருக்கருவூரானிலை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம் உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டெலாமலர்தூவியேத்தநஞ்
சுண்டலாருயிராயதன்மையர்
கண்டனார்கருவூருளானிலை
அண்டனாருளீயுமன்பரே. 1

நீதியார்நினைந்தாயநான்மறை
ஓதியாரொடுங்கூடலார்குழைக்
காதினார்கருவூருளானிலை
ஆதியாரடியார்தமன்பரே. 2

உழுதுமாநிலத்தேனமாகிமால்
தொழுதுமாமலரோனுங்காண்கிலார்
கழுதினான்கருவூருளானிலை
முழுதுபாகியமூர்த்திபாதமே. ௯

கந்தமார்பொழிற்காழிஞானசம்
பந்தன்சேர்கருவூருளானிலை
எந்தையைச்சொன்னபத்தும்வல்லவர்
சிந்தையிற்றுயராயதீர்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கருவூரானிலை:-இது கருவூர் என்னும் ஊர்ப்பெயரும் ஆனிலை என்னும் தலப்பெயரும் சேர்ந்து இப்பெயரெய்தியது. இங்கு எறிபத்தநாயனார் திருவவதாரஞ் செய்து சிவனடியார்களுக்கு வரும்

இடர்களைத்தீர்த்து அவர்களுக்குத் தொண்டுசெய்யும் நியமமுடைய வராய் வாழும் நாளில் ஒருநாள் பசுபதீச்சரருக்குத் திருமாலைத் திருப் பணிசெய்யும் சிவகாமியாண்டார் பூக்கொய்து தண்டில் தூக்கிக்கொ ணருங்கால் சோழராஜாவின் யானை அதனைப்பறித்துக் கீழே சிந்திய தனால் சிவகாமியாண்டார் பரமசிவனை நோக்கி முறையிடும் ஓசை யைக்கேட்டு ஓடிவந்து யானையையும், பாகர், குத்துக் கோற்காரர் முத லியவரையும் துணித்து வீழ்த்திக்களத்தில் உலாவும்போது யானையை ப்பகைவர் கொன்றாரென்று கேட்டுவந்த புகழ்ச்சோழ நாயனார் நிகழ் ந்ததைக்கேட்டு நடுங்கித் தம்வாளை எறிபத்தர்கையிற் கொடுத்துத் தம் மைக்கொன்று உய்விக்கும்படி கூற அதனைக்கேட்ட எறிபத்தர் வாளை வாங்காதிருப்பின் தம்மைத்தாமே செகுப்பர் என்று கருதி வாளைவா ங்க அவர் தம்கருத்து முற்றியதாக உய்ந்தேன் எனலும் எறிபத்தர் அரசர்கொண்ட அபிப்பிராயத்திற்கு அஞ்சித் தம்மை முடித்துக்கொள் ளத் தொடங்க, இருவரும் ஒருவரை ஒருவர் தடுத்து அளவளாவிய வளவில் பரமசிவன் திருவருளால் யானை முதலியோர் எழுந்து சிவகா மியாண்டார் பூக்குடலிலும் பூநிறைந்து யாவரும் அரவொலியெழுப்பி மகிழ்ந்தனர். இவ்விரண்டு நாயன்மார்களும் இவ்வாறு பலநாள் திருப் பணிசெய்து சிவபதம் அடைந்தனர். திருவிசைப்பாப்பாடிய கருவூர்த் தேவர் திருவவதரித்து அநேக மஹிமாதிசயங்களைச் செய்து திருவடி யடைந்த தலம். இவருடைய சந்நிதி வெளிப்பிராகாரத்தில் ஈசானதி சையில் உள்ளது. சுவாமி-பசுபதீச்சுரர், தேவியார்- கிருபாநாயகி, சௌந்தர்ய நாயகி (இரண்டு சந்நிதிகள்) தீர்த்தம் ஆம்பிராவதி, இத ற்குப்பதிகம்-1.

இத்தலம் கருவூர் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே கற்சாலை யில் ஒன்றரைமைலில் உள்ளது.

கொங்குநாட்டுத் தலங்கள் எ-ம் முற்றின.

---

நடுநாடு.

# க. திருநெல்வாயிலரத்துறை.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண் பியந்தைக்காந்தாரம். உ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லாற்சென்றுகைகூடுவதன்றால்

கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமேல்
அந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. 1

ஈரவார்சடைதன்மேலிளம்பிறையணிந்தவெம்பெருமான்
சீருஞ்செல்வமுமேத்தாச்சிதடர்கடொழச்செல்வதன்றால்
வாரிமாமலருந்திவருபுனனிவாமல்குகரைமேல்
ஆருஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. 2

கறையினார்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
அறையும்பூம்புனல்பரந்தவரத்துறையடிகடம்மருளை
முறைமையாற்சொன்னபாடன்மொழியுமாந்தர்தம்வினைபோய்ப்
பறையுமையுறவில்லைப்பாட்டிவைபத்தும்வல்லார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கடவுளைக்கடலுள்ளெழுநஞ்சுண்ட
உடலுளானையொப்பாரியிலாதவெம்
அடலுளானையரத்துறைமேவிய
சுடருளானைக்கண்டீர்நாந்தொழுவதே. 1

கரும்பொப்பானைக்கரும்பினிற்கட்டியை
விரும்பொப்பானைவிண்ணோருமறிகிலா
அரும்பொப்பானையரத்துறைமேவிய
சுரும்பொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. 2

கலையொப்பானைக்கற்றார்க்கோரமுதினை
மலையொப்பானைமணிமுடியூன்றிய
அலையொப்பானையரத்துறைமேவிய
நிலையொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம். ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கல்வாயகிலுங்கதிர்மாமணியுங்கலந்துந்திவருந்நிவவின் கரைமேல், நெல்வாயிலரத்துறைநீடுறையுந்நிலவெண்மதிசூடிய நின்மலனே, நல்வாயில்செய்தார்நடந்தாருடுத்தார்நரைத்தாரிறந்தாரென்றுநானிலத்தில், சொல்லாய்க்கழிகின்றதறிந்தடியேன்றொடர்ந்தேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே.

புற்றாடரவம்மரையார்த்துகந்தாய்புனிதாபொருவெள்விடையூர்தியினாய், எற்றேயொருகண்ணிலனின்னையல்லானெல்வாயிலரத்துறைநின்மலனே, மற்றேலொருபற்றிலனெம்பெருமான்வண்டார்குழலாண்மங்கைபங்கினனே, அற்றார்பிறவிக்கடனீந்தியேறியடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே.

சிகரம்முகத்திற்றிரளாரகிலும்மிகவுந்திவருந்நிவவின்கரைமேல், நிகரின்மயிலாரவர்தாம்பயிலுந்நெல்வாயிலரத்துறைநின்மலனே, மகரக்குழையாய்மணக்கோலமதேபிணக்கோலமதாம்பிறவியிதுதான், அகரம்முதலினெழுத்தாகிநின்றாயடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. 7

நீரூருநெடுவயல்சூழ்புறவின்னெல்வாயிலரத்துறைநின்மலனைத், தேரூர்நெடுவீதிநன்மாடமலிதென்னாவலர்கோனடித்தொண்டனணி, ஆரூரனுரைத்தனநற்றமிழின்மிகுமாலையோர்பத்திவைகற்றுவல்லார், காரூர்களிவண்டறையானைமன்னரவராகியோர்விண்முழுதாள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருநெல்வாயிலரத்துறை:**—இது அரத்துறை என்றும் வழங்கும். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் இத்தலத்துக்கு எழுந்தருளும்போது தம் பிதாவின் தோளின் மீது போதலைத்தவிர்த்துத் திருவடிநோவ நடந்து செல்ல அரத்துறை நாதர் இவ்வூரிலுள்ள ஸமஸ்தர்களுடைய கனவிலுந் தோன்றித் தம்மிடத்திலுள்ள முத்துச்சிவிகை முத்துக்குடை, முத்துச்சின்னம் முதலியவற்றை மாறன்பாடியில் தங்

கியிருக்கும் பிள்ளையாருக்குக் கொடுக்கும்படி ஆக்ஞாபித்து பிள்ளையாருடைய கனவிலும் தோன்றி ஏற்குமாறு பணித்தருளலும் மற்றை நாட்காலையில் திருவரத்துறை அடியார் முத்துச்சிவிகை முதலியவற்றை எடுத்துக்கொண்டு சென்று பிள்ளையாரைப் பணிந்து ஏற்குமாறு வேண்டப்பிள்ளையாரும் சிவாக்ஞையாதலின் சிவிகையினை வலம்வந்து வணங்கி ஸ்ரீபஞ்சாட்சரத்தை ஓதியேறி இங்கு வந்து திருப்பதிகம் பாடி திருவருட்டிறத்தைப்புகழ்ந்தருளினர். ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிச்செய்த இத்தலத் திருப்புகழிலும் இவ்விஷயம் கூறப்பெறுதல் காண்க. ஸ்வாமி-அரத்துறைநாதர், தேவியார்-ஆனந்தநாயகி. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் சிதம்பரம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே சற்சாலையில் 12 மைலில் உள்ள குமாரகுடி மார்க்கத்தில் மேற்கே 4 மைலில் (3) திருக்கூடலையாற்றூரையும் அங்கிருந்து மேற்கே ஸ்ரீமுட்டம் மட்சாலையில் 10மைலில் (4) திருவெருக்கத்தம்புலியூரையும் அங்கிருந்து வடக்கே விருத்தாஜலம் கற்சாலையில் மூன்றுமைலிலுள்ள நேமத்திலிருந்து மேற்கே மட்சாலையில் 3 மைலில் (2) திருத்தூங்கானை மாடத்தையும் கடந்து அங்கிருந்து தென்மேற்கே மட்சாலையில் 4 மைலில் நிவாநதிக்கரையிலுள்ளது.

---

## உ திருத்தூங்கானைமாடம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-பழந்தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஒடுங்கும்பிணிபிறவிகேடென்றிவையுடைத்தாயவாழ்க்கையொழியத்தவம், அடங்குமிடங்கருதிநின்றீரெல்லாமடிகளடிநிழற்கீழாளாம்வண்ணம், கிடங்குமதிலுஞ்சுலாவியெங்குங்கெழுமனைகடோறுமறையின்னொலி, தொடங்குங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. 1

பிணிநீரசாதல்பிறத்தலிவைபிரியப்பிரியாதபேரின்பத்தோடணிநீரமேலுலகமெய்தலுறிலறிமின்குறைவில்லையானேறுடை, மணிநீலகண்டமுடையபிரான்மலைமகளுந்தானுமகிழ்ந்துவாழும், துணிநீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. 2

மண்ணார்முழவதிருமாடவீதி வயற்காழிஞானசம்பந்த
னல்ல, பெண்ணாகடத்துப்பெருங்கோயில்சேர்பிறையுரிஞ்சு
ந்தூங்கானைமாடமேயான், கண்ணார்கழல்பரவுபாடல்பத்துங்
கருத்துணரக்கற்றுநன்கேட்டாரும்போய், விண்ணோருலகத்
துமேவிவாழும்விதியதுவேபாகும்வினைமாயுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

### திருவிருத்தம், ச-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்திருவடிக்கொன்றுண்டுவிண்ணப்பம்போற்றிசெய்
என்னாவிகாப்பதற்கிச்சையுண்டேலிருங்கூற்றகல (யும்
மின்னாருமூவிலைச்சூலமென்மேற்பொறிமேவுகொண்டல்
துன்னார்கடந்தையுட்டூங்கானைமாடச்சுடர்க்கொழுந்தே. 1

ஆவாசிறுதொண்டனென்னினைந்தானென்றரும்பிணிநோய்
காவாதொழியிற்கலக்குமுன்மேற்பழிகாதல்செய்வார்
தேவாதிருவடிநீறென்னைப்பூசுசெந்தாமரையின்
பூவார்கடந்தையுட்டூங்கானைமாடத்தெம்புண்ணியனே. 5

கடவுந்திகிரிகடவாதொழியக்கயிலையுற்றான்
படவுந்திருவிரலொன்றுவைத்தாய்பனிமால்வரைபோல் [கள்
இடபம்பொறித்தென்னையேன்றுகொள்ளாயிருஞ்சோலைதிங்
தடவுங்கடந்தையுட்டூங்கானைமாடத்தெந்தத்துவனே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தூங்கானைமாடம்:—இது பெண்ணாகடம் எனவும் திருக்கடந்தைநகர் எனவும் வழங்கும். தேவகன்னியர் (பெண்), காமதேனு (ஆ) வெள்ளையானை (கடம்) இவர்கள் பூசித்த க்ஷேத்ரமாதலின் இப்பெயரெய்தியது. தூங்கானை என்பதைத் தூங்குங்களிறு என்னும் பிரயோகத்திலும் காண்க. தூங்கானைமாடம் ஆலயத்தின் பெயர். இங்கு கலிக்கம்பநாயனார் வைஸ்யகுலத்திற் றிருவவதாரஞ் செய்து சிவனடியாரை வழிபட்டுமாகேஸ்வர பூஜை செய்துவரும் நாளில் ஒருநாள் போஜனஞ் செய்யுமுன் சிவனடியார்களின் பாதங்களைத் தம்மனைவியார் நீர்வார்க்கத் தாம் பிரக்ஷாளனம் செய்யும்போது தம்மிடம் முன்

ஏவலாளராயிருந்த ஒருவர் சிவனடியாராய் வந்திருத்தலை யறிந்து மனைவியார் நீர்வார்க்கச்சிறிது தாழ்த்தமையின் அதையறிந்த நாயனூர் மிக்க கோபித்துத் தம்மனைவியார்கரத்தை வாளினூற்றுணித்துத்தாமே அவர் திருவடிகளை விளக்கி உபசரித்துத் திருவடியடைந்தார். ஸ்ரீ வாகீசமூர்த்திகள் இங்கெழுந்தருளித் தாம் முன் சமணசமயச்சார்பின ராயிருந்ததையும் "பொன்னூர் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்" என்றெடுத்து விண்ணப்பித்துத் தமக்குச் சூலக்குறி பொறிக்கவேண்ட சுவாமி அவ்விதமே சிவபூதத்தைக்கொண்டு சூலவிடபக்குறிகளைப் பொறித்தருளினூர். ஸ்ரீ மெய்கண்டதேவரின் பிதாவாகிய அச்சுதகளப்பாளர் வாழ்ந்த திருப்பதி. சுவாமி-கூடர்க்கொழுந்துநாதர், தேவியார்-கடந்தைநாயகி, இதற்குப்பதிகம் 2.

இத்தலத்திற்குப் பாதை (1) திருவாத்துறைக்குச் சொல்லியதிற்காண்க.

## ரு. திருக்கூடலையாற்றூர்.

### சுந்தரமூர்த்திநாயனூர்.

பண்-புறநீர்மை. ஏ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வடிவுடைமழுவேந்திமதகரியுரிபோர்த்துப்
பொடியணிதிருமேனிப்புரிகுழலுமையோடும்
கொடியணிநெடுமாடக்கூடலையாற்றூரில்
அடிகளிவ்வழிபோந்தவதிசயமறியேனே. 1

வையகமுழுதுண்டமாலொடுநான்முகனும்
பையரவிளவல்குற்பாவையொடும்முடனே
கொய்யணிமலர்ச்சோலைக்கூடலையாற்றூரில்
ஐயனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. 2

கூடலையாற்றூரிற்கொடியிடையவளோடும்
ஆடலுகந்தானையதிசயமிதுவென்று
நாடியவின்றமிழாலுவலவூரன்சொல்
பாடல்கள்பத்தும்வல்லார்தம்வினைபற்றறுமே. 10.

திருச்சிற்றம்பலம்.

திருக்கூடலையாற்றூர்:—இது மணிமுத்தா நதியும் வெள்ளாறும் கூடுமிடத்தில் உண்மையின் இப்பெயரெய்தியது. சுந்தரமூர்த்திநாயனர் திருமுதுகுன்றத்துக்குச்செல்லுபவர் இங்கு வராமலே போகஸ்வாமி பிராம்மணவடிவங்கொண்டு முன் செல்ல சுந்தரமூர்த்தி திருமுதுகுன்றத்துக்கு வழியாது என்று வினவக் கூடலையாற்றூருக்குப் போகும் வழி இது என்று கூறி மறைதலும் சுந்தரமூர்த்திகள் பரமசிவனென்றறிந்து திருவருளை வியந்து 'வடிவுடைமழு' என்று எடுத்து "ஐயனிவ்வழிபோந்த வதிசயமறியேனே" என்று பாடியருளினர் ஸ்வாமி - நெறிகாட்டுநாயகர், தேவியார்—புரிகுழனயகி, இதற்குப் பதிகம்-1.

இத்தலத்திற்கும் பாதை (1) திருவரத்துறைக்குச் சொல்லியிருப்பதிற்காண்க.

## ௬. திருவெருக்கத்தம்புலியூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-குறிஞ்சி. க-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

படையார்தருபூதப்பகடாருரிபோர்வை
உடையானுமையோடுமுடனுயிடுகங்கைச்
சடையானெருக்கத்தம்புலியூர்த்தகுகோயில்
விடையானடியேத்தமேவாவினைதானே. 1

இலையார்தருசூலப்படையெம்பெருமானுய்
நிலையார்மதின்மூன்றுநீறாய்விழவெய்த
சிலையானெருக்கத்தம்புலியூர்த்திகழ்கோயில்
கலையானடியேத்தக்கருதாவினைதானே. 2

ஏரரெருக்கத்தம்புலியூருறைவானைச்
சீரார்திகழ்காழித்திருவார்சம்பந்தன்
ஆராவருந்தமிழ்மாலையிவைவல்லார்
பாராரவரேத்தப்பதிவானுறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருவெருக்கத்தம்புலியூர்:—இது இராஜேந்திரபட்டினம் என்று பிரஸித்தமாக வழங்கும். எருக்கினைத்தலவிருக்ஷமாகவு

டைய புலியூராதலின் இப்பெயரெய்தியது. இங்கு திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் திருவவதாரஞ்செய்து சிவபக்தி செய்து வரும் நாளில் ஸ்ரீஞானசம்பந்தரின் பிரபாவத்தைக்கேட்டுத் தாமும் மனைவியாரும் சீகாழிக்குச்சென்று பிள்ளையாரைத் தரிசித்து அவராணையின்படி பிள்ளையாருடன் இருந்து அவர்பதிகங்களையாழிலிட்டு வாசிக்கும் திருத்தொண்டுபுரிந்து அவரது திருக்கல்யாணத்தில் ஜ்யோதியிற் கலந்தருளினார். ஸ்வாமி-நீலகண்டர், தேவியார்-நீலமலர்க்கண்ணியார், விருக்ஷம்-எருக்கு. இதற்குப்பதிகம்-1.

இத்தலத்திற்கும் பாதை (1) திருவாத்துறைக்குச் சொல்லியதிற்காண்க.

---

## ரு. திருத்திணை நகர்.

### சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-தக்கேசி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீறுதாங்கிய திருநுதலானைநெற்றிக்கண்ணனை நிரைவளைமடந்தை, கூறுதாங்கியகொள்கையினானைக் குற்றமில்லியைக்கற்றையஞ்சடைமேல், ஆறுதாங்கியவழகனையமரர்க்கரியசோதியைவரிவாளுகளும், சேறுதாங்கியதிருத்தினைநகருட் சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. 1

வேந்தராயுலகாண்டறம்புரிந்துவீற்றிருந்தவிவ்வுடலிதுதன்னைத், தேய்ந்திறந்துவெந்துயருழந்திடுமிப்பொக்கவாழ்வினைவிட்டிடுநெஞ்சே, பாந்தளங்கையிலாட்டுகந்தானைப் பரமனைக்கடற்சூர்தடிந்திட்ட, சேந்தர்தாதையைத்திருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. 6

நீடுபொக்கையிற் பிறவியைப்பழித்துநீங்கலாமென்றுமனத்தினைத்தெருட்டிச், சேடுலாம்பொழிற்றிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினதிருவடியிணைதான், நாடெலாம்புகழ்நாவலூராளிநம்பிவன்றொண்டனூரனுரைத்த, பாடலாந்தமிழ்பத்திவைவல்லார்முத்திபாவதுபரகதிப்பயனே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருத்திணைநகர்:—இது பள்ளஜாதியிலவதரித்த பெரியான் என்னும் சிவபக்தர் உழுதுகொண்டிருக்கும்போது ஸ்வாமி அங்குவந்து அவரைத்தமக்கு அன்னத்தின் பொருட்டு ஊருக்குள் போக்கி மீண்டு வருவதற்குள் தினைவிளைந்திருக்கச்செய்து அநுக்கிரஹித்த தலமாதலின் இப்பெயரெய்தியது. ஸ்வாமி-திருநீசுவரர், சிவக்கொழுந்தீசுவரர், தேவியார்-இளங்கொம்பன்னாள், தீர்த்தம்-ஜாம்புவதீர்த்தம், விருக்ஷம்-கொன்றை. இதற்குப்பதிகம்-1.

இத்தலம் ஆலப்பாக்கம் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே மட்சாலையில் 5 மைலில் உள்ளது. பரங்கிப்பேட்டை ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே 7 மைல்.

---

## சா. திருச்சோபுரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பழந்தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வெங்கணானையீருரிவைபோர்த்துவிளங்குமொழி
மங்கைபாகம்வைத்துகந்தபாண்பதுவென்னைகொலாம்
கங்கைபோடுதிங்கள்சூடிக்கடிகமழுங்கொன்றைத்
தொங்கலானேதூயநீற்றாய்சோபுரமேயவனே. 1

விடையமர்ந்துவெண்மழுவொன்றேந்திவிரிந்திலங்கு
சடையொடுங்கத்தண்புனலைத்தாங்கியதென்னைகொலாம்
கடையுயர்ந்தமும்மதிலுங்காய்ந்தனலுள்ளழுந்தத்
தொடைநெகிழ்ந்தவெஞ்சிலையாய்சோபுரமேயவனே. 2

சோலைமிக்கதண்வயல்சூழ்சோபுரமேயவனைச்
சீலமிக்கதொல்புகழார்சிரபுரக்கோனலத்தான்
ஞாலமிக்கதண்டமிழான்ஞானசம்பந்தன்சொன்ன
கோலமிக்கமாலைவல்லார்கூடுவர்வானுலகே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சோபுரம்:— இது தியாகவல்லியென்னும் ராஜபுத்திரி பூசித்த காரணத்தால் தியாகவல்லி என்றும் வழங்கும். அகஸ்தியரும் பூசித்த க்ஷேத்திரம். கடற்கரையில் மணலால் மூடியிருந்தது

ஸமீபத்தில் வெளிப்படுத்தப்பெற்றது. சுவாமி—சோபுரநாதர், தேவியார்-சோபுரநாயகி, இதற்குப்பதிகம்-1.

இத்தலம் ஆலப்பாக்கம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கரைமார்க்கமாய்க்கானலாற்றைத்தோணியாற்கடந்து மணற்பாதையில் ஒன்றரைமைலில் உள்ளது.

---

# ௭. திருவதிகைவீரட்டம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண்-நக்கராகம். ௧-ந் திருமுறை.

குண்டைக்குறட்பூதங்குழுமவனலேந்திக்
கெண்டைப்பிறழ்தெண்ணீர்க்கெடிலவடபக்கம்
வண்டுமருள்பாடவளர்பொன்விரிகொன்றை
விண்டதொடையலானாடும்வீரட்டானத்தே. 1

அரும்புங்குருப்பையுமலைத்தமென்கொங்கைக்
கரும்பின்மொழியாளோடுடன்கையனல்வீசிச்
சுரும்புண்விரிகொன்றைச்சுடர்பொற்சடைதாழ
விரும்புமதிகையுளாடும்வீரட்டானத்தே. 2

ஞாழல்கமழ்காழியுண்ஞானசம்பந்தன்
வேழம்பொருதெண்ணீரதிகைவீரட்டானத்துச்
சூழுங்கழலானைச்சொன்னதமிழ்மாலை
வாழுந்துணையாகநினைவார்வினையிலரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

பண்-கொல்லி. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்கொடுமைபலசெய்தனநானறியேன், ஏற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதும், தோற்றாதென்வயிற்றினகம்படியேகுடரோடுதொடக்கிமுடக்கியிட, ஆற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. 1

நெஞ்சம்முமக்கேயிடமாகவைத்தேனினையாதொருபோதுமிருந்தறியேன், வஞ்சம்மிதுவொப்பதுகண்டறியேன்வயிற்றோடுதொடக்கிமுடக்கியிட, நஞ்சாகிவந்தென்னைநலிவதனைநணுகாமற்றுரந்துகரந்துமிடீர், அஞ்சேலுமென்னீரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. 2

சலம்பூவொடுதூபமறந்தறியேன்றமிழோடிசைபாடன்மறந்தறியேன், நலந்தீங்கிலுமுன்னைமறந்தறியேனுன்னாமமென்னாவின்மறந்தறியேன், உலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வாயுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளாய், அலந்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. 6

போர்த்தாயங்கோரானையினீருரிதோல்புறங்காடரங்காநடமாடவல்லாய், ஆர்த்தானரக்கன்றனைமால்வரைக்கீழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய், வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தாலென்வேதனையானவிலக்கியிடாய், ஆர்த்தார்புனல்சூழதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. 10

திருச்சிற்றம்பலம்.

---

பண்-காந்தாரம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ்சுடர்த்திங்கட்சூளாமணியும்
வண்ணவுரிவையுடையும்வளரும்பவளநிறமும்
அண்ணலரண்முரணேறுமகலம்வளாயவரவும்
திண்ணன்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லையுஞ்சவருவதுமில்லை. 1

பூண்டதொர்கேழலெயிறும்பொன்றிகழாமைபுரள [லும்
நீண்டதிண்டோள்வலஞ்சூழ்ந்துநிலாக்கதிர்போலவெண்ணூ
காண்டகுபுள்ளின்சிறகுங்கலந்தகட்டங்கக்கொடியும்
ஈண்டுகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. 2

பலபலகாமத்தராகிப்பதைத்தெழுவார்மனத்துள்ளே
கலமலக்கிட்டுத்திரியுங்கணபதியென்னுங்களிறும்
வலமேந்திரண்டுசுடரும்வான்கயிலாயமலையும்
நலமார்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. 5

நரம்பெழுகைகள்பிடித்துநங்கைநடுங்கமலையை
உரங்களெல்லாங்கொண்டெடுத்தானென்பதுமொன்றுமலற
வரங்கள்கொடுத்தருள்செய்வான்வளர்பொழில்வீரட்டஞ்சூழ்
நிரம்புகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம் [ந்து
அஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. 10

திருச்சிற்றம்பலம்.

---

## திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நம்பனேயெங்கள்கோவேநாதனேயாதிமூர்த்தி
பங்கனேபரமயோகியென்றென்றேபாவிநாளும்
செம்பொனேபவளக்குன்றேதிகழ்மலர்ப்பாதங்காண்பான்
அன்பனேயலந்துபோனேனதிகைவீரட்டனீரே. 1

கழித்திலேன்காமவெந்நோய்காதன்மையென்னும்பாசம்
ஒழித்திலேனூனைநோக்கியுணர்வெனுமிமைதிறந்து [டேன்
விழித்திலேன்வெளிறுதோன்றவினையெனுஞ்சரக்குக்கொண்
அழித்திலேனயர்த்துப்போனேனதிகைவீரட்டனீரே. 7

திருச்சிற்றம்பலம்.

---

## திருவிருத்தம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆரட்டதேனுமிரந்துண்டகமகவன்றிரிந்து
வேரட்டதிப்பித்திடுகின்றதால்விரிநீர்ப்பரவைச்
சூரட்டவேலவன்தாதையைச்சூழ்வயலாரதிகை
வீரட்டத்தானைவிரும்பாவரும்பாவவேதனையே. 5

படர்பொற்சடையும்பகுவாயரவும்பனிமதியும்
சுடலைப்பொடியுமெல்லாமுளவேயவர்தூயதெண்ணீர்க்
கெடிலக்கரைத்திருவீரட்டராவர்கேட்டேனடைந்தார்
நடலைக்குநற்றுணையாகுங்கண்டீரவர்நாமங்களே. 6

திருச்சிற்றம்பலம்.

---

ஏழைத்திருத்தாண்டகம்-கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வெறிவிரவுகூவிளநற்றொங்கலானைவீரட்டத்தானைவெள்ளேற்றினானைப், பொறியரவினானைப்புள்ளூர்தியானைப்பொன்னிறத்தினானைப்புகழ்தக்கானை, அறிதற்கரியசீரம்மான்றன்னையதிபரையமங்கையமர்ந்தான்றன்னை,எறிகெடிலத்தானையிறைவன்றன்னையேழையேனான்பண்டிகழ்ந்தவாறே 1

உறிமுடித்தகுண்டிகைதங்கையிற்றூக்கியூத்தைவாய்ச்சமணர்க்கோர்குண்டாக்கனாய்க், கறிவிரவுநெய்சோறுகையிலுண்டுகண்டார்க்குப்பொல்லாதகாட்சியானேன், மறிதிரைநீர்ப்பவ்வநஞ்சுண்டான்றன்னைமறித்தொருகால்வல்வினையே னினைக்கமாட்டேன், எறிகெடிலநாடர்பெருமான்றன்னையேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. 8

திருச்சிற்றம்பலம்.

---

அடையாளத்திருத்தாண்டகம் கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சந்திரனைமாகங்கைதிரையான்மோதச்சடாமகுடத்திருத்துமேசாமவேதக், கந்தருவம்விரும்புமேகபாலமேந்துகையனேமெய்யனேகனகமேனிப், பந்தணவுமெல்விரலாள்பாகனாமேபசுவேறுமேபரமயோகியாமே, ஐந்தலையமாசுணங்கொண்டரையார்க்குமேயவனாகிலதிகைவீரட்டனாமே. 1

எழுந்ததிரைநதித்திவலைநனைந்ததிங்களிளநிலாத்திகழ்கின்றவளர்சடையனே, கொழும்பவளச்செங்கனிவாய்க்காம

க்கோட்டிகொங்கையிணையமர்பொருதுகோலங்கொண்ட, தழும்புளவே வரைமார்பில் வெண்ணூலுண்டே சாந்தமொடு சந்தனத்தினளறுதங்கி, அழுந்தியசெந்திருவுருவில்வெண்ணீற்றனேயவனுகிலதிகைவீரட்டனுமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## போற்றித்திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எல்லாஞ்சிவனென்னநின்றாய்போற்றியெரிசுடராய்நின்றவிறைவா போற்றி, கொல்லார் மழுவாட் படையாய் போற்றி கொல்லுங்கூற்றென்றையுதைத்தாய்போற்றி, கல்லாதார்காட்சிக்கரியாய்போற்றிகற்றாரிடும்பைகளைவாய்போற்றி, வில்லால்வியனரணமெய்தாய்போற்றிவீரட்டங்காதல்விமலாபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவடித்திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அரவணையான்சிந்தித்தாற்றும்மடியருமறையான்சென்னிக்கணியாமடி, சரவணத்தான்கைதொழுதுசாரும்மடிசார்ந்தார்கட்கெல்லாஞ்சரணாமடி, பரவுவார்பாவம்பறைக்கும்மடிபதினெண்கணங்களும்பாடும்மடி, விரவுநீர்த்தென்கெடிலநாடன்னடி திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. 1

அரும்பித்தசெஞ்ஞாயிறேய்க்கும்மடியழகெழுதலாகாவருட்சேவடி, சுரும்பித்தவண்டினங்கள்சூழ்ந்தவடிசோமனையுங்காலனையுங்காய்ந்தவடி, பெரும்பித்தர்கூடிப்பிதற்றும்மடி பிழைத்தார்பிழைப்பரியவல்லவடி, திருந்துநீர்த்தென்கெடிலநாடன்னடி திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. 4

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனர்.

### பண்-கொல்லிக்கௌவாணம், எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தம்மானைபறியாதசாதியாருளரேசடைமேற்கொள்பிறை யானைவிடைமேற்கொள்விகிர்தன், கைம்மாவினுரியானைக் கரிகாட்டிலாடலுடையானை விடையானைக்கறைகொண்டகண்டத், தெம்மான்றனடிக்கொண்டென்முடிமேல் வைத்திடுமென்னுமாசையால்வாழ்கின்றவறிவிலாநாயேன், எம்மானைபெறிகெடிலவடவீரட்டானத்துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. 1

பொன்னானமயிலூர்திமுருகவேள்தாதைபொடியாடு திருமேனிநெடுமாறன்முடிமேல், தென்னனைக்குடபாலின்வடபாலின் குணபாற் சேராதசிந்தையான் செக்கர்வானந்தி, அன்னனையமரர்கடம்பெருமானைக் கருமானி னுரியானையதிகைமாநகருள்வாழ்பவனை, என்னனைபெறிகெடிலவடவீரட்டானத்துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. 8

என்பினையேகலனுகவணிந்தானையெங்களெருதேறும் பெருமானையிசைஞானிசிறுவன், வன்பனையவளர்பொழில்சூழ்வயனுவலூர்க்கோன்வன்றொண்டனூரன்மதியாது சொன்ன, அன்பனை யாவர்க்கு மறிவரியவத்தர்பெருமானையதிகைமாநகருள்வாழ்பவனை, என்பொன்னைபெறிகெடிலவடவீரட்டானத்துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே

திருச்சிற்றம்பலம்.

---

திருவதிகைவீரட்டம்:—இது அட்டவீரட்டங்களுள் ஒன்று; திரிபுரஸம்ஹாரஞ் செய்தருளிய தலம்.பதிகக்குறிப்பு ஸ்வாமி பெயர் முதலியவைகளை உற்று நோக்குக. இங்கு திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்வந்து தரிசனஞ்செய்தபோது ஸ்வாமிதிருநடனஞ்செய்து தரிசிப்பித்தருளப்பிள்ளையார்அதனை அநுபவித்துத்திருப்பதிகத்தில் திருப்பாட்டுதோறும்ஆடும்வீரட்டானத்தேஎன்று அருளிச்செய்தார்.ஸமீபத்தில் உள்ள திருவாமூரில் வேளாளர்குலத்தில் திருவவதாரஞ்செய்த

மருணீக்கியார் முன்னைத்தவத்தில் நேர்ந்த சிறிது வழுவினால் சமணசமயப்பிரவேசஞ்செய்து பின்னர் தம்தமக்கைதிலகவதியார் பிரார்த்தனையால் சூலை நோயினால் ஆட்கொள்ளப்பெற்றுக் 'கூற்றாயின வாறு விலக்ககிலீர்' என்னும்திருப்பதிகம்பாடித்திருநாவுக்கரசரென்னும் நாமஞ்சூட்டப்பெற்றுப்பலபதிகம் பாடியருளினார். சுந்தரமூர்த்திநாயனார் சிதம்பரத்துக்கெழுந்தருளும்போது இத்தலம் ஸ்ரீ வாகீசர் திருத்தொண்டு செய்த தலமாதலின் மிதித்தற்கு அஞ்சிச் சித்தவடமடத்தை அடைந்து, நித்திரை செய்யும்போது பரமசிவன் விருத்தப்பிராம்மண வடிவங்கொண்டு எழுந்தருளித் திருவடி சூட்டத் திருப்பதிகம் பாடித் துதித்தருளினார். திலகவதியார் திருத்தொண்டு செய்தருளிய திவ்விய தலம். சமணசமயச்சார்பினனாயிருந்து ஸ்ரீ வாகீசமூர்த்திகளால் திருந்தி சைவனாய பல்லவராஜன் தனதுநகரமாகிய பாடலிபுரத்திலுள்ள சமண் பாழிகளை இடித்து இங்கு குணதர வீச்சுரம் என்னும் ஆலயமெடுத்தான். தென்றிசையிற் கங்கையென்னும் திருக்கெடிலநதிக்கரையிலுள்ள தலம். ஸ்வாமி-திரிபுராந்தகேஸ்வரர், தேவியார்-திரிபுரசுந்தரி, தீர்த்தம்-கேடிலம். இதற்குப்பதிகம்-18.

இத்தலம் பண்ருட்டி ஸ்டேஷனிலிருந்து கிழக்கே ஒரு மைலில் உள்ளது.

---

## அ. திருநாவலூர்.

### சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கோவலனான்முகன்வானவர்கோனுங்குற்றேவல்செய்ய
மேவலர்முப்புரந்தீயெழுவித்தவரோரம்பினால்
ஏவலனார்வெண்ணெய்நல்லூரில்வைத்தெனையாளுங்கொண்ட
நாவலனார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. 1

தன்மையினாலடியேனைத்தாமாட்கொண்டநாட்சபைமுன்
வன்மைகள்பேசிடவன்றொண்டனென்பதோர்வாழ்வுதந்தார்
புன்மைகள்பேசவும்பொன்னைத்தந்தென்னைப்போகம்புணர்த்த
நன்மையினார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. 2

வாயாடிமாமறையோதியோர்வேதியனாகிவந்து
தீயாடியார்சினக்கேழலின்பின்சென்றோர்வேடுவனாய்
வேயாடியார்வெண்ணெய்நல்லூரில்வைத்தெனையாளுங்
நாயாடியார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. [கொண்ட
நாதனுக்கூர்நமக்கூர்நரசிங்கமுனையரையன்
ஆதரித்தீசனுக்காட்செயுமூரணிநாவலூரென்
றோதநற்றக்கவன்றொண்டனாரூரனுரைத்ததமிழ்
காதலித்துங்கற்றுங்கேட்பவர்தம்வினைக்கட்டறுமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருநாவலூர்:—இது தற்காலம் திருநாமநல்லூர் என்று வழங்குகிறது ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார்திருவவதாரஞ்செய்த திவ்யக்ஷேத்ரம்; எனவே சடைநாயனார் இசைஞானியார் என்னும் அவர் பிதா மாதாக்கள் எழுந்தருளியிருந்து மூக்தியடைந்த க்ஷேத்ரம் சுவாமி-நாவலேசுரஸ்வரர், தேவியார் சுந்தராம்பிகை, இதற்குப்பதிகம்-1.

இத்தலம் பண்ருட்டி ஸ்டேஷனிலிருந்து மேற்கேஉளுந்தூர்ப்பேட்டை மார்க்கமாய் திருமுதுகுன்றத்துக்குப்போகிற கற்சாலையில் 12 மைலில் உள்ளது.

---

## ௬. திருமுதுகுன்றம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

மத்தாவரைநிறுவிக்கடல்கடைந்தவ்விடமுண்ட
தொத்தார்தருமணிநீண்முடிச்சுடர்வண்ணனதிடமாம்
கொத்தார்மலர்குளிர்சந்தகிலொளிர்குங்குமங்கொண்டு
முத்தாறுவந்தடிவீழ்தருமுதுகுன்றடைவோமே. 1

விளையாததொர்பரிசில்வரு [illegible] பொன்
தளையாயினதவரவ்வருடலைவன்னதுசார்பாம்
களையார்தருகதிராயிரமுடையவ்வவனோடு
முளைமாமதிதவழும்முயர்முதுகுன்றடைவோமே. 3

முகில்சேர்தருமுதுகுன்றுடையானைம்மிகுதொல்சீர்
புகலிந்நகர்மறைஞானசம்பந்தனுரைசெய்த
நிகரில்லனதமிழ்மாலைகளிசையோடிவைபத்தும்
பகரும்மடியவர்கட்கிடர்பாவம்மடையாவே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-மேகராகக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மெய்த்தாறுசுவையுமேழிசையுமெண்குணங்களும்விரும்புநால்வே, தத்தாலுமறிவொண்ணாநடைதெளியப்பளிங்கேபோலரிவைபாகம், ஒத்தாறுசமயங்கட்கொருதலைவன்கருதுமூருலவுதெண்ணீர், முத்தாறுவெதிருதிர்நித்திலம்வாரிக்கொழிக்குமுதுகுன்றமே. 1

தக்கனதுபெருவேள்விச்சந்திரனிந்திரனெச்சனருக்கனங்கி, மிக்கவிதாதாவினொடும்விதிவழியேதண்டித்தவிமலர்கோயில், கொக்கினியகொழும்வருக்கைகதலிகமுகுயர்தெங்கின்குலைகொள்சோலை, முக்கனியின்சாறொழுகிச்சேறுலராநீள்வயல்சூழ்முதுகுன்றமே. 3

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

திருத்தாண்டகம் சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கருமணியைக்கனகத்தின்குன்றொப்பானைக்கருதுவார்க்காற்றவெளியான்றன்னைக், குருமணியைக்கோளரவமாட்டுவானைக்கொல்வேங்கையதளானைக்கோவணவன்றன்னை, அருமணியையடைந்தவர்கட் கமுதொப்பானை யானஞ்சுமாடியைநானபயம்புக்க, திருமணியைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்தீவினையேனறியாதேதிகைத்தவாறே. 1

இகழ்ந்தானையிருபதுதோணெரியவூன்றியெழுநரம்பினிசைபாடவினிதுகேட்டுப், புகழ்ந்தானைப்பூந்துருத்திமேயான்றன்னைப் புண்ணியனை விண்ணவர்க ணிதியந்தன்னை, மகிழ்ந்

தானே மலைமகளோர்பாகம் வைத்து வளர்மதியஞ் சடைவைத்
துமாலோர்பாகம், திகழ்ந்தானைத் திருமுதுகுன்றுடையான்
றன்னைத்தீவினையேனறியாதே திகைத்தவாறே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொன்செய்தமேனியினீர்புலித்தோலையரைக்கசைத்தீர்
முன்செய்தமூவெயிலும்மெரித்தீர்முதுகுன்றமர்ந்தீர்
மின்செய்தநுண்ணிடையாள்பரவையிவடன்முகப்பே
என்செய்தவாறடிகேளடியேனிட்டளங்கெடவே. 1

உம்பரும்வானவருமுடனேநிற்கவேயெனக்குச்
செம்பொனைத்தந்தருளித்திகழும்முதுகுன்றமர்ந்தீர்
வம்பமருங்குழலாள்பரவையிவள்வாடுகின்றாள்
எம்பெருமானருளீரடியேனிட்டளங்கெடவே. 2

எத்தாதிருந்தறியேனிமையோர்தனிநாயகனே
மூத்தாயுலகுக்கெல்லாமுதுகுன்றமமர்ந்தவனே
பூத்தாருங்குழலாள்பரவையிவடன்முகப்பே
கூத்தாதந்தருளாய்கொடியேனிட்டளங்கெடவே. 9

பிறையாருஞ்சடையெம்பெருமானருளாயென்று
முறையால்வந்தமரர்வணங்குமுதுகுன்றர்தம்மை
மறையார்தங்குரிசில்வயனாவலாரூரன்சொன்ன
இறையார்பாடல்வல்லார்க்கெளிதாஞ்சிவலோகமதே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருமுதுகுன்றம்:—இது விருத்தாசலம், விருத்தகிரி, பழமலை எனப்பலபடி கூறப்பெறும்; உலகத்திலுள்ள எல்லா மலைகளும் படைக்கப்படுவதன்முன்னர் சிவபெருமானால் படைக்கப்பட்டமையின் இப்பெயரெய்தியது. பிரம்மதேவர், அகஸ்தியர் சுவேதன் என்னும் அரசன் முதலியோர் பூசித்துவழிபட்டது. விஷ்ணுவாதிதேவர்களும்

முனிவர்களும் ஈஸ்வரத்யானம் பண்ணிப்பொழிந்த ஆநந்தபாஷ்பம் பெருகித்திருமணிமுத்தாநதியாயிற்று என்றுபுராணம் கூறும். இங்கு இறப்பவர்களது வலச்செவியில் திருமுதுகுன்றர் மந்திரோபதேசஞ் செய்தும் தேவியார்சயித்யோபசாரஞ்செய்து பிறவிக்கரையாற்றியும் அநுகிரஹிப்பர். ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனுர் பரமசிவனைப் பாடிப் பொன்பெற்று அதனைச்சுவாமியை வேண்டித் திருமணிமுத்தாநதியில் இட்டு திருவாரூர்க்கமலாலயத்தில் பாடி எடுத்தனர். இறந்தார்க்கு முத்தியைத்தரும் தன்மையதாதலின் இது விருத்தகாசி என்றும் கூறப்பெறும். ஸ்வாமி- பழமலைநாதர், தேவியார்-பெரியநாயகி, தீர்த்தம்-மணிமுத்தாநதி, விருக்ஷம்-வன்னி, இதற்குப்பதிகம்-11.

இத்தலம் சிதம்பரம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலைமார்க்கமாய் 12 மைலில் குமாரகுடியையும் மேற்கே திரும்பி 4 மைலில் திருக்கூடலையாற்றூரையும் அங்கிருந்து மேற்கே ஸ்ரீமுட்டம் மட்சாலையில் 10 மைலில் ராஜேந்திரபட்டணத்தையும் அதினின்று வடக்கே கற்சாலையில் 3 மைலில் நேமத்தையும் கடந்து வடக்கே 7 மைல் சென்று அடையத்தக்கது. கூடலூர்ஸ்டேஷனிலிருந்து மத்தியில் குறிஞ்சிப்பாடியைக்கடந்தும் போகலாம். 35 மைல்.

---

# ௰. திருநெல்வெண்ணெய்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

### திருமுக்கால்.

பண்-சாதாரி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நல்வெணெய்விழுதுபெய் தாடுதிர்நாடொறும்
நெல்வெணெய்மேவியநீரே
நெல்வெணெய்மேவியநீருமைநாடொறும்
சொல்வணமிடுவதுசொல்லே. 1

நிச்சலுமடியவர்தொழுதெழுநெல்வெணெய்க்
கச்சிளவரவசைத்தீரே
கச்சிளவரவசைத்தீருமைக்காண்பவர்
அச்சமொடருவினையிலரே. 2

நிலமல்குதொல்புகழ்நெல்வெணெயீசனை
நலமல்குஞானசம்பந்தன்
நலமல்குஞானசம்பந்தனசெந்தமிழ்
சொலமல்குவார்துயரிலரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருநெல்வெண்ணெய்:**—இது இப்போது நெய்வெண்ணெய் என்று வழங்கும். ஸநகாதியர் பூசித்த க்ஷேத்ரம். சுவாமி-வெண்ணெயப்பர், தேவியார்-நீலமலர்க்கண்ணி, தீர்த்தம்-பெண்ணை, இதற்குப்பதிகம்-1.

இத்தலம் மாம்பழப்பட்டு ஸ்டேஷனிலிருந்து தெற்கே மட்சாலையில் 6 மைலில் திருவெண்ணெய்நல்லூரையடைந்து அங்கிருந்து தெற்கே கற்சாலையில் 10 மைலில் உள்ள கிளைமருதூரிலிருந்து மேற்கே மட்சாலையில் 3 மைலில் உள்ளது.

---

## கக. திருக்கோவலூர் வீரட்டம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். பண்-நட்டராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

படைகொள்கூற்றம்வந்துமெய்ப்பாசம்விட்டபோதின்கண்
இடைகொள்வாரெமக்கிலையெழுகபோதுநெஞ்சமே
குடைகொள்வேந்தன்மூதாதைகுழகன்கோவலூர்தனுள்
விடையதேறுங்கொடியினான்வீரட்டானஞ்சேர்துமே. 1

கனைகொளிருமல்சூலைநோய்கம்பதாளிகுன்மமும்
இனையபலவுமூப்பினோடெய்திவந்துநலியாமுன்
பனைகளுலவுபைம்பொழிற்பழனஞ்சூழ்ந்தகோவலூர்
வினையைவென்றவேடத்தான்வீரட்டானஞ்சேர்துமே. 4

கழியொடுலவுகானல்சூழ்காழிஞானசம்பந்தன்
பழிகடீரச்சொன்னசொற்பாவநாசமாதலால்
அழிவிலீர்கொண்டேத்துமினந்தண்கோவலூர்தனுள்
விழிகொள்பூதப்படையினான்வீரட்டானஞ்சேர்துமே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருநேரிசை, ச-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

செத்தையேன்சிதம்பநாயேன் செடியனேனழுக்குப்பாயும்
பொத்தையேபோற்றிநாளும்புகலிடமறியமாட்டேன்
எத்தைநான்பற்றிநிற்கேனிருளறநோக்கமாட்டாக்
கொத்தையேன்செய்வதென்னேகோவல்வீரட்டனீரே. 1

வழித்தலைப்படவுமாட்டேன் வைகலுந் தூய்மைசெய்து
பழித்திலேன் பாசமற்றுப்பரமநான் பரவமாட்டேன்
இழித்திலேன்பிறவிதன்னையென்னினைந் திருக்கமாட்டேன்
கொழித்துவந்தலைக்குந்தெண்ணீர்க்கோவல்வீரட்டனீரே. 3

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கோவலூர்:— இதனைத் திருக்கு-ஓவல்-ஊர் எனப் பிரித்து, அடியவர்க்கு மாயையை ஒழித்து அநுக்கிரஹிக்கும் தலம் என்று தலமாஹாத்மியம் கூறுகின்றது. இது அட்டவீரட்டங்களுள் ஒன்று; அந்தகாஸுர ஸம்ஹாரஞ் செய்ததலம். இங்கு மலாடர் கோமானாகத் திருவவதாரஞ் செய்த மெய்ப்பொருணாயனார் தம்மோடு பலமுறையும் போர்புரிந்து தோற்ற முத்தநாதனால் வஞ்சனையால் தம்முயிர்க்கு இறுதிநிகழ்ந்தகாலத்தும் வேடமே மெய்ப்பொருள் என்று அவனைக்காத்துத் தாம் ஸ்ரீ நடராஜப் பெருமானாரது திருச்சிலம்போசை கேட்டுத் திருவடியடைந்தார். ஆலயம் கெடிலத்தின் தென்கரையில் உள்ளது. பஸ்சிமாபிமுக சந்நிதி. ஸ்வாமி - வீரட்டநாதர், தேவியார் - சிவாநந்தவல்லி, தீர்த்தம் - பெண்ணை யாறு. இதற்குப் பதிகம்-2.

இத்தலம் திருக்கோவலூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கேகால்மைலில் (12) திருவறையணிநல்லூரையடைந்து பெண்ணையாற்றைக் கடந்து தென்கரையில் உள்ளது.

# ௧௨. திருவறையணிநல்லூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பீடினாற்பெரியோர்களும்பேதைமைகெடத்தீதிலா
வீடினாலுயர்ந்தார்களும்வீடிலாரிளவெண்மதி
சூடினார்மறைபாடினார்சடலைநீறணிந்தாரழல்
ஆடினாரறையணிநல்லூரங்கையாற்றொழுவார்களே. 1
இலையினார்சூலமேறுகந்தேறியேயிமையோர்தொழ
நிலையினாலொருகாலூன்றிச்சிலையினான்மதிலெய்தவன்
அலையினார்புனல்சூடியவண்ணலாரறையணிநல்லூர்
தலையினாற்றொழுதோங்குவார்நீங்குவார்தடுமாற்றமே. 2
கழியுலாங்கடற்கானல்சூழ்கழுமலமமர்தொல்பதிப்
பழியிலாமறைஞானசம்பந்தனல்லதோர்பண்பினார்
மொழியினாலறையணிநல்லூர்முக்கண்மூர்த்திதன்றாடொழு
கெழுவினாரவர்தம்மொடுங்கேடில்வாழ்பதிபெறுவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருவறையணிநல்லூர்:**—இது பாண்டவர் வனவாஸ காலத்தில் தாம் கண்ட ஐந்து அறைகள் அலங்காரம் செய்யும் நல்லூர் என்னும் காரணத்தால் இப்பெயரெய்தியது. தற்காலம் அறைகண்டநல்லூரெனவும் வழங்கும். இவ்வாலயம் மலைமேல் பஶ்சிமாபிமுகமாய் உள்ளது. சுவாமி-அறையணிநாதர், தேவியார்-அருணாயகி, தீர்த்தம்-பெண்ணை; இதற்குப்பதிகம்-1.

இத்தலம் திருக்கோவலூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கே கால் மைலில் பெண்ணை யாற்றின் வடகரையில் மலைமேல் உள்ளது.

---

# ௧௩. திருவிடையாறு.

## சுந்தரமூர்த்திநாயனார்

பண்-கொல்லி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முந்தையூர்முதுகுன்றங்குரங்கணின்முட்டம்
சிந்தையூர்நன்றுசென்றடைவான்றிருவாரூர்

பந்தையூர்பழையாறுபழனம்பைஞ்ஞீலி
எந்தையூரெப்தமானிடையாறிடைமருதே. 1

சுற்றுமூர்சுழியறிருச்சோபுரந்தொண்டர்
ஒற்றுமூரொற்றியூர்திருவூறலொழியாப்
பெற்றமேறிபெண்பாதியிடம்பெண்ணைத்தெண்ணீர்
எற்றுமூரெய்தமானிடையாறிடைமருதே. 2

ஊறிவாயனநாடியவன்றொண்டனூரன்
தேறுவார்சிந்தைதேறுமிடஞ்செங்கண்வெள்ளே
றேறுவாரெய்தமானிடையாறிடைமருதைக்
கூறுவார்வினையெவ்விடமெய்குளிர்வாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவிடையாறு:—இது சுகப்பிரம்மருஷி பூசித்த க்ஷேத்ரம். ஸ்வாமி-இடையாற்றுநாதர், தேவியார்—சிற்றிடைநாயகி, தீர்த்தம்-பெண்ணை. இதற்குப்பதிகம்-1.

இத்தலம் மாம்பழப்பட்டு ஸ்டேஷனிலிருந்து தெற்கேமட்சாலையில் 6 மைலில் திருவெண்ணெய் நல்லூரைக்கடந்து மேற்கே மட்சாலையில் மூன்றுமைலில் உள்ளது.

---

## கச. திருவெண்ணெய்நல்லூர்.

சுந்தரமூர்த்திநாயனர்.

பண்-இந்தளம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடீபெருமானேயருளாளா
எத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை [டுறையுள்
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. 1

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன் [யுள்
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறை
ஆயாவுனக்காளாயினியல்லேனெனலாமே. 2

மன்னேமறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரம்மேபொருதுந்தி
மின்னார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
அன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. 3

காரூர்புனலெய்திக்கரைக்கல்லித்திரைக்கையால்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
ஆரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருவெண்ணெய் நல்லூர்:**—இத்தல ஆலயம் திருவருட்டுறை என்று வழங்கும். இங்கு சுந்தரமூர்த்தி நாயனார் ஆதிசைவ குலத்தில் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் திருவவதாரஞ் செய்து சமீபத்திலே உள்ள புத்தூரிலே ஷடங்கவியாருடைய புத்திரியாரை விவாகம் செய்யும் போது பரமசிவன் முன் கைலாயத்தில் அருளியபடி விருத்த வேதியராய்த் தோன்றித் தடுத்தாட்கொண்டு அநுக்ரஹித்தார். அப்புத்தூர் தக்காலம் மணம்தவிர்ந்த புத்தூர் என்று வழங்குகிறது. சைவப்பிரதம சந்தாநாசார்யராகிய ஸ்ரீ மெய்கண்டதேவர் எழுந்தருளியிருந்து ஸ்ரீ சிவக்ஞான போத சாஸ்திரப் பிரவசனம் செய்தருளிய தலம். இவருக்கு அனுக்ரஹித்த மூர்த்தி ஸ்ரீ பொல்லாப் பிள்ளையார். ஸ்வாமி–தடுத்தாட்கொண்ட நாதர், கிருபாபுரீஸ்வரர், தேவியர் - வேற்கண்ணிநாயகி, மங்களாம்பிகை தீர்த்தம் –பெண்ணையாறு. இதற்குப்பதிகம் - 1

இத்தலம் மாம்பழப்பட்டுஸ்டேஷனிலிருந்து தெற்கேமட்சாலையில் 6 மைலில் உள்ளது. இடையில் பெண்ணையாற்றுக்குப் பரிசும் பாலமும் இல்லை.

---

## ௧௫. திருத்துறையூர்.

### சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-தக்கராகம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

மலையாருருவித்திரண்மாமணியுந்திக்
குலையாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபால்

கலைபாரல் தூற்தன் னியராடுந் துறையூர்த்
தலைவாவுனை வேண்டிக்கொள் வேன்றவநெறியே. 1

மத்தகம்மதயானையின் வெண்மருப்புந்தி
முத்தங்கொணர்ந்தெற்றியொர் பெண்ணைவடபால்
பத்தர்பயின்றேத்திப்பரவுந் துறையூர்
அத்தாவுனை வேண்டிக்கொள் வேன்றவநெறியே. 2

செப்பார்கமலம்மலர் நாவலூர் மன்னன்
கையாற்றொழுதேத்தப்படுந் துறையூர்மேல்
பொய்யாத்தமிழூரனுரைத்தன வல்லார்
மெய்யேபெறுவார்கடவநெறிதானே. 11

திருச்சிற்றம்பலம்.

திருந்துறையூர்:—இது தத்காலம் திருத்தலூர் எனவும் திருத்தளூர் எனவும் வழங்கும். இங்கு சுந்தரமூர்த்தி நாயனார் திருவெண்ணெய் நல்லூரினின்றும் வந்து தவநெறியைத் தரவேண்டுமென்று ஸ்வாமியைப் பிரார்த்தித்தருளினார். சைவசமய சந்தானாசார்யர்களுள் ஸகலாகம பண்டிதரென்னும் அருணந்தி சிவாசார்ய ஸ்வாமிகள் திருவவதாரஞ்செய்த க்ஷேத்ரம். ஸ்வாமி- துறையூர் நாதர், தேவியார்-பூங்கோதை நாயகி, தீர்த்தம்—பெண்ணை. இதற்குப்பதிகம்-1.

இத்தலம் விரிஞ்சிப்பாக்கம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே ஒன்றரைமைலில்உள்ளது. பண்ருட்டியிலிருந்து வடமேற்கே ஐந்துமைல்.

## கரு. திருவடுகூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-குறிஞ்சி. க-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

சுடுகூரெரிமாலை யணிவர் சுடர்வேலர்
கொடுகூர்மழுவாளொன் றுடையார் விடையூர்வர்
கடுகூர்பசிகாமங் கவலைபிணியில்லார்
வடுகூர்புனல்சூழ்ந்த வடுகூரடிகளே. 1

பாலுந்நறுநெய்யுந் தயிரும்பயின்றாடி
எலுஞ்சுடுநீறும் மென்புமொளிமல்கக்

கோலம்பொழிற்சோலைக்கூடி மடவன்னம்
ஆலும்வடுகூரிலாடும்மடிகளே. 2

படிநோன்பவையாவர்பழியில்புகழான
கடிநாணிகழ்சோலைகமழும்வடுகூரைப்
படியானசிந்தைமொழியார்சம்பந்தன்
அடிஞானம்வல்லாரடிசேர்வார்களே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவடுகூர்:—இது வைரவர் பூசித்த க்ஷேத்ரமாதலின் இப்பெயரெய்தியது. தற்காலம் ஆண்டார் கோயில் என்று வழங்குகிறது. சுவாமி-வடுகூர்நாதர், தேவியார்-வடுவகிர்க்கண்ணியம்மை, தீர்த்தம்-பெண்ணை. இதற்குப்பதிகம்-1.

இத்தலம் கண்டமங்கலம் என்று வழங்கும் சின்னபாபு ஸமுத்ரம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே மட்சாலையில் இரண்டுமைலில் உள்ளது. திருத்துறையூர் தென்மேற்கு ஒருமைல்.

---

# கள. திருமாணிகுழி.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

திருவிராகம் பண்-சாதாரி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொன்னியல்பொருப்பரையன்மங்கையொருபங்கர்புனறங்குசடைமேல், வன்னியொடுமத்தமலர்வைத்தவிறல்வித்தகர்மகிழ்ந்துறைவிடம், கன்னியிளவாளைகுதிகொள்ளவிளவள்ளைபடரள்ளல்வயல்வாய், மன்னியிளமேதிகள்படிந்துமனைசேருதவிமாணிகுழியே. 1

நித்தநியமத்தொழிலனாகிநெடுமால்குறளனாகிமிகவும்
சித்தமதொருக்கிவழிபாடுசெயநின்றசிவலோகனிடமாம்
கொத்தலர்மலர்ப்பொழிலினீடுகுலமஞ்ஞைநடமாடலதுகண்
டொத்தவரிவண்டுகளுலாவியிசைபாடுதவிமாணிகுழியே. 4

உந்திவருதண்கெடிலமோடுபுனல்சூழுதவிமாணிகுழிமேல்
அந்திமதிசூடியவெம்மானைபடிசேருமணிகாழிநகரான்
சந்தநிறைதண்டமிழ்தெரிந்துணருஞானசம்பந்தனதுசொல்
முந்தியிசைசெய்துமொழிவார்களுடையார்கணெடுவானநிலனே.

திருச்சிற்றம்பலம்.

---

திரு:மாணிகுழி :— இது பிரம சாரியாய் எழுந்தருளிய வாமனாவதார விஷ்ணு பூசித்ததலமாதலின் இப்பெயரெய்தியது. வாமனர் வழிபட்ட தென்பது பதிகத்து நான்காந்திருப்பாட்டிற்காண்க. ஸ்வாமி மாணிக்க வரதர், தேவியார்- மாணிக்கவல்லி. இதற்குப் பதிகம்-1

இத்தலம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலையில் (18) திருப்பாதிரிப்புலியூரை யடைந்து அங்கிருந்து மேற்கே ஐந்து மைல் சென்று தெற்கே திரும்பி அரைமைல் சென்றால் கருடநதித் தென்கரையில் உள்ளது.

---

# ௧௮. திருப்பாதிரிப்புலியூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-செவ்வழி. உ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

முன்னநின்றமுடக்கான்முயற்கருள்செய்துநீள்
புன்னைநின்றுகமழ்பாதிரிப்புலியூருளான்
தன்னைநின்றுவணங்குந்தனைத்தவமில்லிகள்
பின்னைநின்றபிணியாக்கையைப்பெறுவார்களே. 1
கொள்ளிநக்கபகுவாயபேய்கள்குழைந்தாடவே
முள்ளிலவம்முதுகாட்டுறையும்முதல்வன்னிடம்
புள்ளினங்கள்பயிலும்பாதிரிப்புலியூர்தனை
உள்ளநம்மேல்வினையாயினவொழியுங்களே. 2
அந்தணல்லாரகன்காழியுண்ஞானசம்
பந்தனல்லார்பயில்பாதிரிப்புலியூர்தனுள்
சந்தமாலைத்தமிழ்பத்திவைதரித்தார்கண்மேல்
வந்துதீயவ்வடையாமையால்வினைமாயுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனர்.

### திருவிருத்தம், ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
ஏன்றானிமையவர்க்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே.

கருவாய்க்கிடந்துன் கழலேநினையுங்கருத்துடையேன்
உருவாய்த்தெரிந்துன்றனாமம்பயின்றேனுனதருளால்
திருவாய்ப்பொலியச்சிவாயநமவென்றுநீறணிந்தேன்
தருவாய்சிவகதிநீபாதிரிப்புலியூரரனே. 6

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே. 8

மண்பாதலம்புக்குமால்கடன்மூடிமற்றேழுலகும்
விண்பாறிசைகெட்டிருசுடர்வீழினுமஞ்சனெஞ்சே
திண்பானமக்கொன்றுகண்டோந்திருப்பாதிரிப்புலியூர்க்
கண்பாவுநெற்றிக்கடவுட்சுடரான்கழலிணையே. 9

திருந்தாவமணர்தந்தீநெறிப்பட்டுத்திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கேசரணம்புகுந்தேன்வரையெடுத்த
பொருந்தாவரக்கனுடனெரித்தாய்பாதிரிப்புலியூர்
இருந்தாயடியேனினிப்பிறவாமல்வந்தேன்றுகொள்ளே.

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பாதிரிப்புலியூர்:—இது தலவிருக்ஷம் பாதிரியாதலாலும், வியாக்ரபாதர் (புலி) பூசித்தகாரணத்தாலும் திருப்பாதிரிப்புலியூர் என்று பெயரெய்தியது. தேவி தவஞ்செய்து அனுக்ரஹம் பெற்ற தலம். பாடலீவநம் என்றும் வழங்கும். முடங்கியகாலோடு முயலாகச்சபிக்கப்பெற்ற மங்கணமுனிவர் பூசித்துச்சாபம் நீங்கியது. இதனைஞானசம்பந்தர் திருப்பதிகத்து முதற்றிருப்பாட்டிற் காண்க.

சமணர்களுடைய துர்ப்போதனையால் கற்றூணிற் கட்டிக் கடலில் வீழ்த்தப் பெற்ற திருநாவுக்கரசுநாயனார் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்திருப்பதிகம் பாடிக் கல்லே தெப்பமாக மிதக்கப்பெற்றுக் கரையேறிய க்ஷேத்ரம். கரையேறிய இடம் கரையேறவிட்டகுப்பம் என்று இன்றும் வழங்கும். சுவாமிதிருநாமம் வாகீசர் திருவிருத்தத்துக் காணத்தக்கது. ஸ்வாமி-தோன்றாத்துணைநாதர், பாடலீவநேசுவரர், தேவியார்-தோகைநாயகி, விருக்ஷம்-பாதிரி, தீர்த்தம்-கெடிலம். இதற்குப்பதிகம்-2.

இத்தலம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்டேஷனிலிருந்து கற்சாலையில் மேற்கே அரைமைலில் உள்ளது.

---

## ௧௬. திருமுண்டீச்சரம்.

### திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம் ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

ஆர்த்தான்காணழுகமரைக்குநாணாவடியவர்கட்கன்பன்காணானைத்தோலைப், போர்த்தான்காண்புரிசடைமேற்புனலேற்றான்காண்புறங்காட்டிலாடல்புரிந்தான்றான்காண், காத்தான்காணுலகேழுங் கலங்காவண்ணங் கனைகடல்வாய்நஞ்சதனைக்கண்டத்துள்ளே, சேர்த்தான்காண்டிருமுண்டீச்சரத்துமேயசிவலோகன்காணவனென்சிந்தையானே. 1

அறுத்தவன்காணடியவர்களல்லலெல்லாமருப்பொருளாய் நின்றவன்காணநங்கனாகம், மறுத்தவன்காண்மலைதன்னைமதியாதோடிமலைமகடன்மனநடுங்கவானோரஞ்சக், கறுத்தவனாய்க்கயிலாயமெடுத்தோன் கையுங்கதிர்முடியுங்கண்ணும் பிதுங்கியோடச், செறுத்தவன்காண்டிருமுண்டீச்சரத்துமேயசிவலோகன்காணவனென்சிந்தையானே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருமுண்டீச்சரம்:**—இது தற்காலம் திருக்கிராமம் என்று வழங்கும். இத்தலத்தோடு நெல்லிக்குப்பத்துக்கு வடமேற்கே உள்ள சிவாலயத்தை (திருக்கண்டீச்வரம்) மயங்குவர். பிரம்மதேவர், இந்திரன் முதலியோர் பூசித்த தலம். ஸ்வாமி- முண்டீசுவரர், தேவியார்-கானார்குழலியம்மை. இதற்குப்பதிகம் 1.

இத்தலம் மாம்பழப்பட்டு ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள (14( திருவெண்ணெய் நல்லூருக்குக் கிழக்கு 3 மைலில் உள்ளது.

---

# உயி. திருப்புறவார்பனங்காட்டூர்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-சீகாமரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விண்ணமர்ந்தனமும்மதில்களைவீழவெங்கணையாலெய்தாய் [விரி
பண்ணமர்ந்தொலிசேர்புறவார்பனங்காட்டூர்ப்
பெண்ணமர்ந்தொருபாகமாகியபிஞ்ஞகாபிறைசேர்நுதலிடைக்
கண்ணமர்ந்தவனேகலந்தார்க்கருளாயே. 1

நீடல்கோடலலரவெண்முல்லைநீர்மலர்நிரைத்தாதளஞ்செயப்
பாடல்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்த்
தோடிலங்கியகாதபன்மின்றுளங்கவெண்குழைதுள்ளநள்ளிருள்
ஆடுஞ்சங்கரனேயடைந்தார்க்கருளாயே. 2

மையினார்மணிபோன்மிடற்றனைமாசில்வெண்பொடிப் பூசுமார்பனைப்
பையதேன்பொழில்சூழ்புறவார்பனங்காட்டூர்
ஐயனைப்புகழானகாழியுளாய்ந்தநான்மறைஞானசம்பந்தன்
செய்யுள்பாடவல்லார்சிவலோகஞ்சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருப்புறவார்பனங்காட்டூர்.—இது தற்காலம் பனைய புரம் என்று வழங்கும். புறவின் பொருட்டுத் தசையரிந்திட்ட சிபிச் சக்ரவர்த்திக்கு அநுக்ரஹம் செய்த தலம். இங்கு பிரதி வருஷமும் சௌரமான வருஷாரம்பத்திற்கு முன் மூன்று தினமும் பின் மூன்று தினமும் உதயத்தில் சூர்ய பூஜை. சூர்யரஸ்மி முன் ஸ்வாமி மேலும் பின்தேவியார்மேலும் விழுவது பிரத்யக்ஷம். ஸ்வாமி - பனங்காட்டீஸ்வரர், தேவியார்-புறவம்மை, விருக்ஷம்-பனை. இதற்குப்பதிகம்-1.

இத்தலம் விழுப்புரத்தை யடுத்த முண்டியம்பாக்கம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கு ஒருமைலில் உள்ளது.

---

# உக. திருவாமாத்தூர்

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-சீகாமரம், உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

குன்றவார்சிலைநாணராவரிவாளிகூரெரிகாற்றின்மும்மதில்
வென்றவாறெங்ஙனேவிடையேறும்வேதியனே [மேல்
தென்றலார்மணிமாடமாளிகைசூளிகைக்கெதிர்நீண்டபெண்ணை
அன்றில்வந்தணையுமாமாத்தூரம்மானே. 1

பரவிவானவர்தானவர்பலருங்கலங்கிடவந்தகார்விடம்
வெருவவுண்டுகந்தவருளென்கொல்விண்ணவனே
காவின்மாமணிபொன்கொழித்திழிசந்துகாரகிறந்துபம்பைநீர்
அருவிவந்தலைக்குமாமாத்தூரம்மானே. 2

வாடல்வெண்டலைமாலையார்த்துமயங்கிருள்ளெரியேந்திமாநடம்
ஆடன்மேயதென்னென்றுமாத்தூரம்மானைக்
கோடணுகமரும்புபைம்பொழிற்கொக்கையாரிறைஞானசம்பந்தன்
பாடல்பத்தும்வல்லார்பரலோகஞ்சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனர்.

திருத்தாண்டகம் சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வண்ணங்கடாம்பாடிவந்துநின்றுவலிசெய்துவளைகவர்ந்தார்வகையானம்மைக், கண்ணம்பானின்றெய்துகனலப்பேசிக்கடியதோர்விடையேறிக்காபாலியார், சுண்ணங்கடாங்கொண்டுதுதையப்பூசித்தோலுடுத்துநூல்பூண்டுதோன்றத்தோன்ற, அண்ணலார்போகின்றார்வந்துகாணீரழகியரோயாமாத்தூரையனரே. 1

ஒன்றாலுங்குறைவில்லையூர்திவெள்ளேறேற்றியூரு மூரீயுணர்க்கூறீர், நின்றுதானென்செய்வீர்போவீராகி னெற்றிமேற்கண்காட்டிநிறையுங்கொண்டார், என்றுந்தானிவ்

வகையே யிடர்செய்கின்றீ ரிருக்குமூரினியறிந்தோமேகம்ப
மோ, அன்றித்தான்போகின்றீரடிகளெப்மோடழகியரேயா
மாத்தூரையனூரே. 8

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனர்.

**பண்-கோல்லிக்கௌவாணம். எ-ந் திருமுறை.**

திருச்சிற்றம்பலம்.

காண்டனன்காண்டனன்காரிகையாடண்கருத்தனைப்
ஆண்டனனூண்டனனுமாத்தூரெம்மடிகட்காட் [கள்
பூண்டனன்பூண்டனன்பொய்யன்றுசொல்லுவன்கேண்மின்
மீண்டனன்மீண்டனன்வேதவித்தல்லாதவர்கட்கே. 1

பாடுவன்பாடுவன்பார்ப்பதிதன்னடிபற்றிநான்
தேடுவன்றேடுவன்றிண்ணெனப்பற்றிச்செறிதா
ஆடுவனூடுவனுமாத்தூரெம்மடிகளைக்
கூடுவன்கூடுவன்குற்றமதற்றெென்குறிப்பொடே. 2

ஐயனையத்தனையாளுடையாமாத்தூரண்ணலை
மெய்யனைமெய்யர்க்குமெய்ப்பொருளானவிமலனை
மையனைமையணிகண்டனைவன்றொண்டனூரன்சொல்
பொய்யொன்றுமின்றிப்புலம்புவார்பொற்கழல்சேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவாமாத்தூர்:—இது சோமாதுருபுரம் என்று வட மொழியில் கூறப்பெறும். பசுக்கள் பூசித்துப் பரமசிவனைத் தமக்குக் காப்பாகக் கொண்ட தலம். இராமபிரான் பூசித்தது வாகீஸர் திருக்குறுந்தொகை 5 ந் திருப்பாட்டிற் காண்க. ஸ்வாமி சந்நிதி கிழக்குப் பார்த்ததும் தேவியார் சந்நிதி மேற்குப் பார்த்ததுமாக விருக்கிறது. பிருங்கி பூசித்துச் சாபம் நீங்கினரென்ப. ஸ்வாமி-அழகுகாதலர், அபிராமேசுரர், தேவியார் - அழகியநாயகி, முத்தாம்பிகையம்மை, தீர்த்தம்- பம்பை, விருக்ஷம்-வன்னி. இதற்குப்பதிகம்- 5.

இத்தலம் விழுப்புரம் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே மட்சாலையில் மூன்று மைலில் உள்ளது.

---

# ௨௨. திருவண்ணாமலை.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டபாடை. ௧-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலைம்முழவதிரும்
அண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே. 1

தேமாங்கனிகடுவன்கொளவிடுகொம்பொடுதீண்டித்
தூமாமழைதுறுவன்மிசைசிறுநுண்டுளிசிதற
ஆமாம்பிணையணையும்பொழிலண்ணாமலையண்ணல்
பூமான்கழல்புனைசேவடிநினைவார்வினையிலரே. 2

விளவார்கனிபடநூறியகடல்வண்ணனும்வேதக்
கிளர்தாமரைமலர்மேலுறைகேடில்புகழோனும்
அளவாவணமழலாகியவண்ணாமலையண்ணல்
தளராமுலைமுறுவல்லுமைதலைவன்னடிசரணே. 9

வெம்புந்தியகதிரோனொளிவிலகும்விரிசாரல்
அம்புந்திமூவெயிலெய்தவனண்ணாமலையதனைக்
கொம்புந்துவகுயிலாலுவகுளிர்காழியுண்ஞான
சம்பந்தனதமிழ்வல்லவரடிபேணுதறவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-தக்கேசி. ௧-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்களெரித்தவன்றுமூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின்றதிரவெருவித்தொறுவின்னிரையோடும்
ஆமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. 1

மஞ்சைப்போழ்ந்தமதியஞ்சூடும்வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத்தடக்குமதுவுநன்மைப்பொருள்போலும்

வெஞ்சொற்பேசும்வேடர்மடவாரிதணமதுவேறி
அஞ்சொற்கிளிகளாயோவென்னுமண்ணாமலையாரே. 2

ஞானத்திரளாய்நின்றபெருமானல்லவடியார்மேல்
ஊனத்திரளைநீக்குமதுவுமுண்மைப்பொருள்போலும்
ஏனத்திரளோடினமாங்கரடியிழியுமிரவின்கண்
ஆனைத்திரள்வந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. 3

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணாமலையாரை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லான்மலிந்தபாடலாயதமிழிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்கடூவியுமையவள்பங்காமிக்க
சோதியேதுளங்குமெண்டோட்சுடர்மழுப்படையினானே
ஆதியேயமரர்கோவேயணியண்ணாமலையுளானே
நீதியானின்னையல்லானினையுமாநினைவிலேனே. 1

இரக்கமொன்றியாதுமில்லாக்காலனைக்கடிந்தவெம்மான்
உரத்தினால்வரையையூக்கவொருவிரலுதியினாலே
அரக்கனைநெரித்தவண்ணாமலையுளாயமரரேறே
சிரத்தினால்வணங்கியேத்தித்திருவடிமறப்பிலேனே. 10

திருச்சிற்றம்பலம்.

---

### திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வட்டனைமதிசூடியைவானவர்
சிட்டனைத்திருவண்ணாமலையனை
இட்டனையிகழ்ந்தார்புரமூன்றையும்
அட்டனையடியேன்மறந்துய்வனோ 1

வானனைம்மதிசூடியமைந்தனைத்
தேனனைத்திருவண்ணாமலையனை
ஏனனையிகழ்ந்தார்புரமூன்றெய்த
ஆனனையடியேன்மறந்துய்வனோ. 2

அரக்கனையலறவ்விரலூன்றிய
திருத்தனைத்திருவண்ணாமலையனை
இரக்கமாயென்னுடலுறுநோய்களைத்
துரக்கனைத்தொண்டனேன்மறந்துய்வனோ. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

பட்டியேறுகந்தேறிப்பலவிலம்
இட்டமாகவிரந்துண்டுழிதரும்
அட்டமூர்த்தியண்ணாமலைகைதொழக்
கெட்டுப்போம்வினைகேடில்லைகாண்மினே. 1

மறையினானொடுமாலவன்காண்கிலா
நிறையுநீர்மையுநின்றருள்செய்தவன்
உறையுமாண்பினண்ணாமலைகைதொழப்
பறையுநாஞ்செய்தபாவங்களானவே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருவண்ணாமலை:**—இது அருணாசலம் என்றும் வழங்கும். அருணம் சிவப்பெனின் சிவந்த நிறத்தையுடைய அக்னி மலை என்றும் அ-ருணம் எனப்பிரித்து ருணமில்லாமை எனின் அடியவர் கர்மருணங்களை ஒழித்து அநுக்ரஹிக்கும் மலை என்றும் பொருள் கொள்க. அண்ணாமலை-உயர்ந்தமலை: பிரம்மவிஷ்ணுக்கள் தாம்தாம் பரமென்று தருக்கித்து மலைந்தவழி உயர்ந்த அக்னி ஸ்தம்பமாய் இறைவன் அவரிடையிற் றோன்ற அவர் அடிமுடி தேடி யறியாது அயர்த்துத் தருக்கொழிந்தனர் என்பது பிரஸித்த சரித்ரம். இது பஞ்சபூத ஸ்தலங்களுள் தேயு (அக்னி) ஸ்தலம்-நினைக்க முத்திதரும் தலமென்பதை "எல்லையில் அருணையை நினைக்க எய்தலாம் முத்தி" என்னும் வாக்கானறிக. தேவியார் திருக்கண்புதைத்த காலத்து இறை

வன் அருளியவாறு இங்கெய்தித் தவஞ்செய்து வலப்பாகம் பெற்றதாகத் தலமான்மியம் கூறும். வல்லாளன் என்னும் அரசனுக்கு இறைவன் அவன் அன்பு காரணமாய்ப் புத்திரராய்த் தோன்றி யருள் புரிந்தார். இவ்வைதிஹ்யம் இப்போதும் தனியே ஓர் உற்சவமாக நடத்தப்பெறுகிறது; கார்த்திகைமாதத் திருக்கார்த்திகையில் தீபதரிசனம் பிரவித்தம். ஸுப்ரம்மண்ய பக்தவிரேஷ்டரான ஸ்ரீ அருணகிரி நாதர் திருவவதாரஞ்செய்து அநுக்ரஹம் பெற்றதலம். இவர்க்கு அநுக்ரஹித்தமூர்த்தி துவஜஸ்தம்பத்துக்கு முன்னுள்ள மண்டப ஸ்தம்பத்தில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுள். இவர் கம்பத்திளையனார் எனப்பெறுவர். தலசரித்திரம் ஞானசம்பந்தர் நட்டபாடைப் பதிகத்து 9-ந் திருப்பாட்டிற்காண்க. குகை நமச்சிவாயர், குருநமச்சிவாயர் முதலிய அநேக பெரியர் இங்கெழுந்தருளியிருந்து அநுக்ரஹம் பெற்றனர். ஸ்வாமி-அருணாசலேஸ்வரர், தேவியார்-உண்ணாமுலையம்மை, தீர்த்தம்-இந்திரதீர்த்தம் முதலிய எண்ணிறந்தன. விருக்ஷம்-மகிழ், இதற்குப் பதிகம்-5.

இத்தலம் திருவண்ணாமலை ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலையில் அரைமைலில் உள்ளது.

நடுநாட்டுத் தலங்கள் 22-முற்றின.

---

## தொண்டைநாடு.

# க. திருக்கச்சியேகம்பம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-மேகராகக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்பொடிப்பூசுமார்பின்விரிநூலொருபால்பொருந்தக் [தக்
கந்தமல்குகுழலியொடுங்கடிபொழிற்கச்சிதன்னுள்
அந்தமில்குணத்தாரவர்போற்றவணங்கினொடாடல்புரி
எந்தைமேவியவேகம்பந்தொழுதேத்தவிடர்கெடுமே. 1

வரந்திகழுமவுணர்மாநகர்மூன்றுடன்மாய்ந்தவியச்
சரந்துரந்தெரிசெய்ததாழ்சடைச்சங்கரன்மேயவிடம்
குருந்தமல்லிகைகோங்குமாதவிநல்லகுராமரவம்
திருந்துபைம்பொழிற்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே. 2

ஏரினார்பொழில்சூழ்ந்தகச்சியேகம்பமேயவனைக்
காரினார்மணிமாடமோங்குகழுமலநன்னகருட்
பாரினார்தமிழ்ஞானசம்பந்தன்பரவியபத்தும்வல்லார்
சீரினார்புகழோங்கிவிண்ணவரோடுஞ்சேர்பவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-இந்தளம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மறையானைமாசிலாப்புன்சடைமல்குவெண்
பிறையானைப்பெண்ணொடாணாகியபெம்மானை
இறையானையேர்கொள்கச்சித்திருவேகம்பத்
துறைவானையல்லதுள்காதெனதுள்ளமே. 1

நொச்சியேவன்னிகொன்றைமதிகூவிளம்
உச்சியேபுனைதல்வேடம்விடையூர்தியான்
கச்சியேகம்பமேயகறைக்கண்டனை
நச்சியேதொழுமினும்மேல்வினைநையுமே. 2

அந்தண்பூங்கச்சியேகம்பனையம்மானைக்
கந்தண்பூங்காழியூரன்கலிக்கோவையால்
சந்தமேபாடவல்லதமிழ்ஞானசம்
பந்தன்சொற்பாடியாடக்கெடும்பாவமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவிருக்குக்குறள். பண்-கொல்லி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கருவார்கச்சித், திருவேகம்பத்
தொருவாவென்ன, மருவாவினையே 1

மதியார்கச்சி[illegible]ம்பம்
விதியாலேத்தப், பதியாவாரே. 2

கரியினுரியன், திருவேகம்பன்
பெரியபுரமூன், றெரிசெய்தானே.

மறையோனரியும், அறியாவனலன்
நெறியேகம்பம், குறியாற்றொழுமே. 9

கொச்சைவேந்தன், கச்சிக்கம்பம்
மெச்சுஞ்சொல்லை, நச்சும்புகழே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவியமகம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

பாயுமால்விடைமேலொருபாகனேபாவைதன்னுருமே லொருபாகனே, தூயவானவர்வேதத்துவனியேசோதிமா லெரிவேதத்துவனியே, ஆயுநன்பொருணுண்பொருளாதி யேயாலநீழல்வரும்பொருளாதியே, காயவின்மதன்பட்டது கம்பமேகண்ணுதற்பரமற்கிடங்கம்பமே. 1

கந்தமார்பொழில்சூழ்தருகம்பமேகாதல்செய்பவர்தீர்த் திடுகம்பமே, புந்திசெய்துவிரும்பிப்புகலியே பூசுரன்றன் விரும்பிப்புகலியே, அந்தமில்பொருளாயினகொண்டுமேபண் ணவின்பொருளாயினகொண்டுமே, பந்தனின்னியல்பாடியப த்துமேபாடவல்லவராயினபத்துமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருநாவுக் கரசுநாயனார்.

பண்-காந்தாரம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானைக்கரவார்பால்
விரவாடும்பெருமானைவிடையேறும்வித்தகனை
அரவாடச்சடைதாழவங்கையினிலனலேந்தி
இரவாடும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. 1

தேனோக்குங்கிளிமழலையுமைகேள்வன்செழும்பவளம்
தானோக்குந்திருமேனிதழலுருவாஞ்சங்கரனை
வானோக்கும்வளர்மதிசேர்சடையானைவானோர்க்கும்
ஏனோர்க்கும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. 2

கைப்போதுமலர்தூவிக்காதலித்துவானோர்கள்
முப்போதுமுடிசாய்த்துத்தொழநின்றமுதல்வனை
அப்போதுமலர்தூவியைம்புலனுமகத்தடக்கி
எப்போதுமினியானையென்மனத்தேவைத்தேனே. 3

அடுத்தானையுரித்தானை பருச்சுனற்குப்பாசுபதம்
கொடுத்தானைக்குலவரையேசிலையாகக்கூரம்பு
தொடுத்தானைப்புரமெரியச்சுனைமல்குகயிலாயம்
எடுத்தானைத்தடுத்தானையென்மனத்தேவைத்தேனே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருநேரிசை. ச-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நம்பனைநகரமூன்றுமெரியுணவெருவநோக்கும்
அம்பனையமுதையாற்றையணிபொழிற்கச்சியுள்ளே
கம்பனைக்கதிர்வெண்டிங்கட்செஞ்சடைக்கடவுடன்னைச்
செம்பொனைப்பவளத்தூணைச்சிந்தியாவெழுகின்றேனே. 1

ஒருமுழமுள்ளகுட்டமொன்பதுதுளையுடைத்தாய்
அரைமுழமதனகலமதனில்வாழ்முதலையைந்து
பெருமுழைவாய்தல்பற்றிக்கிடந்துநான்பிதற்றுகின்றேன்
கருமுகிறவழுமாடக்கச்சியேகம்பனீரே. 2

திருச்சிற்றம்பலம்.

---

திருவிருத்தம். ச-ந் திருமுறை,

திருச்சிற்றம்பலம்.

ஓதுவித்தாய்முன்னறவுரைகாட்டியமணரொடே
காதுவித்தாய்கட்டநோய்ப்பிணிதீர்த்தாய்கலந்தருளிப்
போதுவித்தாய்நின்பணிபிழைக்கிற்புளியம்வளாரால்
மோதுவிப்பாயுகப்பாய்முனிவாய்கச்சியேகம்பனே, 1

குறிக்கொண்டிருந்துசெந்தாமரையாயிரம்வைகல்வைகல்
நெறிப்படவிண்டைபுனைகின்றமாலைநிறையழிப்பான்
கறைக்கண்டநீயொருபூக்குறைவித்துக்கண்சூல்விப்பதே
பிறைத்துண்டவார்சடையாய்பெருங்காஞ்சியெம்பிஞ்ஞகனே

கருவுற்றநாண்முதலாகவுன்பாதமேகாண்பதற்கு
உருகிற்றெனுள்ளமுநானுங்கிடந்தலந்தெய்த்தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற்றிலாமையுங்கண்டிரங்காய்கச்சியேகம்பனே.
பாம்பாரைச்சேர்த்திப்படருஞ்சடைமுடிப்பால்வண்ணனே
கூம்பலைச்செய்தகாதலத்தன்பர்கள்கூடிப்பன்னாள்
சாம்பரைப்பூசித்தரையிற்புரண்டுநின்றாள்சரணென்
றேம்பலிப்பார்கட்கிரங்குகண்டாய்கச்சியேகம்பனே. 8

திருச்சிற்றம்பலம்.

---

திருக்குறுந்தொகை. ரு-ந்திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பண்டுசெய்தபழவினையின்பயன்
கண்டுங்கண்டுங்களித்திகாணெஞ்சமே
வண்டுலாமலர்ச்செஞ்சடையேகம்பன்
தொண்டனாய்த்திரியாய்துயர்தீரவே. 1

பண்ணிலோசைபழத்தினிலின்சுவை
பெண்ணொடாணென்றுபேசற்கரியவன்
வண்ணமில்லிவடிவுவேறாயவன்
கண்ணிலுண்மணிகச்சியேகம்பனே. 8

இலங்கைவேந்தனிராவணன்சென்றுதன்
விலங்கலைஎடுக்கவ்விரலூன்றலும்
கலங்கிக்கச்சியேகம்பவோவென்றலும்
நலங்கொளச்செலவளித்தானெங்கணாதனே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பூமேலானும்பூமகள்கேள்வனும்
நாமேதேவரெனுமனநீக்குறத்
தீமேவும்முருவா திருவேகப்பா
ஆமோவல்லற்படவடியோங்களே. 1

சிந்தையுட்சிவமாய்நின்றசெம்மையோ
டந்தியாயனலாய்ப்புனல்வானமாய்ப்
புந்தியாய்ப்புகுந்துள்ளநிறைந்தவெம்
எந்தையேகம்பமேத்தித்தொழுமினே. 5
அரக்கன்றன்வலியுன்னிக்கயிலையை
நெருக்கிச்சென்றெடுத்தான்முடிதோணெரித்
திரக்கவின்னிசைகேட்டவனேகம்பம்
தருக்கதாகநாஞ்சார்ந்துதொழுதுமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தாண்டகம் ௬ ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

கூற்றுவன்காண்கூற்றுவனைக்குமைத்தகோன்காண்குவலயன்காண்குவலயத்தினீரானான்காண், காற்றவன்காண்கனலவன்காண்கலிக்குமின்காண்கனபவளச்செம்மேனி கலந்தவெள்ளை, நீற்றவன்காணிலாவூருஞ்சென்னியான்காணிறையார்ந்தபுனற்கங்கைநிமிர்சடைமேல், ஏற்றவன்காணெழிலாரும்பொழிலார்கச்சியேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. 1

நேசன்காணேசர்க்குநேசந்தன்பாலில்லாத நெஞ்சத்து நீசர்தம்மைக், கூசன்காண்கூசாதார்நெஞ்சுதஞ்சேகுடிகொண்டகுழகன்காணழகார்கொன்றை, வாசன்காண்மலைமங்கைபங்கன்றான்காண் வானவர்களெப்பொழுதும் வணங்கியேத்தும், ஈசன்காணெழிலாரும்பொழிலார்கச்சியேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. 2

ஆய்ந்தவன்காணருமறையோடங்கமாறுமணிந்தவன்காணாடரவோடென்புமாமை, காய்ந்தவன்காண்கண்ணழலாற்காமனாகங்கனன்றெழுந்தகாலனுடல்பொடியாய்வீழப், பாய்ந்தவன்காண்பண்டுபலசருகாற்பந்தர்பயின்றநூற்சிலந்திக்குப்பாராள்செல்வம், ஈந்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சியேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. 6

முந்தைகாண்மூவரினுமுதலானான்காண்மூவிலைவேன்மூர்த்திகாண்முருகவேட்குத், தந்தைகாண்டண்கடமாமுகத்தி

னாற்குத்தாதைகாண்டாழ்ந்தடியேவணங்குவார்க்குச், சிந்தைகாண்சிந்தாதசித்தத்தார்க்குச் சிவனவன்காண் செங்கண்மால்விடையொன்றேறும், எந்தைகாணெழிலாரும்பொழிலார்கச்சியேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. 9

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-தக்கேசி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

ஆலந்தானுகந்தமுதுசெய்தானையாதியையமரர்தொழுதேத்தும், சீலந்தான்பெரிதும்முடையானைச்சிந்திப்பாரவர்சிந்தையுளானை, ஏலவார்குழலாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற, காலகாலனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. 1

திரியுமுப்புரந்தீப்பிழம்பாகச்செங்கண்மால்விடைமேற்றிகழ்வானைக், கரியினீருரிபோர்த்துகந்தானைக்காமனைக்கனலாவிழித்தானை, வரிகொள்வெள்வளையாளுமைநங்கைமருவியேத்திவழிபடப்பெற்ற, பெரியகம்பனையெங்கள்பிரானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. 3

வெல்லும்வெண்மழுவொன்றுடையானைவேலைநஞ்சுண்டவித்தகன்றன்னை, அல்லல்தீர்த்தருள்செய்யவல்லானையருமறையவையங்கம்வல்லானை, எல்லையில்புகழாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற, நல்லகம்பனையெங்கள்பிரானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. 5

எள்கலின்றியிமையவர்கோனையீசனைவழிபாடுசெய்வாள்போல், உள்ளத்துள்கியுகந்துமைநங்கைவழிபடச்சென்றுநின்றவாகண்டு, வெள்ளங்காட்டிவெருட்டிட வஞ்சிவெருவியோடித்தழுவவெளிப்பட்ட, கள்ளக்கம்பனையெங்கள்பிரானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. 10

பெற்றுமேறுகந்தேறவல்லானைப்பெரியவெம்பெருமானென்றெப்போதும், கற்றவர்பரவப்படுவானைக்காணக்கண்ணடியேன்பெற்றதென்று, கொற்றவன்கம்பன்கூத்தனெம்மானைக் குளிர்பொழிற்றிருநாவலாரூரன், நற்றமிழிவையீரைந்தும்வல்லார்நன்னெறியுலகெய்துவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கச்சியேகம்பம்:—இது திருக்கச்சியின் கண்ணுள்ள ஏகம்பம் என்று பொருள்படும். தேவியார் மஹாகைலாசத்தினின்றும் இங்கெழுந்தருளி எண்ணான்கறங்களையும் செய்துகொண்டு தவஞ்செய்து இறைவனைப் பூசிக்கும்பொழுது இறைவன் ஏவியகம்பையாறு பெருகிவரக்கம்பித்து (நடுங்கி) இறைவனைத் தழுவி வளைத்தழும்பும் முலைத்தழும்பும் உறுவித்தார் என்னுங் காரணத்தால் இப்பெயரெய்தியது. கம்பம்-நடுக்கம்-ஏகாமிரம் என்பதனோடு மயங்கப்பாலதன்று. ஏகாமிரம் ஒற்றைமாமரம். பஞ்சபூதஸ்தலங்களுள் பிருதிவிஸ்தலம். முத்திதரும் முதுநகர், (மதுரா, மாயா, காசீ, காஞ்சீ, அவந்திகா, புரீ, துவாரகை என்னும்) ஏழனுள் முதன்மையானது. 'முத்திதரும் நகரேழுள் முக்கியமாம் முதற் காஞ்சீ' என்பது பிரமாணம். நகரேஷு காஞ்சி, என வடநூலாரது அபிமதமும் இதுவே. இங்கு அமைந்துள்ள சிவ, விஷ்ணு, தேவீ, கணபதி ஸ்கந்தாலயங்கள் கணக்கிடமுடியா-காஞ்சிப்புராணம் விவரணத்தின்பொருட்டுப் பார்க்கத்தக்கது. கூர்மாவதார விஷ்ணுமூர்த்தி பூசித்த கச்சபேசம் மிகப்புராதனம். பிரளயகாலத்தில் தேவாதியரைச் சமிதையாகக் கொண்டு பரமசிவன் யாகஞ்செய்த தலமாகிய திருக்கச்சி மயானம் (வைப்புத்தலம்) திருவேகம்ப த்வஜஸ்தம்பத்துக்கு முன்னுள்ளது. இந்த நகரம் முதன்மையான சத்தி பீட்மாதலின் தேவீ ஆலயமாகிய திருக்காமக் கோட்டம் நகர் நடுவே அமைந்துள்ளது. முருகக்கடவுளது திருக்குமரக் கோட்டம் ராஜவீதியில் உள்ளது. முதலையினின்றும் ரக்ஷிக்கப்பெற்ற கஜேந்திரன் மலையாக அமைய (அத்திகிரி) அதன்மீது விட்டுணுமூர்த்தி யெழுந்தருளி யுள்ளார். விகடசக்ரவிநாயகர் பிரஸித்தர். திருவொற்றியூரில் சங்கிலியாருக்குச் செய்த ஸபதம் வழுவிப்பார்வை மறையப்பெற்ற சுந்தரமூர்த்திநாயனார் இங்கெழுந்தருளித் துதித்து இடக்கண் பெற்றருளினார். ஏகாலியர் குலத்திலே திருவவதாரஞ்செய்து சிவனடியார்களுக்கு ஆடை யொலித்துக்

கொடுத்துச் சிவபக்தி சிவனடியார் பக்தி செய்துவந்த திருக்குறிப்புத் தொண்டநாயனுர் அழுக்காடையோடு எழுந்தருளிய ஸ்ரீ ஏகாம்பரநாதருடைய ஆடையை மழை மிகுதியால் ஒலிக்கத் தவறித்தம் தலையைக் கல்லில் மோதப்புகலும் இறைவன் வெளிப்பட்டுத் தடுத்து அநுக்ரஹிக்கப்பெற்ருர். வேளாளர் குலத்திலே திருவவதாரஞ்செய்து ஒவ்வொரு மதத்தையும் தனித்தனி ஆராய்ந்து புத்தசமயம் புகுந்து சைவமொழித்தொழிந்தன வெல்லாம் பொய்யெனக்கண்டு எச்சமயத்து எவ்வேடத்தோடு நின்று வழிபடினும் பரமசிவன் அருளுவர் எனத் தெளிந்து ஓர்நாள் திருக்கச்சித் திருவீதியில் வருகையில் ஓர் சிவலிங்கத்தைக் கண்டு அதனை வழிபட வெண்ணி இது செய்வதென்று அறியாது அதிதீவிரமாய் அருகே கிடந்த கல்லொன்றை எடுத்தெறிந்து வழிபட்டு இதுவே பரமசிவனுக்குவந்தது என வெண்ணி வழிபடுவார் ஒருநாள் மறந்து உண்ணப் புகுந்து நினைந்தோடி வந்து கல்லெறிந்து அநுக்ரஹிக்கப் பெற்ருர். இங்கு பல்லவர் குலத்துதித்த ஐயடிகள் காடவர்கோனுயனுர் ராஜ்யத்தைத் தம் புதல்வன்பால் வைத்து ஸ்தலங்கடோறும் தரிசித்துத் திருவெண்பா சொல்லி முத்தியடைந்தனர். ஸ்வாமி-ஏகாம்பரநாதர், தேவியார்-காமாக்ஷியம்மையார், ஏலவார்குழலி, விநாயகர்-விகடசக்ர விநாயகர், ஸ்கந்தர்-மாவடிக்கந்தர், விருக்ஷம்-மா, தீர்த்தம்-சிவகங்கை, கம்பாநதி, ஸர்வதீர்த்தம் முதலிய-வாரதீர்த்த விவரத்திற்குப் புராணம் பார்க்க. திருவேகம்பத்தில் பிரம்ம, விஷ்ணு, ருத்ரர் பூசித்த சிவலிங்கங்கள் முறையே வெள்ளைக்கம்பம், கள்ளக்கம்பம் நல்லகம்பம் எனவழங்கப் பெறும் இதற்குப்பதிகம்-12.

இத்தலம் காஞ்சீபுரம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே ஒரு மைலில் உள்ளது.

---

## உ. திருக்கச்சிமேற்றளி.

### திருநாவுக்கரசு நாயனுர்.

திருநேரிசை. ச-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மறையதுபாடிப்பிச்சைக்கென்றகந்திரிந்துவாழ்வார்
பிறையதுசடைமுடிமேற்பெய்வளையாடனேடும்
கறையதுகண்டங்கொண்டார்காஞ்சிமாநகர்தன்னுள்ளார்
இறையவர்பாடலாடலிலங்குமேற்றளியனுரே. 1

மாலனமாயன்றன்னைமகிழ்ந்தனர்விருத்தராகும்
பாலனார்பசுபதியார்பால்வெள்ளைநீறுபூசிக்
காலனைக்காலாற்செற்றார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏலநற்கடம்பன்றாதையிலங்குமேற்றளியனாரே. 2

செல்வியைப்பாகங்கொண்டார்சேந்தனைமகனாக்கொண்டார்
மல்லிகைக்கண்ணியோடுமாமலர்க்கொன்றைசூடிக்
கல்வியைக்கரையிலாதகாஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எல்லியைவிளங்கநின்றாரிலங்குமேற்றளியனாரே. 8

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

நொந்தாவொண்சுடரேநுனையேநினைந்திருந்தேன்
வந்தாய்போயறியாய்மனமேபுகுந்துநின்ற
சிந்தாயெந்தைபிரான்றிருமேற்றளியுறையும்
எந்தாயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே. 1

ஆட்டான்பட்டமையாலடியார்க்குத்தொண்டுபட்டுக்
கேட்டேன்கேட்பதெல்லாம்பிறவாமைகேட்டொழிந்தேன்
சேட்டார்மாளிகைசூழ்திருமேற்றளியுறையும்
மாட்டேயுன்னையல்லான்மகிழ்ந்தேத்தமாட்டேனே. 2

பாரூர்பல்லவனூர்மதிற்காஞ்சிமாநகர்வாய்ச்
சீரூரும்புறவிற்றிருமேற்றளிச்சிவனை
ஆரூரன்னடியானடித்தொண்டனாரூரன்சொன்ன
சீரூர்பாடல்வல்லார்சிவலோகஞ்சேர்வாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கச்சிமேற்றளி:— இது ஸ்ரீ காஞ்சி மேற்றளி என்றும், திருமேற்றளி என்றும் கூறப்பெறும். திருக்கச்சியில் மேற்றிசையில் அமைந்திருத்தலால் இப்பெயரெய்தியதெனக்காண்கிறது. விஷ்ணுமூர்த்தி சிவசாருப்யத்தின் பொருட்டுத் தவஞ்செய்திருந்து

ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானுர் எழுந்தருளிப் பாடியபோது அதனை யெய்தினர் என்பது தலமான்மியம். விஷ்ணுமூர்த்தி திருப்பதிகத்தைக்கேட்டு உருகிச்சிவலிங்க ரூபமாய் "ஓத உருகீஸர்" என்னும் திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கின்றார் [illegible] ஒரு சந்நிதி; மற்றொரு சந்நிதி ஸ்தலம். ஆலயத்திற்கு நேரே [illegible] ஷெ ஞானசம்பந்தர் சந்நிதியும் பாடலைக் கேட்ட முத்தீஸர் சந்நிதியும் உள்ளன. காஞ்சியில் இப்பாகத்திற்கு சம்பந்தமூர்த்திகளுடைய சம்பந்தத்தினலேயே பிள்ளையார்பாளையம் என்று பெயர் வழங்கும். ஸ்வாமி—ஸ்ரீமேற்றளிநாதர், தேவியார்-காமாக்ஷியம்மை. இதற்குப் பதிகம்-2.

இத்தலம் (1) திருக்கச்சி யேகம்பத்திற்குத் தென்மேற்கே கற்சாலையில் ஒருமைலில் உள்ளது.

---

# ந. திருவோணகாந்தன்றளி.

## சுந்தரமூர்த்திநாயனர்.

### பண்-இந்தளம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நெய்யும்பாலுந் தயிருங்கொண்டுநித்தல்பூசனைசெய்யலுற்றார்
கையிலொன்றுங்காணமில்லைக்கழலடிதொழுதுய்யினல்லால்
ஐவர்கொண்டிங்காட்டவாடியாழ்குழிப்பட்டழுந்துவேற்கு
உய்யுமாறென்றருளிச்செய்யீரோணகாந்தன்றளியுளீரே. 1

திங்கடங்குசடையின்மேலோர்திரைகள்வந்துபுரளவீசும்
கங்கையாளேல்வாய்திறவாள்கணபதியேல்வயிறுதாரி [ளார்
அங்கைவேலோன்குமரன்பிள்ளைதேவியார்கோற்றட்டியா
உங்களுக்காட்செய்யமாட்டோமோணகாந்தன்றளியுளீரே. 2

வாரமாகித்திருவடிக்குப்பணிசெய்தொண்டர்பெறுவதென்னே
ஆரம்பாம்புவாழ்வதாரூரொற்றியூரேலும்மதன்று
தாரமாகக்கங்கையாளைச்சடையில்வைத்தவடிகேளுந்தம்
ஊருங்காடுவுடையுந்தோலேயோணகாந்தன்றளியுளீரே. 9

ஓவணமேலெருதொன்றேறுமோணகாந்தன்றளியுளார்தாம்
ஆவணஞ்செய்தாளுங்கொண்டவரைதுகிலொடுபட்டுவீக்கிக்

கோவணமேற்கொண்டவேடங்கோவையாகவாரூரன்சொன்ன
பாவணத்தமிழ்பத்தும்வல்லார்பறையுந்தாஞ்செய்தபாவந்தானே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருவோணகாந்தன்றளி:**—இது ஓணன் காந்தன் என்னும் அசுரர்கள் பூசித்தகாரணத்தால் இப்பெயரெய்தியது. இரண்டு சந்நிதிகள் தனித்தனிப் பிராகாரத்தோடு ஒரேஆலயத்தில் அமைந்துள்ளன. இங்கு சுந்தரமூர்த்தி நாயனார் எழுந்தருளிப் பதிகம்பாடிப் பொன் பெற்றருளினார். ஸ்வாமி-ஓணேஸ்வரர் காந்தேஸ்வரர், தேவியார்-காமாக்ஷியம்மை. இதற்குப்பதிகம்-1.

இத்தலம் (1) திருக்கச்சியேகம்பத்திற்கு மேற்கே சர்வதீர்த்தத்திலிருந்து சிறிது வடமேற்கே அரைமைலில் உள்ளது.

---

# ச. திருக்கச்சியனேகதங்காவதம்.

### சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-இந்தளம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தேனெப்புரிந் துழல்செஞ்சடையெம்பெருமானதிடந்தி
கழைங்கணையக், கோனையெரித்தெரியாடியிடங்குலவானதி
டங்குறையாமறையாம், மானையிடத்ததொர்கையனிடமத
மாறுபடப்பொழியும்மலைமேல், யானையுரித்தபிரானதிடங்க
லிக்கச்சியனேகதங்காவதமே. 1

கூறுநடைக்குழிகட்பகுவாயனபேயுகந்தாடநின்றோரி
யிட, வேறுபடக்குடகத்திலையம்பலவாணனின்றாடல்விரும்பு
மிடம், ஏறுவிடைக்கொடியெம்பெருமானிமையோர்பெரு
மானுமைபாள்கணவன், ஆறுசடைக்குடையப்பனிடங்கலிக்
கச்சியனேகதங்காவதமே. 2

வீடுபெறப்பலவூழிகணின் றுநினைக்குமிடம்வினைதீருமி
டம், பீடுபெறப்பெரியோரதிடங்கொண்டுமேவினர்தங்களை
க்காக்குமிடம், பாடுமிடத்தடியான்புகழூரனுரைத்தவிம்மா
லைகள்பத்தும்வல்லார், கூடுமிடஞ்சிவலோகனிடங்கலிக்கச்
சியனேகதங்காவதமே. 10

திருச்சிற்றம்பலம்.

திருக்கச்சியநேகதங்காவதம்:— திருக்கச்சியிலுள்ள (அநேகதம்) விநாயகர் பூசித்த ஸ்தலம் என்று பொருள்படும். குபேரன் முதலியோர் பூசித்துப் பேறுபெற்றதலம். சுவாமி-அநேகதங்காவதேஸ்வரர், தேவியார்-காமாக்ஷியம்மை, இதற்குப் பதிகம் 1.

இத்தலம் (1) திருக்கச்சியேகம்பத்திற்குத் தென்மேற்காய் புத்தேறித் தெருவுக்கு மேற்கே வயல் வெளியில் அமைந்துள்ளது.

---

## ரு. திருக்கச்சிநெறிக்காரைக்காடு.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வாரணவுமுலைமங்கைபங்கினராயங்கையினில்
போரணவுமழுவொன்றங்கேந்திவெண்பொடியணிவர்
காரணவுமணிமாடங்கடைநவின்றகலிக்கச்சி
நீரணவுமலர்ப்பொய்கைநெறிக்காரைக்காட்டாரே. 1

காருருமணிமிடற்றார்கரிகாடருடைதலைகொண்
டூரூரன்பலிக்குழல்வாருமையாணிறுரியதளர்
தேருருநெடுவீதிச்செழுங்கச்சிமாநகர்வாய்
நீருருமலர்ப்பொய்கைநெறிக்காரைக்காட்டாரே. 2

கண்ணாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டுறையும்
பெண்ணாருந்திருமேனிப்பெருமானதடிவாழ்த்தித்
தண்ணாரும்பொழிற்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
பண்ணாருந்தமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கச்சிநெறிக்காரைக்காடு:—இது திருக்கச்சியில் காரைவனத்தில் அமைந்துள்ளதால் இப்பெயரெய்தியது. தத்காலம் திருக்காலீஸ்வரன் கோவில் என்றுவழங்கும். சிவியென்னும் இந்திரன் புதன் முதலியோர் பூசித்த தலம். ஸ்வாமி-காரைத்திருநாதர், தேவியார்-காமாக்ஷியம்மை, தீர்த்தம்-இந்திரதீர்த்தம், விருக்ஷம்-காரை இதற்குப் பதிகம்-1.

இத்தலம் காஞ்சிபுரம் ஹாட்ஸன்பேட்டைக் கடைத்தெருவிலிருந்து வடகிழக்காய் ஒருமைலில் வேப்பங்குளத்திற்கு வடக்கே அமைந்துள்ளது.

---

## சா. திருக்குரங்கணின்முட்டம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விழுநீர்மழுவாட்படையண்ணல்விளங்கும்
கழுநீர்குவளைம்மலரக்கயல்பாயும்
கொழுநீர்வயல்சூழ்ந்தகுரங்கணின்முட்டம்
தொழுநீர்மையர்தீதுறுதுன்பமிலரே. 1

விடைசேர்கொடியண்ணல்விளங்குயர்மாடக்
கடைசேர்கருமென்குளத்தோங்கியகாட்டில்
குடையார்புனல்மல்குகுரங்கணின்முட்டம்
உடையானெனையாளுடையெந்தைபிரானே. 2

கல்லார்மதிற்காழியுண்ஞானசம்பந்தன்
கொல்லார்மழுவேந்திகுரங்கணின்முட்டம்
சொல்லார்தமிழ்மாலைசெவிக்கினிதாக
வல்லார்க்கெளிதாம்பிறவாவகைவீடே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருக்குரங்கணின்முட்டம்:—இது குரங்கு (வாலி), அணில், முட்டம் (காக்கை) இவை பூசித்தகாரணத்தால் இப்பெயரெய்தியது. வாலி பூசித்தது ஸ்வாமிபெயரால் அறியப்படும். காக்கை பூசித்ததென்பது கோயிலைச் சுற்றியுள்ள காக்கை மூக்கினாற்கீறிய காக்கைமடுவினால் அறியப்படும். இம்மூன்றின் உருவங்களும் ஆலய த்வாரத்தில் அமைக்கப் பெற்றிருக்கின்றன. சுவாமி-வாலீஸ்வரர், தேவியார்-இறையார்வளையம்மை இதற்குப்பதிகம்-1.

இத்தலம் (1) திருக்கச்சியிலிருந்து தெற்கே மட்சாலையில் ஆறுமைலில் பாலாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது.

---

# எ. திருமாகறல்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

### திருவிராகம். பண்-சாதாரி. ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விங்குவிளைகழனிமிகு கடைசியர்கள்பாடல் விளையாடலரவம், மங்குலொடுநீள்கொடிகண்மாடமலி நீடுபொழின்மாகறலுளான், கொங்குவிரிகொன்றையொடுகங்கைவளர்திங்களணிசெஞ்சடையினான், செங்கண்விடையண்ணலடிசேர்பவர்கடீவினைகடீருமுடனே. 1

கலையினொலிமங்கையர்கள்பாடலொலியாடல்கவினெய்தியழகார், மலையினிகர்மாடமுயர்நீள்கொடிகள் வீசுமொலிமாகறலுளான், இலையின்மலிவேனுனையசூலம்வலனேந்தியெரிபுன்சடையினான், அலைகொள்புனலேந்துபெருமானடியையேத்தவினையகலுமிகவே. 2

கடைகொணெடுமாடமிகவோங்குகமழ்வீதிமலிகாழியவர்கோன், அடையும்வகையாற்பரவியரனையடிகூடுசம்பந்தனுரையால், மடைகொள்புனலோடுவயல்கூடுபொழின்மாகறலுளானடியையே, உடையதமிழ்ப்பத்துமுணர்வாரவர்கடொல்வினைகளொல்குமுடனே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருமாகறல் :— இது தேவேந்திரன் பூசித்து வழிபட்ட க்ஷேத்ரம். ஸ்வாமியின் திருவுருவம் உடும்பின் ஆகிருதியாய் ஸ்வயம்புவாய்க் காண்கிறது. ஸ்வாமி-அடைக்கலம் காத்தநாதர், தேவியார்-புவனநாயகி. இதற்கும் பதிகம் 1.

இத்தலம் (6) திருக்குரங்கணின் முட்டத்திலிருந்து தென் கிழக்கே மட்சாலையில் ஆறுமைலில் சேயாற்றின் வடகரையில் உள்ளது. காஞ்சீபுரத்திற்குத் தெற்கு 11 மைல்.

---

# அ. திருவோத்தூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பழந்தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பூத்தேர்ந்தாயனகொண்டுநின்பொன்னடி
ஏத்தாதாரில்லையெண்ணுங்கால்
ஓத்தூர்மேயவொளிமழுவாளங்கைக்
கூத்தீரும்மகுணங்களே. 1

இடையீர்போகாவிளமுலையாளையோர்
புடையீரேபுள்ளிமானுரி
உடையீரேயும்மையேத்துதுமோத்தூர்ச்
சடையீரேயுமதாளே. 2

தாதார்கொன்றைதயங்குமுடியுடை
நாதாவென்றுநலம்புகழ்ந்
தோதாதாருளரோதிருவோத்தூர்
ஆதாரயருணல்குமே. 7

குரும்பையாண்பனையீன்குலையோத்தூர்
அரும்புகொன்றையடிகளைப்
பெரும்புகலியுண்ஞானசம்பந்தன்சொல்
விரும்புவார்வினைவீடே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருவோத்தூர்:**-இது தேவர்கட்கும் முனிவர்கட்கும் இறைவன் வேதமோதுவித்து அநுக்ரஹித்த காரணத்தால் இப்பெயரெய்தியது (ஒத்து-வேதம்) இந்த ஞானசம்பந்த மூர்த்திகள் எழுந்தருளிய காலத்தில் அவரிடம் தாம் ஸ்வாமிக்கு ஆக்கிய பனைகள் யாவும் ஆண்பனையாய்க் காயாத தன்மையைச் சமணர் எள்ளுவதை ஓர் சிவனடியார்விண்ணப்பித்தபோது பதிகம்பாடித் திருக்கடைக்காப்பில் 'குரும்பையாண்பனையீன் குலையோத்தூர்' என்று அருளிச்செய்த மாத்ரத்தில் அவை பெண்பனையாய் மாறிக் காய்த்தன. பிறகு காலாந்தரத்தில்

அவை சிவபதமடைந்தன. ஆலயத்தில் பனை பிரதிட்டிக்கப்பெற்று பூஜிக்கப்படுகிறது. ஸ்வாமி-வேதநாதர், தேவியார்-இளமுலைநாயகி, தீர்த்தம்-சேயாறு. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் (7) திருமாகறலினின்றும் தென்மேற்கே மட்சாலையில் 15 மைலில் சேயாற்றிற்கு வடக்கே அமைந்துள்ளது. அச்சிறுபாக்கம் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே 18 மைல். காஞ்சீபுரத்திற்கு மேற்கே 18 மைல்.

---

## கூ. திருவன்பார்த்தான்பனங்காட்டூர்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-சீகாமரம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விடையின்மேல்வருவானைவேதத்தின்பொருளானை
அடையிலன்புடையானையாவர்க்குமறிவொண்ணா
மடையில்வாளைகள்பாயும்வன்பார்த்தான்பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கைதரித்தானைச்சாராதார்சார்வென்னே. 1

தண்ணார்மாமதிசூடித்தழல்போலுந்திருமேனிக்
கெண்ணார்நாண்மலர்கொண்டங்கிசைந்தேத்துமடியார்கள்
பண்ணார்பாடலறாதபடிறன்றன்பனங்காட்டூர்ப்
பெண்ணாணயபிரானைப்பேசாதார்பேச்சென்னே. 3

பாரூரும்பனங்காட்டூர்ப்பவளத்தின்படியானைச்
சீரூருந்திருவாரூர்ச்சிவன்பேர்சென்னியில்வைத்த
ஆரூரன்னடித்தொண்டன்னடியன்சொல்லடிநாய்சொல்
ஊரூரன் னுரைசெய்வாருயர்வானத்துயர்வாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவன்பார்த்தான் பனங்காட்டூர்:—இது வன்பாக்கம் என்னும் கிராமத்தை யடுத்து பனையைத் தலவிருக்ஷமாகப்பெற்ற காரணத்தால் இப்பெயரெய்தியது. அகஸ்தியர் புலஸ்தியர் என்னும் இருவரும் பூசித்தக்ஷேத்ரம். இரண்டு சந்நிதிகள் உண்டு (1) ஸ்வாமி—தாளபுரீஸ்வரர் (பனங்காட்டுநாதர்) தேவியார்—அமிர்தவல்லி. இது ஸ்தலம். அகஸ்தியர் பூசித்தது. இதன் வடக்கில் (2) ஸ்வாமி-கிருபா

நாகேஸ்வரர் (புலஸ்தியர் பூசித்தது), தேவியார்-கிருபாநாயகி, விருக்ஷம்-பனை, தீர்த்தம்-ஜடாகங்கை. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் (1) திருக்கச்சியேகம்பத்தினின்றும் தெற்கே நான்கு மைலில் ஐயன் குளத்தையடைந்து மேற்கே திரும்பி ஆற்காட்டுப்பாதையில் நான்கு மைல் சென்று வடக்கே திரும்பி முக்கால் மைல் சென்றால் அடையத்தக்கது. பாலாறு வேகவதி இரண்டும் இடையில் கடக்கத்தக்கன.

---

# ௰. திருவல்லம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-வியாழக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எரித்தவன்முப்புரமெரியின்மூழ்கத்
தரித்தவன் கங்கையைத்தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள்வேறுவேறு
தெரித்தவனுறைவிடந்திருவல்லமே. 1

தாயவனுலகுக்குத்தன்னொப்பிலாத்
தூயவன்றூமதிசூடியெல்லாம்
ஆயவனமரர்க்குமுனிவர்கட்குஞ்
சேயவனுறைவிடந்திருவல்லமே. 2

கற்றவர் திருவல்லங்கண்டுசென்று
நற்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
குற்றமில்செந்தமிழ்கூறவல்லார்
பற்றுவரீசன்பொற்பாதங்களே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவல்லம்:—இது தற்காலம் திருவலம் என்று வழங்கும். வில்வாரண்ய க்ஷேத்ரம் தீக்காலி என்னும் அவுணன் பூசித்த க்ஷேத்ரமாதலின் 'தீக்காலி வல்லம்' எனவும் வழங்கப்பெறும். நவக்கிரஹங்கள் பூசித்துப் பேறுபெற்றதாக வழங்குவர். ஸ்வாமி-வல்லநாதர், தேவியார்-வல்லாம்பிகை. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் திருவல்லம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே கற்சாலையில் அரைமைலில் உள்ளது.

---

# கக திருமாற்பேறு.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-பழந்தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஊறியார்தருநஞ்சினையுண்டுமை
நீறுசேர்திருமேனியர்
சேறுசேர்வயற்றென்றிருமாற்பேற்றின்
மாறிலாமணிகண்டரே. 1

தொடையார்மாமலர்கொண்டிருபோதும்மை
அடைவாராமடிகளென
மடையார்நீர்மல்குமன்னியமாற்பே
றுடையீரேயுமையுள்கியே. 2

சாலமாமலர்கொண்டுசரணென்று
மேலையார்கள்விரும்புவர்
மாலினுர்வழிபாடுசெய்மாற்பேற்று
நீலமார்கண்டநின்னையே. 4

மன்னிமாலொடுசோமன்பணிசெயும்
மன்னுமாற்பேற்றடிகளை
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்சொல்
பன்னவேவினைபாறுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-வியாழக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

குருந்தவன்குருகவன்கூர்மைபவன்
பெருந்தகைபெண்ணவனுணுமவன்
கருந்தடமலர்க்கண்ணிகாதல்செய்யும்
மருந்தவன்வளநகர்மாற்பேறே. 1

பாறணிவெண்டலைகையிலேந்தி
வேறணிபலிகொளும்வேட்கையனாய்
நீறணிந்துமையொருபாகம்வைத்த
மாறிலிவளநகர்மாற்பேறே. 2

அந்தமின்ஞானசம்பந்தனல்ல
செந்திசைபாடல்செய்மாற்பேற்றைச்
சந்தமின்றமிழ்கள்கொண்டேத்தவல்லார்
எந்தைதன்கழலடியெய்துவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

### திருவிருத்தம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்குயிர்பெறக்கூற்றையுதைத்தன மாவலிபால்
காணிக்கிரந்தவன்காண்டற்கரியன கண்டதொண்டர்
பேணிக்கிடந்துபரவப்படுவன பேர்த்துமஃதே
மாணிக்கமாவனமாற்பேறுடையான்மலரடியே. 1

கருடத்தனிப்பாகன்காண்டற்கரியன காதல்செய்யில்
குருடர்க்குமுன்னேகுடிகொண்டிருப்பன கோலமல்கு
செருடக்கடிமலர்ச்செல்விதன்செங்கமலக்கரத்தால்
வருடச்சிவப்பனமாற்பேறுடையான்மலரடியே. 2

திருச்சிற்றம்பலம்.

---

### திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொருமாற்றின்படைவேண்டிநற்பூம்புனல்
வருமாற்றின்மலர்கொண்டுவழிபடும்
கருமாற்கின்னருள்செய்தவன்காண்டகு
திருமாற்பேறுதொழவினைதேயுமே. 1

கருத்தனைக்கயிலாயமலைதனைத்
தருக்கினாலெடுத்தானைத்தகரவே
வருத்தியாரருள்செய்தவன்மாற்பேறு
அருத்தியாற்றொழுவார்க்கில்லைபல்லலே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஏதுமொன்றுமறிவிலராயினும்
ஓதியஞ்செழுத்துமுணர்வார்கட்குப்
பேதமின்றியவரவருள்ளத்தே
மாதுந்தாமுமகிழ்வர்மாற்பேறரே. 1

சாத்திரம்பலபேசுஞ்சழக்கர்காள்
கோத்திரமுங்குலமுங்கொண்டென்செய்வீர்
பாத்திரஞ்சிவமென்றுபணிதிரேல்
மாத்திரைக்குளருளுமாற்பேறரே. 3

உந்திச்சென்றுமலையையெடுத்தவன்
சந்துதோளொடுதாளிறவூன்றினான்
மந்திபாய்பொழில்சூழுமாற்பேறெனா
அந்தமில்லதோரின்பமணுகுமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாரானைப்பாரினதுபயனானானைப்படைப்பாகிப்பல்லுயிர்க்கும்பரிவோன்றன்னை, ஆராதவின்னமுதையடியார்தங்கட்கனைத்துலகுமானானையமரர்கோனைக், காராருங்கண்டனைக்கயிலைவேந்தைக்கருதுவார்மனத்தானைக்காலற்செற்ற, சீரானைச்செல்வனைத்திருமாற்பேற்றெஞ்செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனானே. 1

நீறாகிநீறுமிழுநெருப்புமாகிநினைவாகிநினைவினியமலையான்மங்கை, கூறாகிக்கூற்றாகிக்கோளுமாகிக்குணமாகிக்குறை

யாதவுவகைக்கண்ணீர், ஆறுதவானந்தத்தடியார்செய்தவறு சாரம்பொறுத்தருளியவர்மேலென்றும், சீறுதபெருமானைத் திருமாற்பேற்றெஞ்செம்பவளக்குன்றினைச் சென்றடைந்தேனே. 5

திருச்சிற்றம்பலம்.

---

திருமாற்பேறு:—இது திருமால் பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் இப்பெயரெய்தியது. இங்கு விஷ்ணு மூர்த்தி ஸத்ரு ஜயத்தின்பொருட்டு சக்கரத்தை விரும்பிப் பூசித்துவருகையில் ஒரு நாள் அர்ச்சனையில் குறைந்த ஒரு பூவின்பொருட்டு தங்கண்ணையிடந்து அர்ச்சித்து சக்ரதானத்தையும் பத்மாக்ஷன் என்னும் நாமாவையும் பெற்றருளினர். இது ஞானசம்பந்தர் திருப்பதிகத்தில் திருக்கடைக்காப்பில் 'மன்னிமாலொடு சோமன் பணிசெயும்' எனவும் வாகீசர் திருக்குறுந்தொகையில் 'பொருமாற்றின்படை வேண்டிநற்பூம்புனல் வருமாற்றின் மலர்கொண்டு வழிபடுங்கருமாற்கின்னருள் செய்தவன்' எனவும் ஓதப்பெற்றமை காண்க. விஷ்ணுமூர்த்தி பக்திபாவசராய் ஸ்வாமியின் முன்னே பச்சிமாபிமுகமாய் எழுந்தருளியிருக்கின்றனர். ஸ்வாமி-மால்வணங்கீசர், மணிகண்டேசர், தேவியார்-கருணைநாயகி, அஞ்சனாக்ஷியம்மை. இதற்குப் பதிகம் 6.

இத்தலம் பளூர் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே மட்சாலையில் இரண்டுமைலில் உள்ளது.

---

# கஉ. திருவூறல்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-வியாழக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாறிலவுணரரணம்மவைமாயவோர்வெங்கணையாலன்று
நீறெழவெய்தவெங்கணிமலனிடம்வினவில்
தேறலிரும்பொழிலுந்திகழ்செங்கயல்பாய்வயலுஞ்சூழ்ந்த
ஊறலமர்ந்தபிரானொலியார்கழலுள்குதுமே 1

மத்தமதக்கரியைமலையான்மகளஞ்சவன்றுகைபால்
மெத்தவுரித்தவெங்கள்விமலன்விரும்புமிடம்

தொத்தலரும்பொழில்சூழ்வயல்சேரந்தொளிநீலநாளுநயனம்
ஒத்தலருங்கழனித்திருவூறலையுள்குதுமே. 2

கோடலிரும்புறவிற்கொடிமாடக்கொச்சையர்மன்மெச்ச
ஓடுபுனல்சடைமேற்கரந்தான்றிருவூறல்
நாடலரும்புகழான்மிகுஞானசம்பந்தன்சொன்னநல்ல
பாடல்கள்பத்தும்வல்லார்பரலோகத்திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவூறல்:—இது தக்கோலம் எனப் பிரசித்தமாகவழங்கும். ஸ்வாமி திருவடியினின்றும் ஜலம் ஊறப்பெறுவதால் இப்பெயரெய்தியது. ஸ்வாமி பெயர்-ஜலநாதேஸ்வரர் என வழங்குவதையும் உற்று நோக்குக. சுரர் குருவக்கிளையமுனிவரான சம்வர்த்த முனிவர் பூசித்த க்ஷேத்ரமென திருத்தொண்டர் புராணங்கூறும். விருத்தக்ஷீர நதியெனும் குசஸ்தல ஆற்றின் கரையில் உள்ள இத்திருக்கோயிலை யடுத்து மதிலோரத்தில் கிழக்கே உள்ள கங்காதார் சந்நிதியில் மேற்குப் பிராகாரத்தில் விருஷபவாயில் அகோராத்ரம் தீர்த்தம் பெருகுவது ஸ்தல மஹிமையினைப் பிரத்யக்ஷமாக விளக்குவிக்கும். ஸ்வாமி-உமாபதீஸ்வரர், தேவியார்-உமையம்மை. இதற்குப் பதிகம் 1.

இத்தலம் தக்கோலம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே ஒருமையில் உள்ளது.

---

# கரு. திருவிலம்பையங்கோட்டூர்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

### பண்-குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மலையினார்பருப்பதந்துருத்திமாற்பேறுமாசிலாச்சீர்ம
றைக்காடுநெய்த்தானம், நிலையினானெனதுரைதனதுரையாக
நீறணிந்தேறுகந்தேறியநிமலன், கலையினார்மடப்பிணைதுணை
யொடுந்துயிலக்கானலம்பெடைபுல்கிக்கணமயிலாலும், இலையி
னார்பைம்பொழிலிலம்பையங்கோட்டூரிருக்கையாப்பேணியெ
ன்னெழில்கொள்வதியல்பே.

திருமலர்க்கொன்றையானின்றவூர்மேயான்றேவர்கட லைமகன்றிருக்கழிப்பாலை, நிருமலனெனதுரைதனதுரையாகநீ றணிந்தேறுகந்தேறியநிமலன், கருமலர்க்கமழ்சுனைநீண்மலர் க்குவளைகதிர்முலையிளையவர்மதிமுகத்துலவும்,இருமலர்த்தண் பொய்கையிலம்பையங்கோட்டூரிருக்கையாப்பேணியென்னெ ழில்கொள்வதியல்பே. 2

கந்தனைமலிகனைகடலொலியோதங்கானலங்கழிவளர்க ழுமலமென்னும்,நந்தியாருறைபதிநான்மறைநாவனற்றமிழ்க் கின்றுணைஞானசம்பந்தன், எந்தையார்வளநகரிலம்பையங் கோட்டூரிசையொடுகூடியபத்தும்வல்லார்போய், வெந்துயர் கெடுகிடவிண்ணவரோடும்வீடுபேறின்மையின்வீடௌிதாமே.

திருச்சிற்றம்பலம்.

---

திருஇலம்பையங்கோட்டூர்:--இது அரம்பாதியர் பூசித்த க்ஷேத்ரம். அரம்பையங்கோட்டூர் இலம்பையங்கோட்டூர் என மருவி வழங்குகிறது. ஸ்வாமி-சந்திரசேகரர், தேவியார்-கோடேந்துமுலையம் மை, இதற்குப் பதிகம் 1.

இத்தலம் (14) திருவிற்கோலத்திநின்றும் தென்மேற்கே மட் சாலையில் இரண்டு மைலில் உள்ளது. ஜலமில்லாதபோது கூவத் தின் ஏரியைக் கடந்தால் ஒருமைல், இவ்வூர் தற்காலம் கிரிஸ்தவர்க ளால் குடியேறி ஜீர்ணமாயிருக்கிறது. பூஜை முதலியன கூவத்தினி ன்றும் வந்துதான் நடைபெறவேண்டும்.

---

## கச. திருவிற்கோலம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

பண்-காந்தாரபஞ்சமம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

உருவினாருமையொடுமொன்றிநின்றதோர்
திருவினான்வளர்சடைத்திங்கள்கங்கையான்
வெருவிவானவர்தொழவெகுண்டுநோக்கிய
செருவினானுறைவிடந்திருவிற்கோலமே. 1

சிற்றிடையுமையொருபங்கனங்கையில்
உற்றதோரெரியினனொருசரத்தினால்
வெற்றிகொளவுணர்கள்புரங்கள்வெந்தறச்
செற்றவனுறைவிடந்திருவிற்கோலமே. 2

கோடல்வெண்பிறையனைக்கூகமேவிய
சேடனசெழுமதிற்றிருவிற்கோலத்தை
நாடவல்லதமிழ்ஞானசம்பந்தன
பாடல்வல்லார்களுக்கில்லைபாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவிற்கோலம்:—இது தற்காலத்தில் கூவம் எனவழங்குகிறது; (கூவம்-கூகம்) இங்கு திரிபுர ஸம்ஹார காலத்தில் சிவபெருமான் வில்லையேந்திய திருக்கோலத்தோடு வீற்றிருந்தமையின் திருவிற்கோலம் எனவும் ரதத்தின் கூவரம் (ஏர்க்கால்) உடைந்து நாசமாயினமையின் கூவமெனவும் பெயரெய்தியதெனப்புராணங்கூறும். ஸ்வாமியின் திருநாமமும் உற்று நோக்கத்தக்கது. ஸ்வாமி தீண்டாத் திருமேனி. அதிகமழை, மழையின்மை, யுத்தம் முதலிய ஸம்பவங்கள் ஸ்வாமியின் திருமேனி அவ்வப்போது காணப்படும் நிறத்தினின்றும் அறியப்படுமாம் என்பதை சம்பந்தமூர்த்திகள் திருப்பதிகத்தில் "ஐயனல்லதிசயன்" என்று குறிப்பித்திருக்கிறார்கள். திரிபுரதஹன விஷயம் பதிகத்துக்கூறப்பட்டமைகாண்க. ஸ்வாமி-திரிபுராந்தகேச்வரர், தேவியார்-திரிபுராந்தநாயகி, இதற்குப்பதிகம்-1

இத்தலம் கடம்பத்தூர் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே 5 மைலில் உள்ளது.

---

## கரு. திருவாலங்காடு.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கராகம்.. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சவருவாருந்தொழுவிப்பாரும்வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னைநினைவிப்பாருமுனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்திவாணாள்கொள்ளும்வகைகேட்
டஞ்சும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. 1

கேடும்பிறவியுமாக்கினாருங்கேடிலா
வீடுமாநெறிவிளம்பினாரெம்விகிர்தனார்
காடுஞ்சுடலையுங்கைக்கொண்டெல்லிக்கணப்பேயோ
டாடும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. 2

சாந்தங்கமழ்மறுகிற்சண்பை ஞானசம்பந்தன்
ஆந்தண்பழையனூராலங்காட்டெம்மடிகளை
வேந்தனருளாலேவிரித்தபாடலிவைவல்லார்
சேர்ந்தவிடமெல்லாந்தீர்த்தமாகச்சேர்வாரே. 12

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளநீர்ச்சடையர்போலும்விரும்புவார்க்கெளியர்போலும்
உள்ளுளேயுருகிநின்றங்குகப்பவர்க்கன்பர்போலும்
கள்ளமேவினைகளெல்லாங்கரிசறுத்திடுவர்போலும்
அள்ளலம்பழனைமேயவாலங்காட்டடிகளாரே. 1

கூடினாருமைதன்னோடேகுறிப்புடைவேடங்கொண்டு
சூடினார்கங்கையாளைச்சுவறிடுசடையர்போலும்
பாடினார்சாமவேதம்பைம்பொழிற்பழனைமேயார்
ஆடினார்காளிகாணவாலங்காட்டடிகளாரே. 8

திருச்சிற்றம்பலம்.

---

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றாவுலகனைத்துமானார்தாமேயூழிதோறூழியுயர்ந்தார்தாமே, நின்றாகியெங்குநிமிர்ந்தார்தாமேநீர்வளிதீயாகாசமானார்தாமே, கொன்றாடுங்கூற்றையுதைத்தார்தாமேகோலப்பழனையுடையார்தாமே, சென்றாடுதீர்த்தங்களானார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. 1

மலைமகளைப்பாகமமர்ந்தார்தாமேவானோர்வணங்கப்படுவார்தாமே, சலமகளைச்செஞ்சடைமேல்வைத்தார்தாமேசர

ணென்றிருப்பார்கட்கன்பர்தாமே, பலபலவும்வேடங்களா
னார்தாமேபழனைபதியாவுடையார்தாமே, சிலைமலைபாழிவெவி
லுமட்டார்தாமேதிருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. 2

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனர்.

பண்-பழம்பஞ்சுரம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முத்தாமுத்திதாவல்லமுகிழ்மென்முலையாளுமைபங்கா
சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனேதேவர்சிங்கமே
பத்தாபத்தர்பலர்போற்றும்பரமாபழையனூர்மேய
அத்தாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. 1

பொய்யேசெய்துபுறம்புறமேதிரிவேன்றன்னைப்போகாமே
மெய்யேவந்திங்கெனையாண்டமெய்யாமெய்யர்மெய்ப்பொரு
[ளே
பையாடரவமரைக்கசைத்தபரமாபழையனூர்மேய
ஐயாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. 2

பத்தர்சித்தர்பலரேத்தும்பரமன்பழையனூர்மேய
அத்தனாலங்காடன்றனடிமைத்திறமேயன்பாகிச்
சித்தர்சித்தம்வைத்தபுகழ்ச்சிறுவனூரனொண்டமிழ்கள்
பத்தும்பாடியாடுவார்பரமனடியேபணிவாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவாலங்காடு:—இது வடமொழியில் வடாரண்யம் என்று வழங்கும்; நடராஜப்பெருமானார் நிருத்தஞ்செய்கிற பஞ்ச ஸபைகளுள் ரத்நஸபை. சிவபெருமான் தம்மோடு வாதஞ்செய்த காளியம்மையை ஊர்த்வதாண்டவஞ்செய்து தோல்வியுறவித்த தலம். சரித்திரம் பதிகங்களில் காணத்தக்கது. பதஞ்சலிவியாக்ரபாதர் இத்தலத்தில் கார்க்கோடகன் முஞ்சிகேஸர் என்னும் திருநாமத்தோடு நடன தரிசனஞ்செய்யாநிற்பர். காரைக்காலம்மையார் திருக்கைலாயத்தினின்றும் இங்கெழுந்தருளித்திருத்தலையாலே பிரதக்ஷிணஞ்செய்து ஸ்வாமியின் திருவடிக்கீழ் ஆடியும் பாடியும் ஆநந்தாநுபவஞ்செய்து கொண்டு எழுந்தருளியிருப்பார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அம்மையார் தலை

யாலே நடந்த தலமென்று கருதி மிதித்தற்கு அஞ்சி அடுத்த ஊரிலே இராத்தங்கியபோது பரமசிவன் கனவிலே தோன்றிப்பாடமறந்தனையே வெனப்பிள்ளையார் திருவருளை வியந்து "துஞ்சவருவாரும் தொழுவிப்பாரும்" எனத்திருப்பதிகம் பாடியருளினர். சுந்தரமூர்த்திகளும் தூரத்தேயிருந்து வணங்கி "முத்தாமுத்தி" என்று பதிகம்பாடியருளினர். நீலியினல் இறந்த வணிகன் பொருட்டு வாக்குக்கொடுத்த வேளாளர் 49 பேர் உயிர் துறந்து சத்தியங்காத்த தலம். இத்தலம் சமீபத்தில் உள்ள பழையனூரோடு சேர்த்துச்சொல்லியிருக்கிறது. ஸ்வாமி-ஊர்த்துவதாண்டவர், தேவியார்-வண்டார்குழலிஅம்மை, தீர்த்தம்-முத்திதீர்த்தம், விருக்ஷம்-பலா, ஸபை-ரத்னஸபை, இதற்குப்பதிகம்-4

இத்தலம் திருவாலங்காடு ஸ்டேஷனுக்கு வடகிழக்கே 3 மைலில் உள்ளது.

---

## கசரு. திருப்பாசூர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தையிடையார்தலையின்மிசையார்செஞ்சொல்லார்
வந்துமாலைவைகும்போழ்தென்மனத்துள்ளார்
மைந்தர்மணாளரென்னமகிழ்வாரூர்போலும்
பைந்தண்மாதவிசோலைசூழ்ந்தபாசூரே. 1

பேரும்பொழுதும்பெயரும்பொழுதும்பெம்மானென்
றாருந்தனையுமடியாரேத்தவருள்செய்வார்
ஊருமரவமுடையார்வாழுமூர்போலும்
பாரின்மிசைபார்பாடலோவாப்பாசூரே. 2

ஞானமுணர்வான்காழிஞானசம்பந்தன்
தேனும்வண்டுமின்னிசைபாடுந்திருப்பாசூர்க்
கானம்முறைவார்கழல்சேர்பாடலிவைவல்லார்
ஊனமிலராயும்பர்வானத்துறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

### திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

முந்திமூவெயிலெய்தமுதல்வனார்
சிந்திப்பார்வினைதீர்த்திடுஞ்செல்வனார்
அந்திக்கோன்றனக்கேயருள்செய்தவர்
பந்திச்செஞ்சடைப்பாசூரடிகளே. 1

மடந்தைபாகமகிழ்ந்தமணாளனார்
தொடர்ந்தவல்வினைபோக்கிடுஞ்சோதியார்
கடந்தகாலனைக்கால்கொடுபாய்ந்தவர்
படர்ந்தநாகத்தர்பாசூரடிகளே. 2

திரியுமூவெயில்செங்கணையொன்றினால்
எரியவெய்தனரேனுமிலங்கைக்கோன்
நெரியவூன்றியிட்டார்விரலொன்றினால்
பரியர்நுண்ணியர்பாசூரடிகளே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

விண்ணாகிநிலனாகிவிசும்புமாகிவேலைசூழ்ஞாலத்தார்விரும்புகின்ற, எண்ணாகியெழுத்தாகியியல்புமாகியேழுலகுந்தொழுதேத்திக்காணநின்ற, கண்ணாகிமணியாகிக்காட்சியாகிக்காதலித்தங்கடியார்கள்பரவநின்ற, பண்ணாகியின்னமுதாம்பாசூர்மேயபரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. 1

வேடனாய்விசயன்றன்வலியைக்காண்பான்விற்பிடித்துக்கொம்புடையவேனத்தின்பின், கூடினாருமையவளுங்கோலங்கொள்ளக்கொலைப்பகழியுடன்கோத்துக்கோரப்பூசல், ஆடினார்பெருங்கூத்துக்காளிகாணவருமறையோடாறங்கமாய்ந்துகொண்டு, பாடினார்நால்வேதம்பாசூர்மேயபரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. 5

புத்தியினாற்சிலந்தியுந்தன்வாயினூலாற்பொதுப்பந்தல
துவிழைத்துச்சருகான்மேய்ந்த, சித்தியினாலரசாண்டுசிறப்பு
ச்செய்யச்சிவகணத்துப்புகப்பெய்தார்திறலான்மிக்க, வித்தக
த்தால்வெள்ளானைவிள்ளாவன்பு விரவியவாகண்டதற்குவீடு
காட்டிப், பத்தர்களுக்கின்னமுதாம்பாசூர்மேயபரஞ்சுடரை
க்கண்டடியேனுய்ந்தவாறே. 6

ஞாலத்தையுண்ட திருமாலுமற்றைநான்முகனுமறியாத
நெறியான்கையில், சூலத்தாலந்தகனைச்சுருளக்கோத்துத்
தொல்லுலகிற்பல்லுயிரைக்கொல்லுங்கூற்றைக், காலத்தாலு
தைசெய்துகாதல்செய்தவந்தணனைக் கைக்கொண்டசெவ்வா
ன்வண்ணர், பாலொத்தவெண்ணீற்றர்பாசூர்மேயபரஞ்சுட
ரைக்கண்டடியேனுய்ந்தவாறே. 9

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பாசூர்:—இது ஸ்தலவிருக்ஷம் மூங்கில் ஆதலானும் ஸ்வாமி மூங்கிலடியில் முளைத்தமையானும் இப்பெயரெய்தியதென்ப. சந்திரனுக்கு அநுக்கிரஹ ஸ்தலமென்பது "அந்திக்கோன்றனக்கேயருள் செய்திடும்" என்னும் திருக்குறுந்தொகையினுன் அறியப்படும். குறும்பர் அரனுக்குச்சார்பாகச்சமணர் கரிகால்வளவன்மீது ஏவியபாம்பைப் பரமசிவன் எழுந்தருளித்தடுத்து ஆட்டியருளினார் என்பது தலமான்மியம். இது பதிகங்களில் காணத்தக்கது. ஸ்வாமி-பாசூர்நாதர், தேவியார்-பசுபதிநாயகி, இதற்குப்பதிகம்-3.

இத்தலம் திருவள்ளூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலையில் இரண்டரைமைல் சென்று திருவெவ்வளூரையடைந்து அங்கிருந்து மேற்கே கற்சாலையில் இரண்டுமைலில் உள்ளது.

---

## கஎ. திருவெண்பாக்கம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-சீகாமரம் எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பிழையுளனபொறுத்திடுவரென்றடியேன்பிழைத்தக்கால்
பழியதனைப்பாராதேபடலமென்கண்மறைப்பித்தாய்
குழைவிரவுவடிகாதாகோயிலுளாயேயென்ன
உழையுடையானுள்ளிருந்துவுளோம்போகிரென்றானே. 1

பொன்னவிலுங்கொன்றையினாய்போய்மகிழ்க்கீழிருவென்று
சொன்னவெனைக்காணாமேசூளுறவுமகிழ்க்கீழே
என்னவல்லபெருமானேயிங்கிருந்தாயோவென்ன
ஒன்னலரைக்கண்டாற்போலுளோம்போகீரென்றானே. 8

மான்றிகழுஞ்சங்கிலியைத்தந்துவருபயன்களெல்லாம்
தோன்றவருள்செய்தளித்தாயென்றுரைக்கவுலகமெலாம்
ஈன்றவனேவெண்கோயிலிங்கிருந்தாயோவென்ன
ஊன்றுவதோர்கோலருளியுளோம்போகீரென்றானே. 9

ஏராரும்பொழினிலவுவெண்பாக்கமிடங்கொண்ட
காராருமிடற்றானைக்காதலித்திட்டன்பினொடும்
சீராருந்திருவாரூர்ச்சிவனடிபேர்சென்னியில்வைத்த
ஆரூரன்றமிழ்வல்லார்க்கடையாவல்வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவெண்பாக்கம்:—இது திருவுளம்பூதூர் என்பதனோடு மயங்கியறியப்படுகிறது. ஸ்தலம் வெண்பாக்கமே. வெண்கோயில் என்னும் குறிப்பானும் அறிக. இங்கு சுந்தரமூர்த்தி நாயனார் எழுந்தருளிப்பரமசிவனைக்கோயிலுள்ளீரோ என்று வினவப்பரமசிவன் உளோம் போகீர்என்று கூறியருள இரங்கி ஊன்றுகோலாவதொன்றருளீர் என்று விண்ணப்பித்துப்பெற்றருளியது பதிகத்தாற்காண்க. ஸ்வாமி-வெண்பாக்கநாதர், தேவியார்-கனிவாய்மொழி, இதற்குப்பதிகம்-1

இத்தலம் திருவள்ளூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்காய் (16) திருப்பாசூருக்குப் போகிற பாதையாய் மூன்றரை மைல் சென்று வடக்கே திரும்பி ஊற்றுக்கோட்டைக்குப்போகிற பாதையில் மட்சாலையில் 5 மைலில் உள்ளது; பாதை கடுமை.

---

## கஅ. திருக்கள்ளில்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-வியாழக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

முள்ளின்மேன்முதுகூகைமுரலுஞ்சோலை
வெள்ளின்மேல்விடுகூற்றைக்கொடிவிளைந்த

கள்ளின்மேயவண்ணல்கழல்கணுளும்
உள்ளுமேனுயர்வெய்தலொருதலையே. 1

ஆடலான்பாடலானரவங்கள்பூண்டான்
ஓடலாற்கலனில்லானுறைபதியால்
காடலாற்கருதாதகள்ளின்மேயான்
பாடெலாம்பெரியோர்கள்பரசுவாரே. 2

திசைநான்கும்புகழ்காழிச்செல்வமல்கு
பகல்போலும்பேரொளியான்பந்தனல்ல
முகைமேவுமுதிர்சடையான்கள்ளிலேத்தப்
புகழோடும்பேரின்பம்புகுதுமன்றே. 11

திருச்சிற்றம்பலம்.

திருகள்ளில்:—இது இப்போது திருக்கள்ளம் என்று வழங்கப்பெறும். பிருகு முனிவர் பூசித்த ஸ்தலமென வழங்குகின்றனர். சுவாமி-சிவாநந்தர், தேவியார்-ஆனந்தவல்லி, இதற்குப்பதிகம்-1

இத்தலம் சென்னையினின்றும் வடக்கே 12 மைலில் புழலேரியையடைந்து அங்கு நின்றும் வடக்கே ஒருமைல் சென்று மேற்கே திரும்பி மூன்றுமைலில் அத்திப்பேட்டுச்சத்திரத்தையடைந்து மீண்டும் வடக்கே திரும்பி இரண்டுமைல் சென்று குசஸ்தல ஆற்றைக்கடந்தால் அதன் வடகரையில் அரைமைலில் உள்ளது.

## கசு. திருக்காளத்தி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-கொல்லி. உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சந்தமாரகிலொடுசாதிதேக்கம்மரம்
உந்துமாமுகலியின்கரையினிலுமையொடும்
மந்தமார்பொழில்வளர்மல்குவண்காளத்தி
எந்தையாரிணையடியென்மனத்துள்ளவே. 2

ஆலமாமரவமோடமைந்தசீர்ச்சந்தனம்
சாலமாபீலியுஞ்சண்பகமுந்தியே

காலமார்முகலிவந்தணைதருகாளத்தி
நீலமார்கண்டனைநினையுமாநினைவதே. 2

அட்டமாசித்திகளணைதருகாளத்தி
வட்டவார்சடையனைவயலணிகாழியான்
சிட்டநான்மறைவலஞானசம்பந்தன்சொல்
இட்டமாப்பாடுவார்க்கில்லையாம்பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவிராகம். பண்-சாதாரி ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானவர்கடானவர்கள்வாதைபடவந்ததொருமாகடல்விடம்
தானமுதுசெய்தருள்புரிந்தசிவன்மேவுமலைதன்னைவினவில்
ஏனமிளமானினொடுகிள்ளைதினைகொள்ளவெழிலார்கவணினால்
கானவர்தமாமகளிர்கனகமணிவிலகுகாளத்திமலையே. 1

வேயனையதோளுமையொர்பாகமதுவாகவிடையேறிசடைமேல்
தூயமதிசூடிசுடுகாடினடமாடிமலைதன்னைவினவில்
வாய்கலசமாகவழிபாடுசெயும்வேடன்மலராகுநயனம்
காய்கணையினாலிடந்தீசனடிகூடுகாளத்திமலையே. 4

காடதிடமாகநடமாடுசிவன்மேவுகாளத்திமலையை
மாடமொடுமாளிகைகணீடுவளர்கொச்சைவயமன்னுதலைவன்
நாடுமலிநீடுபுகழ்ஞானசம்பந்தனுரைநல்லதமிழின்
பாடலொடுபாடுமிசைவல்லவர்களல்லர்பரலோகமெளிதே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

விற்றாணொன்றில்லாதநல்கூர்ந்தான்காண்வியன்கச்சிக்கம்பன்காண்பிச்சையல்லால், மற்றாணொன்றில்லாதமாசதுரன்காண்மயானத்துமைந்தன்காண்மாசொன்றில்லாப், பொற்றூண்காண்மாமணிநற்குன்றொப்பான்காண் பொய்யாதபொ

ழிலெழுந்தாங்கிநின்ற, கற்றான்காண்காளத்திகாணப்பட்ட கணநாதன்காணவனென்கண்ணுளானே. 1

நாரணன்காணான்முகன்காணால்வேதன்காண் ஞானப்பெருங்கடற்கோர்நாவாயன்ன, பூரணன்காண்புண்ணியன்காண் புராணன்றான்காண் புரிசடைமேற் புனலேற்ற புனிதன்றான் காண், சாரணன்காண்சந்திரன்காண்கதிரோன்றான் காண் தன்மைக்கட்டானேகாண்டக்கோர்க்கெல்லாம், காரணன்காண் காளத்திகாணப்பட்ட கணநாதன்காணவனென்கண்ணுளானே.

மனத்தகத்தான் றலைமேலான் வாக்கினுள்ளான்வாயாரத்தன்னடியேபாடுந்தொண்டர், இனத்தகத்தானிமையவர்தஞ்சிரத்தின்மேலானேழண்டத்தப்பாலானிப்பாற்செம்பொன், புனத்தகத்தானறுங்கொன்றைப் போதினுள்ளான்பொருப்பிடையானெருப்பிடையான்காற்றினுள்ளான், கனத்தகத்தான்கயிலாயத்துச்சியுள்ளான்காளத்தியானவனென்கண்ணுளானே.

தேனப்பூவண்டுண்டகொன்றையான்காண்டிருவேகம்பத்தான்காண்டேனார்ந்துக்க, ஞானப்பூங்கோதையாள்பாகத்தான்காணம்பன்காண் ஞானத்தொளியானான்காண், வானப்பேருருமறியவோடிமட்டித்து நின்றான்காண்வண்டார்சோலைக், கானப்பேரூரான்காண்கறைக்கண்டன்காண்காளத்தியானவனென்கண்ணுளானே. 9

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

செண்டாடும்விடையாய்சிவனேயென்செழுஞ்சுடரே
வண்டாருங்குழலாளுமைபாகமகிழ்ந்தவனே
கண்டார்காதலிக்குங்கணநாதனெங்காளத்தியாய்
அண்டாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. 1

இமையோர்நாயகனேயிறைவாவென்னிடர்த்துணையே
கமையார்கருணையினாய்கருமாமுகில்போன்மிடற்றாய்

உமைபோர்கூறுடையாயுருவே திருக்காளத்தியுள்
அமைவேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. 2

காரூரும்பொழில்சூழ்கணநாதனெங்காளத்தியுள்
ஆராவின்னமுதையணிநாவலரூரன்சொன்ன
சீரூர்செந்தமிழ்கள்செப்புவார்வினையாயினபோய்ப்
போய்விண்ணுலகம்பெறுவார்பிழைப்பொன்றிலரே. 10

திருச்சிற்றம்பலம்

---

**திருக்காளத்தி**:—இது சீகாளத்தி எனவும் கூறப்பெறும். பஞ்சபூத ஸ்தலங்களுள் வாயுஸ்தலம். தக்ஷிணகயிலாயம் மூன்றனுள் முதன்மையானது; விராட்புருஷனது ஆறுதாரக்ஷேத்ரங்களுள் விசுத்திக்ஷேத்ரம்; சைவவைதிக மடங்கள் அமைந்த திருப்பதி; மஹாபுராணம், உபபுராணம், ஸ்தலபுராணம்முதலிய எல்லாப்புராணங்களாலும் போற்றப்படுவது; இங்கு சிலந்தி, காளன் என்னும் ஸர்ப்பம் யானை இவை பூசித்துப் பேறுபெற்றது தலப்பெயரிலேயே (சீ-சிலந்தி, காளம்-பாம்பு, ஹஸ்தி- யானை) அமைந்திருத்தல் காணத்தக்கது. இவையன்றி விஷ்ணுமூர்த்தி, பிரம்மதேவர், இலக்குமி, ஸரஸ்வதி ஸனகாதியர், சுவேதாசுவதராதியர் நூற்றுப் பன்னிருதேவருஷிகள், உரோமசர், வஸிஷ்டர், அகஸ்தியர், திக்பாலகர், யோகினிகள், அக்னிப்பிரபனுதிய அசுரர், ஆதிசேடனுதிய நாகர், மணிமானுதிய யக்ஷர். முசுகுந்தராதிய அரசர், நக்கீரர், கன்னியரிருவர், ஜங்கமவேந்தன் முதலிய எண்ணிறந்தோர் உபாசித்துச் சித்தியடைந்தனர். இவர் யாவரினும் சிறப்பாய்ச் சொல்லக்கூடிய அன்பு பிழம்பாகிய கண்ணப்பர், சிவகோசரியார் வழிபட்டு அநுக்கிரஹம்பெற்ற சரித்திரம் அறியாதார் இல்லை. இதனைப் பாராட்டாத திருமுறை இல்லை என்பதனை அறிக. சரித்ரவிவரணத்திற்கு ஸ்தலபுராணங்களும் திருத்தொண்டர்புராணமும் பார்க்கத்தக்கன. ஞானசம்பந்தராதியசமயாசார்ய மூர்த்திகள் ஸ்வாமிதரிசனஞ்செய்து திருக்கண்ணப்பரையும்வழிபட்டு ஆராமையெய்திய விஷயம் பாராட்டற் பாலது. சுவாமி-திருக்காளத்திநாதர், குடுமித்தேவர் முதலியன; தேவியார்-ஞானப்பூங்கோதை முதலியன; விநாயகர்--ஐஞ்சந்திவிநாயகர், விருக்ஷம்-கல்லால், அகண்டவில்வம்; தீர்த்தம்—பொன்முகரி, (இது இங்கு உத்தரவாகினி

யாய்ச் செல்லுதலின் சிறப்புடையது)பிரம்மதீர்த்தம், ஸரஸ்வதிதீர்த்தம் முதலியன. இதற்குப்பதிகம்—4.

இத்தலம் திருக்காளத்தி ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே கற்சாலையில் 2-மைலில் உள்ளது.

# உய· திருவொற்றியூர்·

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண்-பஞ்சமம். ந-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விடையவன்விண்ணுமண்ணுந்தொழநின்றவன்வெண்மழுவாட்
படையவன்பாய்புலித்தோலுடைகோவணம்பல்கரந்தைச்
சடையவன்சாமவேதன்சசிதங்கியசங்கவெண்டோ
டுடையவன்னூனமில்லியுறையும்மிடமொற்றியூரே. 1

பாரிடம்பாணிசெய்யப்பறைக்கட்செறுபல்கணப்பேய்
சீரொடும்பாடலாடலிலயஞ்சிதையாதகொள்கைத்
தாரிடும்போர்விடையன்றலைவன்றலையேகலனா
னூரிடும்பிச்சைகொள்வானுறையும்மிடமொற்றியூரே. 2

ஒண்பிறைமல்குசென்னியிறைவன்னுறையொற்றியூரைச்
சண்பையர்தந்தலைவன்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனைபாடல்பத்தும்பரவிப்பணிந்தேத்தவல்லார்
விண்புனைமேலுலகம்விருப்பெய்துவர்வீடெளிதே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

திருநேரிசை. சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளத்தைச்சடையில்வைத்தவேதகீதன்றன்பாதம்
மெள்ளத்தானடையவேண்டின்மெய்தருஞானத்தியால்
கள்ளத்தைக்கழியநின்றார்காயத்துக்கலந்துநின்று
உள்ளத்துளொளியுமாகுமொற்றியூருடையகோவே. 1

சமையமேலாறுமாகித்தானொருசயம்புவாகி
இமையவர்பரவியேத்தவினிதினங்கிருந்தவீசன்

ஊமையினையுடையராகிக்கழலடிபரவுவார்க்கு
உமையொருபாகர்போலுமொற்றியூருடையகோவே. 5

திருச்சிற்றம்பலம்.

---

திருநேரிசை. ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமூழைபோலக்கருதிற்றேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலபலநினைக்கின்றேனை
ஓம்பிநீயுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே. 1

மனமெனுந்தோணிபற்றிமதியெனுங்கோலையூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச்செறிகடலோடும்போது
மதனெனும்பாறைதாக்கிமறியும்போதறியவொண்ணா
துனையுனுமுணர்வைநல்காயொற்றியூருடையகோவே. 2

திருச்சிற்றம்பலம்.

---

திருவிருத்தம், ௪-ந் திருமுறை,

திருச்சிற்றம்பலம்

செற்றுக்களிற்றுரிகொள்கின்றஞான்றுசெருவெண்கொம்
றிற்றுக்கிடந்ததுபோலுமிளம்பிறைபாம்பதனைச் [பொன்
சுற்றிக்கிடந்ததுகிம்புரிபோலச்சுடரிமைக்கும்
நெற்றிக்கண்மற்றதன்முத்தொக்குமாலொற்றியூரனுக்கே 1

வேலைக்கடனஞ்சமுண்டுவெள்ளேற்றொடும்வீற்றிருந்த
மாலைச்சடையார்க்குறைவிடமாவதுவாரிகுன்றா
ஆலைக்கரும்பொடுசெந்நெற்கழனியருகணைந்த
சோலைத்திருவொற்றியூரையெப்போதுந்தொழுமின்களே.

இன்றரைக்கண்ணுடையாரெங்குமில்லையிமயமென்னுங்
குன்றரைக்கண்ணன்குலமகட்பாவைக்குக்கூறிட்டநாள்
அன்றரைக்கண்ணுங்கொடுத்துமையாளையும்பாகம்வைத்த
ஒன்றரைக்கண்ணன்கண்டீரொற்றியூருறையுத்தமனே.

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை
திருச்சிற்றம்பலம்.

ஒற்றியூருமொளிமதிபாம்பினை
ஒற்றியூருமப்பாம்புமதனையே
ஒற்றியூரவொருசடைவைத்தவன்
ஒற்றியூர்தொழநம்வினையோயுமே. 1

கூற்றுத்தண்டத்தையஞ்சிக்குறிக்கொண்மின்
ஆற்றுத்தண்டத்தடக்குமானடி
நீற்றுத்தண்டத்தராய்நினைவார்க்கெலாம்
ஊற்றுத்தண்டொப்பர்போலொற்றியூரரே. 3

வரையினாலுயர்தோளுடைமன்னனை
வரையினார்வலிசெற்றவர்வாழ்விடம்
திரையினார்புடைசூழ்திருவொற்றியூர்
உரையினாற்பொலிந்தாருயர்ந்தார்களே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தாண்டகம் ௬-ந் திருமுறை.
திருச்சிற்றம்பலம்.

வண்டோங்குசெங்கமலங்கழுநீர்மல்குமதமத்தஞ்சேர்
சடைமேன்மதியஞ்சூடித், திண்டோள்களாயிரமும்வீசிநின்று
திசைசேரநடமாடிச்சிவலோகனார், உண்டார்நஞ்சுலகுக்கோ
ருறுதிவேண்டியொற்றியூர்மேயவொளிவண்ணனார், கண்டே
னான்கனவகத்திற்கண்டேற்கென்றன்கடும்பிணியுஞ்சுடுந்தொ
ழிலுங்கைவிட்டவே. 1

கடியவிடையேறிக்காளகண்டர்கலையோடுமழுவாளோர்
கையிலேந்தி, இடியபலிகொள்ளார்போவாரல்லரெல்லாந்
தானிவ்வடிகள்யாரென்பாரே, வடிவுடையமங்கையுந்தாமு
மெல்லாம்வருவாரையெதிர்கண்டோமயிலாப்புள்ளே, செ
டிபடுவெண்டலையொன்றேந்திவந்து திருவொற்றியூர்புக்கார்
தீயவாறே. 4

மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை மலையல்லை கடலல்லை வாயுவல்லை, எண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை யிரவல்லை பகலல்லை யாவுமல்லை, பெண்ணல்லை யாணல்லை பேடுமல்லை பிறிதல்லை யாளுயும் பெரியாய்நீயே, உண்ணல்லை நல்லார்க்குத் தீமை யல்லை யுணர்வரிய வொற்றியூருடைய கோவே. 9

திருச்சிற்றம்பலம்

## சுந்தரமூர்த்திநாயனர்.

### பண்-தக்கேசி எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அழுக்குமெய்கொடுன் றிருவடியடைந்தே னதுவுநான் படப்பாலதொன்றுனல், பிழுக்கைவாரியும் பால்கொள்வரடிகேள் பிழைப்பனாகிலுந் திருவடிப்பிழையேன், வழுக்கிவீழினுந் திருப்பெயரல்லாள் மற்றுநானறியேன் மறுமாற்றம், ஒழுக்கவென்கணுக் கொருமருந்துரையா யொற்றியூரெனு மூருறைவானே. 1

கட்டனேன் பிறந்தேனுனக்காளாய்க் காதற்சங்கிலி காரணமாக, எட்டிறைற்றிகழுந் திருமூர்த்தியென் செய்வானடியேனெடுத்துரைக்கேன், பெட்டனாகிலுந் திருவடிப்பிழையேன் பிழைப்பனாகிலுந் திருவடிக்கடிமை, ஒட்டினேனெனை நீசெய்வதெல்லா மொற்றியூரெனு மூருறைவானே. 2

மகத்திற்புக்கதோர் சனியெனக்கானாய் மைந்தனேமணியேமணவாளா, அகத்திற்பெண்டுகள் நானென்றுசொன்னால் மைபேற்போகுருடாவெனத் தரியேன், முகத்திற்கண்ணிழந் தெங்ஙனம்வாழ்கேன் முக்கணாமுறையோமறையோதீ, உகைக்குந்தண்கடலோதம்வந்துலவு மொற்றியூரெனு மூருறைவானே.

ஓதம்வந்துலவுங்கரைதன்மே லொற்றியூருறை செல்வனை நாளும், ஞாலந்தான் பரவப்படுகின்றநான் மறையங்கமோதிய நாவன், சீலந்தான் பெரிதும்மிகவல்ல சிறுவன் வன்றொண்டனூரனுரைத்த, பாடல்பத்திவை வல்லவர்தாம்போய்ப் பாகதிதின்ணநண்ணுவர் தாமே 10

திருச்சிற்றம்பலம்.

பண்-குறிஞ்சி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாட்டும்பாடிப்பரவித்திரிவார்
ஈட்டும்வினைகடீர்ப்பார்கோயில்
காட்டுங்கலமுந்திமிலுங்கரைக்கே
ஓட்டுந்திரைவாயொற்றியூரே. 1

பந்துங்கிளியும்பயிலும்பாவை
சிந்தைகவர்வார்செந்தீவண்ணர்
எந்தம்மடிகளிறைவர்க்கிடம்போல்
உந்துந்திரைவாயொற்றியூரே. 2

பவளக்கனிவாய்ப்பாவைபங்கன்
கவளக்களிற்றினுரிவைபோர்த்தான்
தவழும்மதிசேர்சடையாற்கிடம்போல்
உகளுந்திரைவாயொற்றியூரே. 3

ஒற்றியூருமரவும்பிறையும்
பற்றியூரும்பவளச்சடையான்
ஒற்றயூர்மேலூரனுரைத்த
கற்றுப்பாடக்கழியும்வினையே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருவொற்றியூர்:—இது பதுமகற்பத்தில் பிரளயகாலத்து அனுக்கிரஹத்தின்பொருட்டுத் தவஞ்செய்த பிரம்மதேவர் யோகாக்னி மத்தியில் பரமசிவன் விசித்ரரூபமான பலகாகாரமாய்த் தோன்றி அவ்வக்னியே கோயிலாய் அமைய எழுந்தருளிப் பிரளயவெள்ளத்தை விலகச்செய்தமையின் இப்பெயரெய்தியது எனப் புராணங்கூறும். இங்கு மஹாகைலாஸத்தில் தாம் ஸந்தியா காலத்துச் செய்கிற பிரதோஷ நடனத்தைத் தரிசித்த நந்திதேவர் அமர்ந்து இருந்துசெய்கிற நித்யநடனத்தையும் தரிசிக்கவேண்டுமென்னும் பிரார்த்தனையை நிறைவேற்றச் சிவபெருமான் நடனஞ்செய்தருளுவர். இதனை விஷ்ணுமூர்த்தி, பிரம்மதேவர், ரோமசமுனிவர் என்னும் இவரும் தரிசித்து உய்ந்தார்கள். நந்திதேவர் விஷ்ணுமூர்த்தி, பிரம்மதேவர், ரோமசர், வான்மீகிமுனிவர், வாசுகி, சேடன், சந்திரன், ராமபுத்ரனாகிய லவன், தொண்டைமான்,

பஞ்சதருக்கள் முதலியோர் பூசித்துப் பேறுபெற்றனரென்க. அகஸ்தியமுனிவருக்குத் திருக்கல்யாணக் காக்ஷி கொடுத்தருளிய ஐதிஹ்யம் பிரம்மோற்சவத்து 9-ந் திருநாளில் நடைபெறும். உபமன்யுமஹாமுனிவரிடத்துச் சிவதீக்ஷைபெற்றுப் பூசித்த வாசுகியைச் சிவபெருமான் தம்முடைய பலகாகாரத் திருவுருவத்தில் ஐக்யஞ்செய்துகொண்டமையாலும் அச்சர்ப்ப வுருவம் திருவுருவத்தில் காணத்தக்கதாதலாலும் சுவாமி படம்பக்கநாதராயினர். மாந்தாதாவென்னும் சூர்யவம்சத்தரசன் சிவபுண்யத்தால் எல்லையின்றிவளர்ந்த தானது ஆயுள் மிகுதியால் மூப்படைந்து கஷ்டப்படுவோனாய் எல்லாத் தலங்களது கட்டளைகளையும் குறைத்தெழுதச்சொல்லிய வட்டில் தியாகேசர் வரிபிளந்து "திருவொற்றியூர் நீங்கலாக" என்று எழுதினமையின் சுவாமி எழுத்தறியும்பெருமான் என்றும் போற்றப்பெறுவர்; அரசனுக்குக் கொடுக்கும் பொருட்டுத் தம்மன்பராகிய ஏலேலசிங்கருக்கு மாணிக்கங்கள் கொடுத்துத் தியாகராயினர். சுந்தரமூர்த்திநாயனர் இங்கெழுந்தருளியிருந்து ஞாயிறுகிழவனுருடைய புத்திரியாரா யவதாரஞ்செய்திருந்த சங்கிலியாரென்னும் அநிந்திதையாரை மகிழின்கீழ்ச்சபதஞ்செய்து மணந்து பலபதிகம் பாடியருளினர். செக்கார்குலத்துத் திருவவதாரஞ்செய்த கலியநாயனர் திருவிளக்குத் திருப்பணியை வறுமை வந்தகாலத்தும் விடாது செய்துவருநாளில் ஒருநாள் முட்டுப்பட்டுத் தம் கழுத்தை அரிந்துகொள்ளத் தொடங்கலும் பரமசிவன் எழுந்தருளித்தடுத்து அநுக்கிரஹம் செய்யப்பெற்றனர். தவராஜசிங்கமெனும் பட்டினத்தடிகள் பேய்க்கரும்பு தித்தித்துப் பேறுபெற்ற க்ஷேத்ரம். சுவாமி—படம்பக்கநாதர், புற்றிடங்கொண்டார், தியாகேசர், தேவியார்-வடிவுடைநாயகி, விருக்ஷம்-அத்தி, தீர்த்தம் பிரம்மதீர்த்தம்ஆதிய. இதற்குப் பதிகம்—8.

இத்தலம் திருவொற்றியூர் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலையில் அரைக்கால் மைலிலுள்ளது. சென்னையினின்றும் வடக்கே ஐந்து மைல்.

---

# உக. திருவலிதாயம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பத்தரோடுபலரும்பொலியம்மலரங்கைப்புனலாவி
ஒத்தசொல்லியுலகத்தவர்தாந்தொழுதேத்தவுயர்சென்னி

மத்தம்வைத்தபெருமான்பிரியாதுறைகின்றவலிதாயம்
சித்தம்வைத்தவடியாரவர்மேலடையாமற்றிடர்நோயே.

படையிலங்குகரமெட்டுடையான்படிறாகக்கனலேந்திக்
கடையிலங்குமனையிற்பலிகொண்டுணுங்கள்வன்னுறைகோயில்
மடையிலங்குபொழிலின்னிழல்வாய்மதுவீசும்வலிதாயம்
அடையநின்றவடியார்க்கடையாவினையல்லற்றுயர்தானே.

வண்டுவைகும்மணமல்கியசோலைவளரும்வலிதாயத்
தண்டவாணனடியுள்குதலாலருமாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற்காழியுண்ஞானசம்பந்தன்றமிழ்பத்தும்
கொண்டுவைகியிசைபாடவல்லார்குளிர்வானத்துயர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

---

**திருவலிதாயம்:**— இது பாடி யென்று வழங்கப்பெறும். பிருஹஸ்பதி, அநுமான், பாரத்வாஜர்முதலியோர் பூசித்துப் பேறுபெற்றதலம், பூசித்தோர்பெயரினாற் றனித்தனித் தீர்த்தங்களு முண்டு. சுவாமி-வலிதாயநாதர், தேவியார்-தாயம்மை, இதற்குப்பதிகம்-1.

இத்தலம் வில்லிவாக்கம் என்னும் கொண்ணூர்ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே மட்சாலையில் இரண்டுமைலில் உள்ளது,

---

# உஉ. திருமுல்லைவாயில்.

## சுந்தரமூர்த்திநாயனர்.

பண்-தக்கேசி ஏ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

திருவுமெய்ப்பொருளுஞ்செல்வமுமெனக்குன்சீருடைக் கழல்களென்றெண்ணி, ஒருவரைமதியாதுறாமைகள்செய்து மூடியுமுறைப்பனுத்திரிவேன், முருகமர்சோலைசூழ்திருமுல் லைவாயிலாய்வாயினுலுன்னைப், பரவிடுமடியேன்படுதுயர்களை யாய்பாசுபதாபரஞ்சுடரே.

விண்பணிந்தேத்தும்வேதியர்மாதர்வெருவிடவேழமொன் றுரித்தாய், செண்பகச்சோலைசூழ்திருமுல்லைவாயிலாய்தே வர்தம்மரசே, தண்பொழிலொற்றிமாநகருடையாய்சங்கிலிக்

காவென்கண்கொண்ட, பண்பநின்னடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே.

நம்பனேயன்றுவெண்ணெய்நல்லூரினாபினேன்றன்னையாட்கொண்ட, சம்புவேயும்பரார்தொழுதேத்துந்தடங்கடனஞ்சுண்டகண்டா, செம்பொன்மாளிகைசூழ்திருமுல்லைவாயிற்றேடியான்றிரிதர்வேன்கண்ட, பைம்பொனேயடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. ௯

சொல்லரும்புகழான்றொண்டைமான்களிற்றைச்சூழ்கொடிமுல்லையாற்கட்டிட், டெல்லையிலின்பமவன்பெறவெளிப்பட்டருளியவிறைவனேயென்றும், நல்லவர்பரவுந்திருமுல்லைவாயிலாதனேநகைவிடையேறீ, பல்கலைப்பொருளேபடுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. 10

விரைதருமலர்மேலயனொடுமாலும்வெருவிடநீண்டவெம்மானைத், திரைதருபுனல்சூழ்திருமுல்லைவாயிற்செல்வனைநாவலாரூரன், உரைதருமாலையோரஞ்சினோடைஞ்சுமுள்குளிர்ந்தேத்தவல்லார்கள், நரைதிரைமூப்புநடலையுமின்றிநண்ணுவர்விண்ணவர்க்கரசே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**வடதிருமுல்லைவாயில்:**—இது சோழநாட்டில் தெற்கே உள்ள மற்றொரு திருமுல்லைவாயிலை உத்தேசித்தும் முல்லை ஸ்தல விருக்ஷமாதலை உத்தேசித்தும் இப்பெயரெய்தியது. சண்பகாரண்யம் என்றுங்கூறப்பெறும். இங்கு வேட்டையின்பொருட்டு வந்த தொண்டைமான் யானையின் காலில் முல்லைக்கொடி சுற்றலும் அவன் அதனை வாளினல் வீசியபோது ஸ்வாமி வெளிப்பட்டு அநுக்கிரகஞ்செய்தனர். இது திருப்பதிகத்துப் பத்தாந்திருப்பாட்டில் அருளிச்செய்யப்பெற்றிருப்பது காண்க. சுப்ரம்மண்யமூர்த்தி பூசித்த க்ஷேத்ரமுமாம். ஸ்வாமி சந்நிதானத்து மிகப் பெரிய எருக்கந்தூண்கள் இரண்டு அமைக்கப் பெற்றிருத்தல் காணத்தக்கது. சோழன், காமதேநு, வசிட்டர், முதலியோர் பூசித்த குறிப்புகளும் காணப்பெறுகின்றன. ஸ்வாமி-பாசுபதேஶ்வரர், தேவியார்-கொடியிடைநாயகி, இதற்குப்பதிகம்-1.

இத்தலம் அம்பத்தூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே மட்சாயில் மூன்று மைலில் உள்ளது. ஆவடியிலின்றும் போகலாம்.

# உரு. திருவேற்காடு.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

பண்-பழந்தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஒள்ளிதுள்ளக்கதிக்காமிவனொளி
வெள்ளிபானுறைவேற்காடு
உள்ளியாருயர்ந்தாரிவ்வுலகினில்
தெள்ளியாரவர்தேவரே. 1

ஆடனாகமசைத்தளவில்லதோர்
வேடங்கொண்டவன்வேற்காடு
பாடியும்பணிந்தாரிவ்வுலகினில்
சேடராகியசெல்வரே. 2

பூதம்பாடப்புறங்காட்டிடையாடி
வேதவித்தகன்வேற்காடு
போதுஞ்சாந்தும்புகையுங்கொடுத்தவர்க்
கேதமெய்துதலில்லையே. 3

விண்டமாம்பொழில்சூழ்திருவேற்காடு
கண்டுநம்பன்கழல்பேணிச்
சண்பைஞானசம்பந்தனசெந்தமிழ்
கொண்டுபாடக்குணமாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவேற்காடு:—இது வேல் ஸ்தலவிருக்ஷமாதலின் இப்பெயரெய்தியது. சுப்ரம்மண்யர் சூரஸம்ஹாராநந்தரம் பூசித்த க்ஷேத்ரமென்ப. அகஸ்தியர் உமாமகேசுவர விவாஹதரிசனம்செய்த க்ஷேத்ரங்களுள் ஒன்று. மூலஸ்தானத்து மூல லிங்கத்தின் பின்னர் உமாமஹேசுவரத்திருக்கோலம் எழுந்தருளச்செய்திருக்கிறது. வேளாளர்குலத்துத்திருவவதாரஞ்செய்து கும்பகோணத்துச் சென்று சூதாட்டத்தாற் பொருளீட்டி மாஹேசுவர பூசை செய்து பேறு பெற்ற மூர்க்கநாய

னார் திருவவதாரக்ஷேத்ரம். ஸ்வாமி-வேற்காட்டுநாதர், தேவியார்-வேற்கண்ணியம்மை, தீர்த்தம்-வேலாயுததீர்த்தம், விருக்ஷம்-வேல். இதற்குப்பதிகம்-1

இத்தலம் ஆவடி ஸ்டேஷனிலிருந்து பூவிருந்தவல்லி கற்சாலையில் தெற்கே நான்கு மைல் சென்று கிழக்கே திரும்பிக்காடுவெட்டியாற்றைக்கடந்தால் ஷை யாற்றின் தென் கரையில் உள்ளது.

# ௨௪· திருமயிலாப்பூர்

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-சீகாமரம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணாதேபோதியோபூம்பாவாய். 1

மைப்பயந்தவொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பயந்தநீற்றான்கபாலீச்சரமமர்ந்தான்
ஐப்பசியோணவிழாவுமருந்தவர்கள்
துய்ப்பனவுங்காணாதேபோதியோபூம்பாவாய். 2

உரிஞ்சாயவாழ்க்கையமணுடையைப்போர்க்கும்
இருஞ்சாக்கியர்களெடுத்துரைப்பநாட்டில்
கருஞ்சோலைசூழ்ந்தகபாலீச்சரமமர்ந்தான்
பெருஞ்சாந்திகாணாதேபோதியோபூம்பாவாய். 10

கானமர்சோலைக்கபாலீச்சரமமர்ந்தான்
தேனமர்பூம்பாவைப்பாட்டாகச்செந்தமிழான்
ஞானசம்பந்தனலம்புகழ்ந்தபத்தும்வல்லார்
வானசம்பந்தத்தவரோடும்வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருமயிலாப்பூர்:—இது மயிலாப்பு எனவும், திருமயிலை எனவும் கூறப்பெறும். உமாதேவியார் மயிலுருவாய்ப்பூசித்த காரணம்

பற்றி இப்பெயரெய்தியது. இவ்வைதிஷ்யம் வடக்குப்பிராகாரத்துப் புன்னை விருக்ஷத்தடியிற் காணத்தக்கது. ராமபிரான் பூசித்துப்பேறு பெற்று ஐப்பசி ஓணத்தில் பிரம்மோற்சவம் நடத்துவித்ததாகப் புராணம் கூறும். பிரம்மதேவராதியோரும் பூசித்துள்ளார். சிங்காரவேலர் சந்நிதி பிரசித்தம். இங்கு வாயிலார் நாயனுர் வேளாளர் குலத்துத் திருவவதாரஞ்செய்து மானத பூஜை செய்து பேறு பெற்றனர். இவர் சந்நிதி தெற்குப்பிராகாரத்து வடக்குமுகமாய் அமைந்துள்ளது. வைஸ்யகுலத்துதித்த சிவநேசர் தவஞ்செய்து தாம் பெற்றருளிய பூம்பாவையார் சர்ப்பம் தீண்டியிறந்தபோது அவர் திருஞானசம்பந்தப் பெருமானுக்குரியர் என எண்ணியிருந்தமையின் புத்ரியாரைத்தஹனஞ்செய்து என்பினையும் சாம்பரையும்சேமித்துச் சர்வோபசாரத்துடன் வைத்திருந்து ஞானசம்பந்தப்பெருமான் எழுந்தருளியபோது அவர்பால் விண்ணப்பிக்க நாயனுர் மட்டிட்ட புன்னையங்கானன் என்னும் திருப்பதிகம்பாடிச் சமணர்முதலியபுறச்சமயத்தாரும் கண்டு அதிசயிப்ப அவ்வென்பினைப் பூம்பாவையாராக எழுப்பியருளி அநுக்ரஹிக்கப்பெற்றனர். இவ்விபவஉத்சவம் பிரம்மோற்சவத்து எட்டாம் நாளில் நடைபெறும். நாயனுரும் பூம்பாவையாரும் கோபுரத் துவாரத்தின் வடபுறத்தில் எழுந்தருளியிருப்பது தரிசிக்கத்தக்கது. உத்தரவேதமாகிய திருக்குறள் பாடியருளிய திருவள்ளுவர் திருவவதார க்ஷேத்ரம். சந்நிதி மேற்குமுகம். ஸ்வாமி-காபாலீஸ்வரர், தேவியார்-கற்பகவல்லியார், விருக்ஷம்-புன்னை, தீர்த்தம்-கபாலிதீர்த்தம், இதற்குப்பதிகம்-1.

இத்தலம் சென்னைக்குத்தெற்கே கற்சாலையில் நான்கு மைலில் உள்ளது.

---

# உரு. திருவான்மியூர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கரையுலாங்கடலிற்பொலிசங்கம்வெள்ளிப்பிவன்
திரையுலாங்கழிமீனுகளுந் திருவான்மியூர்
உரையுலாம்பொருளாயுலகாளுடையீர்சொலீர்
வரையுலாமடமாதுடனுகியமாண்பதே. 1

சந்துயர்ந்தெழுகாரகிறண்புனல்கொண்டுதம்
சிந்தைசெய்தடியார்பரவுந்திருவான்மியூர்ச்

சுந்தரக்கழன் மேற்சிலம்பார்க்கவல்லீர்சொலீர்
அந்தியின் னொளியின்னிறமாக்கியவண்ணமே. 2

மாதொர்கூறுடைநற்றவனைத் திருவான்மியூர்
ஆதியெம்பெருமானருள்செய்தவினவுரை
ஓதியன்றெழுகாழியுண் ஞானசம்பந்தன்சொல்
நீதியானினைவார்நெடுவானுலகாள்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

பண்-கௌசிகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விரையார்கொன்றையினுய்விடமுண்டமிடற்றினனே
உரையார்பல்புகழாயுமைநங்கைபொர்பங்குடையாய்
திரையார்தெண்கடல்சூழ்திருவான்மியூருறையும்
அரையாவுன்னையல்லாலடையாதெனதாதரவே. 1

இடியாரேறுடையாயிமையோர்தம்மணிமுடியாய்
கொடியார்மாமதியோடரவம்மலர்க்கொன்றையினுய்
செடியார்மாதவிசூழ்திருவான்மியூருறையும்
அடிகேளுன்னையல்லாலடையாதெனதாதரவே. 2

கன்றுருங்கமுகின் வயல்சூழ்தருகாழிதனில்
நன்றுனபுகழான்மிகுஞானசம்பந்தனுரை
சென்றார்தம்மிடர்தீர்திருவான்மியூரதன்மேல்
குன்றதேத்தவல்லார்கொடுவல்வினைபோயறுமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனர்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விண்டமாமலர்கொண்டுவிரைந்துநீர்
அண்டநாயகன் றன்னடிசூழ்மின்கள்
பண்டுநீர்செய்தபாவம்பறைந்திடும்
வண்டுசேர்பொழில்வான்மியூரீசனே. 1

ஆதியும்மரனுயயன்மாலுமாய்ப்
பாதிபெண்ணுருவாயபரமனென்
றோதியுள்குழைந்தேத்தவல்லாரவர்
வாதைதீர்த்திடும்வான்மியூரீசனே. 8

ஒட்டைமாடத்திலொன்பதுவாசலும்
காட்டில்வேவதன்முன்னங்கழலடி
நாட்டிநாண்மலர்தூவிவலஞ்செயில்
வாட்டந்தீர்த்திடும்வான்மியூரீசனே. 9

பாரமாகமலையெடுத்தான்றனைச்
சீரமாகத்திருவிரலூன்றினன்
ஆர்வமாகவழைத்தவனேத்தலும்
வாரமாயினன்வான்மியூரீசனே. 10

திருச்சிற்றம்பலம்.

திருவான்மியூர்:—இது வான்மீக மஹருஷிக்கு அநுக்ரஹம் செய்து நடனஞ்செய்தருளிய க்ஷேத்ரமாதலின் இப்பெயரெய்தியது. தேவர்கள் அமுத மதனஞ்செய்து அவ்வமுதத்தால் சிவலிங்கப்பிரதிஷ்டைபண்ணிப் பூசித்தக்ஷேத்ரம். இதனால் ஸ்வாமி மருந்தீசரெனவும் பெறுவார். மூலலிங்கத்தின் திருவுருவம் பால் நிறமான ஸ்வயம்பு. இதுவும் மேற்குமுகமான சந்நிதி. ஸ்வாமி-பால்வண்ணநாதர், தேவியார்-சொக்கநாயகி, இதற்குப்பதிகம்-3.

இத்தலம் (24) திருமைலாப்பூரினின்றும் தென்கிழக்காய் கற்சாலையில் நான்கு மைலில் உள்ளது. சென்னையினின்று தெற்கே எட்டு மைல்.

## உசு. திருக்கச்சூராலக்கோயில்.

### சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-கொல்லிக்கௌவாணம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முதுவாயோரிகதறமுதுகாட்டெரிகொண்டாடன்முயல்வானே, மதுவார்கொன்றைப்புதுவீசூடுமலையான்மகடன்மணவாளா, கதுவாய்த்தலையிற்பலிநீகொள்ளக்கண்டாலடியார்கவலாரே, அதுவேயாமாறிதுவோகச்சூராலக்கோயிலம்மானே.

கச்சேரரவொன்றரையிலசைத்துக்கழலுஞ்சிலம்புங்கலிக்கப்பலிக்கென், றுச்சம்போதாவூரூர்திரியக்கண்டாலடியாருருகாரே, இச்சையறியோமெங்கள்பெருமானேயேழ்பிறப்புமெனையாள்வாய், அச்சமில்லாக்கச்சூர்வடபாலாலக்கோயிலம்மானே. 2

பொய்யேயுன்னைப்புகழ்வார்புகழ்ந்தாலதுவும் பொருளாக்கொள்வானே, மெய்யேயெங்கள்பெருமானுன்னைநினைவாரவரைநினைகண்டாய், மையார்தடங்கண்மடந்தைபங்கா கங்கார்மதியஞ்சடைவைத்த, ஐயாசெய்யாய்வெளியாய்கச்சூராலக்கோயிலம்மானே. 7

அன்னமன்னும்வயல்சூழ்கச்சூராலக்கோயிலம்மானை, உன்னமுன்னுமனத்தாரூரனாரூரன்பேர்முடிவைத்த, மன்னுபுலவன்வயனாவலர்கோன் செஞ்சொல்நாவன் வன்றொண்டன், பன்னுதமிழ்நூல்மாலைவல்லாரவரென்தலைமேற்பயில்வாரே.

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கச்சூராலக்கோயில்:—இது விஷ்ணுமூர்த்தி அமுதப்பிராப்தியின் பொருட்டு கச்சபமா (ஆமை) யிருந்து பூசித்த க்ஷேத்ரமாகையானும், ஸ்தலவிருக்ஷம் ஆல் ஆகையானும் இப்பெயரெய்தியதாகக்காண்கிறது. கச்சபவூர் கச்சூர் என மருவிற்று போலும். சுந்தரமூர்த்திநாயனார் திருக்கழுக்குன்றத்தினின்று இங்கெழுந்தருளி உச்சம்போதாகியும் பரிசனங்கள் வரத்தாழ்த்துப்பசியால் வருந்தியபோது பரமசிவன் பிராமணவடிவங்கொண்டு எழுந்தருளி பிராம்மணர் வீடுகடோறும் சோறு இரந்துவந்து இட்டு பசியாற்றி மறைந்தருள நாயனார் விம்மி மனங்குழைந்து பதிகம் பாடியருளினார். ஆலயத்திற்கு மேற்கே மலையடியில் மருந்து (அமுதம்) அளித்த மருந்தீசர் எழுந்தருளியிருக்கிறார். மலை மேல் சுந்தரமூர்த்திக்கு இரந்திட்ட ஈசர் வீற்றிருக்கின்றனர். தலஆலயத்தில் விருந்திட்டவிலிங்கம் தரிசிக்கத்தக்கது. தொண்டைநாட்டில் உள்ள தியாகராஜசந்நிதிகளுள் இதுவொன்று. ஸ்வாமி-விருந்திட்டநாதர், தேவியார்-உமையம்மை. தியாகர்-அமுதத்தியாகர் தீர்த்தம்-கூர்மதீர்த்தம், விருக்ஷம்-ஆல், இதற்குப்பதிகம்-1.

இத்தலம் சிங்கப்பெருமாள் கோவில் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே ஒரு மைலில் உள்ளது.

---

# உ௭. திருவிடைச்சுரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-குறிஞ்சி. க-ந் திருமுறை.

வரிவளரவிரொளியரவரைதாழவார்சடைமுடிமிசைவளர் மதிசூடிக், கரிவளர்தருகழல்கால்வலனேந்திக்கனலெரியா டுவர்காடரங்காக, விரிவளர்தருபொழிலிளமயிலாலவெண்ணி றத்தருவிகடிண்ணெனவீழும், எரிவளரினமணிபுனமணிசா ரலிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. 1

ஆற்றையுமேற்றதோரவிர்சடையுடையாழகினையருளு வர்குழகலதறியார், கூற்றுயிர்செகுப்பதோர்கொடுமையை யுடையர்நடுவிருளாடுவர்கொன்றையந்தாரார், சேற்றயல்மி ளிர்வனகயலிளவாளைசெருச்செயவோர்ப்பனசெம்முகமந்தி, ஏற்றையொடுழிதரு மெழிறிகழ்சாரலிடைச்சுர மேவியவிவர் வணமென்னே. 2

மடைச்சுரமறிவனவாளையுங்கயலுமருவியவயறனில்வரு புனற்காழிச், சடைச்சுரத்துறைவதோர்பிறையுடையண்ணல் சரிதைகள்பரவிநின் றுருகுசம்பந்தன், புடைச்சுரத்தருவரை ப்பூக்கமழ்சாரற்புணர்மடநடையவர்புடையிடையார்ந்த, இ டைச்சுரமேத்தியவிசையொடுபாடலிவைசொலவல்லவர்பிணி யிலர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவிடைச்சுரம்:—இது மலைகளின் இடையிலுள்ள சுற் சுரத்தில் அமைந்த காரணத்தால் இப்பெயரெய்தியது. சனத்குமார முனிவர் பூசித்தக்ஷேத்திரம். மூலலிங்கம் திவ்யதேஜோமயமாய் முன் னுள்ளயாவும் ஸ்வரூபத்தில் பிரதிபலிக்கக்கூடிய மரகதலிங்கம். ஞான சம்பந்தமூர்த்திகள் தூரத்தே எழுந்தருளும்போதே திருமேனிப்பொ லிவைக்கண்டு வியந்து "இடைச்சுரமேவிய விவர்வணமென்னே" என்று புகழ்ந்தோதியருளினர். ஸ்வாமி-இடைச்சுரநாதர், தேவியார்- இமயமடக்கொடி, இதற்குப்பதிகம்-1.

இத்தலம் செங்கல்பட்டு ஸ்டேஷனிலிருந்து திருக்கழுகுன்றம் கற்சாலையில் மூன்றுமைல் சென்று அங்கு நின்று வடக்கே திருப்போரூர் மட்சாலையில் இரண்டுமைலில் வடக்கே திரும்பி அரைமைலில் உள்ளது.

---

# உஅ. திருக்கழுக்குன்றம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

பண்-குறிஞ்சி க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையானொருகாதிற்றூயகுழைதாழ
ஏடுடையான்றலைகலனுகவிரந்துண்ணும்
நாடுடையானள்ளிருளேமநடமாடும்
காடுடையான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. 1

கேணவல்லான்கேழல்வெண்கொம்புகுறளாமை
பூணவல்லான்புரிசடைமேலொர்புனல்கொன்றை
பேணவல்லான்பெண்மகடன்னையொருபாகம்
காணவல்லான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. 2

கண்ணுதலான்காதல்செய்கோயில்கழுக்குன்றை
நண்ணியசீர்ஞானசம்பந்தன்றமிழ்மாலை
பண்ணியல்பாற்பாடியபத்துமிவைவல்லார்
புண்ணியராய்விண்ணவரோடும்புகுவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனர்.

திருத்தாண்டகம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மூவிலைவேற்கையானைமூர்த்திதன்னைமுதுபிணக்காடுடையானைமுதலானானை, ஆவினிலைந்துகந்தானையமரர்கோனையாலாலமுண்டுகந்தவையன்றன்னைப், பூவினின்மேனான்முகனுமாலும்போற்றப் புணர்வரிய பெருமானைப் புனிதன்றன்னைக், காவலனைக்கழுக்குன்றமமர்ந்தான்றன்னைக்கற்பகத்தைதக்கண்ணாரக்கண்டேனானே. 1

பல்லோடுதலைசடைமேலுடையான்றன்னைப் பாய்புலித்தோலுடையானைப்பகவன்றன்னைச், சொல்லோடுபொருளனைத்துமானான்றன்னைச் சுடருருவிலென்பராக்கோலத்தானை, அல்லாதகாலனை முன்னடர்த்தான்றன்னை யாலின்கீழிருந்தானையமுதானானைக், கல்லாடைபுனைந்தருளுங்காபாலியைக்கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டபாடை. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்தகொடுமையாற்பலசொல்லவே
நின்றபாவவினைகடாம்பலநீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடம்
கன்றினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. 1

இறங்கிச்சென்றுதொழுமினின்னிசைபாடியே
பிறங்குகொன்றைச்சடையனெங்கள்பிரானிடம்
நிறங்கள்செய்தமணிகணித்திலங்கொண்டிழி
கறங்குவெள்ளையருவித்தண்கழுக்குன்றமே. 2

பல்லில்வெள்ளைத்தலையன்றான்பயிலும்மிடம்
கல்லில்வெள்ளையருவித்தண்கழுக்குன்றினை
மல்லின்மல்குதிரடோளூரான்வனப்பினால்
சொல்லல்சொல்லித்தொழுவாரைத்தொழுமின்களே.

திருச்சிற்றம்பலம்.

---

**திருக்கழுக்குன்றம்:**—இது கழுக்கள் பூசிக்கும் மலையாதலின் இப்பெயரெய்தியது. வேதங்களே மலையுருவாய்ச் சுவாமியைத் தாங்கலின் வேதகிரி என்றுங் கூறப்பெறும். வடதேசத்தினர் பக்ஷிதீர்த்தமெனப் பிரஸித்தமாக வழங்குவர், பலகாரணங்களால் சாபமெய்திய சண்டன் பிரசண்டன் என்னும் கழுகுகள் முதல்யுகத்தும், சம்பாதி, ஜடாயு என்னும் கழுதுகள் இரண்டாம்யுகத்தும், சம்புகுத்தன், மாகுத்தன் என்னும்கழுகுகள் மூன்றாம்யுகத்தும், சம்பு ஆதி என்னும்

கழுகுகள் நான்காம் யுகத்தும் முறையே பூசியாநிற்கின்றார். இன்றும் பக்ஷிகள் தினமும்பூசித்து புஜித்துப்போதல் பிரத்யக்ஷமாகக் காணக்கூடியது. இவையன்றி நந்திதேவர், இந்திரன், கோடிருத்திரர் முதலியோரும் பூசித்துப்பேறுபெற்றனர். இந்திரன்பூசித்தது இப்போதும் துவாதசவருஷத்திற்கொருமுறை ஈரிடிவீழ்ந்து சுவாமிக்கு அபிஷேகமாதலாலும், கோடிருத்ரர்பூசித்தது சங்கதீர்த்தத்திற்குஆக்னேயதிசையில் ருத்தரகோடிஸ்தலம் (இதுவைப்புதலம்) உண்மையானும் அறியப்படுமாம். இங்கு ஸ்ரீமத் மாணிக்கவாசக மூர்த்திகள் தமக்கருளியவாறு சுவாமியைக் குருமூர்த்திவடிவமாகத் தரிசித்துத் திருக்கழுக்குன்றப் பதிகம்பாடியருளினார். தீர்த்தஸ்நானஞ்செய்து கிரியை நியமமாக வலம் வருவோர் ஸமஸ்தரோகங்களும் நிவர்த்தியாவது பிரத்யக்ஷம். கிரியே ஸ்தலம். அடிவாரத்தில் உள்ளது வேதபுரியாகுமென்க. சுவாமி-வேதகிரீஸ்வரர், தேவியார்-பெண்ணினல்லாளம்மை, தீர்த்தம்-சங்கதீர்த்தம். (இத்தீர்த்தத்தில் பன்னிரண்டுவருடத்திற் கொருமுறை வலம்புரிச்சங்கம் பிறக்கும்.) அடிவாரத்தில் சுவாமி-பக்தவத்ஸலர், தேவியார்-திரிபுரசுந்தரி. இதற்குப் பதிகம்-3.

இத்தலம் செங்கல்பட்டு ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே கற்சாலையில் 9-மைலில் உள்ளது.

---

## உகூ. திருவச்சிறுபாக்கம்.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொன்றிரண்டன்னபுரிசடைபுரளப்பொருகடற்பவளமொடழனிறம்புரையக், குன்றிரண்டன்னதோளுடையகலங்குலாயவெண்ணூலொடுகொழும்பொடியணிவர், மின்றிரண்டன்னநுண்ணிடையரிவைமெல்லியலாளையோர் பாகமாப்பேணி, அன்றிரண்டுருவமாயவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. 1

தேனினுமினியர்பாலனநீற்றர்தீங்கரும்பனையர்தந்திருவடிதொழுவார், ஊனயந்துருகவுவகைகடருவாருச்சிமேலுறைபவரொன்றலாதாரர். வானகமிறந்தவையகம்வணங்க

வயங்கொளநிற்பதோரவடிவினையுடையார், ஆனையினுரிவை
போர்த்தவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. 2

மைச்செறிகுவளைதவளைவாய்நிறைய மதுமலர்ப்பொய்
கையிற்புதுமலர்கிழியப், பச்சிறவெறிவயல்வெறிகமழ்காழிப்
பதியவரதிபதிகவுணியர்பெருமான், கைச்சிறுமறியவன்கழல
லாற்பேணாக்கருத்துடை ஞானசம்பந்தனதமிழ்கொண், டச்
சிறுபாக்கத்தடிகளையேத்துமன்புடையடியவரருவினையிலரே.

திருச்சிற்றம்பலம்

---

**திருவச்சிறுபாக்கம்:**—இது வண்டிகளது அச்சு இற்றகாரணத்தால் இப்பெயரெய்தியது. பாண்டியதேசத்தரசனொருவன் தன்னாட்டிலுள்ள தலப்பிரதிஷ்டையின் பொருட்டு கங்கை மணலாதிய வண்டியிலேற்றிக் கொணரும்போது அவை இத்தலத்தருகில் வந்து மேல் செல்லாது நின்றுவிடவும் ஊக்கிச்செலுத்த அச்சு முறிந்தனவென்றும் பின்னர் அவன் அசரீரியால் விஷயமறிந்து இங்கு திருப்பணி செய்தானென்றும் சரித்ரம் வழங்கும். வண்டிகள் நின்று அச்சு முறிந்தவிடம் வண்டிக்குப்பம் என இப்போதும் வழங்கப்பெறும். திரிபுரஸம்ஹாரகாலத்து பூமிரத அச்சிற்ற கதையும் கூறுவாருண்டு. இரண்டுமூலஸ்தானம் கண்ணுவர் கௌதமர் பூசித்ததென்ப. திருப்பதிகத்து முதற்றிருப்பாட்டினிறுதியில் இதுவே கூறப்பட்டதுபோலும். ஸ்வாமி-பாக்கபுரேசுரர், தேவியார்-சுந்தரநாயகி, தீர்த்தம்-தேவதீர்த்தம், விருக்ஷம்-கொன்றை இதற்குப்பதிகம் 1.

இத்தலம் அச்சிறுபாக்கம் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே அரைமைலில் உள்ளது.

---

## ௩௰. திருவக்கரை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-பஞ்சமம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கறையணிமாமிடற்றான்கரிகாடரங்காவுடையான்
பிறையணிகொன்றையினானொருபாகமும்பெண்ணமர்ந்தான்
மறையவன்றன்றலையிற்பலிகொள்பவன்வக்கரையில்
உறைபவனெங்கள்பிரானொலியார்கழலுள்குதுமே. 1

பாய்ந்தவன் காலனைமுன் பணைத்தோளியோர்பாகமதா
ஏய்ந்தவனெண்ணிறந்த விமையோர்கடொழு திறைஞ்ச
வாய்ந்தவன் முப்புரங்களெரிசெய்தவன்வக்கரையில்
தேய்ந்திளவெண்பிறைசேர்சடையானடிசெப்புதுமே. 2

தண்புனலும்மரவுஞ்சடைமேலுடையான்பிறைதோய்
வண்பொழில்சூழ்ந்தழகாரிறைவன்னுறைவக்கரையைச்
சண்பையர்தந்தலைவன்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனைபாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

**திருவக்கரை:**—இது வக்ராசுரன் பூசித்தகாரணத்தால் இப்பெயரெய்தியது. இவ்வசுரன் வாஸஸ்தலமென்பதற்குரிய பலகுறிகள் உற்றுநோக்கத்தக்கன. மூலலிங்கம் முகலிங்கம். பிரதமயுகத்திலிருந்து ஒவ்வொரு யுகமுடிவினும் ஒவ்வொரு முகமாய் மூன்று முகங்கள் தோன்றியுள்ளனவென்றும் நான்காவது முகம் இவ்யுகமுடிவில் தோன்ற உள்ளதென்றும் கூறுப. வக்ரனது ஹத்தியின் பொருட்டு காளி பூசித்ததாகவும் தெரிகிறது. காளியாலயம் பிரசித்த தனியாலயம். ஸ்வாமி பெயர் மூன்றாந்திருப்பாட்டிற் காண்க. ஸ்வாமி- சந்திரசேகரர், தேவியார் வடிவாம்பிகை. இதற்குப் பதிகம்-1.

இத்தலம் புதுச்சேரி ஸ்டேஷனிலிருந்து கற்சாலையில் 11 மைலில் வானூரையடைந்து மேற்கே திண்டிவனம் கற்சாலையில் 2 மைலில் உள்ளது. முண்டியம்பாக்கம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே ஒரு மைலில் புறவார்பனங்காட்டூரையும் அங்கிருந்து கிழக்கே எட்டுமைலில் கூனிச்சம் பட்டையும் அங்கிருந்து வடக்கே ஒரு மைலில் கொடுக்கூரையுங் கடந்து அரைமைலில் உள்ளது. புதுச்சேரிப் பாதையில் இடையில் (1) திருவரசிலியும் (32) திருவிரும்பைமாகாளமும் உள்ளன.

---

## ௫௧. திருவரசிலி.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பியந்தைக்காந்தாரம் ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாடல்வண்டறைகொன்றைபான்மதிபாய்புனற்கங்கை
கோடல்கூவிளமாலைமத்தமுஞ்செஞ்சடைக்குலாவி

வாடல்வெண்டலைமாலைமருவிடவல்லியந்தோண்மேல்
ஆடன்மாசுணமசைத்தவடிகளுக்கிடமரசிலியே. 1

ஏறுபேணியதேறியிளமதக்களிற்றினையெற்றி
வேறுசெய்ததனுரிவைவெண்புலால்கலக்கமெய்போர்த்த[ராம்
ஊறுதேனவனும்பர்க்கொருவனல்லொளிகொளொண்சுட
ஆறுசேர்தருசென்னியடிகளுக்கிடமரசிலியே. 2

அல்லிநீள்வயல்சூழ்ந்தவரசிலியடிகளைக்காழி
நல்லஞானசம்பந்தனற்றமிழ்பத்திவைநாளும்
சொல்லவல்லவர்தம்மைச்சூழ்ந்தமரர்தொழுதேத்த
வல்லவானுலகெய்திவைகலுமகிழ்ந்திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவரசிலி:—இது இங்கு அரசை (அச்வத்தம்) இறைவன் இல்லாக உடைமையின் இப்பெயரெய்தியது. இத்தலம்தற்காலம் ஒழுந்தியாப்பட்டு என்று வழங்கப்பெறும். வாமதேவ முனிவர்பூசித்து வழிபட்டது. ஸ்வாமி-அரசிலிநாதர், தேவியார்-பெரியநாயகி, தீர்த்தம்-அரசடிதீர்த்தம், விருக்ஷம்-அரசு, இதற்குப்பதிகம்-1.

இத்தலம் புதுச்சேரி ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மட்சாலையில் 5 மைலில் (32) திருவிரும்பை மாகாளத்தையடைந்து அங்கு நின்றும் வடமேற்கே மட்சாலையில் இரண்டுமைலில் உள்ளது.

---

## ௩௨ திருவிரும்பைமாகாளம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-செவ்வழி .உ-ந். திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மண்டுகங்கைசடையிற்கரந்தும்மதிசூடிமான்
கொண்டகையாற்புரமூன்றெரித்தகுழகன்னிடம்
எண்டிசையும்புகழ்போய்விளங்குமிரும்பைதனுள்
வண்டுகீதம்முரல்பொழில்சூலாய்நின்றமாகாளமே. 1

வேதவித்தாயவெள்ளைநீறுபூசிவினையாயின
கோதுவித்தாயநீறெழக்கொடிமாமதிலாயின

ஏதவித்தாயினதீர்க்குமிடம்மிரும்பைதனுள்
மாதவத்தோர்மறையோர்தொழநின்றமாகாளமே. 2

எந்தைபெம்மானிடமெழில்கொள்சோலையிரும்பைதனுள்
மந்தமாயபொழில்சூழ்ந்தழகாருமாகாளத்தில்
அந்தமில்லாவனலாடுவானையணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்பாடவல்லார்பழிபோகுமே. 11

திருச்சிற்றம்பலம்.

திருவிரும்பைமாகாளம்:—இது இரும்பையிலுள்ளமாகாளம் என்று பொருள் படும். மகா காளர் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-மாகாளேஸ்வரர், தேவியார்-குயின்மொழிநாயகி. இதற்குப்பதிகம்-1

இத்தலத்துக்குப்பாதை (31) திருவரசிலிக்குச்சொல்லியிருப்பதைக்காண்க.

தொண்டைநாடு 32-ம் முற்றின.

## துளுவ நாடு.

## க திருக்கோகரணம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-சாதாரி. ௩-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

என்றுமரியானயலவர்க்கியலிசைப்பொருள்களாகியெனதுள்
நன்றுமொளியாகியொளிசிறந்தபொன்முடிக்கடவுணண்ணுமிடமாம்
ஒன்றியமனத்தடியர்கூடியிமையோர்பரவுநீடரவமார்
குன்றுகணெருங்கிவிரிதண்டலைமிடைந்துவளர்கோகரணமே.

பேதைமடமங்கையொருபங்கிடமிகுத்திடபமேறியமரர்
வாதைபடவண்கடலெழுந்தவிடமுண்டசிவன்வாழுமிடமாம்
மாதரொடுமாடவர்கள்வந்தடியிறைஞ்சிநிறைமாமலர்கடூய்க்
கோதைவரிவண்டிசைகொள்கீதமுரல்கின்றவளர்கோகரணமே.

கோடலரவீனும்விரிசாரன்முனெருங்கிவளர்கோகரணமே
ஈடமினிதாகவுறைவானடிகள்பேணியணிகாழிநகரான் [ஞா

நாடியதமிழ்க்கிளவியின்னிசைசெய்ஞானசம்பந்தன்மொழிகள்
பாடவலபத்தரவரெத்திசையுமாள்வர்பரலோகமெளிதே. 11

திருச்சிற்றம்பலம்.

---

### திருநாவுக்கரசுநாயனர்.

திருத்தாண்டகம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சந்திரனுந்தண்புனலுஞ்சந்தித்தான்காண்டாழ்சடையான்காண்சார்ந்தார்க்கமுதானான்காண், அந்தரத்திலசுரர்புரமூன்றட்டான்காணவ்வுருவிலவ்வுருவமாயினான்காண், பந்தாத்துநான்மறைகள் பாடினான்காண் பலபலவும்பாணி பயில்கின்றான்காண், மந்திரத்துமறைபொருளுமாயினான்காண்மாகடல்சூழ்கோகரணமன்னினானே. 1

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கோகரணம்:—இது இராவணேஸ்வரன் இலங்கையில் பிரதிஷ்டிக்கும்படி பரமசிவன்பால் பெற்றுக்கொணர்ந்தவிலிங்கத்தை தேவர்வேண்டுகோளின்படிவிநாயக மூர்த்திதாம்வாங்கிக்கீழேவைத்து பிரதிஷ்டை செய்து விடவும் இராவணன் தன்னாற் கூடியவரை அவ்விலிங்கத்தைப்பெயர்த்துஎடுக்க இழுத்தபோது அதுபசுவின்காது (கோ-கர்ணம்) போற்குழைந்தமையின் இப்பெயரெய்தியது. ஸ்வாமியும் இராவணன் தன்னால் பெயர்க்கமுடியாமை கண்டு வியந்தமையின் மஹாபலநாதர்ஆயினர். ஸ்வாமி மஹாபலேசுரர், தேவியார்- கோகரணநாயகி. இதற்குப் பதிகம். 2

இத்தலம் சென்னையிலிருந்து அரக்கோணம், ரேணுகுண்டா, குண்டக்கல், கடக், ஹூப்ளி ஜங், ஸ்டேஷன்களின்வழியாய் லோண்டாவுக்குப்போய் அங்கு நின்று புனு ரயில்மார்க்கத்திலுள்ள வாத்தார் ஸ்டேஷனிலிருந்து மேற்கே 32 மைலில் கடற்கரையில் உள்ளது.

---

## வடநாடு.

# க திருப்பருப்பதம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-வியாழக்குறிஞ்சி க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சுடுமணியுமிழ்நாகஞ்சூழ்தரவரைக்கசைத்தான்
இடுமணியெழிலானையேறலனெருதேறி

விடமணிமிடறுடையான்மேவியநெடுங்கோட்டுப்
படுமணிவிடுசுடரார்பருப்பதம்பரவுதுமே. 1

நோய்புல்குதோறிரையநரைவருநரைகருடம்பில்
நீபுல்குதோற்றமெல்லாநினையுள்குமடநெஞ்சே
வாய்புல்குதோத்திரத்தால்வலஞ்செய்துதலைவணங்கிப்
பாய்புலித்தோலுடையான்பருப்பதம்பரவுதுமே. 2

வெண்செநெல்விளைகழனிவிழவொலிகழுமலத்தான்
பண்செலப்பலபாடலிசைமுரல்பருப்பதத்தை
நன்சொலினற்பாவுஞானசம்பந்தனல்ல
ஒண்சொலினிவைமாலையுருவெணத்தவமாமே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார்

### திருநேரிசை. சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

கன்றினார்புரங்கள்மூன்றுங் கனலெரியாகச்சீறி
நின்றதோருருவந்தன்னனீர்மையுநிறையுங்கொண்டு
ஒன்றியாங்குமையுந்தாமுமூர்பலிதேர்ந்துபின்னும்
பன்றிப்பின்வேடராகிப்பருப்பதநோக்கினாரே. 1

அங்கண்மாலுடையராயவைவராலாட்டுணாதே
உங்கண்மாறீரவேண்டிலுள்ளத்தாலுள்கியேத்தும்
செங்கண்மால்பரவியேத்திச்சிவனெனநின்றசெல்வர்
பைங்கண்வெள்ளேறதேறிப்பருப்பதநோக்கினாரே. 9

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திநாயனார்.

### பண்-நட்டபாடை. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மானுமரையினமுமயிலினமுங்கலந்தெங்கும்
தாமேமிகமேய்ந்துதடஞ்சுனைநீர்களைப்பருகிப்
பூமாமுரிஞ்சிப்பொழிலூடேசென்றுபுக்குத்
தேமாம்பொழினீழற்றுயில்சீபர்ப்பதமலையே. 1

மலைச்சாரலும்பொழிற்சாரலும்புறமேவருமினங்கள்
மலைப்பாற்கொணர்ந்திடித்தூட்டிடமலங்கித்தனகளிற்றை
அழைத்தோடியும்பிளிறீயவையலமந்துவந்தெய்த்துத்
திசைத்தோடித்தன்பிடிதேடிடுஞ்சீபர்ப்பதமலையே. 2

நல்லாரவர்பலர்வாழ்தருவயனாவலவூரன்
செல்லலுறவரியசிவன்சீபர்ப்பதமலையை
அல்லலவைதீரச்சொனதமிழ்மாலைகள்வல்லார்
ஒல்லைசெலவுயர்வானகமாண்டங்கிருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பருப்பதம்:— இது ஸ்ரீ பர்வதம் என்றும் ஸ்ரீசைலம் என்றும் மல்லிகார்ச்சுனம் என்றுங்கூறப்பெறும். சிலாதபுத்திரராகிய திருநந்திதேவர் ஸ்வாமியை வஹிக்கும்பொருட்டு மலையுரு வெய்திய தலமெனக் கந்தபுராணம் கூறும். இதன் மஹிமை அளவிறந்தது. இதனைச் சிவரஹஸ்யம் விதந்து பேசும். விவரணத்துக்கு இப்போது பதிப்பிக்கப் பெற்றுவருகிற சிவரஹஸ்ய மஹேதிஹாஸம் பார்க்கத்தக்கது. இத்தலத்துக்குச் செல்லும் அருமை செல்லலுற வரிய சிவன் சீபர்ப்பதமலை எனத்தேவாரங் கூறுதல்காண்க. ஸ்வாமி பருப்பதநாயகர், தேவியார்- பருப்பதநாயகி, இதற்குப் பதிகம். 3

இத்தலம் கர்னூல் ஜில்லாவைச் சேர்ந்தநந்தியால் ஸ்டேஷனி விருந்து·வடகிழக்கே 60 மைலில் உள்ளது. சுமார் 40 மைல் பர்வதாரோஹணமாயிருக்கும்.

---

## உ. திருவிந்திரநீலப்பருப்பதம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

குலவுபாரிடம்போற்றவீற்றிருந்
திலகுமாமழுவேந்துமங்கையன்
நிலவுமிந்திரநீலப்பர்ப்பதத்
துலவினானடியுள்கநல்குமே. 1

குறைவிலார்மதிசூடியாடல்வண்
டறையுமாமலர்க்கொன்றைசென்னிசேர்

இறைவனிந்திரநீலபர்ப்பதத்
துறைவினன் றனேயோதியும்மினே. 2

கந்தமார்பொழில்சூழ்ந்தகாழியான்
இந்திரன்றொழுநீலபர்ப்பதத்
தந்தமில்லியையேத்துஞானசம்
பந்தன்பாடல்கொண்டோதிவாழ்மினே. 11

திருச்சிற்றம்பலம்.

---

திருவிந்திரநீலப்பருப்பதம்:—இது இந்திரனல் பூசிக்கப்பெற்ற காரணத்தால் இப்பெயரெய்தியது. எப்போதும்மேகங்களினல் கவிந்து நீல நிறமான தோற்ற முடைமையின் நீலபருப்பத மாயிற்று போலும். இந்திரன் பூசித்த தென்பது திருப்பதிகத் திருக்கடைக்காப்பில்காணத்தக்கது. ஸ்வாமி-நீலாசலநாதர், தேவியார்-நீலாம்பிகை, இதற்குப்பதிகம்-1.

இத்தலத்துக்குச்சரியானபாதை அறியப்படவில்லை.

---

# ந திருவனேகதங்காவதம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-இந்தளம் .உ-ந். திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீடன்மேவுநிமிர்புன்சடைமேலொர்நிலாமுளை
சூடன்மேவுமறையின்முறையாலொர்சுலாவழல்
ஆடன்மேவுமவர்மேயவனேகதங்காவதம்
பாடன்மேவுமனத்தார்வினைபற்றறுப்பார்களே.

சூலமுண்டுமழுவுண்டவர்தொல்படைசூழ்கடல்
ஆலமுண்டபெருமான்றனனேகதங்காவதம்
நீலமுண்டதடங்கண்ணுமைபாகநிலாயதோர்
கோலமுண்டளவில்லைகுலாவியகொள்கையே. 2

தொல்லையூழிப்பெயர்தோன்றியதோணிபுரத்திறை
நல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லார்கண்முன்

அல்லறீரவுரைசெய்தவனேகதங்காவதம்
சொல்லன்ல்லவடையும்மடையாசுடுதுன்பமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

**திருவனேகதங்காவதம்:**—இது அம்பிகையார் கௌரித் திருநாமத்தோடு தவஞ்செய்தக்ஷேத்ரமாதலின் கௌரீகுண்டம் என்று கூறப்பெறும். இருசுடராகிய சூரிய சந்திரர் பூசித்ததெனவும் தெரிகிறது. ஸ்வாமி—அநேகதங்காவதநாதர், தேவியார்-மனேன்மணியம்மை, இதற்குப்பதிகம்-1

இத்தலம் உருத்திரப்ரயாகையிலிருந்து அகஸ்தியமுனி, குப்தகாசி பாடாசட்டி. த்ரியுகிநாராயணம், சூரணப்ரயாகம் முதலியவற்றைக்கடந்து அடையத்தக்கது.

---

# ௪. திருக்கேதாரம்

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-செவ்வழி. உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டரஞ்சுகளிறுமடக்கிச்சுரும்பார்மலர்
இண்டைகட்டிவழிபாடுசெய்யுமிடமென்பரால்
வண்டுபாடமயிலாலமான்கன்றுதுள்ளவரிக்
கெண்டைபாயச்சுனைநீலமொட்டலருங்கேதாரமே. 1

பாதம்விண்ணேர்பலரும்பரவிப்பணிந்தேத்தவே
வேதநான்கும்பதினெட்டொடாறும்விரித்தார்க்கிடம்
தாதுவிண்டமதுவுண்டுமிண்டிம்வருவண்டினம்
கீதம்பாடமடமந்திகேட்டுகளுங்கேதாரமே. 2

வாய்ந்தசெந்நெல்விளைகழனிமல்கும்வயற்காழியான்
ஏய்ந்தநீர்க்கோட்டிமையோருறைகின்றகேதாரத்தை
ஆய்ந்துசொன்னவருந்தமிழ்கள்பத்தும்மிசைவல்லவர்
வேந்தராகியுலகாண்டுவீடுகதிபெறுவரே. 11

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டபாடை, எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வாழ்வாவதுமாயம்மிதுமண்ணாவதுதிண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்பசிநோய்செய்தபறிதான்
தாழாதறஞ்செய்ம்மின்றடங்கண்ணான்மலரோனும்
கீழ்மேலுறநின்றான்றிருக்கேதாரமெனீரே. 1

பறியேசுமந்துழல்வீர்பறிநரிகீறுவதறியீர்
குறிகூவியகூற்றங்கொளுநாளாலறமுளவே
அறிவானிலுமறிவானலநறுநீரொடுசோறு
கிறிபேசிநின்றிடுவார்தொழுகேதாரமெனீரே. 2

உழக்கேயுண்டுபடைத்தீட்டிவைத்திழப்பார்களுஞ்சிலர்கள்
வழக்கேயெனிற்பிழைக்கேமென்பர்மதிமாந்தியமாந்தர்
சழக்கேபறிநிறைப்பாரொடுதவமாவதுசெயன்மின்
கிழக்கேசலமிடுவார்தொழுகேதாரமெனீரே. 4

நாவின்மிசையரையன்னொடுதமிழ்ஞானசம்பந்தன்
யாவர்சிவனடியார்களுக்கடியானடித்தொண்டன்
தேவன் திருக்கேதாரத்தையூரன்னுரைசெய்த
பாவின்றமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கேதாரம்:—இது தம்மை வழிபடயோசித்த பிருங்கி முனிவரின் பொருட்டுத் தேவியார் பரமசிவனைப்பூசித்து இடப்பாகம் பெற்றக்ஷேத்ரம். அம்பிகை யனுஷ்டித்த கேதார கௌரீவிரதம் மிக்க பிரஸித்தியுற்றது. ஆறுமாதம் தேவர்களாலும் ஆறுமாதம் மானுடராலும் பூசிக்கப்பெறும் ஸ்தலம். தேவர் பூஜை என்று சொல்லப்பெறும் காலம் (ஐப்பசி பூரணை) ஸமீபித்தவுடன் பூஜகர் சுவாமிக்கு வெண்ணெய்க்காப்பிட்டுக் கீழே இறங்கி வந்துவிடுவார். இவ்வாறுமாதகாலமும் ஸ்தலம் ஹிமத்தால் மூடப்பட்டிருக்கும். இத்தல மஹிமாவிசேஷத்தின் பொருட்டு சிவரஹசிய மஹேதிஹாஸம் பார்க்கத் தக்கது. சுவாமி கேதாரநாதர், தேவியார்-கேதாரகௌரியம்மை, இதற்குப் பதிகம்-2.

இத்தலம் கௌரீகுண்டத்திலிருந்து பீமதண்டா, ராமபாடா முதலியவற்றின் மார்க்கமாய்ப் போகவேண்டும். ஹரித்வாரத்திலிருந்து 200 மைலில் ஹிமய மலையில் உள்ளது.

## ரு. திருநொடித்தான்மலை.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கேசி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொடிகொளுருவர்புலியினதளர்புரிநூறிகழ்மார்பில்
கடிகொள்கொன்றைகலந்தநீற்றர்கறைசேர்கண்டத்தர்
இடியகுரலாலிரியுமடங்கலொடங்குமுழைச்சாரல்
கடியவிடைமேற்கொடியொன்றுடையார்கயிலைமலையாரே. 1

புரிகொள்சடையரடியர்க்கெளியார்கிளிசேர்மொழிமங்கை
தெரியவுருவில்வைத்துகந்ததேவர்பெருமானார்
பரியகளிற்றையரவுவிழுங்கிமழுங்கவிருள்கூர்ந்த
கரியமிடற்றர்செய்யமேனிக்கயிலைமலையாரே.

போரார்கடலிற்புனல்சூழ்காழிப்புகழார்சம்பந்தன்
காரார்மேகங்குடிகொள்சாரற்கயிலைமலையார்மேல்
தேராவுரைத்தசெஞ்சொன்மாலைசெப்புமடியார்மேல்
வாராபிணிகள்வானோருலகின்மருவுமனத்தாரே. 11

திருச்சிற்றம்பலம்

### திருநாவுக்கரசுநாயனார்.

போற்றித்திருத்தாண்டகம். சூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வேற்றாகிவிண்ணாகிநின்றாய்போற்றிமீளாமேயாளென்னைக்கொண்டாய்போற்றி, ஊற்றாகியுள்ளேயொளித்தாய்போற்றியோவாதசத்தத்தொலியேபோற்றி, ஆற்றாகியங்கேயமர்ந்தாய்போற்றியாறங்கநால்வேதமானாய்போற்றி, காற்றாகியெங்குங்கலந்தாய்போற்றிகயிலைமலையானேபோற்றிபோற்றி. 1

பண்ணினிசையாகிநின்றாய்போற்றிபாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி, எண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்

றியென்சிந்தைநீங்கா விறைவாபோற்றி, விண்ணுநிலனுந்தீயா
னாய்போற்றிமேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி, கண்ணின்
மணியாகிநின்றாய்போற்றிகயிலைமலையானேபோற்றிபோற்றி.

உண்ணாதுறங்காதிருந்தாய்போற்றியோதாதேவேதமுணர்ந்தாய்போற்றி, எண்ணாவிலங்கைக்கோன்றன்னைப்போற்றி யிறைவிரலால்வைத்துகந்தவீசாபோற்றி, பண்ணாரிசையின் சொற்கேட்டாய்போற்றி பண்டேயென்சிந்தைபுகுந்தாய்போற்றி, கண்ணாயுலகுக்குநின்றாய்போற்றிகயிலைமலையானேபோற்றிபோற்றி. 11

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-பஞ்சமம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தானெனைமுன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே
நானெனபாடலந்தோநாயினேனைப்பொருட்படுத்து
வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து
வூனுயிர்வேறுசெய்தானொடித்தான்மலையுத்தமனே. 1

ஆனையுரித்தபகையடியேனொடுமீளக்கொலோ
வூனையுயிர்வெருட்டியொள்ளியானைநினைந்திருந்தேன்
வானைமதித்தமரர்வலஞ்செய்தெனையேறவைக்க
ஆனையருள்புரிந்தானொடித்தான்மலையுத்தமனே. 2

மந்திரமொன்றறியேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்
சுந்தரவேடங்களாற்றுரிசேசெயுந்தொண்டனெனை
அந்தரமால்விசும்பிலழகானையருள்புரிந்த
துந்தரமோநெஞ்சமேநொடித்தான்மலையுத்தமனே. 3

இந்திரன்மால்பிரமனெழிலார்மிகுதேவரெல்லாம்
வந்தெதிர்கொள்ளவென்னைமத்தயானையருள்புரிந்து
மந்திரமாமுனிவரிவனாரெனவெம்பெருமான்
நந்தமரூரனென்றானொடித்தான்மலையுத்தமனே. 9

ஊழிதோறூழிமுற்றுமுயர்பொன்னொடித்தான்மலையைச்
சூழிசையின் கரும்பின் சுவைநாவலவூரன்சொன்ன
ஏழிசையின் றமிழால் விசைந்தேத்தியபத்தினையும்
ஆழிகடலரையா அஞ்சையப்பர்க்கறிவிப்பதே. 10

திருச்சிற்றம்பலம்.

---

ஸ்ரீகயிலாயம்:—இது திருநொடித்தான்மலை என்றுங் கூறப்பெறும். சங்காரகருத்தாவாகிய உருத்திரமூர்த்தி வீற்றிருத்தலின் இவ்வாறு கூறப்பெறுமென்க. நொடித்தல், சங்கரித்தல். இங்கு கூறப்பெற்றதுபூகயிலாயமாம். தேவாதியருஞ்சென்றுசேர்தற்கரியது. இதற்கு யாத்திரை செய்த வாகீசுவரமூர்த்திகளையும் வடக்கேயுள்ள ஓர்தீர்த்தத்தில்மூழ்கி திருவையாற்றிலேயுள்ள ஓர் வாவியிற்றோற்றச் செய்து ஸ்ரீகயிலாயதரிசனஞ்செய்வித்தனரென்பது உணரத்தக்கது. ஸ்ரீசுந்தரமூர்த்திகளும்சேரமான்பெருமாணாயனாரும்களையாதவுடலோடு எழுந்தருளிக் கணங்களோடும் வீற்றிருந்தா ரென்பதும் சேரர்பெருமான் இங்குஸ்வாமிசந்நிதானத்தில் திருவுலாவரங்கேற்றியருளினரென்பதும் திருத்தொண்டர்புராணத்துக்காண்க. ஞானசம்பந்தப்பெருமான் இதனை ஸ்ரீகாளத்தியினின்றும் பாடியருளின ரென்க. ஸ்வாமி பரமசிவன், தேவியார்-பார்வதியம்மை, இதற்குப்பதிகம்-7

இத்தலம் வடநாட்டில் பனிவரையிலுள்ளது,

வடநாட்டுத்தலங்களைந்தும் முற்றின.

---

# பொதுப் பதிகங்கள்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

### திருநீலகண்டம்.

பண்-வியாழக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமஃதறிவீர்
உய்வினைநாடாதிருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தெம்பிரான்கழல்போற்றுதுநாமடியோம்
செய்வினைவந்தெமைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம். 1

காவினையிட்டுங்குளம்பலதொட்டுங்கனிமனத்தால்
ஏவினையாலெயின்மூன்றெரித்தீரென்றிருபொழுதும்

பூவிணைக்கொய்துமலரடி போற்றுதுநாமடியோம்
தீவினைவந்தெமைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம் 2

விண்ணுலகாள்கின்றவிச்சாதரர்களும்வேதியரும்
புண்ணியரென்றிருபோதுந்தொழப்படும்புண்ணியரே
கண்ணிமையாதனமூன்றுடையீருங்கழலடைந்தோம்
திண்ணியதீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். 4

பிறந்தபிறவியிற்பேணியெஞ்செல்வன்கழலடைவான்
இறந்தபிறவியுண்டாகிலிமையவர்கோனடிக்கண்
திறம்பயில்ஞானசம்பந்தனசெந்தமிழ்பத்தும்வல்லார்
நிறைந்தவுலகினில்வானவர்கோனொடுங்கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## கோளறுதிருப்பதிகம்.

பண்-பியந்தைக்காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீணை தடவி, மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெனுளமேபுகுந் தவதனால், ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளி சனிபாம்பிரண்டுமுடனே, ஆசறுநல்லநல்லவவைநல்லநல்லவ டியாரவர்க்குமிகவே. 1

என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்கவெருதே றியேழையுடனே, பொன்பொதிமத்தமாலைபுனல்சூடிவந்தெ னுளமேபுகுந்தவதனால், ஒன்பதொடொன்றொடேழுபதினெ ட்டொடாறுமுடனாயநாள்களவைதாம், அன்பொடுநல்லநல்ல வவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. 2

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னிவளர் செம்பொனெங்குநிகழ, நான்முகனாதியாயபிரமாபுரத்தும றைஞானஞானமுனிவன், தானுறுகோளுநாளுமடியாரைவந் துநலியாதவண்ணமுரைசெய்,ஆனசொன்மாலையோதுமடியா ர்கள்வானிலரசாள்வராணைநமதே. 11

திருச்சிற்றம்பலம்.

## பஞ்சாக்கரத் திருப்பதிகம்.

பண்-காந்தாரபஞ்சமம் ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந்துஞ்சலிலாதபோழ்தினும்
நெஞ்சகநைந்துநினைமினாடொறும்
வஞ்சகமற்றடிவாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே. 1

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே. 2

புத்தர்சமண்கழுக்கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்கடெளிந்துதேறின
வித்தகநீறணிவார்வினைப்பகைக்
கத்திரமாவனவஞ்செழுத்துமே. 10

நற்றமிழ்ஞானசம்பந்தனன்மறை
கற்றவன்காழியர்மன்னனுன்னிய
அற்றமின்மாலையீரைந்துமஞ்செழுத்
துற்றனவல்லவரும்பராவரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## நமச்சிவாயத் திருப்பதிகம்.

பண்-கௌசிகம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி
ஓதுவார்தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினுமெய்ப்பொருளாவது
நாதனாமநமச்சிவாயவே. 1

நம்புவார்நமர்நாவினவிற்றினால்
வம்புநாண்மலர்வார்மதுவொப்பது
செம்பொனார்திலகம்முலகுக்கெலாம்
நம்பனாமநமச்சிவாயவே. 2

நரகமேழ்புகநாடினராயினும்
உரைசெய்வாயினராயினுருத்திரர்
விரவியேபுகுவித்திடுமென்பரால்
வாதனுமநமச்சிவாயவே. 7

நந்திநாமநமச்சிவாயவெனும்
சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொல்
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெலாம்
பந்தபாசமறுக்கவல்லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

## திருப்பாசுரம்.

பண் - கௌசிகம். ௩-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே. 1

ஆட்பாலவர்க்கருளும்வண்ணமுமாதிமாண்பும்
கேட்பான்புகிலளவில்லைகிளக்கவேண்டா
கோட்பாலனவும்வினையுங்குறுகாமையெந்தை
தாட்பால்வணங்கித்தலைநின்றிவைகேட்கதக்கார். 4

நல்லார்கள்சேர்புகலிஞானசம்பந்தனல்ல
எல்லார்களும்பரவுமீசனையேத்துபாடல்
பல்லார்களும்மதிக்கப்பாசுரஞ்சொன்னபத்தும்
வல்லார்கள்வானோருலகாளவும்வல்லரன்றே. 12

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுநாயனார்.

### திருவங்கமாலை.

பண் சாதாரி. ௪-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

தலையேநீவணங்காய்-தலை
மாலைதலைக்கணிந்து

தலையாலேபலிதேருந்தலைவனைத்
தலையேநீவணங்காய். 1

கண்காள்காண்மின்களோ-கடல்
நஞ்சுண்டகண்டன்றன்னை
எண்டோள்வீசிநின்றாடும்பிரான்றன்னைக்
கண்காள்காண்மின்களோ. 2

செவிகாள்கேண்மின்களோ-சிவன்
எம்மிறைசெம்பவள
எரிபோன்மேனிப்பிரான்றிறமெப்போதும்
செவிகாள்கேண்மின்களோ. 3

மூக்கேநீமுரலாய்-முது
காடுறைமுக்கணனை
வாக்கேநோக்கியமங்கைமணாளனை
மூக்கேநீமுரலாய். 4

வாயேவாழ்த்துகண்டாய்-மத
யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றன்னை
வாயேவாழ்த்துகண்டாய். 5

நெஞ்சேநீநினையாய்-நிமிர்
புன்சடைநின்மலனை
மஞ்சாடும்மலைமங்கைமணாளனை
நெஞ்சேநீநினையாய். 6

கைகாள்கூப்பித்தொழீர்-கடி
மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரையார்த்தபரமனைக்
கைகாள்கூப்பித்தொழீர். 7

ஆக்கையாற்பயனென்-னரன்
கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ்
ஆக்கையாற்பயனென். 8

கால்களாற் பயனென் - கறைக்
கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்களாற் பயனென். 9

உற்றாராருளரோ - வுயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத் துறை கூத்தனல்லா னமக்
குற்றாராருளரோ. 10

இருமாந்திருப்பன் கொலோ - வீசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிருமாந்திருப்பன் கொலோ. 11

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன். 12

திருச்சிற்றம்பலம்.

## நமச்சிவாயத் திருப்பதிகம்.

பண்-காந்தாரபஞ்சமம். ச-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே. 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக் கருங்கல நமச்சிவாயவே. 2

இல்லக விளக்கது விருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது

பல்லகவிளக்கது பலருங்காண்பது
நல்லகவிளக்கது நமச்சிவாயவே. 8

மாப்பிணைதழுவியமாதொர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## பாவநாசத் திருப்பதிகம்.

பண்-பழம்பஞ்சுரம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பற்றற்றார்சேர்பழம்பதியைப்பாசூர்நிலாயபவளத்தைச்
சிற்றம்பலத்தெந்திகழ்கனியைத்தீண்டற்கரிய திருவுருவை
வெற்றியூரில்விரிசுடரைவிமலர்கோனைத்திரைசூழ்ந்த
ஒற்றியூரெமுத்தமனையுள்ளத்துள்ளேவைத்தேனே. 1

ஆனைக்காவிலணங்கினையாரூர்நிலாயவம்மானைக்
கானப்பேரூர்க்கட்டியைக்கானூர்முளைத்தகரும்பினை
வானப்பேரார்வந்தேத்தும்வாய்மூர்வாழும்வலம்புரியை
மானக்கயிலைமழகளிற்றைமதியைச்சுடரைமறவேனே. 2

முந்தித்தானேமுளைத்தானைமூரிவெள்ளேறூர்ந்தானை
அந்திச்செவ்வான்படியானையரக்கனாற்றலழித்தானைச்
சிந்தைவெள்ளப்புனலாட்டிச்செஞ்சொன்மாலையடிசேர்த்தி
எந்தைபெம்மானென்னெம்மானென்பார்பாவநாசமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

---

## விடந்தீர்த்த திருப்பதிகம்.

பண்-இந்தளம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுகொலாமவர்சிந்தையுயர்வரை
ஒன்றுகொலாமுயரும்மதிசூடுவர்

ஒன்றுகொலாமிடுவெண்டலைகையது
ஒன்றுகொலாமவரூர்வதுதானே. 1

இரண்டுகொலாமிமையோர்தொழுபாதம்
இரண்டுகொலாமிலங்குங்குழைபெண்ணாண்
இரண்டுகொலாமுருவஞ்சிறுமான்மழு
இரண்டுகொலாமவரெய்தினதாமே. 2

பத்துக்கொலாமவர்பாம்பின்கண்பாம்பின்பல்
பத்துக்கொலாமெயிறுந்நெரிந்துக்கன
பத்துக்கொலாமவர்காயப்பட்டான்றலை
பத்துக்கொலாமடியார்செய்கைதானே. 10

திருச்சிற்றம்பலம்.

---

தனித்திருநேரிசை. சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

உடம்பெனுமனையகத்துள்ளமேதகளியாக
மடம்படுமுணர்நெய்யட்டியுயிரெனுந்திரிமயக்கி
இடம்படுஞானத்தீயாலெரிகொளவிருந்துநோக்கில்
கடம்பமர்காளைதாதைகழலடிகாணலாமே. 4

அங்கத்தைமண்ணுக்காக்கியார்வத்தையுனக்கேதந்து
பங்கத்தைப்போகமாற்றிப்பாவித்தேன்பரமாநின்னைச்
சங்கொத்தமேனிச்செல்வாசாதனாளேயனுன்னை
எங்குற்றாயென்றபோதாவிங்குற்றேனென்கண்டாயே. 8

---

மெய்ம்மையாமுழவைச்செய்துவிருப்பெனும்வித்தைவித்திப்
பொய்ம்மையாங்களையைவாங்கிப்பொறையெனுநீரைப்பாய்ச்சித்
தம்மையுநோக்கிக்கண்டுதகவெனும்வேலியிட்டுச்
செம்மையுணிற்பாராகிற்சிவகதிவிளையுமன்றே. 2

காயமேகோயிலாகக்கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாகமனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலாநிறையநீரமையவாட்டி
பூசனையீசனார்க்குப்போற்றவிக்காட்டினோமே. 4

---

விளக்கினார்பெற்றவின்பமெழுக்கினாற்பதிற்றியாகும்
துளக்கினன்மலர்தொடுத்தாற்றூயவிண்ணேறலாகும்
விளக்கிட்டார்பேறுசொல்லின்மெய்ஞ்ஞெறிஞானமாகும்
அளப்பிலகீதஞ்சொன்னார்க்கடிகடாமருளுமாறே. 3

திருச்சிற்றம்பலம்.

---

துறைந்த திருநேரிசை. ௪-ந் திருமுறை.

வென்றிலேன்புலன்களைந்தும்வென்றவர்வளாகந்தன்னுள்
சென்றிலேனாதலாலேசெந்நெறியதற்குஞ்சேயேன்
நின்றுளேதுளும்புகின்றேனீசனேனீசனேயோ
இன்றுளேனாளையில்லேனென்செய்வான்றோன்றினேனே. 1

திருச்சிற்றம்பலம்.

---

ஆருயிர்த் திருவிருத்தம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எட்டாந்திசைக்குமிருதிசைக்குமிறைவாமுறையென்
றிட்டாரமரர்வெம்பூசலெனக்கேட்டெரிவிழியா
ஒட்டாக்கயவர்திரிபுரமூன்றையுமோரம்பினால்
அட்டானடிநிழற்கீழதன்றேவென்றனாருயிரே. 1

முந்திவட்டத்திடைப்பட்டதெல்லாமுடிவேந்தர்தங்கள்
பந்திவட்டத்திடைப்பட்டலைப்புண்பதற்கஞ்சிக்கொல்லோ
நந்திவட்டந்நறுமாமலர்க்கொன்றையுநக்கசென்னி
அந்திவட்டத்தொளியானடிச்சேர்ந்ததென்னாருயிரே. 8

திருச்சிற்றம்பலம்.

---

பசுபதித் திருவிருத்தம். -௪ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சாம்பலைப்பூசித்தரையிற்புரண்டுநின்றாள்பரவி
ஏம்பலிப்பார்கட்கிரங்குகண்டாயிருங்கங்கையென்னும்
காம்பலைக்கும்பணைத்தோளிகதிர்ப்பூண்வனமுலைமேல்
பாம்பலைக்குஞ்சடையாயெம்மையாளும்பசுபதியே. 1

சித்தத்துருகிச்சிவனெம்பிரானென்றுசிந்தையுள்ளே
பித்துப்பெருகப்பிதற்றுகின்றார்பிணிதீர்த்தருளாய்

மத்தகத்தாக்கனிருபதுதோளுமுடியுமெல்லாம்
பத்துற்றநெரித்தாயெம்மையாளும்பசுபதியே. 10

திருச்சிற்றம்பலம்.

## தனித்திருவிருத்தம் 4-ந்-திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளிக்குழைத்துணிபோலுங்கபாலத்தன்வீழ்ந்திலங்கு
வெள்ளிப்புரியன்னவெண்புரிநூலன்விரிசடைமேல்
வெள்ளித்தகடன்னவெண்பிறைசூடிவெள்ளென்பணிந்து
வெள்ளிப்பொடிப்பவளப்புறம்பூசியவேதியனே. 1

முன்னேயுரைத்தான்முகமனேயொக்குமிம்மூவுலகுக்
கன்னையுமத்தனுமாவாயழல்வண்ணநீயல்லையோ
உன்னைநினைந்தேகழியுமென்னாவிகழிந்ததற்பின்
என்னைமறக்கப்பெறுமெம்பிரானுன்னைவேண்டியதே. 3

நின்னையெப்போதுநினையலொட்டாய்நீநினையப்புகில்
பின்னையப்போதேமறப்பித்துப்பேர்த்தொன்றுகாடுவித்தி
உன்னையெப்போதுமறந்திட்டுனக்கினிதாவிருக்கும்
என்னையொப்பாருளரோசொல்லுவாழியிறையவனே. 4

முழுத்தழன்மேனித்தவளப்பொடியன்கனகக்குன்றத்
தெழிற்பெருஞ்சோதியையெங்கள்பிரானையிகழ்திர்கண்டீர்
தொழப்படுந்தேவர்தொழப்படுவானைத்தொழுதபின்னைத்
தொழப்படுந்தேவர்தம்மாற்றொழுவிக்குந்தன்றொண்டரையே. 5

விண்ணகத்தான்மிக்கவேதத்துளான்விரிநீருடுத்த
மண்ணகத்தான்றிருமாலகத்தான்மருவற்கினிய
பண்ணகத்தான்பத்தர்சித்தத்துளான்பழநாயடியேன்
கண்ணகத்தான்மனத்தான்சென்னியானெங்கறைக்கண்டனே. 6

பெருங்கடன்மூடிப்பிரளயங்கொண்டுபிரமனும்போய்
இருங்கடன்மூடியிறக்குமிறந்தான்களேபரமும்
கருங்கடல்வண்ணன்களேபரமுங்கொண்டுகங்காளராய்
வருங்கடன்மீளநின்றெம்மிறைநல்வீணைவாசிக்குமே. 7

வானந்துளங்கிலென்மண்கம்பமாகிலென்மால்வரையும்
தானந்துளங்கித்தலைதடுமாறிலென்றண்கடலும்
மீனம்படிலென்விரிசுடர்வீழிலென்வேலைநஞ்சுண்
டூனமொன்றில்லாவொருவனுக்காட்பட்டவுத்தமர்க்கே. 8

சிவனெனுநாமந்தனக்கேயுடையசெம்மேனியெம்மான்
அவனெனையாட்கொண்டளித்திடுமாகிலவன்றனையான்
பவனெனுநாமம்பிடித்துத்திரிந்துபன்னாளழைத்தால்
இவனெனைப்பன்னாளழைப்பொழியானென்றெதிர்ப்படுமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

தனித்திருவிருத்தம். ௪-ந் திருமுறை,

திருச்சிற்றம்பலம்.

துறக்கப்படாதவுடலைத்துறந்துவெந்தூதுவரோ
டிறப்பனிறந்தாலிருவிசும்பேறுவனேறிவந்து
பிறப்பன்பிறந்தாற்பிறையணிவார்சடைப்பிஞ்ஞகன்பேர்
மறப்பன்கொலோவென்றென்னுள்ளங்கிடந்துமறுகிடுமே. 8

கன்னெடுங்காலம்வெதும்பிக்கருங்கடனீர்சுருங்கிப்
பன்னெடுங்காலமழைதான்மறக்கினும்பஞ்சமுண்டென்
றென்னொடுஞ்சூளறுமஞ்சனெஞ்சேயிமையாதமுக்கண்
பொன்னெடுங்குன்றமொன்றுண்டுகண்டீரிப்புகலிடத்தே. 10

மேலுமறிந்திலனான்முகன்மேற்சென்றுகீழிடந்து
மாலுமறிந்திலன்மாலுற்றதேவழிபாடுசெய்யும்
பாலன்மிசைச்சென்றுபாசம்விசிறிமறிந்தசிந்தைக்
காலனறிந்தானறிதற்கரியான்கழலடியே. 11

திருச்சிற்றம்பலம்.

---

தனித் திருக்குறுந்தொகை. ௫-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாசில்வீணையுமாலைமதியமும்
வீசுதென்றலும்வீங்கிளவேனிலும்
மூசுவண்டறைபொய்கையும்போன்றதே
ஈசனெந்தையிணையடிநீழலே. 1

நமச்சிவாயவே ஞானமுங்கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே. 2

நடலைவாழ்வுகொண்டென்செய்திர்நாணிலீர்
சுடலைசேர்வதுசொற்பிரமாணமே
கடலினஞ்சமுதுண்டவர்கைவிட்டால்
உடலினார்கிடந்தூர்முனிபண்டமே. 4

பூக்கைக்கொண்டரன்பொன்னடிபோற்றிலார்
நாக்கைக்கொண்டரனாமநவில்கிலார்
ஆக்கைக்கேயிரைதேடியலமந்து
காக்கைக்கேயிரையாகிக்கழிவரே. 5

நெக்குநெக்குநினைப்பவர்நெஞ்சுளே
புக்குநிற்கும்பொன்னார்சடைப்புண்ணியன்
பொக்கமிக்கவர்பூவுநீருங்கண்டு
நக்குநிற்பரவர்தம்மைநாணியே. 9

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன்மாமணிச்சோதியான்
உறவுகோனட்டுணர்வுகயிற்றினால்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே. 10

திருச்சிற்றம்பலம்.

## இலிங்கபுராணம்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

புக்கணைந்துபுரிந்தலரிட்டிலர்
நக்கணைந்துநறுமலர்கொய்திலர்
சொக்கணைந்தசுடரொளிவண்ணனை
மிக்குக்காணலுற்றாரங்கிருவரே. 1

அலருநீருங்கொண்டாட்டித்தெளித்திலர்
திலகமண்டலந்தீட்டித்திரித்திலர்

உலகமூர்த்தியொளிநிறவண்ணனைச்
செலவுகாணலுற்றாரங்கிருவரே. 2

செங்கணானும்பிரமனுந்தம்முளே
எங்குந்தேடித்திரிந்தவர்காண்கிலார்
இங்குற்றேனென்றிலிங்கத்தேதோன்றினான்
பொங்குசெஞ்சடைப்புண்ணியமூர்த்தியே. 11

திருச்சிற்றம்பலம்.

## பாவநாசம்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கங்கையாடிலென் காவிரியாடிலென்
கொங்குதண் குமரித்துறையாடிலென்
ஓங்குமாகடலோதநீராடிலென்
எங்குமீசனெனாதவர்க்கில்லையே. 2

கோடிதீர்த்தங்கலந்து குளித்தவை
ஆடினாலுமரனுக்கன்பில்லையேல்
ஓடுநீரினையோட்டைக்குடத்தட்டி
மூடிவைத்திட்டமூர்க்கனொடொக்குமே. 9

திருச்சிற்றம்பலம்.

## ஆதிபுராணம்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வேதநாயகன் வேதியர்நாயகன்
மாதினாயகன் மாதவர்நாயகன்
ஆதிநாயகனாதிரைநாயகன்
பூதநாயகன் புண்ணியமூர்த்தியே. 1

செத்தாச்செத்துப்பிறப்பதேதேவென்று
பத்திசெய்மனப்பாறைகட்கேறுமோ
அத்தனென்றரியோடுபிரமனும்
துத்தியஞ்செயநின்றநற்சோதியே. 2

நூறுகோடிபிரமர்கணொங்கினர்
ஆறுகோடிநாராயணரங்ஙனே
ஏறுகங்கைமணலெண்ணிலிந்திரர்
ஈறிலாதவனீசனொருவனே. 3

கூவலாமைகுரைகடலாமையைக்
கூவலோடொக்குமோகடலென்றல்போல்
பாவகாரிகள்பார்ப்பரிதென்பரால்
தேவதேவன்சிவன்பெருந்தன்மையே. 5

அருக்கன்பாதம்வணங்குவரந்தியில்
அருக்கனவானரனுருவல்லனோ
இருக்குநான்மறையீசனையேதொழும்
கருத்தினைநினையார்கண்மனவரே. 8

தாயினுநல்லசங்கரனுக்கன்பர்
ஆயவுள்ளத்தமுதருந்தப்பெறார்
பேயர்பேய்முலையுண்டுயிர்போக்கிய
மாயன்மாயத்துப்பட்டமனத்தரே. 9

திருச்சிற்றம்பலம்

பலவகைத் திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நேர்ந்தொருத்தியொருபாகத் தடங்கக்கண்டு நிலைதளரவாயிரமாமுகத்தினொடு, பாய்ந்தொருத்தி படர்சடைமேற்பயிலக்கண்டுபடவரவும்பனிமதியும்வைத்தசெல்வர், தாந்திருத்தித்தம்மனத்தையொருக்காத் தொண்டர் தனித்தொருதண்டுன்றிமெய்தளராமுன்னம், பூந்துருத்திபூந்துருத்திபென்பீராகிற்பொல்லாப்புலாற்றுருத்திபோக்கலாமே. 1

தந்தையார் தாயாருடன்பிறந்தார்தாரமார் புத்திரரார்தாந்தாமாரே, வந்தவாறெங்ஙனேபோமாறேதோமாயமாமிதற்கேதுமகிழவேண்டாம், சிந்தையீருமக்கொன்றுசொல்லக்கேண்மின்றிகழ்மதியும்வாளரவுந்திளைக்குஞ்சென்னி, எந்தை

யார்திருநாமநமச்சிவாயவென்றெழுவார்க்கிருவிசும்பிலிருக்க லாமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

நின்ற திருத்தாண்டகம். ௬-ந். திருமுறை.

திருச்சிற்றம்பலம்

இருநிலனாய்த்தீயாகிநீருமாகியியமானனாய்வெறியுங்காற் றுமாகி, அருநிலையதிங்களாய்ஞாயிறாகியாகாசமாயட்டமூர்த் தியாகிப், பெருநலமுங்குற்றமும்பெண்ணுமாணும்பிறருருவுந்தம்முருவுந்தாமேயாகி, நெருநலையாயின்றாகிநாளையாகிநிமிர்புன்சடையடிகணின்றவாறே. 1

மாலாகிநான்முகனாய்மாபூதமாய்மருக்கமாயருக்கமாய் மகிழ்வுமாகிப், பாலாகியெண்டிசைக்குமெல்லையாகிப் பரப்பாகிப்பரலோகந்தானேயாகிப், பூலோகபுவலோகசுவலோகமாய்ப்பூதங்களாய்ப்புராணன்றானேயாகி, ஏலாதனவெல்லாமேல்விப்பானாயெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. 10

திருச்சிற்றம்பலம்.

---

தனித் திருத்தாண்டகம், ௬-ந் திருமுறை.

அப்பனீயம்மைநீயையனுநீயன்புடையமாமனுமாமியுநீ, ஒப்புடையமாதருமொண்பொருளுநீயொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ, துய்ப்பனவுமுய்ப்பனவுந்தோற்றுவாய்நீதுணையாயென்னெஞ்சந்துறப்பிப்பாய்நீ, இப்பொன்னீயிம்மணிநீயிம்முத்துநீயிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே. 1

ஆட்டுவித்தாலாரொருவராடாதாரேயடங்குவித்தாலாரொருவரடங்காதாரே, ஓட்டுவித்தாலாரொருவரோடாதாரேயுருகுவித்தாலாரொருவருருகாதாரே, பாட்டுவித்தாலாரொருவர்பாடாதாரே பணிவித்தாலாரொருவர்பணியாதாரே, காட்டுவித்தாலாரொருவர்காணாதாரே காண்பாரார்கண்ணுதலாய்காட்டாக்காலே. 3

நற்பதத்தார்நற்பதமேஞானமூர்த்தி நலஞ்சுடரேநால்வேதத்தப்பாநின்ற, சொற்பதத்தார்சொற்பதமுங் கடந்து

நின்றசொலற்கரிய சூழலாயிதுவுன் றன்மை, நிற்பதொத்து நிலையிலாநெஞ்சந்தன்னு ணிலாவாதபுலாலுடம்பேபுகுந்துநின்ற, கற்பகமேயானுன்னைவிடுவேனல்லேன் கனகமாமணி நிறத்தெங்கடவுளானே. 4

திருக்கோயிலில்லாத திருவிலூருந்திருவெண்ணீறணியாத திருவிலூரும், பருக்கோடிப்பத்திமையாற் பாடாவூரும் பாங்கினொடுபலதளிகளில்லாவூரும், விருப்போடுவெண்சங்கமூதாவூரும்விதானமும்வெண்கொடியுமில்லாவூரும், அருப்போடுமலர்பறித்திட்டுண்ணாவூருமவையெல்லா மூரல்லவடவி காடே. 5

திருநாமமஞ்செழுத்துஞ்செப்பாராகிற் றீவண்ணர் திறமொருகாற்பேசாராகில், ஒருகாலுந்திருக்கோயில்சூழாராகி லுண்பதன்முன்மலர்பறித்திட்டுண்ணாராகில், அருநோய்கள் கெடவெண்ணீறணியாராகிலளியற்றார் பிறந்தவாறேதோவென்னில், பெருநோய்கண்மிகநலியப்பெயர்த்துஞ்செத்தும்பிறப்பதற்கேதொழிலாகியிறக்கின்றாரே. 6

நின்னாவார்பிறரின்றிநீயேயானாய் நினைப்பார்கண்மனத்துக்கோர்வித்துமானாய், மன்னானாய்மன்னவர்க்கோரமுதமானாய்மறைநான்குமானாயாறங்கமானாய், பொன்னானாய்மணியானாய்போகமானாய்பூமிமேற்புகழ்தக்கபொருளேயுன்னை, என்னானாயென்னானாயென்னினல்லாலேழையேனென் சொல்லியேத்துகேனே. 7

அத்தாவுன்னடியேனையன்பாலார்த்தா யருணோக்கிற் றீர்த்தநீ ராட்டிக்கொண்டாய், எத்தனையுமரியநீயெளியையானாயெனையாண்டுகொண்டிரங்கியேன்றுகொண்டாய், பித்தனேன்பேதையேன் பேயேனாயேன் பிழைத்தனகளத்தனையும்பொறுத்தாயன்றே, இத்தனையுமெம்பரமோவையவையோவெம்பெருமான்றிருக்கருணையிருந்தவாறே. 8

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன் குற்றமேபெரிதுடையேன் கோலமாய, நலம்பொல்

லேனுன்போல்லேன் ஞானியல்லேனல்லாரோ டிசைந்திலே னடுவேனின்ற, விலங்கல்லேன் விலங்கல்லாதொழிந்தேனல்லேன் வெறுப்பனவுமிகப்பெரிதும்பேசவல்லேன், இலம்பொல்லேனிரப்பதேயீயமாட்டே னென்செய்வான் றோன்றினேனேழையேனே.

சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்துதரணியொடுவானாளத்தருவரேனும், மங்குவாரவர்செல்வமதிப்போமல்லோமாதேவர்க்கேகாந்தரல்லராகில், அங்கமெலாங்குறைந்தழுகுதொழுநோயராயாவுரித்துத்தின்றுழலும்புலையரேனும், கங்கைவார்சடைக்கரந்தார்க்கன்பராகி லவர்கண்டீர்நாம்வணங்குங்கடவுளாரே.

திருச்சிற்றம்பலம்.

---

தனித் திருத்தாண்டகம், ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆமயந்தீர்த்தடியேனையாளாக்கொண்டாரதிகைவீரட்டானமாட்சிகொண்டார், தாமரையோன்சிரமரிந்துகையிற்கொண்டார் தலையதனிற்பலிகொண்டார்நிறைவாந்தன்மை, வாமனனார்மாகாயத்துதிரங்கொண்டார்மானிடங்கொண்டார் வலங்கைமழுவாட்கொண்டார், காமனையுமுடல்கொண்டார் கண்ணானோக்கிக்கண்ணப்பர்பணியுங்கொள்கபாலியாரே. 1

கூராமலரோடராமதியஞ்சடைமேற்கொண்டார் குடமுழநந்திசனைவாசகனாக்கொண்டார், சிராமலைதஞ்சேர்விடமாத்திருந்தக்கொண்டார்தென்றனெடுந் தேரோனைப் பொன்றக்கொண்டார், பராபரனென்பதுதமதுபேராக்கொண்டார்பருப்பதங்கைக்கொண்டார்பயங்கள்பண்ணி, இராவணனென்றவனைப்பேரியம்பக்கொண்டாரிடருறுநோய் தீர்த்தென்னையாட்கொண்டாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## வினாவிடைத் திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அண்டங்கடந்தசுவடுமுண்டோவனலங்கையேந்தியவாடலுண்டோ, பண்டையெழுவர்படியுமுண்டோபாரிடங்கள் பலசூழப்போந்ததுண்டோ, கண்டமிறையே கறுத்ததுண்டோகண்ணின்மேற்கண்ணொன்றுகண்டதுண்டோ, தொண்டர்கள்சூழத்தொடர்ச்சியுண்டோ சொல்லீரெம்பிரானாரைக் கண்டவாறே. 1

நீறுடையதிருமேனிபாகமுண்டோநெற்றிமேலொற்றைக்கண்முற்றுமுண்டோ, கூறுடையகொடுமழுவாள்கையிலுண்டோகொல்புலித்தோலுடையுண்டோகொண்டவேடம், ஆறுடையசடையுண்டோவரவமுண்டோவதனருகேபிறையுண்டோவளவிலாத, ஏறுடையகொடியுண்டோவிலயமுண்டோ வெவ்வகையெம்பிரானாரைக்கண்டவாறே. 5

நீறேறுதிருமேனிநிகழக்கண்டேனீள்சடைமேனிறைகங்கையேறக்கண்டேன், கூறேறுகொடுமழுவாள்கொள்ளக்கண்டேன்கொடுகொட்டிகையலகுகையிற்கண்டேன், ஆறேறு சென்னியணிமதியுங்கண்டே னடியார்கட்காரமுதமாகக்கண்டேன், ஏறேறியிந்நெறியே போதக்கண்டே னிவ்வகையெம் பெருமானைக்கண்டவாறே.

மைப்படிந்தகண்ணாளுந்தானுங்கச்சிமயானத்தான்வார்சடையானென்னினல்லான், ஒப்புடையனல்லனொருவனல்லனோரூரனல்லனோருவமனில்லி, அப்படியுமந்நிறமுமவ்வண்ணமுமவனருளேகண்ணாகக்காணினல்லால், இப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்தனிவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே. 10

திருச்சிற்றம்பலம்

மறுமாற்றத் திருத்தாண்டகம். ௬-ந். திருமுறை.

திருச்சிற்றம்பலம்

நாமார்க்குங்குடியல்லோநமனையஞ்சோநரகத்திலிடர்ப்ப
டோநடலையில்லோம், ஏமாப்போம்பிணியறியோம்பணிவோ
மல்லோமின்பமேயென்னாளுந்துன்பமில்லை, தாமார்க்குங்கு
டியல்லாத் தன்மையான சங்கரனற் சங்கவெண்குழையோர்
காதிற், கோமாற்கேநாமென்றுமீளாவாளாய்க்கொய்ம்மலர்
ச்சேவடியிணையேகுறுகினோமே.

வாராண்டகொங்கையர்சேர்மனையிற்செலோ மாதேவா
மாதேவாவென்றுவாழ்த்தி, நீராண்டபுரோதாயமாடப்பெற்
றோநீறணியுங்கோலமேநிகழப்பெற்றோம், காராண்டமழை
போலக் கண்ணீர்சோரக் கன்மனமே நன்மனமாக் கரையப்
பெற்றோம், பாராண்டுபகடேறிவருவார்சொல்லும் பணிகே
ட்கக்கடவோமோபற்றற்றோமே.

திருச்சிற்றம்பலம்.

---

சுந்தரமூர்த்தி நாயனார்.

நமக்கடிகளாகிய அடிகள்.

பண்-கொல்லி. ௭-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாறுதாங்கியகாடரோபடுதலையரோமலைப்பாவையோர்
கூறுதாங்கியகுழகரோகுழைக்காதரோகுறுங்கோட்டிள
ஏறுதாங்கியகொடியரோசுடுபொடியரோவிலங்கும்பிறை
ஆறுதாங்கியசடையரோநமக்கடிகளாகியவடிகளே. 1

நீடுவாழ்பதியுடையரோவயனெடியமாலுக்கு நெடியரோ
பாடுவாரையுமுடையரே தமைப்பற்றினார்கட்குநல்லரோ
காடுதானரங்காகவேகைகளொட்டினோடிலயம்பட
ஆடுவாரெனப்படுவரோநமக்கடிகளாகியவடிகளே. 8

நமனைநந்தியுங்கருமவீரனுந்தருமசேனனுமென்றிவர் [ரியே
குமணமாமலைக்குன்றுபோனின்றுதங்கள்கூறையொன்றின்

ஞமணஞாஞணஞாணஞோணமென்றோதியாரையுநாணிலா
அமணராற்பழிப்புடையரோநமக்கடிகளாகியவடிகளே. 9

படிசெய்நீர்மையிற்பத்தர்காள்பணிந்தேத்தினேன்பணியீரருள்
வடிவிலான்றிருநாவலூரன்வனப்பகையப்பன்வன்றொண்டன்
செடியனாகிலுந்தீயனாகிலுந்தம்மையேமனஞ்சிந்திக்கும்
அடியனாரணையாள்வரோநமக்கடிகளாகியவடிகளே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## ஊர்த்தொகை

பண்-பழம்பஞ்சுரம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காட்டூர்க்கடலேகடம்பூர்மலையேகானப்பேரூராய்
கோட்டூர்க்கொழுந்தேயழுந்தூரரசேகொழுநற்கொல்லேறே
பாட்டூர்பலரும்பரவப்படுவாய்பனங்காட்டூரானே
மாட்டூரறவாமறவாதுன்னைப்பாடப்பணியாயே. 1

கொங்கிற்குறும்பிற்குரக்குத்தளியாய்குழகாகுற்றாலா
மங்குற்றிரிவாய்வானோர்தலைவாவாய்மூர்மணவாளா
சங்கக்குழையார்செவியாவழகாவவியாவனலேந்திக்
கங்குற்புறங்காட்டாடீயடியார்கவலைகளையாயே. 2

கைம்மாவுரிவையம்மான்காக்கும்பலவூர்கருத்துன்னி
மைம்மாந்தடங்கண்மதுரமன்னமொழியாண்மடச்சிங்கடி
தம்மானூரன்சடையன்சிறுவனடியன்றமிழ்மாலை
செம்மாந்திருந்துதிருவாய்திறப்பார்சிவலோகத்தாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## தேவாரப்பதிகங்கள்

## முற்றுப்பெற்றன.

---

உ

திருச்சிற்றம்பலம்.

எட்டாந்திருமுறை.

# மாணிக்கவாசகசுவாமிகள்

அருளிச்செய்த

# க. திருவாசகம்.

### திருவாசகச்சிறப்பு

தொல்லையிரும்பிறவிச்சூழுந்தளைநீக்கி
யல்லலறுத்தானந்தமாக்கியதே—யெல்லை
மருவாநெறியளிக்கும்வாதவூரெங்கோன்
றிருவாசகமென்னுந்தேன்.

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாயவா அழ்கநாதன்றாள்வாழ்க
விமைப்பொழுதுமென்னெஞ்சினீங்காதான்றாள்வாழ்க
கோகழியாண்டகுருமணிதன்றாள்வாழ்க
வாகமமாகிநின்றண்ணிப்பான்றாள்வாழ்க
வேகனநேகனிறைவனடிவாழ்க
வேகங்கெடுத்தாண்டவேந்தனடிவெல்க
பிறப்பறுக்கும்பிஞ்ஞகன்றன்பெய்கழல்கள்வெல்க
புறத்தார்க்குச்சேயோன்றன்பூங்கழல்கள்வெல்க
கரங்குவிவாருண்மகிழுங்கோன்கழல்கள்வெல்க
சிரங்குவிவாரோங்குவிக்குஞ்சீரோன்கழல்வெல்க
வீசனடிபோற்றியெந்தையடிபோற்றி
தேசனடிபோற்றிசிவன்சேவடிபோற்றி

நேயத்தேநின்றநிமலனடிபோற்றி
மாயப்பிறப்பறுக்குமன்னனடிபோற்றி
சீரார்பெருந்துறைநந்தேவனடிபோற்றி
யாராதவின்பமருளுமலைபோற்றி
சிவனவனென்சிந்தையுணின்றவதனு
லவனருளாலேயவன்றாள்வணங்கிச்
சிந்தைமகிழச்சிவபுராணந்தன்னை
முந்தைவினைமுழுதுமோயவுரைப்பனியான்
கண்ணுதலான்றன்கருணைக்கண்காட்டவந்தெய்தி
யெண்ணுதற்கெட்டாவெழிலார்கழலிறைஞ்சி
விண்ணிறைந்துமண்ணிறைந்துமிக்காய்விளங்கொளியா
யெண்ணிறந்தெல்லையிலாதானேநின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன்புகழுமாறொன்றறியேன்
புல்லாகிப்பூடாய்ப்புழுவாய்மரமாகிப்
பல்விருகமாகிப்பறவையாய்ப்பாம்பாகிக்
கல்லாய்மனிதராய்ப்பேயாய்க்கணங்களாய்
வல்லசுரராகிமுனிவராய்த்தேவராய்ச்
செல்லாஅநின்றவித்தாவரசங்கமத்து
ளெல்லாப்பிறப்பும்பிறந்திளைத்தேனெம்பெருமான்
மெய்யேயுன்பொன்னடிகள்கண்டின்றுவீடுற்றே
னுய்யவென்னுள்ளத்துளோங்காரமாய்நின்ற
மெய்யாவிமலாவிடைப்பாகாவேதங்க
ளையாவெனவோங்கியாழ்ந்தகன்றநுண்ணியனே
வெய்யாய்தணியாயியமானனாம்விமலா
பொய்யாயினவெல்லாம்போயகலவந்தருளி
மெய்ஞ்ஞானமாகிமிளிர்கின்றமெய்ச்சுடரே
யெஞ்ஞானமில்லாதேனின்பப்பெருமானே
யஞ்ஞானந்தன்னையகல்விக்குநல்லறிவே
யாக்கமளவிறுதியில்லாயனைத்துலகு
மாக்குவாய்காப்பாயழிப்பாயருடருவாய்

போக்குவாயென்னைப்புகுவிப்பாய்நின்றொழும்பி
னாற்றத்தினேரியாய்சேயாய்நணியானே
மாற்றமனங்கழியநின்றமறையோனே
கறந்தபால்கன்னலொடுநெய்கலந்தாற்போலச்
சிறந்தடியார்சிந்தனையுட்டேனூறிநின்று
பிறந்தபிறப்பறுக்குமெங்கள்பெருமா
னிறங்களோரைந்துடையாய்விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாயெம்பெருமான்வல்வினையேன்றன்னை
மறைந்திடமூடியமாயவிருளை
யறம்பாவமென்னுமருங்கயிற்றாற்கட்டிப்
புறந்தோல்போர்த்தெங்கும்புழுவழுக்குமூடி
மலஞ்சோருமொன்பதுவாயிற்குடிலை
மலங்கப்புலனைந்தும்வஞ்சனையைச்செய்ய
விலங்குமனத்தால்விமலாவுனக்குக்
கலந்தவன்பாகிக்கசிந்துள்ளுருகு
நலந்தானிலாதசிறியேற்குநல்கி
நிலந்தன்மேல்வந்தருளிநீள்கழல்கள்காட்டி
நாயிற்கடையாய்க்கிடந்தவடியேற்குத்
தாயிற்சிறந்ததயாவானதத்துவனே
மாசற்றசோதிமலர்ந்தமலர்ச்சுடரே
தேசனேதேனாரமுதேசிவபுரனே
பாசமாம்பற்றறுத்துப்பாரிக்குமாரியனே
நேசவருள்புரிந்துநெஞ்சில்வஞ்சங்கெடப்
பேராதுநின்றபெருங்கருணைப்பேராறே
யாராவமுதேயளவிலாப்பெம்மானே
யோராதாருள்ளத்தொளிக்குமொளியானே
நீராயுருக்கியென்னாருயிராய்நின்றானே
யின்பமுந்துன்பமுமில்லானேயுள்ளானே
யன்பருக்கன்பனேயாவையுமாயல்லையுமாஞ்
சோதியனேதுன்னிருளேதோன்றாப்பெருமையனே

யாதியனேயந்தநடுவாகியல்லானே
யீர்த்தென்னையாட்கொண்டவெந்தைபெருமானே
கூர்த்தமெய்ஞ்ஞானத்தாற்கொண்டுணர்வார்தங்கருத்தி
னோக்கரியநோக்கேநுணுக்கரியநுண்ணுணர்வே
போக்கும்வரவும்புணர்வுமிலாப்புண்ணியனே
காக்குமெங்காவலனேகாண்பரியபேரொளியே
யாற்றின்பவெள்ளமேயத்தாமிக்காய்நின்ற
தோற்றச்சுடரொளியாய்ச்சொல்லாதநுண்ணுணர்வாய்
மாற்றமாம்வையகத்தின்வெவ்வேறேவந்தறிவாந்
தேற்றனேதேற்றத்தெளிவேயென்சிந்தனையு
ளூற்றானவுண்ணாரமுதேயுடையானே
வேற்றுவிகாரவிடக்குடம்பினுட்கிடப்ப
வாற்றேனெம்மையாவரனேயோவென்றென்று
போற்றிப்புகழ்ந்திருந்துபொய்கெட்டுமெய்யானார்
மீட்டிங்குவந்துவினைப்பிறவிசாராமே
கள்ளப்புலக்குரம்பைகட்டழிக்கவல்லானே
நள்ளிருளினட்டம்பயின்றாடுநாதனே
தில்லையுட்கூத்தனேதென்பாண்டிநாட்டானே
யல்லற்பிறவியறுப்பானேயோவென்று
சொல்லற்கரியானைச்சொல்லித்திருவடிக்கீழ்ச்
சொல்லியபாட்டின்பொருளுணர்ந்துசொல்லுவார்
செல்வர்சிவபுரத்தினுள்ளார்சிவனடிக்கீழ்ப்
பல்லோருமேத்தப்பணிந்து.

திருச்சிற்றம்பலம்

---

## திருச்சதகம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்தானரும்பிவிதிர்விதிர்த்துன்விரையார்கழற்கென்
கைதான்றலைவைத்துக்கண்ணீர்ததும்பிவெதும்பியுள்ளம்
பொய்தான்றவிர்ந்துன்னைப்போற்றிசயசயபோற்றியென்னுங்
கைதானெகிழவிடேனுடையாயென்னைக்கண்டுகொள்ளே. 1

கொள்ளேன்புரந்தரன்மாலயன்வாழ்வுகுடிகெடினு
நள்ளேனினதடியாரொடல்லானரகம்புகினு
மெள்ளேன்றிருவருளாலேயிருக்கப்பெறினிறைவா
வுள்ளேன்பிறதெய்வமுன்னையல்லாதெங்களுத்தமனே. 2

நாடகத்தாலுன்னடியார்போனடித்துநானடுவே
வீடகத்தேபுகுந்திடுவான்மிகப்பெரிதும்விரைகின்றே
னாடகச்சீர்மணிக்குன்றேயிடையறாவன்புனக்கென்
னூடகத்தேநின்றுருகத்தந்தருளெம்முடையானே. 11

யானேதும்பிறப்பஞ்சேனிறப்பதனுக்கென்கடவேன்
வானேயும்பெறில்வேண்டேன்மண்ணாள்வான்மதித்துமிரேன்
தேனேயுமலர்க்கொன்றைச்சிவனேயெம்பெருமானெம்
மானேயுன்னருள்பெறுநாளென்றென்றேவருந்துவனே. 12

ஆமாறுன்றிருவடிக்கேயகங்குழையேனன்புருகேன்
பூமாலைபுனைந்தேத்தேன்புகழ்ந்துரையேன்புத்தேளிர்
கோமானின்றிருக்கோயிறூகேன்மெழுகேன்கூத்தாடேன்
சாமாறேவிரைகின்றேன்சதுராலேசார்வானே. 14

வாழ்த்துவதும்வானவர்கடாம்வாழ்வான்மனநின்பாற்
றாழ்த்துவதுந்தாமுயர்ந்துதம்மையெல்லாந்தொழவேண்டிச்
சூழ்த்துமதுகரமுரலுந்தாரோயைநாயடியேன்
பாழ்த்தபிறப்பறுத்திடுவான்யானுமுன்னைப்பரவுவனே. 16

வெள்ளந்தாழ்விரிசடையாய்விடையாய்விண்ணோர்
 பெருமானேயெனக்கேட்டுவேட்டநெஞ்சாய்ப்
பள்ளந்தாழுறுபுனலிற்கீழ்மேலாகப்
 பதைத்துருகுமவர்நிற்கவென்னையாண்டாய்க்
குள்ளந்தானின்றுச்சியளவுநெஞ்சா
 யுருகாதாலுடம்பெல்லாங்கண்ணாயண்ணா
வெள்ளந்தான்பாயாதானெஞ்சங்கல்லாங்
 கண்ணிணையுமரமாந்தீவினையினேற்கே. 21

பேசிற்றாமீசனேயெந்தாயெந்தை
 பெருமானேயென்றென்றேபேசிப்பேசிப்

பூசிற்றான் றிருநீறே நிறையப்பூசிப்
போற்றியெம்பெருமானே யென்றுபின்றா
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
யாண்டானை யவாவெள்ளக் கள்வனேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தாயந்தோ
வென்னைநீ யாட்கொண்ட வண்ணந்தானே. 24

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்கனேற்கே. 27

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன் பிலையென் புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றது மிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி யெங்கள் விடலையே போற்றி யொப்பி
லொருத்தனே போற்றி யும்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி யெங்கணின்மலா போற்றி போற்றி. 61

வானநாடரு மறியொணாத நீ
மறையிலீறு முன் றொடரொணாத நீ
யேனைநாடருந் தெரியொணாத நீ
யென்னையின்னிதா யாண்டுகொண்டவா
ஊனைநாடக மாடுவித்தவா
வுருகிநானுனைப் பருகவைத்தவா
ஞானநாடக மாடுவித்தவா
நைய வையகத் துடைய விச்சையே. 65

விச்சதன்றியேவிளைவுசெய்குவாய்
விண்ணுமண்ணகமுழுதும்யாவையும்
வைச்சுவாங்குவாய்வஞ்சகப்பெரும்
புலையனேனையுன்கோயில்வாயிலிற்
பிச்சனாக்கினாய்பெரியவன்பருக்
குரியனாக்கினாய்தாம்வளர்த்ததோர்
நச்சுமாமரமாயினுங்கொலார்
நானுமங்ஙனேயுடையநாதனே. 66

திருச்சிற்றம்பலம்.

---

## நீத்தல்விண்ணப்பம்.

திருச்சிற்றம்பலம்.

கடையவனேனைக்கருணையினாற்கலந்தாண்டுகொண்ட
விடையவனேவிட்டிடுதிகண்டாய்விறல்வேங்கையின்றோ
லுடையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே [ளே
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைத்தாங்கிக்கொள்
உழைதருநோக்கியர்கொங்கைப்பலாப்பழத்தீயினொப்பாய்
விழைதருவேனைவிடுதிகண்டாய்விடின்வேலைநஞ்சுண்
மழைதருகண்டன்குணமிலிமானிடன்றேய்மதியன்
பழைதருமாபரனென்றென்றறைவன்பழிப்பினையே. 46
சிரிப்பிப்பன்சீறும்பிழைப்பைத்தொழும்பையுமீசற்கென்று
விரிப்பிப்பனென்னைவிடுதிகண்டாய்விடின்வெங்கரியி
னுரிப்பிச்சன்றோலுடைப்பிச்சனஞ்சூண்பிச்சனூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சனென்னையுமாளுடைப்பிச்சனென்றேசுவனே. 49

திருச்சிற்றம்பலம்.

---

## திருவெம்பாவை.

திருச்சிற்றம்பலம்.

ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ்சோதியை
யாம்பாடக்கேட்டேயும்வாட்டடங்கண்
மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தொலிபோய்

வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெய்ம்மறந்து
போதாரமளியின்மேனின்றும்புரண்டிங்ங
னேதேனுமாகாள்கிடந்தாளென்னேயென்னே
யீதேயெந்தோழிபரிசேலோரெம்பாவாய். 1

பாசம்பரஞ்சோதிக்கென்பாயிராப்பகனாம்
பேசும்போதெப்போதிப்போதாரமளிக்கே
நேசமும்வைத்தனையோநேரிழையாய்நேரிழையீர்
சீசியிவையுஞ்சிலவோவிளையாடி
யேசுமிடமீதோவிண்ணோர்களேத்துதற்குக்
கூசுமலர்ப்பாதந்தந்தருளவந்தருளுந்
தேசன்சிவலோகன்றில்லைச்சிற்றம்பலத்து
ளீசனார்க்கன்பார்யாமாரேலோரெம்பாவாய். 2

முத்தன்னவெண்ணகையாய்முன்வந்தெதிரெழுந்தென்
னத்தனானந்தனமுதனென்றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய்வந்துன்கடைதிறவாய்
பத்துடையீரீசன்பழவடியீர்பாங்குடையீர்
புத்தடியோம்புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
வெத்தோநின்னன்புடைமையெல்லோமறியோமோ
சித்தமழகியார்பாடாரோநஞ்சிவனை
யித்தனையும்வேண்டுமெமக்கேலோரெம்பாவாய். 3

ஒண்ணித்திலநகையாயின்னம்புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியாரெல்லாரும்வந்தாரோ
வெண்ணிக்கொடுள்ளவாசொல்லுகோமவ்வளவுங்
கண்ணைத்துயின்றவமேகாலத்தைப்போக்காதே
விண்ணுக்கொருமருந்தைவேதவிழுப்பொருளைக்
கண்ணுக்கினியானைப்பாடிக்கசிந்துள்ள
முண்ணெக்குநின்றுருகயாமாட்டோநீயேவந்
தெண்ணிக்குறையிற்றுயிலேலோரெம்பாவாய். 4

மாலறியாநான்முகனுங்காணாமலையினைநாம்
போலறிவோமென்றுள்ளபொக்கங்களேபேசும்

பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலமிடினு முணராய் உணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
றானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும்பேர்த்துமப்பெற்றியனே
யுன்னைப்பிரானாகப்பெற்றவுன்சீரடியோ
முன்னடியார்தாள்பணிவோமாங்கவர்க்கேபாங்காவோ
மன்னவரேயெங்கணவராவாரவருகந்து
சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோ
மின்னவகையேயெமக்கெங்கோனல்குதியே
லென்னகுறையுமிலோமேலோரெம்பாவாய். 9

பாதாளமேழினுங்கீழ்சொற்கழிவுபாதமலர்
போதார்புனைமுடியுமெல்லாப்பொருண்முடிவே
பேதையொருபாற்றிருமேனியொன்றல்லன்
வேதமுதல்விண்ணோருமண்ணுந்துதித்தாலு
மோதவுலவாவொருதோழன்றொண்டருளன்
கோதில்குலத்தரன்றன்கோயிற்பிணாப்பிள்ளைகா
ளேதவனூரேதவன்பேராருற்றாராயலா
ரேதவனைப்பாடும்பரிசேலோரெம்பாவாய். 10

மொய்யார்தடம்பொய்கைபுக்குமுகேரென்னக்
கையாற்குடைந்துகுடைந்துன்கழல்பாடி
யையாவழியடியோம்வாழ்ந்தோங்காணாரழல்போற்
செய்யாவெண்ணீறாடிசெல்வாசிறுமருங்குன்
மையார்தடங்கண்மடந்தைமணவாளா
வையாநீயாட்கொண்டருளும்விளையாட்டி
னுய்வார்களுய்யும்வகையெல்லாமுய்ந்தொழிந்தோ
மெய்யாமற்காப்பாயெமையேலோரெம்பாவாய். 11

ஆர்த்தபிறவித்துயர்கெடநாமார்த்தாடுந்
தீர்த்தனற்றில்லைச்சிற்றம்பலத்தேதீயாடுங்
கூத்தனிவ்வானுங்குவலயமுமெல்லோமுங்
காத்தும்படைத்துங்கரந்தும்விளையாடி
வார்த்தையும்பேசிவளைசிலம்பவார்கலைக
ளார்ப்பரவஞ்செய்யவணிகுழன்மேல்வண்டார்ப்பப்

பூத்திகழும்பொய்கைகுடைந்துடையான்பொற்பாத
மேத்தியிருஞ்சுனைநீராடேலோரெம்பாவாய். 12

பைங்குவளைக்கார்மலராற்செங்கமலப்பைம்போதா
லங்கங்குருகினத்தாற்பின்னுமரவத்தாற்
றங்கண்மலங்கழுவுவார்வந்துசார்தலினா
லெங்கள்பிராட்டியுமெங்கோனும்போன்றிசைந்த
பொங்குமடுவிற்புகப்பாய்ந்துபாய்ந்துநஞ்
சங்கஞ்சிலம்பச்சிலம்புகலந்தார்ப்பக்
கொங்கைகள்பொங்கக்குடையும்புனல்பொங்கப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். 13

காதார்குழையாடப்பைம்பூண்கலனாடக்
கோதைகுழலாடவண்டின்குழாமாடச்
சீதப்புனலாடிச்சிற்றம்பலம்பாடி
வேதப்பொருள்பாடியப்பொருளாமாபாடிச்
சோதிதிறம்பாடிச்சூழ்கொன்றைத்தார்பாடி
யாதிதிறம்பாடியந்தமாமாபாடிப்
பேதித்துநம்மைவளர்த்தெடுத்தபெய்வளைதன்
பாதத்திறம்பாடியாடேலோரெம்பாவாய். 14

ஓரொருகாலெம்பெருமானென்றென்றேநம்பெருமான்
சீரொருகால்வாயோவாள்சித்தங்களிகூர
நீரொருகாலோவாநெடுந்தாரைகண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியா[ள்
பேரரையற்கிங்ஙனேபித்தொருவராமாறு
மாரொருவரிவ்வண்ணமாட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப்பூண்முலையீர்வாயாரநாம்பாடி
யேருருவப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். 15

முன்னிக்கடலைச்சுருக்கியெழுந்துடையா
ளென்னத்திகழ்ந்தெம்மையாளுடையாளிட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம்பிராட்டிதிருவடிமேற்
பொன்னஞ்சிலம்பிற்சிலம்பித்திருப்புருவ

மென்னச்சிலைகுலவிநந்தம்மை யாளுடையா
டன்னிற்பிரிவிலாவெங்கோமானன்பர்க்கு
முன்னியவணமக்கு முன்சுரக்குமின்னருளே
யென்னப்பொழியாய்மழையேலோரெம்பாவாய். 16

செங்கணவன்பாற்றிசைமுகன்பாற்றேவர்கள்பா
லெங்குமிலாதோரின்பநம்பாலதாக்
கொங்குண்கருங்குழலிநந்தம்மைக்கோதாட்டி
யிங்குநம்மில்லங்கடோறுமெழுந்தருளிச்
செங்கமலப்பொற்பாதந்தந்தருளுஞ்சேவகனை
யங்கணரசையடியோங்கட்காரமுதை
நங்கள்பெருமானைப்பாடிநலந்திகழப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். 17

அண்ணாமலையானடிக்கமலஞ்சென்றிறைஞ்சும்
விண்ணோர்முடியின்மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணாரிரவிகதிர்வந்துகார்கரப்பத்
தண்ணாரொளிமழுங்கித்தாரகைகடாமகலப்
பெண்ணாகியாணாயலியாய்ப்பிறங்கொளிசேர்
விண்ணாகிமண்ணாகியித்தனையும்வேறாகிக்
கண்ணாரமுதமுமாய்நின்றான்கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய்.

உங்கையிற்பிள்ளையுனக்கேயடைக்கலமென்
றங்கப்பழஞ்சொற்புதுக்குமெம்மச்சத்தா
லெங்கள்பெருமானுனக்கொன்றுரைப்போங்கே
ளெங்கொங்கைநின்னன்பரல்லார்தோள்சேரற்க
வெங்கையுனக்கல்லாதெப்பணியுஞ்செய்யற்க
கங்குல்பகலெங்கண்மற்றொன்றுங்காணற்க
விங்கிப்பரிசேயெமக்கெங்கோனல்குதியே
லெங்கெழிலென்ஞாயிறெமக்கேலோரெம்பாவாய். 19

போற்றியருளுகநின்னாதியாம்பாதமலர்
போற்றியருளுகநின்னந்தமாஞ்செந்தளிர்கள்

போற்றியெல்லாவுயிர்க்குந்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும்போகமாம்பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்குமீறாமிணையடிகள்
போற்றிமாறான்முகனுங்காணாதபுண்டரிகம்
போற்றியாமுய்யவாட்கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாமார்கழிநீராடேலோரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்.

## திருவம்மானை.

திருச்சிற்றம்பலம்.

பண்சுமந்தபாடற்பரிசுபடைத்தருளும்
பெண்சுமந்தபாகத்தன்பெம்மான்பெருந்துறையான்
விண்சுமந்தகீர்த்திவியன்மண்டலத்தீசன்
கண்சுமந்தநெற்றிக்கடவுள்கலிமதுரை
மண்சுமந்துகூலிகொண்டக்கோவான்மொத்துண்டு
புண்சுமந்தபொன்மேனிபாடுதுங்காணம்மானாய். 8

கையார்வளைசிலம்பக்காதார்குழையாட
மையார்குழல்புரளத்தேன்பாயவண்டொலிப்பச்
செய்யானைவெண்ணீறணிந்தானைச்சேர்ந்தறியாக்
கையானையெங்குஞ்செறிந்தானையன்பர்க்கு
மெய்யானையல்லாதார்க்கல்லாதவேதியனை
ஐயாறமர்ந்தானைப்பாடுதுங்காணம்மானாய். 13

திருச்சிற்றம்பலம்.

## திருக்கோத்தும்பி.

திருச்சிற்றம்பலம்.

பூவேறுகோனும்புரந்தரனும்பொற்பமைந்த
நாவேறுசெல்வியுநாரணனுநான்மறையு
மாவேறுசோதியும்வானவருந்தாமறியாச்
சேவேறுசேவடிக்கேசென்றூதாய்கோத்தும்பீ. 1

தினைத்தனையுள்ளதோர்பூவினிற்றேனுண்ணாதே
நினைத்தொறுங்காண்டொறும்பேசுந்தொறுமெப்போது

மணைத்தெலும்புண்ணொகவானந்தத்தேன்சொரியுங்
குனிப்புடையானுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. 3
கண்ணப்பனொப்பதோரன்பின்மைகண்டபி
னென்னப்பனென்னொப்பிலென்னையுமாட்கொண்டருளி
வண்ணப்பணித்தென்னைவாவென்றவான்கருணைச்
சுண்ணப்பொன்னீற்றற்கேசென்றூதாய்கோத்தும்பீ. 4

திருச்சிற்றம்பலம்.

## திருத்தெள்ளேணம்.

திருச்சிற்றம்பலம்

திருமாலும்பன்றியாய்ச்சென்றுணராத்திருவடியை
யுருநாமறியவோரந்தணனுபாண்டுகொண்டா
னொருநாமமோருருவமொன்றுமில்லாற்காயிரந்
திருநாமம்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. 1
வான்கெட்டுமாருதமாய்ந்தழனீர்மண்கெடினுந்
தான்கெட்டலின்றிச்சலிப்பறியாத்தன்மயனுக்
கூன்கெட்டுயிர்கெட்டுணர்வுகெட்டெனுள்ளமும்போய்
நான்கெட்டவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. 18

திருச்சிற்றம்பலம்.

## திருச்சாழல்.

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும்வெண்ணீறுபூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான்மறைபோலுங்காணேடீ
பூசுவதும்பேசுவதும்பூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்குமியல்பானான்சாழலோ. 1
என்னப்பனெம்பிரானெல்லார்க்குந்தானீசன்
றுன்னம்பெய்கோவணமாக்கொள்ளுமதுவென்னேடீ
மன்னுகலைதுன்னுபொருண்மறைநான்கேவான்சரடாத்
தன்னையேகோவணமாச்சாத்தினன்காண்சாழலோ. 2
கோயில்சுடுகாடுகொல்புலித்தோனல்லாடை
தாயுமிலிதந்தையிலிதான்றனியன்காணேடீ

தாயுமிலிதந்தையிலிதான்றனியனாயிடினுங்
காயிலுலகனைத்துங்கற்பொடிகாண்சாழலோ. 3

கடகரியும்பரிமாவுந்தேருமுகந்தேறாதே
இடபமுகந்தேறியவாறெனக்கறியவியம்பேடீ
தடமதில்களவைமூன்றுந்தழலெரித்தவந்நாளி
லிடபமதாய்த்தாங்கினான்றிருமால்காண்சாழலோ. 15

சலமுடையசலந்தரன்றனுடறடிந்தநல்லாழி
நலமுடையநாரணற்கன்றருளியவாறென்னேடீ
நலமுடையநாரணன்றனயனமிடந்தரனடிக்கீ
ழலராகவிடவாழியருளினன்காண்சாழலோ. 18

திருச்சிற்றம்பலம்.

## திருத்தோணோக்கம்.

திருச்சிற்றம்பலம்.

பொருட்பற்றிச்செய்கின்றபூசனைகள்போல்விளங்கச்
செருப்புற்றசீரடிவாய்க்கலசமூனமுதம்
விருப்புற்றுவேடனார்சேடறியமெய்குளிர்ந்தங்
கருட்பெற்றுநின்றவாதோணோக்கமாடாமோ. 3

பங்கயமாயிரம்பூவினிலோர்பூக்குறையத்
தங்கண்ணிடந்தரன்சேவடிமேற்சாத்தலுமே
சங்கரனெம்பிரான்சக்கரமாற்கருளியவா
றெங்கும்பரவிநாந்தோணோக்கமாடாமோ. 10

திருச்சிற்றம்பலம்.

## திருப்பள்ளியெழுச்சி.

திருச்சிற்றம்பலம்.

போற்றியென்வாழ்முதலாகியபொருளே
புலர்ந்ததுபூங்கழற்கிணைதுணைமலர்கொண்
டேற்றிநின்றிருமுகத்தெமக்கருள்மலரு
மெழினகைகொண்டுநின்றிருவடிதொழுகோஞ்

சேற்றிதழ்க்கமலங்கண்மலருந் தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யேற்றுயர்கொடியுடையாயெனையுடையா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. 1

அருணனிந்திரன்றிசையணுகினனிருள்போ
யகன்றதுவுதயநின்மலர்த்திருமுகத்தின்
கருணையின்சூரியனெழவெழநயனக்
கடிமலர்மலரமற்றண்ணலங்கண்ணாந்
திரணிரையறுபதமுரல்வனவிவையோர்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யருணிதிதரவருமானந்தமலையே
யலைகடலேபள்ளியெழுந்தருளாயே. 2

கூவினபூங்குயில்கூவினகோழி
குருகுகளியம்பினவியம்பினசங்க
மோவினதாரகையொளியொளியுதயத்
தொருப்படுகின்றதுவிருப்பொடுநமக்குத்
தேவநற்செறிகழற்றாளிணைகாட்டாய்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யாவருமறிவரியாயெமக்கெளியா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. 3

இன்னிசைவீணையர்யாழினரொருபா
லிருக்கொடுதோத்திரமியம்பினரொருபாற்
றுன்னியபிணைமலர்க்கையினரொருபாற்
றொழுகையரழுகையர்துவள்கையரொருபாற்
சென்னியிலஞ்சலிகூப்பினரொருபாற்
றிருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யென்னையுமாண்டுகொண்டின்னருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. 4

பூதங்கடோறுநின்றாயெனினல்லாற்
போக்கிலன்வரவிலனெனநினைப்புலவோர்

கீதங்கள்பாடுதலாடுதலல்லாற்
கேட்டறியோமுனைக்கண்டறிவாரைச்
சீதங்கொள்வயற்றிருப்பெருந்துறைமன்னா
சிந்தனைக்குமரியாயெங்கண்முன்வந்
தேதங்களறுத்தெம்மையாண்டருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. 5

பப்பறவீட்டிருந்துணருநின்னடியார்
பந்தனைவந்தறுத்தாரவர்பலரு
மைப்புறுகண்ணியர்மானுடத்தியல்பின்
வணங்குகின்றாரணங்கின்மணவாளா
செப்புறுகமலங்கண்மலருந்தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யிப்பிறப்பறுத்தெமையாண்டருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. 6

அதுபழச்சுவையெனவமுதெனவறிதற்
கரிதெனவெளிதெனவமரருமறியா
ரிதுவவன்றிருவுருவிவனவனெனவே
யெங்களையாண்டுகொண்டிங்கெழுந்தருளு
மதுவளர்பொழிற்றிருவுத்தரகோச
மங்கையுள்ளாய்திருப்பெருந்துறைமன்னா
வெதுவெமைப்பணிகொளுமாறதுகேட்போ
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. 7

முந்தியமுதனடுவிறுதியுமானாய்
மூவருமறிகிலரியாவர்மற்றறிவார்
பந்தணைவிரலியுநீயுநின்னடியார்
பழங்குடிறொறுமெழுந்தருளியபரனே
செந்தழல்புரைதிருமேனியுங்காட்டித்
திருப்பெருந்துறையுறைகோயிலுங்காட்டி
யந்தணனாவதுங்காட்டிவந்தாண்டா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே. 8

விண்ணகத்தேவருநண்ணவுமாட்டா
விழுப்பொருளேயுனதொழுப்படியோங்கண்
மண்ணகத்தேவந்துவாழச்செய்தானே
வண்டிருப்பெருந்துறையாய்வழியடியோங்
கண்ணகத்தேநின்றுகளிதருதேனே
கடலமுதேகரும்பேவிரும்படியா
ரெண்ணகத்தாயுலகுக்குயிரானா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. 9

புவனியிற்போய்ப்பிறவாமையினாணாம்
போக்குகின்றோமவமேயிந்தப்பூமி
சிவனுய்யக்கொள்கின்றவாறென்றுநோக்கித்
திருப்பெருந்துறையுறைவாய்திருமாலா
மவன்விருப்பெய்தவுமலரவனாசைப்
படவுநின்னலர்ந்தமெய்க்கருணையுநீயு
மவனியிற்புகுந்தெமையாட்கொள்ளவல்லா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே. 10

திருச்சிற்றம்பலம்.

## கோயின்மூத்த திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

உடையாளுன்றனடுவிருக்குமுடையாணடுவுணீயிருத்தி
யடியேனடுவுளிருவீருமிருப்பதானாலடியேனுன்
னடியார்நடுவுளிருக்குமருளைப்புரியாய்பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேயென்கருத்துமுடியும்வண்ணமுன்னின்றே. 1

சிரிப்பார்களிப்பார்தேனிப்பார்திரண்டுதிரண்டுன்றிருவார்த்தை
விரிப்பார்கேட்பார்மெச்சுவார்வெவ்வேறிருந்துன்றிருநாமந்
தரிப்பார்பொன்னம்பலத்தாடுந்தலைவாவென்பாரவர்முன்னே
நரிப்பாய்நாயேனிருப்பேனோநம்பியினித்தானல்காயே. 9

திருச்சிற்றம்பலம்.

## கோயிற்றிருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

மாறிநின்றென்னைமயக்கிடும்வஞ்சப் புலனைந்தின் வழியடைத்தமுதே, யூறிநின்றென்னுளெழுபரஞ்சோதி யுள்ளவாகாணவந்தருளாய், தேறலின்றெளிவே சிவபெருமானே திருப்பெருந்துறையுறைசிவனே, யீறிலாப்பதங்களியாவையுங்கடந்தவின்பமேயென்னுடையன்பே. 1

இன்றெனக்கருளியிருள்கடிந்துள்ளத்தெழுகின்ற ஞாயிறேபோன்று, நின்றநின்றன்மைநினைப்பறநினைந்தேனீயலாற்பிறிதுமற்றின்மை, சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாந் திருப்பெருந்துறையுறைசிவனே, யொன்றுநீயல்லையன்றியொன்றில்லையாருன்னையறியகிற்பாரே. 7

தந்ததுன்றன்னைக்கொண்டதென்றன்னைச் சங்கராவார்கொலோசதுர, ரந்தமொன்றில்லாவானந்தம்பெற்றேனியாது நீபெற்றதொன்றென்பாற், சிந்தையேகோயில்கொண்டவெம்பெருமான் றிருப்பெருந்துறையுறைசிவனே, யெந்தையேயீசாவுடலிடங்கொண்டாயானிதற்கிலனொர்கைம்மாறே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## அடைக்கலப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

செழுக்கமலத்திரளனநின்சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத்தடியருடன்போயினர்யான்பாவியேன்
புழுக்கணுடைப்புன்குரம்பைப்பொல்லாக்கல்விஞானமிலா
வழுக்குமனத்தடியேனுடையாயுன்னடைக்கலமே. 1

வெறுப்பனவேசெய்யுமென்சிறுமையைநின்பெருமையினாற்
பொறுப்பவனேயராப்பூண்பவனேபொங்குகங்கைசடைச்
செறுப்பவனேநின்றிருவருளாலென்பிறவியைவே
ரறுப்பவனேயுடையாயடியேனுன்னடைக்கலமே. 2

வழங்குகின்றாய்க்குன்னருளாரமுதத்தைவாரிக்கொண்டு
விழுங்குகின்றேன்விக்கினேன்வினையேனென்விதியின்மையாற்

றழங்கருந்தேனன்னதண்ணீர்பருகத்தந்துய்யக்கொள்ளா
யழுங்குகின்றேனுடையாயடியேனுன்னடைக்கலமே. 10

திருச்சிற்றம்பலம்.

## அதிசயப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

வைப்புமாடென்றுமாணிக்கத்தொளியென்றுமனத்திடையுருகா
செப்புநேர்முலைமடவரலியர்தங்கடிறத்திடைநைவேனை [தே
யொப்பிலாதனவுவமனிலிறந்தனவொண்மலர்த்திருப்பாதத்
தப்பனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. 1
எண்ணிலேன்றிருநாமவஞ்செழுத்துமென்னேழைமையதனா
நண்ணிலேன்கலைஞானிகடம்மொடுநல்வினைநயவாதே [லே
மண்ணிலேபிறந்திறந்துமண்ணாவதற்கொருப்படுகின்றேனை
யண்ணலாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

திருச்சிற்றம்பலம்.

## வாழாப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

பாரொடுவிண்ணாய்ப்பரந்தவெம்பரனேபற்றுநான்மற்றி
லேன்கண்டாய், சீரொடுபொலிவாய்சிவபுரத்தரசேதிருப்பெ
ருந்துறையுறைசிவனே, யாரொடுநோகேனார்க்கெடுத்துரைக்
கேனாண்டநீயருளிலையானால், வார்கடலுலகில்வாழ்கிலேன்க
ண்டாய்வருகவென்றருள்புரியாயே. 1
பழுதில்தொல்புகழாள்பங்கநீயல்லாற்பற்றுநான்மற்றிலே
ன்கண்டாய், செழுமதியணிந்தாய்சிவபுரத்தரசேதிருப்பெரு
ந்துறையுறைசிவனே, தொழுவனோபிறரைத்துதிப்பனோவெ
னக்கோர்துணையெனநினைவனோசொல்லாய், மழவிடையா
னேவாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. 10

திருச்சிற்றம்பலம்.

## அருட்பத்து.

திருச்சிற்றம்பலம்.

சோதியேசுடரேசூழொளிவிளக்கேசுரிகுழற்பணைமுலை
மடந்தை, பாதியேபரனேபால்கொள்வெண்ணீற்றாய்பங்கயத்

தயனுமாலறியா, நீதியேசெல்வத்திருப்பெருந்துறையினிறை மலர்க்குருந்தமேவியசீ, ராதியேயடியேனுதரித்தழைத்தால தெந்துவேயென்றருளாயே, 1

நிருத்தனேநிமலாநீற்றனேநெற்றிக்கண்ணனேவிண்ணு ளோர்பிரானே, யொருத்தனேயுன்னையோலமிட்டலறியுல கெலாந்தேடியுங்காணேன், றிருத்தமாம்பொய்கைத்திருப் பெருந்துறையிற்செழுமலர்க்குருந்தமேவியசீ, ரருத்தனேயடி யேனுதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே. 2

திருச்சிற்றம்பலம்.

## திருக்கழுக்குன்றப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

பிணக்கிலாதபெருந்துறைப்பெருமானுன்னுமங்கள்பேசுவார்க்
கிணக்கிலாததோரின்பமேவருந்துன்பமேதுடைத்தெம்பிரா
னுணக்கிலாததோர்வித்துமேல்விளையாமெலன்வினையொத்தபின்
கணக்கிலாத்திருக்கோலநீவந்துகாட்டினாய்கழுக்குன்றிலே.

பிட்டுநேர்படமண்சுமந்தபெருந்துறைப்பெரும்பித்தனே
சட்டநேர்படவந்திலாதசழக்கனேனுனைச்சார்ந்திலேன்
சிட்டனேசிவலோகனேசிறுநாயினுங்கடையாயவெங் [றிலே
கட்டனேனையுமாட்கொள்வான்வந்துகாட்டினாய்கழுக்குன்

இயக்கிமாரறுபத்துநால்வரையெண்குணஞ்செஞ்செய்தவீசனே
மயக்கமாயதோர்மும்மலப்பழவல்வினைக்குளழுந்தவுந்
துயக்கறுத்தெனையாண்டுகொண்டுநின்றாய்மலர்க்கழறந்தெனைக்
கயக்கவைத்தடியார்முனேவந்துகாட்டினாய்கழுக்குன்றிலே.

திருச்சிற்றம்பலம்.

## கண்டபத்து.

திருச்சிற்றம்பலம்

இந்திரியவயமயங்கியிறப்பதற்கேகாரணமா
யந்தாமே திரிந்துபோயருநரகில்வீழ்வேற்குச்
சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வந்தமிலாவானந்தமணிகொடில்லைகண்டேனே. 1

வினைப்பிறவியென்கின்றவேதனையிலகப்பட்டுத்
தனைச்சிறிதுநினையாதேதளர்வெய்திக்கிடப்பேனை
யெனைப்பெரிதுமாட்கொண்டென்பிறப்பறுத்தவிணையிலியை
யனைத்துலகுந்தொழுந்தில்லையம்பலத்தேகண்டேனே. 2
பூதங்களைந்தாகிப்புலனாகிப்பொருளாகிப்
பேதங்களனைத்துமாய்ப்பேதமிலாப்பெருமையனைக்
கேதங்கள்கெடுத்தாண்டகிளரொளியைமரகதத்தை
வேதங்கடொழுதேத்தும்விளங்குதில்லைகண்டேனே. 10

திருச்சிற்றம்பலம்.

## பிரார்த்தனைப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

கூடிக்கூடியுன்னடியார்குனிப்பார்சிரிப்பார்களிப்பாரா
வாடிவாடிவழியற்றேன்வற்றன்மரம்போனிற்பேனோ
வூடியூடியுடையாயொடுகலந்துள்ளுருகிப்பெருகிநெக்
காடியாடியானந்தமதுவேயாகவருள்கலந்தே. 11

திருச்சிற்றம்லபம்.

## குழைத்தபத்து.

திருச்சிற்றம்பலம்.

கூறுநாவேமுதலாகக்கூறுங்கரணமெல்லாநீ
தேறும்வகைநீதிகைப்புநீதீமைநன்மைமுழுதுநீ [துரைக்கிற்
வேறோர்பரிசிங்கொன்றில்லைமெய்ம்மையுன்னைவிரித் [வோ
றேறும்வகையென்சிவலோகாதிகைத்தாற்றேற்றவேண்டா
வேண்டத்தக்கதறிவோய்நீவேண்டமுழுதுந்தருவோய்நீ [ய்
வேண்டுமயன்மாற்கரியோய்நீவேண்டியென்னைப்பணிகொண்டா
வேண்டிநீயாதருள்செய்தாயானுமதுவேவேண்டினல்லால்
வேண்டும்பரிசொன்றுண்டென்னிலதுவுமுன்றன்விருப்பன்றே.

திருச்சிற்றம்பலம்.

## அச்சப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

புற்றில்வாளரவுமஞ்சேன்பொய்யர்தம்மெய்யுமஞ்சேன்
சுற்றைவார்சடையெம்மண்ணல்கண்ணுதல்பாதநண்ணி

மற்றுமோர்தெய்வந்தன்னையுண்டெனநினைந்தெம்பெம்மாற்
கற்றிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. 1
பிணியெலாம்வரினுமஞ்சேன்பிறப்பினோடிறப்புமஞ்சேன்
றுணிநிலாவணியினான்றன்றொழும்பரோடழுந்தியம்மா
றிணிநிலம்பிளந்துங்காணாச்சேவடிபரவிவெண்ணீ
றணிகிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. 5
கோணிலாவாளியஞ்சேன்கூற்றுவன்சீற்றமஞ்சே
னீணிலாவணியினானைநினைந்துநைந்துருகிநெக்கு
வாணிலாங்கண்கள்சோரவாழ்த்திநின்றேத்தமாட்டா
வாணலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருப்பாண்டிப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

காலமுண்டாகவேகாதல்செய்துய்மின்கருதரிய
ஞாலமுண்டானொடுநான்முகன்வானவர்நண்ணரிய
வாலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான்றன்னடியவர்க்கு
மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே. 5

திருச்சிற்றம்பலம்.

## பிடித்தபத்து.

திருச்சிற்றம்பலம்.

உம்பர்கட்கரசேயொழிவறநிறைந்தயோகமேயூற்றை
யேன்றனக்கு, வம்பெனப்பழுத்தென்குடிமுழுதாண்டுவாழ்
வறவாழ்வித்தமருந்தே, செம்பொருட்டுணிவேசீருடைக்கழ
லேசெல்வமேசிவபெருமானே, யெம்பொருட்டுன்னைச்சிக்கெ
னப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே. 1

அம்மையேயப்பாவொப்பிலாமணியேயன்பினில்விளைந்
தவாரமுதே, பொய்ம்மையேபெருக்கிப்பொழுதினைச்சுருக்கு
ம்புழுத்தலைப்புலையனேன்றனக்குச், செம்மையேயாயசிவப
தமளித்தசெல்வமேசிவபெருமானே, யிம்மையேயுன்னைச்சிக்
கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே. 2

பானினைந்தூட்டுந்தாயினுஞ்சாலப் பரிந்துநீபாவியேனு
டைய, வூனினையுருக்கியுள்ளொளிபெருக்கியுலப்பிலாவானந்த
மாய, தேனினைச்சொரிந்துபுறம்புறந்திரிந்தசெல்வமே சிவ
பெருமானே, யானுனைத்தொடர்ந்து சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. 9

திருச்சிற்றம்பலம்.

## திருவேசறவு.

திருச்சிற்றம்பலம்.

இரும்புதருமனத்தேனையீர்த்தீர்த்தென்னென்புருக்கிக்
கரும்புதருசுவையெனக்குக்காட்டினையுன்கழலிணைக
ளொருங்குதிரையுலவுசடையுடையானேநரிகளெல்லாம்
பெருங்குதிரையாக்கியவாறன்றேயுன்பேரருளே. 1

நானேயோதவஞ்செய்தேன்சிவாயநமவெனப்பெற்றேன்
றேனாயின்னமுதமுமாய்த்தித்திக்குஞ்சிவபெருமான்
றானேவந்தெனதுள்ளம்புகுந்தடியேற்கருள்செய்தா
னூனாருமுயிர்வாழ்க்கையொறுத்தன்றேவெறுத்திடவே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருப்புலம்பல்.

திருச்சிற்றம்பலம்.

பூங்கமலத்தயனொடுமாலறியாதநெறியானே
கோங்கலர்சேர்குவிமுலையாள்கூறாவெண்ணீறாடி
யோங்கெயில்சூழ்திருவாரூருடையானேயடியேனின்
பூங்கழல்களவையல்லாதெவையாதும்புகழேனே. 1

உற்றாரையான்வேண்டேனூர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன்கற்பனவுமினியமையுங்
குற்றாலத்தமர்ந்துறையுங்கூத்தாவுன்குரைகழற்கே
கற்றாவின்மனம்போலக்கசிந்துருகவேண்டுவனே. 3

திருச்சிற்றம்பலம்.

## சென்னிப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

தேவதேவன்மெய்ச்சேவகன்றென்பெருந்துறைநாயகன்
மூவராலுமறியொணாமுதலாயவானந்தமூர்த்தியான்

யாவராயினுமன்பரன்றியறியொணாமலர்ச்சோதியான்
றூயமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிச்சுடருமே. 1
முத்தனைமுதற்சோதியைமுக்கணப்பனைமுதல்வித்தினைச்
சித்தனைச்சிவலோகனைத்திருநாமம்பாடித்திரிதரும்
பத்தர்காளிங்கேவம்மினீருங்கள்பாசந்தீரப்பணிமினோ
சித்தமார்தருஞ்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருப்படையாட்சி.

திருச்சிற்றம்பலம்.

கண்களிரண்டுமவன்கழல்கண்டுகளிப்பனவாகாதே
காரிகையார்கடம்வாழ்விலென்வாழ்வுகடைப்படுமாகாதே
மண்களில்வந்துபிறந்திடுமாறுமறந்திடுமாகாதே
மாலறியாமலர்ப்பாதமிரண்டும்வணங்குதுமாகாதே
பண்களிகூர்தருபாடலொடாடல்பயின்றிடுமாகாதே
பாண்டிநன்னாடுடையான்படையாட்சிகள்பாடுதுமாகாதே
விண்களிகூர்வதோர்வேதகம்வந்துவெளிப்படுமாகாதே
மீன்வலைவீசியகானவன்வந்துவெளிப்படுமாயிடிலே. 1
சங்குதிரண்டுமுரன்றெழுமோசைதழைப்பனவாகாதே
சாதிவிடாதகுணங்கணமோடுசலித்திடுமாகாதே
யங்கிதுநன்றிதுநன்றெனுமாயையடங்கிடுமாகாதே
யாசையெலாமடியாரடியோமெனுமத்தனையாகாதே
செங்கயலொண்கண்மடந்தையர்சிந்தைதிகைப்பனவாகாதே
சீரடியார்கள்சிவானுபவங்கடெரிந்திடுமாகாதே
யெங்குநிறைந்தமுதூறுபரஞ்சுடரெய்துவதாகாதே
யீறறியாமறையோனெனையாளவெழுந்தருளப்பெறிலே. 8

திருச்சிற்றம்பலம்.

## ஆனந்தமாலை.

திருச்சிற்றம்பலம்

சீலமின்றிநோன்பின்றிச்செறிவேயின்றியறிவின்றித்
தோலின்பாவைக்கூத்தாட்டாய்ச்சுழன்றுவிழுந்துகிடப்பேனை

மாலுங்காட்டிவழிகாட்டி வாராவுலகநெறியேறக்
கோலங்காட்டியாண்டானைக்கொடியேனென்றோகூடுவதே.

தாயாய்முலையைத்தருவானேதாராதொழிந்தாற்சவலையாய்
நாயேன்கழிந்துபோவேனோநம்பியினித்தானல்குதியே
தாயேயென்றுன்றாளடைந்தேன்றயாநீயென்பாலில்லையே
நாயேனடிமையுடனாகவாண்டாய்நான்றான்வேண்டாவோ,

நரியைக்குதிரைப்பரியாக்கிஞாலமெல்லாநிகழ்வித்துப்
பெரியதென்னன்மதுரையெல்லாம்பிச்சதேற்றும்பெருந்துறையா
யரியபொருளேயவனுசிபப்பாபாண்டிவெள்ளமே
தெரியவரியபரஞ்சோதீசெய்வதொன்றுமறியேனே. 7

திருச்சிற்றம்பலம்.

## அச்சோப்பதிகம்,

திருச்சிற்றம்பலம்.

முத்திநெறியறியாதமூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. 1

நெறியல்லாநெறிதன்னைநெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமேதிருவருளேசேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாதகூத்தன்றன்கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவாறார்பெறுவாரச்சோவே. 2

செம்மைநலமறியாதசிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்துமுதலாயமுதல்வன்றா
னம்மையுமோர்பொருளாக்கிநாய்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. 9

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

# உ. திருக்கோவையார்.

## நூற்சிறப்பு.

---

ஆரணங்காணென்பரந்தணர்யோகியராகமத்தின்
காரணங்காணென்பர்காமுகர்காமநன்னூலதென்ப
ரேரணங்காணென்பரெண்ணரெழுத்தென்பரின்புலவோர்
சீரணங்காயசிற்றம்பலக்கோவையைச்செப்பிடினே.

திருச்சிற்றம்பலம்.

திருவளர்தாமரைசீர்வளர்காவிகளீசர்தில்லைக்
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்கு
மருவளர்மாலையொர்வல்லியினொல்கியனநடைவாய்ந் [தெய்வ
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே.

வளைபயில்கீழ்கடனின்றிடமேல்கடல்வானுகத்தின்
றுளைவழிநேர்கழிகோத்தெனத்தில்லைத்தொல்லோன்கயிலைக்
கிளைவயினீக்கிக்கெண்டையங்கண்ணியைக்கொண்டுதந்த
விளைவையல்லால்வியவேனயவேன்றெய்வமிக்கனவே.

கூம்பலங்கைத்தலத்தன்பரென்பூடுருகக்குனிக்கும்
பாம்பலங்காரப்பரன்றில்லையம்பலம்பாடலரிற்
றேம்பலஞ்சிற்றிடையீங்கிவடீங்கனிவாய்கமழு
மாம்பலம்போதுளவோவளிகாணும்மகன்பணையே.

சிறைவான்புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளு
முறைவானுயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமிழின்
றுறைவாய்நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்புக்கோ
விறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே.

யாழுமெழுதியெழின்முத்தெழுதியிருளின்மென்பூச்
சூழுமெழுதியொர்தொண்டையுந்தீட்டியென்றொல்பிறவி
யேழுமெழுதாவகைசிதைத்தோன்புலியூரிளமாம்
போழுமெழுதிற்றொர்கொம்பருண்டேற்கொண்டுபோதுகவே.

ஆனந்தவெள்ளத்தழுந்துமொராருயிரீருருக்கொண்
டானந்தவெள்ளத்திடைதிளைத்தாலொக்குமம்பலஞ்சே
ரானந்தவெள்ளத்தறைகழலோனருள்பெற்றவரி
னானந்தவெள்ளம்வற்றாதுமுற்றாதிவ்வணிநலமே.

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாந்திருமுறை.

# க. திருவிசைப்பா.

திருமாளிகைத்தேவர்.

## கோயில்.

பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஒளிவளர்விளக்கே யுலப்பிலாவொன்றே
யுணர்வுசூழ்கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக்குன்றே
சித்தத்துட்டித்திக்குந்தேனே
யளிவளருள்ளத் தானந்தக்கனியே
யம்பலமாடரங்காக
வெளிவளர்தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமாவிளம்பே. 1

தனதனற்றோழா சங்கராசூல
பாணியேதாணுவே சிவனே
கனகநற்றூணே கற்பகக்கொழுந்தே
கண்கணூன் றுடையதோர் கரும்பே
யனகனேகுமர விநாயகசனக
வம்பலத்தமரசேகரனே
யுனகழலிணையென் னெஞ்சினுள்ளினிதாத்
தொண்டனேனுகருமா றுகரே. 7

மறைகளுமமரர் கூட்டமுமாட்டா
தயன்றிருமாலொடு மயங்கி
முறைமுறைமுறையிட் டோர்வரியாயை
மூர்க்கனேன்மொழிந்த புன்மொழிக
ளறைகழலரன்சீரறிவிலாவெறுமைச்
சிறுமையிற்பொறுக்கு மம்பலத்து
ணிறைதருகருணை நிலயமேயுன்னைத்
தொண்டனே னினையுமாநினையே.

திருச்சிற்றம்பலம்.

## சேந்தனார்.

# திருவீழிமிழலை.

பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஏகநாயகனையிமையவர்க்கரசை
யென்னுயிர்க் கமுதினையெதிரில்
போகநாயகனைப் புயல்வணற்கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேகநாயகனை மிகுதிருவீழி
மிழலைவிண்ணிழி செழுங்கோயில்
யோகநாயகனையன்றிமற்றொன்று
முண்டென வுணர்கிலேன்யானே. 1

கற்றவர்விழுங்குங் கற்பகக்கனியைக்
கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணிவிளக்கைச்
செற்றவர்புரங்கள் செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன்றன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே. 2

பாடலங்காரப்பரிசில்காசருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர்சூடி
நீடலங்காரத்தெம்பெருமக்க
ணெஞ்சினுணிறைந்துநின்றானை
வேடலங்காரக்கோலத்தினமுதைத்
திருவீழிமிழலையூராளுங்
கேடிலங்கீர்த்திக்கனககற்பகத்தைக்
கெழுமுதற்கெவ்விடத்தேனே. 12

திருச்சிற்றம்பலம்.

# திருவிடைக்கழி.

பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மாலுலாமனந்தந்தென்கையிற்சங்கம்
வவ்வினான் மலைமகண்மதலை
மேலுலாந்தேவர்குலமுழுதாளுங்
குமரவேள்வள்ளிதன் மணாளன்
சேலுலாங்கழனித் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
வேலுலாந்தடக்கை வேந்தனென்
சேந்தனென்னுமென்மெல்லியலிவளே. 1

பரிந்தசெஞ்சுடரோபரிதியோமின்னோ
பவளத்தின்குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந்துரமோ தூமணித்திரளோ
சுந்தரத்தரசிது வென்னத்
தெரிந்தவைதிகர்வாழ் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
வரிந்தவெஞ்சிலைக்கை மைந்தனையஞ்சொன்
மையல்கொண்டையுறும் வகையே. 7

கொழுந்திரள்வாயார் தாய்மொழியாகத்
தூய்மொழியமரர்கோமகனைச்
செழுந்திரட்சோதிச் செப்புறைச்சேந்தன்
வாய்ந்தசொல்லிவை சுவாமியையே
செழுந்தடம்பொழில்சூழ் திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ்நின்ற
வெழுங்கதிரொளியை யேத்துவார்கேட்பா
ரிடர்கெடுமாலுலா மனமே. 11

திருச்சிற்றம்பலம்.

## கருவூர்த்தேவர்.

# கங்கைகொண்டசோளேச்சரம்.

பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

அன்னமாய்விசும்பு பறந்தயன்றேட
வங்ஙனேபெரியநீ சிறிய
வென்னையாள்விரும்பி யென்மனம்புகுந்த
வெளிமையையென்றுநான் மறக்கேன்
முன்னமாலறியா வொருவனாமிருவா
முக்கணாநாற்பெருந் தடந்தோட்
கன்னலேதேனே யமுதமேகங்கை
கொண்டசோளேச்சரத் தானே. 1

அற்புதத்தெய்வ மிதனின்மற்றுண்டே
யன்பொடுதன்னைய ஞ்செழுத்தின்
சொற்பதத்துள்வைத் துள்ளமள்ளூறுந்
தொண்டருக்கெண்டிசைக் கனகம்
பற்பதக்குவையும் பைம்பொன்மாளிகையும்
பவளவாயவர்பணை முலையுங்
கற்பகப்பொழிலு முழுதுமாங்கங்கை
கொண்டசோளேச்சரத் தானே. 3

சுருதிவானவனாந் திருநெடுமாலாஞ்
சுந்தரவிசும்பி னிந்திரனாம்
பருதிவானவனாம் படர்சடைமுக்கட்
பகவனாமகவுயிர்க் கமுதா
மெருதுவாகனனா மெயில்கண்மூன்றெரித்த
வேறுசேவகனுமாம் பின்னுங்
கருதுவார்கருது முருவமாங்கங்கை
கொண்டசோளேச்சரத் தானே. 5

தத்தையங்கனையார் தங்கண்மேல்வைத்த
தயாவைநூ றாயிரங்கூறிட்

டத்திலங்கொருகூ றுன்கண்வைத்தவருக்
கமருலகளிக்குநின் பெருமை
பித்தனென்றொருகாற் பேசுவரேனும்
பிழைத்தவைபொறுத்தருள் செய்யுங்
கைத்தலமடியேன் சென்னிமேல்வைத்தகங்கை
கொண்டசோளேச்சரத் தானே. 8

மங்கையோடிருந்தேயோகுசெய்வானை
வளரிளந்திங்களை முடிமேற்
கங்கையோடணியுங் கடவுளைக்கங்கை
கொண்ட சோளேச்சரத்தானை
யங்கையோடேந்திப் பலிதிரிகருவூ
ரறைந்தசொன்மாலையா லாழிச்
செங்கையோடுலகி லரசுவீற்றிருந்து
திளைப்பதுஞ்சிவனருட் கடலே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருச்சாட்டியக்குடி.

பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பாந்தள்பூணாரம்பரிகலங்கபாலம்
பட்டவர்த்தன மெருதன்பர்
வார்ந்தகண்ணருவி மஞ்சனசாலை
மலைமகள் மகிழ்பெருந்தேவி
சாந்தமுந்திருநீ றருமறைகீதஞ்
சடைமுடி சாட்டியக்குடியா
ரேந்தெழிலிதயங் கோயின்மாளிகையே
ழிருக்கையு ளிருந்தவீசனுக்கே. 2

திருமகன்முருகன் றேவியே யுமையா
டிருமகண் மருமகன்றாயா
மருமகன்மதனன் மாமனேவிமவான்
மலையுடை யரையர்தம்பாவை

தருமலிவளனுஞ் சிவபுரன்றோழன்
றனபதி சாட்டியக்குடியா
ரிருமுகங்கழன்மூன் றேழுகைத்தலமே
ழிருக்கையி லிருந்தவீசனுக்கே. 5
தாட்டரும்பழனப் பைம்பொழிற்படுகர்த்
தண்டலைச் சாட்டியக்குடியா
ரீட்டியபொருளா யிருக்குமேழிருக்கை
யிருந்தவன் றிருவடிமலர்மேற்
காட்டியபொருட்கலை பயில்கருவூரன்
கழறுசொன் மாலையீரைந்து
மாட்டியசிந்தை மைந்தருக்கன்றே
வளரொளிவிளங்குவா னுலகே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## பூந்துருத்திநம்பிகாடநம்பி-

# திருவாரூர்.

பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்,

கைக்குவான்முத்தின் சரிவளைபெய்து
கழுத்திலோர் தனிவடங்கட்டி
முக்கணாயகராய்ப் பவனிபோந்திங்ஙன்
முரிவதோர்முரிவுமையளவுந்
தக்கசீர்க்கங்கை யளவுமென்றென்னோ
தம்மொருப்பாடுலகதன்மேன்
மிக்கசீராரூ ராதியாய்வீதி
விடங்காராய் நடங்குலாவினரே. 1
பத்தியாயுணர்வோ ரருளைவாய்மடுத்துப்
பருகுதோறமுதமொத்தவர்க்கே
தித்தியாவிருக்குந் தேவர்காளிவர்தந்
திருவுருவிருந்தவாபாரீர்
சத்தியாய்ச்சிவமா யுலகெலாம்படைத்த
தனிமுழுமுதலுமாயதற்கோர்
வித்துமாயாரூ ராதியாய்வீதி
விடங்கராய்நடங்குலாவினரே. 2

திருச்சிற்றம்பலம்.

---

# கோயில்.

பண் - சாளரபாணி

திருச்சிற்றம்பலம்.

முத்துவயிரமணி மாணிக்க மாலைகண்மேற்
றொத்துமிளிர்வனபொற் றூண்டுவிளக்கேய்ப்ப
வெத்திசையும்வானவர்க ளேத்துமெழிற் றில்லை
யத்தனுக்குமம்பலமே யாடரங்கமாயிற்றே. 1

கடியார்கணம்புல்லர் கண்ணப்பரென் று
னடியாரமருலக மாளநீயாளாதே
முடியாமுத்தீவேள்விமூவாயிரவரொடுங்
குடிவாழ்க்கைகொண்டுநீ குலாவிக்கூத்தாடினையே. 2

அல்லியம்பூம்பழனத் தாமூர்நாவுக்கரசைச்
செல்லநெறிவகுத்த சேவகனே தென்றில்லைக்
கொல்லைவிடையேறிகூத்தாடரங்காகச்
செல்வநிறைந்த சிற்றம்பலமே சேர்ந்தனையே. 3

எம்பந்தவல்வினைநோய் தீர்த்திட் டெமையாளுஞ்
சம்பந்தன் காழியர்கோன் றன்னையுமாட் கொண்டருளி
யம்புந்து கண்ணாளுந் தானுமணிதில்லைச்
செம்பொன் செயம்பலமே சேர்ந்திருக்கையாயிற்றே. 4

கலையாவுடலோடு சேரமானாரூரன்
விலையாமதமாறு வெள்ளானைமேல்கொள்ள
முளையாமதிருகுடி மூவாயிரவரொடு
மனையாவிளையாடு மம்பலநின்னாடரங்கே. 5

அகலோகமெல்லா மடியவர்க டற்சூழப்
புகலோகமுண்டென்று புகுமிடநீதேடாதே
புவலோகநெறிபடைத்த புண்ணியங்க ணண்ணியசீர்ச்
சிவலோகமாவதுவுந் தில்லைச்சிற்றம்பலமே. 6

சேடருறைதில்லைச் சிற்றம்பலத்தான்ற
னாடலதிசயத்தை யாங்கறிந்துபூந்துருத்திக்
காடன்றமிழ்மாலை பத்துங்கருத்தறிந்து
பாடுமிவைவல்லார் பற்றுநிலைப்பற்றுவரே. 11

திருச்சிற்றம்பறம்.

## கண்டராதித்தர்.

## கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னாருருவ மேல்விளங்கவெண்கொடி மாளிகைசூழப்
பொன்னார்குன்ற மொன்றுவந்து நின்றதுபோலுமென்னா
தென்னாவென் றுவண்டுபாடுந் தென்றில்லை யம்பலத்து
ளென்னாரமுதையெங்கள்கோவையென் றுகொலெய்துவதே.

சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடி தன்னைக்
காரார்சோலைக்கோழிவேந்தன் றஞ்சையர்கோன்கலந்த
வாராவின்சொற்கண்டராதித்த னருந்தமிழ்மாலைவல்லார்
பேராவுலகிற்பெருமையோடும் பேரின்பமெய்துவரே. 10

திருச்சிற்றம்பலம்.

## வேணாட்டடிகள்.

## கோயில்.

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்.

துச்சானசெய்திடினும் பொறுப்பான்றேயாளுகப்பார்
கைச்சாலுஞ்சிறுகதலி யிலைவேம்புங்கறிகொள்வா
ரெச்சார்வுமில்லாமை நீயறிந்துமெனதுபணி
நச்சாய்காண்டிருத்தில்லை நடம்பயிலு நம்பானே. 1

பாவார்ந்த தமிழ்மாலை பத்தரடித் தொண்டனெடுத்
தோவாதே யழைக்கின்றானென்றருளி நன்றுமிகத்
தேவேதென் றிருத்தில்லைக் கூத்தாடீ நாயடியேன்
சாவாயு நினைக்காண்ட லினியுனக்குத் தடுப்பரிதே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருவாலியமுதனார்.

## கோயில்.

பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பவளமால்வரையைப் பனிபடர்ந்தனையதோர்
படரொளி தருதிருநீறுங்

குவளைமாமலர்க்கண்ணியுங் கொன்றையுந்
துன்றுபொற் குழற்றிருச்சடையுந்
திவளமாளிகை சூழ்தருதில்லையுட்
டிருநடம் புரிகின்ற
தவளவண்ணனை நினைதொறுமென்மனந்
தழன்மெழு கொக்கின்றதே. 1
வைத்தபாதங்கண் மாலவன்காண்கிலன்
மலரவன் முடிதேடி
யெய்த்துவந்திழிந் தின்னமுந்துதிக்கின்றா
ரெழின்மறை யவற்றாலே
செய்த்தலைக்கமலம்மலர்ந்தோங்கிய
தில்லையம்பலத் தானைப்
பத்தியாற்சென்று கண்டிடவென்மனம்
பதைபதைப்பொழியாதே. 5
புரியும்பொன்மதில் சூழ்தருதில்லையுட்
பூசுரர் பலர்போற்ற
வெரியதாடுமெம் மீசனைக்காதலித்
தினையவண் மொழியாக
வரைசெய்மாமதின் மயிலையர்மன்னவன்
மறைவல திருவாலி
பரவல்பத்திவை வல்லவர்பரமன
தடியிணை பணிவாரே. 10

திருச்சிற்றம்பலம்.

## புருடோத்தமநம்பி.

## கோயில்.

பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

வாரணிநறுமலர் வண்டுகெண்டு
பஞ்சமஞ்செண்பக மாலைமாலை
வாரணிவனமுலை மெலியும்வண்ணம்
வந்துவந்திவைநம்மை மயக்குமாலோ

சீரணிமணிதிகழ் மாடமோங்கு
தில்லையம்பலத்தெங்கள் செல்வன்வாரா
னாரெனையருள் புரிந்தஞ்சலென்பா
ராவியின்பரமென்ற னாதரவே. 1

ஆசையையளவறுத் தாரிங்காரே
யம்பலத்தருநட மாடுவானை
வாசநன்மலரணி குழன்மடவார்
வைகலுங்கலந்தெழு மாலைப்பூசன்
மாசிலாமறைபல வோதுநாவன்
வண்புருடோத்தமன் கண்டுரைத்த
வாசகமலர்கள்கொண் டேத்தவல்லார்
மலைமகள்கணவனை யணைவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

சேதிராயர்.

# கோயில்.

பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சேலுலாம்வயற் றில்லையுளீருமைச்
சாலநாளயன் சார்வதினாலிவள்
வேலையார்விட முண்டுகந்தீரென்று
மாலதாகுமென் வாணுதலே. 1

அன்றருக்கனைப் பல்லிறுத்தானையைக்
கொன்றுகாலனைக் கோளிழைத்தீரெனுந்
தென்றலார்பொழிற் றில்லையுளீரிவ
ளொன்றுமாகில ளும்பொருட்டே. 9

ஏயுமாறெழிற் சேதிபர்கோன்றில்லை
நாயனாரை நயந்துரைசெய்தன
தூயவாறுரைப் பார்துறக் கத்திடை
யாயவின்ப மெய்தியிருப்பரே. 10

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

சேந்தனா ரருளிச்செய்த

# உ. திருப்பல்லாண்டு.

## கோயில்.

பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மன்னுகதில்லை வளர்கநம்பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவா ளுமைகோனடியோமுக்
கருள்புரிந்து
பின்னைப்பிறவி யறுக்கநெறிதந்த
பித்தற்குப்பல்லாண்டுகூறுதுமே. 1

மிண்டுமனத்தவர்போமின் கண்மெய்யடியார்கள்
விரைந் துவம்மின்
கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்தபொருளளவில்லதோ
ரானந்தவெள்ளப் பொருள்
பண்டுமின்றுமென்று முள்ளபொருளென்றே
பல்லாண்டுகூறுதுமே. 2

நிட்டையிலாவுட னீத்தென்னையாண்ட
நிகரிலாவண்ணங்களுஞ்
சிட்டன்சிவனடி யாரைச்சீராட்டுந்
திறங்களுமேசிந்தித்த்
தட்டமூர்த்திக்கென் னகநெகவூறு
மமிர்தினுக்காலநிழற்
பட்டனுக்கென்னைத்தன் பாற்படுத்தானுக்கே
பல்லாண்டுகூறுதுமே. 3

சொல்லாண்டசுருதிப் பொருள்சோதித்த
தூய்மனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற்சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறிசேராமே
வில்லாண்டகனகத்திரண் மேருவிடங்கன்
விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டுகூறுதுமே. 4

புரந்தரன்மாலயன் பூசலிட்டோலமிட்
டின்னம்புகலரிதா
யிரந்திரந்தழைப்ப வென்னுயிராண்டகோவினுக்
கென்செய வல்லமென்றுங்
கரந்துங்கரவாத கற்பகனாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்துநிரந்தும் வரம்பிலாப்பாங்கற்கே
பல்லாண்டுகூறுதுமே. 5

சேவிக்கவந்தய னிந்திரன்செங்கண்மா
லெங்குந்திசைதிசையன
கூவிக்கவர்ந்து நெருங்கிக்குழாங்குழா
மாய்நின்றுகூத்தாடு
மாவிக்கமுதையென் னார்வத்தனத்தினை
யப்பனையொப்பமரர்
பாவிக்கும்பாவகத் தப்புறத்தானுக்கே
பல்லாண்டுகூறுதுமே. 6

சீருந்திருவும் பொலியச்சிவலோக
நாயகன்சேவடிக்கீ
ழாரும்பெறாத வறிவுபெற்றேன்
பெற்றதார்பெறுவாருலகி
லூருமுலகுங் கழறவுழறி
யுமைமணவாளனுக்காட்

பாரும்விசும்பு மறியும்பரிசுநாம்
பல்லாண்டுகூறுதுமே. 7
சேலுங்கயலுந் திளைக்குங்கண்ணாரிளங்
கொங்கையிற்செங்குங்குமம்
போலும்பொடியணி மார்பிலங்குமென்று
புண்ணியர்போற்றிசைப்ப
மாலுமயனு மறியாநெறிதந்து
வந்தென்மனத்தகத்தே
பாலுமமுதமு மொத்துநின்றானுக்கே
பல்லாண்டுகூறுதுமே. 8
பாலுக்குப்பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கர மன்றருள்செய்தவன்
மன்னிய தில்லைதன்னு
ளாலிக்குமந்தணர் வாழ்கின்றசிற்றம்
பலமேயிடமாகப்
பாலித்துநட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டுகூறுதுமே. 9

தாதையைத்தாளற வீசியசண்டிக்கிவ்
வண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப்பொற்கோயிலும்
போனகமுமருளிச்
சோதிமணிமுடித் தாமமுநாமமுந்
தொண்டர்க்குநாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே
பல்லாண்டுகூறுதுமே. 10

குழலொலியாழொலி கூத்தொலியேத்தொலி
யெங்குங்குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ்சென்று
விம்மிமிகுதிருவாரூரின்

மழவிடையார்க்கு வழிவழியாளாய்
மணஞ்செய்குடிப்பிறந்த
பழவடியாரொடுங் கூடியெம்மானுக்கே
பல்லாண்டுகூறுதுமே. 11

ஆரார்வந்தா ரமரர்குழாத்தி
லணியுடையாதிரைநாள்
நாராயணனொடு நான்முகனங்கி
யிரவியுமிந்திரனுந்
தேரார்வீதியிற் றேவர்குழாங்க
டிசையனைத்துநிறைந்து
பாரார்தொல்புகழ் பாடியுமாடியும்
பல்லாண்டுகூறுதுமே. 12

எந்தையெந்தாய் சுற்றமுற்று
மெமக்கமுதாமெம்பிரானென்றென்று
சிந்தைசெய்யுஞ்சிவன் சீரடியாரடிநாய்
செப்புரை
யந்தமிலானந்தச் சேந்தனெனைப்புகுந்
தாண்டுகொண்டாருயிர்மேற்
பந்தம்பிரியப் பரிந்தவனேயென்று
பல்லாண்டுகூறுதுமே. 13

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்

## பத்தாந் திருமுறை.

## திருமூலநாயனாரருளிச்செய்த

# திருமந்திரம்.

---

### விநாயகர் காப்பு.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

---

சிவனொடொக்குந்தெய்வந்தேடினுமில்லை
யவனொடொப்பாரிங்கியாவருமில்லை
புவனங்கடந்தன்றுபொன்னொளிமின்னுந்
தவளச்சடைமுடித்தாமரையானே. 1

பொன்னாற்புரிந்திட்டபொற்சடையென்னப்
பின்னாற்பிறங்கவிருந்தவன்பேர்நந்தி
யென்னாற்றொழப்படுமெம்மிறைமற்றவன்
றன்னாற்றொழப்படுவாரில்லைதானே. 2

வேதத்தைவிட்டவறமில்லைவேதத்தி
னோதத்தகுமறமெல்லாமுளதர்க்க
வாதத்தைவிட்டுமதிஞர்வளமுற்ற
வேதத்தையோதியேவீடுபெற்றார்களே. 3

அஞ்சனமேனியரிவையொர்பாகத்த
னஞ்சொடிருபத்துமூன்றுளவாகம
மஞ்சலிகூப்பியறுபத்தறுவரு
மஞ்சாமுகத்திலரும்பொருள்கேட்டதே. 4

அடிமுடிகாண்பாரயன்மாலிருவர்
படிகண்டிலர்மீண்டும்பார்மிசைக்கூடி
யடிகண்டிலேனென்றச்சுதன்சொல்ல
முடிகண்டனனென்றயன்பொய்மொழிந்தானே. 5

பதிபசுபாசமெனப்பகர்மூன்றிற்
பதியினைப்போற்பசுபாசமனாதி
பதியினைச்சென்றணுகாப்பசுபாசம்
பதியணுகிற்பசுபாசநில்லாவே. 6
சூரியகாந்தமுஞ்சூழ்பஞ்சும்போலவே
சூரியகாந்தஞ்சூழ்பஞ்சைச்சுடமாட்டாச்
சூரியன்சந்நிதியிற்சுடுமாறுபோ
லாரியன்றோற்றமுனற்றமலங்களே. 7
கிழக்கெழுந்தோடியஞாயிறுமேற்கே
விழக்கண்டுந்தேறார்விழியிலாமாந்தர்
குழக்கன்றுமூத்தெருதாய்ச்சிலநாளில்
விழக்கண்டுந்தேறார்வியனுலகோரே. 8
கொல்லிடுகுத்தென்றுகூறியமாக்களை
வல்லிடிக்காரர்வலிக்கயிற்றாற்கட்டிச்
செல்லிடுநில்லென்றுதீவாய்நரகிடை
நில்லிடுமென்றுநிறுத்துவர்தாமே. 9
பொல்லாப்புலாலைநுகரும்புலையரை
யெல்லாருங்காணவியமன்றன்றூதுவர்
செல்லாகப்பற்றியதீவாய்நரகத்தின்
மல்லாக்கத்தள்ளிமறித்துவைப்பாரே. 10
ஆத்தமனையாளகத்திலிருக்கவே
காத்தமனையாளைக்காமுறுங்காளையர்
காய்ச்சபலாவின்கனியுண்ணமாட்டாம
லீச்சம்பழத்துக்கிடருற்றவாறே. 11
திருத்திவளர்த்ததோர்தேமாங்கனியை
யருத்தமென்றெண்ணியறையிற்புதைத்துப்
பொருத்தமிலாதபுளிமாங்கொம்பேறிக்
கருத்தறியாதவர்காலற்றவாறே. 12
இலைநலவாயினுமெட்டிபழுத்தாற்
குலைநலவாங்கனிகொண்டுணலாகா

முலைநலங்கொண்டுமுறுவல்செய்வார்மேல்
விலகுறுநெஞ்சினைவெய்துகொள்ளீரே. 15

கல்லாவரசனுங்காலனுநேரொக்குங்
கல்லாவரசனிற்காலன்மிகநல்லன்
கல்லாவரசனறமோரான்கொல்லென்பான்
நல்லாரைக்காலனணுகிநில்லானே. 16

வேடநெறிநில்லார்வேடம்பூண்டென்பயன்
வேடநெறிநிற்போர்வேடமேமெய்வேடம்
வேடநெறிநில்லார்தம்மைவிறல்வேந்தன்
வேடநெறிசெய்தால்வீடதுவாகுமே. 17

ஆவையும்பாரையுமற்றறவோரையுந்
தேவர்கள்போற்றுந்திருவேடத்தாரையுங்
காவலன்காப்பவன்காவாதொழிவனேன்
மேவுமறுமைக்குமீளாநரகமே. 18

தத்தஞ்சமயத்தகுதிநில்லாதாரை
யத்தன்சிவன்சொன்னவாகமநூனெறி
யெத்தண்டமுஞ்செயுமம்மையிலிம்மைக்கே
மெய்த்தண்டஞ்செய்வதவ்வேந்தன்கடனே. 19

யாவர்க்குமாமிறைவற்கொருபச்சிலை
யாவர்க்குமாம்பசுவுக்கொருவாயறுகு
யாவர்க்குமாமுண்ணும்போதொருகைப்பிடி
யாவர்க்குமாம்பிறர்க்கின்னுரைதானே. 20

அன்புஞ்சிவமுமிரண்டென்பரறிவிலா
ரன்பேசிவமாவதாருமறிகிலா
ரன்பேசிவமாவதாருமறிந்தபி
னன்பேசிவமாயமர்ந்திருந்தாரே. 21

என்பேவிறகாயிறைச்சியறுத்திட்டுப்
பொன்போற்கனலிற்பொரியவறுப்பினு
மன்போடுருகியகங்குழைவார்க்கன்றி
யென்பொன்மணியினையெய்தவொண்ணாதே. 22

உறுவதறிதண்டியொண்மணற்கூட்டி
யறுவகையானைந்துமாட்டத்தன்றாதை
செறுவகைசெய்துசிதைப்பமுனிந்து
மறுமழுவால்வெட்டிமாலைபெற்றானே. 23
அரிபிரமன்றக்கனருக்கனுடனே
வருமதிவாலைவன்னிநல்லிந்திரன்
சிரமுகநாசிசிறந்தகைதோள்தா
னரனருளின்றியழிந்தநல்லோரே. 24
சக்கரம்பெற்றுநற்றாமோதரன்றானுஞ்
சக்கரந்தன்னைத்தரிக்கவொண்ணாமையால்
மிக்கரன்றன்னைவிருப்புடனர்ச்சிக்கத்
தக்கநற்சத்தியைத்தான்கூறுசெய்ததே. 25
பிரமனுமாலும்பிரானேநானென்னப்
பிரமன்மாறங்கடம்பேதைமையாலே
பரமனனலாய்ப்பரந்துமுன்னிற்க
வரனடிதேடியாற்றுகின்றாரே. 26
திலமத்தனைபொன்சிவஞானிக்கீந்தால்
பலமுத்திசித்திபரபோகமுந்தரும்
நிலமத்தனைபொன்னைநின்மூடர்க்கீந்தால்
பலமுமற்றேபரபோகமுங்குன்றுமே. 27
தாவரலிங்கம்பறித்தொன்றிற்றாபித்தா
லாவதன்முன்னேயரசுநிலைகெடுஞ்
சாவதன்முன்னேபெருநோயடுத்திடுங்
காவலன்பேர்நந்திகட்டுரைத்தானே. 28
கட்டுவித்தார்மதிற்கல்லொன்றுவாங்கிடில்
வெட்டுவிக்கும்மபிடேகத்தரசரை
முட்டுவிக்கும்முனிவேதியராயினும்
வெட்டுவித்தேவிடும்விண்ணவனாணையே. 29
ஆற்றருநோய்மிக்கவனிமழையின்றிப்
போற்றருமன்னரும்போர்வலிகுன்றுவர்

கூற்றுதைத்தான்றிருக்கோயில்களானவை
சாற்றியபூசைகள்தப்பிடிற்றேனே. 30
முன்னவனார்கோயில்பூசைகண்முட்டிடின்
மன்னர்க்குத்தீங்குளவாரிவளங்குன்றுங்
கன்னங்களவுமிகுத்திடுங்காசினி
யென்னருநந்தியெடுத்துரைத்தானே. 31
பேர்கொண்டபார்ப்பான்பிரான்றனையர்ச்சித்தாற்
போர்கொண்டவேந்தர்க்குப்பொல்லாவியாதியாம்
பார்கொண்டநாட்டுக்குப்பஞ்சமுமாமென்றே
சீர்கொண்டநந்திதெரிந்துரைத்தானே. 32
பத்தினிபத்தர்கள்தத்துவஞானிகள்
சித்தங்கலங்கச்சிதைவுகள்செய்தவ
ரத்தமுமாமாவியுமாண்டொன்றின்மாய்ந்திடுஞ்
சத்தியமீதுசதாநந்திதாளே. 33
ஈசனடியாரிதயங்கலங்கிடத்
தேசமுநாடுஞ்சிறப்புமழிந்திடும்
வாசவன்பீடமுமாமன்னர்பீடமு
நாசமதாகுமேநம்நந்தியாணையே. 34
அரகரவென்னவரியதொன்றில்லை
யரகரவென்னவறிகிலர்மாந்த
ரரகரவென்னவமரருமாவ
ரரகரவென்னவறும்பிறப்பன்றே. 35
கங்காளன்பூசுங்கவசத்திருநீற்றை
மங்காமற்பூசமகிழ்விரேயாமாகிற்
றங்காவினைகளுஞ்சாருஞ்சிவகதி
சிங்காரமானதிருவடிசேர்விரே. 36
குருட்டினைநீக்குங்குருவினைக்கொள்ளார்
குருட்டினைநீக்காக்குருவினைக்கொள்வர்
குருடுங்குருடுங்குருட்டாட்டமாடிக்
குருடுங்குருடுங்குழிவிழுமாறே. 37

புண்ணியஞ்செய்வார்க்குப்பூவுண்டுநீருண்டு
வண்ணலதுகண்டருள்புரியாநிற்கு
மெண்ணிலிபாவிகளெம்மிறையீசனை
நண்ணறியாமனமுவகின்றாரே. 38

படமாடக்கோயிற்பகவற்கொன்றீயி
னடமாடக்கோயினம்பர்க்கங்காகா
நடமாடக்கோயினம்பர்க்கொன்றீயிற்
படமாடக்கோயிற்பகவற்கதாமே. 39

அகரமாயிரமந்தணர்க்கீயிலென்
சிகரமாயிரஞ்செய்துமுடிக்கிலென்
பகருஞானிபகலூண்பலத்துக்கு
நிகரிலையென்பதுநிச்சயந்தானே. 40

பரந்துலகேழும்படைத்தபிரானை
யிரந்துணியென்பர்களெற்றுக்கிரக்கு
நிரந்தரமாகநினையுமடியா
ரிரந்துண்டுதன்கழலெட்டச்செய்தானே. 41

பெறுதற்கரியபிறவியைப்பெற்றும்
பெறுதற்கரியபிரானடிபேணார்
பெறுதற்கரியபிராணிகளெல்லாம்
பெறுதற்கரியதோர்பேறிழந்தாரே. 42

அறிவுவடிவென்றறியாதவென்னை
யறிவுவடிவென்றருள்செய்தானந்தி
யறிவுவடிவென்றருளாலறிந்தே
யறிவுவடிவென்றறிந்திருந்தேனே. 43

வேதமோடாகமமெய்யாமிறைவனூ
லோதுஞ்சிறப்பும்பொதுவுமென்றுள்ளன
நாதனுரையவைநாடிலிரண்டந்தம்
பேதமதென்பர்பெரியோர்க்கபேதமே. 44

ஆயபதிதானருட்சிவலிங்கமா
மாயபசுவுமடலேறெனநிற்கு

மாயபெலிபீடமாகுநற்பாசமா
மாயவரனிலையாய்ந்துகொள்வார்கட்கே. 45

கருட னுருவங்கருதுமளவிற்
பருவிடந்தீர்ந்துபயங்கெடுமாபோல்
குருவி னுருவங்குறித்தவப்போதே
திரிமலந்தீர்ந்துசிவனவனாமே. 46

சிவசிவவென்கிலர்தீவினையாளர்
சிவசிவவென்றிடத்தீவினைமாளுந்
சிவசிவவென்றிடத்தேவருமாவர்
சிவசிவவென்னச்சிவகதிதானே. 47

சிவாயநமவெனச்சித்தமொருக்கி
யவாயமறவேயடிமையதாக்கிச்
சிவாயசிவசிவவென்றென்றேசிந்தை
யவாயங்கெடநிற்கவானந்தமாமே. 48

புளிக்கண்டவர்க்குப்புனலூறுமாபோற்
களிக்குந்திருக்கூத்துக்கண்டவர்க்கெல்லா
மளிக்குமருட்கண்ணீர்சோர்நெஞ்சுருக்கு
மொளிக்குளானந்தத்தமுதூறுமுள்ளத்தே. 49

அரன்றுடிதோற்றமமைத்தறிதியா
மரனங்கிதன்னிலறையிற்சங்கார
மரனுற்றணைப்பிலமருந்திரோதாயி
யரனடியென்றுமனுக்கிரகமென்னே. 50

முகத்திற்கண்கொண்டுகாண்கின்றமூடர்கா
ளகத்திற்கண்கொண்டுகாண்பதேயானந்த
மகட்குத்தாய்தன்மணாளனோடாடிய
சுகத்தைச்சொல்லென்றாற்சொல்லுமாறெங்ஙனே. 51

வாழ்கவேவாழ்கவென்னந்திதிருவடி
வாழ்கவேவாழ்கமலமறுத்தாள்பதம்
வாழ்கவேவாழ்கமெய்ஞ்ஞானத்தான்றாள்
வாழ்கவேவாழ்கமயமிலான்பாதமே. 52

திருச்சிற்றம்பலம்.

## பதினொராந் திருமுறை.

## திருவாலவாயுடையார்

# திருமுகப்பாசுரம்.

திருச்சிற்றம்பலம்.

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
றன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

திருச்சிற்றம்பலம்.

---

## காரைக்காலம்மையார்

## திருவாலங்காட்டு

# க. மூத்த திருப்பதிகம்.

பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொங்கைதிரங்கிநரம்பெழுந்துகுண்டுகண்வெண்பற்குழிவயிற்றுப், பங்கிசிவந்திருபற்கணீண்டுபரடுயர்நீள்கணைக்காலொர்பெண்பேய், தங்கியலறியுலறுகாட்டிற்றாழ்சடையெட்டுத்திசையும்வீசி, யங்கங்குளிர்ந்தனலாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. 1

ஒப்பிணையில்லவன்பேய்கள்கூடியொன்றினையொன்றடித்தொக்கலித்துப், பப்பிணையிட்டுப்பகண்டைபாடப்பாடிருந்தந்நரியாழமைப்ப, வப்பனையணிதிருவாலங்காட்டுளடிகளைச்செடிதலைக்காரைக்காற்பேய், செப்பியசெந்தமிழ்பத்தும்வல்லார்சிவகதிசேர்ந்தின்பமெய்துவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## உ. மூத்த திருப்பதிகம்.

பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டியிலவமீகை சூரைகாரைபடர்ந்தெங்குஞ்
சுட்டசுடலைசூழ்ந்தகள்ளிசேர்ந்தகுடர்கவ்வப்
பட்டபிணங்கள்பரந்தகாட்டிற்பறைபோல்விழிகட்பேய்
கொட்டமுழவங்கூளிபாடக்குழகனாடுமே. 1

சூடுமதியஞ்சடைமேலுடையார்சுழல்வார் திருநட்ட
மாடுமரவமரையிலார்த்தவடிகளருளாலே
காடுமலிந்தகனல்வாயெயிற்றுக்காரைக்காற்பேய்தன்
பாடல்பத்தும்பாடியாடப்பாவநாசமே. 11

திருச்சிற்றம்பலம்.

## அற்புதத்திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

பிறந்துமொழிபயின்றபின்னெல்லாங்காதல்
சிறந்துநின்சேவடியேசேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்றகண்டத்துவானோர்பெருமானே
யெஞ்ஞான்றுதீர்ப்பதிடர். 1

இடர்களையாரேனுமெமக்கிரங்காரேனும்
படருநெறிபணியாரேனுஞ்—சுடருருவி
லென்பறாக்கோலத்தெரியாடுமெம்மானார்க்
கன்பறாதென்னெஞ்சவர்க்கு. 2

யானேதவமுடையேனென்னெஞ்சேநன்னெஞ்சம்
யானேபிறப்பறுப்பானெண்ணினேன்—யானேயக்
கைம்மாவுரிபோர்த்தகண்ணுதலா—வெண்ணீற்ற
வம்மானுக்காளாயினேன். 3

அறிவானுந்தானேயறிவிப்பான்றானே
யறிவாயறிகின்றான்றானே—யறிகின்ற
மெய்ப்பொருளுந்தானேவிரிசுடர்பாராகாச
மப்பொருளுந்தானேயவன். 4

ஒருபாலுலகளந்தமாலவனுமற்றை
யொருபாலுமையவளாமென்று—விருபாலு
நின்னுருவமாகநிறந்தெரியமாட்டோமா
னின்னுருவோமின்னுருவோநேர்ந்து. 5

காலையேபோன்றிலங்குமேனிகடும்பகலின்
வேலையேபோன்றிலங்கும்வெண்ணீறு—மாலையின்
றங்குருவேபோலுஞ்சடைக்கற்றைமற்றவற்கு
வீங்கிருளேபோலுமிடறு. 6

திருச்சிற்றம்பலம்.

## ஐயடிகள் காடவர்கோனுயனார்

# க்ஷேத்திரத்திருவெண்பா

திருச்சிற்றம்பலம்.

ஓடுகின்ற நீர்மை யொழிதலுமே யுற்றாருங்
கோடுகின்றார்மூப்புங் குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற்றம்பலமே நண்ணாமுன்னெஞ்சே
தில்லைச்சிற்றம்பலமே சேர் 1

குந்திநடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமியேங்கி நுரைத்தேறி—வந்துந்தி
யையாறுவாயாறு பாயாமுனெஞ்சமே
யையாறுவாயாலழை. 3

காளைவடிவொழிந்து கையுறவோ டையுறவாய்
நாளுமணுகி நலியாமுன்—பாளை
யவிழ்கமுகம் பூஞ்சோலைபாரூரர்க்காளாய்க்
கவிழ்கமுகங்கூம்புகவென்கை. 4

தொட்டுத்தடவித்துடிப்பொன்றுங் காணாது
பெட்டப்பிணமென்றுபேரிட்டுக்—கட்டி
யெடுங்களத்தா வென்னாமுன் னேழைமடநெஞ்சே
நெடுங்களத்தான் பாதநினை. 6

படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப்பாரெலாமாண்ட
முடியரசர் செல்வத்துமும்மை—கடியிலிங்கு

தோடேந்துகொன்றையந்தார்ச்சோதிக்குத்தொண்டுபட்
டோடேந்தியுண்பதுறும். 7

குயிலொத்திருள்குஞ்சி கொக்கொத்திருமல்
பயிலப்புகாமுன்னநெஞ்சே-மயிலைத்
திருப்புன்னையங்கானல் சிந்தியா யாகி
லிருப்பின்னை யங்காந்திளைத்து 8

என்னெஞ்சேயுன்னை யிரந்துமுரைக்கின்றேன்
கன்னஞ்செய்வாயாகிற் காலத்தால்—வன்னெஞ்சே
மாகம்பத்தானையுரித்தானை வண்கச்சி
யேகம்பத்தானை யிறைஞ்சு. 10

தஞ்சாகமூவுலகு மாண்டு தலையளித்திட்
டெஞ்சாமைபெற்றிடினும் யான்வேண்டே—னஞ்சங்
காந்துண்டகண்டர்தம்மொற்றியூர்பற்றி
யிரந்துண்டிருக்கப்பெறின். 11

நூற்றனைத்தோர்பல்லூழி நுண்வயிரவெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம்விழையாதே—கூற்றுதைத்தா
னாடரவங்கச்சாவரைக்கசைத்தவம்மான்றன்
பாடரவங்கேட்டபகல். 12

உய்யுமருந்திதனை யுண்மினெனவுற்றூர்
கையைப்பிடித்தெதிரே காட்டியக்காற்—பைய
வெழுந்திருமியான்வேண்டேனென்னுமுனெஞ்சே
செழுந்திருமயானமேசேர். 13

திருச்சிற்றம்பலம்.

## சேரமான்பெருமாணாயனார்

# பொன்வண்ணத்தந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனிபொ லிந்திலங்கு, மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண வீழ்சடை வெள்ளிக்குன்றந், தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை தன்னைக்கண்ட, வென்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மாகிய வீசனுக்கே. 1

இடமால்வலந்தானிடப்பாலுழாய்வலப்பாலொண்கொன்றை
வடமாலிடந்துகிறேல்வல மாழி யிடம்வலமா
னிடமால் கரிதால் வலஞ்சே திவனுக் கெழினலஞ்சேர்
குடமா விடம்வலங் கொக்கரை யாமெங்கள் கூத்தனுக்கே.
வானக மாண்டமந் தாகினி யாடிநந் தாவனஞ்சூழ்
தேனக மாமலர் சூடிச்செல் வோருஞ் சிதவல்சுற்றிக்
கானகந் தேயத்திரிந்திரப் போருங் கனகவண்ணப்
பானிற நீற்றற் கடியரு மல்லாப் படிறருமே. 3
கொடிமே லிடபமுங் கோவணக் கீளுமோர் கொக்கிறகு
மடிமேற் கழலு மகலத்தி னீறுமை வாயரவு
முடிமேன் மதியு முருகலர் கொன்றையு மூவிலைய
வடிவேல் வடிவுமென் கண்ணுளேப்போதும் வருகின்றவே.
விரிகின்ற ஞாயிறு போன்றது மேனியஞ்ஞாயிறுசூழ்ந்
தெரிகின்ற வெங்கதி ரொத்தது செஞ்சடையச்சடைக்கீழ்ச்
சரிகின்ற காரிருள் போன்றது கண்டமக் காரிருட்கீழ்ப்
புரிகின்றவெண்முகில்போன்றுளதாலெந்தையொண்பொடியே
சொல்லா தனகொழு நாவல்ல சோதியுட்சோதிதன்பேர்
செல்லாச் செவிமரந் தேறித்தொ ழாதகை மண்டிணிந்த
கல்லா நினையா மனம்வணங் காத்தலை யும்பொறையா
மல்லா வவயவந் தானு மனிதர்க் கசேதனமே. 6
தனக்குன்ற மாவையஞ் சங்கரன் றன்னருளன்றிப்பெற்றுன்
மனக்கென்று நஞ்சிற் கடையா நினைவன் மதுவிரியும்
புனக்கொன்றை யானரு ளாற்புழு வாகிப் பிறந்திடினு [னே
மெனக்கென்றும்வானவர்பொன்னுலகோடொக்கவெண்ணுவ
கூறுமி னீசனைச் செய்ம்மின் றுற் றேவல் குளிர்மின்கண்க
டேறுமின் சித்தந் தெளிமின் சிவனைச் செறுமின்செற்ற
மாறுமின் வேட்கை யறுமி னவல மிவைநெறியா
வேறுமின் வானத் திருமின் விருந்தா விமையவர்க்கே. 8
சிந்தனை செய்ய மனமமைத் தேன்செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத் தேன்கை தொழவமைத்தேன்

பந்தனைசெய்வதற் கன்பமைத்தேன்மெய் யரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற் கிவையான் விதித்தனவே. 9
பொய்யா நரகம் புகினுந் துறக்கினும் போந்து புக்கிங்
குய்யா வுடம்பினோ டூர்வ நடப்ப பறப்பவென்று
நையா விளியினு நானில மாளினு நான்மறைசேர்
மைபார் மிடற்றா னடிமற வாவரம் வேண்டுவனே. 10

திருச்சிற்றம்பலம்.

## நக்கீரதேவநாயனார்

# க. கைலைபாதிகாளத்திபாதி யந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

சொல்லும்பொருளுமே தூத்திரியுநெய்யுமா
நல்லிடிஞ்சிலென் னுடைய நாவாகச்-சொல்லரிய
வெண்பாவிளக்காவியன் கயிலைமேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று. 1
பெற்றபயனிதுவேயன் றேபிறந்தியான்
கற்றவர்களேத்துஞ்சீர்க்காளத்திக்-கொற்றவர்க்குத்
தோளாகத்தாடரவஞ்சூழ்ந்தணிந்தவம்மானுக்
காளாகப்பெற்றேனடைந்து. 2
உலகமனைத்தினுக்கு மொண் ணுதன்மேலிட்ட
திலகமெனப்பெறினுஞ் சீசீ-யிலகியசீ
ரீசா திருக்கயிலையெம்பெருமா னென்றென்றே
பேசா திருப்பார் பிறப்பு. 3
பிறப்புடையார்கற்றோர் பெருஞ்செல்வர் மற்றுஞ்
சிறப்புடையாரானாலுஞ் சீசீ-யிறப்பில்
கடியார்நறுஞ்சோலைக் காளத்தியாள்வா
ரடியாரைப் பேணாதவர். 4
கதையிலேகேளீர் கயிலாயநோக்கிப்
புதையிருட்கண்மாலோடும்போகிச்—சிதையாச்சீர்த்
தீர்த்தன்பாற்பாசுபதம்பெற்றுச்செருக்களத்திற்
பார்த்தன்போர்வென்றிலனோ பண்டு. 5

பண்டுதொடங்கியும் பாவித்து நின்கழற்கே
தொண்டுபடுவான் றொடர்வேனைக் -கண்டுகொண்
டாளத்தயாவுண்டோ வில்லையோசொல்லாயே
காளத்தியாயுன் கருத்து. 6

வந்தமாரேத்து மடைகூழும் வார்சடைமேற்
கொந்தவிழுமாலை கொடுத்தார்கொல்-வந்தித்து
வாலுருத்த வண்கயிலைக் கோனார்தம் மாமுடிமேற்
பாலுகுத்த மாணிக்குப் பண்டு 7

பண்டிதுவேயன்றுகிற்கேளீர்கொல்பலசருகு
கொண்டிலிங்கத்தும்பினூற்கூட்டிழைப்பக்-கண்டு
நலந்திக்கெலாமேத்துங்காளத்திநாதர்
சிலந்திக்குச்செய்தசிறப்பு. 8

கூவுதலும்பாற்கடலைசென்றவனைக்கூடிகவென்
றேவினான்பொற்கயிலையெம்பெருமான் -மேவியசீ
ரன்பாற்புலிக்காலன் பாலன்பாலாசையினாற்
றன்பாற்பால்வேண்டுதலுந்தான். 9

தொழுதுகமனுந்தான்றாதுவர்க்குச்சொல்லும்
வழுவில்சீர்க்காளத்திமன்னன்-பழுதிலாப்
பத்தர்களைக்கண்டாற்பணிந்தகலப்போமின்க
ளெத்தனையுஞ்செய்த்தாகவென்று. 10

திருச்சிற்றம்பலம்.

## உ. திருமுருகாற்றுப்படை.

நேரிசை வெண்பா.

திருச்சிற்றம்பலம்.

குன்றமெறிந்தாய்குரைகடலிற்சூர்தடிந்தாய்
புன்றலையபூதப்பொருபடையா-யென்று
மிளையாயழகியாயேறூர்ந்தானேறே
யுளையாயென்னுள்ளத்துறை 1

குன்றமெறிந்ததுவுங்குன்றப்போர்செய்ததுவு
மன்றங்கமரரிடர்தீர்த்ததுவு—மின்றென்னைக்

கைவிடாநின்றதுவுங்கற்பொதும்பிற்காத்ததுவு
மெய்விடாவீரன்கைவேல். 2

வீரவேறாரைவேல்விண்ணோர்சிறைமீட்ட
தீரவேல்செவ்வேடிருக்கைவேல்—வாரி
குளித்தவேல்கொற்றவேல்சூர்மார்புங்குன்றுந்
துளைத்தவேலுண்டேதுணை. 3

இன்னமொருகாலெனதிடும்பைக்குன்றுக்குக்
கொன்னவில்வேற்சூர்தடிந்தகொற்றவா-முன்னம்
பனிவேய்நெடுங்குன்றம்பட்டுருவத்தொட்ட
தனிவேலைவாங்கத்தகும். 4

உன்னையொழியவொருவரையுநம்புகிலேன்
பின்னையொருவரையான்பின்செல்லேன்--பன்னிருகைக்
கோலப்பாவானோர்கொடியவினைதீர்த்தருளும்
வேலப்பாசெந்திவாழ்வே. 5

அஞ்சுமுகந்தோன்றிலாறுமுகந்தோன்றும்
வெஞ்சமரந்தோன்றில்வேறோன்று--நெஞ்சி
லொருகானினைக்கிலிருகாலுந்தோன்று
முருகாவென்றோதுவார்முன். 6

முருகனேசெந்திமுதல்வனேமாயோன்
மருகனேயீசன்மகனே—யொருகைமுகன்
றம்பியேநின்னுடையதண்டைக்காலெப்பொழுது
நம்பியேகைதொழுவேனான். 7

திருச்சிற்றம்பலம்.

---

கபிலதேவநாயனார்

# மூத்தநாயனார் திருவிரட்டை
# மணிமாலை

திருச்சிற்றம்பலம்.

திருவாக்குஞ்செய்கருமங்கைகூட்டுஞ்செஞ்சொற்
பெருவாக்கும்பீடும்பெருக்கு—முருவாக்கு

மாதலால்வானோருமானைமுகத்தானைக்
காதலாற்கூப்புவர்தங்கை. 1
வாழைக்கனிபலவின்கனிமாங்கனிதாஞ்சிறந்த
கூழைச்சுருள்குழையப்பமெள்ளுண்டையெல்லாந்துறுத்தும்
பேழைப்பெருவயிற்றோடும்புகுந்தென்னுளம்பிரியான்
வேழத்திருமுகத்துச்செக்கர்மேனிவிநாயகனே. 2
விநாயகனேவெவ்வினையைவேரறுக்கவல்லான்
விநாயகனேவேட்கைதணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்குமண்ணிற்குநாதனுமாந்தன்மையினாற்
கண்ணிற்பணிமின்கனிந்து. 3
முன்னிளங்காலத்திலேபற்றினேன்வெற்றிமீனுயர்த்த
மன்னிளங்காமன்றன்மைத்துனனேமணிநீலகண்டத்
தென்னிளங்காய்களிறேயிமையோர்சிங்கமேயுமையா
டன்னிளங்காதலனேசரணாமுன்சரணங்களே. 4
வேட்கைவினைமுடித்துமெய்யடியார்க்கின்பஞ்செய்
தாட்கொண்டருளுமான்சேயை—வாட்கதிர்கொள்
காந்தாரமார்பிற்கமழ்தார்க்கணபதியை
வேந்தாவுடைத்தமரர்விண். 5
நல்லார்பழிப்பிலெழிற்செம்பவளத்தைநாணநின்ற
பொல்லாமுகத்தெங்கள்போதகமேபுரமூன்றெரித்த
வில்லானளித்தவிநாயகனேயென்றுமெய்ம்மகிழ
வல்லார்மனத்தன்றிமாட்டாளிருக்கமலர்த்திருவே. 6

திருச்சிற்றம்பலம்.

---

### பட்டணத்துப்பிள்ளையார்

## க. கோயினான்மணிமாலை

திருச்சிற்றம்பலம்.

வெண்பா.

பூமேலயனறியா மோலிப்புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம் - பாமேவு
மேத்துகந்தான் றில்லை யிடத்துகந்தா னம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை. 1

### கலித்துறை.

குடைகொண்டிவ் வையமெலாங் குளிர்வித்தெரிபொ
ற்றிகிரிப், படைகொண்டிகறெறும் பார்த்திவராவதிற் பைம்
பொற் கொன்றைத், தொடைகொண்டவார்சடை யம்பலத்
தான்றொண்டர்க் கேவல்செய்து, கடைகொண்டபிச்சை
கொண்டுண்டிங்குவாழ்தல் களிப்புடைத்தே. 2

### கழிநெடில்விருத்தம்.

நெறிதருகுழலையறலென்பர்கணிழலெழுமதியநுதலென்
பர்க—ளிலவினும்வெளிது நகையென்பர்களிறம்வருகலச
முலையென்பர்க, ளறிகுவதரிதிடையென்பர்க ளடியிணை
கமலமலரென்பர்க-ளவயவமினைய மடமங்கைய ரழகியரமை
யுமவரென்செய, மறிமழுவுடையகரனென்கிலர் மறலியை
முனியுமரனென்கிலர் – மதிபொதிசடிலதரனென்கிலர் மலை
மகண்மருவுபுயனென்கிலர், செறிபொழினிலவுதிலை யென்
கிலர் திருநடநவிலுமிறையென்கிலர் – சிவகதியருளுமரசென்
கிலர் சிலர்நரகுறுவரறிவின்றியே 3

### கலித்துறை

வாழ்வாகவுந்தங்கள்வைப்பாகவுமறையோர்வணங்க
வாள்வாய்திருத்தில்லையம்பலத்தாயுன்னையன்றியொன்றைத்
தாழ்வாரெறிவார்கடனஞ்சையுண்டிலையாகிலன்றே
மாள்வார்சிலரையன்றோ தெய்வமாகவணங்குவதே. 4

### கலித்துறை.

கொண்டல்வண்ணத்தவனான்முகனிந்திரன்கோமகுடத்
தண்டர்மிண்டித்தொழுமம்பலக்கூத்தனுக்கன்புசெய்யா
மிண்டர்மிண்டித்திரிவாரெனக்கென்னினிநானவன்றன் [னை.
றொண்டர்தொண்டர்க்குத்தொழும்பாய்த்திரியத்தொடங்கி

திருச்சிற்றம்பலம்.

---

## உ. திருவிடைமருதூர்
# மும்மணிக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

கட்டளைக்கலித்துறை.

காணீர் கதியொன்றுங் கல்லீரெழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீரவன்புக ழாசைப்பட்டுப்
பூணீ ருருத்திர சாதனநீறெங்கும் பூசுகிலீர்
வீணீ ரெளிதோ மருதப்பிரான்கழல் மேவுதற்கே. 1

கட்டளைக்கலித்துறை.

வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதனனம்புக்
கிளையார் தனங்கண் டிரங்கிநில் லாரிப் பிறப்பினில்வந்
தளையார் நரகினுக் கென்கடவார் பொன்னலர்ந்தகொன்றைத்
தளையாரிடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே. 2

திருச்சிற்றம்பலம்.

---

## ௩. திருவேகம்பமுடையார் திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

மெய்த்தொண்டர்செல்லுநெறியறியேன்மிகநற்பணிசெய்
கைத்தொண்டர்தம்மிலுநற்றொண்டுவந்திலனுண்பதற்கே
பொய்த்தொண்டுபேசிப்புறம்புறமேயுன்னைப்போற்றுகின்ற
வித்தொண்டனேன்பணிகொள்ளுதியோகச்சியேகம்பனே. 1
வணக்கந்தலைநின்றிருவடிக்கேசெய்யுமையல்கொண்டோ
ரிணக்கன்றிமற்றோரிணக்கறிவோமல்லம்வல்லரவின்
குணக்குன்றவில்லிகுளிர்கச்சியேகம்பங்கூடினல்லாற்
கணக்கன்றுமற்றொருதேவரைப்பாடுங்கவிநலமே. 2
அன்றும்பகைபடர்க்கும் பரிமாவுமதவருவிக்
குன்றும்பதாதியுந்தேருங்குலவிக்குடைநிழற்கீழ்
நன்றும்பொலியினுங்கப்பர்நன்னீறுநுதற்கிலரே
லென்றுமரசுமுரசும்பொலியாவிருநிலத்தே. 3
படையாலுயிர்கொன்றுதின்றுபசுக்களைப்போலச்செல்லு
நடையாலறிவின்றிநட்பிடைப்பொய்த்துக்குலங்களினுங்

கடையாய்ப்பிறக்கினுங்கச்சியுளேகம்பத்தெங்களையா
ளுடையான்கழற்கன்பரேலவர்யாவர்க்குமுத்தமரே. 5

பாதம்பரவிடுவார்பித்துப்பிதற்றினும்பல்பணியு
மேதம்புகுதாவகையருளேகம்பரேத்தெனவே
போதம்பொருளாற்பொலியாதயுன்சொற்பனுவல்களும்
வேதம்பொலியும்பொருளாமெனக்கொள்வர்மெய்த்தொண்டரே.

திருச்சிற்றம்பலம்.

---

நம்பியாண்டார்நம்பி

# க. கோயிற்றிருப்பண்ணியர் திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

இறையுந்தெளிகிலர்கண்டுமெழிற்றில்லையம்பலத்து
ளறையும்புனற்சென்னியோனருளாலன்றடுகரிமே
னிறையும்புகழ்த்திருவாரூரனுநிறைதார்ப்பரிமே
னறையுங்கமழ்தொங்கல்வில்லவனும்புக்கநல்வழியே. 1

கங்கைவலமிடம்பூவலங்குண்டலந்தோடிடப்பாற்
றங்குங்கரம்வலம்வெம்மழுவீயிடம்பாந்தள்வலஞ்
சங்கமிடம்வலந்தோலிடமாடைவலமக்கிட
மங்கஞ்சரியம்பலவன்வலங்காணிடமணங்கே. 2

பொன்னம்பலத்துறைபுண்ணியனென்பர்புயன்மறந்த
கன்னன்மைதீரப்புனிற்றுக்கலிக்காமற்கன்றுபுன்கூர்
மன்னுமழைபொழிந்தீரறுவேலிகொண்டாங்கவற்கே
பின்னும்பிழைதவிர்த்தீரறுவேலிகொள்பிஞ்ஞகனே. 3

தனந்தலைசக்கரம்வானத்தலைமைகுபேரன்றக்கன்
வனந்தலையேறடர்த்தோன்வாசவனுயிர்பல்லுடலூர்
சினந்தலைகாலன்பகல்காமன்றனவர்தில்லைவிண்ணோ
ரினந்தலைவன்னருளான்முனிவாற்பெற்றிகந்தவரே. 4

வருவாசகத்தினின்முற்றுணர்ந்தோனைவண்டில்லைமன்னைத்
திருவாதவூர்ச்சிவபாத்தியன்செய்திருச்சிற்றம்பலப்

பொருளார்தருதிருக்கோவைகண்டேயுமற்றப்பொருளைத்
தெருளாதவுள்ளத்தவர்கவிபாடிச்சிரிப்பிப்பரே. 5
புல்லறிவின்மற்றைத்தேவரும்பூம்புலியூருணின்ற
வல்லெறிமாமதிக்கண்ணிபனைப்போலருளுவரே
கல்லெறிந்தானுந்தன்வாய்நீர்கதிர்முடிமேலுகுத்த
நல்லறிவாளனுமீளாவழிசென்றுநண்ணினரே. 6

திருச்சிற்றம்பலம்.

---

## உ திருத்தொண்டர் திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்திநாயனார்.

அருட்டுறைபத்தற்கடிமைப்பட்டேனினியல்லனென்னும்
பொருட்டுறையாவதென்னையென்னவல்லவன்பூங்குவளை
யிருட்டுறைநீர்வயனாவற்பதிக்கும்பிரானடைந்தோர்
மருட்டுறைநீக்கிநல்வான்வழிகாட்டிடவல்லவனே. 1

திருநாவுக்கரசுநாயனார்.

நற்றவனல்லூர்ச்சிவன்றிருப்பாதந்தன்சென்னிவைக்கப்
பெற்றவன்மற்றிப்பிறப்பறவீரட்டர்பெய்கழற்றா
ளுற்றவனுற்றவிடமடையாரிடவெள்ளமுதாத்
தோற்றவனாமூரினாவுக்கரசெனுந்தூய்மணியே. 2
மணியினைமாமறைக்காட்டுமருந்தினைவண்மொழியாற்
றிணியனநீள்கதவந்திறப்பித்தனதெண்கடலிற்
பிணியனகன்மிதப்பித்தனசைவப்பெருநெறிக்கே
யணியனநாவுக்கரையர்பிரான்றனருந்தமிழே. 3

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

வையமகிழயாம்வாழவமணர்வலிதொலைய
வையன்பிரமபுரத்தாற்கம்மென்குதலைச்செவ்வாய்
பையவிழற்றும்பருவத்துப்பாடப்பருப்பதத்தின்
றையலருள்பெற்றனனென்பர்ஞானசம்பந்தனையே. 4
பந்தார்விரலியர்வேள்செங்கட்சோழன்முருகனல்ல
சந்தாரகலத்துநீலநக்கன்பெயர்தான்மொழிந்து

தொங்தார்சடையர்பதிகத்திலிட்டடியேன்கொடுத்த
வந்தாதிசொண்டபிரானருட்காழியர்கொற்றவனே.] 5

சேரமான்பெருமாணாயனார்.

மன்னர்பிரானெதிர்வண்ணானுடலுவரூறிநீறார்
தன்னர்பிரான்றமர்போலவருதலுந்தான்வணங்க
வென்னர்பிரான்பிரானடிவண்ணானெனவடிச்சேரனென்னுந்
தென்னர்பிரான்கழறிற்றறிவானெனுஞ்சேரலனே. 6
சேரர்க்குத்தென்னாவலர்பெருமாற்குச்சிவனளித்த
வீரக்கடகரிமுன்புதன்பந்தியிவுளிவைத்த
வீரற்குவென்றிக்கரும்புவில்வீரனைவெற்றிகொண்ட
சூரற்கெனதுள்ளநன்றுசெய்தாயின்றுதொண்டுபட்டே. 7

சுந்தரமூர்த்திநாயனார்.

கூற்றுக்கெவனோபுகறிருவாரூரன்பொன்முடிமே
லேற்றுத்தொடையலுமின்னடைக்காயுமிடுதருமக் [மை
கோற்றொத்துகூனனுங்கூன்போய்க்குருடனுங்கண்பெற்ற
சாற்றித்திரியும்பழமொழியாமித்தரணியிலே. 8
கொடுத்தான்முதலைகொள்பிள்ளைக்குயிரன்றுபுக்கொளியூர்த்
தொடுத்தான்மதுரகவியவிநாசியைவேடர்சுற்றம
படுத்தான்றிருமுருகன்பூண்டியினிற்பராபரத்தேன்
மடுத்தானவனென்பர்வன்றொண்டனாகின்றமாதவனே. 9
ஞானவாரூரரைச்சேரரையல்லதுநாமறியோ
மானவவாக்கையொடும்புக்கவரைவளரொளிப்பூண்
வானவராலுமருவற்கரியவடகயிலைக்
கோனவன்கோயிற்பெருந்தவத்தோர்தங்கள்கூட்டத்திலே.

திருச்சிற்றம்பலம்.

## ௩. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

மேனாட்டமரர்தொழவிருப்பாருநம்வினைப்பயன்க
டானாட்டருநரகிற்றளர்வாருந்தமிழர்தங்கள்
கோனாட்டருகர்குழாம்வென்றகொச்சையர்கோன்கமலப்
பூநாட்டடிபணிந்தாருமல்லாதபுலையருமே. 1

அணங்கமர்யாழ்முரித்தாண்பனைபெண்பனையாக்கியமண்
கணங்கழுவேற்றிக்கடுவிடந்தீர்த்துக்கதவடைத்துப்
பிணங்கலைநீரெதிரோடஞ்செலுத்தினவெண்பிறையோ
டிணங்கியமாடச்சிரபுரத்தான்றனிருந்தமிழே. 2

வயலார்மருகற்பதிதன்னில்வாளரவாற்கடியுண்
டயலாவிழுந்தவவனுக்கிரங்கியறிவழிந்த
கயலார்கருங்கண்ணிதன்றுயர்தீர்த்தகருணைவெள்ளப்
புயலார்தருகையினனென்னத்தோன்றிடும்புண்ணியமே. 3

பாடியசெந்தமிழாற்பழங்காசுபரிசில்பெற்ற
நீடியசீர்த்திருஞானசம்பந்தனிறைபுகழா
னேடியபூந்திருநாவுக்கரசோடெழின்மிழலைக்
கூடியகூட்டத்தினாலுளதாய்த்திக்குவலயமே. 4

முத்தனவெண்ணகையார்மயன்மாற்றிமுறைவழுவா
தெத்தனைகாலநின்றேத்துமவரினுமென்பணிந்த
பித்தனையெங்கள்பிரானையணைவதெளிதுகண்டீ
ரத்தனை ஞானசம்பந்தனைப்பாதமடைந்தவர்க்கே. 5

திருச்சிற்றம்பலம்.

---

## ச. ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

நேரிசை வெண்பா.

அரியோடு நான்முகத்தோ னாதிசுரர்க் கெல்லாந்
தெரியாமை செந்தழலாய் நின்ற—வொருவன்சீர்
தன்றலையின் மேற்றரித்த சம்பந்தன் றாளிணைக
ளென்றலையின் மேலிருக்க வென்று. 1

கட்டளைக் கலித்துறை.

என்று மடியவ ருள்ளத் திருப்பன விவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக் குரியன வொண்கவியைப்
பொன்றுங் கவுணியன் சைவசிகாமணி பொன்னடியே. 2

நேரிசை வெண்பா.

நிலத்துக்கு மேலாறு நீடுலகத்துச்சித்
தலத்துக்கு மேலேதா னென்பர்-சொலத்தக்க

சுத்தர்கள் சேர்காழிச் சுரன்ஞான சம்பந்தன்
பத்தர்கள் போய்வாழும் பதி. 3

கட்டளைக்கலித்துறை.

பதிகம் பலபாடி நீடிய பிள்ளை பரசுதரற்
கதிகம் மணுக்க னமணர்க்குக்கால னவதரித்த
மதியந் தவழ்மாட மாளிகைக் காழிபென் ருல்வணங்கா
ரொதியம் பணைபோல் விழுவாரந் தோசில வூமர்களே. 4

நேரிசை வெண்பா.

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர் – நிறைபுலகிற்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
றன்மாலை ஞானத் தமிழ். 5

நேரிசை வெண்பா.

மலைத்தலங்கண் மீதேறி மாதவங்கள் செய்து
முலைத்தலங்க ணீத்தாலு மூப்பர் - கலைத்தலைவன்
சம்பந்தற் காளாய்த் தடங்காழி கைகூப்பித்
தம்பந்தந் தீராத தாம். 6

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை.

திருச்சிற்றம்பலம்.

புலனொடாடித்திரிமனத்தவர்பொறிசெய்காமத்துரிசட க்கியபுனிதநேசத் தொடுதமக்கையர் புணர்வினலுற்றுரை செயக்குடர், சுலவுசூலைப்பிணிகெடுத்தொளிர்சுடுவெணீறிட் டமணகற்றிய துணிவினன்முப் புரமெரித்தவர் சுழலிலைபட் டிடுதவத்தின, ருலகின்மாயப்பிறவியைத்தருமுணர்விலாவப் பெருமயக்கினை யொழியவாய்மைக் கவிதையிற்பல வுபரிபா கப்பொருள்பரப்பிய, வலகின்ஞானக்கடலிடைப்படுமமிர்த யோகச்சிவவெளிப்புகவடியரேமுக் கருளினைச்செயுமரைய தேவத்திருவடிக்களே. 1

இலைமாடென்றிடர்பரியாரிந்திரனேயொத்துறுகுறை வற்றாலு, நிலையாதிச்செல்வமெனவேகருதுவர்நீள்சன்மக்கட

விடையிற்புக், கலையார்சென்றானெறியாகுங்கரையண்ணப் பெறுவர்கள் வண்ணத்திண், சிலைமாடந்திகழ்புகழாமூருறை திருநாவுக்கரசென்போரே. 3

பதிகமேழெழுநூறுபகருமாகவியோசிபராசுநாவரசான பரமகாரணவீச, னதிகைமாநகர்மேவியருளினலமண்மூடா வர்செய்வாதைகடீருமனகன்வார்கழல்சூடி, னிதியாராகுவர் சீர்மையுடையராகுவர்வாய்மைநெறியராகுவர் பாவம்வெறிய ராகுவர்சால, மதியராகுவரீசனடியராகுவர்வானமுடையரா குவர்பாரின்மனிதரானவர் தாமே. 4

திருச்சிற்றம்பலம்.

பன்னிரண்டாந்திருமுறை.

சேக்கிழார் நாயனுர்

# திருத்தொண்டர் புராணம்.

திருச்சிற்றம்பலம்.

## பாயிரம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவுலாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 1

ஊன டைந்த வுடம்பின் பிறவியே
தான டைந்த வுறுதியைச் சாருமாற்
றேன டைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மாந டஞ்செய் வரதர்பொற் றடதொழ. 2

எடுக்குமாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்குமேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம். 3

மதிவளர் சடைமுடி மன்றுளாரைமுன்
றுதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்

பொதிநல நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே. 4

திருமலைச்சிறப்பு.

வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம் விண்ணவ ரெண்ணிலார் மற்றுங், காதலான் மிடைந்த முதற்பெருந் தடையாங் கதிர்மணிக் கோபுரத்துள்ளான், பூதவே தாளப் பெருங்கண நாதர் போற்றிடப் பொதுவினின் றாடு, நாதனு ராதி தேவனார் கோயி லுயக னந்தியெம்பெருமான். 6

நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர் நீறணி மே னியர் ரநேகர், பெற்றமேல் கொண்ட தம்பிரா னடியார் பிஞ் ஞகன் றன்னருள் பெறுவார், மற்றவர்க் கெல்லாந் தலைமை யாம் பணியு மலர்க்கையிற் சுரிகையும் பிரம்புங், கற்றை வார் சடையா னருளினாற் பெற்றான் காப்பதக் கயிலைமால் வரைதான். 6

மநுநீதிகண்ட புராணம்.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைபொழிந்
ரண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல் [தா
விண்ணவர்க டொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான். 7

சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலு
மிடமருங்கி லுமையாளு மெம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான்.

அந்நிலையே யுயிர்பிரிந்த வான்கன்று மவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்று மந்திரியு முடனெழலு
மின்னபரி சானென் றறிந்திலன்வேந் தனும்யார்க்கு
முன்னவனே முன்னின்றான் முடியாத பொருளுளதோ. 9

தடுத்தாட்கொண்ட புராணம்.

கொத்தார்மலர்க் குழலாளொரு கூறாயடி யவர்பான்
மெய்த்தாயினு மினியானையவ் வியனாவலர் பெருமான்

பித்தாபிறை சூடியெனப் பெரிதாந்திருப் பதிக
மித்தாரணி முதலாமுல கெல்லாமுய வெடுத்தார். 10

வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப மன்றுளேமா
லயன் றேட, வைபர்தாம் வெளியே யாடுகின் றாரை யஞ்சலி
மலர்த்திமுன் போற்றுங், கைகளோ திளைத்த கண்களோவ
ந்தக் கரணமோ கலந்தவன் புந்தச், செய்தவம் பெரியோன்
சென்றுதாழ்ந்தெழுந்தான் றிருக்களிற் றுப்படிமருங்கு.

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கா
ணங்க ளான்குஞ், சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக, விந்துவாழ்சடையா னாடுமா
னந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின், வந்தபே ரின்பவெ
ள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். 12

தெண்ணிலாமலர்ந்த வேணியா யுன்றன் றிருநடங்கும்
பிடப் பெற்று, மண்ணிலே வந்த பிறவியே யெனக்குவாலிதா
மின்பமாமென்று, கண்ணிலானந்த வருவிநீர்சொரியக்கைம்
மல ருச்சிமேற் குவித்துப். பண்ணினா னீடியறிவரும்பதிகம்
பாடினார் பாவினார் பணிந்தார். 13

வேத வாரண மேல்கொண் டிருந்தன
பேதை யேன்செய் பிழைபொறுத் தாண்டன
வேத மானவை தீர்க்க விசைந்தன
பூத நாதநின் புண்டரீ கப்பதம். 14

## தில்லைவாழந்தணர் புராணம்.

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி.

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
யற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

### இயற்பகைநாயனார் புராணம்.

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை வழித்தொண்டு கொண்டாய்போற்றி
யெல்லையி லின்ப வெள்ள மெனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடுஞ் சேவடி போற்றி யென்ன. 17

### இளையான்குடிமாறநாயனார் புராணம்

கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாதனத்திடை வைத்த ருச்சனை செய்தபி
னுண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தன வொப்பிலா
வண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி னமுதுசெய்யவளித்துளார்.

### மெய்ப்பொருணாயனார் புராணம்.

தேடிய மாடு நீடு செல்வமுந் தில்லை மன்று
ளாடிய பெருமா னன்பர்க் காவன வாகு மென்று
நாடிய மனத்தி னோடு நாயன்மா ரணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார். 19

### அமர்நீதிநாயனார் புராணம்

மலர்மிசை யயனு மாலுங் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூ ராவணப் பழமை காட்டி
யுலகுய்ய வாண்டு கொள்ளப் பெற்றவர் பாத முன்னித்
தலைமிசை வைத்து வாழுந் தலைமைநந் தலைமை யாகும். 20

### கண்ணப்பநாயனார் புராணம்

மாகமார் திருக்கா ளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள
வேகநா யகரைக் கண்டா ரெழுந்தபே ருவகை யன்பின்
வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விரைவி னோடு
மோகமா யோடிச் சென்றார் தழுவினார் மோந்து நின்றார். 21
பேறினி யிதன்மே லுண்டோ பிரான்றிருக் கண்ணில் வந்த
ஆறுகண் டஞ்சித் தங்க ணிடந்தப்ப வுதவுங் கையை
யேறுயர்த்தவர்தங் கையாற்பிடித்துக்கொண் டென்வலத்தின்
மாறிலாய் நிற்க வென்று மன்னுபே ரருள்புரிந்தார். 22

### அரிவாட்டாயநாயனார் புராணம்.

அடியனே னறிவி லாமை கண்டுமென் னடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங் கமுதுசெய் பரனை போற்றி

துடியிடை பாக மான தூயநற் சோதிபோற்றி
பொடியணி பவளமேனிப் புரிசடைப் புராண போற்றி. 23

### ஆனாயநாயனார் புராணம்.

ஆனாயர் குழலோசை கேட்டருளி யருட்கருணை
தானாய திருவுள்ள முடைய தவ வல்லியுடன்
கானாதி காரணராங் கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார் மதிநாறுஞ் சடைதாழ. 24
திசைமுழுதுங் கணநாதர் தேவர்கட்கு முன்னெருங்கி
மிசைமிடைந்து வரும்பொழுது வேற்றொலிகள் விரவாமே
யசையவெழுங் குழனாதத் தஞ்செழுத்தாற் றமைப் பரவு
மிசைவிரும்புங் கூத்தனா ரெழுந்தருளி யெதிர்நின்றார். 25
தீதுகொள் வினைக்கு வாரோஞ் செஞ்சடைக் கூத்தர்தம்மைக்
காதுகொள் குழைகள்வீசுங் கதிர்நில விருள்கால் சீப்ப
மாதுகொள் புலவி நீக்க மனையிடை யிருகாற் செல்லத்
தூதுகொள்பவரா நம்மைத்தொழும்புகொண்டுரிமைக் கொள்வார்.

### திருநாளைப்போவார்நாயனார் புராணம்.

இன்னறரு மிழிபிறவி யிதுதடையென் றேதுயில்வா
ரந்நிலைமை யம்பலத்து ளாடுவா ரறிந்தருளி
மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண் முறுவலொடு மருள்செய்வார்.

### திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணம்.

வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியா ரருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையி னாகமத் திறனெலாந் தெரிய
வுள்ள வாறுகேட்டருளின ளுலகையா ளுடையாள். 28
எண்ணிலாகம மியம்பிய விறைவர்தாம் விரும்பு
முண்மை யாவது பூசனை யெனவுரைத் தருள
வண்ண லார்தமை யர்ச்சனைபுரியவா தரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து. 29

நங்கை யுண்ணிறை காதலை நோக்கி நாயகன்றிரு வுள்ளத்து மகிழ்ந்தே, யங்கணெய்தியமுறுவலுந்தோன்றவடுத்த

தென்கொனின்பாலென வினவ, விங்குநாதநீ மொழிந்தவாக மத்தி னியல்பி னாலுனை யர்ச்சனை புரியப், பொங்குகின்ற தென் னாசையென் றிறைஞ்சிப் போக மார்த்தபூண் முலையி னாள் போற்ற. 30

நெஞ்ச மீசனைக் காண்டதே விரும்பி நிரந்த ரந்திரு வாக்கினி னிகழ்வ, தஞ்செ ழுத்துமே யாகவா ளுடைய வம்மை செம்மலர்க்கைகுவித் தருளித், தஞ்சமாகிய வருந்தவம் புரியத் தரிப்ப ரேயவ டனிப்பெருங் கணவர், வஞ்ச நீக்கிய மாவின்மூ லத்தில் வந்து தோன்றினார் மலைமகள் காண. 31

கொய்த பன்மலர் கம்பைமாநதியிற் குலவு மஞ்சனநில வுமெய்ப் பூச்சு, நெய்த ருங்கொழுந் தீபதூபங்க ணிறைந்த சிந்தையி னீடிய வன்பின், மெய்த ரும்படி வேண்டின வெல்லாம் வேண்டும் போதினி லுதவமெய்ப்பூசை, யெய்தவாகம விதியெலாஞ்செய்தா ளுயிர்கள்யாவையுமீன்றவெம்பிராட்டி.

கரந்த ரும்பய னிதுவென வுணர்ந்து கம்ப மேவிய வும்பர்நா யகர்பா, னிரந்த காதல்செ யுள்ளத்த ளாகி நீடு நன்மைக ளியாவையும் பெருக, வரந்த ரும்பொரு ளாமலை வல்லிமா றிலாவகைமலர்ந்தபே ரன்பாற், சிரம்பணிந்தெழு பூசைநா டோறுந் திருவு ளங்கொளப் பெருகிய தன்றே. 33

## சண்டேசுரநாயனார் புராணம்.

அண்டர் பிரா னுந் தொண்டர்தமக் கதிபனாக்கி யனைத்துநா, முண்ட கலமு முடுப்பனவுஞ் சூடுவனவு முனக்காகச், சண்டீ சனுமாம் பதந்தந்தோ மென்றங் கவர்பொற் றடமுடிக்குத், துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார். 34

நேச நிறைந்த வுள்ளத்தா னீல நிறைந்த மணிகண்டத், தீசனடியார் பெருமையினை யெல்லா வுயிருந் தொழ வெடுத்துத், தேச முய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன், வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாகும். 35

### திருநாவுக்கரசுநாயனார் புராணம்.

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகி
லொருநாவுக் குரைசெய்ய வொண்ணாமை யுணராதேன். 36

நீற்றானிறை வாகிய மேனியுட னிறையன்புறு சிந்தையி
னேசமிக, மாற்றார்புர மாற்றிய வேதியரை மருளும்பிணி
மாயை யறுத்திடுவான், கூற்றாயின வாறு விலக்ககிலீ ரென
நீடிய கோதி றிருப்பதிகம், போற்றாலுல கேழின் வருந்துய
ரும் போமாறெதிர் நின்று புகன்றனரால். 37

மையற்றுறை யேறி மகிழ்ந்தலர்சீர் வாகீசர் மனத்
தொடு வாய்மையுடன், மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்
விரவுஞ்சிவ சின்னம் விளங்கிடவே, யெய்துற்ற தியான மறா
வுணர்வு மீறின்றி யெழுந்திரு வாசகமுங், கையிற்றிக ழும்
முழ வாரமுடன் கைக்கொண்டு கசிந்து கலந்தனரே. 38

இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
வருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கட
லொருகன்மே லேற்றிட லுரைக்க வேண்டுமோ. 39

கையுந் தலைமிசை புனையஞ் சலியன கண்ணும் பொழி
மழை யொழியாதே, பெய்யுந் தகையன கரணங் களுமுட
னுருகும் பரிவின பேறெய்தா, மெய்யுந் தரை மிசைவிழுமுன்
பெழுதரு மின்றாழ் சடையொடு நின்றாடு, மையன் றிருநட
மெதிர்கும் பிடுமவ ரார்வம் பெருகுத லளவின்றால். 40

அருட்பெருகு தனிக்கடலு முலகுக் கெல்லா மன்பு
செறி கடலுமா மெனவுமோங்கும், பொருட்சமய முதற்
சைவ நெறிதான் பெற்ற புண்ணியக்கண் ணிரண்டெனவும்
புவன முய்ய, விருட்கடுவுண் டவருளு முலக மெல்லா மீன்
றுடன் றிருவருளு மெனவுங்கூடித், தெருட்கலைஞா னக்
கன்று மரசுஞ் சென்று செஞ்சடைவா னவர் கோயில் சேர்ந்
தா ரன்றே. 41

நன்மைபெரு கருணெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதி
லுன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோ மென்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான். 42

அண்ணலேயெனை யாண்டுகொண் டருளிய வமுதே
விண்ணிலேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணினாற்றிருக் கயிலையி லிருந்தநின் கோல
நண்ணி நான்றொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார். 43

வெள்ளி வெற்பின்மேன் மரகதக் கொடியுடன் விளங்குந்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனவிடப் பாகங்
கொள்ளுமாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார். 44

மண்முதலா முலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே னெனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
யண்ணலார் சேவடிக்கீ ழாண்டவர செய்தினார். 45

காரைக்காலம்மையார் புராணம்.

இறவாத வின்ப வன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே லுன்னையென்று
மறவாமை வேண்டுமின்னும் வேண்டு நான்மகிழ்ந்து பாடி
யறவாநீ யாடும்போதுன் னடியின்கீ ழிருக்க வென்றார். 46

நமிநந்தியடிகணாயனார் புராணம்.

நாட்டா ரறிய முன்னாளி னன்னூ லுலந்த வைப்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப்புதல்வன் றன்னைப்புக்கொளியூர்த்
தாட்டா மரையின் மடுவின்கட் டனிமா முதலைவாய்நின்று
மீட்டார் கழல்க ணினைவாரை மீளா வழியின் மீட்பவே. 47

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். 48

அவம்பெருக்கும் புல்லறிவி னமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல் லூழிதொறுந்
தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெலாஞ்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார். 49
சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில். 50
செம்மைபெற வெடுத்ததிருத் தோடுடைய செவியனெனு
மெய்ம்மைமொழித் திருப்பதிகம் பிரமபுர மேவினார்
தம்மையடை யாளங்க ளுடன்சாற்றித் தாதையார்க்
கெம்மையிது செய்தபிரா னிவனென்றே யெனவிசைத்தார்.

கையதனா லொற்றறுத்துப் பாடுதலுங் கண்டருளிக் கருணை கூர்ந்த, செய்யசடை வானவர்த மஞ்செழுத்து மெழுதியநற் செம்பொற்றாள, மையரவர் திருவருளா லெடுத்த பாடலுக்கிசைந்த வளவா லொற்ற, வையமெலா முய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து வந்ததன்றே. 52

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீதுதாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றாதி யாரு ளாதலி னஞ்செழுத்
தோதி யேறினா ருய்ய வுலகெலாம். 53
சிந்தையிடை யறாவன்புந் திருமேனி தனிலசைவுங்
கந்தைமிசை யாங்கருத்துங் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறு
மந்தமிலாத் திருவேடத் தரசெதிர் வந்தணைய. 54
கண்டகவு ணியக்கன்றுங் கருத்திற்பரவு மெய்க்காதற்
றொண்டர்திரு வேடநேரே தோன்றியதென் றுதொழுதே
யண்டரும்போற் றவணைந்தங் கரசுமெதிர் வந்திறைஞ்ச
மண்டியவார் வம்பெருக மதுரமொழி யருள்செய்தார். 55

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமு மினியெதிர் காலத்தின் சிறப்பு, மின்றெழுந் தருளப் பெற்றபே றிதனா லெ

ற்றைக்குந் திருவரு ளுடையோ, நன்றியி னெறியி லழுந்திய
நாடு நற்றமிழ் வேந்தனு முய்ந்து, வென்றிகொ டிருநீற் றொ
ளியினில் விளங்கு மேன்மையும் படைத்தன மென்பார். 56

ஞானத்தின் றிருவுருவை நான்மறையின் றனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார்சீர்தொடுக்குங்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள். 57

ஆலமே யமுத மாகவுண்டுவா னவர்க்க ளித்துக்
காலனை மார்க்கண் டர்க்காக் காய்ந்தனை யடியேற் கின்று
ஞாலநின் புகழே யாக வேண்டுநான் மறைக ளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெரு மானே யென்றார். 58

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடு
மண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்த
லுண்மை யாமெனி லுலகர்முன் வருகென வுரைப்பார். 59

ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவா யச்சொலாமென்
றானசீர் நமச்சிவாயத் திருப்பதி கத்தை யங்கண்
வானமு நிலனுங்கேட்க வருள்செய் திம் மணத்தில் வந்தோ
ரீனமாம் பிறவிதீர யாவரும் புகுக வென்ன. 60

வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்புகா ணாத ழுந்தி
யுருவெனுந் துயரக் கூட்டி னுணர்வின்றி மயங்கு வார்க
டிருமணத் துடன்சே வித்து முன்செலுஞ் சிறப்பி னாலே
மருவிய பிறவி நீங்க மன்னுசோ தியினுட் புக்கார். 61

## சோமாசிமாறநாயனார் புராணம்.

பணையுந் தடமும் புடைசூழு மொற்றி யூரிற் பாகத்தோர்
துணையுந் தாமும் பிரியாதார் தோழத் தம்பி ரானாரை
யிணையுங்கொங்கைச்சங்கிலியாரெழின்மென்பணைத்தோளெய்துவிக்க
வணையு மொருவர் சரணமே வரண மாக வடைந்தோமே.

## சாக்கியநாயனார் புராணம்

கல்லாலே யெறிந்ததுவு மன்பான படிகானில்
வில்வேடர் செருப்படியுந் திருமுடியின் மேவிற்று

னல்லார்மற் றவர்செய்கை யன்பாலே நபந்ததனை
யல்லாதார் கல்லெலன்பா ரானார்க்கவை தலராமால். 63

### சேரமான்பெருமாணாயனார் புராணம்.

வாசத் திருமஞ் சனம்பள்ளித் தாமஞ் சாந்த மணித்தூபந்
தேசிற் பெருகுஞ் செழுந்தீப முதலா யினவுந் திருவமுது
மீசற் கேற்ற பரிசினா லருச்சித் தருள வெந்நாளும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பி னொலியளித்தார்.

### கூற்றுவநாயனார் புராணம்

தேனுங்குழலும் பிழைத்ததிரு மொழியாள் புலவி தீர்க்கமதி
தானும் பணியும் பகைதீர்க்குஞ் சடையார் தூது தருந்திருநாட்
கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவுமலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றே னேழுபிறப்பின் முடங்குகூன்.

### ஐயடிகள்காடவர்கோனாயனார் புராணம்.

உளத்திலொரு துளக்கமிலோ முலகுய்ய விருண்டதிருக்
களத்துமுது குன்றர்தரு கனகமாற் றினிலிட்டு
வளத்தின்மலி தேழுலகும் வணங்குபெருந் திருவாரூர்க்
குளத்திலெடுத் தார்வினையின் குழிவாய்நின் றெனையெடுத்தார்.

### வாயிலார்நாயனார் புராணம்.

மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
யுறவாதி தனையுணரு மொளிவிளக்குச் சுடரேற்றி
யிறவாத வானந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
யறவாணர்க் கன்பென்னு மமுதமைத்தர்ச் சனைசெய்வார்.

### முனையடுவார் நாயனார் புராணம்.

செறிவுண் டென்று திருத்தொண்டிற் சிந்தை செல்லும்
பயனுவக்குங், குறியுண் டென்று கிலுங்குறையொன் றில்லோ
நிறையுங் கருணையினால், வெறியுண் சோலைத் திருமுருகன்
பூண்டி வேடர் வழிப்பறிக்கப், பறியுண் டவரெம்பழவினை
நோய் பறிப்பா ரென்னும் பற்றிலே. 68

### கோட்புலிநாயனார் புராணம்.

மேவரிய பெருந்தவத்தான் முன்புவிளைத் தனவென்றே
யாவதுமோர் பொருளல்லா வென்மனத்து மன்றியே

நாவலர்கா வலர்பெருகு நதிகிழிய வழிகடந்த
சேவடிப்போ தெப்போதுஞ் சென்னியினு மலர்ந்தனவால்.

அப்பாலுமடிச்சார்ந்தார் புராணம்.

செற்றார்தம் புரமெரித்த சிலையார் செல்வத் திருமுருகன் பூண்டியினிற் செல்லும் போதிற், சுற்றருஞ் சிலைவேடர் கவர்ந்து கொண்ட தொகுநிதியின் பரப்பெல்லாஞ் சுமந்து கொண்டு, முற்றாத முலையுமையாள் பாகன் பூத முதற்கணமே யுடன்செல்ல முடியாப் பேறு, பெற்றார்தங் கழல்பரவ வடியேன் முன்னைப் பிறவியினிற் செய்ததவம் பெரியவாறே.

மங்கையர்க்கரசியார் புராணம்.

மங்கையர்க்குத் தனியரசி யெங்க டெய்வம் வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி, செங்கமலத் திருமடந்தை கன்னி நாடா டென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை, யெங்கள்பிரான் சண்பையர்கோ னருளி னாலேயிருந்தமிழ்நா டுற்றவிடர் நீக்கித் தங்கள், பொங்கொளிவெண் டிருநீறு பரப்பி னாரைப்போற்றுவார் கழலெம்மாற் போற்ற லாமே. 71

வெள்ளானைச்சருக்கம்.

அடிய னேன்பிழை பொறுத்தெனை யாண்டுகொண்டத் தொடக் கினைநீக்கி, முடிவி லாநெறி தரும் பெருங் கருணையென் றாத்ததோ வெனமுன்னர்ப், படியு நெஞ்சொடுபன் முறை பணிந்தெழும் பரம்பரை யானந்த வடிவு நின்றது போன்றின்ப வெள்ளத்து மனங்கனி வனன்றொண்டர்.

என்று மின்பம் பெருகு மியல்பினா
லொன்று காதலித் துள்ள மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம். 73

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 10 | 16 | சாம்பனுர் | சாம்பானுர் |
| ,, | 29 | ,, | ,, |
| ,, | 35 | பெய்ப்பொருள் | மெய்ப்பொருள் |
| 11 | 1 | கோயில் | திருவேட்களம் |
| 19 | 4 | செறிவாநி | செறிவானி |
| 22 | 16 | என்னும் ஆறனுள் | என்னும் காசிக்குச்சமான க்ஷேத்ரம் ஆறனுள் |
| 25 | 28 | பாட்டின் | பாட்டில் |
| 40 | 2 | தசையறிந் | தசையரிந் |
| 41 | 14 | பதிைேனாரந் | பதினொராந் |
| 43 | 5 | மிறைஞசுங் | மிறைஞ்சுங் |
| 45 | 30 | பெங்கா | பொங்கா |
| 57 | 9 | வழுவ | வழுவா |
| 65 | 14 | "அரதனபுரம் | "அரதனபுரம்" |
| 69 | 13 | பழம்பஞ்சுரம் | பண்-பழம்பஞ்சுரம் |
| 83 | 5 | ஸ்டேஷனி | கும்பகோணஸ்டேஷனி |
| 87 | 1 | திருப்புற | திருப்புற |
| 89 | 1 | திருவிஜயமங்கை | திருவைகாவூர் |
| 93 | 25 | ச-ந் திருமுறை | க-ந் திருமுறை |
| 104 | 9 | இது அக்னி | இதுமழு |
| 107 | 19 | பண்-திருநேரிசை | பண்-திருக்குறுந்தொகை. |
| 134 | 27 | துறந்தார் | "துறந்தார் |
| ,, | 28 | துறை | துறை" |
| 139 | 19 | திகம்-1. | பதிகம்-1. |
| 142 | 20 | பண்-திருவிருத்தம். | திருவிருத்தம் |
| 160 | 5 | அம்பாள் | அம்பிகை |
| ,, | 6 | மூகாம்பாள் | மூகாம்பிகை |
| 208 | 23 | யுலசனைத்து | யுலகனைத்து |
| 210 | 5 | மைம்மவிபூங் | மைம்மருபூழ் |
| 215 | 13 | செருத்தனு | செருத்தனு |
| 217 | 29 | போலன் | போவன் |
| 239 | 2 | திருத்தாண்டம்க | திருத்தாண்டகம் |
| 350 | 16 | சொலலவல் | சொல்லவல் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 361 | 29 | தியாகல்வி | தியாகவல்வி |
| 365 | 15 | கறிவிரைவு | கறிவிரவு |
| 369 | 15 | நாவலேசுஸ் | நாவலேசு |
| 374 | 26 | வடக்கேக் | வடக்கே |
| 377 | 22 | கிருபாபுரிஸ் | கிருபாபுரீஸ் |
| 386 | 8 | வருவிக்திரண | வருவிக்திரண் |
| 388 | 24 | எனப்பிரித்து | எனப்பிரித்து |
| 416 | 8 | 49 பேர் | 70 பேர் |
| 423 | 16 | யர்னை | யானை |
| 443 | 9 | பண்புணை | பண்புணை |
| ,, | 26 | இடையில் (1) | இடையில் (31) |
| 445 | 21 | மிடமா | மிடமாம் |
| ,, | 29 | நகரான் ]ள் | நகரான் |
| 446 | 15 | இராவணேஸ் | இராவணேம் |
| 449 | 2 | நீலபர்ப்பத | நீலப்பர்ப்பத |
| ,, | 5 | ,, | ,, |
| 450 | 23 | மிண்டிம் | மிண்டி |
| 454 | 32 | விஎனை | எவினை |
| 466 | 27 | பூதநயகன் | பூகநாயன் |
| 473 | 2 | ஸ்ரோதியரை | ஸ்ரோதியாரை |
| ,, | 9 | ஊர்க்கெதகை | ஊர்க்கெதாகை |
| 4 1 | 16 | குரும் | குரும |
| 495 | 32 | சுற்றை | கற்றை |
| 497 | 22 | வெண்ணீ | வெண்ணீ |
| 511 | 16 | யோமின் | போமின் |
| 519 | 12 | தததுவ | தத்துவ |
| 523 | 24 | நன்னென ஞ | நன்னென ஞ் |
| ,, | 26 | ஞுதலா | ஞுதலான் |
| 533 | 6 | யுன்சொற் | புன்சொற் |
| 534 | 2 | பெரு | பொரு |
| 539 | 9 | 6 | 5 |

69137